தென்னிந்தியத் திருச்சபை

கன்னியாகுமரி பேராயம்

# அருளுரைக் கையேடு

# 2018



"உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்"

யோவான் - 8:32

தென்னிந்தியத் திருச்சபை

கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு

**2018**

வெளியீடு

தொடர்புத்துறை, கன்னியாகுமரிப் பேராயம்

# ஆசியுரை

**“உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள்; உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்.”** (யோவா. 8:32)

***ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்குள் மிக அன்பான உடன் சகோதரர்களே, சகோதரிகளே!***

கன்னியாகுமரிப் பேராயத்தின் திருப்பணிவிடையாளர்கள் ஆண்டு முழுவதும் பயன்படுத்தும் அருளுரைக் கையேடு நூல் வாயிலாக உங்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

Harvard University உருவாக்கப்பட்ட போது Veritas Christo et Ecclesiae - “Truth for Christ and the Church” (“கிறிஸ்துவுக்கும் சபைக்குமான உண்மை”) என்பதை நோக்கமாக வைத்திருந்தார்கள். நமது உலக வாழ்வின் நோக்கம் கிறிஸ்துவுக்கு உண்மையாயிருத்தலாகும். இதற்காக ஆண்டவருடைய வார்த்தையாம் ‘உண்மையை’ நாம் தெளிவாகக் கற்று 2திமொ. 2:15 கூறுகிறபடி வெட்கப்படாத ஊழியக்காரர்களாகவும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

‘உண்மை’ என அடையாளப்படுத்துகிற ஆண்டவருடைய வார்த்தையை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துகிறவர்களே அநேகர் எதிராளிகளைக் காயப்படுத்தும் ஆயுதமாக, தாக்குதல் நடத்தும் கருவியாக, தன்னைத் தற்காத்துக்கொள்ளும் கவசமாக உண்மை எனும் இறைவார்த்தையை கையில் எடுக்கிறோம். அத்தருணங்களிலெல்லாம் பொய்யை விட உண்மை மிகவும் கொடுமையானதாக மாறி விடுகிறது.

பிறருடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு உண்மையை உரைக்க வேண்டும். உலகத்தின் எந்த மூலையிலிருப்பவர்களுடனும் விஞ்ஞான தொழில் நுட்பத்தின் மூலம் பேசி விடலாம். ஆனால் அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களோடு பேச முடிகிறதா என்பது ஆய்விற்குரியதாகும். அமெரிக்காவிலுள்ள அரிசோனா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சுலோபோட்சிக்கஃப், மனிதர்கள் அதிகம் வளர்க்கும் வளர்ப்புப் பிராணியான நாயின் அசைவு, அவை எழுப்பும் ஒலி ஆகியவற்றை வைத்து அவை என்ன சொல்ல வருகின்றன என்பதைப் புரிந்துகொள்ள உதவும் செயற்கை நுண்ணறிவு மென்பொருள் ஒன்றை உருவாக்கியுள்ளார். இதனை Sensor பொருத்தப்பட்ட சேணம், ஒன்றின் மூலமாக நாயின் உடலில் கட்டி விடுகிறார். இது நாயின் அசைவு, குரலொலி ஆகியவற்றிலுள்ள உணர்வுகளைக் கண்டறிந்து

மொழிபெயர்த்து தெரிவிக்கும். இதே போல நாயுடன் நாம் பேசினால் அந்த ஒலியைச் சேணத்திற்குள் உள்ள Sensor உள்வாங்கி அதிர்வுகளை ஏற்படுத்தி நாம் என்ன தெரிவிக்க விரும்புகிறோம் என்பதை நாய்க்கு உணர்த்தி விடும். ஒரு வளர்ப்பு நாய்க்கே இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து அதன் உணர்வுகளைப் புரிந்துகொள்ள முயற்சி எடுக்கிறார்களென்றால் மனிதரின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள நாம் எவ்வளவு முயற்சி எடுக்க வேண்டும். பிள்ளைகளின் அப்பம் பிள்ளைகளுக்கே தவிர நாய்களுக்கல்ல என ஆண்டவர் இயேசுகிறிஸ்து கானானியப் பெண்ணிடம் சொன்னதன் பொருள், அவர் அனைவரின் உணர்வுகளையும் தெளிவாகப் புரிந்தவர். அவரது வார்த்தையை வாழ்க்கைக்கு உகந்த முறையில் உண்மையாக எடுத்துரைப்போம்.

அருளுரைக் கையேடு தயாரிப்புப் பணியினை ஒருங்கிணைத்த தொடர்புத் துறை இயக்குநர் அருள்திரு. J. பிரகாஷ் நாயகம் அவர்களையும் இதனைத் தொகுக்கும் பணியில் தொகுப்பாசிரியராக ஈடுபட்ட அருள்திரு. R. சாம் பிரின்ஸ், அச்சுப்பணிகளை நேர்த்தியாக நிறைவேற்றிய C.S.I. மார்த்தாண்டம் அச்சகத்தார், கண்காணிப்பாளர் அருள்திரு. N. விபின் ஜாண் அவர்களையும் பாராட்டுகிறேன்.

ஆண்டவரது வார்த்தையை உண்மையாக எடுத்துரைத்து கேட்போர் அனைவரையும் அவருகென்று ஆயத்தப்படுத்தவும், ஆதாயப்படுத்தவும் வாழ்த்தி ஜெபிக்கும்

Rt.Rev.Dr. **G. தேவகடாட்சம்,** M.A.,B.D.,M.Th.,D.D.
முன்னாள் பிரதமப் பேராயர் C.S.I. &
பேராயர், கன்னியாகுமரிப் பேராயம்.

# இயக்குநர் உரை

***கிறிஸ்துவுக்குள் அன்பிற்குரிய உங்களனைவருக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துகள்!***

ஒழுங்கின்மையும் வெறுமையுமாக இருந்த பூமியை ஒழுங்காக அமைத்து படைத்த சர்வ வல்லமையுள்ள கடவுள் எல்லாவற்றிலும் ஒழுங்கை விரும்புகிறவராவார். படைப்பின் கட்டமைப்பு என்பது வடிவமைப்பின் உத்தியுடன் நிகழ்ந்த அற்புதமான செயலாகும். ஆண்டவரது படைப்பில் அனைத்தும் ஒரு ஒழுங்கிற்குட்பட்டே செயல்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு காட்டாறு ஓடுவதாக இருந்தாலும் அது பள்ளத்தை நோக்கியே புவி ஈர்ப்பு விசையைப் பயன்படுத்தி ஓடும். தேனீக்கள் தனக்கான கூட்டை அமைக்கும்போது அறுங்கோணம் வடிவம் கொண்ட ஓர் அறையை அழகாக உருவாக்குகின்றன. மண்ணைக் குவித்து வைத்தாலும் அந்தக் குவியலும் கோபுரம் போல ஒரு ஒழுங்கில் தான் அமையும். திருச்சபைக்குப் பண்ணை என்ற பெயரை பரிசுத்த பவுல் அப்போஸ்தலர் கொடுத்தார். பண்ணை ஓர் ஒழுங்கில் அமைக்கப்படுவதாகும். அதை பாங்கமைப்பு என்பார்கள். அதாவது செடிகளையும், மரங்களையும், ஒரு மாதிரியான ஒழுங்கமைப்பில் அமைப்பதே பாங்கமைப்பு.

“சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது” (1கொரி. 14:40) என்பதை ஆண்டவர் அருளுரையாற்றுவதிலும் விரும்பி எதிர்பார்கிறார். அருளுரையை எதுகை மோனையோடு அமைக்க வேண்டும் என விரும்பி திருமறைப்பகுதியின் அடர்த்தியான உட்பொருளை விட்டு விடுகிறார்கள். இது ஒரு வீட்டை உறுதியாக கட்டாமல் வெறுமனே அலங்காரம் செய்வதற்குச் சமமானது. பவுல் அப்போஸ்தலர் இத்தகைய அருளுரைஞர்களை ஆகாயத்தில் சிலம்பம் அடிப்போர் (1 கொரி. 9:26) என ஒப்பிடுகிறார்.

நன்கு தயாரிக்கப்பட்டு முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட அருளுரை சிலம்பம் எனத் தமிழ் திருமறையில் வழங்கப்படுவதும், ஆங்கிலத் திருமறையில் Fencing என அழைக்கப்படுவதுமான வாள்வீச்சு விளையாட்டிற்கு ஒப்பானது. இதிலே பல ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. குறிப்பாக Safer பிரிவின் ஒழுங்குப்படி நமது வாள்கொண்டு எதிராளியின் தலைமுதல் இடுப்பு வரை Touch பண்ணலாம்.

இறைவார்த்தை என்னும் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தினால் (எபி. 4:12) நமக்கு எதிரில் இருக்கும் சபையாரையும், நமக்கு எதிராக இருக்கும் சபையாரையும் Touch பண்ண வேண்டுமேயன்றி Tease பண்ணக்கூடாது. Fencing எனப்படும் இவ்விளையாட்டிற்கு அதிவேகமும் நொடிகூட அசந்துவிடாத கவனமும் தேவைப்படுவது போல, நம் வாயிலிருந்து அதிவேகமாக வெளிவரும் வார்த்தைகளைக் கவனமாக அடுக்கி பிரசங்கிப்பது அருளுரையின் ஒழுக்கமாகும்.

ஆண்டவருக்காகச் செய்கின்ற இந்த மகத்தான பணியை போதகர்கள், திருப்பணிவிடையாளர்கள் கருத்தோடு செய்வதற்கு உதவியாக அருளுரைக் கையேடு தயாரிக்க ஆலோசனை வழங்கி, தலைமைத்துவம் தந்து புத்தாண்டு அருளுரையைத் தந்துள்ள பெரும் மதிப்பிற்குரிய நம் பேராயர் Rt.Rev.Dr.G. தேவகடாட்சம் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து தமது போதனைகளை ஜீவத் தண்ணீருக்கு ஒப்பிட்டு, நான் கொடுக்கும் தண்ணீர் ஒருவன் உள்ளத்தில் ஜீவ காலமாக ஊறும் நீரூற்றாய் இருக்கும் என்றார். ஆற்றுமணல் நீரைத் தன்னிடம் உறிஞ்சி வைத்து கோடைக்காலத்திலும் நீரைக் கொடுக்கிறது. ஆற்றுமணலாக இந்த அருளுரைக் கையேடு அருளுரைகளை நீராக தன்னுள் உறிஞ்சி வைத்திருக்கிறது. இதனைக் தொகுக்கும் பணியில் எனது பணிக் காலத்தின் நான்கு ஆண்டுகள் அருள்திரு. R. சாம்பிரின்ஸ் அவர்கள் நற்பணியாற்றினார்கள். பல கடினங்களின் நடுவே இப்பணியைச் செய்து என் பணிக்குத் தோள் கொடுத்தார்கள். ஓராண்டு இப்பணியை அருள்திரு. T.P. சலீம் தங்ககுமார் அவர்கள் செய்தார்கள். அன்பு நண்பர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அச்சுப் பணிகளை இரவு, பகல் பாராமல் மிகுந்த அர்ப்பணத்தோடு செய்வதில் முன்னணியில் நிற்கும் C.S.I. மார்த்தாண்டம் அச்சகத்தாருக்கும் இதனைக் கண்காணித்து பணிகளை முடுக்கிவிட்ட அச்சகக் கண்காணிப்பாளரான அன்புச் சகோதரர் அருள்திரு. N. விபின் ஜாண் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அட்டைப்பட வடிவமைப்பில் ஈடுபட்ட என் உடன்பணியாளர் திரு. நிஸ்பர்ட் G.M. ஷாலோம், பிழைதிருத்தப் பணியில் ஈடுபட்டோர், அருளுரை எழுதியோர் என அனைவருக்கும் நன்றிகூறி விடைபெறுகிறேன்.

என்றும் அன்புடன்
அருள்திரு. **J. பிரகாஷ் நாயகம்,** M.A.,B.D.,M.Th.
இயக்குநர், தொடர்புத்துறை.

# தொகுப்பாசிரியரிடமிருந்து.....

நம்பிக்கையுடனும், நல் எதிர்நோக்குடனும் நலிந்தவர்களை நல்வாக்கால் ஊக்குவிக்க நல்லறிவால் நிரப்பப் பெற்றுள்ள இறை அன்பர்களே, நாளும் உடனிருந்து, நாவின் வரங்களை வழங்கி நலமருளும் நல்லாயராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்களை வாழ்த்துகிறேன்.

ஒருமுறை தொழிலதிபர் ஒருவர், அமெரிக்க எழுத்தாளரான மார்க் ட்வைன் (Mark Twain) என்பாரிடம், நான் எனது வாழ்வின் இறுதிக்குள் புனித இடங்களுக்குத் திருப்பயணம் செல்ல வேண்டும். குறிப்பாக, சீனாய் மலையின் மீதேறி அங்கு மோசே வாயிலாக கடவுள் அருளிய வாழ்வின் திருச்சட்டங்களாகிய பத்துக் கட்டளைகளையும் உரத்த சத்தமாய்ப் படிக்க வேண்டும் என்ற தன் விருப்பத்தைத் தெரிவித்தார். கவனமாகச் செவி மடுத்துக் கேட்டுக் கொண்டிருந்த மார்க் ட்வைன் (Mark Twain) மறுமொழியாக அவரிடம் இவ்வாறு கூறினார் “அதைவிட சிறந்த ஒன்றை நீங்கள் செய்ய முடியும்; என்னவெனில், நீங்கள் குடும்பத்தினரோடு இணைந்து உங்கள் இல்லத்திலோ, இறை இல்லத்திலோ அமர்ந்து கடவுளின் திருச்சட்டங்களை ஒன்றிணைந்து படித்து, தியானித்து அவைகளைக் கடைப்பிடிக்கலாம். இதுவே மேலானது, ஆன்மிக வாழ்வுக்கு வளம் சேர்க்கக் கூடியது எனப் பதிலளித்தார்.” இன்றைய நாட்களில் புனிதப் பயணத்திற்கு முதன்மையையும், பொருளையும், நேரத்தையும் செலவிட்டு இறைவார்த்தையைப் புறந்தள்ளும் நிலையை நாம் காண்கிறோமல்லவா. இத்தகைய சூழலில் நிலைவாழ்வுக்கும், நிறைவாழ்வுக்கும் ஆதாரமாக விளங்கும் இறை வார்த்தையின் மாண்பையும், மகத்துவத்தையும் அனைவருக்கும் கற்றுத்தருவது ஒவ்வொரு இறைப்பணியரின் தலையாயக் கடமையாகும்.

“புறப்படுதல் அல்ல,
திரும்புதல் தான் பயணம்”

என்பது கவிக்கோவின் கவிதை வரிகள். வாழ்க்கைப் பயணத்தில், 2018 ஆம் ஆண்டில் இறைமக்களை கடவுளை நோக்கி, கடவுளின் வார்த்தையை நோக்கித் திரும்பச் செய்வதே நம் இறைவாக்குப் பணியின் முதன்மையாகட்டும்.

இறைமக்கள் அனைவரும் தேர்ச்சி பெற்ற நற்செயல் அனைத்தையும் செய்யத் தகுதியுள்ளோராக இறைவார்த்தையை

அடிப்படையாகவும், ஆதாரமாகவும் கொண்டு 2018-ஆம் ஆண்டிற்கான அருளுரைக் கைநூல் இறைவேண்டலோடும், தகுந்த ஆயத்தங்களோடும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பெரும் பணியை என்னிடம் ஒப்படைத்த நம் பேராயரும், தென்னிந்தியத் திருச்சபையின் முன்னைய முதன்மைப் பேராயருமான பேரருள்திரு. அறிவர் G. தேவகடாட்சம் அவர்களுக்கும், இப்பணியில் நல் ஆலோசனைகளை வழங்கிய தொடர்புத்துறை இயக்குநர் அருள்திரு. J. பிரகாஷ் நாயகம் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். அருளுரை ஆயத்தப் பணியிலும், தலைப்புகளை மொழிபெயர்த்து, பிழைதிருத்தப் பணியிலும் உடனின்று உழைத்த திருவாளர் B. சாம் ஜெபசிங் அவர்களுக்கும், அருளுரைகளை ஒழுங்குபடுத்தி பதிப்புப்பணியில் முழுமையான பங்களிப்பு தந்த திருவாளர் M.R. மில்ட்டன் மார்க் அவர்களுக்கும் பிழை திருத்தப் பணியில் உழைத்த அறிவர் P. ஏஞ்சல் ஹென்சிலின், அருள்திருவாளர்கள் R. ஹென்சிலின் நேசராஜ், T.P. சலீம் தங்ககுமார், R. டேவிட் ஜெபசிங், திருவாளர்கள் J. பிரபின் செல்வமணி, S. பிளஸின், D.S. எபனேசர் சாமுவேல், நிஸ்பர்ட், அச்சகத்துறை கண்காணிப்பாளர் அருள்திரு. N. விபின் ஜாண், மிக சிறப்பு மிகு நிலையில் நல்ல பங்களிப்பை மனமுவந்து தந்த மார்த்தாண்டம் C.S.I. அச்சகப் பணியாளர்கள், கணினி பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அருளுரைகளைச் சிறப்பான முறையில் எழுதிக் கொடுத்த ஆயர்கள், இறைப்பணியாளர்கள் அனைவருக்கும் இந்த நல்ல பணியில் ஊக்கப்படுத்தி உடனின்று உழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து மாட்சியும், மாண்பும்

கடவுளுக்கே உரித்தாகுக!

இறைப்பணியில்,

அருள்திரு. R. **சாம் பிரின்ஸ்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | 01-01-2018 கடவுளின் தொடரும் அருட்செயல் | 1 |
| | **வார இறைவேண்டல்** | |
| 2. | 02-01-2018 அந்நியமும் அந்நியோந்நியமும் | 2 |
| 3. | 03-01-2018 அடிமையல்ல, சகோதரன் | 14 |
| 4. | 04-01-2018 உடம்பே கோவில் | 18 |
| 5. | 05-01-2018 பிறரையும் கவனியுங்கள் | 23 |
| 6. | 06-01-2018 அறிந்துகொள்ளாத ஆழங்கள் | 29 |
| 7. | 07-01-2018 அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள் | 33 |
| 8. | 14-01-2018 ஒரே ஆண்டவர் ஒரே திருமுழுக்கு | 37 |
| 9. | 21-01-2018 நீதிக்கும் அமைதிக்குமான ஒன்றிப்பு | 41 |
| 10. | 26-01-2018 பொறுப்புள்ள குடியுரிமை | 44 |
| 11. | 28-01-2018 படைப்பின் நன்னலம் | 48 |
| 12. | 04-02-2018 படைப்பின் வீழ்ச்சிநிலை | 52 |
| 13. | 04-02-2018 பொறுப்பாண்மை மிக்க இளையோர் | 56 |
| 14. | 11-02-2018 தவக்காலம் : ஓர் ஒப்புரவின் காலம் | 59 |
| 15. | 11-02-2018 நலமருள்தலும் முழுமையும் | 63 |
| 16. | 14-02-2018 சிலுவை : தன்னல மறுப்புக்கு ஓர் அழைப்பு | 67 |
| 17. | 18-02-2018 தொடக்கூடாதவரைத் தொடுதல் | 72 |
| 18. | 25-02-2018 வாழ்வைக் காக்கும் நம்பிக்கை | 75 |
| 19. | 04-03-2018 இறைவேண்டலில் நிலைத்திருத்தல் | 78 |
| 20. | 11-03-2018 விடுவிக்கும் உண்மையான வழிபாடு | 80 |
| 21. | 18-03-2018 சிலுவை : மெசியா யுகத்தின் ஒரு புதிய திருக்காட்சி | 84 |
| 22. | 18-03-2018 அருட்பணியும் முன் நோக்கிய பார்வையும் | 87 |
| 23. | 25-03-2018 ஓசன்னா : கோவிலில் புதிய அரசர் | 89 |
| 24. | 26-03-2018 கனியற்ற வாழ்விற்கு எச்சரிப்பு | 93 |
| 25. | 27-03-2018 அடையாளங்கள் தரும் எச்சரிப்பு | 97 |
| 26. | 28-03-2018 முறையான செயல் செய்த நங்கை | 101 |
| 27. | 29-03-2018 நன்றித் திருவிருந்து : இயேசுவை நினைவுகூர்தல் | 104 |
| 28. | 30-03-2018 சிலுவை : இறப்பின் இறப்பு | 109 |
| 29. | 31-03-2018 புது வாழ்வுக்கான எதிர்நோக்கு | 115 |
| 30. | 01-04-2018 உயிர்ப்பு : மீட்பின் மகிழ்வைக் கொண்டாடுதல் | 118 |

31. 08-04-2018 உயிர்த்த ஆண்டவருடன் சந்திப்பு 122
32. 15-04-2018 உயிர்த்த ஆண்டவரைப் பணியிடத்தில் அடையாளம் காணுதல் 125
33. 22-04-2018 உயிர்ப்பின் அனுபவத்தில் சமூக உருவாக்கம் 128
34. 29-04-2018 கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் : உயிர்ப்பு 133
35. 06-05-2018 அருட்பணியின் வெளிப்பாடாக இருக்க கிறிஸ்துவின் அழைப்பு 137
36. 10-05-2018 கிறிஸ்து : அனைவரின் ஆண்டவர் 141
37. 13-05-2018 தூய ஆவியாரை எதிர்நோக்கிக் காத்திருத்தல் 144
38. 20-05-2018 வாரும் தூய ஆவியாரே, எம்மைப் புத்தாகம் செய்யும் 149
39. 20-05-2018 நற்செய்தி அறிவியுங்கள் 153
40. 27-05-2018 நாம் மூவொரு கடவுளை வழிபடுகிறோம் 156
41. 03-06-2018 விண்ணிலிருந்து வரும் ஞானம் 160
42. 10-06-2018 இறைமாட்சியைப் பறைசாற்றும் படைப்பு 164
43. 17-06-2018 உண்மையோடும் ஆவியோடும் ஆண்டவரை வழிபடுங்கள் 168
44. 24-06-2018 சீடத்துவத்தின் மதிப்பு 173
45. 01-07-2018 பொறுப்பாண்மை : வெளிப்படைத்தன்மையும் கணக்கொப்புவித்தலும் 179
46. 08-07-2018 இறையியல் கல்வி : நம்பிக்கையை அறிதலும் செயல்படுத்துதலும் 182
47. 15-07-2018 இறைமக்கள் : உப்பும் ஒளியும் 186
48. 22-07-2018 கிறிஸ்துவின் காயங்களால் அடையாளமிடப்பெற்ற அருட்பொழிவுத் திருப்பணி 190
49. 29-07-2018 திருமணத்தை மதியுங்கள் 194
50. 05-08-2018 அருட்பணி : கடவுளின் வேதனையைப் பகிர்தல் 198
51. 12-08-2018 திருமுழுக்கு : கிறிஸ்துவுடன் இறத்தலும் எழுதலும் 201
52. 15-08-2018 சமூக இசைவு 205
53. 19-08-2018 தூய ஒப்படைப்புப் பலி என்னும் திருவருட்சாதனம் 209
54. 26-08-2018 பன்மைத்துவம் : பொதுவான மானிடமும் நம்பிக்கையைப் பகிர்தலும் 212
55. 02-09-2018 இயேசுவே குரு 217
56. 09-09-2018 கடவுளின் விடுதலைச் செயற்பாட்டில் பெண் பங்காளர்கள் 220

57. 16-09-2018 என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன் 223

58. 23-09-2018 வறுமைக்குக் கிறிஸ்தவ மறுமொழி 225

59. 27-09-2018 வழிபாட்டில் ஒன்றிப்பு 230

60. 30-09-2018 முதியோரின் ஞானம் 234

61. 07-10-2018 இறைமக்களின் திருப்பணி 238

62. 14-10-2018 மாற்றுத்திறனுடையோர் : மாண்பும் சார்பும் 241

63. 14-10-2018 அருட்பணிக்கான இறையனுப்புதல் 245

64. 21-10-2018 பொருள்ள வாழ்வுத் தேடலில் இளையோர் 252

65. 28-10-2018 சீர்த்திருத்தப்பெற்ற சீர்த்திருந்தும் திருச்சபை 256

66. 04-11-2018 திருச்சபையில் சிறார் 261

67. 11-11-2018 விளக்குத் தண்டின் மீதுள்ள விளக்கு 264

68. 18-11-2018 பெண் குழந்தையைப் பாதுக்காத்தல் 269

69. 25-11-2018 ஆண்டவரின் வருகைக்காக இறைவேண்டலோடு காத்திருத்தல் 273

70. 02-12-2018 எலிசபெத்துடன் மரியாவின் சந்திப்பு : நற்செய்தியைக் கொண்டாடுதல் 276

71. 09-12-2018 இறைவாக்கு : தூண்டப்பெற்றது தூண்டுவதற்கே 279

72. 16-12-2018 பாவக் கட்டிலிருந்து விடுதலை 285

73. 23-12-2018 மாரநாதா : ஆண்டவரே வாரும் 289

74. 24-12-2018 உலகில் அமைதி 292

75. 25-12-2018 கிறிஸ்து பிறப்பு : ஒரு புதிய விடியல் 298

76. 30-12-2018 குடும்பம் என்னும் நலமருளும் இடம் 303

77. 31-12-2018 ஆண்டரிடம் வாருங்கள், பேருவகை கொள்ளுங்கள் 309

**தவக்கால அருளுரைகள் : புதன்**

78. 21-02-2018 உண்மையான தர்மம் 314

79. 28-02-2018 உண்மையான இறைவேண்டல் 318

80. 07-03-2018 உண்மையான நோன்பு 320

81. 14-03-2018 உண்மையான செல்வம் 324

82. 21-03-2018 உண்மையான காணிக்கை 327

**தவக்கால அருளுரைகள் : வெள்ளி**

83. 16-02-2018 ஏழையரின் உள்ளம் 331
84. 23-02-2018 துயருறுதல் 336
85. 02-03-2018 கனிவுடைமை 340
86. 09-03-2018 நீதியை நிலைநாட்டும் வேட்கை 344
87. 16-03-2018 தூய உள்ளம் 347
88. 23-03-2018 அமைதியை ஏற்படுத்துதல் 350

**சிலுவைத் திருமொழிகள்**

89. 1. திருச்சிலுவையின் திருவுறவு 352
90. 2. திருச்சிலுவையின் மேன்மை 356
91. 3. திருச்சிலுவையின் அங்கீகாரம் 362
92. 4. திருச்சிலுவையின் தனிமை நிலை 365
93. 5. திருச்சிலுவையின் தவிப்பு 368
94. 6. திருச்சிலுவையின் முழுமையாக்கம் 371
95. 7. திருச்சிலுவையின் ஒப்படைப்பு 373

**புதிய மாத நன்றித் தொழுகை அருளுரைகள்**

96. 01-02-2018 காக்கும் கன்மலை 378
97. 01-03-2018 நலமருளும் கடவுள் 380
98. 01-04-2018 அச்சம் அகற்றும் வெளிச்சம் 383
99. 01-05-2018 உழைப்பினால் உயர்வு 387
100. 01-06-2018 வாழ்வருளும் நல் ஆயர் 389
101. 01-07-2018 நிறைவளிக்கும் நீரோடை 391
102. 01-08-2018 கனி தரும் செடி 394
103. 01-09-2018 பலன் தரும் பனி 397
104. 01-10-2018 நிதமும் தொடரும் நிழல் 399
105. 01-11-2018 அடைக்கலம் தரும் அரண் 401
106. 01-12-2018 மீட்கும் இரட்சணியக் கொம்பு 404

**சிறப்பு நாட்களுக்கான அருளுரைகள்**

107. புதிய கல்வியாண்டு தொடக்க நாள் : வெற்றிக்கனி உனக்கே 407

108. தேர்வு நாள் : வெற்றியின் வழிகள் 410

109. சங்க விழா : நன்றிப் படையல் 413

110. சபை நாள் விழா : குடும்ப விவசாயம் 417

**விழாக்கால அருளுரைகள் :**

111. திருமறைப்பள்ளி ஆண்டுவிழா : கடவுளுக்குச் சிறப்பிடம் வழங்கிய சிறுவன் 427

112 கிறிஸ்தவ பக்திமுயற்சி சங்க ஆண்டுவிழா : பற்றுறுதியில் புத்துயிர் பெற்ற இளையோர் 431

113. ஆண்கள் ஐக்கிய சங்க ஆண்டுவிழா : புரியாதப் புதிரைப் பூவுலகுக்கு பறைசாற்றுவோம் 434

114. பெண்கள் ஐக்கிய சங்க ஆண்டுவிழா : நற்சான்று பெற்ற அபிகாயில் 436

115. பாடகர்க்குழு ஆண்டு விழா : பரமனைப் பாடுங்கள் 440

116. இறைவேண்டல் குழு ஆண்டு விழா : பெற்றுக்கொள்ளும்படி கேளுங்கள் 442

117. நூலக ஆண்டு விழா : வாழ்ந்திடப் படியுங்கள் 446

118. உதடுகளின் கனி 448

119. மரண வீட்டில் ஆறுதல் உரை 450

## LITURGICAL COLOUR - 2018

| | | | |
|---|---|---|---|
| January | 1 to 13 | | - White |
| January | 14 to February | 10 | - Green |
| February | 11 | | - White |
| February | 14 to March | 29 | - Purple |
| March | 31 to May | 13 | - White |
| May | 5 | | - Red |
| May | 27 | | - White |
| June | 3 to November 3 | | - Green |
| November | 4 | | - White |
| November | 5 to December 1 | | - Green |
| December | 2 to December 24 | | - Purple |
| December | 25 | | - White |

01-01-2018

**புத்தாண்டு & உடன்படிக்கைநாள்**

# கடவுளின் தொடரும் அருட்செயல்
# GOD'S CONTINUING ACT OF GRACE

செப். 3:14-20 உரோ. 5:1-11
தி.பா. 136 லூக். 13:1-9

***"...இஸ்ரயேலின் அரசராகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார் நீ இனி எந்தத் தீங்கிற்கும் அஞ்சமாட்டாய்."* செப். 3:15**

பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வர 365 நாட்கள் ஆகிறது. இதையே ஓர் ஆண்டு என்கிறோம். துல்லியமாகச் சொன்னால் 365.242 நாட்கள். அதாவது 365 1/4 நாள்கள். பூமியின் சுமார் 4.1 மில்லியன் ஆண்டு கால வரலாற்றில் கடவுளின் கிருபை மேலோங்கி நிற்பதால் பூமி தன் பாதையில் மறுபடியும் ஓடத் தொடங்கியுள்ளது. பூமியிலே வாழுகிற 700 கோடிக்கும் மேலான மானுடமும் நிலைத்திருக்கிறது.

பூமியை, ஆபத்தான பருவநிலை மாறுதல்கள் பல வடிவங்களில் அடிக்கடி தாக்குகின்றன. பல இடங்களில் பெருவெள்ளப் பாதிப்புகளும் 300 கிலோ மீட்டர் வேகம் வரை சுழற்றியடிக்கும் சூறாவளி மற்றும் புயல்களும் கூட பூமியைத் தாக்கியும், பூமி புரட்டிப் போடப்படாதபடி ஆண்டவரின் கிருபை பூமியைப் பாதுகாத்திருக்கிறது.

பருவநிலையின் திடீர் மாறுதல்களால் பூமிக்குப் பாதிப்பு வரப் போகிறதென்பதை மனிதர்கள் விண்ணிற்கு அனுப்பியுள்ள செயற்கைக் கோள்கள் கண்காணித்து எச்சரிக்கின்றன. ஆனாலும், எல்லாமே எப்போதும் மனிதனின் கட்டுப்பாட்டில் இருக்காது. தற்போது ஒரு பெரிய எச்சரிப்பு சொல்லப்படுகின்றது. அதாவது சூரியனால் உருவாக்கப்படும் சூரியப் புயல்கள் (Solar cyclones), விண்வெளிச் சூறாவளி (Space Hurricanes) ஆகியன பூமிக்கு ஆபத்தாக உருவாகி விட்டால் அவை பூமியை நோக்கி தள்ளுகின்ற Plasma எனப்படும் வெப்பக் குழம்புகள் விண்ணில் ஏவப்பட்டுள்ள செயற்கைக் கோள்கள் மற்றும் இதர தொழில் நுட்பங்களைப் பாதிப்பிற்குள்ளாக்கிச் செயலிழந்து போக வைத்து விடும். இப்படியொரு சூழல் ஏற்பட்டு விட்டால் பூமியும், பூமியில் வாழும் மானுடமும் நிர்மூலமாகிவிடுமென்பது உறுதி.

மனிதருடைய பாவங்கள் பெருகும் போது, ஆண்டவருடைய அன்பிரக்கத் தயாளத்தினால் கிருபைகள் பெரிதாகி நம்மைப் பாதுகாக்கின்றன. சூரியனின் வெப்பக்கதிர்கள் பூமியைத் தாக்குவதற்கு

முன்பே பூமியின் காந்தக்கோளம் (Magneto sphere) அவற்றை தன்னிடமாக ஈர்த்து, தடுப்பதுபோல, ஆண்டவருடைய கிருபையும் நிர்மூலங்களையும், நிக்ரகங்களையும் தன்னிடமாக ஈர்த்து பூமிக்கும், மானுடத்திற்கும் அனுக்கிரகம் செய்கின்றது. இது ஆண்டவரின் பேரருட்செயல். எபே. 2:8-10-ல் வரை இதை குறித்து விரிவாகப் படிக்கிறோம்.

ஆண்டவருடைய கிருபையின் மூன்று பரிமாணங்களைத் திருமறை அடிப்படையில் சிந்திப்போம்.

***1. கிருபை பாதுகாப்பளிக்கிறது*** : (செப். 3 : 15)

அகன்றிருப்பவராக எண்ணப்பட்ட கடவுள், நம்மில், நம்மோடு வாசம் செய்கிறார். அதை உறுதிப்படுத்துகின்ற அவரது திருப்பெயர் ‘இம்மானுவேல்’. பாரபட்சமில்லாதவராய், எல்லாருக்கும் பொதுவானவராய், எல்லாருக்குமானவராய் எல்லாருக்கும் பாதுகாப்பளிப்பவராய் அவர் நம் நடுவில் இருக்கிறார். அவர் நம் நடுவிலிருப்பது கிருபையின் வெளிப்பாடு. கிருபை தரும் பாதுகாப்பை இதுவே உறுதிப்படுத்துகின்றது. சிறப்பாக செப்பனியா இறைவாக்கினர் இதை திரும்பத் திரும்ப அழுத்திச் சொல்லி தவிப்பையும், அங்கலாய்ப்பையும், பாதுகாப்பின்மையையும் உணரும் நிலையில் வாழும் மக்களுக்கு கிருபை சூழ் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை செப். 3:15,17 ஆகிய வசனங்களில் படிக்கிறோம்.

மிகப் பழங்காலத்திலிருந்தே ஆண்டவர் நடுவில் இருந்தால் பாதுகாப்பு என்பது உறுதியாகச் சொல்லப்பட்டு வந்தது. தி.பா. 46:5 “கடவுள் அதின்(பூமியின்) நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே கடவுள் அதற்குச் சகாயம் பண்ணுவார்.”

நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயத்தினால் பூமியே அசைந்தது. அதன் பின் பேழையில் இருந்தவர்களோடு ஆண்டவர் தமது கிருபையை உடன்படிக்கையாக ஏற்படுத்தி, பூமி ஜலப்பிரளயத்தினாலோ அல்லது வேறு எந்த அதிர்வுகளாலோ நிலைமாறி, தடுமாறி கவிழ்ந்து போகாதபடி தாமே நடுவில் இருந்து பாதுகாக்கிறார். இதையே திபா.46 நம்பிக்கையின் நல்வாக்கியங்களாகப் பறைசாற்றுகின்றது.

ஒரு சமயம் விஞ்ஞானிகளில் சிலர் பரீட்சார்த்தமாக பூமியின் நடுவில் துளை போட்டுப் பார்க்க முயன்றார்கள். பூமியை பிளந்து விடுவது போல துளை போட முடியுமா என்பதைப் பரிசோதிக்க இந்த நடவடிக்கையைத் தொடங்கினார்கள். 1970 ஆண்டிலே துளையிடலை தொடங்கி அது 20 ஆண்டுகளுக்கு பின்னர் 40, 230 அடி ஆழத்தை

அடைந்தது. மைல் கணக்குபடி 7.5 மைல்கள், கிலோ மீட்டர் கணக்குப்படி 12 km ஆழத்தை அடைந்தது. இந்தத் துளை Kola Superdeep Bore Hole என அழைக்கப்படுகிறது. இதற்கு மேல் துளையிட முடியவில்லை. ஏனென்றால் ஆண்டவரது பாதுகாப்பு அடுக்கு பூமிக்குப் பாதுகாப்பை அவர் படைத்த போதே கொடுத்திருக்கிறது. அந்தப் பாதுகாப்பு அடுக்குக் காரணமாக பூமியின் நடுவம் திரவ உலோகத்தினால் நிரம்பியுள்ளது. அதன் வெப்பநிலை 9700 Faranheit (5400 Degree Celcius). இதற்குள்ளே யாரும் செல்ல முடியாதபடி கொதிக்கும் (Magna) குழம்பு இருக்கிறது.

நம் இருதயத்தையும் பிரச்சனைகளாலும், கடும் மன நெருக்கடிகளாலும் துளை போட்டு நம்மை அழித்து விட எண்ணும் மனிதர்களும், புறச் சூழல்களும் ஏராளம் இருக்கலாம். ஆண்டவரின் தாயான மரியாளுடைய இருதயத்திலும் துளை போடப்படும் என்பதை சிமியோன் முன்னறிவித்ததை லூக். 2:35 -ல் படிக்கிறோம்.

எனினும் ஸ்வாமி அனைத்தையும் தாங்கும் நம் இதயத்தை, எதையும் தாங்கும் நம் இதயத்தைத் துளை போட அனுமதிக்க மாட்டார். ஏனென்றால் இது அவருக்கான இடம்.

“உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கிறார், அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்” செப். 3:17.
கிருபையின் பல அடுக்குப் பாதுகாப்பு அம்சத்தை உணர்ந்து, திடனோடு புதிய வருடத்திற்குள் பயணிப்போம்.

***2. கிருபை பராமரிக்கிறது*** : (லூக். 13 : 8)

மரத்தோடு மனிதனைத் தொடர்புப்படுத்திக் கூறுவது பண்டைய மரபு. ஆண்டவர் தம்மைத் தோட்டக்காரராகவும், மனிதர்களை நாற்றுகளாகவும், மரக்கன்றுகளாகவும் ஒப்பிட்டார். லூக். 13:6-9 வரையுள்ள பகுதியிலே திராட்சைத் தோட்டத்திலே ஊடு பயிராகப் பயிரிட்டிருந்த அத்திமரமாக மனிதரை ஆண்டவர் தொடர்புப்படுத்துகிறார். ‘அத்தி’ ஒரு கனி மரம் மட்டுமல்ல, மருத்துவக் குணமும் நிறைந்த மரம். மரத்தின் பயன் கனியினால் கணக்கிடப்படும். ஆனால் இந்த அத்திமரம் நிலத்தையும் கெடுத்து ஏமாற்றம் தந்தது. எனினும் ஆண்டவர் ஏமாற்றம் தந்த இந்த மரத்தை வெட்டி மாற்ற மனமில்லாமல், தம் கிருபையினால் மரத்தை நல்ல கனிகள் தரும் மரமாக மாற்ற நினைக்கிறார். இதையே லூக். 13:18-ல் “...சுற்றிலும் கொத்தி எருபோடுவேன்” என்கிறார். எருபோடுதல் ஒரு வேலையல்ல. பல வேலைகளை உள்ளடக்கிய ஒரு பெரியவேலை. இது பல கட்டங்களாலானது. தேவையில்லாமல் அதிக உப்பு மண்ணில் வந்து

மண் உவர்தன்மையாகி விட்டதினால், இந்த மரம் கனி கொடாமல் போய் விட்டதோ என எண்ணி முதலாவது மண்ணைக் கொத்தி சீர்திருத்தம் பண்ணி விட ஆண்டவர் தீர்மானிக்கிறார். பொதுவாக, ஒரு நிலத்தில் அதிக உவர்தன்மையாகி விட்டால் அதன் உவர்தன்மையை மாற்ற நல்ல தண்ணீராகிய ஆற்று நீரையோ, மழை நீரையோ அந்த உவர் மண்ணில் முதலாவது 24 மணி நேரத்திற்கு தேக்கி வைத்து, அதன் உவர்தன்மையை மாற்றும் சீர்த்திருத்தம் செய்வார்கள். இதனால், நிலத்தின் உவர்தன்மை மாறி விளைச்சலுக்கு ஏற்றதாக மாறும். இரண்டாவது கட்டமாகிய எரு போடுவேன் என்பது நிலத்தில் பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப் பூண்டு, சணப்பை, கொழஞ்சி போன்றவற்றை பயிரிட்டு, இவை பூக்கும் பருவத்தில் 40-45 நாட்களில் மடக்கி உழுது விடுவதாகும். இது மண்ணை வளமாக்கும்.

ஆண்டவரும் நம்மைப் எரு போட்டு பராமரிப்பதன் மூலம் தமது கிருபையை நீட்டிப்பு செய்து நாம் நல்ல கனி கொடுக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்.

நாம் சார்ந்திருக்கும் உலகமாகிய நிலம் உவர்தன்மையடைந்து விடாதபடி நல்ல தண்ணீராக தம் வார்த்தையைத் தருகிறார். நாம் நல்ல விளைச்சல் தர வேண்டுமென எருவாக வாழ்க்கையில் பல வசதிகளைத் தந்திருக்கிறார். நம்மை நிர்மூலம் செய்ய அவருக்கு அதிக நேரமாகாது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் அமைந்திருந்த I.S தீவிரவாதிகளின் மறைவிடத்தை நிர்மூலமாக்க 13-04-2017 அன்று MOAB என்னும் வெடிகுண்டை வீசியது. MOAB என்றால் Mother of All Bombs. 11 Tonne வெடிப்பொருள் உள்ள மிகப்பயங்கரமான குண்டு போட்டார்கள். இதை போட்டால் மலைக்குகை, சுரங்கம் என எங்கே பதுங்கியிருந்தாலும் நிர்மூலமாக்கப்பட்டு விடுவார்கள்.

நாம் நிர்மூலமாகாதபடி கிருபையை நீட்டிப்பு செய்து ஆண்டவர் நம்மைப் பராமரிக்கிறார். புதிய ஆண்டிலே அவரது பராமரிப்பை அவமதிக்காமல் பயன்படுத்திக் கொள்ளுவோம்.

### *3. கிருபை பங்களிக்கிறது* : (உரோ. 5 : 2)

'கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியம்' என பவுல் அப்போஸ்தலர் ரோமர் 5:2-ல் எழுதுகிறார்.

புதிய வருடமென்பது 'அவர் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியம்' என நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆண்டவரது கிருபையின் சிலாக்கியம் எப்படியென்பதை இச. 6:11, திபா.136:21 ஆகிய வசனங்கள் விளக்குகின்றன.

❋ நல்ல வஸ்துக்களால் நிரம்பிய வீடுகள்

❋ வெட்டாமல், வெட்டப்பட்டிருந்த துரவுகள்

❋ நடாத திராட்சைத் தோட்டங்கள், ஒலிவத்தோப்புகள்

இவையெல்லம் ஆண்டவரது கிருபையின் சிலாக்கியத்தினால் நமக்கு கிடைத்திருக்கிற பங்குகள்.

ஆண்டவர் நமக்குத் தருகின்ற வளங்கள் நம்மால் சுயமாக எந்த விஞ்ஞான விந்தைகளாலும் உருவாக்க முடியாதவை. குறிப்பாக நிலம், நீர், காற்று, சூரியக்கதிர்கள் ஆகியவை நாம் உருவாக்காதவை. அவற்றை ஆண்டவர் கிருபையாக, நமக்குச் சுதந்திரமாகத் தந்திருக்கிறார். "பூமியும் அதன் நிறைவும்" என திபா. 24:1 -ல் நாம் படிக்கிற அருட்கொடையில் நிலம், நீர், காற்று, சூரியக்கதிர்கள் ஆகியவை உள்ளடங்கியுள்ளன.

மண்ணைத் தான் நிலம் என்கிறோம். இது சிதைந்த பாறைத் துகள்கள், மாற்றமடைந்த கனிமத் துகள்கள், உயிர்ச்சத்துகள், உயிரினங்கள் ஆகியவற்றாலாகிய கலவை. உயிரினங்களுக்குத் தேவையான சத்துக்களையும், நீரையும் அளிக்கும் ஆதாரமாக மண் இருக்கிறது. மண்ணிலே கிடைக்கின்ற எதுவுமே மனிதன் உருவாக்காதவை. உயிரினங்களின் திசுக்களில் 90 விழுக்காடு வரை நீர் இருக்கிறது. தாவரங்கள், உயிரினங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான சத்துக்களை நீர் கொடுக்கிறது. மனிதன் எவ்வளவு ஆராய்ச்சி செய்தாலும் அவனால் ஒரு சொட்டு நீரைக் கூட உருவாக்க முடியாது.

தாவரங்கள், உயிரினங்களுக்குத் தேவையான கரிமலவாயு, பிராணவாயு ஆகியவற்றை வளி மண்டலம் அளிக்கிறது. இதுவும் மனிதன் பிரயாசப்படாமல் ஆண்டவரது கிருபையால் கிடைக்கிற அருட்கொடை.

காலைதோறும் புதியவைகளாக வீசப்படும் சூரியக்கதிர்கள் வளிமண்டலத்தை வெப்பமாக்கவும், நீராவியாக்கவும் நீரை வளி மண்டலத்தில் செலுத்தவும் உதவுகிறது. இவையும் மனிதப் பிரயாசமில்லாமல் அவரது அருட்கொடையினால் நடக்கிற உன்னதமான செயல்களாகும்.

நம்மை ஏற்றுக்கொண்டு நமது நல்வாழ்விற்கான பங்களிப்புகளாக இவைகளைத் தந்திருக்கிறார். நன்றியோடு இவற்றை நுகர வேண்டும்.

முன்பு வசதியானவர்களிடம் மட்டுமே காணப்பட்ட 'காசு கொடுத்தால் கிடைக்கிறது' என்னும் அலட்சிய மனோபாவம் கீழிறங்கி வந்து நடுத்தரக் குடும்பங்களையும் பாதித்திருக்கிறது. இதனால் தாங்கள்

பிரயாசப்படாததையும் பணமிருந்தால் வாங்கி விடலாம் என்னும் எண்ணம் நன்றியறியாதவர்களாக அநேகரை மாற்றிக் கொண்டேயிருக்கிறது.

போதாமை தான் அன்றைய வாழ்க்கை என்றாலும் அதிலும் ஒரு நிறைவு இருந்தது. இன்று எல்லாமே கிடைக்கின்றன. நிறையவே கிடைக்கின்றன. ஆனாலும் நிறைவடைய முடியவில்லை. எனக்கு அருமையானவர்களே 'எல்லாம் கிருபை' என உணர்ந்தாலன்றி நிறைவடைய முடியாது.

கிருபையை குறித்தே மேன்மை பாராட்டுவோம். "அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை...." (உரோ. 5:2) பெற்றிருக்கிறோம். நன்றியறிதலுள்ளவர்களாய் இருப்போம்.

ஆண்டவரின் ஆசி நம்மனைவரோடும் தங்கியிருப்பதாக.

பேரருள்திரு. அறிவர். G. **தேவகடாட்சம்**
பேராயர்

02-01-2018

**வார இறைவேண்டல் - நாள் 1**

# அந்நியமும் அந்நியோந்நியமும்

லேவி. 19:30-37

எபி. 13:1-3, 14-16,20,21

மத். 25:31-40

***"...உங்கள் மீது நீங்கள் அன்புகூர்வதுபோல் அவர் மீதும் அன்புகூருங்கள்..."*** **லேவி. 19:34**

ஆண்டவர் படைத்த உலகத்திலே மறுபடியும் வாழும்படி நாம் அனுமதிக்கப்பட்டிருக்கும் அடையாளமே புதிய வருடம். 2018 என்னும் Password தந்து இந்த உலகத்திற்குள் ஆண்டவர் அனுமதித்திருக்கிறார்.

இந்த வாழ்க்கையிலே அவர் விரும்புகிறபடி வாழ நம்மை அர்ப்பணித்து புதிய வருடத்தை தொடங்கினால் அதிகமான ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள முடியும். ஆண்டவர் இப்புதிய வருடத்திலே நம்மிடம் எதிர்பார்ப்பதை மாறி வரும் உலக சூழ்நிலையை அடிப்படையாக கொண்டு திருமறையின் வழிகாட்டுதலை தியானிக்கப் போகிறோம்.

B.B.C என்னும் புகழ்பெற்ற செய்தி நிறுவனம், மாறி வரும் உலக சூழ்நிலைகளை மக்களுக்கு விளக்குவதற்காக Tomorrow's World - நாளைய உலகம் என்னும் அறிவியல் தொடரை ஒளிபரப்பு வந்தது. சில வருடங்களாக இந்த ஒளிப்பரப்பு இல்லாமலிருந்தது. 14 ஆண்டுகளுக்குப் பின் மறுபடியும் இதை தயாரிக்கிறார்கள். உலகின் தலைசிறந்த விஞ்ஞானியும் இயற்பியலாளருமான Stephen Hawking மற்றும் அவருடைய முன்னாள் மாணவர் Christophe Galford ஆகியோரும் இந்த அறிவியல் தொடரில் கலந்து கொண்டு மாறி வரும் உலக சூழலை அலசியிருக்கிறார்கள்.

அவர்களது விவாதமெல்லாம் இனி மனிதர்கள் ஒருமித்து பூமியில் வசிக்க முடியாது; ஏனென்றால் மனிதர்களை மூர்க்கமாக மாற்றுகிற,

(i) உள்ளுணர்வுகள் (ii) தொழில்நுட்பங்கள் (iii) அணுசக்திப் போர் (iv) உயிரியல் போர் (v) காலநிலை மாற்றம் (vi) மக்கள்தொகை பெருக்கம் - இவை பெருகி வருகின்றன. எனவே மனிதர் விண்வெளியில் குடியேற ஆயத்தப்பட வேண்டும்.

தங்களது கருத்துக்களையெல்லாம் மக்களுக்கு சொல்லுகிற வகையில் Expedition New Earth என்னும் பெயரிலே ஒரு ஆவணப்படத்தையும் எடுத்திருக்கிறார்கள்.

இந்த ஆவணப்படத்திலேயே, மக்கள் இனிமேல் ஒன்றிணைந்து உலகில் வாழ முடியாதென்றும், அப்படியே வாழ வேண்டுமானால் 'உலக அரசாங்கம்' என ஒன்று அமைய வேண்டும் எனவும் யோசனையை சில முன்மொழிந்திருக்கிறார்கள்.

ஆனால் ஆண்டவர், திருமறையின் மூலமாக மக்கள் எல்லாரும் ஒன்றிணைந்து இந்த உலகத்தில் வாழ வேண்டும் என்பதற்கான ஆவலை வெளிப்படுத்தியிருக்கிறார். அவ்வாறு ஆண்டவர் இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தியது தான் யோவா. 17-ம் அதிகாரத்தில் நாம் படிக்கிற பிரதான ஆசாரிய ஜெபம்.

பழைய ஏற்பாடு காலத்தில் அனைவரும் ஒன்றிணைந்து வாழ வேண்டுமென்பதற்காக சொல்லப்பட்ட ஆண்டவருடைய அறிவுரைகளில் ஒன்று அன்னியரை நேசிக்க வேண்டும்

தீமைக்கு நேராக மாறி வரும் உலகத்தில் நன்மைக்கு நேராக நாம் மாற்றமடைய ஆண்டவரின் வார்த்தையை தியானிப்போம்.

## *1. அந்நியத்தில் அந்நியோந்நியம்* : (லேவி. 19 : 34)

பவுல் அப்போஸ்தலர் அன்பைக் குறித்து கூறுகிற 1கொரி. 13-ம் அதிகாரத்தில் அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாது என்னும் வசனத்தை கூறுகிறார். மனிதரின் மனநிலைகளை நன்கு உணர்ந்து சொல்லப்பட்ட வசனம் இது.

எகிப்தியர் ஒரு காலத்திலே அநியாயத்தில் சந்தோஷப்படுகிற மனநிலையோடு இஸ்ரவேலரை நடத்த தொடங்கியதால், இஸ்ரவேலருக்கு துன்பம் தொடங்கியது. அது வரை எகிப்திலே குடிமக்களை போல இருந்தவர்கள் திடீரென்று அகதிகளாக்கப்பட்டு கொடுமையாக துன்பப்படுத்தப்பட்டார்கள்.

இதனால் தான் சர்வ வல்லமையுள்ள ஆண்டவர் அவர்களுக்கு கொடுத்த உபதேசங்களில் முக்கியமானது - அந்நியனுக்கு அந்நியோன்யம் காட்டு. நீயும் எகிப்திலே அந்நியனாக இருந்தாயே (லேவி. 19:34).

அந்நியர்களை நாம் 'அகதிகள்' எனச் சொல்லுகிறோம். 'பஞ்சம் பிழைக்க வந்தவர்கள்' என்பது நமது முன்னோர் காலத்திலிருந்தே பயன்படுத்தப்படுகிற சொல்.

உலகில் தற்போது இருக்கும் பெரும் பிரச்சனைகளுள் ஒன்று அகதிகள் பிரச்சனை. உலகத்தில் இரண்டு கோடி பேர் அகதிகளாக தங்கள் நாட்டை விட்டு பிற நாடுகளிலே தஞ்சம் அடைந்திருக்கிறார்கள்.

சர்வ பூமியை படைத்த கடவுள் யூத மக்களிடத்திலே அகதிகளைக் குறித்து முதலாவது பேசக் காரணம், உலக வரலாற்றிலே 2000 ஆண்டுகளுக்கும் மேலாக அகதிகளாக பல நாடுகளில் திரிந்து இன்னலுற்றவர்கள் யூதர்கள் தான்.

கி.மு. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 1948-இல் தங்களுக்கென நாடு அமைந்த பின்னரும் அகதிகளாக வருத்தப்பட்டவர்கள் தான் யூதர்கள்.

திருமறையை ‘அகதிகளின் வரலாறு’ என கூறலாம். ஆபிரகாமின் காலத்திலேயே அகதிகளாக வாழ்க்கையை தொடங்கிய இஸ்ரவேலர், யாரையும் அகதிகளாக நடத்தக் கூடாது என்னும் அறிவுரையை ஆண்டவர் கூறினார்.

அவர்கள் பட்ட கஷ்டத்தை உணர்ந்து கொள்ளவும், அவர்கள் யாரையும் கஷ்டப்படுத்தி விடக் கூடாது எனவும் இதை அறிவுரையாக ஆண்டவர் அவர்களுக்குச் சொன்னார்.

கஷ்டப்பட்டவர்கள், கஷ்டப்படுத்த மாட்டார்கள் என்பார்கள். ஆனால் சில சமயம் கஷ்டத்தின் பெருக்கத்தினால் வாழ்க்கையிலே வெறுமையும், வெறுப்பும் வந்து விட்டால் பிறரை கஷ்டப்படுத்தவும் தயங்க மாட்டார்கள்.

லேவி. 19:34 வழியாக ஆண்டவர் கூறுவதெல்லாம்

(i) உறவுகளில் உரிமையை கொடுங்கள்.
(ii) வாழ்க்கையில் நம்பிக்கையை கொடுங்கள்.
(iii) அன்பில் உண்மையை கொடுங்கள்.
(iv) நட்பில் நேர்மையை கொடுங்கள்.

எகிப்திலே இஸ்ரவேலர் அடிமைகளான போது அடிப்படையான இந்த நான்கும் மறுக்கப்பட்டு தான் சிறுமைப்படுத்தப்பட்டார்கள். ஆகவே யாரையும் அவர்கள் இப்படி சிறுமைப்படுத்தக் கூடாது என ஆண்டவர் போதித்தார்.

இதிலிருந்து ஆண்டவர் எவ்வளவு கவனமாக நமது வாழ்க்கை முறையை கவனிக்கிறார் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இரண்டு வழிகாட்டல்களை நாம் மனதில் வைத்திருக்க வேண்டும்,
(i) சங்கடங்கள் வரும் போது தடுமாறக் கூடாது.

(ii) சந்தர்ப்பங்கள் வரும் போது தடம் மாறக் கூடாது.

அந்நியமாக்குகிற அகதி நிலையை நாமும் வாழ்க்கையில் சந்தித்திருப்போம்.

தகுதி இருந்தும் வேலையிடத்திலோ அல்லது சில நிகழ்ச்சிகளிலோ நமது பின்னணியம், நமது பாரம்பரியம் காரணமாக அந்நியப்படுத்தப்பட்டிருப்போம்.

கிறிஸ்தவர்களாக இருப்பதாலும் சில பணியிடங்களிலே அந்நியப்படுத்தப்பட்டிருக்கலாம்.

மொழியின் காரணமாகவும் நமது வட்டாரத்திலே வழக்கத்திலிருக்கும் மொழி நடை, மொழி உச்சரிப்பு காரணமாக அந்நியப்பட்டிருக்கலாம்.

சில பாரம்பரிய உடைகளை அணியும் போது அவை அணியப்பட்டிருக்கும் விதத்தினடிப்படையில் அந்நியப் படுத்தப்பட்டிருக்கலாம்.

சாதிய பாகுபாடுகள் காரணமாக அந்நியப்படுத்தப்பட்டிருக்கலாம்.

பொருளாதார தரத்தினடிப்படையில் குடும்பத்திற்குள்ளேயே அந்நியப்படுத்தப்பட்டிருக்கலாம்.

இவ்வளவு கஷ்டங்களை அனுபவித்த நாம் இதே போல யாரையும் அந்நியப்படுத்தி கஷ்டப்படுத்தக் கூடாது.

சிகிட்சைக்காக இரத்தம் தேவைப்படும் போது, ‘இது யாருடைய இரத்தம்’ என நாம் ஜாதி அடிப்படையிலோ, பொருளாதார அடிப்படையிலோ பார்ப்பதில்லை. அந்நியரின் இரத்தம் வேண்டாம் என சொல்லுவதுமில்லை.

அந்நியமாக உணர்பவர்களுக்கு அந்நியோன்யம் கொடுக்க வேண்டும். இதை ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

இதை நாம் நிறைவேற்றினால் அன்னியனாய் இருந்தேன் என்னை சேர்த்துக் கொண்டீர்கள் (மத். 25:25) என வாழ்த்துவார்.

நியாயத்தீர்ப்பில் இது ஒரு மதிப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. இதிலும் நல்ல மதிப்பெண்ணை பெற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

***2. அந்நியருக்கு உபசரணை :*** (எபி. 13 : 2)

எருசலேமில் குடியேறி வசித்த கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட எபிரேயர் நிருபத்தில் கொடுக்கப்பட்ட முக்கியமான அறிவுரை - அன்னியரை உபசரிக்க மறவாதிருங்கள்.

எருசலேமில் கிறிஸ்தவர்களின் உயிருக்கே ஆபத்தான சூழல் தான் இருந்தது. யூதர்களாலும், ரோம அரசாங்கத்தாலும் அவர்களது உயிருக்கே ஆபத்தான சூழல் தான் இருந்தது. யாரையும் அவர்கள் நம்பி ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆபத்தான எதிர்சூழலில் இந்த உபதேசம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இன்று நம்மிடையே உள்ள அந்நியர்களை நாம் ஏற்றுக் கொள்ளவதில்லை. அவர்களால் நமக்கு ஆபத்து வருமோ என அஞ்சுகிறோம். எல்லா இடத்திலும் அந்நியர்களை கண்டு அஞ்சும் போக்கு தான் இருக்கிறது.

இந்தியாவில் பல அந்நிய குழுக்கள் அகதிகளாக தஞ்சமடைந்திருக்கிறார்கள். சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக Chakma, Hajong அகதிகள் இந்தியாவில் இருக்கிறார்கள்.

வங்கதேசத்திலிருந்து இந்தியாவின் அருணாச்சல பிரதேசத்தில் இவர்கள் தஞ்சமடைந்திருக்கிறார்கள்.

வங்கதேசத்தின் கிட்டகாங் மலைப்பபகுதியில் வசித்து வந்த Chakma, Hajong இனத்தை சேர்ந்தவர்கள் 1960-ஆம் ஆண்டுகளில் அங்கே அணை கட்டப்பட்ட போது சுமார் 5000 பேர் இந்தியாவுக்குள் அகதிகளாக இடம் பெயர்ந்து வந்தார்கள். 2017-ஆம் ஆண்டில் இவர்களது எண்ணிக்கை ஒரு லட்சம் நபர்களாக அதிகரித்து விட்டது. இந்த அகதிகளில் Chakma அகதிகள் புத்த மதத்தினர், Hajong அகதிகள் இந்து மதத்தினர். ஏராளமாக இருக்கிற இவர்களை இந்திய நாட்டு மக்களாக ஏற்றுக் கொண்டு குடியுரிமை கொடுக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதற்கு அருணாச்சல பிரதேச மாநிலத்திலுள்ள சமூக அமைப்புகள் சில மறுக்கின்றன, எதிர்க்கின்றன.

இதே போல நமது அண்டை நாடான மியான்மரிலும் ஒரு பிரச்சனை இருக்கிறது. இங்குள்ள ராக்கைன் மாநிலத்திலே Rohingya முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்கள் மியான்மரின் பூர்வீக குடிகளல்ல; இவர்கள் வங்கதேசத்திலிருந்து வந்த அன்னியர்கள் என்னும் எண்ணம் மியான்மர் மக்களுக்கு இருக்கிறது. ரோகிங்கியாக்களை மியான்மர் மக்கள் தங்கள் நாட்டுக் குடிமக்களாக ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களுக்கு குடியுரிமையும் தரப்படவில்லை.

ரோகிங்கியாக்களை 'அன்னியர்' என துரத்தும் போது, அண்டை நாடுகளும் அவர்களை ஏற்றுக் கொள்ளுவதில்லை. தங்களுக்கென்று நாடு எதுவும் இல்லாத சூழலில் தோணிகளில் ஏறி அண்டை நாடுகளுக்கு இராணுவமும், போலீசும் தடுப்பதால் நடுக்கடலில் தவித்து வருகிறார்கள்.

மியான்மர் அரசு ரோகிங்கியாக்களை வங்கதேசத்தை சார்ந்தவர்கள் எனக் கூறுவதால் வங்கதேசத்திற்கு போகலாம் என இவர்கள் முடிவெடுத்தாலும், பர்மிய மொழி பேசுவதால் வங்கதேசம், மலேசியா, இந்தோனேஷியா முஸ்லீம் மக்களும் கூட இவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை.

1972-இல் இருந்து குடியுரிமை மறுக்கப்பட்டு எந்த நாட்டையும் சாராதவர்களாக 10 லட்சம் பேர் இருப்பதை ஐ.நா சபையும் கண்டு கொள்ளவில்லை, உலக நாடுகளும் கண்டு கொள்ளவில்லை.

ஆண்டவர் அன்னியரை உபசரிக்க மறவாதிருங்கள் என்னும் செய்தி வழியாக நம்மிடம் எதிர்பார்க்கிறதென்னவென்றால் நாம் மனிதநேயமுள்ளவர்களாக, பரிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். கஷ்டப்படுகிறவர்களைக் கண்டும் காணாதது போல இருக்கக் கூடாது.

பொதுவாக உபசரணையெல்லாம் நாம் விருந்தினர்களாக ஏற்றுக் கொண்டவர்களுக்கு மட்டுமே செய்வதுண்டு. மற்றவர்களை நாம் கண்டு கொள்ளுவதில்லை, அன்னியர்களாகவே நடத்தி விடுவோம்.

விருந்தினர்களை எப்படி உபசரிக்க வேண்டுமென்பதை பண்டைய தமிழ் நூலான விவேக சிந்தாமணி மிக அழகாக கூறுகிறது,

1. வியப்புடன் வரவேற்றல், புருவம் உயர்த்தி, வியப்பை காட்டி வரவேற்பது.
2. முகம் மலர நோக்குதல்.
3. நன்மொழி கூறுதல்.
4. அருகே அமர்ந்திருத்தல்.
5. விருந்துண்ட பின் விடைபெற்று செல்லும் போது, பின் சென்று, உபசார மொழிகளுடன் வழியனுப்புதல்

இவை தான் உபசரணை - Hospitality.

அன்னியர்களை யாரும் நமக்கு அறிமுகம் செய்யாதவரை அவர்களை நாம் மதிப்பதில்லை. அவர்களுக்குரிய எந்த கௌரவத்தையும் அங்கீகாரத்தையும் கொடுப்பதில்லை.

அன்னியர்களிலும் பலர் பெரிய பொறுப்புகளில் இருக்கலாம். பெரிய குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருக்கலாம்.

நமக்கு தெரியாததினால் அவர்கள் இழிவானவர்களல்ல. அவர்களை மதித்து அவர்களை கௌரவத்தோடு நடத்தினால் அதற்குரிய கௌரவம் கண்டிப்பாக நமக்கு உண்டு.

அன்னியர்களிலும் பெரியவர்களும் சிறப்பானவர்களும் இருக்கலாம் என்பதினால் எபி. 13:2 மிக அழகாக அன்னியரிலும் தேவதூதர்கள் உண்டு எனக் கூறுகிறது.

இந்திய நாட்டின் உபசரணை வாசகமும் இதையே சொல்லுகிறது - Atithi Devo Bhava

Guest is God.

இந்த அடிப்படையில் நாம் அன்னியரை உபசரிக்க வேண்டும்.

உபசரணை என்பது பகிர்வை அடிப்படையாகக் கொண்டது. இன்று பலர் ஒரு சிறு அளவை கூட பகிர விரும்பவில்லை,

இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன் லூக் 3:11.

இரண்டு அங்கிகளை ஒரே நேரத்தில் பயன்படுத்த முடியாது. ஆனாலும் இல்லாதவனுக்கு கொடுக்க மனம் இல்லை.

நம்மிடம் இரண்டு அங்கி இருக்கின்றன. பக்கத்திலிருப்பவனுக்கு ஒன்றுமே இல்லை. ஆனாலும் கடனாக கூட கொடுக்காமலிருப்பது ஆண்டவரது குணத்திற்கு எதிரானது.

நம்மிடம் அடிப்படை உபசரணை கூட இல்லை. முன்பெல்லாம் பெரியவர்கள் சிறுவர்களுக்கு அதிக பங்கை பகிர்ந்து கொடுப்பதுண்டு. ஆனால் இன்று யாரும் யாரையும் கண்டு கொள்ளுவதில்லை. ‘நான் கொடுப்பதை விரும்ப மாட்டார்கள்’ எனச் சொல்லியே உபசரிப்பு எல்லாவற்றையும் குறைத்துக் கொண்டார்கள்.

இப்போதெல்லாம் தெரிந்தவர்களையும், உறவுகளையும் கூட இந்த மனநிலையினால் அன்னியர்களாக நடத்தத் தொடங்கி விட்டோம்.

வீட்டினுள்ளேயே தனியறைகளிலே ‘அந்நியர்கள் உள்ளே வரக் கூடாது’ ‘அனுமதியின்றி உள்ளே வரக் கூடாது’ என்பது போன்ற பலகைகள் தொங்க விடப்பட்டுள்ள வீடுகள் இருக்கின்றன.

ஆண்டவர் விரும்பாதது ‘அந்நியப்படுத்துதல்’ இதை உணர்ந்து செயல்படுவோம்.

ஒருவரை தெரியாமலிருக்கும் போது, அறியாமலிருக்கும் போது அவர் நமக்கு அன்னியர், நாமும் அவருக்கு அந்நியர்.

அறிமுகமில்லாத அந்நியர்களின் பார்வையில் நாம் சாதாரண மனிதர்கள் தான்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை அறியாமல் நாமும் அந்நியர்களாக தான் இருந்தோம்.

அப்படியிருந்த நம்மை ஆண்டவர் சொந்தக்காரர்களாக்கினார். அவரது குடும்பத்தார், வீட்டார் என சொல்லப்படுகிற ‘சபையாக்கினார்.’

இதை பவுல் அப்போஸ்தலர் எபே. 2:12,19,20 ஆகியவற்றில் சிறப்பாக, நற்செயலாக சொல்லுகிறார்.

அந்நியரல்ல என அந்நியோந்நியம் தந்த ஆண்டவரைப் போற்றுவோம்.

அருள்திரு. J. **பிரகாஷ் நாயகம்**

03-01-2018

வார இறைவேண்டல் - நாள் 2

# அடிமையல்ல, சகோதரன்

இச. 15:5-15

பிலமோன் 1

மத். 5:22-26

**"இனி அவனை நீர் அடிமையாக அல்ல, அடிமையை விட மேலானவனாக, அதாவது உம்முடைய அன்பார்ந்த சகோதரனாக ஏற்றுக்கொள்ளும்."** பிலே. 1:16

ஆசீர்வாதத்தை அதிகமாக விரும்புகிறோம். ஆசீர்வாதத்தை விரும்பாதவர்கள் யாருமே கிடையாது. ஆண்டவருடைய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள வேண்டுமானால் நமது செயல்களும் ஆசீர்வாதமாக இருக்க வேண்டும்.

அனைவருக்கும் தெரியும் வாழ்க்கை

அனைவருக்கும் தெரியாத வாழ்க்கை

என நமது வாழ்க்கை இரண்டு பகுதிகளுடையது.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதிக்க வேண்டுமானால் அனைவருக்கும் தெரியாத வாழ்க்கை சிறப்பானதாக இருக்க வேண்டும். ஏனென்றால், மற்றவர்களுக்கு தெரியாத இந்த வாழ்க்கை ஆண்டவருக்கு மட்டும் தெரிந்த வாழ்க்கை. இந்த வாழ்க்கை சிறப்பாக இருந்தால் நாம் மட்டுமல்ல, நமது பரம்பரையே ஆசீர்வதிக்கப்படும்.

நாம் பெரும்பாலும் நமது ஆசீர்வாதத்தைக் குறித்தே எண்ணம் கொண்டிருக்கிறோம். அனால் ஆண்டவர் இஸ்ரவேல் மக்களிடத்தில் பேசும் போது அவர்களின் ஆசீர்வாதத்தை மட்டுமல்ல, அவர்களது சந்ததியின் ஆசீர்வாதத்தை மனதில் வைத்தே பேசினார். அவ்வாறு ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள அவர்களது வாழ்க்கை முறை எப்படியிருக்க வேண்டுமென சொல்லுகிற திருமறை பகுதியே இச. 15:5-15.

இதிலே சுருக்கென்று சொல்லப்படும் செய்தி எகிப்திலே அடிமையாயிருந்த நீ, யாரையும் அடிமையாய் நடத்தாதே இச. 15:15.

நாம் மற்றவர்களை அடிமையாய் நடத்துவது நமக்கே தெரிவதில்லை. அடிமை என்கிற தமிழ் வார்த்தை பல விதங்களில் அடிப்பதை குறிக்கிறது. சொற்களால் அடிப்பது, வன்செயல்களால் அடிப்பது, மென்செயல்களால் அடிப்பது என நாம் யாரையாவது அடித்தால் அவர்களை அடிமைகளாக நடத்துகிறோம் என்பது பொருள்.

மனித வாழ்க்கை, எடைகள், அளவுகள் போன்றவற்றின் அடிப்படையில் அமைகிறது. வேலைத் திறனை குதிரை சக்தி (Horse Power) என்னும் அளவீடினால் அளவிடுவதுண்டு. நம் பகுதிகளிலே ஆடு, மாடுகளை வேலைக்கு அதிகமாக பயன்படுத்துவது போல, ஐரோப்பிய நாடுகளிலே குதிரைகளை அதிகமாக வேலைக்கு பயன்படுத்தினார்கள். தொழில்புரட்சியினால் நீராவி இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்ட போது, அதனுடைய வேலை திறன் எவ்வளவு என்பது ஒப்பீட்டளவில் கூற குதிரையின் ஆற்றலோடு சமன்படுத்தி கூறினார்கள். இதனை முதலாவது செய்தவர் நீராவி இயந்திரத்தை கண்டுபிடித்த James Watt.

தான் தயாரித்த நீராவி இயந்திரத்தை விற்பனை செய்யும் போது, அந்த இயந்திரம் எத்தனை குதிரைகளை ஈடு செய்யும் என்பதை கூறுவதற்கு குதிரை சக்தி என்னும் ஒப்பீட்டளவை பயன்படுத்தினார். அதாவது ஒரு நீராவி இயந்திரத்தின் திறன் 200 குதிரை சக்தி கொண்டது என்று கூறின போது 200 குதிரைகளையும் அவற்றை பராமரிக்க லாயமும் தேவையில்லை என புரிந்து கொண்டு நீராவி இயந்திரத்தை வாங்கினார்கள்.

இதே போல மனிதர்களையும் அடிமைகளாக நடத்துபவர்கள் அவர்களது உடல் பெலத்தினை தங்களது கணக்கின்படி அளந்து, கடினத்திலிருந்து மிகக் கடினம் வரை அவர்களை வேலை செய்ய வைத்தார்கள்.

ஒநேசிமு என்னும் அடிமையை பிலேமோன் அவ்வாறு மிக கடினமாக நடத்தினதால் அவர் ஓடிப் போனார். பிலேமோன் இதை அறிந்து செய்தாரென்பதை விட, அறியாமல் செய்தார்.

நாமும் அறியாமலும், உணராமலும் செய்கிற பாவங்களில் இவையெல்லாம் உள்ளடங்கி விடுகின்றன.

ஆகவே இதை தவிர்க்க இதைக் குறித்து தியானிப்பது மிகவும் அவசியமானது. திருச்சபை என்னும் அமைப்பின் மூலமாக நமக்கு கற்றுத் தரப்படும் உண்மைகளை தியானிப்போம்.

## ஒநேசிமு - பிலேமோன்

ஒநேசிமு, செல்வந்தனான பிலேமோனின் வீட்டில் வேலை செய்த ஒரு வேலைக்காரன். ஒநேசிமு என்னும் பெயரின் பொருள் பிரயோஜனமுள்ளவன். ஆனால் பயனற்ற ஒரு காரியத்தை ஒநேசிமு செய்து விட்டார்.

சில சமயம் சபையல்லாத பிற சங்கங்கள் பிறரை ஒருவருக்கு விரோதமாக, தீமையாக தூண்டி விடுவதுண்டு. நன்மையான தூண்டுதலை

விட, தீய தூண்டுதல் அதிகம் உலகில் நடக்கிறது. சபையிலும் அவ்வாறு சில சமயம் நடப்பதுண்டு.

ஒநேசிமுவையும் அவனைப் போல ஒரு வீட்டில் வேலைக்காரனாக இருந்த அந்தியோகு என்னும் மனிதன் தீமைக்கு நேராக தூண்டினான். அடிமையாக இருப்பதை விட, எஜமான் வீட்டில் பணத்தை எடுத்துக் கொண்டு தூர தேசம் போனால், நாம் விடுதலையடைந்து விடலாம், விருப்பம் போல வாழலாம் எனத் தூண்டினான்.

இதனால் ஒநேசிமுவின் மனமும் குறைபட்டுப் போனது. எஜமான் வீட்டில் பணத்தை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

ஒநேசிமுவும், அந்தியோகுவும் முதலாவது செசரியா பட்டணத்திற்கு போக முடிவு பண்ணினார்கள். ஆனால் அங்கே ஓடிப் போன அடிமைகளை எளிதில் கண்டறியக் கூடிய வகையிலான சிறிய பட்டணம் என்பதால் பெரிய பட்டணமாகிய ரோமாபுரிக்கு புறப்பட்டுப் போனார்கள்.

ரோமாபுரியில் கையிலிருந்த பணம் குறையத் தொடங்கியது. ஒநேசிமு தூங்கும் போது அவன் வைத்திருந்த பணத்தை எடுத்துக் கொண்டு அந்தியோகு ஓடி விட்டான். காலையில் ஒநேசிமு கண் விழித்துப் பார்க்கும் போது அந்தியோகுவையும் காணவில்லை, பணப்பையையும் காணவில்லை. ஒநேசிமுவுக்கு சாப்பாட்டிற்கும் வழியில்லாமலாகி விட்டது. ஆகவே வழிப்பறி செய்ய முயன்றான். உடனே அவனைப் பிடித்து காவலர்களிடம் ஒப்படைத்தார்கள்.

சிறைக்கு கொண்ட போகும் வழியில் கொலோசே பட்டணத்தானும் ரோமாபுரியில் சிறையிலிருந்த பவுலுக்கு உதவி செய்தவனுமாகிய எப்பாப்பிரா வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்த ஒநேசிமு அவன் காலில் விழுந்து தன்னை காப்பாற்ற வேண்டினான். பிலேமோனின் வீட்டிற்கு சென்ற போது ஒநேசிமுவை பார்த்திருந்த எப்பாப்பிரா, மனம் இளகினான். ஒநேசிமுவை பிடித்திருந்த சேவகர்களில் ஒருவன் பவுலை பாதுகாக்கும் சேவகர்களில் ஒருவனாக இருந்தபடியால் அவனிடம் ஒநேசிமுவிற்காக பேசி, ‘இவன் திருடின பணத்தை நான் கொடுக்கிறேன். இவனுக்கு உத்திரவாதியாக நான் இருப்பேன்’ என்றான். சேவகன் இதற்கு சம்மதித்து ஒநேசிமுவை விட்டு விட்டான்.

இதற்கு பின் எப்பாப்பிரா ஒநேசிமுவை பவுல் காவல் பண்ணப்பட்டிருந்த வீட்டிற்கு கூட்டிக் கொண்டு போனான். அங்கே பவுல் ஒநேசிமுவிற்கு உபதேசம் பண்ணி, அவனை திருத்தி, அவனை நல்ல மனிதனாக்கினார். ஒநேசிமுவை ஆண்டவரின் சங்கமாகிய சபையில் அங்கமாக்கினார்.

இதற்குப் பின் பிலேமோனிடம் பவுல் கடிதம் மூலம் பேசினார். அந்த கடிதத்தில் ஒநேசிமு இனி அடிமையாக அல்ல, அடிமையானவனுக்கு மேலானவனாக பிரியமுள்ள சகோதரனாக வருகிறான். அவனை ஏற்றுக் கொள்ளும் என எழுதினார் பிலே. 15,17.

ஒரு வேலைக்காரனாக இருந்த ஒநேசிமு ஆண்டவருடைய சபையாகிய சங்கத்தில் அங்கமான பின் சகோதரனாக மாறுகிறார்.

இதனால் தான் சபையாகிய சங்கத்தில் நாமும் யாரும் செய்யும் வேலையினடிப்படையில் அவர்களை பாகுபடுத்துவதில்லை. அவர் ஒரு கொத்தனாராக இருக்கலாம், அலுவலக உதவியாளராக இருக்கலாம். சங்கமாகிய சபையில் அவர் வரும் போது அவரை நாம் அப்படி நடத்தாமல் சகோதரனாக நடத்துகிறோம். இதை உலகப் பிரகாரமான சங்கம் செய்யாது. ஆனால் சபையாகிய சங்கம் செய்யும்.

நாம் அடிமைப்பட்டிருந்த காலத்தில் நமக்குள் உருவாகி, தேங்கியிருந்த கசப்புகளையெல்லாம் இப்போது நாம் மறுஉருவாக்கம் செய்ய வேண்டும்.

எப்படி?

நமது கசப்புக்களை சுமந்து கொண்டு எவரையும் அவற்றால் கசந்துக் கொண்டு அடிமைகளாக்கக் கூடாது.

அனல்மின் நிலையங்களைக் குறித்து கேள்விப்பட்டிருப்போம். நெய்வேலியில் ஒன்றிருக்கிறது. மின் உற்பத்திக்காக எரிந்து, எரிந்து கரியமிலவாயுவை வெளியேற்றுகிறது.

இந்த கரியமிலவாயுவை வீணடிக்காமல் இதிலிருந்து பெற்ற கரியினைக் கொண்டு அம்மோனியா உரம் தயாரிக்கவும், எண்ணெய் நிறுவனங்களுக்கு நிலத்திலுள்ள எரிவாயுவை எடுக்கும் பணிக்கு உபயோகிக்கவும் கொடுக்கிறார்கள்.

நாம் அடிமையாக்கப்பட்ட போது பெற்ற அனுபவங்களையும், அடிமைப்பணி செய்த போது கிடைத்த கஷ்டமான அனுபவங்களையும் பிறரை நல்வழிபடுத்தவும், பிறருக்கு நல்ல காரியங்களை செய்யவும் பயன்படுத்துவோம்.

அருள்திரு. J. **பிரகாஷ் நாயகம்**

04-01-2018

வார இறைவேண்டல் - நாள் 3

# உடம்பே கோவில்

1கொரி. 6:9-20

**“கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார். எனவே உங்கள் உடலால் கடவுளுக்குப் பெருமை சேருங்கள்.”** 1கொரி. 6:20

ஆண்டவர் மனிதருக்கு அருளியிருக்கிற பெரிய அருட்கொடை - உடம்பு. இதற்கு பலரும் பல பெயர்களை கொடுத்திருக்கிறார்கள். தாவீதரசன் ‘பிரமிக்கதக்க அதிசயம்’ என்று சொன்னார். உடம்பை கருவி எனச் சொல்லுபவர்களும் ஏராளம். திருமூலர் உடம்பை ‘பாத்திரம்’ என்று சொன்னார். உடம்பென்னும் பாத்திரத்தை நாம் ஆரோக்கியமாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். பவுல் அப்போஸ்தலன் உடம்பிற்கு கொடுத்த பெயர் - உடம்பு என்பது கடவுளின் ஆலயம். புதிய ஏற்பாட்டிலே பவுல் தான் இதை வலியுறுத்தி சொல்லியிருக்கிறார் 1கொரி. 6:19.

இந்திய நாட்டிலே ‘உடம்பே ஆலயம்’ என்னும் கருத்தை அடிப்படையாக வைத்து பக்தி இயக்கத்தை நடத்தியவர்கள் ‘வசனக்காரர்கள்’ என அழைக்கப்பட்ட கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த லிங்காயத்துக்கள் என்னும் மக்கள். தமிழில் திருவள்ளுவரைப் போல கர்நாடகத்தில் அறநெறி கருத்துக்களை போதித்தவர் பசவண்ணர். பிறப்பின் அடிப்படையிலோ, ஜாதிகளின் மதிப்பினடிப்படையிலோ மட்டம் தட்டக் கூடாது என்பதை வலியுறுத்த ‘வசனக்காரர்கள்’ ‘உடம்பே ஆலயம்’ என்னும் கோட்பாட்டை வலியுறுத்துகிறார்கள்.

பவுல் அப்போஸ்தலன் ‘உடம்பே ஆலயம்’ என முன்மொழிந்துள்ள இந்த உன்னதமான கருத்தை மனதில் வைத்து நமது உடம்பை எப்படி ஆலயமாக கட்டுவது என்பதை தியானிப்போம்.

***1. உணவால் உடம்பைக் கட்டுங்கள்*** : (1கொரி. 6 : 13a)

உடம்பாகிய ஆலயத்தை வெளிப்புறமாக கட்டுவதிலே மிகவும் முக்கியமானது நமது உணவாகும். இதை நாம் கவனமாக சாப்பிட வேண்டும்.

ஒரு உணவை எப்போது சாப்பிட வேண்டும்? எதனுடன் சேர்த்து சாப்பிட வேண்டும்? எந்த நேரத்தில் சாப்பிட வேண்டும்? எந்த பதத்தில்

சாப்பிட வேண்டும்? எதைக் கலந்து சாப்பிட வேண்டும்? எவற்றோடு சேர்த்து சாப்பிடக் கூடாது ஆகியவற்றைப் பொறுத்து அந்த உணவு உடம்பை கட்டும் பொருளாகவோ, உடம்பை அழிக்கும் நஞ்சாகவோ மாறுகிறது.

ஒரு காலத்தில் நம்மைச் சுற்றி நம் ஊரில் எந்தெந்த பருவத்தில் என்னென்ன உணவுப் பொருட்கள் விளைந்ததோ அவற்றை உண்டோம். அவற்றை நம் உடம்பும் மூலப்பொருளாக ஏற்றுக் கொண்டு கோவிலாக கட்டியது.

இப்போது கடல் கடந்து வருகிற உணவுகளையும், வேறிடத்து உணவுகளையும் நமது உடம்பை கட்டுவதற்கு பயன்படுத்த ஆரம்பித்து விட்டோம்.

புதிதாக வருகின்ற உணவகங்களிலே புதிதாக ஏதாவது அயல்நாட்டு உணவு வகை இருக்கிறதா என தேடித் தேடி பார்த்து உண்ணுகிறவர்கள் பெருகி வருகிறார்கள்.

ஆண்டவர் நமக்கு ஆசீர்வாதமாக தந்திருக்கும் உடம்பிலே வயிறும் நாம் உண்ணுகின்ற உணவுகளை எல்லாம் ஏற்றுக் கொள்ளுகிறது. பவுல் அப்போஸ்தலன் இதை பதிவு செய்திருக்கிறார் 1கொரி. 6:13 வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும். ஆனால் பொருத்தமற்ற உணவு, உடம்பை கட்டாது, கட்டுடைக்கும்.

சீனாவிலுள்ள Hacks என்னும் நிறுவனத்தின் விஞ்ஞானிகள் Aire எனப்படும் கையடக்க கருவியை உருவாக்கியிருக்கிறார்கள். இதை வாயில் வைத்து ஊதினால் நம் மூச்சு காற்றிலுள்ள வேதிப் பொருட்களில் வயிற்றுக் கோளாறுக்கு காரணமானவற்றை கண்டறிந்து சொல்லி விடும்.

இந்த Aire கருவியை செல்லிடப்பேசியில் அதற்கென்றுள்ள செயலியுடன் இணைத்து விட்டால் அது பயனாளியின் உணவு பழக்கத்தையும் ஒவ்வாமைகளையும் தொடர்ந்து பதிவு செய்யும். என்ன உணவை சாப்பிடலாம் என்னும் ஆலோசனையையும் தரும். நாம் உண்ணும் உணவிலுள்ள Practose, Lactose, Sariptol போன்ற வேதிப் பொருட்கள் நம் வயிற்றுக்கு ஏற்புடையதாக இல்லையென்றால் முழுமையாக ஜீரணம் ஆவதில்லை. இதனால் வயிற்றுள்ளே Hydrogen Methyene வாயுக்கள் இரத்த ஓட்டத்தில் கலந்து விடுகின்றன. இந்த வாயுக்களை அகற்ற Aire கருவி ஆலோசனை தருகிறது.

அஜீரணம், ஒவ்வாமை இவற்றை தவிர்க்க உடம்பை நாம் உணவுகளை வீண் என தூக்கி எறிகின்ற குப்பை தொட்டி போல பயன்படுத்தக் கூடாது.

நமது உணவு முறை பச்சை காய்கறிகள், பாதி வெந்த காய்கறிகள், முழுக்க வெந்த காய்கறிகள், அரிசி, பருப்பு, ரசம் என பல விதங்களிலானது. நமது பாரம்பரிய உணவு முறையின் அடிப்படையே சாப்பிடும் போது இடையில் தண்ணீர் குடிக்க அவசியமிராது. அப்படி தண்ணீர் குடித்தால் சாப்பிடும் அளவும், வேகமும் குறையும். தேவையான அளவு சாப்பிட்ட பின் தண்ணீர் குடிக்கலாம்.

நமது பாரம்பரிய உணவுகளால் நமது உடம்பை ஆலயமாக கட்ட வேண்டும்.

புதிய வருடத்தில் முக்கியமாக நமது வாழ்க்கையை கட்டும் இந்த தீர்மானத்தை எடுப்போம், செயல்படுத்துவோம்.

***2. உணர்வுகளால் உடம்பைக் கட்டுங்கள்*** : (1கொரி. 6 : 13b)

'வேசித்தனம்' என்னம் வார்த்தை நாம் அறிந்திருக்கிற பொதுவான பொருளை தவிர வேறு பல பொருள்களையும் உள்ளடக்கிய வார்த்தையாகும்.

(i) ஆண்டவருக்கு விரோதமான எண்ணமும், செயலும் வேசித்தனம் தான்.

(ii) ஆண்டவருக்கு முழுமையாக நம்மை ஒப்படைக்க முடியாமை வேசித்தனம் தான்.

(iii) ஆண்டவருக்குள் நம்மை கட்டுப்படுத்த முடியாத உணர்வுகள் வேசித்தனம் தான்.

(iv) ஆண்டவரை நம்பாமல் சுய இஷ்டப்படி நாம் செய்யும் செயல்கள் வேசித்தனம் தான்.

இந்தக் காலத்தில் நமது உணர்வுகளை ஆக்ரமிப்பதிலே சமூக ஊடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

நாமாகவே உணர்வடைந்து உணர்வுகளை உருவாக்காமல் ஊடகங்கள் தரும் உணர்வுகளால் நாம் உணர்வுகளை உருவாக்குகிறோம்.

குடும்பத்தினரோடு செலவிடும் நேரத்தை குறைத்து, இன்னொரு இடத்தில் ஒருவர் அளவுக்கு மீறி நேரத்தை செலவிட்டால் வேசித்தனம் பண்ணுகிறார் என்பார்கள். இதே போல குடும்ப தலைவரான ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு கொஞ்ச நேரம் கூட கொடுக்காமல் சமூக ஊடகங்களுக்கு கொடுத்தால் நாம் வேசித்தனம் பண்ணுகிறோம் எனப் பொருள்.

வேலையை பார்க்கலாம் என்னும் உத்வேகத்துடன் Desk Top அல்லது Lap Top முன் அமர்கிறோம் Monitor உயிர் பெற்றதும் செய்ய நினைத்த வேலையை மறந்து விட்டு சமூக ஊடகங்கள் வெளியிடும் உணர்வுகளுக்கு அடிமைப்பட்டு விடுகிறோம்.

தினமம் காலையில் கண் விழித்ததும் காபி, Tea சாப்பிடுவதை விட Smart Phone Update பார்ப்பதற்கு அதிக நேரம் செலவிடுகிறோம். இது பொன்னான, விலை மதிப்புமிக்க காலை நேரத்தை சோம்பல் மிக்கதாக மாற்றி விடுகிறது. தேவையற்ற வீணான எண்ணங்கள் மாறி மாறி ஏற்பட்டு, ஆண்டவருக்கு விரோதமான வேசித்தனம் நடக்க தொடங்கி விடுகின்றன.

நமது உணர்வுகள் தேவையற்ற உணர்ச்சிகளால் ஆக்ரமிக்கப்படாமலிருக்க கவனமாக இருப்போம்.

யோசனைகள், நினைவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாகுபவை உணர்வுகள். இவை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நினைக்கும் நினைவுகளால் நல்லவைகளாக இருப்பதாக.

***3. உறுப்புகளால் உடம்பைக் கட்டுங்கள்*** : (1கொரி. 6 : 15)

நமக்கு ஆண்டவர் தந்திருக்கிற உறுப்புகள் அவருடைய விலைமதிக்க இயலாத பரிசு பொருட்களாகும். அவற்றை இடிக்கும் சூழ்நிலை ஏற்பட்டாலோ அல்லது செயல்படா சூழ்நிலை ஏற்பட்டாலோ தான் அவற்றின் அருமை நமக்குப் புலனாகின்றது. அதுவரை முரட்டுத்தனமாகவோ, ஏனோதானோவென்றும் பயன்படுத்துகிறோம். அசுத்தமாக வைத்திருக்கிறோம். ஆண்டவர் தந்திருக்கும் உறுப்புகள் நீண்ட காலம் உழைக்கிற உத்திரவாதமுடையவையாகும்.

ஒரு செயற்கை பல் வைக்க ரூ. 6000

ஒரு செயற்கை இருதயத்தின் விலை ரூ. 80 லட்சம்

ஒரு கிட்னி பொருத்த ரூ. 20 லட்சம்

ஒரு மாற்று கிட்னி விலை ரூ. 30 லட்சம்

ஒரு செயற்கை விரல் ரூ. 1 1/2 லட்சம்

ஒரு செயற்கை கால் வைக்க ரூ. 2 லட்சம்

எலும்புக்கு பதில் Plate வைக்க ரூ. 50,000

இருதயத்தை செயற்கையாக ஒரு மணிநேரம் இயக்க ரூ. 45,000

ஒரு முறை Dialysis பண்ண ரூ. 3000

கிறிஸ்துவின் உறுப்புகளான நமது சரீர உறுப்புகளை கவனமாக பேணுவோம்.

1கொரி. 6:20-பவுல், சரீரத்தினால் கடவுளை மகிமைப்படுத்த அழைக்கிறார். நமது சரீரத்தை முழுமையாக ஆண்டவருக்கு ஒப்புக் கொடுப்பதே அவரை மகிமைப்படுத்துவதற்கான செயலாகும்.

பிரிட்டன் நாட்டைச் சார்ந்த Bryon Wake என்னும் 15வயது இளம் வாலிபன் தனது கையிலே அரிசி அளவிற்கு சிப்பை நுழைத்து தனது Smart Phone ஐ கையசைவாலேயே இயக்குகிறார். இவ்வாறு சிப்பை ஊசி மூலம் உடலுக்குள் நுழைத்துக் கொள்ளுபவர்கள் Cyborg என அழைக்கப்படுகிறார்கள். இப்படி சிப்பை பொருத்திக் கொள்ளுவது உடலின் இயல்பான இயக்கத்திற்கு தீய விளைவை ஏற்படுத்தும் என்பது தெரிந்தும் இதை பொருத்தியிருக்கிறார்.

‘சரீரம்’ ஆண்டவருடையது. அதை நாம் தேவையற்ற பொருட்களாலோ, தேவையற்ற உணர்வுகளாலோ பாழாக்காமல் நல்ல எண்ணங்களாலும், நல்ல செயல்களாலும் ஆலயமாக கட்டி, ஆண்டவரை மகிமைப்படுத்துவோம்.

அருள்திரு. J. **பிரகாஷ் நாயகம்**

05-01-2018

**வார இறைவேண்டல் - நாள் 4**

# பிறரையும் கவனியுங்கள்

எசா. 25:1-9 | பிலி. 2:1-12 | லூக். 10:23-28

***"நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும்." பிலி. 2:4***

அப்போஸ்தலனாகிய பவுல் பிலி. 2:4-இல் சொல்லியிருக்கிற ஆலோசனையை எதிர்மறையாகப் புரிந்துக் கொண்டு அடுத்தவர்களை ஆர்வமாக கவனிக்கத் தொடங்கி விட்டார்கள். அடுத்தவர்களின் நலனில் அக்கறையோடு செயல்பட்டு அவர்களை கவனித்துப் பார்ப்பது போன்ற போலியான தோற்றத்தை ஏற்படுத்தி இப்படி பார்க்கிறார்கள்.

ஆனால் அமைதியற்ற மனதோடு தான் மற்றவர்களைப் பார்த்து அவர்களைக் குறித்து பேசுகிறார்கள். தற்போது அலுவலகங்களிலும், ஆலயங்களிலும் அடுத்தவர்களைக் கவனித்து அவர்களைக் குறித்து அதிகம் பேசுவதைக் காண முடிகிறது. இன்றைக்கு அடுத்தவர்களின் நேர்மறையான காரியங்களை விட எதிர்மறையான காரியங்களை மனிதர்கள் கவனிப்பதால் தான் மாத பத்திரிக்கைகளிலும், செய்தி தாள்களிலும் கொலை செய்திகள், விவகாரமான செய்திகளையும் தேடித் தேடி வாசிக்கிறார்கள். நாமும் இப்படி ஏதேனும் செய்திகளை வாசிக்கவோ, கேள்விபடவோவில்லையென்றால் நம்மை உயிர்பற்றவர்களாக உணருகிறோம். அடுத்தவர்களின் பிரச்சனைகளை குறித்த அறிவோடு இருப்பதே தற்போது நமது இருப்புக்கான அடையாளமாக இருக்கிறது.

மற்றவர்களைக் குறித்து அறிந்துக் கொள்ள முயற்சிப்பதும், அவர்களைக் குறித்து விஷமமாகப் பேசுவதும் தன்னிடமிருந்து தப்பிப்பதற்கான முயற்சியே தவிர வேறொன்றுமில்லை; தன்னை நீதிமான்களாக காட்டுகிற முயற்சியே தவிர வேறொன்றுமில்லை.

அடுத்தவர்களைக் குறித்தே எதிர்மறையாக சிந்திப்பதும், அவர்களைக் குறித்த நமது ஊகமும் தேவையற்ற பதட்டத்தை உருவாக்குகின்றன. நமது சிந்தனையும் கறைபட்டு, நம்முடைய நுண்ணுணர்வும் சோர்வடைந்து விடுகிறது.

பெருகி வரும் இந்த தீமைக்கு தப்ப அது ஏற்படும் விதம், அதற்கு தப்பித்துக் கொள்ள வழி ஆகியவற்றை நாம் ஆய்வு செய்து, நம்மையும்

ஆய்வு செய்து கவனமாக நம்மை காத்துக் கொள்வதும் முக்கியமானது. எனவே அவற்றை குறித்து தியானிப்போம்.

### *1. கொடூரமானவர்களின் சீறல்* :

அடுத்தவர்களை எரிச்சலோடு கவனிப்பவர்களின் செய்கை எப்படி இருக்கும் என்பதற்கு ஏசாயா தீர்க்கத்தரிசி இரண்டு அடையாளங்களை எடுத்துக்காட்டாக தருகிறார்,

(i) கொடூரமானவர்களின் சீறல்.

(ii) மதிலை மோதியடிக்கிற பெருவெள்ளம்.

இது ஒரு விதத்திலே மனச்சிதைவின் வெளிப்பாடு. ஆரோக்கியமற்ற மனதின் வெளிப்பாடு.

காற்றின் மனச்சிதைவு புயலாக வந்தது போலவும் கடலின் மனச்சிதைவு ஆழி பேரலையானது போலவும், வானத்தின் மனச்சிதைவு மழைத் தர மறுத்தது போலவும், சூரியனின் மனச்சிதைவு மார்கழியை சித்திரையாக்கினது போலவும், பூமியின் மனச்சிதைவு நிலவதிர்வானது போலவும், மலையின் மனச்சிதைவு எரிமலையானது போலவும், கொடூரமானவர்களின் மனம் மோசமான மனமாக சிதைந்து போனதுதான் கொடூரமானவர்களின் சீறலாக வெளிப்பட்டு விடுகிறது.

கொடூரமானவர்களின் சீறல் என்பது திடீரென்று நமக்கு விரோதமாக வந்து நம்மை மோதியடித்து விடுவதுண்டு.

இடி, மழை, கடல்கொந்தளிப்பு, வெள்ளம் போன்ற எல்லாவற்றிற்கும் காரணமாக இருப்பது புயல் என்னும் சீறல். புயல் எப்படி சீறலாக செயல்படும் என்பதற்கு விளக்கம் கொடுப்பது போல, 1840-ஆம் ஆண்டு Henry Piddington என்னும் ஆங்கிலேய கப்பல் Captain ‘Cyclone’ என்னும் பெயரை கொடுத்து புயல் சுழன்று அடிக்கக்க் கூடியது மோதி அடிக்கக் கூடியது என்பதை சொன்னார்.

கொடூரமானவர்களின் சீறல் மோதியடிக்கும் போது ஒதுங்குவதற்கு ஒதுங்கிடம் அல்லது பாதுகாப்பிடம் இல்லாதபடி, பல கவலைகளோடே பல நினைவுகளோடே வாழ்கிறதை விட பைத்தியமாக ஏதோ ஒரு நினைவோடே வாழ்ந்து விட்டு போய் விடலாம் என நினைப்போர் தற்போது அதிகரித்து வருகிறார்கள்.

நரகம் கூட இந்த வாழ்க்கையை விட வலி நிறைந்ததாக இருக்காது என்னும் எண்ணம் பலருடைய மனதிலே உருவாகி விட்டது.

அன்பை வெளிப்படுத்த அதிக நேரம் எடுத்துக் கொள்ளபடுவது போல, கோபத்தை வெளிப்படுத்தவும் அதிக நேரம் எடுத்துக் கொண்டால், நமது கோபம் கொடூரமானவர்களின் சீறலாக மாறாது.

மற்றவர்களிடம் கரிசனை இல்லாமல் நடந்த கொள்ளும்போது தான் கொடூரமானவர்களின் சீறலே நம்மிடமிருந்து வெளிவரும்.

சமீப காலமாக புகழ் பெற்ற எழுத்தாளர்கள் பலர் சுயநலம் மற்றும் பொறாமை குறித்து அதிகமாக புத்தகங்களை எழுதுகிறார்கள். அந்த புத்தகங்கங்கள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் என்னவென்றால் எவ்வளவுதான் வேண்டப்பட்டவர்களாக இருந்தாலும், சொந்தக்காரர்களாக இருந்தாலும், நெருங்கிய நண்பர்களாக இருந்தாலும், பொறாமை என்னும் புயல் சின்னம் உள்ளத்திற்குள் மன அழுத்தமாக உருவாகி விட்டால் நம்மை விட யாரும் ஒரு படி மேலே போய் விட கூடாது என்பதில் கவனமாக இருப்பார்கள். பாராட்டு தனக்கு மட்டும் கிடைக்க வேண்டுமென்பதில் சுய நலமாக இருப்பதால், இந்த பொறாமை மன அழுத்தமே அவர்களை கொடூரமானவர்களாக மாற்றி விடுகிறது.

சுயநலம் என்பது இயலாமையின் எதிர்விளைவு இது பிறருக்கு செய்யும் சிறு உதவியையும் பெரிய உதவியை போல நினைக்க வைத்து பிறரை அடிமைப்படுத்த முயற்சிக்கும்.

அந்த அடிமைப்படுத்துதல் முயற்சி கொடூரமான சீறலாக வெளிப்படும். ஆகவே இதையெல்லாம் உணர்ந்து அடுத்தவர்களின் நலனில் அக்கறை கொள்ளுவோம்.

## *2. அன்பானவர்களின் சாரல்* :

நாம் வாழும் காலத்திலே கல்விகூடங்கள் வழியாக நாம் ஏராளம் படிக்கிறோம். அதையெல்லாம் வாழ்க்கை மூலமாக நாம் நிறைவேற்ற வேண்டும்.

கல்வி கூடங்களிலும் கற்றுக் கொடுக்கும் கல்வியின் நோக்கத்தை தங்களுடைய கல்வி கூடத்தின் முத்திரையின் கீழே பொறித்திருப்பார்கள்.

உதாரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் முதல் உயற்கல்வி கூடமான ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியின் முத்திரை வாசகம் - சத்தியம் உங்களை விடுதலையாக்கும் The Truth shall make you free சத்தியத்தை வாழ்க்கையின் அடிப்படையாக வைத்துக் கொள்ளுங்கள் என்பது தான் இதன் பொருள். மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரியின் முத்திரை வாசகம் - Faith, Endeavour, Power நம்பிக்கை, முயற்சி, ஆற்றல்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது கல்வி கூடத்தின் நோக்கமாக எதை வைத்திருப்பார் என்பதற்கு பதில் - உன்னைப் போல பிறரை நேசி.

ஏனென்றால் நியாயப்பிரமாணத்தை குருவாக இருந்து கற்றுக் கொடுத்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து அவர் கற்றுக் கொடுத்ததை நிறைவேற்றும் வழியாக இதையே சொன்னார். பவுல் அப்போஸ்தலன் இதை மிகத் தெளிவாக கலா. 5:14-ல் எழுதியிருக்கிறார் - உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறரிடத்தில் அன்பு கூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்.

ஆனால் இன்று 'என்னைப் போலவே அவன்' 'என்னைப் போலத் தான் அவனும்' என்கிற சிந்தனை மாறி எல்லாருடைய உள்ளங்களிலும் 'நான் மட்டுமே' என்னும் பெரும் சுய நலம் ஆட்கொண்டு விட்டது. இதனால் தான் பவுல் பிலி. 2:4-ல் பிறருக்கானவைகளையும் நோக்க வேண்டும் என எழுதும்படியானது.

இன்று பிறரை அன்போடு பார்த்து உதவி செய்யும் பார்வை போய் அவர்களை எரிச்சலோடும், காழ்ப்புணர்ச்சியோடும் பார்க்கும் பார்வை வந்து விட்டது. இதைக் குறித்து 'கொடூரமானவர்களின் சீறல்' என்னும் தலைப்பிலே தியானித்தோம்.

நம்மை போல பிறனை நேசித்து, பிறருக்கான தேவைகள் என்ன என்பதை ஏன் நம்மால் பார்க்கமுடியாமல் போய்விட்டது? அதற்கான காரணங்கள் என்னென்ன?

(i) **மேலோட்டமான பார்வை :**

ஒருமுறை ஒரு குரு சீடனிடம் குளத்தை பார்த்துவிட்டு வந்து அங்கே என்ன இருக்கிறது என என்னிடம் சொல் என்றார். சீடன் போய் குளத்தை பார்த்துவிட்டு வந்து 'எனது பரிபூரணமான பிம்பத்தைக் கண்டேன்' என்றான். மறுபடியும் குரு மீண்டும் போய் குளத்தை பார்த்துவிட்டு வா என்றார். குரு சொன்னதை கேட்டு குளத்திற்கு மறுபடி போன சீடன் இந்தமுறை சற்று நிதானமாக குளத்தை பார்த்தான். பார்த்துவிட்டு மறுபடியும் குருவிடம் வந்தான். குரு, குளத்தின் என்ன பார்த்தாய் என்று கேட்டார். சீடன் சொன்னான் குருவே இப்போது அந்தக் குளத்தில் எனது பிம்பத்தையல்ல. அழகிய வண்ண மீன்களைக் கண்டேன். அவைகள் துள்ளி விளையாடும் அழகை ரசிக்கிறேன். தெளிந்த குளத்து நீரில் கூழாங்கற்களை கண்டேன் என்றான்.

இப்போது குரு சொன்னார், இப்போது தான் நீ தெளிவு பெற்றிருக்கிறாய். உண்மையாகவே நாம் மற்றவர்களை மேலோட்டமாகவே பார்க்கிறோம். அவர்களுக்கென்ன, அவர்கள் நன்றாக இருக்கிறார்கள் என அடிக்கடி மற்றவர்களைக் குறித்து சொல்லி கொள்ளுகிறோம். நமது பார்வை இன்னும் ஆழமாக வேண்டும். அதனால் தான் பவுல் அப்போஸ்தலன் பிலி. 2:4-ல் பிறருக்கானவைகளையும் நோக்குவானாக எனச் சொல்லுகிறார். பார்ப்பதற்கும், நோக்குவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. கவனமாக கரிசனையோடு பார்ப்பதையே நோக்குவது என்கிறோம். மேலோட்டமாக பார்ப்பதை தவிர்ப்போம்.

(ii) **வளர்ச்சியில்லாமல் வீக்கம் :**

'வளர்ச்சி' என்னும் பெயரில் வளராமலேயே குறுகிப் போகிறோம்.

வளர்ச்சிக்கும் வீக்கத்திற்கும் வித்தியாசம் உண்டு. திருமறை சொல்லுகிற வளர்ச்சி "தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளருகிற..." (எபே. 4:15) வளர்ச்சி.

எல்லாவற்றிலேயும் வளராமல் தலைமட்டும் வளர்ந்துக் கொண்டே போனாலோ அல்லது கால் மட்டும் வளர்ந்துக் கொண்டே போனாலே அது வளர்ச்சியாகாது. அது weak ஆக்கிவிடும்.

உதாரணமாக தொழில் நுட்பத்தினால் நாம் ஏராளமாக வளர்ந்து விட்டோமென்று நினைக்கிறோம். ஆனால் நடந்திருப்பது என்ன? T.V. வந்ததினால் புத்தகம் படிப்பதை மறந்துவிட்டோம். வீட்டில் குளிரூட்டிகள் வந்ததினால் மரத்தின் நிழலில் நிற்பதை விட்டுவிட்டோம். Cell Phone கையில் இருப்பதால் பக்கத்திலிருப்பவரையும் மறந்து விட்டோம். வங்கி பணமாற்று அட்டைகளுக்கு மாறியதால் பணத்தின் அருமையை இழந்து போனோம். கணினி வந்ததால் எழுதுவதை மறந்து விட்டோம். சென்ட்களால் (scent) உண்மையான பூவின் வாசனையை மறந்து விட்டோம். Fast food வந்ததினால் பாரம்பரிய உணவுகளை நிறுத்தி விட்டோம்.

இவையெல்லம் வளர்ச்சியல்ல, வீழ்ச்சி தான்.
நாம் யார்?
நாம் எப்படி இருந்தோம்?
நாம் எப்படி படித்தோம்?

இவைகளையெல்லாம் மறந்துப் போனதால் பிறரை குறித்த நினைவும் வரவில்லை.

நாம் கொடூரமானவர்களின் சீறலாக இருக்கக்கூடாது. அன்பானவர்களின் சாரலாக இருக்க வேண்டும்.

இதற்காக நம் பிரச்சனைகளையே நினைத்து வேதனைப்படாமல் ஏனைய மனிதர்களை திரும்பி பார்க்க வேண்டும். இந்த உலகமே மிக பெரியது. கஷ்டப்படுகிறவர்களையும், வேதனைப்படுகிறவர்களையும் காண மாதம் ஒரு முறையாவது அரசு ஆஸ்பத்திரிகள் மற்றும் ஆஸ்பத்திரிகளுக்கு போகலாம். தேவைப்படும் நோயாளிகளுக்கு உதவலாம். மனவளர்ச்சி குன்றியவர்களை சந்திக்கலாம்.

தினமும் செக்கு மாடு போன்று ஒரே மாதிரி வேலை செய்யாமல் வாரத்தில் ஒரு நாளாவது வேலை முறையை மாற்றி அமைக்க வேண்டும்.

சிறந்த நண்பர் ஒருவரையும், இருப்பதில் நல்ல உறவினர் ஒருவரையும் தேர்ந்தெடுத்து வைத்துக் கொள்ளுதல் நல்லது. அவர்களோடு நமது சுக, சோகங்களை பகிரலாம். நம் குணம் கொடூரமாக மாறாமலிருக்கும்.

அருள்திரு. J. **பிரகாஷ் நாயகம்**

06-01-2018

வார இறைவேண்டல் - நாள் 5

# அறிந்துகொள்ளாத ஆழங்கள்

திவெ. 2:18-29

***"நீங்கள் பெற்றுக்கொண்ட போதனையில் நான் வரும்வரை பிடிப்புள்ளவர்களாய் இருங்கள்."*** *திவெ. 2:25*

உலகத்திலே பல வகைகளில் பல புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. புத்தகங்கள் எழுதப்படுவதின் பொதுவான நோக்கம் - தான் அறிந்ததை பிறர் அறிய வேண்டும் என்பதற்காகத் தான். சிலர் சுய வரலாறு புத்தகங்கள் எழுதியிருப்பார்கள். இதனுடைய நோக்கம் தன்னை பிறர் அறிய வேண்டுமென்பதற்காக தான்.

ஆனால் இதே உலகத்திலே, சில புத்தகங்கள், சிலர் மட்டுமே அறிய வேண்டுமென்பதற்காகவும், பிறர் அறியக் கூடாது என்பதற்காக எழுதப்பட்டுள்ளன.

சில புத்தகங்கள், எவருமே எழுதப்பட்டுள்ளவைகளின் உட்கருத்தை அறியக்கூடாது எனும் நோக்கத்தில் எழுதப்பட்டுள்ன. இப்படிப்பட்ட எழுத்துக்கள் Cryptography என அழைக்கப்படுகின்றன.

15-ம் நூற்றாண்டு காலத்திற்கு முற்பட்ட காலத்தில் எழுதப்பட்ட ஒரு புத்தகம், 1912-ம் ஆண்டிலே Wilfrid Michal Habdank Voynich எனும் பழமையான புத்தகங்களை வியாபாரம் (Antiquarian Book Trade) செய்யும் வியாபாரிக்கு கிடைத்தது.

இந்த புத்தகம், இத்தாலி மறுமலர்ச்சி காலம் என்று அதிகமாக அறியப்பட்ட காலத்திலே வடக்கு இத்தாலியிலே எழுதப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதிலே முதலில் இருக்கக்கூடிய பல பக்கங்கள் தவறிப்போய், வெறும் 240 பக்கங்கள் மட்டுமே இருந்த நிலையில், இந்த புத்தகம் Wilfrid Voynich க்கு கிடைத்தது. ஆகவே இதன் பெயர் என்ன என்று தெரியாத நிலையில், இத்தாலியிலுள்ள Vill Mondragone எனுமிடத்திலிருந்து புத்தகம் கிடைத்தது, இவர் இதைக் குறித்து 1915-ல் சொன்னப்படியால் இந்தப் புத்தகத்திற்கு Voynich Manuscript வாய்னிச்சின் கைப்பிரதி எனப் பெயர் கொடுக்கப்பட்டது.

இதிலே எழுத்துக்கள், இடமிருந்து வலமாக எழுதப்பட்டுள்ளது. பெரும்பான்மையான பக்கங்களில் ஏதாவது ஒன்றை விளக்கும் வகையில்

படங்களாக இருக்கின்றன. இதை சாதாரண மக்கள் விளக்கிக் கொள்ள இயலாத வகையிலே குறியீடுகளாக (Cryptography) எழுதப்பட்டிருந்தன. இதுவரை இந்த புத்தகம் யாருக்கும் புரியாத புத்தகமாகத்தான் இருக்கிறது.

வெளிப்படுத்தின விசேஷமும் கூட, யோவானுக்கு மட்டுமே வெளிப்படுத்தப்பட்ட விசேஷம்.

அதாவது, அவருக்கு மட்டுமே நேரடியாக விளங்குகின்ற விசேஷம் ஏனையோருக்கு இது எளிதில் விளங்காது.

முதலாவது, இது எல்லாரும் விளங்கிக் கொள்ள இயலாதபடி, ஆண்டவரே இதை முத்திரை போடச் சொல்லுகிறார். வெளி. 10:4 பின்னர், எல்லாரும் விளங்கிக் கொள்ளட்டும், காலம் சமீபம் எனச் சொல்லி, முத்திரை போட வேண்டாம் எனச் சொல்லுகிறார் திவெ. 22:10.

இதிலே சொல்லப்பட்டுள்ள 7 சபைகள் அன்று உலகமெங்கும் இருந்த சபைகள், ஆனால் இன்று அநேக சபைகள் உலகமெங்கும் இருக்கின்றன. ஆனால் அன்று 7 சபைகளுக்குச் சொல்லப்பட்ட ஆழமான செய்திகள், இன்று எல்லாருக்கும் பொருந்தும்படியாக இருக்கின்றன.

இந்த சபைகள் எல்லாவற்றிற்கும் ஆண்டவர் எச்சரிப்பாக சொன்ன விஷயங்கள் அனைத்தும் விசேஷமானவைகள்.

எப்போதும் சர்வ வல்லமையுள்ள கடவுளின் விசேஷம் என்னவென்றால் எதை எச்சரிப்பாகச் சொன்னாலும், அதன் வழியாக நாம் எப்படிப்பட்டவர் என்பதையும், தமது மகத்துவம் எப்படிப்பட்டது என்பதையும் சொல்லி விடுவார்.

தியத்தீரா சபைக்கு ஆண்டவர் எச்சரிப்பாக சொன்ன விசேஷங்களிலே இதையே சொல்லுகிறார்.

தியாத்தீரா சபையிலே, தாம் எப்பட்டவரென்பதையும், தமது போதனை எப்படிப்பட்டதென்பதையும் சிறப்பாகச் சொன்னார். அதையே தியானிப்போம்.

### *1. ஆராய்கிறவர்* : (திவெ. 2 : 23)

ஆண்டவர் தமக்கு கொடுத்த சிறப்பான பெயர் 'ஆராய்கிறவர்'

பொதுவாக மனிதன் தனது உணர்ச்சிகளையும், உணர்வுகளையும், இரகசியங்களையும், மறைத்து வைக்குமிடம் 'மனம்' எனச் சொல்லப்படுகிற 'உள்ளிந்திரியமும், இருதயமும்' தான்.

'இருதயம்' இரத்தத்தை உடலெங்கும் அனுப்புவதற்காக படைக்கப்பட்டிருந்தாலும் பல உணர்வுகளுக்கும், இரகசியங்களுக்கும் விளைவுகளையும், எதிர்விளைவுகளையும் இருதயமே 'துடிப்பாக' 'மிகை துடிப்பாக' வெளிப்படுத்தும்.

தியத்தீரா சபையிலே சிலர் தங்கள் உள்ளத்திலே, யேசபேலின் தீர்க்கதரிசியாகிய தீயனாளுக்கும் இடம் கொடுத்திருந்தார்கள்.

அந்தக் காலத்திலே 'உலக மக்கள் அனைவருக்கும் உரிய கோயில்' என்று சொல்லி தான் எபேசு பட்டணத்திலே தீயனாளின் கோயில் கட்டப்பட்டது.

எபேசு பட்டணத்திலே வாழ்ந்த மக்கள், தீயனாளை தங்களின் வீரத் தேவதையாக வணங்கினார்கள். கிரேக்க மக்கள் தங்களுடைய வன தேவதையாக வழிப்பட்டு வந்தார்கள்.

தீயத்தீரா பட்டணம், கம்பளி, துணி, சாயமிடுதல், தோல் பொருட்கள், செம்பில் சிற்பங்களை செய்தல் என்று பன்முக வியாபார பட்டணமாக இருந்தது. பல வகையான மக்கள் கூட்டம் அங்கிருந்தது. எல்லாருமே தங்களுக்கென்று தனித்தனி தெய்வங்கள் வைத்திருந்தார்கள்.

ஆனால் எபேசுவிலிருந்த தியனாளின் கோயில், உலகிலுள்ள எல்லாருக்குமான கோயில் எனச் சொல்லப்பட்டதினால், தியத்தீரா மக்களின் பார்வையும் தியனாளின் கோவிலை நோக்கித் திரும்பி, தியனாளுக்கும் உள்ளத்தில் இடம் கொடுக்கிறார்கள்.

பலரையும் தடுமாறவும், தடம் மாறவும் பண்ணும் காரியத்தை ஆண்டவர் 'வேசித்தனம்' எனும் கடுமையான வார்த்தையில் சொல்லுவார். வெளி. 2:20 இதுவே சொல்லப்பட்டுள்ளது.

யாருக்கு தெரியும்? யாருக்கும் தெரியாது என்று தியத்தீரா சபையிலே சிலர், 'யேசபேல் எனும் தீர்க்கத்தரிசி' என குறியீட்டு மொழியில் அழைக்கப்பட்ட தியனாளுக்கு இருதயத்திலே இடம்கொடுத்து, இரட்டை வாழ்க்கை வாழ்ந்த சூழலிலே, ஆண்டவர், தாம் உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவர் எனச் சொல்லுகிறார்.

நாம் ஆண்டவரிடமிருந்து எதையும் உள்ளத்தில் ஒளித்து வைக்க முடியாது.

திவெ. 2:22,23 -ன் முற்பகுதியில் சொல்லப்பட்டுள்ளது போல, கி.பி. 3-ம் நூற்றாண்டிலே Goths என்று அறியப்பட்ட மக்கள் படையெடுத்து வந்து எபேசு நகரை சூறையாடி, தியனாளின் கோவிலையும் அழித்தார்கள்.

எரிக்கப்பட்ட அந்த கோயிலை யாரும் கட்ட முயற்சிக்கவில்லை.

இது எந்த அளவிற்கு புகழப்பட்டதோ அந்த அளவிற்கு இகழப்பட்டது. தியனாளை வணங்குவதும், அதைப்பற்றி பேசுவதும் கூட அநாகரிகமாக கருதப்பட்டது.

யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்ட விசேஷத்தில் ஆண்டவரால் சொல்லப்பட்டது விசேஷமாக நிறைவேறியது.

## 2. ஆழமானது :

பொதுவாக மனிதர்கள் தங்களுக்கு விளங்காத 'தேவ இரகசியங்களை' 'ஆழங்கள்' 'ஆழமானது' என்றே சொன்னார்கள்.

கடல்களில் மிக ஆழமானது Pacific பெருங்கடல் தான். உலகிலுள்ள பெருங்கடல்களின் ஆழம், சராசரியாக 10,000 -லிருந்து 15,000 அடி வரை இருக்கும்.

ஆழம் குறைந்த கடலின் நிறம் இளம் பச்சையாகவோ அல்லது வெளிர் பழுப்பு நிறமாகவோ காட்சி தரும்.

கடலின் ஆழமான பகுதிகள் நீலம் அல்லது சாம்பல் நிறத்தில் காணப்படும்.

கடலுக்கென்று நிறம் கிடையாது. ஆனால் ஆகாயத்தின் பிரதிப்பலிப்பாலும், கடலினுள்ளே இருக்கும் பொருட்களாலும் கடலின் நிறம் மாறுப்படுகின்றன.

கடலின் ஆழங்கள் 'ஆழ்கடல்' என அழைக்கப்படுகிறது. ஆழ்கடலில் என்ன இருக்கிறது என எவருக்குமே தெரியாது. அந்தளவிற்கு 'ஆழ்கடல்' இருட்டாக இருக்கும்.

ஆண்டவரின் இரகசியங்களும் ஆழமானது, மறைவானது. அது யாருக்கும் தெரியாதது. 1கொரி. 2:7-10 வசனங்களில் கூறப்பட்டுள்ள பவுல் அப்போஸ்தலரின் கருத்துப்படி, ஆவியானவர் மட்டுமே தேவ இரகசியங்களின் ஆழங்களை ஆராய்ந்தவர். வேறு ஒருவருக்கும் இது தெரியாது.

ஆண்டவரது இரகசியங்கள் எவருக்கும் தெரியாது என இருக்கும் போது, தியத்தீராவிலே சில பெண் குறிசொல்லிகள், தாங்கள் யேசபேலின் தீர்க்கத்தரிசிகள் என விளம்பரப்படுத்திக்கொண்டு தாங்கள் பாதாளத்தை ஆளுகின்ற சாத்தானின் இரகசியங்களைச் சொல்லுகிறோம் என்று குறி சொல்ல ஆரம்பித்தார்கள்.

இந்த குறி சொல்லுதலுக்கு Oracle Sambethe என பெயரிட்டும் அதை போதகம் போல பண்ணத்தொடங்கினார்கள். தியத்தீராவில் இந்த பேதகமான போதகத்தைக் கேட்டு வழிமாறிப் போனவர்கள் ஏராளம்.

இந்த வேற்றுமையான போதனையை கொஞ்சம் கேட்டுத்தான் பார்போமே என்று இரகசியமாக வழிமாறிப் போனவர்களும் ஏராளம்.

இப்படிப்பட்ட சூழலிலும் வழிமாறி போகாதவர்களுக்கு ஆண்டவர் கொடுக்கிற ஆசீர்வாதம்- வெளி. 2:26 ஆளுகை அதிகாரம், அவரோடே அமர்ந்து ஆளும் அதிகாரம்-வெளி. 1:6; 3:21; 20:6; 1கொரி. 6:2.

ஆராய்கிறவராகிய ஆண்டவர்-அவர் நம்மை ஆராயும்போது நம்மில் குறை காணக்கூடாது.

அவர் வெறுக்கிற 'இரட்டை வாழ்க்கை' நாம் வாழக் கூடாது.

அருள்திரு. J. **பிரகாஷ் நாயகம்**

07-01-2018

**திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு**

# அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள்
# LIVE WORTHY OF YOUR CALLING

நீமொ. 20:1-11 உரோ. 6:12-23
தி.பா. 14 மத். 7:15-23

**"....கடவுளுக்கு ஏற்புடையதைச் செய்வதற்குரிய கருவிகளாய் உங்கள் உறுப்புகளை அவரிடமே ஒப்படையுங்கள்."** உரோ. 6:13

1850 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ம் நாள் இங்கிலாந்து நாடு பனிப்புயலால் பாதிக்கப்பட்டது. பனிப்புயலில் சிக்கிய இளைஞர் ஒருவர் தன்னை காத்துக்கொள்ள ஆலயத்தை நோக்கி ஓடினார். அன்று போதகர் இல்லாததால் ஒரு தையல்காரர் ஒருவர் அருளுரையாற்றிக் கொண்டிருந்தார். அவர் தந்த அருளுரையின் கருப்பொருள் "பூமியின் குடிகளே என்னை நோக்கி பாருங்கள்" என்பதாகும். அருளுரையின் இறுதியில் ஒரு சவால் நிறைந்த அழைப்பு தரப்பட்டது. இதை கேட்ட வாலிபரின் உள்ளம் மாற்றத்தைக் கண்டது. அங்கு ஒரு புதிய தீர்மானம் எடுத்தார். உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுவதற்கு தன்னைக் கொடுத்தார். அந்த இளைஞர் தான் அழைப்புக்கு ஏற்ப வாழ்ந்து இறைவனுக்கு சான்று பகிர்ந்த இறையடியார் C.H. ஸ்பர்ஜன்.

இன்று கடவுளின் அழைப்பு அனைவருக்கும் தரப்படுகிறது. அந்த அழைப்பு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிலையில் வாழவும், பணி செய்யவும் தரப்படுகிறது. அந்த அழைப்பு நேரடியாக இருக்கலாம் அல்லது மறைமுகமாக இருக்கலாம். கடவுளின் அழைப்பின் நோக்கம் என்ன? அதை எப்படி ஏற்றுக்கொள்கிறோம்? எப்படி கீழ்ப்படிகிறோம்? என்பது முக்கியமானது.

திருமறையில் கடவுளின் அழைப்பு தமது அடியவர்களுக்கு வேறுபட்ட சூழலில், வேறுபட்ட நோக்கத்திற்காக இருந்தது. பலர் கீழ்ப்படிந்து அழைப்புக்கு ஏற்ப வாழ்ந்து உயர்ந்தனர். பலர் கீழ்ப்படியாது அழைப்பை மறந்து வீழ்ச்சியடைந்தனர்.

அழைப்புக்கு ஏற்ப வாழ்தல் எப்படி என்பதை குறித்து சில உண்மைகளை கற்றுக்கொள்வோம்.

## ***1. தூய்மையாக வாழ்தல்* :** (நீமொ. 20 : 11)

ஒருவரது உள்ளத்தின் ஆழத்தில் காணப்படும் பண்புகள் அவரது அன்றாட வாழ்வில் நடக்கையில் வெளிப்படும். அன்றாட வாழ்வில் நாம் தூய்மைக்காத்து வாழ்வதை கடவுள் விரும்புகிறார். தூய்மைக்காத்து வாழ விரும்புவோர் தீமையை விட்டு விலகிச்செல்வர் (நீதி. 16:17). கடவுள் நமக்கு முன் வாழ்வின் வழியையும், சாவின் வழியையும் காட்டுகிறார் (எரே. 21:8). அதில் எதைத் தெரிவு செய்கிறோம் என்பது முக்கியமானது. நமக்கு தரப்பட்ட அழைப்பு வாழ்வின் வழியில் செல்வதற்கு ஆகும். கடவுள் நம்மை தூய்மையான வாழ்வு வாழவே அழைத்திருக்கிறார் (1தெச. 4:7). எபிரேயர் நிருபத்தின் ஆக்கியோன் சொல்வது பரம அழைப்புக்கு பங்குள்ளவர்களாகிய நாம் கிறிஸ்து இயேசுவை நோக்கி அவர் சென்ற பாதையில் செல்ல வேண்டும் (எபி. 3:1).

### **a. தானியேல் :**

கைதியாக பாபிலோனுக்கு கொண்டு வரப்பட்டபோது இளைஞராய் இருந்தார். அரண்மனையில் பணி செய்யும் வாய்ப்பு பெற்றார். ஆனால் அரசரின் உணவால் தன்னைக் கறைபடுத்தாது காத்துக் கொண்டார் (தானி. 1:8-10). தீர்மானத்தில் உறுதியாயிருந்தார். அழைப்பில் தெளிவாய் காணப்பட்டார். பாபிலோன் நாட்டில் உயர்த்தப்பட்டார்.

### **b. சிம்சோன் :**

சிம்சோன் கடவுளின் திட்டத்தின்படி மனோவா குடும்பத்தில் பெற்றெடுக்கப்பட்டார். அவர் பிறக்கும் முன் அவரது பெற்றோர் கடவுளின் வார்த்தைப்படி தங்களை தூய்மையாய் காத்தனர். சிம்சோன் பிறந்து பெரியவனாகி, கடவுள் தனக்கு தந்த அழைப்பையும் அதன் நோக்கத்தையும் மறந்தார். பாவத்தை நோக்கி ஓடினார். வீழ்ச்சியடைந்தார் (நியா. 13:24-25, 16:1-2, 23:31). கடவுளின் அழைப்பு என்பது அனைவரும் தூய்மைக்காத்து இறுதிவரை நிலை நிற்பதையே குறிக்கிறது.

## ***2. இறைவிருப்பம் நிறைவேற்றி வாழ்தல்* :**

“கடவுளுக்கு ஏற்புடையதை செய்வதற்குரிய கருவிகளாய் உங்கள் உறுப்புகளை அவரிடமே ஒப்படையுங்கள்.” (உரோ. 6:13b).

கடவுள் தம் மக்களுக்கு தந்திருக்கும் அழைப்பு என்பது அவரது விருப்பை நிறைவேற்றுவதற்காகும். ஆனால் தீயோனின் ஆளுகைக்கு நேராய் இழுக்கப்படும் மனிதன் உலக இச்சையினால் கவர்ந்திழுக்கப்படுகிறான். ஊன்(மாம்ச) இச்சைகள் இறைவிருப்பை

நிறைவேற்றுவதை தடுக்கிறது. அதை மேற்கொண்டு முன்னேறினால் மட்டுமே இறைவிருப்பை நிறைவேற்ற முடியும்.

தூய பவுலடிகளார் கூற்றுப்படி, உடலின் உறுப்புக்கள் இறைவிருப்பை நிறைவேற்ற இறைவனால் படைக்கப்பட்டது. ஆனால் ஊன் இச்சைக்கு ஒருவன் தன்னை விட்டுக்கொடுக்க, அவை அநீதியின் ஆயுதங்களாய் மாறுகின்றன.

இறைவிருப்பை நிறைவேற்ற முயலும்போது நமது கண்முன் சவால்கள், போராட்டங்கள், பாடுகள், ஏளனங்கள் உண்டு. இவைகளை தாண்டிச் சென்றால் மட்டுமே இறைவிருப்பை நிறைவேற்ற இயலும்.

**a. சாமுவேல் :**

சாமுவேல் சிறுவனாக ஏலியிடம் வளர்ந்து, இறைப்பணி செய்யும் போது கடவுளின் அழைப்பை பெற்றார். இறை விருப்பை அறிந்தார். அவரது விருப்பை நிறைவேற்ற தன்னைஒப்படைத்தார். எனவே, இஸ்ரயேலில் இறைவாக்கினராக உயர்த்தப்பட்டார் (1சாமு. 1:2428, 2:21, 3:1-10, 19:21). சாமுவேல் தனது பணிக்காலத்தில் இறைவிருப்பை நிறைவேற்றுவதில் தெளிவாய் இருந்தார்.

**b. சவுல் :**

இஸ்ரயேலின் முதல் அரசர். கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டவர். கடவுளின் அழைப்பின் நோக்கத்தை மறந்து கீழ்ப்படியாமல் போனார். அவரை அரசராக தெரிந்து கொண்டதற்காக கடவுள் வருத்தப்பட்டார். அரியணையிலிருந்து தள்ளப்பட்டு, தற்கொலை செய்து மாண்டு போனார் (1சாமு. 9:16-21, 10:1-2, 15:10-11, 31:1-5).

'அழைப்பிற்கு ஏற்ப வாழ்தல்' என்பது இறைவிருப்பை அறிந்து அதை நிறைவேற்றுவதாகும். இயேசுகிறிஸ்து, "விண்ணக தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுகிறவனே எனக்கு சகோதரியாய் சகோதரனாயிருக்கிறான்" என கூறினார் (மத். 12:50).

## *3. கனிதந்து வாழ்தல்* :

"அவர்களின் செயல்களை கொண்டே அவர்கள் யாரென்று அறிந்து கொள்வீர்கள்; நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளை கொடுக்கும்; கெட்டமரம் நச்சுக்கனிகளை கொடுக்கும்" (மத். 7:16a,17).

கடவுளின் அழைப்பின் நோக்கம் இவ்வுலகில் கனி தந்து வாழ்வதுதான். எத்தனை ஆண்டு வாழ்ந்தோம் என்பதை விட எப்படி வாழ்ந்தோம் என்பது முக்கியம். உலகிற்கு பயன்தரும் மக்களாக வாழவே

நம்மை அழைத்திருக்கிறார். மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்வதை எதிர்பார்க்கிறார். மற்றவர்களை திருப்திப்படுத்த தன்னுடைய வாழ்க்கை முறையை மாற்றி கொள்ள அல்ல; மற்றவர்களை கிறிஸ்துவுக்காக ஆதாயம் செய்ய கிறிஸ்துவுக்காக தன்னை மாற்றுவதே முக்கியம். தூய பவுலடியாரின் கூற்று, “இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட கிறிஸ்துவோடு நீங்கள் இணைக்கப்பட்டிருக்கிறீர்கள் (உரோ. 7:4). நம்பிக்கை கொண்டோர் அனைவருக்கும் முன்மாதிரியானீர்கள் (1தெச. 1:7)” என்பதாகும்.

**a. பவுல் :**

சிறந்த அறிவாளி, நல்ல குடும்ப பின்னணியத்தை கொண்டவர். கிறிஸ்துவை துன்பப்படுத்தினார். தமஸ்கு சாலையில் கிறிஸ்துவை சந்தித்து இறை சத்தம் கேட்டார். அழைப்பு பெற்றார், தன்னை கிறிஸ்துவுக்காக முற்றிலும் அர்ப்பணித்தார். பாடுகளை சந்தித்த போதும் தனது வார்த்தை, செயல் அனைத்தும் கிறிஸ்துவுக்கு ஏற்புடையதாய் இருப்பதில் உறுதியாயிருந்தார். தான் உருவாக்கிய திருச்சபைகளுக்கு சான்றாக மாறினார் (அப். 9:1-20).

**b. யூதாஸ் :**

இவர் இயேசுகிறிஸ்துவின் சீடர்களில் ஒருவர். இயேசுநாதருடன் இருந்தவர்; இறைப்பணியில் பங்கு கொண்டவர். இயேசுவின் போதனைகளை கேட்டவர், அற்புதங்களை கண்டவர். ஆனால், உலக பொருளை விரும்பி, அழைப்பையும், நோக்கத்தையும் மறந்து இயேசு கிறிஸ்துவை காட்டிக்கொடுத்தார், அமைதியிழந்து தன்னை அழித்து கொண்டார் (மத். 26:14-47, 27:3-5).

ஆக, கடவுள் தமது மக்களுக்கு தந்த அழைப்பையும், அதன் நோக்கத்தையும் அறிந்து கடைசி வரை உண்மையாக வாழ்வதே சிறப்பு. ஒரு மருத்துவராக, பொறியாளராக, அலுவலகப் பணியாளராக, சாதாரண பணியாளராக கூட இருக்கலாம். எந்த நிலையில் அழைக்கப் பட்டிருந்தாலும், தூய்மைகாத்து, இறைவிருப்பை நிறைவேற்றி, கனிதந்து வாழ்வதால் நிலைவாழ்வை சுதந்தரித்து கொள்கிறோம்.

அருள்திரு. Y. **லாறன்ஸ்**

14-01-2018

**திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு**

# ஒரே ஆண்டவர், ஒரே திருமுழுக்கு
## ONE LORD, ONE BAPTISM

எண். 11:23-30 | 1 கொரி. 10:1-4
தி.பா. 23 | யோவா. 10:7-18

**"...ஒரே மந்தையும், ஒரே ஆயரும் என்னும் நிலை ஏற்படும்."** யோவா. 10:16

திருமுழுக்கு என்பது சீர்திருத்த திருச்சபைகளின் சாக்கிரமெந்துகளில் ஒன்றாகும். திருமுழுக்கு கிறிஸ்துவோடு இணைந்து வாழ்வதின் அடையாளமாகும். திருமுழுக்கின் துவக்கமானது யூத சமயத்தின் தூய்மைபடுத்துதல் சடங்கின் தொடர்ச்சியாகும். திருமுழுக்கு என்பதின் கிரேக்க சொல் 'Baptisma' ஆகும். இதற்கு முழ்குதல், தெளித்தல், கழுவுதல் என பல அர்த்தங்கள் உள்ளன. திருமுழுக்கை குறித்து கிறிஸ்தவ திருச்சபையின் அடிப்படை போதனைகளில் பல வேறுபாடுகள் உள்ளன. இவைகள் இறைமக்களின் மத்தியில் பல கேள்விகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்துகின்றன. திருமுழுக்கு என்பது இறையரசின் நுழைவாயிலாக இன்று பலரால் போதிக்கப்படுகிறது. இந்த திருமுழுக்கை குறித்த அடிப்படை அறிவும் பின்னணியமும் அறிவது அவசியமாகும். எண். 11:23-30, திருமறைபகுதியில் 70 மூப்பரை அழைத்து கூடாரத்தை சுற்றிலும் அவர்களை நிறுத்தினார். அப்பொழுது கடவுளின் ஆவி அவர்கள் மேல் இறங்கவே அவர்கள் இறைவாக்குரைத்தனர். கூடாரத்தில் வராத எல்தாத் மற்று மேதாத் மேலும் கடவுளின் ஆவி இறங்கியது. எனவே பொறாமைபட்ட யோசுவா அவர்களை தடுத்துநிறுத்த மோசேயிடத்தில் முறையிட்டான். ஆனால் மோசேயோ ஆண்டவரின் ஆவி அனைவருக்கும் பொதுவானது என பதிலளித்தார். இது கடவுள் ஒருவரே என்பதையும் அவர் பொதுவானவர் என்பதையும் விளக்குகிறது.

மூவொரு கடவுளின் பிள்ளைகளாகிய நாம் அவரில் நிலைத்திருப்பதன் அவசியத்தை இந்த திருமுழுக்கு வலியுறுத்துகிறது. கடவுள் ஒருவரும் அவரின் பிள்ளைகளாகிய நாம் அவர் பெயரால் பெறும் திருமுழுக்கை பெற சிந்திப்போம்.

## *1. திருமுழுக்கு கிறிஸ்துவோடு ஒன்றிப்பதின் அடையாளம்* :

(மத். 3 : 1-17)

திருமுழுக்கு கிறிஸ்துவோடு ஒன்றிணைந்து வாழும் அனுபவத்தையும் அடையாளத்தினையும் உலகிற்கு வெளிப்படுத்துகிறது. முழுக்கு முனிவன் யோவான் திருமுழுக்கு கொடுக்கிறார். எருசலேம் நகரத்தார் யூதேயா தேசத்தார். அனைவரும் யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவரிடத்திற்கு போய் திருமுழுக்கு பெற்றார்கள். கடவுளின் சொந்த பிள்ளைகள் என தங்களை அடையாளப்படுத்திய யூதர்கள் கடவுளை விட்டு அகன்ற வாழ்வு வாழ்ந்த போது அவர்களை கண்டித்து மனந்திரும்ப அறைகூவல் விடுத்து கடவுளோடு ஒன்றித்து வாழ வழி செய்தார்.

கடவுளோடு தனக்குள்ள ஒன்றிப்பின் அடையாளத்தை வெளிப்படுத்த இயேசு கிறிஸ்துவும் திருமுழுக்கு பெற்றார். யூத சமயத்தில் இரண்டு விதமான தூய்மைப்படுத்தும் முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை Tevilah (Full body immersion) மற்றும் Netilat yadayim என்பவை. Tevilah என்பது புற இனத்தார் யூத சமயத்தில் சேரும் போது அவர்களை தூய்மைப்படுத்துவதற்காக தண்ணீரில் மூழ்க செய்து அவர்களை யூத சமயத்தில் ஏற்றுக்கொள்வார்கள்.

Netilat yadayim (washing of the hands with a cup) என்பது ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்து அவர்கள் மேல் தெளித்து தூய்மைப்படுத்தும் முறையாகும். விருத்தசேதனம் செய்தலும் ஒருவித உடல் தூய்மையையே மையப்படுத்துகிறது. இவைகளின் தொடர்ச்சியே திருமுழுக்காகும்.

கிறிஸ்துவோடு ஒன்றிணைந்த வாழ்வு என்பது கிறிஸ்துவின் பாடுமரணத்தை ஏற்று அவரோடு கூட உடன்பங்காளிகளாகும் அனுபவமாகும். அது தூய்மைப்படுத்தலின் அனுபவமாகும்.

தூய்மையாக்கப்பட்ட மனிதன் கிறிஸ்துவோடு ஒன்றித்து வாழும்போது மட்டுமே கனிகளை கொடுக்க முடியும். தந்தையோடுள்ள தமது ஒன்றிப்பை இயேசு கிறிஸ்து யோவா. 17:21-ல் குறிப்பிடுகிறார்.

லூக். 23:42-ல் மனம்திரும்பிய கள்வன் இயேசு கிறிஸ்துவோடு தன்னை ஒன்றித்து கொள்வதை காணமுடிகிறது. மூவொரு கடவுளின் தனிச்சிறப்பே ஒன்றிப்பு என்பதை மறந்துவிட முடியாது.

விருத்தசேதனத்தின் மூலமாக தன்னை கடவுளோடு ஒன்றித்து கொண்ட மனிதன், திருமுழுக்கின் மூலம் ஒன்றிப்பின் தொடர்ச்சியை வெளிப்படுத்த வேண்டும். யோவா. 10:7-18, வரையுள்ள திருமறை பகுதியில் கிறிஸ்துவோடுள்ள ஒன்றிப்பின் தேவை குறிப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ்துவாகிய வாசலின் வழியாக நுழைவோருக்கு மட்டுமே இரட்சிப்பு உண்டு. இந்த இரட்சிப்பின் அனுபவமே அவனுக்கு வாழ்வைத் தருகிறது.

## 2. திருமுழுக்கு நிலையான உறவின் அடையாளம் :

(எபே. 4 : 5)

உறவுகள் பலவிதமாக உண்டு. ஆனால் நிலையான உறவுகள் சுருக்கமே. பள்ளிக்கூட நட்புகள் காணாமற் போகின்றன, கல்லூரி உறவுகள் தொடர்பற்று விடுகின்றன. குடும்ப உறவுகளோ நிலைக்கின்றன. பவுலடிகளார் எபேசு திருச்சபைக்கு கூறும்போது ஆண்டவர் ஒருவரே; நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே, திருமுழுக்கு ஒன்றே என்று குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் வருகை என்பது Once for all என்று சொல்லுவார்கள். அப்படியென்றால் அந்த ஒரே கடவுளின் மீதுள்ள நமது உறவானது நிலையானதாக அமைதல் அவசியமாகும். எடுத்தது திருமுழுக்கு, பேசுவது பல்வகை பரவசப் பேச்சு, சொல்லிக் கொள்வது தூயவர், ஆனால் செய்வதோ ஏழையின் நிலத்தை அபகரிப்பது, மதுபானம் அருந்துவது, எங்கே போனது தூய்மை எங்கே போனது கடவுளோடுள்ள நிலையான உறவு.

யோவா. 1:35-42, பகுதியில் திருமுழுக்கினர் யோவானின் இரண்டு சீடர்கள் இயேசுவோடு சென்றார்கள் அவரோடு தங்கினார்கள். இயேசுவின் செயல்களை கண்ட மாத்திரத்திலே காலையிலே எழுந்து வேகமாக ஓடி தங்கள் சகோதரர்களையும் அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். புதிய நிலையான உறவு ஏற்பட்டது. கிறிஸ்துவோடுள்ள உறவே நம்மை அவரோடு உறுதிபடுத்துகிறது.

இன்று திருமுழுக்கானது விற்பனை பொருளை போல மாறிவிட்டது. ஆலயத்தின் பலிபீடத்தின் முன்பாக நின்று கடவுளோடு செய்யும் உடன்படிக்கையானது உறுதியற்றதாக மாறுகிறது. கிறிஸ்துவை விசுவாசித்து அல்ல மனிதர்களை விசுவாசித்து ஒரு நபர் பலமுறை திருமுழுக்கு பெறுகிறார்.

1கொரி. 10:2-ல் இஸ்ரவேலர் மோசேயின் மூலம் மேகத்தாலும், கடலாலும் திருமுழுக்குப் பெற்றார்கள். இது கடவுளோடுள்ள ஒரு நிலையான உறவின் வெளிப்பாடாகவே காணப்படுகிறது.

யோவானின் அறைகூவலானது பாவத்திற்கு எதிரானதாகவும், புது உறவின் ஆரம்பமாகவும் அமைந்தது. திருமுழுக்கு என்பது கடவுளோடு நம்மை ஒன்றிப்பதாகவும் அது நிலையான ஒன்றிப்பாக அமைவதும் மிகவும் அவசியமாகும்.

குழந்தைகளுக்கு திருமுழுக்கு கொடுக்கும்போது பெற்றோர்கள் கொடுக்கின்ற வாக்குறுதிகள் வெறும் வார்த்தைகளாகவே நின்று விடுகின்றன.

இயேசுகிறிஸ்து திருமுழுக்கு பெற்றபோது திறக்கப்பட்ட வானம் நமக்காக இன்றும் திறந்தே இருக்கிறது. நாம் இதைக் குறித்த தெளிவும், நல் எதிர்நோக்குப் பார்வையும், வலுவான, திடமான உறுதியும் கொண்டவர்களாயிருத்தலே சிறப்பானதாகும். ஏனெனில் கடவுளின் ஒன்றிணைப்பு நம்மில் காணப்படுகிறது அது நிலையானதாகவும் காணப்படுகிறது. நாமும் ஒன்றிப்பும், நிலைப்பும் உடையவர்களாவோம். 1கொரி. 1:17-ல் பவுல் கூறியது போல திருமுழுக்கு கொடுக்க அல்ல, போதிக்கவே அனுப்பினார். கடமைக்கான திருமுழுக்கல்ல உண்மையான, உறுதியான கடவுளோடுள்ள ஒன்றிப்பு அவசியமாகும்.

ஒரே கடவுளில் ஒரே திருமுழுக்கில் உறுதிப்படுவோம்!

அருள்திரு. C.S. **வெஸ்லி ஜெபராஜ்**

| 21-01-2018 | **திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு & ஒருமைப்பாட்டு ஞாயிறு** |
|---|---|

# நீதிக்கும் அமைதிக்குமான ஒன்றிப்பு
## UNITY FOR JUSTICE AND PEACE

| | |
|---|---|
| எசே. 37:15-28 | பிலி. 4:8-20 |
| தி.பா. 4 | மத். 5:21-26 |

**"...கையில் ஒரே கோலாயிருக்கும்படி, அவற்றை ஒன்றாகச் சேர்."**
**எசே. 37:17**

'ஒன்றிப்பு' எனும் சொல் இணைத்தல், சேர்த்தல், பிணைத்தல், கலத்தல் போன்ற பல்வேறுபட்ட பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. திருமறை சார்ந்தும், திருத்திட்டம் சார்ந்தும் விளக்கும்போது இணைப்பு, தோழமை, உறவு போன்ற நிலைகளில் ஒன்றிப்பு விளக்கம் பெறுகிறது. "நீதியும் நிறைவாழ்வும் ஒன்றை ஒன்று முத்தமிடும்" எனும் இந்த ஒன்றிப்பு, இறைவன் விரும்பும் ஒன்றிப்பு, இறைவனால் உருவான ஒன்றிப்பு. இறைவனை உள்ளடக்கிய ஒன்றிப்பு (திபா. 72:7; 85:8,10; 32:17) என்பதைத் திருமறை தெளிவுப் படுத்துகிறது.

### *நீதி* :

கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே உள்ள தொடர்புக்கு அடிப்படையானது நீதியே ஆகும். எபிரேயத்தில் 'ட்ஸெடக்' (tsthek) என்னும் சொல் நீதியைக் குறிப்பதற்காகக் பயன்படுத்தப்படுகிறது.

கடவுள் நீதிபரர்; கடவுள் நீதிக்குக் காரணர்; கடவுள் நீதியை நிலைநாட்டுபவர் (யோபு 37:23; தி.பா. 11:7; 89:14; எரே. 50:7).

இறைவன், தாம் நிலைநாட்ட விரும்பும் நீதியை இறையடியவர்கள் வழி நிறைவேற்றுகிறார். திருமறையில் நீதித்தலைவர்கள் (நியாயாதிபதிகள்) வழியாக இறைமக்களுக்கு நீதியை நிறைவேற்றினார்.

### *அமைதி :*

ஷாலோம் (Shalom) என்னும் எபிரேயச் சொல் அமைதியைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. ஐரேனே (Eirene) என்னும் கிரேக்கச் சொல் அமைதியைச் சுட்டி நிற்கிறது.

தமிழில் அமைதி, சமாதானம், சாந்தி போன்ற பல வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டாலும் திருமறை அடிப்படையில் புரிந்து கொள்ளும்போது 'Shalom' முழுமையான, எல்லாப் படைப்புகளையும் உள்ளடக்கிய, அமைதி ஆகும். இது கடவுளின் நிறைவான நிலையைக் குறிக்கும் சொல்லாக

சுட்டிக் காட்டப்படுகிறது (சகரியா 9:9,10; எசா. 9:6; நீத. 6:24; தி.பா. 147:14). 'யாவே ஷாலோம்' என்னும் இறைத்தன்மை வழி முழுமையான வாழ்வுதரும் கடவுள், அவரே அமைதி அருள்பவர், இறைவன் அருளும் அமைதிக்கும் நல்வாழ்வுக்கும் முடிவு இல்லை என்பதைத் திருமறைவழி விளங்கிக் கொள்ள இயலும்.

நீதிக்கும் அமைதிக்குமான ஒன்றிப்பினால் நம் வாழ்வில் ஏற்படும் மாற்றமும் தாக்கமும் குறித்து திருமறையினூடாகச் சிந்திப்போம்.

### *1. உடன்படிக்கையை உறுதி செய்யும் ஒன்றிப்பு :*

(எசே. 37 : 22,23)

யூதாவும், இஸ்ரயேலும் இரு அரசுகளாக பிரிந்து இருப்பதை ஒன்றாக்க விரும்பும் இறைவன் அவர்களின் வாழ்வில் நீதிக்கும் அமைதிக்குமான ஒன்றிப்பை ஏற்படுத்துகிறார். இதன் வழி இறைவன் இஸ்ரயேல் மக்கள் மீது உடன்படிக்கையை உறுதி செய்கிறார். "...நான் இஸ்ரயேலர் சிதறுண்ட நாடுகளிலிருந்து அவர்களை அழைத்து எம்மருங்கினின்றும் கூட்டிச் சேர்த்து அவர்களின் சொந்த நாட்டிற்குக் கொணர்வேன். இஸ்ரயேலின் மலைகள் மீது அவர்களை ஒரே நாட்டினராக்குவேன்; அவர்கள் எல்லோருக்கும் ஒரே அரசன் இருப்பான்" (எசே. 37:21-23) என ஒன்றிப்பை ஏற்படுத்துவதோடு சிலை வழிபாட்டை விட்டு, தீட்டுப்படுத்தும் செயல்களை விட்டு தூய்மையின் மக்களாய் வாழ வேண்டும் என்னும் தம் நீதியை இறைவன் வெளிப்படுத்துகிறார். அப்படி அவர்கள் இறைத் திட்டத்திற்கும், இறை நீதிக்கும் கீழ்ப்படியும்போது இறைவன் தம் உடன்படிக்கைகளை உறுதி செய்கிறார். இங்கு மக்கள் கடவுளின் மக்களாகவும், கடவுள் மக்களின் கடவுளாயும் இருப்பர். நாமும் இறைத்திட்டத்தில் இறைநீதி செய்ய ஒப்புக் கொடுக்கும் போது கடவுள் தம்முடைய மக்களாக நம்மை மாற்றுவார்.

### *2. உறவை உறுதி செய்யும் ஒன்றிப்பு :* (மத். 5 : 21-26)

நீதிக்கும் அமைதிக்குமான ஒன்றிப்பு நேர்மையான உறவை உறுதி செய்கிறது. இது உடன் மனிதரோடு நல்லுறவை ஏற்படுத்துகிறது. சக மனிதரோடு நல்லுறவு ஏற்படுத்தினால் மட்டுமே இறைவனோடுள்ள உறவை உறுதி செய்ய முடியும் என்பதை வெளிப்படுத்துகிறது. இதைத்தான், "நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும் பொழுது உங்கள் சகோதரர் எவருக்கும் உங்கள்மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென்று அங்கே நினைவுற்றால் அங்கேயே பலிபீடத்தின்முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்" என்ற வாக்கு உறுதி செய்கிறது (மத். 5:23).

தன் சகோதரன், சகோதரியோடு ஏற்படுத்தும் நல்லுறவு மட்டுமே இறையவரோடு நல்லுறவை ஏற்படுத்தும். அது நீதி மட்டுமல்ல குடும்பம்,

சமுதாய அமைதிக்கான ஒன்றிப்பாகவும் அமைகிறது. குறைகளைப் போக்கிக் கொள்ளவும் மனத்தாங்கலை நீக்கிக் கொள்ளவும், நல்லுறவை வளர்த்துக் கொள்ளவும் ஒன்றிப்பு அடிப்படையாக அமைகிறது.

சகோதரனோடு எப்போதும் சண்டையிடும் உடன் சகோதரனை திருத்த விரும்பிய தந்தை இருவர் கரங்களையும் மடக்க முடியாதபடி நீள கரண்டியை கட்டி வைத்து அவர்கள் மிகவும் விரும்பும் பிரியாணிப் பொட்டலத்தோடு ஓர் அறையில் உட்கார வைத்தார். அரை மணி நேரத்திற்குப் பின் அறை முழுவதும் சிந்திய பிரியாணியைப் பார்த்தார். பின் தந்தை தன் பிள்ளைகளுக்கு புதிய பிரியாணி பொட்டலத்தைக் கொடுத்து மூத்த மகனிடம் உன் கையின் கரண்டியால் இளையவனுக்கு ஊட்டி விடு இளையவனிடம் உன் கரண்டியால் அண்ணனுக்கு ஊட்டி விடு எனக் கூறி உறவை உறுதி செய்யும் ஒன்றிப்பை வெளிப்படுத்துகிறார்.

### *3. உடனிருப்பை உறுதி செய்யும் ஒன்றிப்பு* : (பிலி. 4:8,9)

ஆண்டவரின் உடனிருப்பை உறுதிசெய்ய நீதிக்கும் அமைதிக்குமான ஒன்றிப்பு அடிப்படையாக அமைகிறது. சகோதர சகோதரிகளே உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுக்குரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ அவற்றையே மனதில் இருத்துங்கள்.

நீங்கள் என்னிடம் கற்றுக் கொண்டவை, என் வழியாய் பெற்றுக் கொண்டவை, என்னிடம் கேட்டறிந்தவை, என் வாழ்வில் கண்டுணர்ந்தவை யாவற்றையும் கடைப்பிடியுங்கள். அப்பொழுது அமைதி அருளும் கடவுள் உங்களோடிருப்பார் (பிலி. 4:8,9).

நீதிக்கும் அமைதிக்குமான ஒன்றிப்பு கடவுளின் உடனிருப்பை உறுதி செய்வதாக அமையும். ஆனால் இதன் அடிப்படை இறைநீதியை வெளிப்படுத்துவதாக அமைகிறது. அமைதியை அருளும் கடவுள் நம்மோடு இருக்க வேண்டும் என அனைவரும் விரும்புகிறோம். அவ்வேளையில் இறைநீதி நம்மில் வெளிப்படுகிறதா என்பதையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

ஒருவருக்கு ஒருவர் ஏற்படுத்தும் ஒன்றிப்பு;

படைப்புகளோடு ஏற்படுத்தும் ஒன்றிப்பு;

படைப்புகளோடு ஏற்படுத்தும் ஒன்றிப்பு.

ஆகிய இவை நீதிக்கும் அமைதிக்குமான ஒன்றிப்பாக அமைகிறது. இதில் இறையவரின் திட்டம், இறையவரின் வெளிப்படுத்தல், இறையவரின் உடனிருத்தல் அடிப்படையாக அமைகிறது.

அருள்திரு. N. **ஜெசின்**

26-01-2018

**குடியரசு நாள்**

# பொறுப்புள்ள குடியுரிமை

## RESPONSIBLE CITIZENSHIP

ஆமோ 5:7-15 உரோ. 13:1-10

தி.பா. 146 மாற். 12:13-17

***“ஆண்டவர் ஒடுக்கப்பட்டோர்க்கான நீதியை நிலைநாட்டுகின்றார்; பசித்திருப்போர்க்கு உணவளிக்கின்றார்; சிறைப்பட்டோர்க்கு விடுதலை அளிக்கின்றார்.”*** **திபா. 146:7**

ஒரு பொறுப்புள்ள குடியுரிமை என்பது ஒரு நாட்டின் ஒவ்வொரு குடிமக்களின் மேலும் விழுந்த கடமையாகும். அது அவன் வாழும் முறைகளிலியிருந்தும் நாட்டிற்கான அவனது சேவையிலிருந்தும் கண்டு கொள்ள கூடியவை. ஒவ்வொரு பொறுப்புள்ள குடிமக்களும் தங்கள் நல்லொழுக்கத்திலிருந்தும், நல்ல பண்புகளிலிருந்தும் நாட்டு மக்களின் மீது கொண்டுள்ள அன்பிலிருந்தும் நாட்டின் மீது உள்ள பற்றிலிருந்தும் தங்களது குடியுரிமையை நிலை நாட்ட வேண்டும்.

நமது இந்திய நாடு ஆங்கிலேயருடைய அடிமைத்தன ஒடுக்கு முறை ஆட்சியில் சுமார் 200 ஆண்டு காலங்கள் அடிமைப்பட்டிருந்தது. பல போராட்டங்கள் மற்றும் பலரது உயிர்த்தியாகங்களுக்குப் பின்னர் 1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் தனி சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது. ஆனால் சுதந்திரத்திற்குப் பின்னும் சரியான சட்டம் ஏற்றப்படவில்லை. இதனால் ஆட்சி செய்ய முடியாத சூழல் நிலவியது. 1950 ல் ஜனவரி 26ஆம் நாள் சட்டம் இயற்றப்பட்டு தனி குடியரசு நாடாக மலர்ந்தது. இதன் மூலம் நமது நாட்டின் பெருமை மேலோங்கியது. நமது நாட்டிற்கு வேறு எந்த நாட்டிற்கும் இல்லாத தனி சிறப்பு ஒன்று உண்டு. ஒரே ஆண்டு இரண்டு முறை தேசிய கொடியை ஏற்றும் நாடு நம் நாடு. இது மட்டுமின்றி இயற்கை வளங்களாலும், மொழி, கலாச்சாரம், சமயம் என பல்வேறு சிறப்புக்களை உடையது. ஒரு பொறுப்புள்ள குடியுரிமை பெற்ற குடிமக்கள் இதை இதயத்துடிப்பாக கருதிப் பாதுகாக்க அழைக்கப்படுகின்றோம். ஒரு நாட்டின் பொறுப்புள்ள குடியுரிமை எத்தகையது என்பதை திருமறை ஆதாரத்தோடு சிந்திப்போம்.

## 1. அநியாயத்தையல்ல நன்மையைச் செய்யும் குடியுரிமை : (ஆமோஸ் 5 : 9-12)

சமுதாயத்தில் வாழும் மக்கள் எல்லோரும் நன்மையான காரியங்களை விரும்புகின்றார்கள். ஆனால் இன்று பல நிலைகளில் மனிதர்கள் சக மனிதரால் துன்பப்படுத்தப்பட்டும், வஞ்சிக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் துன்பங்களை அனுபவிக்கின்றனர். இந்நிலையை குறித்து ஆமோஸ் இறைவாக்கினர் தெளிவாக சுட்டிக்காட்டுகிறார். காரணம் அவர் இறைவாக்குச் சொன்னக் காலத்திலும் இதே நிலையைக் கண்டார். வீழ்ந்து போன சமுதாயம் தூக்கி நிறுத்த யாருமில்லை (ஆமோஸ் 5:2) என்று குறிப்பிடுகிறார். அநியாயம் செய்வதை அவர் எச்சரிக்கிறார். முதலாவது அவர் மனிதனை ஒடுக்கி அநியாயம் செய்து அவரது உழைப்பில் வாழும் மனிதர்களை குறித்தும் அதின் மூலமாய் அவர் பெறும் பலனைக் குறித்தும் குறிப்பிடுகின்றார். 1அரச. 21ஆம் அதிகாரத்தில் ஆகாப் அரசர் நாபோத்தின் திராட்சை தோட்டத்தை அநியாயமாய் அபகரித்ததின் மூலம் தண்டிக்கப்பட்டு தன் குடும்ப உறவுகளையும் இழந்தான். அநியாயமாய் பெற்று கொள்வது எதுவும் வாழ்விலே தங்காது என்பது இதன் மூலம் நிரூபணம் ஆகிறது. ஆமோஸ் தீர்க்கதரிசியும் இதை தான் ஆமோஸ் 5:9-12 -ல் குறிப்பிடுகிறார். தொடர்ந்து கையூட்டு (லஞ்சம்) பெறுவதும், கொடுப்பதும் குற்றம் என்றும் அத்தகைய காரியத்தை செய்கிறவர்கள் தண்டிக்கப்படுவர் என்றும் அறிவுறுத்தப்படுகிறார்கள். கையூட்டு என்பது ஒரு மனிதரின் உண்மை தன்மையை இழக்க செய்கிறது. நேர்மை வழியை விட்டு குறுக்கு பாதையை தெரிவு செய்கிறது. சமுதாயத்தில் இழிவு பெயரைக் கொண்டு வருகிறது. கையூட்டு என்பது ஒரு நாட்டின் வளர்ச்சியை தடுக்கிறது. எனவே, ஒரு பொறுப்புள்ள குடியுரிமை என்பது நாட்டின் சீர்குலையலுக்கு காரணம் ஆகாமல் அதன் வளர்ச்சிக்கு காரணமாக அமைய வேண்டும். ஆமோஸ் 5:15-ல் தீமையை விட்டு நன்மை செய்ய வேண்டும் என்றும் நன்மை செய்தால் பாராட்டு கிடைக்கும் என்றும் உரோ. 14:3-ல் குறிப்பிடப்படுகிறது. தொற்காள் என்னும் வயோதிப பெண் தன்னுடைய வாழ்வில் நன்மை செய்வதிலும், இரக்க செயல் புரிவதிலும் தன்னை ஈடுப்படுத்திக் கொண்டார். தான் உடல் நலம் குன்றி மரித்தப் போது தன்னால் உதவி பெற்றவர்கள் அவர் அருகில் வந்து நின்று தொற்காள் உயிரோடு இருந்த காலத்தில் தொற்காள் செய்த நன்மையான காரியங்களை காண்பித்து அழுதார்கள். இதிலிருந்து மனிதர் வாழுகின்ற நாட்களில் நன்மை செய்தால் அவர் இறந்தாலும் அவர் செய்யும் நன்மை பிறரால் சொல்லப்படும். எனவே நாம் நம்முடைய நாட்டின் வளர்ச்சிக்கு அநியாயத்தை அல்ல நன்மை செய்யும் மக்களாக வாழ்வோம்.

**2. அதிகாரத்திற்குக் கீழ்ப்படியும் குடியுரிமை** : (உரோ. 13:1)

"ஆளும் அதிகாரம் உள்ளவர்களுக்கு எல்லோரும் பணிந்திருங்கள்." ஆளும் அதிகாரம் உள்ளவர் என்பதற்கு "Authority" என்று ஆங்கிலத்தில் பொருள்படும். அவர்கள் யார் என்றால் ஆணைப்பிறப்பிக்கக் கூடியவர்கள், அரசால் மக்களுக்கு ஆட்சி செய்யும் அதிகாரம் பெற்றவர்கள். ஒரு அரசு அதிகாரி அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டிருந்தால் தன் பணியை கனப்படுத்துகிறான். இல்லை என்றால் அதை கனவீனப்படுத்துகிறான். அதிகாரம் என்பது மக்களை நல்வழிப்படுத்தவும் சட்ட ஒழுங்குகளைக் கொண்டு சமுதாயத்தில் எந்த தீச்செயலும் நடக்காமல் பாதுகாக்கவும் பயன்படுத்தப்படுகிறது. எந்த ஒரு மனிதர் தன் அதிகாரத்திற்கோ அல்லது அதிகாரிக்கோ கீழ்ப்படுகிறாரோ அவர் கடவுளுக்கு பயந்து இருக்கிறார் (உரோ.12:2). இன்று அதிகாரங்களுக்கு கீழ்ப்படிதல் என்பது சாமானியர்களுக்கு மட்டுமே. செல்வந்தர்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும், உயர் பதவியில் இருப்பவர்களுக்கும் இல்லாத நிலையில் போய்க் கொண்டிருக்கிறது. தீத்து 3:1-ல் தலைவர்களும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்று சொல்கிறார். மத். 8:5-13 -ல் நூற்றுவர் தலைவர் ஒருவருடைய வாழ்வை குறித்து சொல்லப்படுகிறது. அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டவராய் இருந்தும் தன் வேலைக்காரனை தன் சகோதரராக கருதி அவர் சுகத்திற்காக தான் வேண்டிக்கொள்கின்ற நிலையைக் குறித்து விளக்குகிறது. நூற்றுவர் தலைவர் அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்ததால் நல்ல காரியம் செய்ய தொடங்கினார். கனிந்த உள்ளத்தினராய் மக்கள் அனைவரோடும் நிறைந்த பணிவுடன் பழக வேண்டும் என பவுலடியார் தீத்துவுக்கு எழுதுகிறார் (தீத். 3:2). எனவே நம் நாட்டை வளர்ச்சியின் அடுத்த கட்டத்திற்கு நேராக எடுத்துச் செல்ல அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்திருப்போம்.

**3. கடமையைச் செய்யும் குடியுரிமை** : (உரோ. 13:9)

ஒவ்வொரு குடிமக்களுக்கும் நாட்டிற்காக பல்வேறு நிலைகளில் ஆற்ற வேண்டிய கடமைகள் உண்டு. பவுலடியார் உரோமையருக்கு ஆலோசனையாக சொல்லும் போது "யாவரும் செலுத்த வேண்டிய கடமையை செலுத்துங்கள்" என்றுக் குறிப்பிடுகிறார் (உரோ. 13:7). கடமை செய்ய தவறுகிற எவரும் தன் நிலையிலிருந்து தள்ளப்படுகிறார். கடவுள் மனிதரைப் படைத்து பல கடமைகளை அவன் கரத்தில் கொடுத்தார். ஆனால் மனிதன் தனது கரத்தில் கொடுக்கப்பட்ட கடமையை சரியாக செய்ய தவறிப்போன காரணத்தினால் அவன் நிலையிலிருந்து தள்ளப்பட்டான் (தொ.நூ. 1:26). ஒவ்வொரு குடிமகனுக்கும் முதன்மையான

கடமை என்னவென்றால் அவன் நாட்டிற்கான தனது வரியைச் செலுத்த வேண்டும். வரி செலுத்த வேண்டியவனுக்கு வரி செலுத்து (உரோ. 13:7) என்று பவுலடியார் சொல்கிறார். இயேசு கிறிஸ்துவை சோதிப்பதற்கு வரி செலுத்துவது நியாயமோ அல்லவோ என்ற கேள்வியை முன் வைத்த ஏரோதியரிடம் ஒரு நாணயத்தைக் கொண்டுவரச் சொல்லி அதில் பொறிக்கப்பட்டுள்ள உருவமுகம் யாருடையது என்றார். அவர்கள் அது சீஷருக்குரியவை என்றனர். எனவே அவர் சீஷருடையதை சீஷருக்கும், கடவுளுக்குரியவற்றை கடவுளுக்கும் கொடுங்கள் என்றும் வரி செலுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்குகிறார் (மாற். 12:13-17). வரி (Tax) என்பது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு உதவியாகவும், ஊன்றுக் கோலாகவும் அமைகிறது. வரி செலுத்த யார் தவறி போகிறார்களோ அவர்கள் தங்கள் கடமையிலிருந்து தவறிப் போகிறார்கள். இன்று மக்களில் அநேகர் ஊழல் செய்வதால் அரசுக்கு இழுக்கு பெயரைக் கொண்டு வருகின்றனர். “Corruption is a Cancer : A cancer that eats away at a Citizen’s faith in democracy, diminishes that instinct for innovation and creativity. It wastes the talent of entire generations” என்கிறார் Joe Biden என்ற அறிஞர். இதன் தமிழாக்கம் என்னவெனில் ஊழல் என்பது புற்றுநோய். அது ஒரு மனிதரின் ஜனநாயகத்தின் மீதுள்ள நம்பிக்கையை குறைக்கிறது. அவரது தாலந்துகளையும் உருவாக்குதலையும் பாழ் ஆக்குகின்றது. எனவே ஒரு குடியரசு நாடு என்பது தன்னுடைய வளர்ச்சியியல் செல்ல வேண்டும் என்றால் நம்முடைய கடமையை சரியாக செய்ய வேண்டும். Dr. A.P.J. Abdul Kalam சொல்லும் போது “If you salute your duty no need to salute any body, but if you pollute your duty you have to salute every body” (கடமையை மதித்தால் எவருக்கும் தலைவணங்க வேண்டியதில்லை அதை மாசுபடுத்தினால் எல்லோருக்கம் தலைவணங்க வேண்டும். எனவே தன்னுடைய கடமையை ஒழுங்காகச் செய்கிறவர்கள் யாருக்கும் அடிப்பணியத் தேவையில்லை.

நாம் நமது சுதந்திரத்தைக் காப்பாற்றி மக்களின் வாழ்வில் அநீதியை அகற்றி நன்மைச் செய்து அதிகாரத்தினால் அடிப்பணியச் செய்யாமல் அன்பினால் அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்து தனது நாட்டிற்கு சேவைச் செய்து ஊழல் இல்லாத, கையூட்டு இல்லாத நல்ல சமுதாயத்தை கட்டியெழுப்ப முயற்சிப்போம். தி.பா. 146:7-ல் ஒழுக்கப்பட்டோருக்கான நீதியை நிலை நாட்டுகின்றவர்களாய் பொறுப்புள்ள குடிமக்களாய் நமது குடியுரிமை நிலைநாட்டி நாட்டை வல்லரசுக்கு நேராக வழிநடத்திச் செல்லுவோம்.

திரு. S. ***பிளஸ்ஸின்***

28-01-2018

**உயிர்ப்புக்கு முன்வரும் ஒன்பதாம் ஞாயிறு**

# படைப்பின் நன்னலம்
# THE GOODNESS OF CREATION

| | |
|---|---|
| தொ.நூ. 1:24-31 | எபே. 1:3-14 |
| தி.பா. 104:1-13 | மத். 6:9-13 |

**"கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன."** தொ.நூ. 1:31

***முன்னுரை* :**

ஜிம் லோவல் என்ற அமெரிக்க விண்வெளி வீரர் சந்திரனை சுற்றி வருகையில் பூமியை வெகு தொலைவில் இருந்து கண்டார். கண்டவர் இப்படிச் சொன்னார். "பூமியின் மக்களே! நீங்கள் வாழும் பூமியை காப்பாற்றுங்கள். அது அழகான இல்லம். விண்வெளியில் அதைப்போல் வேறு கோளம் இல்லை."

அழகு வானம், ஒளி விடும் சுடர்கள், நீல கடல், பச்சை நிலம் அடர் மரங்கள், புல் பூண்டுகள், செடிகொடிகள், நீர் வாழ் உயிரினங்கள், பறக்கும் பறவைகள், நடமாடும் விலங்குகள் மற்றும் இறைச்சாயலின் மனிதர்கள் போன்றவற்றை உண்டாக்கிய இறைவன் ஆறுமுறை நல்லது என்று கண்டார் (தொ.நூ. 1:3,12,18,21,25). படைப்பின் இறுதியில் மிக நிறைவான மன திருப்தியுடன் தாம் படைத்தவை அனைத்தும் மிக நன்று எனக் கண்டார் (தொ.நூ. 1:31).

படைப்பின் அழகினை காண தலைவன் தலைவியை அழைக்கையில் "விரைந்தெழு, என் அன்பே! என் அழகே! விரைந்துவா. இதோ கார்காலம் கடந்துவிட்டது; மழையும் பெய்து ஓய்ந்து விட்டது; நிலத்தில் மலர்கள் தோன்றுகின்றன; பாடி மகிழும் பருவம் வந்துற்றது; காட்டுப்புறா கூவும் குரலதுவோ நாட்டினில் நமக்கு கேட்கின்றது. அத்திப் பழங்கள் கனிந்து விட்டன; திராட்சை மலர்கள் மணம் தருகின்றன; விரைந்தெழு, என் அன்பே! என் அழகே விரைந்துவா" என்கின்றார் (இ.பா. 2:10-13).

படைப்பின் அழகினை உணர்தலும் அதனை பாதுகாத்தலும் இறைமக்களின் நோக்கமாய் இருத்தல் வேண்டும்.

***1. மண் அழகு*** : (தொ.நூ. 1 : 10)

“கடவுள் உலர்ந்த தரைக்கு நிலம் என்றும் ஒன்று திரண்ட நீருக்கு கடல் என்னும் பெயரிட்டார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.”

நீவிர் பூவுலகினை அதன் அடித்தளத்தின் மீது நிலைநாட்டினீர். அது என்றென்றும் அசைவுறாது. ஆண்டவரே! உம் வேலைப்பாடுகள் எத்தனை எத்தனை! நீர் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர்! பூவுலகம் உம் படைப்புகளால் நிறைந்துள்ளது (தி.பா. 104:5-24) என்று தாவீது புவியின் மேன்மையை கண்டு வியக்கின்றார்.

“அவர் சொல்ல உலகம் உண்டானது; அவர் கட்டளையிட அது நிலைபெற்றது. அவரது பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது” (தி.பா. 33:5-9). “....மண்ணுலகை படைத்து உருவாக்கியவர் அவரே; அதை நிலைநிறுத்துபவரும் அவரே; வெறுமையாய் இருக்குமாறு படைக்காது மக்கள் வாழுமாறு அதை உருவாக்கினார்” (எசா. 45:18).

பூமியை தவிர இவ்வண்ட வெளியில் வேறு எங்குமே உயிர் வாழ்வும் மனித வாழ்வும் இல்லை. சூரிய குடும்பத்தில் ஒன்பது கோள்கள் சுழன்று கொண்டிருப்பினும் இப்புவியில் மட்டுமே மனிதர்களும் பிற உயிர்களும் வாழ்வதற்கு அவசியமான சூழல் அமைந்திருக்கின்றது. புவி வளிமண்டலத்தினைத் தந்து புவியின் கால நிலைகளை பாதுகாக்கும் ஏற்பாட்டினையும் தீய கதிர்வீச்சுகளில் இருந்து பாதுகாக்கும் ஏற்பாட்டினையும் இறைவன் உருவாக்கியுள்ளார்.

வார்த்தையால் இம்மண்ணை உருவாக்கி தாமும் இயேசுவாய் இம்மண்ணில் வந்து பிறந்து இப்புவியை புனிதமும் அழகும் உடையதாய் தந்திருக்கின்றார் இறைவன்.

***2. மண்ணின் உயிர்கள் அழகு*** : (தொ.நூ. 1 : 24,25)

அப்பொழுது கடவுள், “கால்நடைகள், ஊர்வன, காட்டு விலங்குகள் ஆகியவற்றை நிலம் தோற்றுவிப்பதாக” என்றார். கடவுள் காட்டு விலங்குகளையும் கால்நடைகளையும் நிலத்தில் ஊர்வன யாவற்றையும் அவற்றின் இனத்தின்படி உருவாக்கினார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.

இயற்கையில் ஆயிரமாயிரம் உயிரினங்கள். 200,000 தாவர வர்க்கங்கள், இவற்றில் வண்ண வேறுபாடுகள். உலகில் காணப்படும் பூச்சிகள் இனத்தின் எண்ணிக்கை 800,000 இவற்றுள் பட்டு பூச்சிகளில் மட்டும் 1,40,000 இனங்கள். 2,50,000 இனங்களைச் சேர்ந்த வண்டுகள்

பறந்து திரிகின்றன. சுறுசுறுப்பாய் உலவும் எறும்பு கூட்டங்களில் 3500 இனங்கள். 20,000 ரக தேனீக்கள் மனிதர்களுக்கு இனிமையை தருகின்றன. 8400 வகை பறவைகள் வானில் வட்டமிடுகின்றன. 4000 பாலூட்டி மிருக இனங்கள் பூமியில் வாழ்கின்றன. பல்வேறுபட்ட சுற்றுசூழலுக்கு ஏற்ப தம்தம் இருப்பிடங்களை அமைத்து வாழ்க்கை முறைகளை அவை அமைத்துக் கொள்கின்றன (A. ஜேசுராஜா, இரு துருவங்களா? இணை கோடுகளா?, திண்டுகல், வைகறை பதிப்பகம், 2012, P. 40).

இறைவன் படைப்பினில் கோடிகளாய் பரந்து இயங்கும் உயிர்களின் இயக்கமும் செயல்களும் பயன்மிக்கவை அழகுடையவை.

இறைமைந்தன் இயேசுவும் இவ்வுயிர்களின் அழகினை முன்னிறுத்தி கற்றுத்தருகின்றார். வானத்து பறவைகளை நோக்குங்கள், காட்டு மலர்ச் செடிகள் எப்படி வளருகின்றன எனக் கவனியுங்கள், என்கின்றார் (மத். 6:25-34). விதைகளை, மரங்களை, கனிகளை, பறவைகளை, விலங்குகளை இவற்றின் அழகினை தம் போதனைக்கு துணையாக்கிக் கொண்டார்.

### *3. மண்ணின் மனிதர் அழகு* : (தொ.நூ. 1 : 27)

கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்; கடவுளின் உருவிலேயே அவர்களை படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.

படைப்பின் இறுதியில் மனிதன் படைக்கப்பட்டான். மனிதரை படைக்கையில் கடவுள் "மானிடரை நம் உருவிலும் நம் சாயலிலும் உண்டாக்குவோம்" என்றார் (தொ.நூ. 1:26). இது மனிதன் தனித்தன்மையுடைய முக்கியத்துவத்துடன் படைக்கப்பட்டான் என்பதனை உணர்த்துகின்றது.

உணர்ச்சிகளும் செயல்பாடுகளும் மற்ற உயிரினங்கள் பலவற்றுக்கும் இருப்பினும் சிந்திக்கும் ஆற்றலும், பகுத்தறிவும் மனிதன் மட்டுமே பெற்றுள்ளான். மனித இனம் மட்டுமல்ல ஒவ்வொரு தனிமனிதனும் தனித்தன்மை உடையவனாய் படைக்கப்பட்டிருக்கின்றான். தோற்றத்தில் தனித்தன்மை, குரலினில் தனித்தன்மை, விழிகளில் தனித்தன்மை, விரல்ரேகையினில் தனித்தன்மை மற்றும் குணத்தில் தனித்தன்மை. இவ்வழகினை மனிதன் மட்டுமே பெற்றுள்ளான்.

“ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி அவன் நாசிகளில் உயிர்மூச்சை ஊத மனிதன் உயிர் உள்ளவனானான்” (தொ.நூ. 2:7) என்பதிலிருந்து இறைவன் மனிதர்பால் கொண்டிருக்கும் உறவு வலுவானது என உணரலாம்.

“ஏதேன் தோட்டத்தை பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார்” (தொ.நூ. 2:15). எனவே மனிதன் பொறுப்புடையவனானான். இதனால் அவன் அழகு அதிகரித்திருக்கிறது.

மனுவுரு எடுத்த இயேசுவால் இவ்மனிதரின் அழகு நிறைவுடையதாகிறது.

***முடிவுரை* :**

இறைவன் படைத்தவை அனைத்தும் நல்லவை; மிகுந்த அழகுடையவை. மானுட வாழ்வு தழைத்திட இவ்வியற்கையின் அழகினையும் வனப்பினையும் பாதுகாத்தல் வேண்டும். நிலம், நீர், காற்று, மலை, காடு, குளம், ஆறு இவற்றுள் ஏதேனும் ஒன்று சிதைக்கப்பட்டாலும் அனைத்து உயிரினங்களும் கூட்டமாக பாதிப்புக்குள்ளாகும்.

“நிலம் புலம்பி வாடுகின்றது. மண்ணுலகம் தளர்ந்து வாடுகின்றது... நாடு அதில் குடியிருப்போரால் தீட்டுப்பட்டுள்ளது. ஏனெனில் அவர்கள் சட்டங்களை மீறினார்கள், நியமங்களை சீர்குலைத்தார்கள்... திராட்சை ரசம் அழுகிறது, திராட்சை கொடி தளர்கிறது” (எசா. 24:4-7) என்கின்ற எச்சரிப்பின் தொனி நம் இதயங்களில் உரக்க ஒலிக்கட்டும்.

அருள்திரு. T. **சுதீர்**

04-02-2018

**உயிர்ப்புக்கு முன்வரும் எட்டாம் ஞாயிறு**

# படைப்பின் வீழ்ச்சிநிலை

## THE FALLEN - NESS OF CREATION

தொ. நூ. 3:1-10 உரோ. 3:21-26
தி.பா. 53 மத். 18:23-35

***"ஏனெனில், எல்லாருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர்."*** உரோ. 3:23

கடவுள் படைப்பாளர். படைப்பின் வழியாகத் தான் கடவுளின் மாட்சியையும் அன்பையும் உணர்கிறோம். கடவுள் மிருக ஜீவன்கள், செடி, கொடிகளை படைத்து முடித்து "நல்லது" எனக் கண்டார். ஆனால் தம் சாயலை குலைத்த, மானுடரைப் படைத்ததற்காக மனஸ்தாபப்பட்டு விசனமாயிருந்தார் (தொ.நூ. 6:6). எப்போது மனிதன் தானும் படைப்பின் ஓர் அங்கம் என்று உணர்ந்து செயல்படுகிறானோ அப்போது தான் கடவுளின் சாயல், படைக்கப்பட்ட நோக்கம் முழுமை பெறும். ஆனால் இன்று பல நிலைகளில் வீழ்ச்சிகள் தான் பெருகிக் கொண்டே வருகின்றன. இப்படி கடவுளின் படைப்புகளுக்கிடையே ஏற்பட்ட வீழ்ச்சி ஒட்டுமொத்த படைப்பையும் களங்கப்படுத்தி நிலை கொண்டிருக்கிறது.

### *1. படைப்பின் வீழ்ச்சி : தொடக்கப் பாவம்* (தெ.நூ. 3:6,7)

படைப்பின் வீழ்ச்சிக்கு தொடக்க பாவமே காரணம். அந்த தொடக்க பாவம் எது? இந்த வினாவிற்கு பெரும்பாலும் 'கீழ்ப்படியாமை' என்ற பதிலே கிடைக்கும். உண்மையில் கீழ்ப்படியாமை தொடக்க பாவம் அல்ல. இந்த கீழ்ப்படியாமையை தூண்டியது ஆசை. அதுவும் சாதாரண ஆசை அல்ல 'பேராசை'. தொ.நூ. 13:5-ல் நீங்கள் அதிலிருந்து உண்ணும் நாளில்

(i) உங்கள் கண்கள் திறக்கப்படும்

(ii) நீங்கள் நன்மை தீமையை அறிவீர்கள்

(iii) நீங்கள் தேவர்களுக்கு ஒப்பாவீர்கள்

என்ற மூன்று பேராசைகளுக்கும் ஆதாமும், ஏவாளும் அடிப்பணிந்து விட்டதே வீழ்ச்சியின் தொடக்கம். இங்கே பயன்படுத்தப்பட்டிருக்கும் தேவர்கள் என்ற சொல்லிற்கு எபிரேய திருமறையில் "ஏலோஹீம்" எனும் கடவுளுக்கு பயன்படுத்தப்பட்ட சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

எனவே ஆதாம் நான் கடவுளாக வேண்டும் என்ற அளவிற்கு அவன் மேட்டிமைக் கொண்டதே உலகத்திலுள்ள எல்லா பாவத்தின் தொடக்கமாகும். இதுவரை உலகில் இருந்த அரசர்கள் தங்களை கடவுளாகவோ அல்லது கடவுளின் மறு உருவாகவோ சொல்லிக் கொண்டார்கள், என வரலாறு கூறுகிறது. ஆக மண்ணுலக ஆட்சியாளர்கள் அனைவரும் ஆதாம் செய்த தொடக்க பாவத்தையே பிரதிபலிக்கின்றனர் என்பது உறுதி. இந்த தொடக்கப் பாவத்தின் வேர் என்பது மனமேட்டிமை அல்லது பெருமையாக அமைகின்றது. எப்படியெனில் பேராசையினால் பெருமை உருவாகும் போது அதை சுற்றி தானாகவே தீமையான குணங்கள் உருவாகி வீழ்ச்சிக்கு வழி உருவாக்குகிறது. அது தன் அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்ளவும் தன் பேராசைக்கு தீனி போடவும் மிகுந்த பொருளாசையும் பண ஆசையும் கொண்டு எவனை விழுங்கலாம்? என அனைவரின் வாழ்வையும் விழுங்க தொடங்கும். இப்படி பேராசையினால் வரும் மன மேட்டிமை வீழ்ச்சிக்கு வேராய் விளங்கி கொண்டிருக்கிறது.

## *2. படைப்பின் வீழ்ச்சி : பொறுப்பாண்மைமிக்கப் பொறுப்பு*

மனிதனின் வீழ்ச்சியால் உலகுக்குள் பாவம் வந்தது. பாவம் என்பது கடவுளை விட்டு விலகி சாத்தானின் கையில் விழுவதே ஆகும். பலுகி பெருகி மண்ணுலகை நிரப்புங்கள், அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள், அனைத்தையும் ஆளுங்கள் தொ.நூ. 1:28 என்று பாதுகாக்கும் தம் பொறுப்பை மனிதனுக்கு கடவுள் தந்தார். ஆனால் மனிதன் ஆட்சி அதிகாரம் என்பதை தவறாக புரிந்து செயல்பட்டான். ஆளுமையை என்பது என்ன என்பதை புரிதலே சிறப்பு.

**(i) ஆளுங்கள் :**

ஆளுங்கள் என்ற சொல்லின் எபிரேய வார்த்தை "Radah" ஆகும். பேராயர் விக்டர் பிரேம் சாகர் கூறும் போது Radah என்ற சொல் அரசன், மேய்ப்பன் பொறுப்புள்ள உக்கிரணத்துவத்தோடு கவனிப்பது என பொருள்படும் என கூறுகிறார். திருமறையில் பொதுவாக அடிமை அல்லது தன் அதிகாரத்திற்கு உட்பட்டவரை ஆளுகை செய்தலை குறிக்கும், தி.பா. 72:1-4; 12-14 அரசன் ஏழை எளியவரை நீதி கரிசனையோடு கவனிப்பது.

**(ii) கீழ்ப்படுத்துங்கள் :**

கீழ்ப்படுத்து என்ற சொல்லின் எபிரேயச் சொல் "Kabas" இச்சொல்லின் பொருள் ஆழமாக நல்ல விளைச்சல் பெறுவதைக் குறிக்கும் அல்லது ஆற்றலுக்கு உட்படுத்து என்பதாகும்.

இந்த இரண்டு சொற்களும் "அதிகாரத்தை" வெளிப்படுத்துகிறது என்று தவறாக புரிந்து கொள்ளப்பட்டது. அதிகாரம் ஆட்சி செய்ததும், தன்னலம் தழைத்தோங்கியது. உலகம் அழிவையும் ஆறா புண்ணையும் பெற்று வீழ்ச்சி கண்டுள்ளது. மனிதன் இயற்கையின் மீது அதிகாரம் காட்டி இயற்கைக்கு எதிராக வாழ ஆரம்பித்தான். இதனால் உலகில் வெப்பமயம், அமில மழை, தண்ணீர் தூய்மை இழப்பு, உயிர்காற்றை வெளியிடும் மரங்கள் அழிப்பு, நச்சுப் புகைகள், இயற்கைத் தடுப்பு வலை கிழிப்பு, சூரியனிலிருந்து நேரடியாகவரும் கதிர்வீச்சு புற்று நோயை உருவாக்குதல், கடலில் கலக்கும் கழிவு, கடல் மட்டம் உயருதல், சூறாவளிக் காற்று, சுனாமி, வெள்ளப்பெருக்கு, கதிர்வீச்சுகள் போன்றவற்றால் மனிதன் பல அழிவுகளை சம்பாதித்து கொண்டிருக்கிறான் என்பது உண்மை.

மனிதன் சக மனிதரோடும், கடவுளோடும் உள்ள உறவு நிலையிலும் வீழ்ச்சியடைந்துள்ளான். மத். 18:21-35 ல் மன்னிக்க மறுத்த பணியாள் உவமையில் அரசன், கடன் முழுவதையும் பணியாளரின் நிலையைக் கண்டு, இரக்கம் கொண்டு தள்ளுபடி செய்தார் (மத். 18:27). ஆனால் மன்னிப்பை பெற்ற அந்த பணியாளன் சகமனிதரிடம் இரக்கம் காட்டவில்லை. இதனால் அந்த பணியாளன் தண்டனைப்பெற்று வீழ்ச்சியை சந்தித்தான். உங்களுள் ஒவ்வொருவரும் தன் சகோதரர், சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார். ஆகவே கடவுள் தந்த உக்கிராணத்துவ பொறுப்புகளை சரிவர செய்ய அழைக்கப்படுகிறோம்.

## *3. படைப்பின் வீழ்ச்சி : மீட்டுருவாக்கம்*

மனிதர்கள் மன்னிப்பார்கள், மறக்க மாட்டார்கள்

புனிதர்கள் மன்னிப்பார்கள், மறக்கவும் செய்வார்கள்.

ரோமர் 3:25-ல் இரத்தம் சிந்தி மனிதருடைய பாவத்திற்குக் கழுவாய் ஆகுமாறு இயேசுவைக் கடவுள் நியமித்தார். தம் ஒரே மகன் மீது நம்பிக்கைக் கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவிற்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார் (யோவா. 3:16).

மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக மனம் வருந்தியவர் அதே மனிதர்களுக்காக மனம் இரங்குகிறார். மண்ணுலகின் மீது அன்பு வைத்ததினால் தம் மகனையே உலகிற்கு அனுப்பினார். அவர் இரக்கம் மன உருக்கம் உள்ளவர். அளவிட முடியாத அன்பினை மனுகுலத்திற்கு அருளுகின்றார். அவர் நம் பாவங்களுக்கு ஏற்ப நம்மை நடத்துவதில்லை.

நம் குற்றங்களுக்கு ஏற்ப நம்மை தண்டிப்பது இல்லை. பாவத்தை அழித்து மனிதரை நேசிக்கிறார். அருகில் வருபவர்களை அன்போடு அரவணைக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மீது கொள்ளும் நம்பிக்கையின் வழியாக கடவுள் மனிதரைத் தமக்கு ஏற்புடையவராக்குகிறார். நம்பிக்கை கொள்வோர் அனைவரையுமே அவர் ஏற்புடையவராக்குகிறார். அவர் வேறுபாடு காட்டுவது இல்லை. “இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்” (தி.வெ. 21:5) என்ற இறைவனின் திட்டத்தில் நாம் இணைந்து படைப்பை நேசித்து, நற்செயல்களை உலகின் நலனுக்காக, நாட்டை வளப்படுத்துவதற்காக, நம் சுக வாழ்விற்காக செயல்படுவோம். பிறரையும் தூண்டும் கருவியாய் படைப்பில் மறு உருவாக்கம் செய்யும் விளக்காய் விளங்குவோம்.

நம்மை அழிக்கும், வீழ்ச்சிக்கு நேராக கொண்டு செல்லும் தொடக்கப்பாவம், பெருமை பொறுப்பற்ற நிலை இவைகளை களைந்து, நமக்கு வாழ்வுதரும் அவர் போதனையின் மீது மட்டும் விசுவாசம் வைத்து, உலகில் உள்ள ஒவ்வொரு உயிர் மீதும், படைப்பனைத்தின் மீதும் பாசத்தினை காட்டுவோம். கடவுளின் சாயலாய் படைக்கப்பட்ட நாம் படைப்பில் வீழ்ச்சியை துடைக்கும் கடவுளின் திருப்பணியில் நம்மை உடன்பணியாளர்களாக இணைத்து கொள்வோம்.

அருள்திரு. S.G. ***பீபின்***

04-02-2018

**உயிர்ப்புக்கு முன்வரும் எட்டாம் ஞாயிறு &**
**கிறிஸ்தவப் பக்தி முயற்சி சங்க ஞாயிறு**

# பொறுப்பாண்மை மிக்க இளையோர்

| | |
|---|---|
| வி. ப. 4:1-10 | உரோ. 14:7-12 |
| தி.பா. 9 | மத். 25:14-30 |

***"...நன்று நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன்."*** **மத். 25:21**

பொறுப்பாண்மை என்பது ஒவ்வொருவரின் ஒப்படைப்பிலும் உதிரத்திலும் ஊறிவிடும் ஒரு வகை மனப்பான்மையாகும். இந்த பொறுப்பாண்மையின் ஆணி வேராக இருப்பது "உண்மையாகும்." ஏனெனில் இப்படிப்பட்டவர்கள் கடவுளுக்கு ஏற்புடையவராகவும் நல்ல பொறுப்பாண்மையாளருமாயிருப்பர். இன்றைய நாட்களில் இளையோரிடம் இந்தப் பொறுப்பாண்மையை எதிர்பார்க்கும் அளவில் காணமுடியவில்லை. ஏனேனில் உலகப்பற்றும், ஊடகத்தாக்கமும், ஊதாரித்தனமான வாழ்வும் அவர்களின் ஆளுமையை அச்சுறுத்துத்திக் கொண்டிருப்பதை நாம் அறிகிறோம். இந்நிலையில் அவர்களை வளமான வருங்காலத்திற்குரிய தலைமைத்துவத்திற்கு உருவாக்குவதும், ஊக்கப்படுத்துவதும் முக்கியமான பொறுப்பாகும். இப்பொறுப்பில் இளையோரின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். இந்தப் பார்வையில் சிந்திப்போம்.

## *1. விடுதலைப்பணியில் பொறுப்பாண்மை* : (வி.ப. 4 : 1-10)

மோசேயின் அழைப்பும், அதற்குரிய ஆயத்தப்படுத்துதலும் அதைத் தொடர்ந்து வழங்கப்படும் அதிகாரமும் பொறுப்பாண்மையின் அங்கீகாரமே. (வி.ப. 3:10; 4:2) இப்பணிவிடைக்கு தயார்படுத்தப்பட்டவனோ தப்பித்துக் கொள்ளும் முனையில் தன்னைத் தகுதியற்றவராக மறுப்பு (வி.ப. 3:11; 4:10) சொன்னாலும் இப்பணிக்கு ஏற்புடையவர் அவரே என இறைவன் கண்டறிந்தார். ஏனெனில் மோசே மக்களைக் குறித்த கரிசனையும் அவர்களின் வாழ்வைக் குறித்த முன்னோக்கப் பார்வையும் கொண்டிருந்தார். ஆகவே இந்த உன்னதப் பணிவிடைக்கென தெரிந்தெடுத்து திருநிலைப்படுத்துகிறார். மோசேயும் பொறுப்பாண்மைப் பணியில் பொறுப்புடனும், தகுதியுடனும் நடந்து இறைவனால்

சிறப்புப்படுத்தப்பட்டார். எபி. 3:25-ல் மோசே கடவுளின் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவராயிருந்தார். கடவுளின் பணியிலும் அவர் உண்மையுள்ளவராயிருந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடவுள் நம்பி தரும் பொறுப்புகளில் பொறுப்புடன் நடந்து கொள்வதே இன்றைய நாட்களில் எதிர்பார்க்கப்படும் எதிர்பார்ப்பாகும். ஊனியல்பின் நாட்டத்தில் உன்னதரை மறந்து போதைகளுக்கு அடிமையாகி பேதைகளாக அலையும் மக்களை ஆற்றுப்படுத்தும் பணியாற்ற ஆயத்தப்பட வேண்டும். அவர்களை விடுவித்து வாழும் சூழலை ஏற்படுத்தியாக வேண்டும். ஏனெனில் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் ஆண்டவரின் கையில் உள்ளது. அதை உணர்ந்து பொல்லாத நாட்களை பயனுள்ள வகையில் முறைப்படுத்த வேண்டும் (எபே. 5:16). வீழ்ந்து விட்ட மானிடம் விடியலைக் காண விழித்திருக்கும் விழிகளோடு, விண்ணின் பார்வையோடும் செயல்பட வேண்டும்.

### ***2. வளங்களில் பொறுப்பாண்மை :*** (மத். 25 : 14-30)

பொறுப்பாண்மைத்துவத்தில் வளங்கள் கண்டறியப்படுதலும், பொறுப்பாக பயன்படுத்துவதும் சிறப்பானதாகும். ஏனெனில் கணக்கு ஒப்புவித்தல் என்பது முக்கியமானதாகும். நம்பத்தகுந்தவராகவும், இருக்கும் போது நாம் கண்ணியப்படுத்தப்படுவோம். (மத். 25:21) வளங்கள் பகிர்ந்து (தாலந்து) தரப்படும் நிலையில் இருவர் முறையோடு செயல்பட்டு பயன் ஈட்டுகின்றனர். ஒருவரோ சோம்பலால் உரிமை வாழ்வை இழக்கின்றார் என திருமறை தெளிவுப்படுத்தியிருக்கிறது. இளையோரிடம் தரப்பட்டுள்ள வளங்கள் என்ன என்பதைக் கண்டறிந்து தகுந்த நிலையில் தகுதியுடன் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் ஒவ்வொருவரும் தம்மைக் குறித்தே கடவுளுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (உரோ. 14:12). மிகச்சிறியவற்றிலும் நம்பத்தகுந்தவராக இருக்கும் எவரிடமும் பெரியவைகள் கொடுக்கப்படும் என்பதே வலியுறுத்தப்படும் உண்மை. இதையே பேதுரு திருமுகத்தில் குறிப்பிடும் போது நீங்கள் கடவுளுடைய பல்வேறு அருட்கொடைகளின் சிறிய பொறுப்பாளர்கள். எனவே உங்களுள் ஒவ்வொருவரும் தாம் பெற்றுக் கொண்ட அருள் கொடையைப் பயன்படுத்தி ஒருவருக்கொருவர் பணிபுரியுங்கள் என்கிறார் (1பேது. 4:10). கடவுள் வழங்கியிருக்கும் வளங்களான காலம், திறமை, செல்வம் அனைத்திலும் பொறுப்பாண்மையுடன் நடந்து கொள்வோம். ஆண்டவரின் ஆற்றலோடும் அதிகாரத்தோடும், வரங்களோடும் பெற்றுக் கொண்டவைகளை வளப்படுத்தி பிறருக்குக் கொடுப்போம். இயேசு

கிறிஸ்துவும் மத். 10:8b-ல் கொடையாகவே பெற்றீர்கள், கொடையாகவே வழங்குவீர்கள் என கட்டளையிட்டிருக்கிறார். கடவுளால் வழங்கப்பட்டவைகள் அவருக்கே சொந்தம் என நல்லெண்ணத்துடன் நற்பணியாற்றிட நம்மையே ஒப்படைத்திடுவோம்.

பொறுப்பாண்மை என்பது கடமைகளில் கருத்தோடும், கண்ணியத்தோடும் நடந்து கொள்வதாகும் எனும் உயாந்த இலட்சிய நோக்கில் திருவாக்கைக் கடைபிடித்து, நடத்தையை மாசற்றதாய்க் காத்து இறையரசின் தகவுகளுடன் முன்னெடுத்துச் செல்வோம். இளையவர்கள் இறைவனின் திருவுளத்தை அறிந்து நிறைவேற்றிட நல்வழிகாட்டுவோம், நம்பிக்கையூட்டுவோம், நாளை இளையவர்களுக்குரியதாகட்டும்.

அருள்திரு. R. **டட்ஸ் ஞானறாபி**

11-02-2018 **உயிர்ப்புக்கு முன்வரும் ஏழாம் ஞாயிறு**

# தவக்காலம்: ஓர் ஒப்புரவின் காலம்

## LENT : A TIME OF RECONCILIATION

| | |
|---|---|
| தொ.நூ. 45:1-15 | எபே. 2:11-22 |
| திபா. 85 | யோவா. 2:1-11 |

**"ஏனெனில் அவரே நமக்கு அமைதி அருள்பவர். அவரே இரண்டு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய் தகர்த்தெறிந்து அவர்களை ஒன்றுபடுத்தினார்."**
**எபே. 2:14**

ஒப்புரவாகுதல் என்பது சண்டைப் போட்டுப் பிரிந்த இருவர் தம்மில் காணப்படும் பகையை விலக்கி ஐக்கியத்தை உருவாக்கி கொள்வதாகும். பகைமை என்பது முதலில் நம்மில் தோன்றும் எதிர்மறை உணர்வுகளையும், மன அழுத்தத்தையும், நான் என்ற ஆணவத்தையும் தெரியப்படுத்தும் ஒரு எச்சரிக்கை ஒலியாகும். இந்த ஒலியைக் கேட்கும் போது அன்புக்கு எதிராகத் தோன்றும் பகைமையை நம்மில் உருவாக்குகிறோம். இயேசுநாதர் பாவத்தின் மூலம் மனிதனில் உண்டான பகையை மாற்றி கடவுளுக்கும் மனிதருக்கும், மனிதருக்கும் மனிதனுக்கும் இடையே ஒப்புரவை உண்டாக்கினார் (2கொரி. 5:18,19). அதன் மூலம் பாவம் செய்த மனிதர்களாகிய நாம் ஒப்புரவின் மகிழ்ச்சியை அனுபவிக்கிறோம். தவக்காலத்தில் ஒப்புரவின் சந்தோஷத்தை சொந்தமாக்குவது எப்படி? என்பதை தியானிப்போம்.

### *1. பகையைக் களைதல்* : (எபே. 2 : 16)

பவுலார் இறைப்பணி செய்த காலத்தில் யூதர்களுக்கும் பிற இனத்தாருக்கும் உள்ள பிளவு ஒன்று சேர்க்க முடியாததாக இருந்தது. யூதர்கள் தங்களை உடன்படிக்கையின் மக்கள் என்றும், இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் என்றும் தங்களுக்கென்று இறைவன் கொடுத்த சட்டம் உள்ளது என்றும் பெருமைப்பட்டனர். பிற இனத்தாருக்கு இந்த மூன்றில் எந்த பங்கும் இல்லை. இந்த இரு இனத்தாரும் ஒன்றுபட்டு வாழ்வது என்பது சாத்தியமில்லை என்னும் நிலைக்காணப்பட்டது. நாளுக்கு நாள் பகை பெருகி பெரியவர் - சிறியவர், தாழ்ந்தவர்-உயர்ந்தவர் என்னும் பிரிவு ஏற்பட்டது. இந்த பகையை களைவதற்காக தூய பவுலார் இயேசுநாதரை பேதம் அழிக்கும் பரம்பொருளாக முன் வைக்கிறார்.

இயேசுநாதரின் சிலுவை, மரணம், உயிர்த்தெழுதல் இவற்றின் மூலம் கடவுளுக்கும் மனிதருக்குமிடையே ஒரு முற்றும் மாறின நிலை உண்டாயிற்று. மனிதருக்கும் மனிதருக்கும் இடையே உள்ள பகையும் தீர்க்கப்பட்டுள்ளது (எபே. 2:14-16). இயேசுகிறிஸ்து தம்மை உயிருள்ளப் பலியாக ஒப்புக்கொடுத்து பகையை சிலுவையில் கொன்று இருதிறத்தாரையும் ஒன்றாக்கினார் என பவுலடியார் கூறுகிறார்.

யோவான் நற்செய்தியாளர் இறைவனோடு இவ்வுலகத்தை ஒப்புரவாக்கும் பொருட்டு இயேசு கிறிஸ்து தம்முடைய திருப்பணியைத் துவக்கி சில அடித்தளங்களை உருவாக்கி ஏற்றத்தாழ்வு இல்லாத நித்திய வாழ்வை மக்களுக்கு அறிமுகம் செய்தார் என்கிறார். இயேசுகிறிஸ்துவின் மன்றாட்டிலும் (யோவா. 17:1-19) ஒப்புரவாக்கும்பணி சிறப்பிடம் பெறுகிறது, ஈசாக்கின் பிள்ளைகள் ஏசா, யாக்கோபு அவர்களிடையே தலைமகன் உரிமை சம்மந்தமாக பகை ஏற்பட்டுவிட்டது (தொ.நூ. 25:29-34). ஆனால் பிரிந்த சகோதரர்கள் பகையை மறந்து ஒப்புரவானதை தொ.நூ. 33-ம் அதிகாரம் விளக்குகிறது.

மனித எண்ணங்கள், செயல்பாடுகள், வன்முறையை உருவாக்கி கொண்டிருக்கும் இவ்வுலகில் மனுக்குலம் அமைதியுடன் வாழ இறைவன் விரும்புகிறார். எனவே அமைதியை உருவாக்கி சமாதானமாய் வாழ பகையை களைவோம்.

### *2. பாசத்தை வளர்த்தல்* : (எபே. 2 : 19)

பகை என்றால் விரோதம் எனலாம். பகைஞன் அல்லது விரோதி என்பவர் தன் வாழ்வின் வழியாக இன்னொருவரின் சமாதானத்தைக் கெடுத்துக் கொண்டிருப்பவர். இயேசுநாதர் இப்படிப்பட்ட பகைஞர்கள் அல்லது விரோதிகள் மனம் மாற வேண்டும் என்பதற்காக அவர்கள் மீது பாசம் வைத்து சிலுவையை ஏற்று மரித்தார் (எபே. 2:14). உயிர்த்த இயேசுநாதர் தம் சீடர்களுடன் காட்டும் பாசமும் பரிவும் அனைவரின் உள்ளத்தையும் தொட்டன. அவர்கள் தம்மைக் கைவிட்டு ஓடிவிட்டதையோ, தமது உயிர்ப்பை நம்ப மறுத்ததையோ, தங்கள் பழைய வாழ்வுக்கே மீண்டும் போக முடிவு செய்ததையோ அவர் பொருட்படுத்தாமல் கடைசி பரியந்தமும் தம் பாசத்தைக் காட்டினார் (தி.பா. 103:13). கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது மீன் கிடைக்கவில்லை என அறிந்து, வலப்பக்கத்தில் வலை வீசச் சொல்லி பெரும் மீன் கிடைக்கச் செய்தார். களைப்போடும் பசியோடும் கரைக்கு அவர்கள் வந்த போது தான் தயாரித்து வைத்திருந்த உணவை தான் உட்கொள்ள வாருங்கள்

என்றார் (யோவா. 21:1-14). இதன்மூலம் சீடர்களின் கருத்துக்கள் முரண்பட்ட நிலையிலும் இயேசுநாதர் தம் பாசத்தை வளர்த்துக் கொண்டதை உணரலாம்.

பாசம் என்பது எதனையும் மற்றவரிடமிருந்து எதிர்பார்க்காது காட்டும் பேரன்பாகும். அதற்கு ஈடு இணை வேறு எதுவும் இல்லை. பாசத்தை விலை கொடுத்து வாங்க இயலாது. இந்த தவக்காலத்தில் பிறருடன் உள்ள விரோதத்தையும் பகையையும் மறந்து பாசத்தை வளர்த்து ஒப்புரவை ஏற்படுத்தும் போது அதுதான் பயனுள்ள வாழ்வுக்கு வழி நடத்தும்.

***3. பரிபூரண வாழ்வைச் சுதந்தரித்தல் :*** (எபே. 2 : 21)

பகையில்லாத பாசம் நிறைந்த வாழ்க்கைதான் பரிபூரண வாழ்க்கையாகும். கடவுளை நேசிக்கிறேன் எனக்கூறுபவன் தன் சகோதரரிடத்தில் அன்பாயிராவிட்டால் கடவுளுடன் முழு ஐக்கியம் கொள்ள முடியாது. சகோதரரைப் பகைத்தால் நாம் இருளில் இருக்கிறோம். இருளில் இருந்தால் எவ்வாறு ஒளியுடன் தொடர்புள்ளவர்களாயிருப்போம் (1யோவா. 3:15). பாவம் முழு மனித வாழ்வை அனுபவிக்க ஒருபோதும் அனுமதிப்பதில்லை. எனவே தான் இயேசு சிலுவையில் மரித்தார். பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட யோசேப்புக்கு சகோதரர்கள் தீங்கு இழைத்ததினால் அவனின் சகோதரர்களுக்கு யோசேப்பு சரிக்கு சரிக்கட்டுவான் என நினைத்தார்கள். ஆட்களை அனுப்பினார்கள். துரோகத்தை, பாதகத்தை மன்னிக்க வேண்டுமென தாழ விழுந்து கேட்டனர். ஆனால் யோசேப்பு தன் சகோதரர்களுக்கும் வாழ்வு உண்டாக அவர்களை மன்னித்து ஒருவரோடொருவர் ஒப்புரவானார்கள். 1சாமு. 24-ம் அதிகாரத்தில் சவுல் தாவீதை தந்திரமாகக் கொல்ல முற்பட்டார். ஆனால் தாவீது சவுலை பழி வாங்க நல்ல வாய்ப்பு இருந்தும் தப்பவிட்டார். காரணம் கடவுளுக்கு கீழ்ப்படிகிறோம் என்ற மன நிறைவு தாவீதுக்கு இருந்தது. அதன் விளைவு தான் சவுல் தாவீதை நோக்கி என் மகனே (1சாமு. 24:16) என்கிறார்.

சிறந்த அறிவாற்றல் மிக்க மாவீரன் அலெக்சாண்டரின் தந்தை பிலிப் மிக்க பலம் பொருந்திய மன்னராக ஆட்சி செய்து வந்தார். அவரது பகுதிக்குட்பட்ட ஆர்க்கீடியஸ் என்னும் ஜமீன்தார்ஒருவர், மன்னரைப்பற்றி எப்பொழுதும் குறை கூறிக் கொண்டே இருப்பார். இது மன்னரின் காதுக்கு எட்டியது. அந்த நாட்டு வழக்கப்படி இது தேச விரோதம். ஒரு நாள் அந்த ஜமீன்தார் இருக்கும் பகுதிக்கு சென்ற மன்னர் தன் மந்திரியிடம்

அந்த ஆர்க்கீடியஸ் என்னிடம் கொண்டுள்ள பகைமைக்கு முடிவு கட்ட வேண்டும் எனக் கூறி, தன் அதிகாரிகளிடம் அந்த ஆர்க்கீடியஸை அழைத்து வரும்படி கூறினார். ஆர்க்கீடியஸ் மிகப் பதட்டம் அடைந்தார். தன் ராஜ துரோகச் செயலுக்கு மரணத்தண்டனைத்தான் கிடைக்கும் என்ற அச்சத்தில் புறப்பட்டுச் சென்றார். அவர் வந்ததும் மன்னர் எல்லா மந்திரிகளையும் வெளியில் அனுப்பி விட்டு ஜமீன்தாரைத் தனிமையில் சந்தித்தார். மன்னரின் தண்டனையை நிறைவேற்ற அதிகாரிகள் அனைவரும் வெளியில் தயாராக காத்திருந்தனர். சிறிது நேரம் கழித்து மன்னரும் ஆர்க்கீடியஸூம் கைக்கோர்த்து கொண்டு புன்முறுவலுடன் வெளியில் வந்தனர். எல்லோரும் ஆச்சரியப்பட்டனர்.

மந்திரி மன்னரைப் பார்த்து, மன்னா பகைவனை ஒழித்துக் கட்டுவேன் என்றீர்கள் எனக் கேட்டார். அதற்கு மன்னர், ஆம் பகைவனை ஒழித்துக்கட்டி விட்டு அவனிடத்தில் ஒரு புதிய நண்பனை உருவாக்கி விட்டேன். ஆர்க்கீடியஸ் நல்ல மனிதன் என்னைப்பற்றி தவறாகப்புரிந்து கொண்டுள்ளார். நேரில் பேசியதில் எங்களிடையே இருந்த கருத்து வேறுபாடு நீங்கியது. என்னை சரியாக புரிந்து கொண்டதால் என்மீது கொண்டுள்ள பகை உணர்வுகள் நீங்கி ஒப்புரவு உருவாகி நட்பு மலர்ந்துள்ளது என்றார்.

இந்நூற்றாண்டில் தொடர்பு சாதனங்களின் பாதிப்பினால் தனி மற்றும் சமூக வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இச்சூழலில் இயேசுநாதர் விரும்பும் பாதையில் முரண்பாடுகளை விட அமைதி, ஒப்புரவாகுதலை முதன்மைப்படுத்துவோம். தவக்காலத்தில் பகை, விரோதம் இவைகளைக் களைந்து பாசத்தை வளர்த்து இறைவன் நமக்கு முன் வைத்திருக்கும் நிறைவாழ்வினை சுதந்தரிப்போம்.

அருள்திரு. P. **ராஜா ஜெயசிங்**

11-02-2018

**குணமாக்கும் அருட்பணி ஞாயிறு**

# நலமருள்தலும் முழுமையும்
# HEALING AND WHOLENESS

யோபு 42:1-12 | 2 கொரி. 12:1-10
தி.பா. 6 | யோவா. 5:1-9

**"உடனே அம்மனிதர் நலமடைந்து தம்முடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தார்." யோவா 5:9**

குறும்புக்கார சிறுவன் ஒருவன் அடிக்கடி தவறு செய்வான். அது அச்சிறுவனுக்கு நல்லதாகத் தோன்றியது. பெற்றோர் தண்டித்தும் தன்னை? தற்பரிசோதனை செய்யாமல், வளர வளர இவனின் குறும்பு அதிகரித்தது. அவன் குடும்பத்திற்கே அவன் குறும்புக்காரனாகத் திகழ்ந்தான். ஒருநாள் திடீரென நோய்வாய்ப்பட்டான். அவனை யாரும் கவனிக்கவில்லை. வேதனை அடைந்தான். தன்நிலையைப் பரிசோதனை செய்தபோது தான் செய்வதெல்லாம் தவறு என உணர்ந்தான். தனது தவறுகளைச் சொல்லி மற்றவர்களிடம் மன்னிப்புக் கேட்டான். அவர்களும் மன்னித்து அவனுக்கு உதவினர். நலம் பெற்றான்; முழுமையான வாழ்வைப் பெற்றுக்கொண்டான்.

குணமாகுதல், நலம் பெறுதல் யாவும் இறைவன் அருளும் அருட்கொடைகள். இவை உடலை மட்டும் சார்ந்தவை அல்ல ஆன்மாவையும் சார்ந்தது. அதாவது, இயலாமையினின்று இயல்பு நிலைக்கு திரும்புவது. இயலாமையினின்று முழுமையை நோக்கிய வாழ்வு. உண்பதும் உடுப்பதும் மட்டுமல்ல வாழ்வு, அதைவிட மேலானது, அதாவது, இருத்தலினின்று நிறைவான வாழ்வுக்குப் பயணிப்பது (From Existence to Eternal Life). "முழு மனித வாழ்வே இறைவனின் மகிமை" என்கிறார் புனித எரோணிமூஸ். முழு மனித வாழ்விற்குத் தடையாக உள்ள சாவு, அழிவு, நோய் இவை யாவும் கடவுளிடமிருந்து வருகிறது என்ற கருத்துக்களினின்று விடுதலை பெற்று, நலமான வாழ்வில் இறைவன் பங்கேற்கிறார் என உணர்தல் வேண்டும்.

இன்றைய தியானப் பகுதியில் முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல் நலமற்றிருந்தவர் நலமடைந்து முழுமையான வாழ்வு பெற எவ்வாறு செயல்பட்டார் என்பதைச் சிந்திப்போம்.

### *1. பற்றுறுதியுடன் காத்திருந்தார்* (யோவா 5:4) :

“ஏனெனில் ஆண்டவரின் தூதர் சிலவேளைகளில் அக்குளத்தினுள் இறங்கித் தண்ணீரைக் கலக்குவார். தண்ணீர் கலங்கிய பின் முதலில் இறங்குபவர் எவ்வித நோயுற்றிருந்தாலும் நலமடைவார்.” யூதர்களின் திருவிழா ஒன்று வந்தது. இயேசுவும் எருசலேமுக்குச் சென்றார். எருசலேமில் ஆட்டு வாயிலுக்கு அருகில் ஐந்து மண்டபங்கள் கொண்ட குளம் ஒன்று உண்டு. எபிரேய மொழியில் ‘பெத்சதா’ என்பது அதன் பெயர். இம்மண்டபங்களில் உடல்நலமற்றோர், பார்வையற்றோர், முடக்குவாதமுற்றோர் ஆகியோர் திரளாய்ப் படுத்துக்கிடப்பர். இவர்கள் குளத்து நீர் கலங்குவதற்காகக் காத்திருப்பார்கள். கடவுள் மீது மானுடர் கொள்ளுகிற பற்றில் உறுதியாய் காத்திருப்பது தான் பற்றுறுதியாகும். கடவுள் ஒருவரே என்பதை நீங்கள் நம்புகிறீர்கள். நல்லது தான், பேய்களுங்கூட அவ்வாறு நம்பி அச்சத்தால் நடுங்குகின்றன (யாக். 2:19). இந்தச் சார்பு நிலை நம்மை கடவுளுக்கு அர்ப்பணிக்கவும் செயல்படவும் தூண்டுகிறது. செயல்படாத பற்றுறுதி உயிரற்றதாகும். தூய பவுல் தெசலோனிக்கே இறைமக்களின் பற்றுறுதியைப் பற்றி, “செயலில் வெளிப்பட்ட உங்கள் நம்பிக்கையும் அன்பினால் உந்தப்பட்ட உங்கள் உழைப்பையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை எதிர்நோக்கி இருப்பதால் நீங்கள் பெற்றுள்ள உங்கள் மன உறுதியையும் நம் தந்தையாம் கடவுள் முன் நினைவு கூருகிறோம்” (1 தெச. 1:3) என்கிறார். நல வாழ்வைப் பெறுவதற்கு இறைவனிடம் பற்றுறுதி கொள்வது மிகவும் இன்றியமையாததாகும் (மத். 9:29; லூக். 17:19; 18:42). இயேசுகிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டவர்கள், ஐந்து மண்டபங்கள் கொண்ட குளத்தின் கரையில் நலம் பெற்று முழுமையுடன் வாழ்வதற்குக் காத்திருந்தார்கள். அவர்களில் முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல்நலம்பெற பற்றுறுதியுடன் காத்திருந்தார் ஒருவர்.

கிறிஸ்தவ இலக்கியப் பதிப்பகம் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த ஓர் ஏழைச் சகோதரர் மிகவும் பக்தியும் ஆழ்ந்த இறை நம்பிக்கையும் கொண்டிருந்தார். அவர் திடீரென ஒருநாள் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவர்கள் அவரைப் பரிசோதித்த போது புற்றுநோய் இருப்பதற்கான கூறுகள் இருப்பதை அறிந்தார்கள். அவருக்குத் தீவிர மருத்துவம் செய்யப்பட்டது. அவரும் அவரது குடும்பத்தாரும் சுகம் பெற ஜெபித்து வந்தார்கள். அவர்களது பற்றுறுதியால் முழுநலம் பெற்று பூரணமாய் விடுதலை பெற்று வாழ்ந்து தொடர்ந்து பணி செய்தார்.

***2. பணிவிடையாளர்க்காய்க் காத்திருந்தார்*** (யோவா 5:7) :

"ஐயா, தண்ணீர் கலங்கும் போது என்னைக் குளத்தில் இறக்கிவிட ஆள் இல்லை நான் போவதற்கு முன் வேறு ஒருவர் இறங்கி விடுகிறார்" என்று உடல் நலமற்றவர் அவரிடம் கூறினார்.

மானுடர் பொதுவாக தங்களுக்குரிய தேவைகளுக்கு விருப்பங்களுக்கு முதலிடம் கொடுக்கின்றனர். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவோர் பிறரின் தேவைகள், விருப்பங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். "நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும். கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்" என்பது தூய பவுலின் வாக்கு (பிலி. 2:4,5). இங்கு பெத்சதா குளத்தின் கரையில் முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல்நலத்திற்கு பற்றுறுதியுடன் படுத்திருந்தவர், தனக்குப் பணிவிடை செய்ய யாராவது வருவார்களா என்றும் தேடிக்காத்திருந்தார். இயேசு அவரைக் கண்டு நெடுங்காலாமாக அவர் அந்நிலையில் இருந்துள்ளதை அறிந்து, "நலம்பெற விரும்புகிறீரா?" என்று அவரிடம் கேட்டார். "ஐயா தண்ணீர் கலங்கும் போது என்னைக் குளத்தில் இறக்கிவிட ஆள் இல்லை நான் போவதற்கு முன் வேறு ஒருவர் இறங்கி விடுகிறார்" என்று உடல் நலமற்றவர் அவரிடம் கூறினார்.

தூய பவுலடியாருக்குக் கொடுக்கப்பட்ட முள் இறைவன் அனுமதித்ததாக இருந்தது. தூய பவுலின் முள்ளைக் குறித்து திருமறை அறிஞர்களிடையே பல்வேறு கருத்துக்ககள் நிலவி வந்தன. சிலர் ஆன்மிகச் சோதனை என்பர், சிலர் எதிர்ப்புகள் என்பர், சிலர் காக்கா வலிப்பு என்பர், சிலர் கடும் தலைவலி என்பர், எதுவாயினும் அவருக்கு அது வேதனை தரக்கூடியதாயிருந்தது என்பது தெளிவு. தூய பவுல் விசுவாச வீரர், அற்புத வரங்களை கொண்டிருந்தவர். அவர் மும்முறை வேண்டினார். கடவுள் பதில் கொடுத்தார். அப்பதில் "என் கிருபை உனக்குப் போதும் பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்பதாக இருந்தது. நலம்பெற பணிவிடையாளரை தேடியிருந்த பவுலடியாருக்கு இப்பதில் மகிழ்ச்சியைத் தந்தது.

"A Boating" என்னும் பத்திரிக்கையில் அதன் ஆசிரியர் அமெரிக்காவில் பொதுவாக, படகுகளில் எழுதப்பட்டிருக்கும் பெயர்களைக் குறிப்பிட்டிருக்கிறார். அமைதியின் இருப்பிடம் (Serenity), காலம் கடந்து விட்டது (Time out), விரும்பும் கண்டுபிடிப்புகள் (Serendipity), இழுக்கும் நேரம் (Reel time) என்பன. ஆனால் ஒரு படகில் "பெரிதாக வாழ்தல்" (Living large) என எழுதப்பட்டுள்ளது. இது பணிவிடை செய்து மதிப்புடன் வாழ்வதையே சுட்டிக்காட்டுகிறது.

## 3. பரிகாரியான ஆண்டவரைப் பின்தொடர்ந்தார்

(யோவா 5:9) :

"உடனே அம்மனிதர் நலமடைந்து தம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்தார்."

அனைத்துச் சமயங்களும் மீட்பரைப் பற்றி சொல்லுகின்றன. இயேசு கிறிஸ்துவாலன்றி வேறு ஒருவராலும் மீட்பு இல்லை. பாவங்களை மன்னிப்பதற்கும் அவருடைய பெயரே அல்லாது வேறொரு பெயரும் கட்டளையிடப்படவில்லை (திப. 4:12). இயேசு முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல் நலமற்றிருந்தவரிடம் "எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து செல்லும்" என்றார். உடனே அம்மனிதர் நலமடைந்து தம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு பரிகாரியான ஆண்டவரைப் பின் தொடர்ந்து நடந்தார்.

இறையடியார் யோபு துன்ப நேரத்தில் கடவுளுக்கு நேராகக் கேள்விகள் பல கேட்டார். பின்பு கடவுள் கேள்விக்கான பதிலை யோபுவுக்கு முன் வைத்தார். அப்போது, "உம்மைப் பற்றிக் காதால் மட்டுமே கேள்விப்பட்டேன். ஆனால் இப்பொழுது என் கண்களே உம்மைக் காண்கின்றன. ஆகையால் என்னையே நொந்து கொள்ளுகிறேன். புழுதியிலும் சாம்பலிலும் இருந்து மனம் வருந்துகிறேன்" எனக் கூறினார் (யோபு 42:5,6). இதனால் யோபின் முன்னைய நாட்களில் இருந்ததைவிட பின்னைய நாட்களில் ஆண்டவர் அதிக ஆசி வழங்கினார்.

டாக்டர். பால்பிராண்ட் என்பவர் இந்தியாவில் அருட்பணியாற்றிய மருத்துவ மிஷனெரியாவார். அவருடைய மருத்துவமனையில் அறுவை சிகிட்சைக்குப் பின் நோயாளிகள் நன்றாகக் குணமடைந்து வருகையில் குடும்ப நபர்கள் சூடான ஆகாரம் கொடுப்பதையும், அருகில் இருந்து பராமரிப்பதையும், நோயாளி வலியினால் துன்புறும்போது மெதுவாக தடவிக் கொடுப்பதையும் கவனித்த டாக்டர். பால்பிராண்ட் "இப்படிப்பட்ட அன்பான கவனிப்பைப் பெற்றுக்கொள்ளும் நோயாளிக்கு வலிக்கான மருந்து தேவையில்லை என்பதைக் கண்டறிந்தார். இச்செயலே நலமருள நல்ல பரிகாரம்" என்றார்.

நமது வாழ்வுச் சூழலில் நோயினால் பாதிக்கப்பட்டு வேதனைகளுடன், கைவிடப்பட்ட நிலையில், மரணத்தோடு போராடுகிறவர்களுக்காக இறைவேண்டல் செய்வதும், குணமாக்கும் திருப்பணியில் நமது பங்களிப்பைக் கொடுப்பதும் நமது கடமை. இதனால் மானுடம் நலம்பெற்று முழுமையுடன் வாழும் இந்த நல்ல பணிக்காக நம்மை முழுவதுமாய் அர்ப்பணிப்போம்.

அருள்திரு. M.P. **விஜயகுமார்**

14-02-2018

**சாம்பல் புதன்**

# சிலுவை : தன்னல மறுப்புக்கு ஓர் அழைப்பு

## CROSS : A CALL TO SELF DENIAL

யோவே. 2:12-20 கலா. 2:15-21

தி.பா. 32 லூக். 9:23-27

**"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்."** லூக். 9:23

கிரேக்கத் தத்துவ ஞானி சாக்ரட்டீஸ் தன்னுடைய கேள்வி கேட்கும் திறனாலும், சீர்மிகு சிந்தனையாலும் வாழ்வு சார்ந்த தத்துவப் போதனைகளை இந்த உலகிற்கு வழங்கியவர். தமது புரட்சிகரமான கருத்துக்களால், சமூகத்தில் புரையோடிப்போயிருந்த மூடப்பழக்க வழக்கங்களை மண்மூடிப் போகச் செய்தார். சாக்ரட்டீசின் போதனைகளில் மிக முக்கியமானது, "உன்னையே நீ அறிவாய்" (Know yourself) என்பதாகும்.

கிறிஸ்துவுக்குப் பின் 121-ல் உரோமையின் அரசக் குடும்பத்தில் பிறந்தவர் மார்கஸ் அரேலியஸ். ஆண்டானியஸ் பயஸ் -க்குப் பிறகு கி.பி 161-ல் ரோமாபுரியின் அரசரானார். அரசனாக மட்டுமல்ல, கற்றுத் தேர்ந்த ஞானியாகவும் அறியப்பட்டவர். அவருடைய போதனைகளில் மிக முக்கியமானது "உன்னையே நீ அடக்கி ஆள்" (Control yourself).

இன்னும் பல ஞானிகள் தங்கள் போதனையாக மக்களுக்கு சொன்னது "உன்னையே நீ காத்துக்கொள்" (Keep yourself) என்பதாகும்.

ஆனால் ஞானிகளுக்கு எல்லாம் ஞானியும், உலக மீட்பருமான ஆண்டவர் இயேசுகிறிஸ்து மேற்சொன்னவைகளுக்கெல்லாம் மேலான போதனையாகச் சொல்லுவது "உன்னையே நீ மறுத்துவிடு" (Deny yourself)

Know yourself, Control youself, Keep yourself இவைகளில் எல்லாம் ஒருவிதமான சுயநலச் சிந்தனை அடங்கியுள்ளது. ஆனால் ஆண்டவர் இயேசுகிறிஸ்து தன்னலத்தைத் துறக்க விடுத்த அழைப்பில் எவ்விதமான சுயநலச் சிந்தனைகளும் இல்லை. அது முழுமையான தன்னல மறுப்புக்கு சீடர்களை அழைக்கிறது. ஆகவே இயேசு கிறிஸ்து சொன்னார்.

"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (லூக். 9:23) என்றார்.

தவக்காலம் கிறிஸ்தவ வாழ்வில் தனித்துவமிக்க ஒரு காலம். மனிதர்கள் தங்கள் வாழ்வைப் பரிசோதனை செய்து பார்க்கவும், தவறுகளைக் கண்டறியவும், அவைகளைக் களையவும் கடவுளோடும், மனிதரோடும், படைப்புகளோடும், உண்டான பிணக்கை ஒப்புரவாகுதலின் வழியாக நேர் செய்யவும் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள, தங்களது ஆன்மிகத்தைப் புதுபித்துக் கொள்ள ஆண்டவர் தரும் வாய்ப்பாகும். இத்தகைய புதுப்பித்தலுக்குச் சிலுவையின் மாதிரியே அடித்தளமாகவும், அடிநாதமாகவும் விளங்குகிறது. சிலுவையே தன்னல மறுப்புக்கு அடையாளமாகவும், சின்னமாகவும் திகழுகிறது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவை சுமத்தலுக்குத் தொடக்க நிலையாக தன்னல மறுப்பையே முதன்மைப்படுத்துகின்றார். ஆகவே, இந்தத் தவக்காலத்தின் தொடக்க நாளாகிய சாம்பல் புதனான இன்று சிலுவைப் போதனையின் வாயிலாக தன்னலம் மறுப்பை நமது வாழ்வில் எப்படிச் சாத்தியமாக்குவது என்பதைக் குறித்து தியானிப்போம்.

### *1. முதன்மையானவற்றைத் துறத்தல்* :

கொச்சியில் ஏழாயிரம் ரூபாயுடன் ஒரு இளைஞன் வந்து இறங்குகிறான். அவன் ஒரு வட இந்தியன். அவனுக்கு ஹிந்தியும், ஆங்கிலமும் மட்டுமே தெரியும். ஆனால் மலையாளம் தெரியாது அவனுக்கு மூன்று நிபந்தனைகள் கொடுக்கப்பட்டிருந்தன. (i) அவனுக்குத் தேவையான பணத்தை அவனே உழைத்து சம்பாதிக்க வேண்டும் (ii) ஒரு வாரத்திற்கு மேல் ஒரே இடத்தில் பணிபுரியக் கூடாது (iii) தகப்பனாரின் பெயரையோ தொலைபேசி எண்ணையோ அந்த ஏழாயிரம் ரூபாயையோ பயன்படுத்தக் கூடாது. இந்த நிபந்தனைகளுடன் தங்குவதற்கு இடம் தேடுகிறார், கிடைக்கவில்லை. சாலையோர உணவகங்களில் 10ரூபாக்கும் 20ரூபாக்கும் உணவருந்துகிறான். அவனை யாரும் சேர்த்துக் கொள்ளவில்லை. ஒரு வாரம் கழித்து ஒரு hotel-ல் waiter-ஆகப் பணிபுரிகிறான். அங்கே எச்சில் தட்டை எடுக்கிறான், மேஜை துடைக்கிறான், அவமானப்படுகிறான். ஒவ்வொரு இரவும் அவனுக்குப் போராட்டமாகவே கழிகிறது. ஒருவேளை உணவிற்கு இந்தச் சமூகம் படும் கஷ்டத்தைப் புரிந்து கொள்ளுகிறான். இந்தச் சமூகத்தில் இருக்கும் பல்வேறு மக்களைப் பார்க்கிறான். அந்த hotel-ன் வாடிக்கையாளர் ஒருவர்

இவனது தோற்றத்தையும், இவனது ஆங்கில உச்சரிப்பையும் கண்டு இவனுக்கு, தான் பணிபுரியும் IT துறையில் வேலை தருவதாகச் சொல்லுகிறார். இதற்குள் 30 நாட்கள் முடிவுற்றது. அதன் பின் குஜராத்திலிருந்து ஒரு குழுவினர் வந்து அவனை அழைத்துச் சென்றனர்.

அந்த இளைஞனின் பெயர் திரவ்யா (Dravya). இவரது தந்தை குஜராத் மாநிலத்தைச் சார்ந்த வைர வியாபாரி சாவ்ஜி தோலக்கியா (Savji Dholakia). அவர் தன்னுடைய மகன் வாழ்க்கையைக் குறித்து புரிந்துகொள்ள வேண்டும். ஏழைகள் வேலை வாய்ப்பு பெறவும், உழைத்துச் சம்பாதிக்கவும் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியுள்ளது என அவன் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே இத்தனை நிபந்தனைகளுடன் கேரளாவிற்கு அனுப்பியதாகச் சொன்னார்.

இந்த வைர வியாபாரி தன் மகனை அனுப்பியதும் மகன் சவாலை ஏற்றுக்கொண்டு தன்னுடைய எல்லா முதன்மையையும் துறந்து இங்கு வந்ததும் ஒரு குறுகிய காலம் (30 நாட்கள்) மட்டும் தான்.

இப்படி தன்னுடைய முதன்மைகளை எல்லாம் ஒவ்வொரு கிறிஸ்தவரும் நாள்தோறும் துறக்க வேண்டும். ஆகவே, லூக். 9:23-ல் ஆண்டவர் இயேசுகிறிஸ்து “தன்னலத்தை துறந்து” தன் சிலுவையை எடுத்துக்கொண்டு நாள்தோறும் தம்மைப் பின்பற்றக் கற்றுத்தருகிறார்.

பழைய ஏற்பாட்டின் பாடமான யோவேல் 2:12-20 வரையுள்ள பகுதியில் அச்சம் தரக்கூடிய ஆண்டவரின் நாளின் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள ஆண்டவர் அழைக்கிறார். அவ்வழைப்பில் மனமாற்றமும், நோன்பும் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன.

யோவேல் இதயத்தைக் கிழித்து ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள் என்கிறார் (2:13). எபிரேய உளவியல் கருத்துப்படி இதயம் ஒருவரது விருப்பத்தைக் காட்டும் ஊடகமாகும். இதயத்தைக் கிழித்து என்பது நம்முடைய மனப்பாங்கு, சிந்தை, பழக்கவழக்கங்கள் ஆகியவை அறம் சார்ந்து மாற்றம் பெற வேண்டும் என்பதாகும்.

இந்த அழைப்பு எல்லோரையும் உள்ளடக்கியது. முதியோர், பிள்ளைகள், பால்குடிக்கும் குழந்தைகள், புதிதாக திருமணமான தம்பதியர் என எல்லோருக்கும் அழைப்பு தரப்படுகிறது. பொதுவாக, மேற்சொன்ன மூன்று சாராரும் சமூகப் பணிகளில் ஈடுபடுவதில்லை. குறிப்பாக, அந்நாட்களில் புதிதாக திருமணமானோர் சமூக பணியினின்று ஓராண்டு தங்களை விலக்கி கொள்வர். ஆனால், இங்கு அவர்களுக்கும் கூட நோன்பு அழைப்பு கொடுக்கப்படுகிறது (யோவே. 2:16).

ஆண்டவர் தரும் அழைப்பில் இதுகாறும் உலகு சார்ந்தவைகளை முதன்மையாக எண்ணிக் கொண்டிருந்த நீங்கள் இறை அருளையும், இறை ஆசியையும் பெற மனமாற்றத்தையும், நோன்பையும் முதன்மையாக கொள்ளுங்கள் என்கிறார். எனவே, ஆண்டவரிடத்திலிருந்து மேலானவைகளை அடைவதற்கு இந்த உலகத்தில் முதன்மையானவைகளைத் துறக்க வேண்டும்.

## *2. முழுமையாகத் துறத்தல்* :

எனவே, இனி வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் (கலா. 2:20).

திருத்தூதுவரான பவுல் தன்னுடைய அடையாளத்தைத் துறந்து கிறிஸ்துவைத் தனக்கு ஆதாரமாகவும், அடிப்படையாகவும் கொள்கிறார். தன்னை கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டவராகவும் கிறிஸ்துவை தன்னில் வாழ்பவராகவும் காட்டுகிறார். இது பவுலுடைய முழுமையான ஒப்படைப்பைக் காட்டுகிறது.

இரண்டு விதமான சோதனைகள் கிறிஸ்தவ வாழ்வில் வருவதுண்டு. (i) கடவுளுக்கு ஏற்புடையவர் என்னும் நிலையை அடைய நாமே முயல்வது (ii) நம்முடைய வாழ்வில் நாம் அடைந்திருக்கும் உயரங்களை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து அவர்களுடைய குறைகளை முன்வைத்து நம்மை மேன்மையானவர்களாகக் கருதிக் கொள்வது.

ஆனால், தூய பவுல் கடவுளுக்கு ஏற்புடையவராவதும், கடவுளிடமிருந்து மேன்மைகளைப் பெறுவதும் நம்முடைய நன்னலன்களால் அல்ல. கடவுள் கிறிஸ்துவின் வாயிலாக நம்மீது பொழிகின்ற அவரது அருளாலேயே சாத்தியமாகின்றது என்கிறார்.

எனவே, பவுலைப் போல கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்ட அனுபவமும், கிறிஸ்து நம்மிலே குடிகொள்கின்ற, நம்மை ஆட்கொள்ளுகின்ற அனுபவமும் நமக்கு வேண்டும். இதற்கு தூய பவுலே நமக்கு சிறந்த முன்மாதிரியாக திகழ்கின்றார். ஏனெனில், கிறிஸ்துவைப் பற்றிய அறிவே அவர் பெற்ற ஒப்பற்ற செல்வமாக இருந்தது.

அவர் கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள மற்ற எல்லாவற்றையும் இழந்தார். அவற்றை (கல்வி, செல்வம், புகழ்) குப்பையாகக் கருதினார் (பிலி. 3:8,9).

ஒரு மனிதர் ஒவ்வொரு நாளும் பின்வருமாறு இறைவேண்டல் ஏறெடுத்தார், “ஆண்டவரே நான் சுமக்கும் சிலுவை கனமானது, கடினமானது. எனவே இதை நீர் என்னிடமிருந்து அகற்ற வேண்டும்”.

ஒருநாள் ஆண்டவர் இம்மனிதரை விசாலமான ஓர் அறைக்குள் அழைத்துச் சென்று இவர் இதுவரை சுமந்த வந்த சிலுவையை, ஏற்கெகவே அங்கு வைக்கப்பட்டிருந்த சிலுவைகளோடு இறக்கி வைக்கச் சொன்னார். பின்னர், இலகுவான, எளிதான ஒரு சிலுவையைத் தேர்வு செய்யச் சொன்னார்.

ஒன்றைத் தூக்கிப் பார்த்தார். அது அதிக கனமாக இருந்தது. மற்றொன்று கனமற்று இருந்தது. பிறிதொன்று சிறியதாக இருந்தது. நீண்ட தேடுதலுக்குப் பிறகு ஒரு சிலுவையைத் தெரிவு செய்தார்.

இது உனக்குப் போதுமானதா? என ஆண்டவர் கேட்டார். ஆம், இது எனக்கு போதுமானது என்று பதிலளித்தார் அம்மனிதர். எந்தச் சிலுவையை வேண்டாம் என்று என்னிடம் வேண்டிக்கொண்டாயோ அதே சிலுவையைத் தான் நீ இப்போது தெரிவு செய்துள்ளாய் என்றார் ஆண்டவர். சிலுவை தன்னல மறுப்பின் சின்னம் என்பதை புரிந்து கொண்டார் அம்மனிதர்.

பேராயர் ஃபுல்டன் ஷீன் கூறுகிறார், “No nation, as no individual even achieves anything worthwhile except through sacrifice and self denial”.

இயேசு கிறிஸ்து நம்மில் வர வேண்டுமென்றால், நம்மில் குடிகொள்ள வேண்டுமென்றால் நமக்கு இலாபமாய் கருதுபவைகளை எல்லாம் முழுமையாகத் துறந்து நம்மை கிறிஸ்துவுக்கு ஒப்படைக்க வேண்டும்.

இந்தத் தவக்காலத்திலே சிலுவை தன்னநலத்தை துறக்கத் தரும் அழைப்பை ஏற்று உலகில் நாம் முதன்மையாகக் கருதுபவைகளை முழுமையாகத் துறந்து இயேசு கிறிஸ்துவையே நம்வாழ்வில் முதன்மையாகவும் முழுமையாகவும் கொள்வோம்.

திரு. **அ. கால்வின் தேவநேசன்**

18-02-2018

**உயிர்ப்புக்கு முன்வரும் ஆறாம் ஞாயிறு & தவக்கால முதலாம் ஞாயிறு**

# தொடக் கூடாதவரைத் தொடுதல்
# TOUCHING THE UNTOUCHABLE

2 அர. 5:1-10 எபி. 13:8-17
தி.பா. 10:1-12 மத். 8:1-4

**"...நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்குக!"** மத். 8:3

இந்நாட்களில் தங்களிடம் ஏற்படும் அவல நிலைமைகளை எண்ணி வருந்துவோரும், நம்பிக்கையற்றோரும், வெறுப்படைந்தவர்களும் ஏராளம் உண்டு. நான் ஏன் பிறந்தேன்? நான் இவ்வுலகத்துக்குப் பாரமாக இருக்கிறேனா? ஏன் இந்த நோய்? மனம் வாடிப் போகிறார்கள். உலக வாழ்வுக்கான பொருள் உண்டு, செல்வாக்கு உண்டு, மற்றவர்கள் மத்தியில் மதிப்பு உண்டு. ஆனால் வாழ்வை எதிர் கொள்ள வலுவில்லை. இந்த தவக்காலத்தில் இயேசுவை சந்திக்க வந்த தொழுநோயாளியின் தன்னம்பிக்கை நம்மை மாற்றுருவாக்கம் செய்ய வேண்டும். இயேசு கிறிஸ்து இவரை நோயாளியாக சந்திக்கவில்லை. ஆனால் இறை சாயலாக உருவாக்கப்பட்ட மனிதனாகப் பார்த்து வாழ்வு கொடுத்து சாட்சியாக்கினார்.

## *1. உரையாடு* :

2 அரச. 5:4 இஸ்ரயேல் நாட்டைச் சார்ந்த சிறுமி இன்னின்னவாறு கூறுகின்றாள்...

இஸ்ரயேல் சிறுமி என்று பெயர் கூட குறிப்பிடப் படாத சிறுபெண் புத்தியாய், சாட்சியாய், நம்பிக்கையாய் தன் தலைவியிடம் மனம்விட்டு பாசமாய் உரையாடினாள். தன்னைப் போல நேசிக்க கற்றுக் கொண்டு இருக்கும் இன்றைய சமூகம் தன்னிடம் அடிமைப்பணி, வேலைக்காரப்பணி செய்யும் நபர்களிடமும் மனம் விட்டு பேசும் நற்செயலைக் காண்கிறோம். ஒரு தொழு நோயாளியுடன் இல்லறம் நடத்தும் துணையின் அன்பு செயல் காண்கிறோம். இவ்வுலகில் தொட்டும் பேசக் கூடாத தீட்டு நிறைந்த உலகில் ஜாதியைக் கூறி, சமயத்தைக் கூறி பொது கிணறு பொது சாலை மறுக்கப்படும் இந்நாட்களில் வைக்கப்பட்டு இருக்கின்றோம். கிறிஸ்துவுக்கு முன் பல காலத்திற்கு முன் உரையாடல் வழியாக சமூகம் இணைக்கப்பட்டு இறை நம்பிக்கை செயலாக்கம் பெறுகின்றது.

இருவர் உரையாடும் போது ஒருவர் குறையுடையோர் அல்லது வியாதியுடையோர் என்றால் சமத்துவம் வெளிப்படுகின்றது. இன்று

கிறிஸ்தவம் விரும்பும் சமத்துவம் ஏற்பட அகக் கண்கள் திறக்கப்பட வேண்டும். அக உணர்வுகள் ஒளியேற்றப்பட வேண்டும். வியாபார நோக்கில் செயல்படும் ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபைகள் கட்டிடங்கள் கட்டி வியாபார நோக்கில் செயல்படுகின்றன. மேலும் Fund Raising வியாபாரம், நிர்வாக வியாபாரம் போன்றவற்றில் கவனம் கொண்டு இயேசு கிறிஸ்துவின் உரையாடல் எவ்வளவு அர்த்தமுள்ளது, பயனுள்ளது என்பதை மறந்து இவ்வுலக மதிப்புக்கு சாட்சிகளாயினர்கள். ஒரு தொழு நோயாளி ஏறெடுக்கும் உரையாடலை ஏற்றுக் கொண்டார். தவக்காலம் நம் உரையாடல் வழியாக இறை அன்பு வெளிப்பட ஆற்றல் படுத்தப்பபட வேண்டும்.

## *2. உறவாடு* :

மத். 8:3 இயேசு தம் கையை நீட்டி அவரைத் தொட்டு...

தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இழந்த உடையை அணிந்து, தலை வாராமல், மேலுதட்டை மறைத்து தீட்டு தீட்டு என குரலெழுப்பி செல்ல வேண்டும். அவர்கள் பாளையத்துக்கு வெளியே தனியாக வாழ்வார்கள். (லேவி. 13:46) இயேசுவைக் கேள்விப்பட்டு, மலை அருள் பொழிவு கேட்டு காத்திருந்து இயேசுவிடம் பணிந்து உரையாடுகின்றார். ஆண்டவரே நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும் என்றார். இங்கே ஒதுங்கி நின்று அபயக் குரல் எழுப்பும் மனிதரைக் கண்டு அவர் வார்த்தையைக் கேட்டு உணர்ந்து இதுவரை யாரும் செய்திராத உறவை வெளிப்படுத்துகின்றார். நீ தனிமையல்ல உன்னுடன் நான் இருக்கிறேன் என்று அவரைத் தொட்டு உறவை வெளிப்படுத்துகின்றார். இங்கே தொடுதல் என்ற வார்த்தைக்கு அணைத்தல் என்று பொருள் தரப்பட்டு இருக்கின்றது. இயேசு அவரை அணைத்துக் கொண்டு அன்பு பாராட்டி அவர் விருப்பப்படியே நலமளித்தார்.

இயேசு கிறிஸ்துவின் இச்செயல் சமூக அடிமைத் தனத்தை மாற்றும் செயல். பழைய ஏற்பாட்டு சட்டத்தினால் ஒதுக்கப்பட்டவன் இயேசு கிறிஸ்துவினால் அரவணைக்கப்படுகின்றான். வெந்துபோன உடலோடு, நொந்துபோன உள்ளத்தோடு வந்தவரிடம் உறவை வெளிப்படுத்தினார். தவக்காலம் இடைவிடாது ஆராதித்து தூய பல காரியங்களை வெறுத்து, உடன் வாழும் மக்களிடம் இருக்கும் வெறுப்போடு வாழுகின்ற காலங்கள் அல்ல மனிதத் தன்மை நிறைந்த வாழ்வுக்கு முன்மாதிரி இயேசு வாழ வேண்டும். அவர் நம்மில் வெளிப்பட வேண்டும். நம்மில் கொண்டு இருக்கும் பெருமை, அகம் பாவம், ஆணவம் பிறர்

கரிசனை இன்றி செயல்படுகிறது, பதவி மோகம் இவைகள் உறவுக்கு தடை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். பாவ குஷ்டம் உடையவர்களாக வாழும் நமக்கும் சிலுவை இரத்தம் விடுதலை தருகின்றது என்பதை உணர்ந்து உறவுக்காக ஏங்கி வாழ்வின் விளிம்பில் இருக்கும் மக்களுக்கு உள்ளுணர்வினால் உறவு ஏற்பட அர்ப்பணிப்போம்.

### *3. உருவாக்கு* :

எபி. 13:13... பாளயத்தை விட்டு வெளியேறி அவரிடம் செல்வோம்.

ஆன்மீக மணம் வீசும்படியான தவக்காலத்தில் நம்மை நடத்துகின்றார். புதிய சிந்தனையில் வளர்ச்சி அடைய இயேசுவின் முன்மாதிரி வழிகாட்ட வேண்டும். இயேசுவின் தொடுதல்; வாழ்வை புத்தாக்கம் செய்தது. குருவிடம் சொல்ல முடியாதவன் ஏன் காணிக்கை கூட செலுத்த முடியாதவன் எருசலேம் குருவிடம் உரையாடும் பாக்கியம் பெற்றான். தொழு நோயாளி பிச்சை கேட்கவில்லை. இறைமைந்தன் விருப்பம் கேட்டான். இங்கே சரியான அணுகுமுறை கையாண்டார்கள். இயேசுவின் கரிசனை, அன்பு, இவ்வுலகில் வந்த நோக்கம் வெளிப்பட்டது. யூத சட்டம் தொழு நோயாளியை உடலாலும் உள்ளத்தாலும் பிரித்தது. நியாயப்பிரமாண நிறைவேறுதலாக இயேசு வந்து பாளயத்துக்குப் புறம்பே பாடுபட்டு நிந்தையை சுமந்தார். இந்த இயேசுவின் தொடுதல் புது உருவாக்கம் வெளிப்படுத்தியது. இயேசுவிடம் மன்றாடுவோர், அவரிடம் அடைக்கலம் புகுந்தோர் அவரது கருணையால் மாபெரும் மாற்றம் காணலாம். கருணை அன்பின் உயர்ந்த மேன்மையின் வெளிப்பாடு. கருணை ஆழமானது உதட்டளவில் இரக்கப்படுபவர்களாகவோ அன்பின் வார்த்தைகளால் வசீகரிக்கப்படுபவர்களாகவோ அல்ல இதய அளவில் ஈரமுள்ளவர்களாக காணப்பட வேண்டும்.

இந்நாட்களில் இயேசு பேதுரு அடிகளாரிடம் எதிர்பார்த்த திருச்சபை வேண்டும். இறை அரசை எதிர்பார்க்கும் நம் வாழ்வில் மதிப்பற்றவர்களாக இருக்கும் மனிதர்கள் மதிப்புடையோராக ஆக்கம் பெற அழைக்கப்படுகின்றோம். தங்கள் சுயத் தேவைகளுக்காக, சுய சுகத்திற்காக பாசாங்கு செய்பவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும். பேதுரு அடிகளாரிடம் பிறரிடம் கரிசனை கொண்டு வாழ மூன்று முறை கேட்டார் என்னை நேசிக்கின்றாயா உள்ளான உணர்வு பேதுருவில் வெளிப்பட்டது. இயேசு நமக்கு தந்து இருக்கும் பணி, வாழ்வு ஒதுக்கப்பட்டவர்கள், உள்ளம் உடைந்தோர், துயருற்று அழுவோர், ஏழைகள் போன்றவர்களிடம் உரையாடி, உறவாடி கிறிஸ்துவில் உருவாக்கம் பெற நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. T. **ஜாண் பீற்றர்**

25-02-2018

**உயிர்ப்புக்கு முன்வரும் ஐந்தாம் ஞாயிறு & தவக்கால இரண்டாம் ஞாயிறு**

# வாழ்வைக் காக்கும் நம்பிக்கை

# LIFE SAVING FAITH

2 அரச. 4:1-7 திப. 5:12-16
திபா. 72 லூக். 5:17-26

**"நேர்மையுடையோர் தம் நம்பிக்கையால் வாழ்வு அடைவர்."**
**உரோ. 1:17**a

வாழ்வைக் காக்க நாம் இன்று பல வழிகளை நாடுகிறோம். போர்சேவகன் தன்னைக் காத்துக் கொள்ள போர்கவசங்களை அணிகிறான். தலைவர்கள் தங்களைக் காத்துக் கொள்ள காவலாளிகளை வைத்துக் கொள்கிறார்கள். நாம் நமது உடமைகளை காத்துக் கொள்ள பெட்டகங்களை பயன்படுத்துகிறோம். நோயிலிருந்து நம்மைக் காக்க மருந்துகளை உட்கொள்கிறோம். இந்த காவல் ஒன்றும் முழுமையான காவல் அல்ல. அன்னை இந்திரா, அவர்களின் காவலாளியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இன்று நம்மை காப்பது இறைவன் இயேசு. அவர் மேல் கொள்ளும் நம்பிக்கை "கடவுள் என்னை காத்துக் கொள்வார்" நம் வாழ்வின் ஆணிவேர் நங்கூரம் இறையேசு மீது கொள்ளும் நம்பிக்கை ஆகும். நாம் தரிசித்து நடக்கிறவர்கள் அல்ல. மாறாக விசுவாசித்து வாழ்கிறவர்கள் (2கொரி. 5:6). நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி (எபி. 11:1). அவரது மாட்சிமையில் நாம் பெறும் மேன்மை (யோவா. 11:4) என்பவையாகும். இறை நம்பிக்கை நம்மை எப்படி காக்கும் என்பதை கொடுக்கப்பட்ட திருமறைப் பகுதிகள் வழியாக தியானிப்போம்.

## ***1. நல்வழிகாட்டும் நம்பிக்கை*** : (2அரச. 4 : 7)

எலிசா இறைவாக்கினரின் திருப்பணிக் காலத்தில் ஓர் ஏழை கைம்பெண்ணின் வாழ்வில் நல்வழிகாட்டி நம்பிக்கை ஏற்படுத்தினார். அதாவது, ஏழை கைம்பெண்ணோ கடன் சுமையோடு இருந்து, தன் வாழ்வில் தன் பிள்ளைகளின் வாழ்வில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலையை பகிர்ந்தாள் இறைவாக்கினரிடம். வாழ்க்கையே வெறுத்து போய் உயிரை மாய்த்துவிடலாம் என்ற வெறுப்பின் உச்சக்கட்டத்தில் தான் அந்த பெண்மணியை, எலிசா இறைவாக்கினரின் வார்த்தைகள் நம்பிக்கைக்கு நேராக நடத்துகிறது. பாத்திரங்களில் எண்ணெய் நிறைய செய்து மாபெரும்

அற்புதத்தை நிகழ்த்தி, எண்ணெயை விற்று கடனைத் தீர்க்கச் சொல்லி நல்வழி காட்டுகிறார் இறைவாக்கினர்.

மானிட மாந்தரின் வாழ்விலும் கசப்பான கைவிடப்பட்ட நிலைப்பாடுகள் வரும்போது இறைவனை சார்ந்து அவர் வாக்கை நம்பும் போது நல்வழி நம் வாழ்வில் பிறக்கிறது. "ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கைக் கொள்ளும்; அப்பொழுது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்" (திப. 16:31) என்கிறார் பவுல். எனவே ஆண்டவரில் நம்பிக்கைக் கொண்டு, நல்வழியைக் கண்டு இறையாசிப் பெறுவோம்.

### ***2. நலமருளும் நம்பிக்கை*** : (லூக். 5 : 20)

"நலமான வாழ்வு" என்பது மனிதரால் அதிகம் விரும்பப்படுகிற, எதிர்பார்க்கப்படுகிற வாழ்வு ஆகும். ஏனெனில் நாளுக்கு நாள் புதிய புதிய நோய்கள் பரவி மனிதனின் நம்பிக்கையைச் சீர்குலைக்கின்றன. நீடிய ஆயுளை இழக்க செய்கின்றன. ஆனால் இவற்றின் மத்தியிலும் மனிதன் "நலமருள்பவர் கடவுள்" என்ற நம்பிக்கையில் உறுதியோடு செயல்பட வேண்டும். லூக். 5:17-26 -ல் முடக்குவாதமுற்றவருக்கு நலமருளின இயேசு கிறிஸ்துவின் அற்புதத்தைக் காண முடிகிறது. இயேசு கிறிஸ்து பிணிதீர்ப்பதற்கான ஆண்டவரின் வல்லமையை கொண்டிருந்தார் (லூக். 5:17). இந்த நம்பிக்கையோடு தான் முடக்குவாதமுற்றவரை இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு வந்தார்கள். இயேசு, நெரிசலின் மத்தியிலும் அவர்களது விடாமுயற்சி உற்று நோக்கினார். "அவர்களுடைய நம்பிக்கையால்" (லூக். 5:20) முடக்குவாதமுற்ற மனிதருக்கு நலமருளினார்.

கடவுளில் நம்பிக்கை கொள்ளும் போது நம் வாழ்வின் பிணிகள் நீங்கி நலமுடன் வாழக்கூடியச் சூழலை கடவுள் நம் வாழ்வில் ஏற்படுத்துகிறார்.

### ***3. நற்செய்தியாகும் நம்பிக்கை*** : (திப. 5 : 16)

தொடக்ககால திருச்சபையில், திருத்தூதரின் திருப்பணியும், நற்செய்தி அறிவித்தலும் மக்களை கடவுளின் மீது நம்பிக்கைக்கு நேராக வழிநடத்தியது. நற்செய்தியின் நறுமணத்தை முழுமையாக உணர்ந்தனர். ஏனெனில், நற்செய்தியால் கடவுள் மீது கொண்ட நம்பிக்கையால் திரளான ஆண்களும், பெண்களும் கடவுளிடம் சேர்க்கப்பட்டார்கள்.

எருசலேமை சுற்றியிருந்த பகுதிகளைச் சார்ந்த மக்கள் உடல்நலமற்றோரையும், தீய ஆவிகளால் இன்னலுற்றோரையும் சுமந்து

திரளாகக் கூடிவந்தார்கள் (திப. 25:16) அனைவருமே நலம் பெற்றவர்களாக திரும்பிச் சென்றனர். காரணம் என்னவெனில், பேதுரு போன்ற திருத்தூதுவரின் அர்ப்பணமுள்ள நற்செய்தி திருப்பணியும், இறைமக்களை கடவுளின் நம்பிக்கைக்குரியவர்களாக வழிநடத்தியதும் ஆகும்.

“கடவுளிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளிக்கிறார்” (யோவா. 1:12). இந்த நம்பிக்கையில், கடவுளின் பிள்ளைகள் என்ற உணர்வோடு வாழும் போது நம் வாழ்வில் கடவுள் நல்வழி காட்டுபவராக, நமக்கு நலமருள்பவராக இருந்து நற்செய்திக்கு சான்றுப் பகரும் வாழ்வுக்கு நேராக வழிநடத்துகிறார். எனவே கடவுளில் நம்பிக்கைக் கொண்டு, நல்வாழ்வை இச்சமூகத்தில் அவருக்காய் கட்டியெழுப்புவோம்.

அருள்திரு. J. **ஜெபசிங்**

04-03-2018

**உயிர்ப்புக்கு முன்வரும் நான்காம் ஞாயிறு & தவக்கால மூன்றாம் ஞாயிறு**

# இறைவேண்டலில் நிலைத்திருத்தல்

## PERSISTENCE IN PRAYER

2 அர. 20:1-11 | 1 தெச. 5:12-22
தி.பா. 116 | மாற். 7:24-30

**"இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள்."** 1தெச. 5:17

இறைவேண்டல் இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் உள்ள உன்னத உறவின் அடையாளமாகும். இறைவனோடு எப்பொழுதும் தொடர்புடையவர்களாக இருப்பதற்கு இறைவேண்டல் அவசியமாகிறது. இறைவேண்டல் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு இறைமகன் இயேசுகிறிஸ்து கற்றுத்தந்த இறைவேண்டல் நமக்கு மாதிரியாக உள்ளது. திருமறையில் தனியாகவும், பலர் இணைந்து இறைவேண்டல் ஏறெடுத்தார்கள் என்பதை படிக்கின்றோம்.

"இறைவேண்டலில் நிலைத்திருங்கள்" (உரோ. 12:12) மனந்தளராமல் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாட வேண்டும் (லூக். 18:1), காலை, நண்பகல், மாலை வேளைகளிலும் இறைவேண்டல் ஏறெடுக்க வேண்டும் (தி.பா. 55:17) என்று பல நிலைகளில் திருமறை போதிக்கின்றது. இறைவேண்டலின் வழிகாட்டியாகிய இயேசுகிறிஸ்து பல நிலைகளில் இறைவேண்டல் ஏறெடுத்தார் (மாற். 1:35; லூக். 5:15,16; லூக். 6:12; மத். 6:46; மத். 26:32; லூக். 3:29; யோவா. 11:41).

நாம் இறைவேட்லில் நிலைத்திருக்கும் போது இறைவனின் ஆசிகளைப் பெற்றுக் கொள்ளுகின்றோம். எத்தகைய ஆசிகளைப் பெறுகிறோம் என்பதை தியானிப்போம்.

### *1. நோய் நீங்கி விடுதலை* :

2அரச. 20:5 "உன் மன்றாட்டைக் கேட்டேன். உன் கண்ணீரையும் கண்டேன்."

இறைவேண்டல் நோய்களின் பிடியிலிருந்து நமக்கு விடுதலை தருகின்றது. 2அரச. 20:1-11 -ல் எசேக்கியா என்ற அரசர் நோயுற்று சாகும் தருவாயில் இருந்தார். இறைவாக்கினர் ஏசாயா அவரிடம் வந்து நீர் சாவினின்று பிழைக்க மாட்டீர். நீர் உமது வீட்டுக்காரியங்களை

ஒழுங்குபடுத்தும் என்று கூறினார். உடனடியாக எசேக்கியா அரசர் சுவர்புறமாக திரும்பி ஆண்டவரிடம் வேண்டுதல் ஏறெடுத்து கதறி அழுதார். இத்தகைய இறைவேண்டுதலுக்கு உடனே பதில் கிடைத்தது. இறைவாக்கினர் ஏசாயா வழியாக நம்பிக்கையின் வார்த்தை கிடைத்தது. அதாவது பதினைந்து ஆண்டுகளை கடவுள் நீட்டித்து கொடுத்தார். நோய் நீங்கி மகிழ்ந்தார்.

நூற்றுவர் தலைவர் ஒருவரின் பணியாளர் ஒருவர் நோயுற்று சாகும் தருவாயில் இருந்தார். நூற்றுவர் தலைவர் இயேசுகிறிஸ்துவிடம் வேண்டியதால் அப்பணியாளர் நோய் நீங்கி நலம் பெற்றார் (லூக். 7). நாமும் இறைவேண்டலில் நிலைத்திருப்போம் நோய் நீங்கி மகிழ்ச்சி பெறுவோம்.

## *2. தீய ஆற்றல்களிலிருந்து விடுதலை* :

மாற். 7:29 "....பேய் உம் மகளை விட்டு நீங்கிற்று."

இயேசுகிறிஸ்து தீரு பகுதிக்குள் சென்றார். அங்கே ஒரு வீட்டிற்குள் சென்றார். பெண் ஒருவர் இயேசு கிறிஸ்து உள்ளே இருக்கிறார் என்பதை அறிந்து உள்ளே வந்த அவர் காலில் விழுந்தார். அப்பெண்ணின் மகளை தீய ஆவி பிடித்திருந்தது. அப்பெண் ஒரு கிரேக்க பெண். அவர் சீரிய பெனிசிய இனத்தைச் சேர்ந்தவர். அவர் தமது மகளிடமிருந்த தீய ஆவியை ஓட்டி விடுமாறு வேண்டினார். இந்த பெண்ணின் நம்பிக்கையான வேண்டுதல் அவர் மகளின் தீய ஆவி விரட்டப்பட்டது. நலம் பெற்றாள்.

லூக். 8:26 இயேசு கிறிஸ்து கலிலேயாவுக்கு எதிரான கதரேனருடைய நாட்டில் கரை இறங்கின போது நெடுநாளாய் தீய ஆவியால் பிடித்திருந்த மனிதன் இயேசு கிறிஸ்துவால் பேய் நீங்கி விடுதலை பெற்றார். ஆக இயேசு கிறிஸ்துவிடம் வேண்டும் போது தீய ஆற்றல்களிலிருந்து விடுதலை தருகிறது. நமது தீய எண்ணம், தீய செயல் இவைகளிலிருந்தும் நாம் விடுதலை பெறுகிறோம்.

அன்புக்குரியவர்களே! 1தெச. 5:17-ல் பவுலடியார் இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள் என்றார். நாம் இடைவிடாது வேண்டும் போது நோய் நீங்கி விடுதலைப் பெறுகிறோம், தீய ஆற்றலிருந்து விடுதலைப் பெறுகிறோம். இதை உணர்ந்து செயல்படுவோம். இறைவேண்டலில் நிலைத்திருந்து ஆசி பெறுவோம்.

அருள்திரு. J. **ஜெயக்குமார்**

11-03-2018

**தவக்கால நான்காம் ஞாயிறு &**
**உயிர்ப்புக்கு முன்வரும் மூன்றாம் ஞாயிறு**

# விடுவிக்கும் உண்மையான வழிபாடு
# TRUE WORSHIP THAT LIBERATES

விி. ப. 3:11-18 திப. 16:25-34
தி.பா. 137 லூக். 13:10-17

***“...இந்தக் கட்டிலிருந்து இவரை ஒய்வுநாளில் விடுவிப்பது முறையில்லையா?....”*** **லூக். 13:16**

உண்மையான வழிபாடு என்பது இறைவனின் திருப்பீடத்தில் நாம் படைக்கும் வாடா மலர்கள் போன்றவை. உண்மையான வழிபாடு என்பது உண்மையான வாழ்க்கையினின்று வெளிப்படுகிறது. தொழுகை வேறு வாழ்க்கை வேறு என்ற வித்தியாசம் மாய்மால வாழ்க்கைக் காரர்க்கே பொருந்தும் (ஆமோ. 8:10). தூய ஆவியார் ஒருவனுடைய உள்ளத்தில் இருக்கும்போது அவன் தூய ஆவியின் ஆற்றலால் வாழ்கிறவனாயிருப்பான் அவன் விடுதலையடைந்த வாழ்வையே கொண்டிருப்பான் ஆண்டவரின் ஆவியார் இருக்குமிடத்தில் விடுதலையுண்டு (2கொரி. 3:17). உண்மையான வழிபாடு தரும் உண்மை விடுதலையின் அனுபவங்களை இந்நாளின் திருமறை பாடங்கள் வழி சிந்திப்போம்.

## *1. உண்மை வழிபாடு கட்டுண்ட நாட்டை விடுவிக்கும்* :

இஸ்ரவேலர்கள் எகிப்தில் பலுகி பெருகி ஏராளமாய் காணப்பட்டார்கள் நாடு அவர்களால் நிறைந்திருந்தது (விப. 1:7) அவர்கள் எகிப்தில் ஓர் தேசமாகவே வாழ்ந்தனர். வாழ்க்கை பாதையில் அவர்கள் அடிமைகளாக மாறினர் (விப.1:14). துன்பசூழலில் அவர்களின் ஆராதனையின் சத்தம் தேவ சமூகம் வந்தெட்டினது அவர்களின் வாழ்வின் அவசரத்தேவையின் காரணத்தையும் அவர் அறிந்திருந்தார் (விப. 1:9).

மோசே ஒரு இஸ்ரயேலனாகப் பிறந்தாலும் ஒரு எகிப்தியனாக வாழ்ந்தார். எகிப்தியனாக வாழ்ந்தாலும் இஸ்ரயேலன் என்ற இன உணர்வை கொண்டிருந்தார். எனவே யாவே கடவுளை ஆண்டவராக வழிபடும் அளவிற்கு கற்பிதங்களோ, அனுபவங்களோ, அவர்களுக்கு இல்லை. ஆண்டவர் தம்மை யார் என்று எரியும் முட்செடி வழி வெளிப்படுத்த வேண்டியதாயிருந்தது.

ஆனால் இஸ்ரவேலர்களோ தலைமுறை தலைமுறையாக ஆண்டவரை தொழுது கொண்டிருப்பவர்கள். அவர்களின் தொழுகை அவர்களின் விடுதலையின் தேவையை உணர்த்தியது. ஆண்டவர் தந்த விடுதலை என்பது அடிமை நாட்டவராக வாழ்ந்தவர்கள் விடுதலைபெற்ற நாட்டவராக வாழ்ந்ததாகும்.

இஸ்ரயேலரின் உள்ளம் செங்கடலுக்கு இப்புறம் வந்தபின்னும் எகிப்தையே சுற்றி சுற்றி வந்தது. உணவிற்கும் தண்ணீருக்கும் முறு முறுத்தார்கள். உள்ளத்தில் தாழ்மையும், நன்றியுணர்வும் கொண்டிருப்பதற்குப் பதிலாக கோபமும் வெறுப்பும் கொண்டிருந்தனர். மோசே ஒரோப் பர்வதம் சென்றுவர தாமதமானபோது பொற்கன்றுக் குட்டிகளை செய்து தொழுகை செய்து மகிழ்ந்தார்கள். இவர்கள் உண்மையான விடுதலையை அடைய முடியாமல் வாழ்வை கடைசிவரை அடிமைத்தனத்தில் நடத்தினார்கள். ஆனால் கடவுளில் நம்பிக்கை கொண்டு அவரை உண்மையுடன் தொழுது வாழ்ந்த யோசுவாவும் காலேப்பும் அடிமைத்தன பூமி என்றும், துன்பங்களின் பூமி என்றும் சிறப்பிக்கப்படும் எகிப்தினின்று வாக்குத்தத்தபூமி என்றும், வாய்ப்புகளின் பூமி என்றும் வர்ணிக்கப்படும் கானான் நாட்டின் பிரவேசித்தனர். உண்மையான விடுதலை உலகம் சார்ந்ததல்ல மாறாக உண்மை வாழ்வு சார்ந்தது அது உள்ளம் சார்ந்தது.

### *2. உண்மை வழிபாடு கட்டுண்ட சமூகத்தை விடுவிக்கும்* :

(திப. 16:25-34)

இயேசு கிறிஸ்துவின் சீடர்களின் தொழுகை வாழ்க்கை, முடங்கிப்போன பலரின் வாழ்வில் விடுதலை தந்தது. பேதுருவும் யோவானும் ஆலயம் செல்லும் வழியில் செய்த விடுதலைப் பணி (திப. 3:6,7) இதற்கு ஒரு சான்று.

தூய பவுலடிகளார் நிரம்ப கற்றறிந்த அறிஞர் என்றாலும் அறியாமை சிறையில் அடைந்து அநியாய வாழ்க்கை வாழ்ந்தவர் (திப. 8:1; 9:1,2). அவர் ஆண்டவரால் சந்திக்கப்பட்ட பின் (திப. 9:1). ஆண்டவரை அறிந்து ஆராதித்தார். நற்செய்தியின் பொருட்டு, சீலாவோடு சிறையிலடைக்கப்பட்டபோது துயரங்களின் மத்தியிலும் ஆண்டவரைத் தொழுது கொண்டார். (தி.பா 42:8). இதற்கு முன் இவர்களின் உண்மை வாழ்க்கையை இந்த சிறை அதிகாரி அறிந்திருந்தான் (அப். 5:18-20;12:3 -11; 16:17). இப்போது நேரடியாக அவர்களின் உண்மை வாழ்க்கையை பார்க்கும் வாய்ப்பை பெற்றான். அது அந்த சிறை சாலை அதிகாரியை

கவர்ந்தது இந்த அதிகாரியின் இந்த அனுபவங்கள் அவரை மீட்புக்கு நேராக நடத்தியது சிறை பட்டோரையும் விடுவிக்கவும் வந்தேன் என்ற இயேசுவின் அருட்பணியில் (லூக். 4:18). அறியாமை சிறையில் வாழ்ந்த பவுல் மாதிரமல்ல சிறைப்பணியாளரான சிறை அதிகாரியும் மீட்புக்குள் வழிநடத்தப்பட்டனர் (அப். 16:30,31) (யோவா. 4:29,30).

ஒஸ்கார் செர்வன்றிஸ் என்ற புகழ்பெற்ற நற்செய்தியாளர் தன் இளமைக்காலத்தில் 17 கொடிய குற்றங்களுக்காக சிறை தண்டனை அனுபவித்தார். சிறையின் உளவியல் நிபுணர்கள் அனைவரும் கொடுத்த அறிக்கையானது ஒரே கருத்தை சுட்டிக்காட்டியது. அது ஓஸ்காரின் குணத்தை எவ்விதத்திலும் மாற்ற இயலாது என்பதாகும்.

ஒருதடவை சிறையிலிருந்து விடுதலையான போது வயதுமுதிர்ந்த ஒரு நற்செய்தியாளர் அவனிடம் இயேசுவைக் குறித்து கூறினார். அதைக்கேட்ட ஓஸ்கருக்கு மனம்திரும்புதல் உண்டானது. பிற்காலத்தில் அவர் புகழ்பெற்ற ஒரு சிறை அருட்பணியாளராக மாறினார். புகழ்பொற்ற சிறை சிற்றாலயப் போதகரான H.C. வார்விக் என்பவர் அவரைக் குறித்து இவ்விதமாக எழுதினார். ஓஸ்கர் சிறைக்கு வருகிறார் என்று அறிந்தால் அன்று ஓஸ்கர் இரவு என்று சொல்வதுதான் சரி என்று குறிப்பிட்டார். ஓஸ்கர் அனுபவங்களை குறித்து கூறுவார். சிறைவாசிகளுக்கு அவைகள் விருப்பமான செய்திகளாயிருந்தது. ஓஸ்கரின் சிறை அருட்பணியின் நிமித்தம் ஏராளம் சிறை கைதிகள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டனர் (யோவா. 1:12).

### *3. உண்மை வழிபாடு கட்டுண்ட தனிமனிதரை விடுவிக்கும் :* (லூக். 13:10-17)

18 வருடமாக பெலவீனப்படுத்தும் ஆவியால் துன்புற்ற ஒரு பெண் தன் உண்மை நிலையோடு (நிமிரக் கூடாதநிலை) ஆண்டவரிடம் வந்தார் அதை இயேசு காணவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் வந்தார். அவரைப் பின்பற்றுபவர்கள் தங்கள் துன்பங்களோடு தன்னிடம் வர வேண்டும் என்ற இயேசுவின் எதிப்பார்ப்பை நிறைவேற்றினார் (மத். 16:24). நம்பிக்கையோடுள்ள புலம்பலின் சத்தத்தை அவர் கேட்டு மனிதரை விடுவிக்கிறார் (மாற். 10:46-52). அவரை பின்பற்றுபவர் அவர் தரும் விடுதலைக்கு தகுதியுடையோராய் நடந்துகொள்ள வேண்டியது அவசியம் (மத். 10:38).

யூதர்கள் தங்கள் செயல்களில் மாய்மாலங்களோடு அவரைப் பின்பற்றுகையில் (லூக். 12:54; 13:21) இந்த பெண்மணி உண்மையுடன் (நிமிரக்கூடாத) இயேசுவை பின்பற்றினார் இதை கூறிய இயேசு அவளை விடுவித்தார் (லூக். 13:16).

சாத்தானின் உணர்வைக் கொண்டிருப்பவர்களே மாய்மாலக்காரர்கள். கடவுளைக் குறித்த பக்தி நிலை கொண்டிருந்து சாத்தானின் பெறாமையின் விளைவாகிய நிமிரடக்கூடாத பெலவீனத்தை அவர் கொண்டிருந்தாலும் அவள் ஆபிரகாமின் மகளே என சிறப்பிக்க இயேசு தயங்கவில்லை. குலமுதுவராகிய ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன் என உலகம் அறிந்திருந்தாலும் அவர் உலக பிரகாரமான நிலையில் குழந்தை இல்லாதவர். அவருடைய உண்மை வாழ்க்கையும், பின்பற்றுதலும், தொழுகையும் அவர் குழந்தை இல்லாதவர் என்ற கட்டினின்று விடுவிக்கப்பட்டார். யோபு ஆண்டவரில் பற்றுகொண்டிருந்த நிலையில் வாழ்ந்த செல்வந்தர் ஒரே நாளில் ஏழையும், ஏதுமற்றவராகவும் மாறினவர்( யோ.1:22) அவர் பிற்கால வாழ்வினிலும் உண்மையும் பக்தியும் மீண்டும் வெளிப்பட்டபோது (யோவு 42:2) அவரின் இறுக்கம் நிறைந்த வாழ்வினின்று அவர் விடுதலையாக்கப்பட்டார் (யோ. 42:12).

வேல்ஸ் நாட்டில் ஏற்பட்ட ஆன்மிக எழுப்புதலைக் குறித்து செய்தி சேகரிக்க பத்திரிகை நிருபர்கள் சென்றனர். அவர்களில் ஒருவர் ஒரு காவல்துறை காவலரிடம் கேட்டார்; “வேல்ஸ் நாட்டில் எங்கே ஆன்மிக எழுச்சி ஏற்பட்டது?” காவலர் அவரை தன்னிடமாக அழைத்து நிறுத்திக்கொண்டு அவருடைய கையை தன்னுடைய நெஞ்சில் வைத்துக் கொண்டு சொன்னார், “அன்புள்ள சகோதரா, வேல்ஸில் ஆன்மிக எழுச்சி ஏற்பட்டது இந்த சீருடைக்கு உள்ளேயாகும்.” தொழுகையில் சத்தமும் கூச்சலுமல்ல உள்ளத்தில் ஏற்படும் உண்மையான மாற்றமும் விசுவாசமும் தான் ஒருவனை விடுதலைக்கு நேராக வழிநடத்தும்.

அருள்திரு. P. **சேம் இம்மானுவேல் தோமஸ்**

18-03-2018

**உயிர்ப்புக்கு முன்வரும் இரண்டாம் ஞாயிறு & தவக்கால ஐந்தாம் ஞாயிறு & Passion Sunday**

# சிலுவை : மெசியா யுகத்தின் ஒரு புதிய திருக்காட்சி

# CROSS : A NEW VISION OF THE MESSIANIC AGE

இ.ச. 18:15-22 2கொரி. 1:3-11
தி.பா. 73 லூக். 18:35-43

***"கிறிஸ்து நமக்காக மிகுதியாகத் துன்புற்றார். அதுபோல அவர் வழியாக நாம் மிகுதியான ஆறுதலும் பெறுகிறோம்."* 2கொரி. 1:5**

இஸ்ரயேல் மக்கள் மேசியாவின் வருகையை எதிர்ப்பார்த்தனர். மேசியா வரும்போது தங்கள் வாழ்வு அமைதியாகவும், சகோதர உறவோடும், போர் இல்லாத வாழ்வும், ஏழ்மையில்லாத வாழ்வும் அமையும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். கிறிஸ்துவின் சிலுவை மரணத்தோடு மெசியாவின் ஆளுகை துவங்கினது என துவக்ககால கிறிஸ்தவர்கள் நம்பினர். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் மெசியா யூகம் சிலுவையை ஒரு புதிய திருக்காட்சியாக கொண்டு மக்கள் வாழ உணர்த்துகிறது. இத்திருக்காட்சியில் சிலுவை உணர்த்தும் உண்மைகள் என்ன என்பதை தியானிப்போம்.

## *1. சிலுவை : கிறிஸ்துவின் பாடுகளில் பங்குகொள்வதன் அடையாளம்*

இயேசுவின் துன்பமாகிய சிலுவைச்சாவு பாவத்தின் தண்டனையுமல்ல, விளைவுமல்ல. இறைத்திருவுளத்தின்படி அவரே ஏற்றுக்கொண்ட துன்பம். "அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார்; நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்" என்ற ஏசாயாவின் வாக்கு சிலுவையில் நிறைவுற்றது. நாம் வாழ்வு பெறுவதற்கு சிலுவையை விரும்பி ஏற்றுக்கொண்டார். அதன் வழியாக துன்பம் ஒரு சாபமல்ல, மீட்பின் வழி என்பதை புரிய வைத்தார். "யூதருக்கு தடைக்கல்லாகவும், பிற இனத்தாருக்கு மடமையாயும்" இருந்த அவமானத்தின் அடையாளமாகிய சிலுவையில் கிறிஸ்து அறையுண்டு கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் மாற்றினார்.

பவுலடியார் கொரிந்து திருச்சபைக்கு தம் மடலில் கிறிஸ்து நமக்காக துன்புற்றார், அதுபோல நாங்களும் உங்களுக்காக துன்பப்படுகிறோம். எனவே நீங்களும் துன்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஆலோசனை சொல்கிறார் (2கொரி. 1:5,6). எனவே துன்பத்தை ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவின் பாடுகளில் பங்குகொள்ளுவோம்.

## *2. சிலுவை : நம்பிக்கையின் அடையாளம்*

சிலுவை வழியாகத்தான் இயேசு இறைமகன் என்ற உண்மை நிரூபிக்கப்பட்டது. யூதர்களுக்கு இடறலாகவும், கிரேக்கர்களுக்கு மடமையாகவும் ஆனால் நம்பிக்கையுடையவர்களுக்கு சிலுவையில் இறைமகனாகவும் இருக்கிறார் (1கொரி. 1;23). சிலுவை நம்பிக்கை இழந்த மானுடத்திற்கு நம்பிக்கை கொடுக்கும் அடையாளம். துன்பங்களினால் பிழைப்போமென்ற நம்பிக்கையற்ற சூழலில் உயிர்த்தெழச் செய்யும் கடவுளில் நம்பியிருக்க வேண்டும் என்பதற்காகவே துன்பங்களை கடவுள் எங்களுக்கு அனுமதித்தார், என கொரிந்து திருச்சபைக்கு எழுதுகிறார். துன்பம்தான் வாழ்வின் இறுதி என்றால் வாழ்வுக்கு அர்த்தமே இல்லை. மாறாக துன்பத்திற்கு பின்பும் வாழ்வு உண்டு என்பதே இயேசு கிறிஸ்துவின் போதனையாகும்.

வேதனைகளும் துன்பங்களும் வாழ்வின் வீழ்ச்சியின் அடையாளங்களல்ல, தோல்வியும் அல்ல. அவைகள் நம்பிக்கையோடு வாழ்வில் முன்நோக்கி நடக்க ஆற்றலைத் தருகின்றன. தொடக்ககால கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் மீது கொண்ட நம்பிக்கையின் பொருட்டு பல்வேறு துன்பங்களுக்கு உட்பட்டாலும் அவர்களின் இறை நம்பிக்கையினால் துன்பங்களை மேற்கொண்டு வாழ்ந்தனர். நமது நம்பிக்கை இறைவனில் உறுதியாக இருந்தால் வாழ்வில் வரும் துன்பங்கள் நமது நம்பிக்கையை அதிகப்படுத்தும். "என் வழியாய் நீங்கள் அமைதி காணும் பொருட்டே நான் இவற்றை உங்களிடம் சொன்னேன். உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின்மீது வெற்றி கொண்டுவிட்டேன் (யோவா. 16:33)" என்பதே இயேசு கிறிஸ்துவின் சவாலான போதனையாகும். இதன் வழியாக மனித வாழ்வின் ஈடேற்றத்திற்காகப் பல பரிமாணங்களை அவர் நமக்குக் காண்பித்தார்.

ஒருமுறை ஜாண் பிரொணிங் சீனாவின் மெக்காஓ கடற்கரை வழியாக பயணம் செய்து கொண்டிருந்தார். இயற்கையின் சீற்றத்தினால் கரை சேருவோம் என்ற நம்பிக்கையிழந்த அவர் தூரமான இடத்தில் அழிந்த ஒரு ஆலயத்தின் சிதறல்களை பார்த்தார். அந்த உடைவுற்ற ஆலயத்தில் ஒரு சிலுவை நிற்பதைப் பார்த்தார், நம்பிக்கையடைந்தார். இனி நான் கரைசென்று சேர்வேன் என நம்பினார். 'கிறிஸ்துவின் சிலுவையில் நான் மகிமையடைகிறேன்' என்ற பாடலைப்பாடினார். அதுவே அவரின் வாழ்வின் அடித்தளமாக மாறியது. அவருடைய கல்லறையிலும் இந்த வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது [In the cross of Christ I glory].

## *3. சிலுவை : புது உறவின் அடையாளம்*

மனித உறவில் தான் இறைஉறவு வளர்கிறது என்பதே சிலுவை உணர்த்தும் ஆன்மிக சிந்தனை ஆகும். "மனித உருவில் தோன்றி, தம்மையே தாழ்த்திச் சாவை ஏற்குமளவிற்கு, அதாவது சிலுவைச்சாவை ஏற்குமளவிற்கு தன்னையே தாழ்த்திக் கொண்டார்" என பவுலடியார் பிலிப்பி திருச்சபைக்கு எழுதுகிறார் (பிலி. 2:6). இச்செயலின் வழியாக புதிய உறவிற்கு வித்திட்டார். படுமட்டமான (horizontal) மரமும், செங்குத்தான (vertical) மரமும் இணைகின்ற போது தான் சிலுவை தோற்றம் உருவாகிறது. அது முழுமை அடைகிறது. இதில் செங்குத்தாக இருக்கக்கூடிய மரம், இறைவனோடு நாம் கொண்டுள்ள உறவை வலுப்படுத்துகின்றது. படுக்கை வசமான மரம் மனிதர்களோடு நாம் கொண்டுள்ள உறவை குறிக்கிறது. இங்கு இறையுறவும் மனிதஉறவும் சங்கமிக்கின்ற போது தான் சிலுவை முழுமை அடைகிறது.

இவ்வுலகும், மனித சமுதாயமும் ஒவ்வொரு நாளும் பாவத்தில் திளைத்துக் கொண்டு இருப்பதாலும், மனிதம் தொலைந்து போனதாலும் மனிதன் சகமனிதனை நேசிக்க மறந்து போனதாலும், சுயநலம் தலை விரித்தாடுவதாலும் மனிதனின் இயல்பு வாழ்க்கை கேள்விக்குறியாகப் போய்விட்டது. பல இன்னல்களையும் உபத்திரவங்களையும் சந்தித்தே ஆக வேண்டும் என்கிற கட்டாயத்திற்குள் மனித குலம் தள்ளப்பட்டது. நாம் கடவுளின் மக்கள். அவரின் உரிமைச் சொத்து. அவருடைய உரிமைகளிலே நாம் பங்கு பெற வேண்டும். அன்றாடம் நமக்கு வரும் சிலுவைகளை ஏற்று, கிறிஸ்துவின் பாதையில் நாம் பின்தொடர வேண்டும். இயேசுகிறிஸ்துவின் மதிப்பீடுகளாம் உண்மை, நீதி, நேர்மை, அன்பு, பொறுமை ஆகியவற்றை நாம் இச்சமுதாயத்தில் வாழ்ந்து காட்டும்போது துன்பங்களும் தீமைகளும் வரலாம். அதை இறைநம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ளும் போது நாமும் கிறிஸ்துவின் துன்பத்தோடு நம்மையும் இணைத்து புது உறவை சிலுவையின் வழியாக உணர்ந்து வாழ முடியும்.

அருள்திரு. **ரமேஷ் D. தாஸ்**

18-03-2018 **HMS ஞாயிறு**

# அருட்பணியும் முன் நோக்கிய பார்வையும்

எசா. 52:1-9 1திமொ. 2:1-7
தி.பா. 113 மத். 24:1-14

**"எல்லா மனிதரும் மீட்புப் பெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் விரும்புகிறார்." 1திமொ. 2:4**

நமது திருமறையின் புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்த பதிவு ஓர் நற்செய்தி. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மற்றும் உயிர்த்தெழுதல் மீது வைக்கிற இறைபற்று அவரது இரண்டாம் வருகை மீது நம்பிக்கை வைக்க உதவுகின்றது. இந்த நம்பிக்கை நாம் தீர்மானம் எடுக்கவும், செயல்படவும் அழைக்கின்றது.

## 1. *இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் மீது வைக்கும் நம்பிக்கை அருட்பணியின் வேகத்தை அதிகரிக்கிறது* :

(a) 2பேது. 3:9 "ஆண்டவர் தம் வாக்குறுதியை..........யாரும் அழிந்து போகாமல். எல்லாரும் மனம் மாற வேண்டுமென விரும்புகிறார்" அனைவரும் மீட்கப் பட வேண்டுமென ஆண்டவர் விருப்பமுடையவராக பொறுமையுடன் இருக்கும் காலத்தில் நாம் மீட்பு பணி துரிதமாகச் செய்ய அவர் நம்மை அழைன்றார். அப். 14:30 ஏனெனில்.... ஆனால் இப்பொழுது எங்குமுள்ள மக்கள் யாவரும் மனம் மாற வேண்டும் என்று அவர் கட்டளை இடுகிறார். ஆண்டவர் உலகை நீதியுடன் நியாயம் தீர்க்க போவது உண்மை.

(b) மத். 24:14 "உலகெங்கும் உள்ள எல்லா மக்களினத்தாரும் ஏற்றுக் கொள்ளுமாறு விண்ணரசைப்பற்றிய இந்தச் செய்தி உலகமெங்கும் அறிவிக்கப்படும், அதன்பின்பு முடிவு வரும்" 'must, them' என்கின்ற வார்த்தைகள் அருட்பணியினுடைய தேவையை விளக்குகின்றது. அருட்பணியின் துரித செயல்பாடு அதற்கான வாசல் திறந்திருப்பதை பொறுத்தோ, வாய்ப்பின் அடிப்படையிலோ அல்ல மாறாக இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன் அவர் கிருபையில் நற்செய்தியை தரும் நாட்கள் வரையிலுமே என்பதை நாம் உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

(c) இந்நாட்களில் உலகில் கிறிஸ்துவின் நற்செய்தி உள்ளது. இதனால் எதிர்க்கிறிஸ்து எழும்புவதற்கான வாய்ப்புகள் அதிகம். 1யோவா. 2:18. இந்த சூழல் இறுதி காலம் என திருமறை கூறுகின்றது. எதிர்கிறிஸ்துவினால் நற்செய்தி சிதைக்கப்படும் சூழலில் நற்செய்தியின் பற்றுறுதியில் ஜனத்தை காக்க வேண்டிய பொறுப்பு அதிகரித்துள்ளது.

கிறிஸ்து அனைவரின் மீட்புக்காக தாம் பொறுமையுடன் இருக்கும் இந்நாட்களில் திருச்சபை அருட்பணிக்கான வேகம் கொள்ள வேண்டும். கிறிஸ்து தமது நற்செய்தியை தருவதை நிறுத்தும் முன் அனைவரும் இதை பெற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும். எதிர் கிறிஸ்துவின் செயல்பாடுகளால் உண்மைச் செய்தி சிதைக்கப்படுமுன் அருட்பணி அனைவரும் பெறச் செய்ய வேண்டும்.

### 2. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அழியாமலிருக்கச் செய்கின்றதும், மாற்றுருவாக்கம் செய்கின்றதுமான புது அனுபவங்களை அருட்பணியில் உருவாக்கத் துணை செய்கிறது :

(a) 2கொரி. 5:19 "உலகினரின் குற்றங்களைப் பொருட்படுத்தாமல் கடவுள் கிறிஸ்துவின் வாயிலாக அவர்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். அந்த ஒப்புரவுச் செய்தியை எங்களிடம் ஒப்படைத்தார்." அருட்பணியாளர்கள் பார்வையில் உலகம் வெறுமையாததும் பயனற்றதுமல்ல மாறாக இறைவனுடன் உலகை ஒப்புரவாக்கிய "கிறிஸ்துவால்" உவமை நிறைந்துள்ளது. இறுதி நாட்களில் கடவுளின் மீட்பு திட்டத்தின் நிறைவினை காண உலகம் ஆயத்தமாக உள்ளது ஒவ்வொரு நாளும் இறுதிநாளை மிக அருகாமையில் கொண்டு வருகின்றது உரோ. 13:11. உலகில் கிறிஸ்தவை மையமாகக் காணும் பார்வையுடன் அருட்பணி தொடர வேண்டும்.

(b) 1யோவா. 3:2 "அவர் தோன்றும் போது நாமும் அவரைப்போல் இருப்போம்." விசுவாசியின் வரும் நாட்கள் வெறுமையானதல்ல மாறாக கிறிஸ்துவின் எதிர்காலம் போல நமது எதிர்காலம் மாற்றமடையும் எபி. 13:14.

முன்னோக்கியப் பார்வையில் ஒரு மாற்றுருவாக்கம் உருவாக்கும் ஆற்றலை தருகிறது. விசுவாசிகள் தங்கள் சபையில் பிரச்சனைகளை கவனித்து நேரம் செலவிடுவதை விட உலக அளவில் மனிதர்கள் மத்தியில் தேவையான மாற்றுருவாக்கத்திற்கு முதலிடமளிக்க வேண்டும். உரோ. 15:7; 1யோவா. 3:14; கலா. 6:2. நமது வரும் நாட்கள் ஓர் வாய்ப்பினை இன்று நமக்கு தருகின்றது அது யாதெனில் "நாம் ஒருவரையொருவர் அறிந்து கொள்வது" 2கொரி. 5:16,17.

அருட்பணியினை, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் செய்தியின் அடிப்படையில் நிறைவேற்ற அழைக்கப்படுகிறோம். உலகின் மையத்தில் கிறிஸ்துவை பார்க்கும் பார்வை, அனைவருக்கும் மாற்றுருவாக்கம் தேவை என்ற முன்நோக்க பார்வையில் அருட்பணி செய்ய ஆண்டவர் அருள்புரிவாராக.

அருள்திரு. E. **ஸ்டான்லி ராஜ்**

25-03-2018 **குருத்தோலை ஞாயிறு**

# ஓசன்னா : கோவிலில் புதிய அரசர்
## HOSANNA : NEW KING IN THE TEMPLE

எசா. 56:1-8 1 கொரி. 3:16-23
திபா. 24 மத். 21:1-17

**"என் இல்லம் இறைவேண்டலின் வீடு என அழைக்கப்படும்."**
**மத். 21:13**

இன்று பேரணிகள் அல்லது பவனிகள் நம் அன்றாட வாழ்க்கையின் அனுபவமாக மாறி வருகின்றன. மனிதனது கொள்கை முழக்கங்களாகவும், தங்களது உரிமை சார்ந்த கோரிக்கைகளாகவும் பலவித கண்ணோட்டங்களில் பவனிகள் இன்றும் அமைவதுண்டு. இத்தகைய பேரணிகளில் உரிமையின் குரலெழுப்பி, உணர்வு சார்ந்து செல்பவர்களுக்கும், சாலை ஓரத்தில் நின்று அப்பவனியை வேடிக்கை பார்ப்பவர்களுக்கும் வேறுபாடு உண்டு. இயேசுவின் எருசலேம் பவனியினை சிந்திக்கும் நாம் சாலை ஓரத்தில் நின்று வேடிக்கைப் பார்பவராக அன்றி, அப்பவனியில் நேரடியாக உணர்வு பூர்வமாக பங்குபெறும் மனிதர்களை போன்று இயேசுவின் எருசலேம் பவனியின் கருப்பொருளையும், பவனியின் நோக்கத்தையும் உணர்ந்து அதனுடன் ஒன்றுபடுவோமாக.

இயேசுவின் பாடு மரணத்தை முதன்மைப்படுத்திச் சிந்திக்கும் தூய வார நிகழ்வு எருசலேம் பவனியுடன் துவங்குகின்றது. இந்த பவனி பெத்பெகே என்னும் சிற்றூரிலிருந்து எருசலேம் என்னும் பெருநகர் நோக்கி நடைபெற்றதோர் பேரணியாகும். சகரியா தீர்க்கர், "சீயோன் குமாரத்தியே மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும், இரட்சிக்கிறவரும், தாழ்மையுள்ளவரும், கழுதையின் மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்" (9:9) என முன்னுரைத்ததின் நிறைவேறுதலாக இறையரசின் தகவுகளைத் தன்னகத்தே கொண்ட பவனி. பவனியில் பங்குபெற்ற மக்களின் குரல் 'ஓசன்னா' என்ற ஒரு கோரிக்கையாக (இப்பொழுதே இரட்சியும்) சிறப்பாக அமைந்தது. எருசலேம் கோவிலில் சென்றடைந்த இந்த வெற்றிப் பவனி நமக்கு கற்றுத் தரும் உண்மைகள் தான் என்ன?

## 1. இறையில்லத்திற்கு நேராய் ஓசன்னா பவனி :

திருமறையில் நாம் நடைபெற்ற பல்வேறு பவனிகளைக் குறித்த செய்திகளைக் காணலாம். இஸ்ரவேலரின் உடன்படிக்கைப் பெட்டிப் பவனி, மோசேயின் தலைமையில் எகிப்திலிருந்து கானானுக்கு நோரான விடுதலைப்பவனி, தாவீதின் போர் வெற்றிப்பவனி எனப் பலவற்றைக் காணலாம். ஆனால் இயேசுவின் எருசலேம் பவனி மற்ற பவனிகளை விட வித்தியாசமான ஒன்று. பொதுவாக பவனியில் பயன்படுத்தப்படும் சொற்கள் அதன் நோக்கத்தை தொடர்புபடுத்தும் ஆழமான சொற்களாக காணப்படும். எ.கா. சுதந்திரப் போராட்டத்தின் போது காந்தியடிகள் பயன்படுத்திய சொற்கள் “வெள்ளையனே வெளியேறு” என்பதாகும். மேலும் கிராம முன்னேற்றத்தினை வலியுறுத்தி அவர் குறிப்பிட்டது “கிராமங்களுக்குத் திரும்புவோர்” என்பதாகும். திருச்சபை சீர்திருத்தத்தின் போது பயன்படுத்திய சொற்கள் “திருமறை மட்டுமே” “இறையருள் மட்டுமே” என்பனவாகும். இயேசுவின் எருசலேம் பவனியில் பயன்படுத்தப்பட்ட சொல்தான் “ஓசன்னா.” ரோமை ஆதிக்கத்திலிருந்து மக்களை விடுவிக்க மேசியாவை எதிர்பார்த்திருந்த சூழலில், கலிலேயாவிலிருந்து வந்த மக்கள் தன்னைச் சூழ, ஓசன்னா முழக்கத்துடன் (மத். 21:9) இப்பவனி அமைந்தது. “கர்த்தரின் நாமத்தில் வருகிறவர் ஆசிர்வதிக்கப்பட்டவர்” என்ற திபா. 118:26ன் முற்பகுதி எருசலேமிற்கு புனித யாத்திரையாகச் செல்பவர்களை,ஆலயத்தின் ஆசாரியர்கள் வாழ்த்தி வரவேற்கும் ஒரு வழிபாட்டு வாழ்த்தாக இயேசுவின் காலத்தில் மாற்றம் பெற்றிருந்தது. ஆனால் இங்கு அதே வாழ்த்துதலை ஆசாரியனுக்குப் பதிலாக மக்கள் குறிப்பிட்டு இயேசுவை எருசலேமிற்கு அழைத்துச் சென்றனர். இப்பவனி எருசலேம் மக்களிடம் கலக்கத்தை உருவாக்கிற்று (மத். 21:10,11). ஆனால் இது இரட்சிப்புக்குரிய நற்செய்தியே என்ற பொருள்பட எசா. 62:11. தெளிவாக சுட்டிக் காட்டுகின்றது. இவ்வாறு இயேசுவின் ஓசன்னா பவனி இரட்சிப்பைப் பிரகடனம் செய்யும் பவனி (The re-establishment of salvation to Jerusalem). பவனியின் வார்த்தைகள் இயேசுவை மகிழ வைக்கவில்லை. மாறாக கலந்து கொண்ட மக்களுக்காக கண்ணீர் வடித்தார். லூக். 19:41,42-ல் ....உனக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்திற்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தால் நலமாயிருக்கும் என்றார். இக்கண்ணோட்டத்தில் இப்பவனியின் “ஓசன்னா” முழக்கத்தைப் புரிந்து கொண்டு நமது இரட்சிப்பினை மறுபரிசீலனை செய்வோமாக. To know christ is not to speculate about the

mode of his incarnation, but to know his saving benefits என Philip Melanchthon என்பவர் குறிப்பிடுவது இவ்விடம் நினைவு கூர்வது சிறப்பானது.

### *2. இறையில்லத்தின் அரசர் தாழ்மையான அரசர்* :

கழுதையின் மேல் ஏறி ஆண்டவர் பவனி சென்றது ஆண்டவரின் தாழ்மையும், அவரது சமாதானப் பணியையும் ஒருங்கே நினைப்பூட்டுகின்றது. சகரியா 9:10ல் எப்பிராயிமினின்று ரதங்களையும், எருசலேமினின்று குதிரைகளையும் அழித்து விடுவார். யுத்த வில்லும் அழிந்து போகும், அவர் ஜாதிகளுக்கு சமாதானம் கூறுவார் என சகரியா 9:9லிருந்து தொடர்வதால் இந்த உண்மையும் சேர்த்து வலியுறுத்தப்படுகின்றது எனலாம்.

அடிமையின் ரூபமெடுத்து மனித சாயலானார் (பிலி. 2:7,8) என்று இயேசுவின் எளிய, மக்களுடன் ஒன்றுபடும் பிறப்பினை பவுலடியார் குறிப்பிட்டார். தச்சன் குடும்பத்தில் எளிமையாகக் பிறந்து, எளிமையான சீடர்களைத் தெரிந்து கொண்டு இறையரசின் பணிகளைத் துவங்கினார். இத்தகைய இயேசு தம் எருசலேம் பவனிக்கு இரவல் கழுதையை பயன்படுத்தினார். இது அவரது தாழ்மை மற்றும் எளிமைக்கு அடையாளமன்றோ.

இத்தகைய தாழ்மையின் பவனியினை சிந்தனை செய்யும் நாம் இத்தாழ்மையின் பண்பிற்கு தரும் மதிப்பு தான் என்ன? "மனத்தாழ்மையைத் தேடுங்கள், அப்பொழுது ஒரு வேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்" (செப். 2:36) என்கிறது. திருமறை Augustin of Hippo என்பவர் குறிப்பிடுகையில் "பெருமை தேவதூதர்களை பேய்களாக மாற்றி விடுகின்றது. தாழ்மை மனிதர்களை தேவதூதர்களாக மாற்றுகின்றது" என்கிறார் (Pride changed angels into devils; humility makes men into angels). இத்தகைய ஆற்றல் மிக்க தாழ்மைப் பண்பு நமதாகட்டும். இயேசுநாதர் இத்தகைய தாழ்மை பண்பிற்கு மாதிரியாக சீடர்களின் பாதத்தினை கழுவி முன்மாதிரியை அமைத்தார் (யோவா. 13:14). கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும் தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார். மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார் என சங்கீதக்காரர் குறிப்பிடுவதும் (திபா. 138:6) நம்மை இப்பண்பினை ஏற்று சான்று பகர்ந்திட துரிதப்படுத்துகின்றது.

### 3. இறையில்லத்தைச் சீர்திருத்தம் செய்யும் அரசர் :

எருசலேம் பவனி எருசலேம் ஆலயத்தினை சந்தித்தது. இந்த சந்திப்பு ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் அமைந்தது. இறை இல்லம் கள்ளர்குகையாக மாற்றப்பட்டிருந்த சூழலாகக் காணப்பட்டது. புறஇன மக்கள் இறைவனை வழிபடும் இடமெல்லாம் வியாபாரப் பொருட்களாக நிரப்பப்பட்டிருந்தது. அவர்கள் இறைவனைத் தொழுதிட தடையாயிருந்தது. அன்னாவின கடைவீதி என்று அழைக்கக் கூடிய நிலையில் வியாபார நோக்கு ஆதிக்க சக்திகள் மூலமாக இறைஇல்லத்தில் நுழைந்து விட்டது. வழிபாட்டுக்காய் புறக்கணிக்கப்பட்ட புறஇன மக்கள் மீது பாதுகாக்கும் கரிசனை இயேசுவில் ஆலய சுத்திகரிப்புப் பணியில் வெளிப்பட்டது. Exploitation of money, place and worship என்கின்ற அளவில் ஆலயத்தில் அமைந்திருந்த சுரண்டல்களுக்கு எதிராக சீர்திருத்தம் செய்தார் இயேசு. இன்று நாமும் வழிபாட்டின் உரிமையினை பாதகாத்து இறை இல்லம் அனைவருக்கும் இறைவேண்டலின் இல்லமாகச் செயல்பட நம் வாழ்விலும் மாற்றம் தேவை. Thomas Fuller என்பவர் மனமாற்றத்தைக் குறித்து கருத்துக் கூறும்போது ‘Amendment is repentance’ என்றார். அதாவது திருத்தங்களை வாழ்வில் ஏற்றுக்கொள்வது மனமாற்றம். நாமும் நம் வாழ்வை ஆய்வு செய்து, ஓசன்னா பவனியின் நோக்கங்களை நன்குணர்ந்து மாற்றங்களையும் திருத்தங்களையும் நம்மிடையே ஏற்றுக் கொள்ள இறைமகன் நம்மை ஆற்றல்படுத்துவாராக.

அருள்திரு. W. **ஸ்டான்லி ஜோண்ஸ்**

26-03-2018

**தூயவாரம் - திங்கட்கிழமை**

# கனியற்ற வாழ்விற்கு எச்சரிப்பு

மத். 21:18-22

**"வழியோரத்தில் ஓர் அத்திமரத்தை அவர் கண்டு,...உடனே அந்த அத்திமரம் பட்டுப்போயிற்று."** மத். 21:19

மத்தேயு நற்செய்தியாளர் இந்நிகழ்வை வெளிப்படுத்துகிறார். கிறிஸ்தவ வாழ்வு கனிநிறைந்த வாழ்வாகவும், கனிகொடுக்கும் வாழ்வாகவும் இருத்தல் வேண்டுமென்பதே தவ நாட்களில் சிறப்பு மிகு சிந்தனையாகும். அந்த நிலையிலே எருசலேம் தேவாலயத்தின் சீர்கேடுகளை சீர்படுத்தின இயேசு கிறிஸ்து தனது சீடர்களுடன் திரும்பி வந்த பெத்தானியாவில் தங்கினார். மறுநாள் காலை மீண்டும் சீடர்களுடன் எருசலேம் நகரம் நோக்கி பணயமானார். இந்த பயணத்தில் அவருக்கு பசியுண்டாயிற்று. அப்போது வழியருகே ஒரு அத்திமரத்தை கண்டு கனியை தேடி அருகில் சென்றார். அதில் கனிகள் இல்லாததால் அம்மரத்தை சபித்தார்.

அத்திமரம் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் துளிர்விட ஆரம்பிக்கும். இலைகள் வந்தவுடனே அத்திக் காய்களும் தோன்ற ஆரம்பிக்கும். இலைகள் அடர்ந்து இருக்கிறது என்றால் கனிகள் இருக்கும். ஆனால் இந்த பகுதியில் நாம் அறியக் கூடிய அத்திமரத்தில் கனிகள் இல்லை. இதனால் இயேசு கிறிஸ்து இம்மரத்தை சபித்தார். இம்மரத்தை ஏன் சபிக்க வேண்டும்? என்ற கேள்வியும் எழுகிறது. என்றாலும் இதிலிருந்து நமக்கு கிடைக்கின்ற படிப்பினைகள் என்ன? என்பதை சிந்திப்போம்.

## *1. போலித்தனத்தின் அடையாளம்* : (மத். 21:19)

வழியோரத்தில் ஓர் அத்திமரத்தை கண்டு அதன் அருகில் சென்றார்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து எருசலேம் நோக்கி சென்று கொண்டிருக்கும் போது பசி உண்டாயிற்று. வழியருகே சற்று தொலைவில் ஓர் அத்திமரத்தை பார்த்தார். அந்த அத்திமரம் கனியுள்ள தோற்றத்துடன் காட்சியளித்தது. அதன் அருகில் ஆசையோடே சென்றார். மரத்தை பார்த்த போது ஏமாற்றம் அடைந்தார். வெளிவேடம் தரித்த, போலித்தனமான அடையாளத்தை கண்டார்.

**a. போலி வாழ்வு கூடாது :**

கடவுள் இந்த உலகில் நாம் வாழ்வதற்குரிய வாய்ப்பை தந்திருக்கிறார். எதற்கு தந்திருக்கிறார் என்றால் நாம் ஆவியின் கனிகளோடு வாழ்வதற்கு மாறாக, நாம் போலிகளாக வாழ்வதற்கில்ல.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து அருட்பணியை ஆரம்பித்த வேளையில் 12 சீடர்களை தெரிந்து கொண்டார். இவர்கள் இந்த உலகில் போலிகளாக, வேஷம் தரித்தவர்களாக வாழாமல் மனிதர்களாக வாழ வேண்டும் என்பது தான் அவரது விருப்பம். ஆனால் சீடன் யூதாஸ் யூதாஸ்காரியோத்துவின் வாழ்வில் நாம் புரிந்து கொள்ளும் போது போலியான சீடன் என்ற அடையாளத்துடன் காணப்பட்டார். மத். 26:15-இல் நான் அவரை உங்களுக்கு காட்டிகொடுக்கிறேன். நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு 30 வெள்ளிக்காசு கொடுக்க உடன்பட்டார்கள். மத். 26:49 இல் அவன் இயேசுவினிடத்தில் வந்து ரபீ, வாழ்க என்று சொல்லி அவரை முத்தஞ்செய்தான். இயேசுகிறிஸ்துவுக்கு கடைசிவரை உண்மையான சீடனாக இருக்க வேண்டியவன் போலித்தனமான சீடனாக மாறிவிட்டான். இது போன்ற போலித்தனமான வாழ்வு கூடாது.

**b. போலிகளை அடையாளம் கண்டுகொள்வது :**

இவ்வுலகில் போலிகள் அதிகரித்து வருவதை காண்கிறோம். (ex) போலி போதகர்கள், போலி மருத்துவர்கள், போலி முகவர்கள்... இவர்கள் பல விளம்பரங்கள் மற்றும் மாய்மாலங்கள் வழியாக ஏமாற்றுகிறார்கள். எனவே நாம் போலிகளை அடையாளம் கண்டு விழிப்போட, எச்சரிப்போடு வாழ கடமைப்பட்டிருக்கிறோம்.

நாம் விழிப்பாய் இருக்க வேண்டும், எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்ற அறிவுறுத்தலை திருமறையில் பல இடங்களில் காண்கிறோம். ஆண்டவர் இயேசுகிறிஸ்துவும் பல இடங்களில் இதனை அறிவுறுத்தியுள்ளார். குறிப்பாக மத். 7:15,16 இல் கள்ள தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள், அதுபோன்று திருத்தூதுவர் பேதுரு எழுதும் போது 1பேது. 5:8 இல் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; நாம் விழிப்போடு எச்சரிக்கையோடு இருந்து போலித்தனங்களை அடையாளம் கண்டு வாழ வேண்டும்.

## 2. ஆச்சரியத்தின் அடையாளம் : (மத். 21:19)

அதிலே இலைகளையன்றி வேறொன்றையும் காணாமல்,

இயேசுகிறிஸ்து கனிகிடைக்கும் என்ற ஆசையோட அத்திமரத்தின் அருகில் சென்றபோது இலைகள் இருந்தது; கனிகள் இல்லை. அத்திமரத்தில் இலைகள் அடர்ந்து இருந்தால் கனிகள் இருக்க வேண்டும். இம்மரம் அதிக எதிர்பார்ப்பை கொடுத்தது. ஆச்சரியப்படக் கூடிய தோற்றத்தையும் கொடுத்தது. கனியை தேடிவந்த ஆண்டவர் அவமானப்படக் கூடிய அளவில் தோற்றத்தை கொடுத்தது.

இன்று அனேக மனிதர்களில் ஆச்சரியப்படக் கூடிய தோற்றத்தை பார்க்கிறோம். வெளிப்பிரகாரமாக பிறர் ஆச்சரியப்படக் கூடிய தோற்றத்தை வெளிப்படுத்தி வாழ்ந்து வருகிறார்கள். (ex) தூயவர்கள் போன்ற நடிப்பு, நற்குணமுள்ளவர்கள் போன்ற நடிப்பு. உள்ளத்தாலல்ல வெளிப்பிரகாரமாக கனியுள்ளவர்கள் போன்று நடித்துக் கொண்டிருப்பவர்கள் ஏராளம். ஆண்டவர் இயேசுகிறிஸ்து கள்ளதீர்க்கதரிசிகளை பற்றி மத். 7:15 இல் சொல்லும் போது, அவர்கள் ஆட்டுத்தோலை போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள். உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். கையில் திருமறை, வெள்ளை ஆடை, அதிக நேரம் ஜெபம், தியானம், அதிக ஆலய ஈடுபாடு பலர் ஆச்சரியமான தோற்றத்தை வெளிப்படுத்துகிறோம். ஆனால் நம் உள்ளமோ ஆண்டவருக்கு தூரமாய் இருக்கிறது. ஆண்டவர் நம்மை பார்த்து அவமானப்படக் கூடிய விதத்தில் கனியற்ற வாழ்வு வாழ்ந்து வருகிறோம்.

## 3. எச்சரிப்பின் அடையாளம் : (மத். 21:19)

இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக் கடவது என்றார்; உடனே அத்திமரம் பட்டுப் போயிற்று.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து போலித்தனமான அடையாளத்துடன் ஆச்சரியத்தை ஏற்படுத்தி நின்ற அத்திமரத்தை கண்டு கடும் கோபம் கொண்டார். அதுமட்டுமல்லாமல் அதனை சபித்தார். போலித்தனமான அடையாளத்துடன் பிறரை ஆச்சரியப்படுத்தி ஏமாற்றத்தை கொடுத்த அத்திமரம் பட்டுப் போயிற்று.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து போலித்தனமான வாழ்வை வெறுப்பது மட்டுமல்லாமல், போலித்தனமான வாழ்விற்கு கடுமையான எச்சரிப்பும் விடுக்கிறார். மத். 23:25 இல் "நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும்

அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்.” மத். 21:43 இல் போலித்தனமான வாழ்வு வாழ்கிறவர்கள் இறையரசுக்குரியவர்கள் அல்ல என்றார். இதுபோன்று பல இடங்களில் கடுமையான எச்சரிப்பை விடுவித்தார்.

நாம் கலா. 5:22.23 இல் சொல்லப்பட்டிருக்கிற கனிகளுடன் இறையரசுக்குரியவர்களாய் இவ்வுலகில் வாழ ஆண்டவர் விரும்புகிறார்.

நாம் போலிகளாக வாழ்ந்தது போதும்.

ஆச்சரியப்படக்கூடிய தோற்றத்தை வெளிப்படுத்தி ஆண்டவரை ஆண்டவரை அவமானப்படுத்தினது போதும்.

ஆண்டவர் நமக்கு கொடுத்த எச்சரிப்பை ஏற்றுக் கொண்டு கனி கொடுத்து வாழ்வோம்.

அருள்திரு. S. **ஸ்டீபன்**

27-03-2018

**தூய வாரம் - செவ்வாய்க்கிழமை**

# அடையாளங்கள் தரும் எச்சரிப்பு

மத். 24:3-14

**அதற்கு இயேசு கூறியது "உங்களை யாரும் நெறிதவறச் செய்யாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்."** மத் 24:4

வார்த்தையாய் இருந்தவர், மனுக்குலத்தின் மீட்புக்காய் மானிடராய் மண்ணில் வந்து, மண்ணாகும் மானிடர் மேல் இரக்கம் கொண்டு, தன்னை ஜீவ பலியாக ஒப்படைக்க போவதற்கு முன்பாக, எருசலேம் தேவாலயத்தை நோக்கி வெற்றி பவனி சென்றார். அதைத் தொடர்ந்து வருகின்ற தூய வாரத்தின் செவ்வாய்கிழமை அன்று அவரை விரோதித்தவர்கள் கேள்விக் கணைகளை ஆண்டவரிடம் தொடுக்கின்றனர். எப்படியாவது ஆண்டவரை பேச்சிலே அகப்படுத்த வேண்டும் என்பது அவர்களின் திட்டம். எல்லாவற்றையும் அறிந்திருந்த இயேசு அவர்களின் கேள்விகளுக்கு ஏற்ற பதிலோடு நிறுத்திக் கொள்ளாமல், அவர்கள் மனம் திரும்ப வேண்டும் என்பதற்காய் போதனைகளையும், அவர்களின் குற்றங்களையும், குறைகளையும் இலை மறை காயாக சொல்லாமல், தெளிவாய் தீர்க்கமாய் எடுத்துரைத்தார். மனம் திரும்பாத பட்சத்தில் அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஒரே முடிவு நியாயத்தீர்ப்பு என்ற எச்சரிக்கை கொடுக்கின்றார்.

ஆண்டவரின் சீடர்கள் அவரிடம் உமது வருகைக்கும், உலக முடிவுக்கும் அறிகுறி என்ன? என்று கேட்டபோது, ஆண்டவர் அவர்களுக்கு எச்சரிப்பின் செய்தியை கூறினார். காலத்தின் கடைசியும், ஞாலத்தின் அழிவும் நெருங்கிக் கொணடிருக்கிறது. பாரினில் வேதனைகள் கோரமாய் சூழ்ந்து கொண்டிருக்கிறது. நாசமும், மோசமும் நானிலத்தோரை நடுங்க வைக்கிறது. கொடுமையும் கூக்குரலும் எட்டுதிக்கும் கொட்டியே எதிரொலிக்கிறது. இவையெல்லாம் இயேசுவின் இரண்டாம் வருகையை பறைசாற்றும் காலங்களின் அடையாளங்கள். இப்பேர்பட்ட காலத்தில் வாழ்கின்ற நாம்! இயேசுவானவர் சீஷர்களுக்குச் சொன்ன அடையாளங்களை முன்னிறுத்தி சிந்திப்போம்.

## 1. அழிவுகளிலும் பெருகும் நெறிகேடுகள் :

மத். 24:6; 24:7; 24:29 ஆகிய இறைவார்த்தைகளில் இந்த உலகத்துக்கு வரப்போகிற பேரழிவுகளைக் குறித்து ஆண்டவர் எச்சரிக்கிறார். தேச மற்றும் சர்வதேச வன்முறைகள், இயற்கை மாற்றங்களினால் அழிவுகள், பஞ்சங்கள், கொள்ளை நோய்கள் ஆண்டவரின் வருகை சமீபிக்கும் போது அதிகரிக்கும். நாம் இப்போது இவைகள் அதிகரிக்கும் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப்பேற்பட்ட பேரழிவின் காலத்தில் மக்களை நெறிகேட்டுக்கு வழிநடத்தும் போலி இறைவாக்கினர்களும், போலி தலைவர்களும் பெருகி விட்டார்கள்.

மத். 24:5 "பலர் என் பெயரை வைத்துக் கொண்ட வந்து, நானே மெசியா என்று சொல்லிப் பலரை நெறிதவறச் செய்வர்."

மத். 24:24 ஏனெனில் போலி மெசியாக்களும், போலி இறைவாக்கினர்களும் தோன்றி, முடியுமானால் தேர்ந்த கொள்ளபட்டவர்களையே நெறிதவறச் செய்ய பெரும் அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் செய்வார்கள்.

மத். 24:11 பல போலி இறைவாக்கினர் தோன்றி, பலரை நெறிதவறி அலையச் செய்வர்.

சுகத்திற்காக, சுகபோகத்திற்காக ஆண்டவரை தேடுபவர்கள் தான் அநேகம். இந்த கடைசி நாட்களில் இலகுவான உபதேசத்தையும், இலகுவான மார்க்கத்தையும் தேடி அலைகிறார்கள். கடிந்து கொள்ளுதலையும் ஆரோக்கியமான வசனத்தையும் அல்லத்தட்டி வருகிறார்கள். போலி இறைவாக்கினர்களும் ஜனத்தின் நிலையறிந்து, இலகுவான வார்த்தையை இதமாய் உரைத்து ஜனங்களை திரளாய் கூட்டி, தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளுகிறார்கள். இன்றைய இறைவாக்கினர்கள் பாவத்தைக் கண்டியாமல் உலக மேன்மையை மட்டுமே கூறி மக்களை நெறிதவறச் செய்கிறார்கள். ஆண்டவர் பாடுகள் சகித்தது நாம் சுக போகமாய் இந்த உலகில் வாழ்வதற்கு அல்ல, நிலையான நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுவதற்காக என்கிற உண்மையை புரிந்து கொண்டு அழிவின் காலங்களில் நெறிபிறழாதவர்களாய் வாழ அழைக்கப்படுகிறோம்.

## 2. நிறைவு காலங்களிலும் பெருகும் பாவங்கள் :

மத். 24:12 நெறிகேடு பெருகுவதால் அனேகருடைய அன்பு தணிந்து போகும்.

பாவ ஆசைப் பெருக்கம் நிறைந்த காலம்; வலைத்தளங்களில் வீழ்ந்து போய் மதிமயங்கும் காலம்; அநியாயம் அக்கிரமம் மலிந்த காலம்; போதை, லஞ்சம், ஊழல் பெருகும் காலம்; ஓடிவரும் பிள்ளையை உச்சி மோந்து, தூக்கி சுமந்து கொஞ்சி குலவும் பெற்றோர்; பிள்ளைகளின் நெஞ்சத்து வஞ்சகம் பெருகி, பெற்றோர் சொல்லும் மற்றோர் சொல்லும் ஏற்றிடாத காலம்; சன்மார்க்கமும் துன்மார்க்கமும் பின்னிப் பிணைந்து ஆசைக்காட்டி மோசம் போக்கும் காலம்; மதுபானம் குடிப்பவனை சிறையில் அடைத்த காலம் மலையேறி இன்று மதுபானம் குடிக்காதே என்றால் சிறையில் அடைக்கப்படும் காலம்; வறுமையினால் கிழிந்த ஆடைகள் உடுத்தின காலம் போய், இன்று நகரிகத்துக்காக கிழிந்த ஆடைகளை அணியும் காலம், இயேசுகிறிஸ்துவின் பெயரால் கிறிஸ்தவத்தை வியாபாரமாக்கும் காலம்; பாவங்களும், நெறிகேடுகளும், நிறைந்த உலகில் அப்போஸ்தலனாகிய பவுல் 2தீமொ. 3:1-5 வரையிலான இறைவார்த்தையினூடாய் நிறைவு காலங்களில் மனிதனின் பாவ குணங்கள் எப்படிப்பட்டவை என்பதை விளக்குகின்றார். மானிடரின் பாவத்தை தம்மேல் சுமந்த இரட்சகரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற நாம், நெறிகேட்டிற்கு நம்முடைய சிந்தைகளையும், செயல்களையும் விலக்கி இறைவனோடு ஒன்றித்து வாழ எத்தனப்படுவோம்.

## 3. உபத்திரவங்களிலும் வளரும் உத்தமரின் பணி :

மத். 24:9 பின்பு உங்களை துன்புறுத்திக் கொல்வதற்கென ஒப்புவிப்பார்.

மத். 24:10 ஒருவரையொருவர் காட்டிக் கொடுப்பர்; ஒருவரை ஒருவர் வெறுப்பர்.

சமய அடக்குமுறைகளினால் உபத்திரவங்கள் பெருகும் உலகின் எல்லா பகுதியிலும், பிரிவினைகள் பெருகி வருகிறது. எல்லா நாட்டிலும் மொழியினால், நிறத்தால், இனத்தால், மதத்தால், வகுப்பு வாதங்களினால் கலவரங்கள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பெருகி வருகிற இக்கால கட்டத்தில் உத்தமரை அறிவிக்கிற பணியும் வேகமாய் நடந்து வருகிறது. மத். 24:14 உலகமெங்கும் உள்ள எல்லா மக்களினத்தாரும் ஏற்றுக் கொள்ளுமாறு விண்ணரசைப் பற்றிய இந்நற்செய்தி உலகமெங்கும் அறிவிக்கப்படும், அதன் பின்பு முடிவு வரும்.

நாளுக்கு நாள் சபைகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. எங்கும் ஆத்தும பாரங்கள் பெருகி வருகின்றன. தனி மனிதர்களாய், குழுக்களாய் DMPB, FMPB, IMS போன்ற அமைப்புகளின் வாயிலாய் நற்செய்தி அறிவிக்கப்படாத இடங்களில் வேகமாய் அறிவிக்கப்படுகிறது. எனவே இறைவன் நமக்கு தந்த நற்செய்தியை ஆழமாய் நம்புவோம்! மற்றவர்களுக்கும் எடுத்துரைப்போம்.

நமது ஆண்டவர் சொல்லிய அடையாளங்களை நாம் காணும் போது, நிறைவு காலத்தின், நிறைவு மணி நேரத்தில் அதிலும் நிறைவு வினாடி நேரத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் மிகையாகாது! ஆண்டவரின் வருகைக்கு ஆவலோடு காத்திருக்கும் நாம் கறையற்றவர்களும், மாசற்றவர்களுமாய் சமாதானத்துடன் அவர் சந்நதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாய் இருப்போம்! ஆண்டவர் ஜீவனைத் தந்து, பெற்று தந்த நித்திய ஜீவனை சுதந்தரிக்கப்படுவோம்! ஆமென்!

அருள்திரு. T. **லிபின் ராஜ்**

28-03-2018

**தூய வாரம் - புதன்கிழமை**

# முறையான செயல் செய்த நங்கை

மத். 26:6-13

**“அவர் எனக்கு செய்தது முறையான செயலே.”** மத் 26:10b

பஸ்கா விழா நெருங்கி கொண்டிருந்த நேரத்தில் இயேசுவை கொலை செய்ய பலர் திட்டமிட்டு கொண்டிருந்தார்கள். தலைமை குருக்களும், மக்களின் மூப்பர்களும், காய்ப்பா என்னும் தலைமை குருவின் மாளிகை முற்றத்தில் கூட்டம் கூடி திட்டமிட்டு கொண்டிருந்தார்கள்.

இயேசுவின் சீடர்களில் ஒருவனாகிய யூதாஸ் காரியோத்தும் இயேசுவை காட்டி கொடுக்க திட்டமிட்டு கொண்டிருந்தார்.

இச்சூழலில் பெத்தானியாவில் இருந்த தொழுநோயாளர் சீமோன் இயேசுவை தன் இல்லத்திற்கு அழைத்திருந்தார். பரிசேயர்கள் பொதுவாக இயேசுவை வெறுத்தனர். இந்த பரிசேயர் சீமோன் இயேசுவை விருந்துக்கு அழைத்தார் என்றும் முற்றிலும் அன்பும் மதிப்பும் உடையவராயிருந்தார் என்றும் கூற முடியாது. இந்த சீமோன் இயேசுவை இல்லத்திற்கு அழைத்திருந்தாரே தவிர உள்ளத்தில் இயேசுவை ஏற்கும் பண்பு, இல்லை என்றே கூறலாம்.

இச்சூழலில் அழைக்கப்படாத, அங்கிகரிக்கப்படாத ஒரு பாவியான பெண் சீமோன் இல்லத்தில் வாழுகிறார். இவர் விருந்தினராய் வந்தவர் அல்ல. மாறாக இயேசுவினிடத்தில் வந்தவர். இயேசுவுக்கு நற்செயல் (or) முறையான செயல் செய்தாள் என்று புகழப்பட்டாள் மத். 26:10b. இயேசு இவளை புகழ்வதற்கான இப்பெண்ணிடம் இருந்த 3 பண்புகள்.

***1. உலகப் பற்றை விட்டார்*** : (மத். 26:7)

அங்கு அவர் பந்தியில் அமர்ந்திருந்த போது விலையுயர்ந்த தைலம் கொண்ட படிக சிமிழுடன் ஒரு பெண் அவரிடம் வந்தாள்.

ஒரு பெண் விலையேற பெற்ற பரிமள தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியை கொண்டு வந்தாள்.

இந்நிகழ்வினை மத்தேயு, மாற்கு, நற்செய்தியாளர்கள் குறிப்பிடும் போது தைலம் கொண்டு வந்த பெண் யார் என்றோ அவள் பெயர் என்னவென்றோ குறிப்பிடவில்லை.

ஆனால் லூக். 7:37-ல் “அந்நகரில் பாவியான பெண் ஒருவர் இருந்தார். இயேசு பரிசேயருடைய வீட்டில் உணவு அருந்த போகிறார் என்பது அவருக்கு தெரிய வந்தது”.

லூக்கா பாவியான பெண் என்கிறார். ஆனால் யோவான் 12:3-ல் “மரியா இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலையுயர்ந்த நறுமண தைலம் ஏறக்குறைய 320 கிராம் கொண்டு வந்தாள்.” அப்படியானால் மரியாள் என்கிற பாவியான பெண் என புரிந்து கொள்ளுகிறோம். எந்த பாவத்தை செய்து இந்த அடைமொழியை பெற்றார் என்று கூறப்படவில்லை. ஆனால் ஏதோ ஒரு பாவத்தில் ஈடுபட்டிருந்தாள் என்பது தெளிவு.

இப்போது இயேசுவை பார்க்க வருவதிலிருந்து உலக பற்றை விட்டு விடுகிறார். இதுவரை உலக பாவம் பெரிதாய் தெரிந்த இவளுக்கு இப்போது இயேசு பெரிதாய் தெரிகிறார்.

இவரை சீமோன் அழைக்கவில்லை. அனால் எப்படியாவது இயேசுவை பார்த்துவிட வேண்டும். அவருக்கு நற்கிரியை செய்ய வேண்டும் என்ற பண்பு உலக பற்றை விட்டு விட செய்கிறது.

***2. உறவுப் பற்றில் வளர்ந்தார்*** : (மத். 26:7)

“அதை அவர் தலையில் ஊற்றினார்.”

இப்பெண் பாவியாகிய பெண். தன் பாவத்திலிருந்து விடுபட வேண்டுமோனால் இயேசுவிடம் வந்தாக வேண்டும். தேடி கண்டு பிடித்து வந்து விடுகிறாள். வரும் போது விலை உயர்ந்த நறுமணத் தைலம் கொண்ட படிக சிமிழுடன் வருகிறாள்.

இதை தூய யோவான் சொல்லும் போது “இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலை உயர்ந்த நறுமண தைலம்” என்கிறார் யோவா. 12:3.

இலாமிச்சை என்பது இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு நறுமண பொருள். இதன் விலை மிக அதிகம்.

விலை மிக அதிகமான இந்த தைலத்தை கொண்டு வந்து இயேசுவின் தலையில் ஊற்றினாள். யோவான் சொல்லும் போது தன் தலை மயிரினால் துடைத்தாள். யூத பெண்கள் பொது இடத்தில் தன் தலை கூந்தலை அவிழ்ப்பது அவமானமாக கருதப்பட்டது. இப்பெண் தன் அவமானத்தையும் கருதாது ஆண்டவர் இயேசு மீது இருந்த பற்றை வெளிப்படுத்தினார்.

***3. உன்னதரின் உள்ளம் கவர்ந்தார்*** : (மத். 26:13)

“உலகம் முழுவதும் எங்கெல்லாம் இந்நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இப்பெண் செய்ததும் எடுத்துக் கூறப்படும். இவரும் நினைவுக் கூரப்படுவார் என்று நான் உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன்” என்று கூறினார்.

நறுமண தைலம் இயேசுவின் மேல் ஊற்றப்பட்ட உடன் சீடர்கள் முணுமுணுக்கிறார்கள். உடனே இயேசு “ஏன் இந்த பெண்ணுக்கு தொல்லை கொடுத்தீர்கள் அவர் எனக்கு செய்தது முறையான செயலே என்கிறார்” மத். 26:10.

இவர் இந்த நறுமண தைலத்தை எனது உடல்மீது ஊற்றி எனது அடக்கத்திற்கு ஆயத்தம் செய்தார் மத். 26:12.

நறுமண தைலம் இயேசுவின் மேல் உற்றப்பட்ட இப்பெண்ணின் செயல் எலியா மேசியாவிற்கு செய்வார் என்று எதிர்பார்த்தது ஆகும். இயேசு கழுதையின் மேல் ஏறி எருசலேமுக்குள் நுழையும் போது எலியா அவரை சந்தித்து அவரை எண்ணெயால் அருட்பொழிவு செய்து அவரை மேசியா என்று பிரகடனப்படுத்துவார் என்பது யூத நம்பிக்கை.

அதற்கு பதிலாக இங்கே இந்த பெண் ஆண்டவரை அவருடைய மரணத்திற்கு ஆயத்தப்படுத்தும் வகையில் இந்த செயலை செய்ததாக இயேசு ஏற்றுக் கொள்கிறார்.

உலக ஆளுகை செய்யும் மேசியாவை யூதர்கள் எதிர்பார்த்திருந்த சூழலில் மரணத்தின் வழியாக மீட்பு வழங்கும் மேசியாவை அபிஷேகம் செய்து வைக்கும் பொறுப்பு இப்பெண்ணுக்கு தரப்பட்டு அவள் மீட்பின் நற்செய்தியில் நிரந்தர இடம் பிடித்து விட்டதாக கருதப்பட்டாள்.

இப்பெண்ணின் இச்செயல் பாராட்டப்படுகின்றது. எனவே நாமும்

உலக பற்றை விடுவோம்

உன்னதருடன் உள்ள உறவு பற்றில் வளருவோம்

உன்னதரின் உள்ளத்திலே மங்கா இடம் பிடிப்போம்

அருள்திரு. C. **ஜோண்ஸ் ராஜன்**

29-03-2018

**வியாகுல வியாழன்**

# நன்றித் திருவிருந்து : இயேசுவை நினைவுகூர்தல்
## EUCHARIST : THE REMEMBERING JESUS

விப. 12:1-17 | 1 கொரி. 11:23-34
திபா. 116 | மத். 26:17-30

**“இது எனது உடல்... இது எனது உடன்படிக்கையின் இரத்தம்; பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம்.” மத். 26:26,28**

நன்றித் திருவிருந்து, இறைவன் வழிகாட்டிய உன்னத இறைவிருந்து. பழைய ஏற்பாட்டில் வி.ப. 12:1-17-ல் இஸ்ரவேல் மக்களின் வாழ்வில் பஸ்கா பண்டிகையும், பஸ்கா விருந்தும் மிக சிறப்பான இடம் பெற்றிருந்தது. எகிப்து நாட்டில் இஸ்ரவேல் மக்கள் அடிமைகளாய் வாழ்ந்ததையும், அடிமை வாழ்விலிருந்து, இறை பணியாளர்கள் மோசே, ஆரோன் என்பவர்களால் விடுதலையை இறையருளால் பெற்றனர். இந்த மாபெரும் விடுதலையை நினைவு கூடுவதற்காக (வி.ப. 12:14), இந்நாள் உங்களுக்கு ஒரு நினைவு நாளாக விளங்கும். இதனை ஆண்டவரின் விழாவாக நீங்கள் தலைமுறை தோறும் கொண்டாடுங்கள். இந்த விழா உங்களுக்கு நிலையான நியமமாக இருப்பதாக! பஸ்கா பண்டிகை, விருந்து ஆசரிக்க இறைவன் கட்டளையிட்டார். இப்பண்டிகை விருந்து எப்படி ஆசாரிக்கபட வேண்டும் என்பதை கற்றுக் கொடுத்தார். பஸ்கா விருந்தில், ஆட்டுக்குட்டி, அப்பம், திராட்சை ரசம், கசப்புகீரை போன்றவற்றை பயன்படுத்தினார்கள். புதிய ஏற்பாட்டின் காலத்தில் நம் அருள் நாதர் இயேசுகிறிஸ்து, இம்மாபெரும் பஸ்கா பண்டிகையை தம் சீடர்களுடன் கொண்டாட விரும்பினார் (மத். 26:17-30). இயேசுகிறிஸ்து இப்பண்டிகைக்கு புதிய பொருளை அமைத்தார், ஏற்படுத்தினார். தனது, உடல், தனது இரத்தம், மானிடரின் மீட்புக்காக, கொடுக்கப்படும், கிறிஸ்துவின் ஒப்புயர்வான மீட்பின் செயலை நினைவு கொள்வதற்காக, அப்பம், திராட்சை ரசத்தை பயன்படுத்த அறிவுறுத்தினார். நம் மீட்புக்காக கிறிஸ்து பஸ்காவாக, இறைவிருந்தாக தரப்பட்டுள்ளார். கிறிஸ்துவின் தியாகம், விலையேறப்பெற்ற அன்பு நினைவு கூருவதற்காகவும், வியாகுல வியாழன், (பாடுகளின் வியாழன், பெரிய வியாழன்) நற்கருணை, நன்றி விருந்து, இறைவனின் மாபெரும் மீட்பின் விருந்தாக கொண்டாட அழைக்கிறார்.

இறைவிருந்து குறித்த சந்தேகம், நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துகிறது. உலகில் மக்கள், விபத்துக்கள், மருத்துவ அறுவை சிகிட்சைகள், பல்வேறு நோய்களுக்கு இரத்தம் இன்றியமையாத ஒன்று. இரத்த பிரிவு கொடையாளர்கள் (Blood donor) இடமிருந்து இரத்தம் பெற்று தேவைப்படுவோருக்கு கொடுத்து அவர்கள் உயிர் பெறுவதற்கு உதவுகின்றார்கள். மனிதர்களின் இரத்தம் பிறருக்கு உயிர் கொடுக்க முடியும் என்றால் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் மானிட மீட்புக்கு, மானிட பாவ சாபத்துக்கு கருவியாகிறது. உயிரற்ற மானிட வாழ்வுக்கு உயிர் கொடுக்கிறது. ஆகவே நமக்கு உயிராற்றல் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்தும் இறைவிருந்தை ஆசரிக்க கிறிஸ்து, சீடர்களுடன் பஸ்கா பண்டிகை ஆசரித்த நிகழ்வுகளை மத். 26:17 முதல் 30 வரையிலான பகுதிகளை கொண்டு மூன்று உண்மைகளை தியானிப்போம்.

## *1. இறைவிருந்தில் பங்கு கொள்ள ஆயத்தம்* :

மத். 26:17 -ல் “புளிப்பில்லாத அப்ப பண்டிகையின் முதல் நாளிலே, சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து, பஸ்காவை புசிப்பதற்கு நாள்கள் எங்கே உமக்கு ஆயத்தம் பண்ணச் சித்தமாயிருக்கிறீர்” என்று கேட்டார்கள். மத். 26:19-ல் இயேசு கற்பித்தபடி சீஷர்கள் போய், பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்.

உலகில் நாம் எந்த ஒரு செயல் செய்வதற்கும் முழுமையான ஆயத்தம் தேவை. பள்ளிகளில், கல்லூரிகளில், படிக்கின்றவர்கள், தங்கள் படிப்பிற்கான பாடதிட்டங்களை ஆயத்தம் செய்கின்றார்கள். பணி புரிகின்றவர்களும் அதற்குரிய ஆயத்தம் செய்கின்றார்கள். கிறிஸ்துவும் பஸ்கா விருந்தை, ஆயத்தம் பண்ண தகுந்த ஆலோசனை கூறுகின்றார். சீஷர்களும் அதன்படி ஆயத்தம் செய்தார்கள். பஸ்காவிருந்தை, யூத பாரம்பரியத்தின் படி ஆயத்தம் செய்ய குறைந்தது ஒரு நாள் அல்லது இரண்டு நாள் ஆகும். இதுபோல இறைவிருந்தில் பங்கு கொண்டு இறைவனுக்கு நன்றி செலுத்த நம்மை ஆயத்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். ஜேன் வெய்ட் (Jane Whyte) என்பவர், தன்னுடைய துணைவர் அலெக்சாண்டர் (Alexander) என்பவருடன், ஸ்காட்லாந்த் நாட்டில் அருள்பணியாற்றி வந்தார்கள். திடீரென்று அலெக்சாண்டர் அவர்கள் நோயுற்று, இறைமகிமைக்குள் பிரவேசித்தார். இவருடைய திடீர் மரணம், ஜேன் வெய்ட் அவர்களை மிகவும் கடினமான, தனிமை வாழ்வுக்குள் தள்ளியது. தன் வாழ்க்கையை வெறுப்பாக எண்ணினார். உயிர்

வாழ்வதற்கு விரும்பாமல் சாவதற்கு தன்னை ஆயத்தம் செய்தார் (Preparing to die). அப்போது, அருட்பணியாளர் ஒருவர் இவருடைய வேதனையில் தகுந்த ஆலோசனை வழங்கி, நீங்கள் ஏன் வாழ்வதற்கு ஆயத்தமாக கூடாது என்றார் (Preparing to live). அதன் பிற்பாடு, ஜேன் வெய்ட், கிறிஸ்துவின் அருட்பணியை மிகசிறப்பாக நிறைவேற்றி, பிறரை இறைவருகைக்கென்று ஆயத்தப்படுத்தினார்கள்.

இறைவிருந்தில் பங்கு கொள்ள நம்மை இரண்டு விதமான நிலைகளில் ஆயத்தம் செய்ய வேண்டும்.

i) **தனி வாழ்வில் தூயவாழ்வுக்கான ஆயத்தம் :**

1கொரி. 11:27 "ஆகவே, எவராவது தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்ததிற்கும் எதிராக் குற்றம் புரிகிறார்." 1கொரி. 11:28 எனவே ஒவ்வொருவரும் தம்மையே சோதித்தறிந்த பின்பே இந்த அப்பத்தை உண்டு, கிண்ணத்தில் பருக வேண்டும்.

ii) **குடும்பங்களில் இறைமீட்புக்கான ஆயத்தம் :**

தனிவாழ்வில் எத்தகைய தூய வாழ்வை நாம் கடைபிடிக்கின்றோமோ அதுபோல குடும்பங்களில் இறைமீட்புக்கான ஆயத்தம் காணப்பட வேண்டும். வி.ப. 12:24,25,27. இதன்படி, இஸ்ரவேல் குடும்பங்கள் இறை மீட்பை பெற்றுக்கொள்ள தங்களை ஆயத்தப்படுத்தினார்கள். தலைமுறை தலைமுறை தோறும் நித்திய நியமமாக ஆசாரிக்க ஆயத்தம் பண்ணி கொள்ள இறைவன் கட்டளையிட்டார். குடும்பங்கள், இறைவிருந்திலும், இறைபணிகளிலும் இறைமீட்பை பெறுவதிலும் தங்களை ஆயத்தம் பண்ணி கொள்ள இறைவன் விரும்புகிறார்.

## *2. இறைவிருந்து இறை உறவின் அனுபவம்* :

மத். 26:20,26,27 மாலை வேளையானதும் அவர் பன்னிருவரோடும் பந்தியில் அமர்ந்தார். அதன்பின் உணவருந்தினார்கள். உணவு, பந்தியில் அமர்ந்து உட்கொள்ளும் போது புது உறவு ஏற்படுகிறது. சீஷர்களுடன் கிறிஸ்து புது உடன்படிக்கையை பஸ்கா விருந்தின் வழியாக ஏற்படுத்தினார். நாமும் இறைவிருந்தில் பங்கு கொள்ளும்போது இறை உறவின் அனுபவமாகிறது. அனுபவம் (Experience) வாழ்வின் பல்வேறு தருணங்களில் அமைகிறது. இன்ப சுற்றுலா செல்லும் போது, புதிய இடங்களை பார்வையிடும் போது, பணியிடை மாற்றங்கள், புதிய

அனுபவங்களை உருவாக்குகிறது. இறைவிருந்தில் பங்கு கொள்ளும் போது, கிறிஸ்துவின் பாடுகள், அவர் மரணம், உயிர்ப்பெற்று எழுந்தது நம் வாழ்வின் முழுமையான அனுபவமாகிறது. 1கொரி. 11:26-ல் ஆதலால் நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள். இறைஉறவின் அனுபவத்தை, கண்ணார கண்டும் கேட்டும், உணர்ந்த சீடர்கள், இறை விருந்துக்கு பின், யூதாஸ் என்ற சீடர், 30 வெள்ளிக்காசுக்கு ஆசைபட்டு, முத்தத்தில் குற்றமில்லாத கிறிஸ்துவை காட்டி கொடுத்தான். இதை கிறிஸ்துவும் பஸ்கா விருந்தில் தெளிவாக கூறினார். மத். 26:21ன் படி அறிந்துக் கொள்ளலாம். மேலும், பேதுரு மூன்றுமுறை மறுதலிப்பதையும் சீடர்கள் கிறிஸ்துவைவிட்டு ஓடி போனார்கள் என்பதையும் கூறினார். மத். 26:31,34 இறைவிருந்தில் பங்குகொள்ளும் நாம் இறைஉறவின் அனுபவத்தில் நிலைத்து நிறக் வேண்டும். இறைவனை, மறுபடியும் சிலுவையில் அறைய ஒப்பு கொடுக்காமல், இறைவன் விரும்பா செயல்களை செய்யாமல் தூயவராக வாழ வேண்டும்.

## *3. இறைவிருந்து இறையரசின் அடையாளம்* :

மத். 26:28 “இது எனது உடன்படிக்கையின் இரத்தம்; பலருடைய பாவமன்னிப்புக்காக சிந்தப்படும் இரத்தம்.” இறைவிருந்தில் நாம் பங்கு கொள்ளும் போது, நாம் இறையரசின் முன்சுமையை உணர முடிகிறது. நமது நோக்கம் உலக வாழ்விற்கு பின் இறைவன் அருளும் விண்ணக வாழ்வையும், இறையரசில் பங்கு பெறுவதையும் சுதந்தரிப்பதுமாகும். கிறிஸ்து தம்மையே வாழ்வு வழங்கும் அப்பமாக தந்துள்ளார். யோவா. 6:48 “வாழ்வுதரும் உணவு நனே” மேலும் இஸ்ரவேல் மக்கள் பாலை நிலத்தில் மன்னாவை உண்ட போதிலும் இறந்தனர். உண்பவரை இறவாமல் இருக்கச் செய்யும் உணவு விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வர் (யோவா. 6:49-51). (யோவா. 6:52-58) இதன்படி இறைவிருந்து இறையரசின் அடையாளமாக காட்டப்பட்டுள்ளது. யோவா. 10:11-ல் நல்ல ஆயன் நானே, நல்ல ஆயன் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார். இறைமக்கள் வாழ்வுக்காக அவரை பின்பற்றுபவர்கள் ஆன்ம ஈடேற்றத்திற்காக கிறிஸ்து தம் விலையேறப்பெற்ற உயிரை தந்துள்ளார். இறைவிருந்து நன்றி விருந்து வெறும், சடங்கு, சம்பிரதாய செயல் அல்ல, பிறரையும், உலக மக்களையும், இறையரசுக்கு அழைத்து செல்லும் தூய நற்கருணை. இதில் பங்கு பெறுவோர் அனைவரும் கிறிஸ்து தம் உயிரை கொடுத்து மீட்பு

அருளினாரே. அதுபோல், உலக மக்கள் துயரில் இருப்போர், கஷ்டங்கள், நோயால் இருப்போர், ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர், வயதுமுதிர்ந்த பெற்றோர், சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டவர்கள் அனைவரும் இறையரசு பெற்றுக் கொள்ள நாம் பேசுவதிலும், இறைவிருந்தில் பங்கு கொள்வதுடன் நின்றுவிடாது செயலாக்கம் புரிய வேண்டும். 2009 செப்டம்பர் மாத தொடக்கத்தில் கேரளாவில் இறைபணி செய்து கொண்டிருந்த அருள்பணி.டேவிஸ் சிரமல் என்பவர் தம், இறைபணி இடத்தின் அருகில் கோபிநாத் என்ற இளைய வயதுடையவரின், துயர நிலையை கேள்விப்பட்டார். பிற சமயத்தை சார்ந்தவர், துணைவி, 2 குழந்தைகளுடன் ஏழ்மையான வாழ்வாதாரத்தைக் கொண்டிருந்தார். அவருடைய 2கிட்னியும், சரீரத்தில் செயல்பட மறுத்தது. மருத்துவர்கள், அவர் உயிர்பிழைக்க வேண்டுமென்றால், கிட்னி கொடுத்தால் பிழைக்க வைக்க முடியும் என்றார்கள். ஒருவரும் உதவமுன் வரவில்லை. அருள்பணி டேவிஸ் சிரமல் (Davis Chiramal) தன்னுடைய ஒரு கிட்னியை, அந்த தேவையோடு இருந்த நபருக்கு கொடுத்தார். இருவரும் உயிர் பெற்றனர். நாமும் இறைவிருந்தை, இறையரசின் அடையாளமாக உலகில் நம் வாழ்வு, செயல்கள் மூலம் கொண்டு செல்ல வேண்டும்.

இறைவிருந்து, மாபெரும் நன்றிவிருந்து, இயேசுகிறிஸ்துவை நினைவு கூர்ந்து, பங்கு கொள்ள வேண்டும். பங்கு கொள்ளும் போது நம்மையும் நம் வாழ்வையும் தற்சோதித்தறிந்து, முழு ஆயத்தத்ததுடன் இறைஉறவின் அனுபவமாக உணர்ந்து, இறையரசின் அடையாளமாக ஏற்று கொண்டு பிறரையும் இவ்விருந்தில் அழைத்து வருவோம், வாருங்கள் இறைவன் நம்மை பந்திக்கு அழைக்கிறார்.

அருள்திரு. S. **டேவிட் ஜோசப் ராஜ்**

30-03-2018

**புனித வெள்ளி**

# சிலுவை : இறப்பின் இறப்பு

## CROSS : DEATH OF DEATH

எண். 21:1-9 1 கொரி. 15:50-58
தி.பா. 22 மத். 27:1-56

**"...சாவு முற்றிலும் ஒழிந்தது; வெற்றி கிடைத்தது."** 1கொரி. 15:54b

பூமியில் பிறந்த உயிரினங்கள் எல்லாவற்றிற்கும் இறப்பு என்று ஒன்று உண்டு. ஒரு மனிதன் வளமையாக இருப்பதற்கு வாழ்வை விட சாவு மிக அவசியமாகிறது என்கிறார் தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள். எப்படியென்றால் இறப்பை பற்றி அடிக்கடி சிந்திப்பது நமது வாழ்விற்கு வளமை சேர்க்கின்ற ஒன்றாக இருக்கிறது. மனித வாழ்வின் சிறப்பு பிறர் மைய வாழ்வில் தான் அடங்கியுள்ளது. இதனை இறப்பு நமக்கு நினைவூட்டுகிறது.

முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் துன்பத்தை துன்பத்தால் வெல்ல வேண்டும் என்பதை போல இறப்பை இறப்பினால் சிலுவையில் வென்றவர் இயேசு என்பதை திருமறை அறிவுறுத்துகிறது. எசாயா இறைவாக்கினரின் இறைவார்த்தையின் நிறைவேறுதலை திருத்தூதரான பவுலடியார் கொரிந்தியர் நிருபத்தில் இறப்பை ஜெயமாக மாற்றியதை குறிப்பிடுகின்றார். எசாயா 25:8-ல் "என்றுமே இல்லாதவாறு சாவை ஒழித்துவிடுவார் என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரை துடைத்து விடுவார் தம் மக்களுக்கு ஏற்பட்ட நிந்தையை இம்மண்ணுலகில் அகற்றிவிடுவார்." நிலத்திலே விதைக்கப்பட்ட விதை மடிந்து போவதில்லை; மாறாக அது மறுபடியும் முளைத்து கனி கொடுக்கிறது. அது போல தான் இயேசுகிறிஸ்துவின் சிலுவைமரணம் மடிந்து போவதற்காக அல்ல; மாறாக மானிடம் மீட்படைவதற்காக இறப்பிற்கு இறப்பை கொடுத்தது சிலுவை.

இந்தியாவின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படும் சாதுசுந்தர் சிங் சீக்கிய மதத்திலிருந்து கிறிஸ்தவ சமயத்திற்கு மாறிய பின்பு வட இந்தியாவில் கிராமங்களில் சென்று இயேசுவை போதித்தார். ஒருமுறை ஒரு கிராமத்தில் மக்கள் திரளாய் கூடி நின்று வேடிக்கை பார்ப்பதைக் கண்டு என்னவென்று பார்க்க சென்றவர், அதிர்ந்து போனார். அங்கே

ஒரு எருமையை வாளால் காயப்படுத்தி மிளகாய் பொடியை வைத்து தேய்த்தனர். இதற்கான காரணத்தை கேட்டபோது பாவத்தின் பரிகாரம் என்றனர். பலி செலுத்தி தங்களை பாவ வாழ்விலிருந்து விடுவித்துக் கொள்வதாக கூறினர். யூதர்களும் பலி செலுத்துவதால் அனைத்து பாவங்களும் மன்னிக்கப்படும் என நம்பினர். இந்த நிலையை மாற்றிட, மானிடத்தை மீட்டிட தன் ஒரே மைந்தனான இயேசுவை சிலுவையிலே தந்தார்.

சிலுவையில் இயேசுகிறிஸ்துவின் இறப்பு எப்படிப்பட்ட மாற்றத்தை தந்தது என்று மூன்று கேள்விகளை சிந்தனையாக்கி விடை காண முயலுவோம்.

## *1. இயேசுவின் சிலுவை இறப்பு : இன்னலா? இன்பமா?*

வாழ்க்கை என்பது இன்பமும், இன்னலும் இணைந்து செல்கின்ற அழகான பயணம். இன்பம் வரும் போது மகிழ்வதும் துன்பம் வரும் போது துயரப்படுவதும் மனித இயல்பு. நல்வினை வரும்போது மகிழும் மனித இனம் தீவினை வரும்போது துன்பப்பட்டு கலங்குவதேனோ என்று வள்ளுவர் கேள்வி எழுப்புகின்றார்.

> “நன்றாங்கால் நல்லவாக் காண்பவர்; அன்றாங்கால்
> அல்லல் படுவது எவன்”

இவ்வுலகில் வாழும் அனைவரும் இன்பத்தைத் தான் விரும்புகின்றோம், இன்னலை எவரும் விரும்புவதில்லை. இன்று நம்முன் வைக்கப்படுகின்ற முதல் கேள்வி இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் இன்னலா? இன்பமா? என்பது தான்.

“சிலுவை” என்ற வார்த்தை கிரேக்கத்தில் “Stauros” லத்தீன் மொழியில் “crux” என்றும் வருகிறது. இதன் பொருள் “துன்பத்திற்குரிய கழுமரம்” என்பதாகும். இயேசு கிறிஸ்து சிலுவையை சுமப்பதற்கு முன்பு வரை சிலுவை என்பது இன்னலின் அடையாளமாகத்தான் கருதப்பட்டது. அப்படிப்பட்ட இன்னல் நிறைந்து காணப்பட்ட சிலுவையில் இயேசுவின் மரணமானது மனித வாழ்விற்கு இன்பமாக மாறியது. அறிஞர் ஒருவர் சொன்னார்,

> “இன்பத்தை விட இன்னல்கள் கற்றுக் கொடுக்கும் பாடம்
> வாழ்விற்கு அச்சாணி போன்றது” என்று

‘புயலுக்குப் பின் அமைதி’ என்பதைப் போல இன்னலுக்குப் பின்னால் இன்பம் இருக்கிறது என்பதற்கு அநேக முன்னோர்களின் வாழ்க்கை சான்றாகிறது.

- துன்பத்தைக் கண்ட பின்பு தான் புத்தர் என்பவர் ஞானியாகிறார்
- தென்னாப்பிரிக்காவில் கருப்பின மக்களின் துன்பத்தைக் கண்ட பின்பு தான் இந்தியாவின் சுதந்திரத்திற்காக போராட காந்தியடிகள் புறப்பட்டார்.
- தென் அமெரிக்கா மக்களின் துன்பத்தைக் கண்ட பின்பு தான் பேராயர் ரொமேரோ புரட்சியாளராக மாறினார்.

இதைப் போன்று தான் இயேசு கிறிஸ்துவின் இன்னல்கள் தான் மனித வாழ்விற்கு மீட்பினை தந்தது. ஏசாயா இறைவாக்கினர் குறிப்பிடும் போது "மெய்யாகவே அவர் நம் துன்பங்களை சுமந்து கொண்டார்" (எசா. 53:4).

"நம் குற்றங்களுக்காக காயமடைந்தார்; நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார்; நமக்கு நிறைவாழ்வு அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார்; அவர் தம் காயங்களால் நாம் குணமடைகிறோம்" (எசா. 53:5). இயேசு கிறிஸ்துவின் இறப்பின் வழியாய் இன்பமான வாழ்வை பெற்றிருக்கும் நாம் இயேசு கிறிஸ்து அடைந்த இன்னலை உணர்ந்து பாவ வாழ்வை விட்டகன்று வாழ வேண்டும். நமக்காக இயேசு பாடுபட்டார், நம்மேல் விழுந்த சுமையை அவர் சுமந்தார் என்கிற சிந்தனையோடு நாம் சிலுவையை காண வேண்டும். அழகு பொருளாய், அணிகலனாய் சிலுவையை அணிந்து இன்பம் காண்பதை விட சிலுவையின் மீட்பினை நம் உள்ளத்தில் நினைந்து இறைவழி நடந்து இன்பம் காண வேண்டும்.

## *2. இயேசுவின் சிலுவை இறப்பு : சாவா? சரித்திரமா?*

இறப்பு என்பது நம் அன்றாட வாழ்வில் நிகழும் நிகழ்வு. அவை மூன்று விதமாக அமையலாம். வயதின் முதிர்ச்சியினால் இயற்கையாக ஏற்படுவது, எதிர்பாராத நிலையில் விபத்து, இயற்கை அழிவின் மூலம் ஏற்படுவது, மனமுடைந்து தன்னைத் தானே மாய்த்துக் கொள்வது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் சிலுவை சாவோடு முடிந்து விடவில்லை; மாறாக, சரித்திரமாக மாறியது. யூதர்கள் இயேசுவுக்கு சிலுவையில் கொடுக்கப்படும் மரணம் வாழ்வின் முடிவு என எண்ணினார். ஆனால் மூன்றாம் நாளில் இயேசு உயிரோடு எழுந்து சாவை சரித்திரமாய் மாற்றினார். அதோடு பாவத்தின் சம்பளமான மரணத்தையும் வென்று மனித வாழ்விற்கு நித்திய வாழ்விற்கான நம்பிக்கையையும் கொடுத்தார். 2கொரி. 13:4-ல் இயேசு வலுவற்றவராய் சிலுவையில் அறையப்பட்டார். ஆனால் கடவுளின் வல்லமையினால் அவர் உயிர் வாழ்கிறார். அவருடைய

வலுவின்மையில் பங்கு பெறும் நாங்களும் உங்கள் பொருட்டு கடவுளின் வல்லமையால் அவரோடு வாழ்கிறோம். 1கொரி. 15:55,56-ல்

"சாவு முற்றிலும் ஒழிந்தது. வெற்றி கிடைத்தது"

"சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?"
"பாவமே சாவின் கொடுக்கு. பாவத்தின் வலிமை தருவது திருச்சட்டமே"

ஆம்! இயேசு கிறிஸ்துவின் இறப்பு வழியாக ஆண்டவர் சாவில் இருந்து வெற்றியை தருகிறார்.

கவிஞர் அப்துல் ரகுமான் "ஆலாபனை" என்னும் நூலில் சொல்கின்றார். "மரணம்" என்பது அழகானது. மரணம் என்பது முடிவல்ல அது இன்னொன்றின் தொடக்கமாக அமைகிறது. பூவின் மரணத்தில் காய் பிறக்கிறது; இரவின் முடிவில் விடியல் பிறக்கிறது; கன்னிமையின் மரணத்தில் தாய்மை பிறக்கிறது. இயேசு கிறிஸ்துவின் முடிவு பல சரித்திரங்களை உருவாக்கியது.

- மரணத்திற்கு பின் உயிர்தெழுதலும் உண்டு என்பதற்கு இயேசுவின் உயிர்த்தெழுதல் சரித்திரமாக, Easter தினமாக ஆசரிக்கப்படுகிறது.
- இயேசு கிறிஸ்துவின் இறப்பை கணக்கிட்டு உலக சரித்திரத்தில் கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்கு பின் என சரித்திரம் படைத்தது.
- INRI இயேசுவை அறைந்த சிலுவையில் "நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா" என்று பிலாத்து ஒரு மேல் விலாசத்தை எபிரேயு கிரேக்க லத்தீன் மொழிகளில் எழுதினார் (யோவா. 19:19-22). இயேசு யூதருக்கு ராஜா என்பது சரித்திரமாய் இருக்கிறது.

ஜெர்மன் தேசத்திலே விட்டன் பர்க் நகரிலே இருக்கின்ற ஒரு பெரிய தேவாலயத்தின் கோபுரத்தின் உச்சியிலே ஒரு செம்மறி ஆட்டுக்குட்டி இருக்கிறது போல வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் ஆலயத்தின் கீழ்புறத்தில் பின்வருமாறு சரித்திரமாக சான்று பகிர்கிறது. அதாவது இந்த ஆலயத்தின் கோபுரத்தை வடிவமைத்த கட்டிட கலைஞர் வடிவமைத்துக் கொண்டிருக்கும் போது எதிர்பாராத நிலையில் கீழே விழுந்தார். உடன் பணியில் ஈடுபட்டிருந்தோர் இவர் இறந்து போய் இருப்பார் என்ற கவலையோடு வந்து பார்க்க, அவர் சில காயங்களோடு பிழைத்துக் கொண்டார். காரணம் அவர் விழுந்தது ஒரு ஆட்டுக் குட்டியின்

மேல். அந்த ஆட்டுக்குட்டி இறந்தது. அதன் நினைவாக ஆட்டுக்குட்டி ஆலயத்தின் கோபுரத்தில் சரித்திரமாக சான்று பகர்கிறது. இதை போலத்தான் பாவத்தில் விழுந்த நம்மை மீட்க சாவைத் தான் சுமந்து சிலுவையை சாவின் கருவியாய் அல்லாமல் சரித்திரத்தின் அடையாளமாக மாற்றினார் இயேசு.

## *3. இயேசுவின் சிலுவை இறப்பு : நாணமா? நம்பிக்கையா?*

இயேசு கிறிஸ்துவின் இறப்பைக் குறித்து எழுப்பப்படுகின்ற மூன்றாவது கேள்வி நாணமா? இல்லை நம்பிக்கையா? பாலஸ்தீன நாட்டில் இயேசு வாழ்ந்த காலத்தில் சிலுவை என்பது அவமானத்தின் சின்னமாக கருதப்பட்டது. இந்த அவமானத்தின் சின்னத்தை மனித வாழ்வின் நம்பிக்கைக்காக சகித்தார் என்று எபி. 12:2 -ல் காண்கிறோம்.

"...தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின் பொருட்டு இழிவையும் பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக்கொண்டார். இப்போது கடவுளுடைய அரியணையின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார்." மத். 27:42-ல் "பிறரை விடுவித்தான்; தன்னையே விடுவிக்க இயலவில்லை. இவன் இஸ்ரயேலுக்கு அரசனாம்; இப்போது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும்" என நிந்தித்து அவமானபடுத்தினார்கள். மாற். 15:20-ல் "இயேசுவை ஏளனம் செய்த பின் செந்நிற ஆடையை கழற்றிவிட்டு அவருடைய ஆடைகளை அணிவித்து" என்று நாணப்பட வைக்கிறதை காண்கிறோம். மத். 27:47-ல் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட கள்வர்களும் "கடவுளிடம் இவன் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தானே! இப்போது இவனை விடுவிக்கட்டும், நான் இறைமகன்" என்றான என்று கூறி இகழ்ந்தார்கள்.

அகல்விளக்கு என்றாலும், தீப்பந்தம் என்றாலும் வெளிச்சம் தருவது தான் அதின் தனித்தன்மை. கந்தைத் துணியானாலும், காய்ந்த துணியானாலும் சுமப்பது தான் கழுதையின் குணம். கசையடித்தும், காயப்படுத்தியும், நாணப்படுத்தியும், அவமான சின்னமான சிலுவை இயேசுவை சுமக்கும் போது அது நம்பிக்கையின் படுக்கையாக மாறுகிறது. பழைய ஏற்பாட்டில் எண். 21:1-9 வரையுள்ள வசனங்களை படிக்கும் போது இஸ்ரவேல் மக்களின் விடுதலை பயணத்தில் ஏதோம் தேசத்தை சுற்றிப் போகும்படிக்கு சொன்ன போது மனமடிவாகி கடவுளுக்கும் மோசேக்கும் விரோதமாய் முறுமுறுத்தனர். அதினிமித்தம் கொள்ளிவாய் பாம்பு கடித்து இறந்து போனார்கள். பின்பு தங்கள் பாவத்தை உணர்ந்து கடவுளிடம்

மோசேயும் மக்களும் முறையிட்ட போது ஒரு வெண்கல பாம்பைச் செய்து கம்பத்தின் மேல் வைக்கவும், கடவுள் மோசேக்கு கட்டளையிட்டார். அதின்படியே பாம்பு கடித்த போது மோசேயினால் செய்யப்பட்ட வெண்கல பாம்பை நம்பிக்கையோடு நோக்கிப் பார்த்தவர்கள் உயிர் பெற்றார்கள்.

பாம்பினால் கடியுண்ட இஸ்ரவேலர் உயர்த்தப்பட்ட வெண்கலத்திலான பாம்பை உற்று நோக்கி உயிர் பெற்றதை போல சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசுவை நம்பிக்கையோடு உற்று நோக்கும் போது வாழ்வு கிடைக்கும். ஆம் இயேசுவின் சிலுவை மரணம் நாணத்தை அல்ல; நம்பிக்கையைத் தான் தருகிறது. 1கொரி. 1:18-ல் பவுலடியார் சொல்லுகின்றார், "சிலுவை பற்றிய செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே ஆனால் மீட்பு பெறும் நமக்கோ அது கடவுளின் வல்மை" வாழ்வு கப்பலில் அவமான அலைகள் எழுந்தாலும், நீலத்திமிங்கலம் போன்ற துன்பங்கள் விளையாட்டு வழியில் நம்மை நாணமடைய செய்தாலும் சிலுவையை நோக்கிப் பார்த்து நம்பிக்கையின் நங்கூரமாய் கடவுளை பற்றிக் கொள்கையில் ஆண்டவர் நமக்கு வாழ்வு தருவார். கடவுளிடம் நம்பிக்கை கொண்டு பக்தன் பாடுகின்ற போது

"சிலுவையண்டையில் நம்பி வந்து நிற்கையில்
பாவ பாரம் நீங்கி வாழ்வடைந்தேன்
எந்த நேரமும் எனதுள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கி பாடுவேன்" என்கிற வரிகள் சிலுவையின் நம்பிக்கையை நமக்குத் தருகிறது.

திரு. C. **ஜெபக்குமார்**

31-03-2018

**புனித சனிக்கிழமை**

# புதுவாழ்வுக்கான எதிர்நோக்கு
## HOPE FOR THE NEW LIFE

தானி. 12:1-4 | 1 பேது. 4:12-19
தி.பா. 4 | மத். 27:62-66

***"இறந்துபோய் மண்புழுதியில் உறங்குகிற அனைவருள் பலர் விழித்தெழுவர்...."*** **தானி. 12:2a**

அமைதியின் நாள் என்றழைக்கப்படும் இந்த புனித சனிக்கிழமை மனிதனுடைய வாழ்வில் இருள் வாழ்வின் இறுதிநாள். நம்பிக்கையற்ற மானுடத்தின் துன்ப வாழ்வின் முடிவு நாள். கிறிஸ்துவை சாகடித்து, கிறிஸ்தவ நம்பிக்கையை ஒழித்து உயிர்த்தெழுதலே இல்லாமல் ஆக்கி, மனித ஆற்றலால் இறை ஆற்றலை மேற்கொண்டு விடலாம் என்ற எண்ணத்தோடு செயல்பட்ட பகைவர்களின் எண்ணத்தை தகர்த்து, தம்மை ஏற்றுக்கொண்ட மக்களின் வாழ்வில் ஒரு புதிய நம்பிக்கையை உருவாக்கி, ஒரு புதிய வாழ்விற்கான எதிர்நோக்கினை ஆண்டவர் ஏற்படுத்துகிறார். ஆண்டவர் அருளும் இந்த புதிய வாழ்வு எத்தகையது என்பதை சிந்திப்போம்.

***1. முடிவில்லா வாழ்வு*** : (தானி. 12 : 2b)

"....அவர்களுள் சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவர்."

உயிர்த்தெழுதலை பற்றி பொதுவாக போதிக்கப்படாத காலகட்டத்தில், இத்திருமறை பகுதி நல்லவர்கள் மற்றும் தீயவர்களின் உயிர்ப்பு பற்றிக் குறிப்பிடுகிறது. மரணம் மனிதர் எல்லாருக்கும் பொதுவானது, அம்மரணமே மனித வாழ்வின் முடிவு என்று நம்பப்பட்ட சூழலிலே, மரணத்திற்குப் பின்பு ஒரு வாழ்வு உண்டு என்ற கூற்று ஒரு புதிய நம்பிக்கையை தருகிறது.

ஆண்டவர் நமக்கு ஆயத்தப்படுத்தியிருக்கும் இந்த முடிவில்லா வாழ்வினை பெற நம்மை தகுதிப்படுத்த வேண்டியது அவசியம். (தானி. 12:1b)இன் கூற்றுப்படி ஆண்டவரின் நூலில் யார் யார் பெயர் எழுதப்பட்டுள்ளதோ அவர்களே மீட்கப்படுவார்கள். ஏனென்றால் உயிர்த்த ஆண்டவர் அருளும் இந்த முடிவில்லா வாழ்வு என்பது நல்லவர்களுக்கே உரியது, இறைபற்றாளர்களுக்கே உரியது, நிதியை

நடப்பிக்கிறவர்களுக்கே உரியது, இறை கட்டளைக்கு கீழ்படிபவர்களுக்கே உரியது. எனவே நாம் நல்லவர்களாக, இறைப்பற்றாளர்களாக, நீதியை நடப்பிக்கிறவர்களாக, இறை கட்டளைகளுக்கு கீழ்படிகிறவர்களாக வாழ்ந்து, இந்த முடிவில்லா வாழ்வை சொந்தமாக்குவோம்.

***2. மகிழ்வின் வாழ்வு :*** (1பேது. 12 : 13)

"மாறாக கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்கு கொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள்."

கிறிஸ்தவ வாழ்வில் ஏற்படும் துன்பங்களையும், நிந்தைகளையும் வீரத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது திருதூதர் பேதுருவின் அறைகூவல். ஏனென்றால் அது முடிவில் மகிழ்வை தருகிறது. கிறிஸ்துவின் மரணத்தினால் சீடர்களின் வாழ்வு கேள்விக்குறியாகியது. துன்பம் தான் வாழ்வு என்ற நம்பிக்கையற்ற சூழலில், கிறிஸ்துவின் உயிர்ப்பு புதிய நம்பிக்கையையும், புதிய உத்வேகத்தையும் தந்தது. எனவே கிறிஸ்துவுக்காக இன்றும் துன்புற தயாராயினர், அதுவே அவர்களின் மகிழ்வின் வாழ்வுக்கு அடிகோலியது. இந்த அனுபவத்தை தான் திருதூதர் பேதுரு, 1பேதுரு 12:13b யில் குறிப்பிடுகிறார்.

இன்று கிறிஸ்தவர்களாக நாம் துன்பம் ஏற்க தாயாரா?. 1பேதுரு 12:16-ல் "நீங்கள் கிறிஸ்தவராயிருப்பதால் துன்புற்றால், அதற்காக வெட்கப்படலாகாது, அந்த பெயரின் பொருட்டுக் கடவுளை போற்றி புகழுங்கள்" என்று பேதுரு குறிப்பிடுகிறார். எனவே நாம் கிறிஸ்துவுக்காய் துன்பங்களை ஏற்று, அதன் வழியாய் அவர் அருளும் மகிழ்வின் வாழ்வை ஏற்றுக்கொள்வோம்.

***3. தடையகன்ற வாழ்வு :*** (மத். 27 : 66)

"அவர்கள் போய் கல்லறையை மூடியிருந்த கல்லுக்கு முத்திரையிட்டு, காவல் வீரரைக் கொண்டு கருத்தாய்க் காவல் செய்ய ஏற்பாடு செய்தார்கள்."

இறை ஆற்றலை மனித ஆற்றலால் தடுக்கலாம் என்பது மனிதனின் எண்ணம். இந்த எண்ணத்தோடு இயேசுவின் கல்லறைக்கு முத்திரையிடப்பட்டு காவல் ஏற்பாடு செய்யப்படுகின்றது. கிறிஸ்துவை கொன்று விட்டோம், உயிர்தெழுதலைப் பொய்யாக்கி விட்டோம் என்று கொக்கரிக்கலாம் என்ற மனித எண்ணத்தை இறைவன் தவிடு பொடியாக்குகிறார். அனைத்து தடைகளையும் தாண்டி இயேசு உயிர்த்தெழுந்து, இறை ஆற்றலை மனித ஆற்றலால் தடுக்க இயலாது என்பதை திட்டமாக்குகிறார்.

மனித ஆற்றலால் வாழ்வில் எத்தகைய பிரச்சனைகளும் போராட்டங்களும் ஏற்பட்டாலும், இறை ஆற்றலுக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும் போது, வாழ்வில் எல்லா தடைகளும் அகலுகிறது. எனவே மனித ஆற்றலை நம்புவதை விட்டு, இறை ஆற்றலுக்கு நம்மை ஒப்புக்கொடுத்து, தடை அகன்ற வாழ்வினை நம்மில் பெற்றுக்கொள்வோம்.

கல்லறை மனித வாழ்வின் இறுதி என்ற எண்ணத்தை அழித்து, கல்லறை ஒரு புதிய வாழ்வின் துவக்கம் என்ற ஒரு புதிய உடன்படிக்கையினை இயேசுகிறிஸ்து தம் மரணம் மற்றும் உயிர்தெழுதலினாலே ஏற்படுத்தியிருக்கிறார். இறைவன் தரும் புதிய வாழ்வு என்பது முடிவில்லா வாழ்வாக, மகிழ்வின் வாழ்வாக, தடை அகன்ற வாழ்வாக அமைகிறது. நாம் இந்த புதிய வாழ்வினை நம்பிக்கையுடன் எதிர்நோக்கி இறைச் சான்றாளர்களாய் வாழ்வோம்.

திரு. D.S. **எபநேசர் சாமுவேல்**

01-04-2018

**உயிர்ப்புப் பெருவிழா**

# உயிர்ப்பு : மீட்பின் மகிழ்வைக் கொண்டாடுதல்

**RESURRECTION : CELEBRATING THE JOY OF SALVATION**

| | |
|---|---|
| வி. ப. 14:5-31 | கொலோ. 3:1-11 |
| தி.பா. 118:14-29 | மத். 28:1-10 |

**"..நீங்கள் அஞ்சாதீர்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என எனக்குத் தெரியும். அவர் இங்கே இல்லை; அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார் அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்."** மத். 28:5,6

இயேசு இந்த உலகில் திருப்பணி செய்த காலத்தில் சீடரிடம் பலமுறை தமது மரணத்தைப் பற்றியும் உயிர்த்தெழுதலைப் பற்றியும் பலமுறை முன்னறிவித்தார் (மத். 16:21; 17:9; 20:18,19; 26:31,32). ஆனால் இயேசுவின் சீடர்களாய் அவரது மரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் அவரது உயிர்த்தெழுதலைப் பற்றி அவர் கூறியதை புரிந்துக்கொள்ள இயலவில்லை. இதனால் இயேசுவின் மரணம் அவரது சீடர்களின் வாழ்வில் பெரும் அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும், நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தியது. லூக். 24:20,21-ல் அவர் இஸ்ரவேலை மீட்டு இரட்சிப்பவர் என நம்பியிருந்தோம், ஆனால் நமது தலைவர்கள் அவரைக் கொன்றுவிட்டார்கள் என ஏங்கும் சீடரின் உணர்வுகளைக் காணலாம். ஏனெனில் இயேசுவை நம்பி தங்கள் குடும்பம், தங்கள் உறவுகள், தங்கள் தொழில் அனைத்தையும் விட்டு வந்தவர்கள் இவர்கள். இந்த நிலையில் இயேசு உயிர்த்தெழுந்தார் என்கின்ற செய்தியையும் உயிர்த்தெழுந்த இயேசுவை சந்தித்த நிகழ்வுகளும் அவரை நம்பின மக்கள் அனைவரின் உள்ளத்திலும் பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அந்த மகிழ்ச்சியை அவர்கள் அனுபவித்த முறைகள் இன்று கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கொண்டாடும் நமக்கு உண்மையான உயிர்த்தெழுதலின் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்கு மாதிரியாக உள்ளது. அவற்றை இன்று சிந்திப்போம்.

## *1. அன்பைப் புதுப்பித்துக் கொண்டாடுவோம்* :

(யோவா. 21 : 17)

பேதுரு உற்சாகமுள்ள சீடன், சீடர் கூட்டத்தில் இயேசுவுடன் மிக நெருக்கமானவன். இயேசுவை அவரது பணியை நன்கு அறிந்தவன். எனவே இயேசு அவன்மீது தனது சபையைக் கட்டுவேன் என

முன்னறிவித்திருந்தார் (மத். 16:15-19). இயேசு நீ என்னை மறுதலிப்பாய் என்ற போது உம்மோடு சேர்ந்து இறக்கவேண்டி இருந்தாலும் உம்மை ஒருபோதும் மறுதலிக்கமாட்டேன் என்று உறுதியுடன் கூறினார் (மத். 26:34,35). ஆனால் கடினமான சூழ்நிலை ஏற்பட்ட போது தன்னைக் காத்துக்கொள்வதற்காக இயேசுவை மறுதலித்ததுடன் நில்லாமல், சபிக்கவும், சத்தியம் பண்ணவும் செய்தார் (மத். 26:74). இது அவர் இயேசுவின் மீது வைத்த அன்பில் ஏற்பட்ட தளர்வை வெளிப்படுத்துகிறது. இயேசுவின் மரணம் அவரது அழைப்பிலும், நம்பிக்கையிலும் தளர்வை ஏற்படுத்தியது. தானும் தனது உடன் சீடர்களும் வாழ்வதற்கு பழைய தொழில் ஏற்றது என தீர்மானித்து மீன்பிடிக்க தனது உடன் சீடரையும் அழைத்துக்கொண்டு சென்றார். அந்நிலையில் அவர்களைத் தேடிவந்த உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து பேதுருவிடம் கேட்ட கேள்வி "நீ இவர்களை விட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?" என்பதே. அனைவரும் இயேசுவிடம் அன்பு உள்ளவர்கள் ஆனால் பேதுருவிடம் இயேசு அதிகமான அன்பை எதிர்பார்க்கிறார். அன்பு உண்டு என பேதுரு பதில் கூறினாலும், மூன்று முறை திரும்பத் திரும்ப அதேக் கேள்வியை கேட்பதன் மூலம் உதட்டளவில் பதில் கூறாமல், உள்ளத்தின் ஆழத்தில் தனது தவறை உணர்ந்து, இனி இத்கைய தவறு நடைபெறாது என்ற உறுதியோடு தளர அன்பை வெளிப்படுத்த வைக்கிறார்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பண்டிகையை கொண்டாடிக் கொண்டிருக்கின்ற நம்மில் பலர் இயேசுவிடம் அன்பு வைத்திருக்கிறோம் எனக் கூறுகிறோம். ஆனால் நமது அன்பு சூழ்நிலை நெருக்கங்களால் தடுமாறிக் கொண்டிருக்கின்றது. நமது சொற்களாலும் செயல்களாலும் அவரது அன்பை விட்டு விலகிச் சென்று விடுகின்றோம். உண்மையாகவே உயிர்த்த கிறிஸ்துவின் மகிழ்ச்சியை கொண்டாட விரும்புவோம் என்றால் இந்த தடுமாற்றங்களை உணர்ந்து, உண்மையான அன்புகொண்டு ரோமர் 8:36,37-ல் பவுலடியார் கூறுவதுபோல கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? என்கின்ற உறுதியோடு கொண்டாடுவோம்.

### 2. புதிய மனிதராகிக் கொண்டாடுவோம் : (கொலோ. 3 : 10)

இந்த பகுதியை பவுலடியார் எழுதும்போது கொலோ3:1-ல் நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்தது உண்டானால் என்று குறிப்பிடுகிறார். திருச்சபைக்கு உள்ள மற்றொரு பெயர் "உயிர்த்தெழுந்த சமூகம்" (Resurrected Community). எனவே நமது எதிர்பார்ப்புகளும், சிந்தனைகளும், செயல்களும் சாதாரண மனிதனில் இருந்து வேறுபட்டவையாக

இருக்கவேண்டும். அந்த அனுபவத்தை நம்மைப் படைத்த கடவுளின் சாயலுக்கு ஒப்பாக பூரண அறிவடைந்த நிலை என்று பவுலடியார் குறிப்பிடுகிறார் அதாவது வாழ்வு சாதாரண மனித நிலையில் இருந்தாலும் கடவுளை தரித்துக்கொண்டு புதிய மனிதனை வெளிப்படுத்துகின்ற வாழ்வாக அமைய வேண்டும். இதை எபேசி. 4:22-24-ல் பவுலடியார் கூறும்போது மோசம் போக்கும் இச்சைகள் நிறைந்த பழைய மனிதனை களைந்து போட்டு விட வேண்டும். தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு உண்மையான நீதி, தூய்மை என்னும் கடவுளின் சாயலை உடைய புதிய மனிதனை தரித்துக்கொள்ள வேண்டும் என்கின்றார்.

இந்த நிறைவான வளர்ச்சியை நாம் பெறுவதற்காகத்தான் கடவுள் திருவசனத்தை நமக்கு போதிப்பதற்காகத் திருச்சபையையும், போதகர்களையும் தந்திருக்கிறார் (எபே. 4:11-13).

நாமும் உயிர்தெழுந்த கிறிஸ்துவினால் மீட்கப்பட்ட சமூகம். இந்த உலகில் நாம் சாதாரண மக்களைப் போல் வாழாது கடவுளின் தன்மை உடையவர்களாக, தூய வாழ்க்கை வாழ நம்மை அர்ப்பணித்து கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கொண்டாடும் போது அது பொருளுள்ள மகிழ்ச்சியின் கொண்டாட்டமாக அமையும்.

### *3. பிறருக்கு அறிவித்துக் கொண்டாடுவோம்* : (மத். 28 : 8)

இயேசு உயிர்த்தெழுந்தார் என்கின்ற செய்தி கேட்ட பெண்கள் சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள். எருசலேமில் இருந்து எம்மாவூருக்கு பயணப்பட்ட சீடர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்டவுடனே அந்த இரவிலேயே எருசலேமுக்கு திரும்பி வந்து சீடருக்கு அறிவித்தார்கள் (லூக். 24:33-35). ஒருவர் மகிழும் போது அந்த மகிழ்ச்சியை பிறருக்கு அறிவிப்பது மிகப்பெரிய கொண்டாட்டம். லூக். 15ம் அதிகாரத்தில் இயேசு கூறிய உவமைகளிலும் காணாமல் போன ஆட்டை கண்டுபிடித்த மேய்ப்பன் (15:6), காணாமல் போன காசை கண்டுபிடித்த பெண் (15:9), காணாமல் போன மகனை திரும்பப்பெற்ற தந்தை (15:23) ஆகிய மூவரும் தாம் பெற்ற மகிழ்ச்சியை கொண்டாட மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டனர் என்கிறார். இயேசுவின் உயிர்த்தெழுதலை வாழ்வில் அனுபவித்த ஒவ்வொருவரும் அத்தகைய உணர்வைப் பெற வேண்டும். றிங்கல் தௌபே ஐயர் உயிர்த்தெழுந்த இயேசுவை வாழ்வில் அனுபவித்ததினாலே பல ஆயிரம் மைல்கள் கடந்து, மாறுபட்ட கால நிலை, மாறுபட்ட கலாச்சாரம், மாறுபட்ட உணவு பழக்க வழக்கங்கள் கொண்ட நம்மைத் தேடி வந்து இயேசு வாழ்கிறார் என்கின்ற நற்செய்தியை

அறிவித்தார். வாழுகின்ற இயேசுவின் நற்செய்தி நம்மை பாவம், அறியாமை, அடக்குமுறை, சமூக அடிமைத்தனம், சமய அடிமைத்தனம் என அனைத்து நிலைகளிலும் இருந்து விடுவித்தது. அதனால் வாழ்வு பெற்றவர்கள் நாம். நாம் அனுபவித்த அந்த வாழுகின்ற இயேசுவை பிறருக்கு வாழுகின்றவராக நமது வார்த்தைகளாலும், வாழ்வினாலும் பகிர்ந்து கொள்வதே உண்மையான மகிழ்ச்சியின் கொண்டாட்டம்.

இயேசு கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல் ஒரு தனிமனிதனில் முடிந்துவிடுகின்ற நிகழ்வு அல்ல. அது ஓர் அனைத்துலக நிகழ்வு. இதைப்பற்றி பவுலடியார் ரோமர் 15:18,19 ஆகிய வசனங்களில் ஆதாம் என்கிற ஒரே மனிதனின் கீழ்ப்படியாமையால் உலகமக்கள் அனைவரும் வாழ்வை இழந்தது போல இயேசு என்கிற ஒரே மனிதனின் கீழ்ப்படிதலால் உலகின் அனைத்து மக்களும் வாழ்வு பெற்றிருக்கிறோம் என்கிறார். எனவே நாம் உயிர்த்த கிறிஸ்துவில் பெற்றுக் கொண்ட உயர்வான நிலையைக் காத்துக்கொண்டு இறைவனில் உண்மையான அன்பு செலுத்தி, அவரது சாயலை உடைய புதிய மனிதராக நம்மை மாற்றிக் கொண்டவர்களாகவும், நாம் பெற்ற மகிழ்வை பிறரோடு பகிர்ந்து கொள்பவர்களாகவும் உயிர்த்தெழுதலின் மகிழ்ச்சியைக் கொண்டாடுவோம். உயிர்த்த கிறிஸ்து நம்முடன் இருந்து நம்மை இந்த அனுபவங்களின் வழி நடத்துவாராக.

அருள்திரு. J. **விக்டர் ஞானராஜ்**

08-04-2018

**உயிர்ப்புக்குப்பின் வரும் முதலாம் ஞாயிறு**

# உயிர்த்த ஆண்டவருடன் சந்திப்பு

## ENCOUNTER WITH THE RISEN LORD

தொ.நூ. 32:22-32 திப. 9:1-18
திபா. 40 யோவா. 20:24-29

**..."நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!!" யோவா. 20:28**

இந்த உலகமே சந்திப்பில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. சந்திப்பு எங்கு நிகழ்கிறதோ அங்கே சக்தி பிறக்கிறது.

இரண்டு கற்கள் சந்திக்கின்றபோது அங்கு தீப்பொறி உருவாகின்றது.

இரண்டு காந்தத்துருவங்கள் சந்திக்கின்றபோது அங்கு ஈர்ப்பு சக்தி உருவாகின்றது.

இரண்டு கோள்கள்(சூரியன், சந்திரன்) சந்திக்கின்றபோது அங்கு கோளசக்தி உருவாகின்றது.

இரண்டு மேகங்கள் சந்திக்கின்றபோது அங்கு மின்னல் சக்தி (இடி) உருவாகின்றது.

இரண்டு மனங்கள் சந்திக்கின்றபோது அங்கு அன்புச் சக்தி உருவாகின்றது.

மேற்கூறப்பட்ட அனைத்தும் ஒத்த நிலையில் உள்ளவை சந்திக்கின்றபோது ஏற்படுகின்ற சக்திகள். ஆனால் வெவ்வேறு நிலையிலுள்ள இறைவனும் மனிதனும் சந்திக்கின்ற போது அங்கு 'இறைசக்தி' வெளிப்படுகின்றது. அதே நிலையில் உயிர்த்த ஆண்டவரைச் சந்திக்கின்ற போது அங்கு 'உயிர்ப்புச் சக்தி' உருவாகின்றது.

இயேசுவின் உயிர்த்தெழுதல் இயேசுகிறிஸ்துவுக்கு மிக நெருக்கமாக இருந்த சீடர்களாலும் எதிர்பார்க்கப்படாத ஒரு நிகழ்வாகவே இருந்தது. (மாற். 16:1,3,8,11; உரோ. 20:21) தமக்கு மிக நெருக்கமானவர்களாலும் அடையாளம் காணப்பட இயலாதவராகவே உயிர்த்தெழுந்த இயேசு காணப்பட்டார் (யோவா. 20:14,15; லூக். 24:16,36-40). உயிர்த்தெழுந்த ஆண்டவரைச் சந்தித்த தோமாவின் அனுபவங்களைத் தியானிப்போம்.

### 1. தோமா உயிர்த்த ஆண்டவரை அனுபவமாக்கினார் :

உயிர்த்த இயேசு சீடர்களுக்கு முதன்முறை தோன்றி தம்மை வெளிப்படுத்திய போது தோமா அங்கு இல்லை. மற்ற சீடர்கள் அவரிடம் ஆண்டவரைக் கண்டோம் (யோவா. 20:24,25) என்று கூறிய போது அதை தோமா நம்ப மறுத்தார். காரணம் அது அவரது சந்தேகத் தன்மையல்ல. மாறாக தானும் உயிர்த்த இயேசுவின் அனுபவத்தை நேரடியாகப் பெற வேண்டும் என்பதினால் தான். தோமா எதையும் எளிதில் ஏற்பவர் அல்ல. தமக்குப் புரியாத ஒன்றை புரிந்தது போல் அவர் காட்டிக் கொள்ளவும் மாட்டார், நம்புவதாக நடிக்கவும் அவரால் இயலாது. எனவே இப்பேர்பட்ட தோமாவின் ஐயத்தைப் போக்க இயேசு தாமாகவே முன்வருகிறார். காயப்பட்ட தம் கைகளையும் விலாவையும் காண்பிக்கிறார். தம் காயங்களில் விரலை இடுமாறு அழைக்கிறார். இயேசுவின் காயங்கள் அவர் முன் தெளிவாய்த் தெரிகின்றன. காயங்களைக் கண்ட தோமா, உணர்ச்சி மேலிட்டவராய், "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" (யோவா. 20:28) என நம்பிக்கை முழக்கமிடுகிறார். இத்தகைய உயர்ந்த நம்பிக்கை அறிக்கை தோமாவைத் தவிர வேறெந்த மனிதரிடமிருந்தும் வந்ததில்லை. நம்பத்தயங்கிய தோமாவின் வாயிலிருந்தே நம்பிக்கையின் ஒப்புயர்வற்ற வாய்ப்பாடு வெளிவருவது வியப்பன்றோ?

தோமாவின் அறிக்கை மிகவும் அபூர்வமானது. ஏனெனில் அன்றைய உரோமைப் பேரரசர் தொமீசியன் மக்கள் அனைவரும் தம்மை 'ஆண்டவர், கடவுள்' என அழைக்க வேண்டுமென ஆணை பிறப்பித்திருந்தார். ஆனால் அந்நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் உரோமை மன்னரை வழிபட இசையவில்லை. தொமீசியன் அரசரை ஆண்டவர் எனவும் கடவுள் எனவும் அழைக்க மறுத்ததால் அரச ஆணையை மீறிய குற்றத்திற்கு கிறிஸ்தவர்கள் ஆளானார்கள். இதனால் பொதுமக்கள் கிறிஸ்தவர்களைத் தவறான கண்ணோட்டத்துடன் பார்த்தனர். சிலர் அவர்களைக் குழப்பவாதிகளாகக் கருதினர். இன்னும் சிலர் அவர்களைத் தங்கள் வழிபாட்டுக் கூட்டங்களில் தீயச் செயல்களைச் செய்வதாக நினைத்தனர். நீரோ மன்னர் காலத்தில் உரோமை நகர் தீ வைக்கப்பட்டதற்குக் கூட காரணம் கிறிஸ்தவர்களே என்று நம்பப்பட்டது. இத்தகைய காரணங்களுக்காக, கிறிஸ்தவர்கள் இழிவாகக் கருதப்பட்டனர். துன்புறுத்தப்பட்டனர். இப்பேர்பட்ட சூழ்நிலையில் இயேசுவை ஆண்டவராகவும், கடவுளாகவும் பகிரங்கமாக அறிவிப்பது துணிச்சலான சான்றாகும். தங்கள் உயிருக்கும் ஆபத்து ஏற்படுத்தும். சிலுவை மரணத்தின் வழியாக ஏற்பட்ட வடுக்கள் வாயிலாகவே உயிர்த்தவராக இயேசு அடையாளம் கண்டு கொள்ளப்பட்டார். (The Scars of the passion are the visible marks by which the body of Christ is recognizable).

## 2. தோமா உயிர்ப்புக்குச் சான்றாய் மாறினார் :

இயேசு நாதரின் காயங்களை நேரடியாகக் கண்ட தோமா அதிர்ச்சியில் உறைந்தார். "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" என்றார் (யோவா. 20:28). ஆண்டவரின் உயிர்த்தெழுதல் ஆற்றல் பொருந்திய வாழ்வுடன் வாழ்வை முன்னெடுத்துச் செல்வதற்கான புதிய காட்சியை வழங்குகிறது. (Resurrection of the Lord gives a fresh vision to go forward with a strength of new life). கிறிஸ்துவின் வழியாகத் தான் பெற்ற நம்பிக்கைக்கு தோமா இறுதிவரை செயல்வடிவம் கொடுத்தார்.

கிறிஸ்தவத்தை அழித்தொழிக்கப் புறப்பட்ட சவுல் ஆண்டவருடைய உயிர்ப்பு அனுபவத்தின் வழியாகத்தான் திருச்சபையைக் கட்டியெழுப்பும் மகத்தான பணியைச் செய்தார். அவரே இதனைப் பல இடங்களில் ஒப்புக்கொள்கிறார் (1கொரி. 15:3-8; தி.ப. 9:9; 22:6-11; 26:12-18). ஆண்டவருடைய உயிர்ப்பு அனுபவமே மிகத் தைரியமாக பேதுருவை சாலொமோன் மண்டபத்திலும் யூதத் தலைமைச் சங்கத்திலும் சாட்சி பகர வைத்தது (தி.ப. 3:15).

கிறிஸ்துவின் அருட்பணிக்கு அழைத்து நம்மை அனுப்புவதற்காகவே தந்தையாம் கடவுள் தம் அன்பான மகனைக் கல்லறையைவிட்டு வெளியே வர அழைத்தார். வாழ்கின்ற வாழ்க்கையில் நமது காயங்களைத் தொடுவதற்கு, நமது வலிகளை உள்வாங்குவதற்கு எவருமில்லை. ஆனால் இயேசுவைத் தொடுவதற்கு, அவரது வலிகளை உள்வாங்குவதற்கு தூய தோமா இருந்தார். காயங்களை உணர்வதே, உறவுகளுக்கெல்லாம் அடிப்படையாக அமைகின்றது. மனிதர் இன்னொரு மனிதரைக் கேவலமாக நடத்திய நாட்டில் தூய தோமா பணி செய்தார். மனிதர்களுக்கெல்லாம் கிறிஸ்துவை அறிவிக்கின்றார். கிறிஸ்துவின் நற்செய்தியை, கிறிஸ்துவின் விழுமியங்களுடனும் கிறிஸ்தவ மதிப்பீடுகளுடனும் துணிச்சலாக அறிவித்தார். இறுதியில் இரத்தம் சிந்தி காயங்களுடன் மரணத்தை ஏற்றுக்கொண்டார். இன்றைய நிலையில் காயப்பட்ட கடவுளை வணங்குகின்றோம். ஆனால் காயப்பட்டவர்களை ஒதுக்குகின்றோம். இந்நிலையிலிருந்து மாற்றம் பெற வேண்டும்.

பல ஆண்டுகள் கிறிஸ்தவ வாழ்வு வாழ்ந்து, கிறிஸ்தவ நம்பிக்கை வெறும் வார்த்தையாய், திருவருட்சாதனங்கள் வெறும் சடங்குகளாய் மாறிவரும் இக்கால நிலையில், கிறிஸ்தவ வாழ்வை ஊக்கப்படுத்த, நம்பிக்கையை ஆழப்படுத்த, வழிபாட்டை வாழ்வோடு தொடர்ப்புபடுத்த கிறிஸ்து விரும்பிய நிறைவாழ்வு அனைத்து மக்களும், படைப்புகளும் பெற்று மகிழ உயிர்ப்பின் உண்மைச் சான்றுகளாய் வாழ்வோம்!. உன்னதத்தோடுள்ள சந்திப்பில் உறவுகளின் ஒன்றிப்பை வலுப்படுத்துவோம்.

அருள்திரு. S. **ஜாண் சகாயம்**

15-04-2018 **உயிர்ப்புக்கு பின்வரும் இரண்டாம் ஞாயிறு**

# உயிர்த்த ஆண்டவரைப் பணியிடத்தில் அடையாளம் காணுதல்

## IDENTIFYING RISEN LORD IN THE WORK PLACE

ரூத். 2:1-18 தி.ப. 9:36-43
தி.பா. 15 யோவா. 21:1-14

**"இயேசு அவர்களிடம் உணவருந்த வாருங்கள் என்றார்."** யோவா. 21:12

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவில் ஒவ்வொருவரும் புது வாழ்வு பெற முடியும் என்பது கிறிஸ்தவத்தின் அசைக்கமுடியாத நம்பிக்கை. உயிர்த்தெழுதல் உலக மக்களுக்கு நம்பிக்கையை கொண்டுவந்த நாள். பாவம் வெல்லப்பட்டது. இனிமனிதனுக்கு நித்திய வாழ்வுக்கான நம்பிக்கை உண்டு. பாவத்தின் மேலும் மரணத்தின் மேலும் வெற்றி உண்டு என்று என்பதை உணர்த்தும் நாள். உயிர்த்த ஆண்டவர் மீண்டும் தம் சீடர்களை சந்தித்து தம்மை வெளிப்படுத்தினார். பேதுருவை கடற்கரையில் கண்டுபிடித்து மீன்களையல்ல இதுமுதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய் (லூக். 5:10) என்று அழைத்து திருப்பணிகாலத்தில் பயன்படுத்தினார். இயேசுநாதரின் மரணத்திற்கு பின் நான் மீன்பிடிக்க போகிறேன் (யோவா. 21:3) என மற்ற சீடர்களையும் அழைத்து மீன்பிடிக்க சென்றுவிட்டான். இயேசுநாதர் கடற்கரையில் அவர்கள் பணியிடத்திற்கே வந்து அவர்களோடு உரையாடுகிறார். உயிர்த்தெழுந்த ஆண்டவர் நம்மோடு பயணிக்கிறார், உரையாடுகிறார். வாழ்வின் எல்லா சூழலிலும் நம்மை வழிநடத்த போதுமானவர். உயிர்த்தெழுதல் நாம் அவர்மேல் வைக்கும் நம்பிக்கைக்கு மேலாக நம்விசுவாச வாழ்வின் எல்லா சூழலிலும் நமது வாழ்வை உயிர்த்தெழுந்த ஆண்டவரில் வெளிப்படுத்துவதே முக்கியமானது. ஒரு வங்கியில் பலர் வேலைபார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருநாள் மேல் அதிகாரிகள் வங்கியின் கணக்குகளை சரிபார்த்தனர். அதிகமாக முறைகேடு நடந்திருப்பதை அவர்கள் கண்டுபிடித்தார்கள். அதில் ஐந்துபேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். அவர்களில் நால்வர் கிறிஸ்தவர்கள். நம்முடைய வாழ்க்கையின் செயல்பாடுகளிலும் பணியிடங்களிலும் உயிர்த்தெழுந்த ஆண்டவரில் அடையாளம் காணவேண்டும்.

### ***1. பணியிடம் உறவின் அடையாளம்*** : (யோவா. 21 : 12)

மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களை அழைத்து மனுஷரை பிடிக்கத்தக்கதான ஆலோசனைகளையும், அதிகாரத்தையும் கொடுத்தார். பயிற்சிகாலத்தில் தான் ஊழியத்தில் ஏற்படும் பாடுகளை சொல்லி உங்கள்

இருதயம் கலங்காதிருப்பதாக (யோவா. 14:1) எனக் கூறி அவர்கள் விசுவாசத்தை உறுதியடையச் செய்கிறார். நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என கேட்கும் போது "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" (மத். 16:16) என்று அறிவித்தவன். கிறிஸ்து மரித்தபின் தன் விசுவாச வாழ்வில் தெளிவில்லாதவனாக மற்ற சீடர்களையும் மீன்பிடிக்க அழைத்து செல்லுகிறான். பேதுரு எந்த கடற்கரையிலிருந்து எந்த நிலைமையில் அழைக்கப்பட்டானோ அதே கடற்கரையில் அவன் பணிவிடத்திற்கே ஆண்டவர் வருகிறார். திபேரியா கடலை கெனேசரேத்துக் கடல் என்றும் கலிலேயாக் கடல் என்றும் அழைப்பர். இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் பலன் இல்லை இயேசு வலப்பக்கம் வலைவீச சொல்லும்போது கீழ்படிகிறார்கள். மிகுதியாய் மீன்கள் அகப்பட்டது. இயேசுவை ஆண்டவர் என்று அறிகிறார்கள். படகைவிட்டு இறங்கி கரையில் வந்தபோது மீனும் அப்பமும் உயிர்த்தெழுந்த இயேசுவால் காலை உணவாக ஆயத்தப்பட்டிருந்தது. இயேசுவின் திருப்பணியில் உணவு உறவின் அடையாளமாக தரப்படுகிறது. ஐயாயிரம் பேருக்கு உணவு பசியை போக்கி விசுவாசிக்க வைத்தவர். தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றி குறைவினார் வரும் உறவு முறிவு வராதபடி மகிழ்வுபெற செய்தவர், இராவிருந்தில் பந்தியிருந்து தன் உடல், உதிரம் என புதிய உடன்படிக்கையான உறவை புதுப்பித்தார். அந்த இயேசு உணவருந்த வாருங்கள் என உரிமையுடனும் அன்புடனும் அழைப்பு விடுக்கிறார். இயேசுவின் பாடுமரணம், உயிர்தெழுதலையும், இயேசுவின் உடல் திருவிருந்துக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது என்பதையும் அடையாளமாக காட்டுகிறது. திருவிருந்து உறவின் அடையாளம். திருவிருந்தை பெற்றுக்கொள்ளும் நாம் வாழும் சமூகத்தில், பணியிடத்தில் இயேசுவின் உறவின் அடையாளமாவோம்.

## 2. பணியிடம் நற்செயல்களின் அடையாளம் : (தி.ப. 9 : 36)

கிறிஸ்துவில் கனிகொடுக்க அழைக்கப்பட்ட நாம் தேவை நிறைந்த உதவிகளை எதிர்பார்க்கும் உலகில் வாழுகிறோம். ஆரம்பகால திருச்சபையில் தங்கள் வாழும் இடங்களின் நற்கிரியை செய்த பெண்மணியாக தொற்காள் தான் வாழ்ந்த யோப்பா பட்டணத்தில் நற்கிரியைகளையும் தான தருமங்களையும் செய்து கொண்டு வந்தாள். தொற்காள் வியாதிபட்டு மரிக்கையில் பேதுரு அவளை இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உயிரோடு எழுப்பினார். இவ்அற்புதம் அனேகர் கர்த்தரண்டைக்கு சேர திருச்சபை விசுவாசிகள் பெருக காரணமாயிற்று. தொற்காளின் நற்கிரியையே பேதுரு விடுதலைக்கு காரணம். உயிர்த்த ஆண்டவரை நாம் வாழும் இடம் பணியாற்றும் இடத்தில் நற்கிரியை வழியாக வெளிப்படுத்த வேண்டும் என திருமறை அறிவுறுத்துகிறது. மத். 25:34-36 நற்கிரியையாளர்களின் செயல்களும்

அவர்கள் பெற்ற ஆசீர்வாதமும், செயல்களின்ன் அங்கிகாரமும் தரப்பட்டள்ளது. குமரி மண்ணில் கிறிஸ்துவின் நற்செய்தி துரிதமாக பரவ, திருச்சபை வளர அருட்தொண்டர்களின் நற்கிரியைகளான கல்வி, சுகாதாரம், உணவு, உறைவுடம், அடிமைத்தனத்திலிருந்தும், ஆதிக்க சக்திகளிடமிருந்தும், சமூக விடுதலை, அடித்தளமாயினர். இன்று இவற்றை அனுபவித்து வரும் திருச்சபை விசுவாசிகளாகிய நாம் நம்மடைய உடமைகளை பகிர்தல், உதவி செய்தல், சமூகநீதிக்கு முன் நின்றால் இவைகளுக்கு மாறாக, பிறரின் உரிமைகளையும், உடமைகளையும் தவறான வழியில் அபகரிக்கும் செயலை துணிந்து இறைபயமின்றி செய்கிறோம். நாம் வாழும் இல்லம், பணியாற்றும் சமூகம், திருச்சபை, தேசம் இவைகளில் உயிர்த்த ஆண்டவரை நற்கிரியையில் வெளிப்படுத்துவோம்.

### *3. பணியிடம் பற்றுறுதியின் அடையாளம்* : (ரூத். 2 : 12)

ரூத் இஸ்ரவேல் மக்களோடு, இஸ்ரவேலின் கடவுளோடும் அன்பு பாராட்ட தன்னுடைய விசுவாசத்தினாலே தன்னுடைய சொந்த ஜாதி உறவுகளையும் பாரம்பரியத்தையும் விட்டு பெத்லகேம் வந்த மோவாபிய பெண்மணி நகோமி விதவையாய் பெத்லகேம் வரும்போது இரு விதவையான மருமக்களையும் ஓர்பா, ரூத் அழைத்து அவர்களை தங்கள் நாட்டில் வாழும்படி வற்புறுத்துகிறார். ஓர்பா முத்தமிட்டு பிரிந்தாள். ரூத் ‘உமது இல்லமே எனது இல்லம்; உம்முடைய இனமே எனது இனம்; உம்முடைய தெய்வமே எனக்கும் தெய்வம் (ரூத். 1:16)’ என்ற விசுவாச அறிக்கை. பெத்லகேமில் போவாஸ் வயல் கதிர் பொறுக்கும் போது போவாஸ் ரூத்தை ஆசீர்வதிக்கிறார். இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவருடைய இறக்கையின் அரவணைப்பை நீ தேடி வந்திருக்கிறாய். அவர் உனக்கு நிறைவான பலனை அருள்வார் (ரூத். 2:12). நாம் வாழும் குடும்பங்களில் உறவுகளும், பணிகளும் இறைவனால் தரப்பட்டுள்ளது. இவைகளை பண்படுத்த, பாதுகாக்க, பராமரிக்க விசுவாசம் முதன்மையானது. நாம் கடவுள் மேல் கொண்ட உண்மையான விசுவாசம் நிறைந்த பலனை தரும். உயிர்த்தெழுதலை விசுவாசியாத சீடர்களை தேடி கடற்கரை பயணித்த ஆண்டவர் விசுவாசத்தில் உறுதிபட செயல்பட்டார். காயங்களில் கரங்களால் தொட்டு பார்த்தாலொழிய இயேசு உயிர்தெழுந்தார் என நம்ப மாட்டேன் என்ற தோமா இந்தியாவின் நற்செய்தியாளரானார். விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதி, காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (எபி. 11:1). கிறிஸ்துவின் மேல் நாம் வைத்திருக்கும் நம்பிக்கை நம்மை கைவிடுவதில்லை. உயிர்த்த ஆண்டவரை நாம் வாழும் உலகில், குடும்பத்தில், பணியிடத்தில் அடையாளமாக விசுவாசத்தில் வெளிப்படுத்துவோம்.

அருள்திரு. R. **சாம் கிறிஸ்டோபர்**

22-04-2018

**உயிர்ப்புக்கு பின்வரும் மூன்றாம் ஞாயிறு**

# உயிர்ப்பின் அனுபவத்தில் சமூக உருவாக்கம்

## COMMUNITY FORMATION AROUND RESURRECTION EXPERIENCE

எசா. 25:1-9 தி.ப. 4:32-37

தி.பா. 126 லூக். 24:13-35

**"....ஆண்டவர் உண்மையாகவே உயிருடன் எழுப்பப்பட்டார்."** லூக். 24:34

வாழ்வை முழுமையாக வாழ்தல் என்பது வேறு. வெற்றிகரமாக வாழ்தல் என்பத வேறு. முழுமையாக வாழ்தல் என்பது அக ஆற்றலை சரியாக பயன்படுத்துவதன் காரணமாகவும் சரியாக வளர்த்தெடுப்பதன் விளைவாகவும் நம்மில் நிகழ்வது. ஞானத்தை அடைதல், நற்பயிற்சிகளை வாழ்வாக்குதல் முதலியவற்றில் இது அடங்கியிருக்கிறது. வெற்றிகரமாக வாழ்தல் என்பது இந்த உலகம் சிறப்பானது என்று கருதும் பணம், செல்வம், புகழ் ஆகியவற்றை அதிகமாக சேர்த்துக் கொண்டு வாழ முயல்வது உலகத்தின் பார்வையில் மதிப்புமிக்கவர்களாகவும் வருவது. சுருங்க கூறின் முழுமையாக வாழ்வது என்பது அகத்தில் கவனம் செலுத்துவது. வெற்றிகரமாக வாழ்வது என்பது புறத்தில் கவனம் செலுத்துவது. முழுமையாக வாழ்வது என்பது கடவுள் எதிர்பார்பது போல வாழ்வது. இன்றைய மனிதர்கள் பலர் வெற்றிகரமாக வாழ்வது தான் முழுமையாக வாழ்வது என்ற எண்ணத்தில் தங்களுடைய கவனத்தையும் நேரத்தையும் செலவழிக்கின்றார்கள். இது அநீத பொருள் குவிப்பிற்கும், பதவி மோகத்திற்கும் இட்டுச் செல்கிறது.

ஆனால், உண்மையோ இதற்கு எதிர்மாறானது. அதாவது முழுமையாக வாழாதவர்கள் தான் வெற்றிகரமாக வாழ முயல்கிறார்கள். அகத்திற்குள் செல்ல இயலாதவர்கள் தான் புறத்தில் தங்களுடைய நிறைவைக் கண்டு கொள்ள முயல்கின்றனர். ஆனால் புறத்தில் மகிழ்வையும் நிறைவையும் கண்டு கொள்ள முடியாது என்பது உண்மை, இதற்கு கிறிஸ்துவின் சீடர்கள் சான்று. எப்படியெனில், அழைப்பினை மறந்து சமயத் தலைவர்களுக்கு அஞ்சி புறத்தில் அமைதி தேடினர், அதாவது பழைய மீன் பிடிக்கும் தொழிலுக்குச் சென்றனர். அவர்கள் இரவு முழுவதும் கடுமையாக உழைத்தனர். ஆயினும் வெறுமையைத் தான் சந்தித்தனர். அவர்களை உயிர்த்த கிறிஸ்து சந்தித்தார். அவர்களின் அச்சம் அகற்றினார் அவர்களை ஆற்றல் படுத்தினார். கிறிஸ்துவின் சீடர்கள் உயிர்த்த கிறிஸ்துவை சந்தித்த அந்த உயிர்ப்பின் அனுபவம் ஒரு புதிய சமுதாயம் உருவாக காரணமாக அமைந்தது.

### *1. நிந்தையில்லா வாழ்வு* : (எசா. 25:1-9)

"எந்த ஒரு மனிதருமே ஒரே ஆற்றில் இரண்ட முறைகால் நனைப்பதில்லை" என்பத கிரேக்க மெய்யியலாளர் பர்மெனிடஸ் (Parmanedes) கிரேக்கத் தத்துவமாகும். இத்தத்துவத்தின் பொருள், 'ஒரு மனிதர் ஓர் ஆற்றில் தன் கால்களை நனைத்துவிட்டு சிறிதுநேரம் கழித்து வந்தார் என்றால், அங்கு இருப்பது பழைய தண்ணீர் அல்ல. அத்தண்ணீர் எங்கோ போய் விடுகிறது அவரோ புதிய தண்ணீரில் கால்களை நனைக்கிறார்.' இதைப் போன்று இறைவாக்கினர் எசாயாவும் பாடுகளினூடாய் வாழ்ந்துக் கொண்டிருக்கும் இஸ்ராயேல் மக்களுக்கு நம்பிக்கையின் இறைவார்த்தையை உரைக்கிறார், நிந்தையில்லா ஒரு புதிய வாழ்வுக்கான செய்தியாக உள்ளது. "மக்களினங்கள் அனைவரின் முகத்தை மூடியுள்ள முக்காட்டை....அவர் அகற்றிடுவார்;....என்றுமே இல்லாதவாறு சாவை ஒழித்து விடுவார்;... எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்திடுவார்; தம் மக்களுக்கு ஏற்பட்ட நிந்தையை அகற்றிடுவார்..." (எசா. 25:7,8). முக்காடு என்பது துக்கத்தை வெளிப்படுத்தும் அடையாளம். இந்த நிந்தை மிகுந்த வாழ்விலிருந்து மககளினங்கள் அனைவரின் முக்காடாகிய நிந்தையை அகற்றுவார். அத்தோடு கண்ணீரைத் துடைத்து அவர்களின் துன்பங்களையும் தூக்கி எறிவார். எல்லாருடைய நிந்தையை இம்மண்ணுலகிலிருந்து கடவுள் அகற்றுவார். அப்பொழுது முகத்தில் மகிழ்ச்சி ஏற்படும். நாவில் களிப்பாரவாரம் எழும் (தி.பா. 126:1,2).

நிந்தையில்லா வாழ்வுக்கு நேராய் வழிநடத்தும் கடவுள் சாவு இல்லாதவாறு ஒழித்திடுவார். இறைமகனாய் மனுஉருவெடுத்த இயேசு கிறிஸ்துவுக்கு சாவின் வழி முற்றுப்புள்ளி வைக்க அக்கால சமயத்தலைவர்களான குருக்கள், மறைநூல் அறிஞர்கள், பரிசேயர், சதுசேயர் ஆகியோர் திட்டமிட்டனர், அதனை நிறைவேற்றினர். ஆனால் கிறிஸ்துவோ சாவை வென்று உயிர்த்தெழுந்தார். தங்கள் குருவாகிய கிறிஸ்துவின் மரணத்தை சந்தித்த சீடர்களின் முகத்திலிருந்த கண்ணீரைத் துடைத்தார், இறந்து போன இயேசுவின் சீடர்கள் என்கிற நிந்தையை இம்மண்ணுலகிலிருந்து முழுமையாய் அகற்றினார். எப்போது உயிர்த்த கிறிஸ்துவை வாழ்வில் அனுபவமாக்கினார்களோ அப்பொழுது அவர்களின் நிந்தை அகற்றப்பட்டது. உயிர்த்த கிறிஸ்தவை வாழ்வில் அனுபவமாக்குவோம் நிந்தையில்லா வாழ்வுக்கு நேராக அவர் நம்மை வழிநடத்துவார்.

## *2. சுயநலமில்லா வாழ்வு* : (தி.ப. 4:32-37)

சிலுவை மரணத்தின் வழியாய் இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு முடிவு கொண்டு வந்துவிட்டோம் என்று சமயத்தலைவர் எண்ணிய சூழலில், உயிர்த்த கிறிஸ்துவை சந்தித்தவர்கள், உயிர்ப்பை தங்கள் வாழ்வில் அனுபவமாக்கிய அவர் சீடர்கள், அவரைப் பின்பற்றிய மக்கள் புதிய சமுதாயமாக வாழ்ந்தனர். உயிர்ப்பின் அனுபவம் அவர்கள் வாழ்வில் பெரும் தாக்கத்தையும், அந்த தாக்கம் பெரும் மாற்றத்தையும் ஏற்படுத்தியது. ஒருமித்த உள்ளத்தோடும், ஒற்றுமை உணர்வோடும் பொருளாதார அளவிலும், சமுதாய அளவிலும் வேறுபாடு காட்டாமல் கிறிஸ்துவில் பற்றுறுதி கொண்டோர் கூடிய இடங்களில் இறைவேண்டல், அப்பம் பிட்டுதல், பகிர்ந்து கொள்தல் போன்ற நற்பண்புகளில் நிலைத்து நின்றனர். உயிர்ப்பின் அனுபவத்தை அனுபவமாக்கியவர்கள் சுயநலம் களைந்து பொதுநலம் கொண்டவர்களாய் சமுதாயத்தின் பிறமக்களுக்கு சான்றாக வாழ்ந்தனர். தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்ட மக்கள் திருத்தூதுவர் போதனையில் உறுதியாயிருந்தனர். எனவே அவர்களுள் ஏற்பட்ட ஒற்றுமையின் விளைவாக அவரவர் தங்கள் உடைமைகளை பகிர்ந்துகொள்ள முடிந்தது. அவர்களுள் எவரும் தமது உடமைகளைத் தம்முடையதாக கருதவில்லை எல்லாம் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. நிலபுலன்களை அல்லது வீடுகளை உடையோர் அவற்றை விற்று திருத்தூதுவர் காலடியில் வைத்தனர். அது அவரவர் தேவைக்குத் தக்கவாறு பகிர்ந்துக் கொடுக்கப்பட்டது. தேவையில் உழல்வோர் அவர்களுள் இல்லை. இத்தகைய பகிர்வு உலகில் வழக்கத்திலுள்ள பொதுவுடமை கொள்கையிலிருந்து மாறுபட்டது. எப்படியெனில், இங்கு பகிர்வு என்பது தன்னார்வத்துடன் மக்கள் கொடுத்தனர். சுயநலமில்லா வாழ்வுக்கு தொடக்ககால மக்கள் வாழ்வு சான்று.

இங்கு கூறப்படும் பொருட்களைப் பகிர்ந்து கொள்ளல் இயேசுகிறிஸ்துவின் பணிவாழ்வில், அவர் பகிர்வு பற்றிய போதனையின் தொடர்ச்சியாக இந்நிகழ்வு உள்ளது எனலாம். லூக். 12:33இல் “உங்கள் உடமைகளை விற்று தர்மம் செய்யுங்கள்” பகிர்ந்து வாழும் சிந்தனையை மக்களுக்கு கொடுத்தார். கிறிஸ்துவின் பகிர்வு சிந்தனையை, உயிர்த்த கிறிஸ்துவை அனுபவமாக்கியவர்கள் அவர் போதனையை தங்கள் வாழ்வில் செயல் வடிவம் கொடுத்தனர்.

பேராசிரியராக இருந்து மதிப்புமிக்க வேலையை விட்டுவிட்டு கனடாவின் டொராண்டடு நகரில் மனநிலை பாதிக்கப்பட்டவர்களோடு வாழ்ந்து, அவர்களின் நல்வாழ்வுக்காக தம் வாழ்வை பகிர்ந்தவர் ஹென்றி

நூவென். அதைப் போன்று வசதியும், வாய்ப்பும் நிரம்பத் தந்த இசைத்துறையை விட்டுவிட்டு ஆப்பிரிக்கா பழங்குடிமக்கள் நடுவில் பணிச் செய்ததும் வாழ்வை நிறைவுச் செய்தவர் ஆல்பர்ட் ஸ்வைட்சர். இவர்கள் கிறிஸ்தவால் உந்தப்பட்டு தொடக்ககால கிறிஸ்தவர்களைப் போல பிறரோடு தங்கள் வாழ்வையே பகிர்ந்துக் கொண்டனர். “நமக்கு தேவையில்லாததைப் பிறருக்குக் கொடுத்தால் அது பகிர்வு அல்ல” என்கிறார் அன்னை தெரசா. நுகர்வு கலாச்சாரம், உலகமயமாகுதல் கொள்கை தாக்கம் நிறைந்த காலத்தில் வாழும் இறைமக்களாகிய நாம் தொடக்க கால இறை மக்களைப் போன்று சுயநலத்தை முழுமையாய் களைந்து பகிர்வு மனநிலை கொண்ட மக்களாய் வாழ நம்மை ஆயத்தம் செய்வோம்.

### ***3. மகிழ்வான வாழ்வு*** : (லூக். 24:13-35)

கறுப்பின மக்களின் விடுதலைக்காய் போராடிய மார்டின் லூத்தர் கிங் ஒருநாள் சோர்ந்து போய் வீட்டில் அமர்ந்திருந்தார். அவர் முகம் வாடிப் போயிருந்தது. ஆழ்ந்த இறைபற்றும், அறிவுக்கூர்மையும் நிறைந்த அவரடைய துணைவியார் அவர் தம் அறைக்குள் சென்று கறுப்புடை அணிந்து கணவர் முன் நின்றார். மனைவியை கண்டு திடுக்கிட்டார், இதென்ன கறுப்பு உடை அணிந்திருக்கிறாய் என்று கேட்டார். (மேல் நாட்டில் நெருங்கிய உறவினர் இறந்து விட்டால் கறுப்பு உடை அணிவது வழக்கம்). இறையவர் இறந்து விட்டார் என்றார். அவர்களும் சினத்தோடு என்ன உளறுகிறாய் என்றார். மனைவி சொன்னார், “இறையவர் இறக்கவில்லையென்றால் நீங்கள் ஏன் மனமுடைந்த சோகமாக அமர்ந்திருக்கிறீர்கள்” என்றார். தவறினை உணர்ந்த மார்ட்டின் லூத்தர் கிங் சோகத்தை விட்டு தம் பணியை தொடர்ந்தார். மனமடிவை விட்டு நம்பிக்கை கொள்கிறார்.

வரலாற்றிலிருந்து இறையியலுக்கு பாதை அமைக்கிறார் லூக்கா. எம்மாவு பாதையில் தொடங்கி அப்பம் பிட்குதலில் நிலைக்கொள்கின்றனர். மனமடிவோடும், பெரும் ஏமாற்றத்தோடும் பயணம் செய்தவர்கள் உயிர்த்த கிறிஸ்துவை அனுபவமாக்கியப் போது நற்செய்தியை அறிவிக்கும் சீடர்களாக மாற்றம் பெற்றனர். சீடர்கள் எருசலேமை விட்டு செல்கின்றனர். இருவரிடமும் கடுமையான மனவிரக்தி இருக்கிறது. காரணம் இஸ்ராயேலை உரோமையரிடமிருந்து மீட்கப் போராடுவார் என்று எதிர்பார்த்திருந்த சூழலில் தலைமை குருக்களும், ஆட்சியாளர்களும் இணைந்து மரணதண்டனை அளித்து கொன்றனர். இதனை அவர்களால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இவர்கள் அதிகாலையில் கல்லறைச்

சென்ற மகளிர் சொன்ன உயிர்த்தெழுதல் செய்தியை அறிந்தவர்கள். ஆனால் அச்செய்தியை அனுபவமாக்கவில்லை. ஆகவே தான் அவர்கள் எம்மாவு செல்லும் போது முகவாடலோடும், மனவிரக்தியோடும் நிகழ்ந்தவைகளைக் குறித்து உரையாடிக் கொண்டே சென்றனர். இத்தகைய சூழலில் உயிர்த்த கிறிஸ்து அவர்களை நெருங்கி அவர்களோடு உரையாடுகிறார் நல்லுறவு கொள்கிறார். வழி நெடுகிலும் வழிப் பயணியாக சென்று அவர்களுடன் உரையாடி அவர்களின் ஐயத்தை மோசே முதல் இறைவாக்கினர் நூல்களில் தம்மைக் குறித்த எழுதப்பட்டவைகளை அவர்களுக்கு விளக்கினார். அவர்களின் உணர்வுகளை மதிக்கிறார். எதையும் திணிக்கவில்லை. அதற்கு அப்பால் போகிறவர் போல் தம்மைக் காட்டிக் கொண்டார் தங்களோடு தங்ககேட்டுக் கொண்டனர். அவர் அவர்களுடன் பந்தியிருந்தார். இறுதி உணவின் நிகழ்வு போல் அப்பம் பிட்கையில் அவர்கள் விழிகள் திறந்தன. உயிர்த்த கிறிஸ்துவை அனுபவாக்கினர். இறைவார்த்தைகளால் பற்றி எரிந்த உள்ளம் உயிர்த்த கிறிஸ்துவில் பற்று கொண்ட உள்ளமாக்கியது. விழிகள் திறந்ததால் வழிகளும் மாறின. இரவு அங்கு தங்கவில்லை. மீண்டும் எருசலேம் பயணமாயினர். மனமடிவோடு, விரக்தியோடு எம்மாவு சென்றவர்கள் உயிர்த்த கிறிஸ்துவை அனுபவமாக்கியப் போது மகிழ்ச்சியோடு பயணித்தனர். உயிர்த்த கிறிஸ்துவை அனுபவத்தோடு அறிவித்தனர். இதுதான் திருச்சபைக்கு ஒரு தொடக்கத்தை ஏற்படுத்தியது. இறைமக்களாகிய நாமும் உயிர்த்த கிறிஸ்துவை அனுபவமாக்கியப் போது, பற்றுறுதி வாழ்வில் உறுதியாய் இருக்கும் போது பாடுகள் நிறைந்த வாழ்வில் மகிழ்வை கிறிஸ்து அருள்வார்.

இறைமக்களாகிய நாம் உயிர்த்த கிறிஸ்துவை பின்பற்றி வாழ அழைக்கப்பட்டுள்ளோம். நம் வாழ்வில் உயிர்த்த கிறிஸ்துவை அனுபவமாக்குவோம். உலர்ந்த நிலையிலும், உடைந்த சூழலிலும் உருக்குலைந்துக் காணப்படும் எண்ணற்றவர்களின் உள்ளத்தில் உயிர்த்தெழுதலின் உருவாக்கத்தை ஏற்படுத்திடுவோம். கலக்கமும், நெருக்கமும், வருத்தங்களும் நிறைந்த வாழ்க்கைச் சூழலில் நம்பிக்கையின் சமூகத்தை வடிவமைத்து வாழ்வின் வழிகாட்டியாக முன்னெடுத்து செல்வோம்.

அருள்திரு. S. **அருள் ஜெபசிங்**

29-04-2018 **உயிர்ப்புக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு**

# கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொள்ளல் : உயிர்ப்பு
## BELIEVING IN CHRIST : THE RESURRECTION

2 அர. 4:27-37 திப. 26:12-23
திபா. 90 யோவா. 11:17-28

**"...என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்...என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்."** யோவா. 11:25,26

ரோம பேரரசர் கட்டிட கலைஞர் ஒருவரை அழைத்து அழகிய மண்டபம் ஒன்றை கட்டப் பணித்தார். அவர் ஐந்து ஆண்டுகளில் அழகிய மண்டபத்தை கட்டி முடித்தார். அரசர் கலைஞரை மனமார பாராட்டி, இம்மண்டபம் கிறிஸ்துவை கைவிட மறுப்பவர்கள் விலங்குகளுக்கு இரையாக்கப்படும் போது மக்கள் அமர்ந்து இரசிக்க கட்டப்பட்டதாகும் என்றார். கட்டிட கலைஞரோ அதிர்ச்சி அடைந்தார். அப்படியானால் நான் முதலில் பலியாக விரும்புகிறேன். நானும் கிறிஸ்தவர் என்று கூறி விலங்குகளுக்கு இரையானார். நான் இறந்தாலும் என்னை இயேசு கிறிஸ்து வாழ வைப்பார் என்று நம்புவது தான் நம்பிக்கை. நம்பிக்கை வாழ்வின் ஆணி வேர். நம்பிக்கை இழந்தவன் செத்தவன் ஆவான். எனவே தான் இயேசு என் தந்தையின் மீதும் நம்பிக்கை வையுங்கள். என் மீதும் நம்பிக்கை வையுங்கள் என்றார். என்னை நம்புவோர் என்றும் வாழ்வர் (யோவா. 6:47). நம்பிக்கையின் வழியாக கிறிஸ்து நம் உள்ளங்களில் குடி கொண்டு (எபே. 3:17) இழப்புகளையும், இன்னல்களையும் தாண்டி முன்னேறச் செய்கிறார். ஆக அவரை அன்பு செய்து அவருடன் இணைந்து நம்பிக்கை கொண்டு வாழ நமக்கு தரப்பட்ட திருமறைப் பாடங்களை கொண்டு சிந்திப்போம்.

### *1. இழப்பில் நம்பிக்கை கொள்ளல்* : (2 அர. 4 : 27-37)

எலிசா இறைவாக்கினர் சமாரியாவிலிருந்து கர்மேல் போகும் வழியில் சூனேம் ஊர் இருந்தது. அவ்வூர் வழி செல்லும் போது பெயர் சொல்லப்படாத செல்வந்த குடும்பத்தை சார்ந்த ஒரு பெண் தங்கள் வீட்டில் அவருக்கு தங்க இடமும், உணவும் கொடுப்பது வழக்கம். அக்குடும்பத்தில் குழந்தைச் செல்வம் இல்லாதிருந்தது. இதை அறிந்த எலிசா சூனேமியாளை அவரது வேலைக்காரர் கேயாசி வழியாக அழைத்து அடுத்த ஆண்டு இதே பருவத்தில் உனக்கு ஒரு மகன் பிறந்திருப்பான்

என்றார். 2 அர. 4:16,17 குறிக்கப்பட்ட நாளில் குழந்தை பிறந்தது. வளர்ந்தது. ஆனால் திடீரென்று குழந்தை இறந்து விட்டது. நம்பிக்கையற்று போன காலத்தில் கிடைத்த குழந்தை இறந்து போன போதும் சற்றும் கலங்காமல், பதட்டமடையாமல் இறந்த குழந்தையை இறைவாக்கினர் தங்கும் அறையில் வைத்து பூட்டிவிட்டு, ஓடி பர்வதத்தில் இருக்கும் மனுஷனிடத்தில் வந்து "அவர் காலடிகளைப் பற்றிக் கொண்டார்" 2அரச. 4:27. "நான் உம்மை விடமாட்டேன்" 2அரச. 4:30 என்று பிடித்துக் கொண்டார்.

நற்செய்திப் பகுதியில் மரியாள், மார்த்தாள் ஆகியோரின் சகோதரர் லாசர் இறந்து விட்டார். இயேசு கிறிஸ்து தூரத்திலே வரும் போதே இவர்கள் சென்று "ஆண்டவரே நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான்" யோவா. 11:21,22 என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினர். "நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி. கண்ணுக்கு புலப்படாதவைப் பற்றிய ஐயமற்ற நிலை" (எபி. 11:1) என்பதற்கிணங்க இழப்பிலும் இறைநம்பிக்கையில் நிலைத்திருந்து இழப்பிலும் உயிர்பெற்றதை காணலாம்.

## *2. இழக்கவும் தயங்காத நம்பிக்கை* : (தி.ப. 26 : 12-23)

கிறிஸ்தவர்களையும், கிறிஸ்தவ நெறியையும் அழிக்க வைராக்கியத்தோடு, குலப்பெருமை, இனப்பெருமை கொண்டு தமஸ்கு சாலையிலே அதிகாரத்தை பெற்றுவரும் போது சிலுவையில் அறையப்பட்டு, கொல்லப்பட்டு, கல்லறையில் புதைக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை உயிருள்ளவராக தரிசித்த பவுலின் அனுபவம் அவரது வாழ்வையே புரட்டிப் போட்டது. உயிர்த்த இயேசு கிறிஸ்துவின் மேல் நம்பிக்கைக் கொண்டு அவருக்கென்று தன்னை அர்ப்பணித்து நற்செய்தி சொல்லும் தூதுவராய் பல இடங்களில் நற்செய்தி அறிவித்து நிறைவாக எருசலேம் வந்தார். புற இனத்தவரை எருசலேம் ஆலயத்தில் அழைத்து வந்தார் என்பதற்காக யூதர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அங்கிருந்து கட்டுண்டவராய் ரோமாபுரிக்கு அழைத்து செல்லும் சாலையில் தான் பெற்ற தரிசனத்தை அகிரிப்பா ராஜாவுக்கு முன் உறுதியாய் பகிர்ந்து கொண்டார். (தி.ப. 26) தனக்கு இடறல் வரும் என்று அறிந்திருந்தும் "நான் யாரிடம் நம்பிக்கை கொண்டுள்ளேன் என அறிவேன். அவர் என்னிடம் ஒப்படைத்தை இறுதி நாள் வரை காத்திட வல்லவர் என்கிற உறுதியான நம்பிக்கை எனக்கு உண்டு" (2திமொ. 1:12). எங்கே நம்பிக்கை உண்டோ அங்கே பயமோ, அதிர்ச்சியோ இருக்காது. நம்பிக்கை அவரை உந்தி தள்ளியது. நம்பிக்கை அவரை நகர வைத்தது. நம்பிக்கையற்ற

மனிதர் தனிமையாகவே தனது பலத்தை மட்டும் நம்பி துன்பங்களை எதிர்கொள்கிறார். நம்பிக்கை உடைய மனிதரோ தனது பலத்தை விட இறைப்பலம் தன்னோடு இருப்பதை உணர்ந்து துன்பங்களை எதிர்கொள்கிறார். "எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு" என்கிறார் பவுலடியார் (பிலி. 4:13). நம்பிக்கை உள்ள மனிதர் ஒருபோதும் தனிமையாக இல்லை. "என்ன நேர்ந்தாலும் வெட்கமுற மாட்டேன். இன்றும், என்றும், வாழ்விலும், சாவிலும் முழுத்துணிவுடன் கிறிஸ்துவை என் உடலால் பெருமைபடுத்துவேன். இதுவே என் பேராவல். இதுவே என் எதிர்நோக்கு. ஏனெனில் நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே." (பிலி. 1:20,21). இனி வாழ்வது நானல்ல. கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார். இறைமகன் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் நான் இவ்வுலகில் வாழ்கிறேன் என்று தனக்கு மரணம் வருமென்று அறிந்திருந்தும் நம்பிக்கையில் உறுதியாய் நின்றார். அறுபட்டு துளைக்கப்பட்ட மூங்கில் தான் புல்லாங்குழலாக மாறுகிறது. அறுபட்டு துளைக்கப்படும் போது தன் அழகை இழக்கிறது. ஆனால் பிறருக்கு பயனாக மாறுகிறது. மரம் பூவை இழக்கிறது. அது மரத்திற்கு இழப்பா? இல்லையே. பூ காய்ந்தால்தானே காய் பிறக்கும் - கனியும் கிடைக்கும். இழப்பை இழப்பாக கருதினால் இழப்பு - இழப்பு தான். ஆனால் இழப்பை லாபமாக கருதினால் இழப்பும் லாபமே.

### ***3. நிலைவாழ்வு தரும் நம்பிக்கை*** : (யோவா. 11 : 17-28)

என்னில் நம்பிக்கை கொள்வோர் இறப்பினும் வாழ்வர். உயிரோடு இருக்கும் போது என்னில் நம்பிக்கை கொள்ளும் எவரும் சாகமாட்டார். சாவை பற்றி சொல்லும்போது உடல் சார்ந்த சாவை குறிக்கவில்லை. உடல் சார்ந்த சாவில் இருந்து யாரும் தப்ப முடியாது. அது இயற்கை நியதி. சாவு என்பது பாவத்தில் நம்மையே முற்றிலும் இழந்து வாழும் தன்மையாகும். (உரோம. 6:23). பாவத்துக்கு கிடைக்கும் கூலி சாவு. இதை இன்னும் அழுத்தமாக காணாமல் போன மகன் உவமையில் பாவம் செய்து மனம் மாறி வந்த இளைய மகனை குறித்து தந்தை சொல்லும் போது என் மகன் இவன் இறந்து போயிருந்தான் லூக். 15:24. ஆக பாவத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் வாழ்வதாக இருந்தாலும் மரித்துப் போனவர்கள். "சிற்றின்பத்தில் உழல்பவர்கள் நடைபிணங்களே" (1திமொ. 5;8). இன்றும் கோபம், வெறுப்பு, பழிவாங்குதல், சீற்றம், பிளவு, கட்சி மனப்பான்மை போன்ற ஊனியல்பின் செயல்பாடுகளுக்கு அடிமைகளாக வாழ்தல், அன்பு செய்யாமை, தம்மிடம் உள்ளதை பகிர்ந்து கொள்ளாமை இவைகள் சாவின்

ஆட்சிக்குட்பட்டவர்கள். சகோதரர்களிடத்தில் அன்பு கொண்டிராதோர் சாவிலே நிலைத்திருக்கிறவர்கள் (1யோவா. 3:14).

வாழ்வு என்பது கடவுள் நமக்கு தந்த கொடை மனிதன் தன் பாவ நிலையை உணர்ந்து மனம் மாறி நம்பிக்கையோடு கடவுளிடம் வரும் போது உண்மை வாழ்வை பெற முடியும். பாவத்திலிருந்து திரும்பி வந்த இளைய குமாரன் மீண்டும் உயிர் பெற்றுள்ளான். ஆக வாழ்வு என்பது மயானத்துடன் முடிந்து விடும் வாழ்வு அன்று. நமது வாழ்வு முடிவற்ற திருப்பயணம். அது நித்தியத்தை நோக்கியது. அவரே வாழ்வு (1யோவா. 1:4). மக்கள் வாழ்வு பெறும் பொருட்டு அதுவும் நிறைவாக பெறும் பொருட்டு வந்தார் (யோவா. 10:10). இந்த வாழ்வை அவரில் நம்பிக்கைக் கொண்டவர்கள் பெற்றுக் கொள்ள முடியும். தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெற்று கொள்வார் (யோவா. 3:16). விதை மண்ணில் மடிவது இறப்பன்று. பலன் கொடுப்பதற்கான புதிய வாழ்வின் பிறப்பு. இழப்பதால் வாழ்வை காத்து கொள்கிறதில்லை என்பொருட்டு தம் உயிரை இழக்கும் எவரும் அதை காத்துகொள்வர். கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்வோரின் வாழ்வு மாறுபடுவதேயன்றி அழிக்கப்படுவதில்லை. இவ்வுலக வாழ்வு முடிந்தவுடன் பரலோகில் நித்திய வீடு தயாராக இருக்கிறது. "நம் மீட்பராகிய கிறிஸ்து இயேசு சாவை அழித்து, அழியா வாழ்வை நற்செய்தி வழியாக ஒளிரச் செய்தார்." (2திமொ. 1:10). ஆக கிறிஸ்துவில் நம்பிக்கை பெறும் போது இழப்பில் நம்பிக்கையும் எதையும் இழக்க தயாராகின்ற நிலையையும், நிலைவாழ்வையும் பெற்று கொள்ள முடியும்.

அருள்திரு. N. **ஜாண் பென்டிங்**

06-05-2018

**உயிர்ப்புக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு**

# அருட்பணியின் வெளிப்பாடாக இருக்க கிறிஸ்துவின் அழைப்பு

# CHRIST'S INVITATION TO BE AN EXPRESSION OF MISSION

| | |
|---|---|
| எசே. 34:25-31 | 1 பேது. 2:1-10 |
| தி.பா. 47 | யோவா. 20:19-23 |

**"நீங்கள் என் மேய்ச்சலின் மந்தையாகிய மக்கள், நான் உங்கள் கடவுள்." எசே. 34:31**

அருட்பணியாளர் ஒருவர் குடும்பமாய் இறைப்பணிக்குத் தம்மை ஒப்படைத்து, இறைப்பணியை தம் சொந்த தேசத்தில் செய்வதற்கு விருப்பமில்லாமல் இறைவனை அறியாத இடத்தில் அருட்பணி செய்ய வேண்டும் என்று விரும்பினார். எனவே போக்குவரத்துகள் அதிகம் இல்லாத காலத்தில் ஒரு படகை வாங்கி அதில் பயணம் மேற்கொண்டார். எங்கு படகு கரை ஒதுங்குகிறதோ அங்கே இறைப்பணி செய்ய வேண்டும் என்று நினைத்தார். படகு ஒரு தீவில் கரை ஒதுங்கியது, அவ்விடத்தில் இறங்கி இறைப்பணி செய்ய ஆயத்தமானார். படகை கரையில் கட்டி போட்டுவிட்டு, தீவில் மனிதர்களை சந்தித்தார். மனிதனை உணவாக உண்டு வாழும் மக்கள் அவர்கள். ஆடைகள் இல்லை. நாகரீகம் அற்ற மனிதர்கள் அவர்கள். அவர்களுக்கு இறைச் செய்தியை பகிர்ந்தார் யாரும் கேட்பதற்கு ஆயத்தமாயில்லை. நிறைவில் இனி இங்கு இருப்பது நல்லதல்ல என்று எண்ணி படகை எடுத்துக்கொண்டு தன் சொந்த தேசத்திற்கு புறப்பட ஆயத்தமானார். மீண்டும் மனதில் ஒரு நெருடல் இறைப்பணியை செய்வதா? இல்லை சொந்த தேசம் செல்வதா? இறுதியில் இருமனம் உடையவராக இருப்பது நல்லதல்ல. படகு இருப்பதினால் தான் அந்த எண்ணம் வருகிறது என்று எண்ணி படகை உடைத்து தீயிட்டு கொளுத்தினார். இந்த தீயைக் கண்ட மக்கள் ஓடோடி வந்தனர். வந்தவர்களுக்கு இறைத்தூதுவை சொன்னார். ஏற்றுக்கொண்டனர். அப்பகுதியில் அம்மக்களோடு வாழ்ந்து அவ்விடத்திலேயே மாண்டார். இருமனம் அல்ல ஓர் மனம் வேண்டும். இரு வாழ்வு அல்ல உண்மை வாழ்வு வேண்டும் இறைப்பணியில்.

எசே. 34ம் அதிகாரத்தில் பொய்யான ஆயன் நல்ல ஆயன் பண்புகளை விளக்கி கூறுகின்றார். எசேக்கியல் இறைவாக்கினர் கூறும்

இறைவாக்கு என்னவெனில், "ஒவ்வொருவருக்கும் தம் தீவினைகளுக்குப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்றும், அவர்தம் நெஞ்சமும், எண்ணமும் உள்ளார்ந்த புதுப்பொலிவு பெற வேண்டும் என்பதாகும்." இப்பகுதியில் கடவுள் தம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் குறித்து தெளிவுபடுத்துகின்றார். தம்முடைய எழுச்சிமிகு எண்ணங்கள் பலவற்றை அடையாள செயல்கள் வழியாக விளக்குகிறார் அதில் ஒன்றுதான் ஆயர், மந்தை என்பதை உருவகத்தோடு சொல்கின்றார்.

எசே. 33:25,26 வசனங்களில் சிறைப்பிடிப்பில் இருக்கும் இஸ்ரயேல் மக்கள் மோசேயின் உடன்படிக்கையை மீறி நடக்கின்றனர். ஏன் என்றால் இவர்களை வழிநடத்தும் தலைவர்கள் சரியாக வழிநடத்தவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றார். இப்பகுதியில் நல் ஆயர்கள் பற்றியும், பொய்யாய் வழிநடத்தும் ஆயர்கள் பற்றியும் குறிப்பிடுகின்றார். எசே. 34:1-10 வரை சுயநல இறைவாக்குனர், 11-16 வரை நல்ல மந்தையும், ஆயனும் (17-22). நீதிவழங்கி, கேடுபாடானதை மீட்கின்றதையும் (25-31) சமாதான உடன்படிக்கை குறித்து தெளிவுபடுத்துகின்றார். 25-ஆம் வசனத்தில் "என் ஊழியன் தாவீது" என்பது தாவீது அல்ல (தாவீது 400 ஆண்டுகளுக்கு முன் இறந்து போய்விட்டார்) மாறாக தாவீது வம்சத்தில் வரும் இறைநாதர் இயேசு கிறிஸ்துதான் நல் ஆயன் என்பதை தெளிவுபடுத்துகின்றார்.

நல் ஆயனாய் இருந்து அருட்பணி செய்ய இறைநாதர் இறைவன் அழைக்கின்றார். நல் ஆயன் எப்படிப்பட்டவர்?

## *1. பலவீனர்களைப் பெலப்படுத்திப் பணிவிடை செய்பவர்:*

(எசே. 34 : 16)

நல்ல ஆயன் எசே. 34:16-ல் பலவீனத்தை பலமுள்ளதாக்குகிறார். எப்படியெனில் மந்தையை தேடுதல், திரும்ப கொண்டு வருதல், கட்டுபோடுதல், திடப்படுத்துதல், வலிமையுள்ள தாக்குதல், கொழுத்ததையும், வலிமையுள்ளதையும் அழித்தல் (நான் என்ற அகம்பாவம்). இது ஆயனின் தலையாய கடமை. பொய் ஆயன் மந்தையை பலவீனப்படுத்துகின்றான். எசே. 34:4-ல் மந்தையை திடப்படுத்தாமல், குணமளிக்காமல், கட்டுபோடாமல், திரும்ப கூட்டி சேராமல், தேடாமல், அவற்றை கொடுமையுடனும் வன்முறையுடனும் நடத்துகின்றான்.

இவர்கள் சுயநலமாய் செயல்படுகின்ற ஆயர்கள். அவர்கள் கொழுப்பானதை உண்டு, ஆட்டு மயிராடையை உடுத்தி, மந்தையில் சிறந்ததை அடித்து, மந்தையை மேய்க்காமல், பணிவிடை செய்வதற்கு

தவறி விடுகின்றனர் (எசே. 34:3-10). இவர்கள் தங்களை வளர்த்தி கொள்கின்றனரே தவிர மந்தையை வளர்த்தவில்லை. எசே. 34:8-ல் ஆட்சியாளரைப்போல் செயல்படுகின்றனர். இவர்கள் குதிரைக்கு ஒத்த பண்புகளை கொண்டு செயல்படுகின்றனர். நல் ஆயர் கழுதையைப் போல பணிவிடை செய்தல் வேண்டும். திபா. 23:4-ல் நல்ல ஆயனுடைய கோலும், நெடுங்கழியும் என்னை தேற்றும் என்கிறார். ஆட்சிச் செய்கின்ற ஆயர் அல்ல, பெலவீனர்களை பெலப்படுத்தி பணிவிடை செய்கின்ற ஆயர் தேவை. எனவே பணிவிடை செய்கிற ஆயராக மாற முற்படுவோம்.

### *2. பாதையைச் சரிசெய்து நன்மையானதைச் செய்பவர்* : (எசே. 34 : 26)

நல் ஆயன் எசே. 34:13.14 படி அடிமைத்தனத்திலிருந்து வெளிக்கொணர்ந்து, சிதறப்பட்ட நாடுகளிலிருந்து கூட்டி சேர்த்து, சொந்த தேசத்திற்கு அழைத்து வருகின்றனர் (வி.ப. 12:38). நல்ல மேய்ச்சல் நிலத்தில் மேய்ச்சலை காணும்படிச் செய்கின்றவர். யோவா. 10:3-9 -ல் மந்தைக்கு எப்பொழுதும் வாசல் திறந்திருக்கும். யோவா. 10:4 நன்மையோ, தீமையோ மந்தைக்கு முன்செல்லும் ஆயன் நல் ஆயன். ஆனால் பொய் ஆயன் தீமை வரும்போது வாசலை மூடி வைத்துக் கொள்கிறான். எசே. 34:5-ல் முன்னாக செல்லாததினால் காட்டு விலங்குகளுக்கு மந்தைகள் இரையாகின்றன. நல்ல நிலத்தில் மேய்ச்சலை காட்டவில்லை. செழுமை நற்செய்தியாளர்கள் மந்தைகளின் பாடுகளை ஏற்க துணியவில்லை மாறாக பாடுகளை ஏற்படுத்துகின்றனர். இறைமகன் இயேசுவை பின்பற்றாமல் தலைவர்களை தலைமையாக கொண்டு அவர்களுக்கு பின் செல்கின்றனர். சரியான பாதை எது என அறியாமல் கேட்டுக்கு நேராக செல்கின்றனர். நல்ஆயன் மந்தையை தன் உடமையை போல பாதுகாக்கிறான். எப்பொழுதும் மந்தைக்கு நன்மையானதைச் செய்கிறார். ஆனால் பொய் ஆயன் மந்தையை வியாபார கண்ணோட்டத்தோடு பார்க்கிறான். எனவே நாம் நல்ல ஆயராக இருந்து பாதையை சரிசெய்து நன்மையானதைச் செய்வோம்.

### *3. பாரத்தை ஏற்று வாழ்வைத் தருபவர்* : (எசே. 34:27-29)

நல்லாயன் மந்தையை கொடியவர்களுக்கு கொள்ளையாடின பொருளாய் இல்லாமல், கொடிய விலங்குகள் விழுங்காமல், அச்சுறுத்தல் இல்லாமல், பாதுகாப்பாய் பண்ணையெழுப்பி, பஞ்சத்தில் வாடாமல் பாதுகாப்பார். முழுக்கவனத்தோடு இருப்பது மாத்திரமல்ல பாரத்தை ஏற்றுக்கொள்பவர். யோவா. 10:11 வாழ்வை கொடுக்கும் நல் ஆயன்

தலையில் முட்கிரீடத்தால் கிரீடம் வைத்துள்ளார். போலி ஆயன் யோவா. 10:12,13 படி துன்பத்தை கண்டு ஓடிப்போகின்ற ஆயர்கள். அவர்கள் தலையை முத்துகளால் ஆன கிரீடத்தை வைத்து அழகு சேர்ப்பவர்கள். ஏகபோகமாக வாழ கூடியவர்கள். இவர்கள் இறைவனை மாயவித்தைகாரனைப்போல பார்க்கின்றனர். நல் ஆயர் பாடுகளை ஏற்று நல் வாழ்வை வழங்குகிறார். நமக்கு பரம வாழ்வை பாடுகளை ஏற்று சுமந்து வழங்கியிருக்கிறார். எனவே நாமும் அவ்விதமாக வாழ முற்படுவோம்.

அன்பர்களே! நம் வாழ்வை அருட்பணியின் வெளிப்பாடாக இருக்க கிறிஸ்துவின் அழைப்பைப் பெற்றுக் கொண்ட நாம் நல் ஆயர் இயேசு கிறிஸ்து போல் பலவீனர்களைப் பலப்படுத்தி பணிவிடைச் செய்து பாதையைச் சரிவர செய்து நன்மையானதைச் செய்து பாரத்தை ஏற்று வாழ்வை வழங்கும் கருவிகளாக மாறி இறையரசைக் கட்டியெழுப்புவோம்.

திரு. S. **ஜாண் வினோ ராஜ்**

10-05-2018



# கிறிஸ்து : அனைவரின் ஆண்டவர்
## CHRIST : LORD OF ALL

தானி. 7:9-14 திப. 1:1-11
தி.பா. 47 லூக். 24:50-53

**"...எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்..."** தி.ப. 1:8

கடவுள் எல்லா இனத்தவருக்கும், எல்லா நாட்டினருக்கும் உரியவர். அவரது ஆளுகை எங்குமுள்ளது. இயேசுகிறிஸ்து கைகளை உயர்த்தி ஆசி வழங்கி விண்ணேற்றம் அடைந்தார் என்பது அவர் அனைவருக்கும் ஆண்டவர் என உறுதியாக்கப்படுகின்றது. இயேசு கிறிஸ்து அரசாராகவும் மீட்பராகவும் இருந்து ஆட்சி செய்கிறார். ஆண்டவர் எனும் வார்த்தை 'சொந்தமாக இருப்பது', 'ஆண்டு கொள்பவர்', 'ஆளுநர்', 'இயக்குநர்' என பல பொருளை தருகிறது. விண்ணேற்றம் என்பத மேலிருந்து ஆள்வதும், அதிகாரமுடையோராக செயல்படுவதே ஆகும். விண்ணேற்றம் மண்ணகத்தையும், விண்ணகத்தையும் இணைக்கும் நிகழ்வாக அமைந்துள்ளது. கிறிஸ்துவின் விண்ணேற்றம் அவரது உயிர்தெழுதலுக்கு பின் மண்ணகத்திலிருந்து விண்ணகத்திற்கு திரும்பியதை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்து அங்கு சென்றபின் தூய ஆவியானவரை அனுப்பி தம்முடையத் திருச்சபையை இங்கு நிலைநாட்டினார். கிறிஸ்து அனைவருக்கும் ஆண்டவர் என்ற தலைப்பில் தொடர்ந்து சிந்திப்போம்.

### *1. ஆண்டவரை அறிதல்* : (தானி. 7 : 9-14)

இஸ்ரயேல் மக்கள் மோசே செய்யப்பட்ட அற்புதங்கள், அடையாளங்கள் வழியாக "யெகோவா" யார் என அறிந்து கொண்டனர். அவர்கள் அவரால் தெரிந்துக் கொள்ளப்பட்ட தலைமுறையினர் என உலகெங்கும் அறியப்பட்டிருந்தும் புதிய தலைமுறைக் கடவுளையும், அவரது கிரியைகளையும் அறியவில்லை. எனவே பாபிலோனில் சுதந்தர வாழ்வு இருந்தும் தன் மானத்தை இழந்து அடிமைகளாக இருந்தனர். ஆண்டவரை முழுமையாக அறிந்த கொண்ட போது ஓர் புது வாழ்வு கிடைக்கும் என நம்பினர். கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தி திருப்தியடைந்த பவுல் தமஸ்குவில் வைத்து ஆண்டவர் யார் என்பதை

அறிந்த கொண்டான். அறிந்து கொண்ட பவுலின் மாபெரும் ஆசை கிறிஸ்துவை முழுமையாக அறிந்து அவருக்கருகில் மிக நெருக்கமான முறையில் அவருடைய தனிப்பட்ட உறவை உணர்ந்து அவருக்காகத் தன்னை அர்ப்பணித்து, புறஜாதிகளின் அப்போஸ்தலனாக இருந்து அவர் பணி செய்ய வேண்டுமென்பதே. அதற்காக தன்னை முழுமையாக ஒப்படைத்தான். சீடர்கள் இயேசுவோடு இருந்தபோது அவரையும் அவரது போதனைகளையும் முழுமையாக அறியவில்லை. அவரையும், அவர்கொடுத்த போதனைகளையும் முழுமையாக அறிந்தபோது கடைசிவரை அவருக்கு சாட்சிகளானார்கள். நாமும் கிறிஸ்துவை முழுமையாக அறிந்து சாட்சிகளாவோம்.

### ***2. ஆண்டவரை அனுபவித்தல்*** : (லூக். 24 : 50-53)

இயேசு கிறிஸ்து கடைசிநாளிலே சீடர்களோடு தங்கி உரையாடி வாக்குதத்தம் அளித்து விட்டு விண்ணேறி சென்றார். சீடர்கள் பார்த்து கொண்டிருந்த போது வெண்ணுடை தரித்த இருவர் “அவர் மீண்டும் வருவார்” என அறிவித்தபோது சீடர்களுக்கு நம்பிக்கை பிறந்தது. அந்த நம்பிக்கை மூலம் பலபாடுகளைக் கிறிஸ்துவுக்காகச் சகித்து காத்திருந்தனர். அவர்களை புதிய திருப்பணிக்கு நேராக வழிநடத்தியது. தூய ஆவியை பெற்ற பின்பு உலகெங்கும் கிறிஸ்துவை பற்றிய நற்செய்தியை அறிவியுங்கள் என்ற கட்டளையும் அவர்களுக்குள் திருப்பணியின் தேவையை வலியுறுத்தின. கிறிஸ்துவின் விண்ணேற்பு சீடர்களுக்கு புதிய ஆன்மீக அனுபவமாக அமைந்தன. ஆண்டவரின் சீடன் யூதாஸ் கடவுளின் அன்பு, கரிசனை, மன்னிப்பு விடுதலை இவைகளை ஏற்றுகொள்ளுததினால் அவரைகாட்டிகொடுத்து அவரண்பை அனுபவிக்க மறுத்துவிட்டான். ஏனைய சீடர்கள் தங்களை இயேசுவுக்காக அர்ப்பணித்தபடியால் அவரன்பை இறுதிவரை ருசித்து அனுபவித்தனர். ஏசாயா அரியணையில் அமர்ந்திருக்கும் ஆண்டவரை தேவாலயத்தில் கண்ணால் பார்த்தான். காதால் அவர் சத்தத்தை கேட்டான். அந்த அனுபவம் அவரை தூய்மையாக்கியது. கிறிஸ்துவின் அனுபவத்தை சீடர்கள் தங்கள் வாழ்வில் ஏற்று அர்ப்பணமாக்கி அனுபவித்தார்கள். நாமும் கிறிஸ்துவை வாழ்வின் அனுபவமாக்கி அனுபவிப்போம்.

### ***3. ஆண்டவரை அறிவித்தல்*** : (திப. 1 : 1-11)

கிறிஸ்து விண்ணேற்றம் அடைந்ததின் வழியாக எருசலேமில் காத்திருந்த சீடர்கள் இறையாட்சிக்கான பணி தொடர முன் வந்தனர். விண்ணேற்றம் இல்லையெனில் திருச்சபையெனும் இயக்கத்திற்கான பணி

இல்லாமல் இருந்திருக்கும். ஆதித்திருச்சபை அனைவருக்கும் ஆண்டவர் என்பதை உணர்ந்தப்படியினால் இயேசுகிறிஸ்துவை பற்றி கேள்விப்படாத இடங்களில் தங்களையும், தங்கள் உடமைகளையும், உறவுகளையும் இழந்து நற்செய்தி அறிவித்தார்கள். அதன் விளைவாக திருச்சபை கடவுளால் உலகினுள் அனுப்பப்பட்ட திருச்சபையாக இறையாட்சியை வாழ்வின் எல்லா பகுதிகளிலும், தொடர்பு படுத்தவும், எல்லா மக்களையும் இறையரசின் புது வாழ்வுக்கு அழைக்கவும், பாவமன்னிப்பை அறிவித்து கடவுளோடும் சக மனிதர்களோடும் நல்லுறவுடன் அனைவரும் வாழும்படி அனுப்பப்பட்டுள்ளது. பரதீசை பெற்று கொண்ட கள்வன் இயேசுவை குற்றமற்றவர், நீதியின் அரசன் என அறிவித்தான். என் ஆண்டவரே, என் கடவுளே என அறிக்கையிட்ட தோமா கிறிஸ்து தமது வாழ்வின் மீட்பர் என அறிவிக்க இந்தியா வந்தார். அவர் மூலமாக நாம் இயேசுவை மீட்பராக அறிந்து கொண்டோம். உலகின் எல்லா பகுதிகளிலும் கிறிஸ்து அனைவருக்கும் ஆண்டவர் என அப்போஸ்தலர்கள் நற்செய்தியாக அறிவித்தனர்.

திருச்சபை எனும் இயக்கத்தின் முதன்மையாக கிறிஸ்துவின் விண்ணேற்றம் அமைந்துள்ளது. இரக்கத்தின் அனைத்து பரிமாணங்களும் அனைவருக்கும் ஆண்டவர் எனும் பெயரிலும், நம்பக தன்மையிலும் வெளிப்படுகிறது. மண்ணகத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை கண்காணிக்கிறவராய் கிறிஸ்து தம் சீடர்கள் மீதும் சபையின் மீதும், தேவராஜ்ஜியத்தின் ஊழியத்தின் மீதும் கவனமாயிருக்கிறார். கிறிஸ்துவின் விண்ணேற்றம் நற்செய்திபணிக்கான புதிய சிந்தனையையும், புதிய திட்டத்தையும் கூர்மையாக்கியது. அது அனைவருக்கும் கிறிஸ்து ஆண்டவர் என வெளிப்படுத்தி கொண்டேயிருக்கிறது.

திரு. T.S. **ஏசையன்**

13-05-2018

**உயிர்ப்புக்குப் பின்வரும் ஆறாம் ஞாயிறு**

# தூய ஆவியாரை எதிர்நோக்கிக் காத்திருத்தல்

## WAITING UPON THE HOLY SPIRIT

| | |
|---|---|
| எசா. 40:25-31 | தி.ப. 1:1-11 |
| தி.பா. 51 | லூக். 24:44-49 |

***"தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும், உலகத்தின் கடைசி எல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்."*** தி.ப. 1:8

இயேசுகிறிஸ்து தம்முடைய இறுதி உரையில் சீடர்களிடம் திட்டமாக கூறிய ஒன்று தூய ஆவியாரைக் குறித்த வாக்குத்தத்தம் ஆகும். யோவான் 14:16,17 ஆகிய வசனங்களில் "உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்கு தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார்; அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்" என்கிறார்.

எப்பொழுதும் துணையாளராக நம்முடன் இருக்கும் தூய ஆவியாரின் ஆற்றலை பெற்றுக்கொள்ளும் வரையில் எருசலேம் நகரத்திலேயே காத்திருங்கள் என்று உயிர்த்த ஆண்டவர் சீடர்களிடம் உணர்த்தியதை லூக். 24:29-வது வசனத்தில் புரிந்து கொள்ளலாம்.

இதையே இறையடியவர் லூக்கா திருதூதர் பணிகளில் , தந்தையாகிய கடவுள் தமது அதிகாரத்தால் குறித்து வைத்துள்ள நேரங்களையும், காலங்களையும் சீடர்கள் அறிந்துகொள்ள முடியாத ஒன்று தூய ஆவியாரின் நிறைவினை பெற்ற பின்பு ஆற்றலினை பெற்று எருசலேம் முதல் பூமியின் கடை எல்லை வரை சாட்சிகளாயிருப்பீர்கள் என்கிறார் (1:7,8).

அப்படிபட்ட எப்பொழுதும் உடனிருக்கின்ற, வல்லமையுள்ள தூய ஆவியாருக்காக காத்திருந்த சீடர்குழு பெந்தேகோஸ்தே பண்டிகையின் போது தூய ஆவியாரின் வருகையை அனுபவித்தார்கள். இந்த ஆவியார் எப்பொழுதும் தங்களுடன் அதாவது திருச்சபையுடன் (இயேசுகிறிஸ்துவை தங்கள் சொந் மீட்பராக ஏற்றுக்கொண்டு ஆண்டவர் என்று அறிக்கை செய்த மக்கள் கூட்டம்) இருப்பதை உணர்ந்து அறிக்கை செய்தார்கள் நேற்றும் இன்றும் என்றும் மாறாத அனைத்து ஆற்றலும் உள்ள கடவுளின்

அருளையும் ஆற்றலையும் இன்றும் இறைமக்கள் தூய ஆவியாரின் துணையோடு செயல்ப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், செயல்பட வேண்டும் அதுவே கிறிஸ்துவின் திருச்சபைப் பேரிலுள்ள எதிர்பார்ப்பு ஆகும்.

இத்தகைய முன்னுரையோடு திப. 1:8 -வது வசனத்தில் வருகின்ற இரண்டு உண்மைகளை இன்று தியானிப்போம்.

## *1. இறை ஆற்றலைப் பெற்றுக்கொள்ளுங்கள்* :

என்றும் நம்முடன் இருக்கும் தூய ஆவியாரின் உடனிருப்பை பெற்றுக்கொண்ட நாம் அவருடைய வல்லமையை வெளிப்படுத்த அழைக்கப்படுகிறோம். திருதூதர்களின் வாழ்வில் தூய ஆவியாரின் வல்லமை நீதிக்காக, நேர்மைக்காக குரல் கொடுப்பதிலும், உண்மைக்காக எத்தகைய பாடுகள், நெருக்கடிகள் வந்தாலும் தைரியமாக நின்று கொடுப்பதிலும், இணைந்து பகிர்ந்து நல்லுறவில் வளர்வதிலும் வெளிப்பட்டது.

இயேசு நாதரை சிலுவையில் அறைந்து யூதர்களும், ரோம ஆதிக்க சக்தியும் கொலை செய்தபோது, ரோமானிய பேரரசின் ஆதிக்க சக்திக்கு சீடர்குழு பயப்பட்டது. சீடர்கள் பூட்டிய வீட்டிற்குள் முடங்கினர். மனிதரை பிடிக்க அழைக்கப்பட்ட பேதுரு மீண்டும் நம் பழைய தொழிலாகிய மீன் பிடிக்க போகிறார். பொது மக்களைக்கூட சந்திப்பதற்கு ஆற்றல் இழந்துபோன சீடர் கூட்டம்.

தூய ஆவியாரின் வருகைக்கு பின் ஆற்றல் அடைகிறார்கள். தங்களுடைய வல்லமையின் வெளிப்பாடாக பேதுரு பெந்தேகோஸ்தே நாளில் எருசலேமில் கூடியிருந்த பல மொழிபேசும் மக்களுக்கு இயேசு நாதரே கிறிஸ்து என்று யோவேல் தீர்க்கர் முன்னுரைத்த ஆவியாரின் பொழிதல் குறித்தும், தாவீதின் பற்றுறுதியினை சுட்டிக்காட்டி அருளுரை ஆற்றுகிறார். அவருடைய அருளுரையின் மையக் குரலாக “நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவைக் கடவுள் ஆண்டவரும் மேசியாவுமாக்கினார்” (தி.ப. 2:36) என்ற உறுதி வெளிப்பட்டது.

இத்தகைய வல்லமையே திருக்கோயிலின் வாயிலில் முடவர் ஒருவரை நாசரேத்து இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும் என்று சொல்ல தூண்டியது.

திருதூதர்பணிகள் 4-வது அதிகாரத்தில் யூதத்தலைவர்கள் பேதுருவையும், யோவானையும் பிடித்து மக்கள் மன்றத்தில் நிறுத்தி “நீங்கள் எந்த வல்லமையால் அல்லது எந்த பெயரால் முடவரை நடக்கச்

செய்தீர்கள்" தி.பா. 4:7,8) என்று கேட்டபோது பேதுரு தூய ஆவியரால் ஆட்கொள்ளப்பட்டு மறுமொழியாக இயேசுவின் பெயரால் இவர் நலமடைந்து நம்முடன் நிற்கிறார். நீங்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்தீர்கள் ஆனால் கடவுள் இறந்த அவரை உயிருடன் எழுப்பினார். என்று இறை ஆற்றலின் மேன்மையை வெளிப்படுத்தினார்கள்.

அதுபோல யூதத் தலைமைச் சங்கத்தாரிடம் தி.ப. 4:19-ல் உங்களுக்கு செவிசாய்ப்பதா? கடவுளுக்கு செவிசாய்ப்பதா? இது கடவுள் பார்வையில் எது முறையானது என நீங்களே தீர்மானித்தும் கொள்ளுங்கள் என்று தைரியமாக நின்றார்களே அது தூயாவியரின் பலப்படுத்துதலால் வந்த ஆற்றல்.

அன்பர்களே இன்றும் இயேசுநாதரால் வாக்குரைக்கப்பட்டு திருச்சபைக்கு கொடுக்கப்பட்ட தூய ஆவியார் உண்மையின் ஆவியராக நம்மை ஆற்றல் படுத்துகிறார். அவருடைய ஆட்கொள்ளுதலுக்கு இடம் தருகிறோமோ என்பதுதான் கேள்வி?

இன்னும் தூயாவியாரின் வருகைக்கு காத்திருக்க வேண்டும் என்று கூறி காத்திருப்பதும் நமது சப்தங்களை உயர்த்தி, கைகளைதட்டி ஆகோசப்பட்டு புரியாதவைகளை அந்நிய மொழி வரம் எனக்கூறி இவைகளில் திருப்திபட்டு விடுவதும் வாடிக்கையாகிவிட்டது.

ஆனால் தூய ஆவியாரின் ஆற்றல் நன்மைகளை வெளிப்படுத்துவது. நீதியினை செயல்படுத்துவது, அநீதி, அக்கிரமங்களை கண்டித்து உரைப்பது. நெருக்கங்களையும், பாடுகளையும் பார்த்து பயந்து போகாமல் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் பெயரில் உண்மையை உரக்கச் சொல்லுவது. இவைகள் நம்மைக் கொண்டும் செயலாற்ற துடித்துக் கொண்டிருக்கும் தூயாவியானவருக்கு இடங்கொடுப்பதால் மட்டுமே அவரது வல்லமையை அனுபவிக்க முடியும்.

இன்று திருச்சபையும்,அரசியலும் தீயோனின் அடிமைகளின் கூடாரமாகிவிட்டன. அன்று மக்கள் வாழ்விற்காக கல்வி நிறுவனங்களை, தொழில் கூடங்களை நிறுவிய காலம் மாறி இப்படிப்பட்ட திட்டங்களால் எனக்கு எப்படியெல்லாம் கைக்கூலிகளும், லஞ்சங்களும், ஊழல் வருவாய்களும் கிடைக்கும் என்ற தலைமையத்துவங்கள் திருச்சபையிலும், அரசியலிலும் மலிந்து போயிற்று. இத்தகைய சமூகத்தில் இறைபற்றாளனாக, கிறிஸ்துவின் உண்மைத் தொண்டனாக உண்மைக்கும், நீதிக்கும், உறவுக்கும், பகிர்வுக்கும் இடமளித்து தூய ஆவியரின் ஆற்றலை வெளிப்படுத்துவோம்.

## *2. கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாய் இருங்கள்* :

தூய ஆவியாரின் வல்லமையை பெற்றவர்கள் சாட்சிகளாய் இருப்பார்கள். இருக்க வேண்டும் என்பதையே உயிர்த்த ஆண்டவர் தி.ப. 1:8-ல் தெளிவாக சுட்டிக் காட்டுகிறார்.

எருசலேம் மக்களிடம் சொல்லும் போது எருசலேம் முதல் பூமியின் கடையெல்லைவரை சாட்சிகளாய் இருங்கள் என்கிறார். அதாவது நமது இல்லம், கிராமம் முதல் நாம் செல்லும், பணியாற்றும் எல்லா இடங்களிலும் ஆண்டவருக்கு சாட்சியாயிருக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகிறார்.

தூய ஆவியாரின் ஆட்கொள்ளுதலுக்கு நம்மை ஒப்புகொடுத்தால் சாட்சின் வாழ்க்கை மேலோங்கி நிற்கும். நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர் என்பது இன்றளவும் உலக மக்களுக்கு ஆரம்ப கால திருச்சபையை கிறிஸ்துவின் சாட்சியாக்கி கொண்டே இருக்கிறது. அவர்களது நம்பிக்கை, பற்றுறுதி, ஒற்றுமை உணர்வு, பகிர்தல், கள்ளம் கபடற்ற தன்மை இவைகள் எல்லாம் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த ஆண்டவராய் இருக்கிறார். என்பதின் செயல்வடிவங்களாக வெளிப்பட்டன. அதிலே பொய் சொன்ன அனனியாவும், சப்பிராவும் அகற்றப்பட்டனர். பேதுரு அவர்களிடம் எங்களிடம் ஏன் பொய் சொன்னாய் என கேட்கவில்லை மாறாக தி.ப. 5:3 சொல்லுகிறது. தூய ஆவியரிடம் பொய் சொல்லும்படி சாத்தான் உன் உள்ளத்தை ஆண்டுகொண்டது ஏன்? என கேட்கிறார். 5:9-ல் கேட்கிறார். தூய ஆவியாரைச் சோதிக்க நீங்கள் உடன்பட்டது ஏன்? என்று கேட்கிறார்.

ஆக உண்மைக்கு சான்றுபகருவதை விட்டு விட்டு பொய்க்கு கூட்டாளியாயிருந்து வாழ்வது தூயாவியாரை விட்டு விலகுவதாகும். அவர் நம்மை விட்டு விலகுவதில்லை நாமே ஆவியாரை விட்டுத் தீமைசெய்வதால் விலகி கொள்ளுகிறோம்.

தி.ப. 7-ல் ஸ்தேவான் மீது நற்செய்தியின் பொருட்டு கல்லெறிகிறார்கள். தி.ப. 7:55,56 சொல்லுகிறது அவரோ தூய ஆவியின் வல்லமையை நிறைவாய் பெற்று இதோ வானம் திறந்திருப்பதையும், மானிடமகன் கடவுளது வலப்பக்கத்தில் நிற்பதையும் காண்கிறேன் என்கிறார். இதுவல்லவா சாட்சியின் தொனி. 2கொரி. 4:8,9 வசனங்களில் பவுலடிகளார் கூறுகிறார் “நாங்கள் எல்லா சூழ்நிலைகளிலும் இன்னறுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை; குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை; துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை; வீழ்த்தப்பட்டாலும் அழிந்து போவதில்லை” இதுவல்லவா சாட்சியின் வாழ்க்கை. அவரேக் கூறுகிறார் என வலுவின்மையிலும், இகழ்ச்சியிலும், இடரிலும் இன்னலிலும், நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நான்

அக மகிழ்கிறேன் (2கொரி. 12:10) ஆக கிறிஸ்தவ சாட்சி சூழல்கள், சூட்சிகள் எல்லாவற்றையும் தாண்டி நின்று கிறிஸ்துவில் நிலைத்துநின்று வாழ்ந்து காட்டுதலாகும். தூய ஆவியார் அதற்கு துணை நிற்கிறார்.

எனவேதான் ஆரம்பகால கிறிஸ்தவர்கள் கூட்டம் கூட்டமாக ரோமானிய பேரரசர்களால தீ வைத்து கொளுத்தப்பட்ட போதும், சிங்கங்களுக்கு இரையாக்கப்பட்ட போதும் அவர்கள் துவண்டு போகாமல் அடைய போகும் நித்திய வாழ்வின் பேரின்பத்தால் மகிழ்ந்து பாடினார்கள். மிஷனரிகள் தங்களை தங்கள் குடும்பத்தை இழந்து மக்களின் வாழ்வை கிறிஸ்துவில் கட்டியெழுப்பினார்கள் உயிரையும் துச்சமாக மதித்து சான்று பகர உடனிருந்து தூயாவியானவர் தூண்டுதல் தந்தார் என்பதுதான் உண்மை.

இன்று திருச்சபை தலைவர்கள் என்றும், நற்செய்தி பணியாளர்கள் என்றும் இருக்கிற அநேகருக்கும், மக்கள் தலைவர்கள் என சமுகத்தில் தங்களுக்கு தாங்களே புகழ்பாடும் அநேகருக்கும் கடவுள் பணமும் பதவியுமாக தான் இருக்கிறது. பணத்திற்காகவும், தங்கள் பதவிகளை தங்ககவைத்துக் கொள்ளவும் திருச்சபையையும், சமூகத்தையும் வேதனைப்படுத்துவோர் தூயாவியாரின் செயல்களுக்கு இடம்தராதவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தியா இயேசுவுக்கே என்று ஓலம் இடும் நாம் இயேசுவுக்கு சாட்சியாக வாழும் படி நம்மை தூண்டுதல் தரும் தூய ஆவியாருக்கு இடம் தருவோம்.

நிச்சயமாக அநீதிக்கு முடிவுஉண்டு. அநீதியை களைந்து அனைவரையும் கரைசேர்க்க நீதியின் அரசராக இயேசுநாதர் வரஇருக்கிறார். அவரது இரண்டாம் வருகைக்காக ஆயத்தப்படுவோம். காத்திருப்போம் எனும் போது தூய ஆவியாரின் செயல்பாடுகளுக்கு நம்மிடம் இடம் கொடுத்து சுயநலமில்லாமல் பகிர்தலோடு கூட பொதுநலன்களுக்கு இடம் கொடுப்போம். அவர் வருகைக்காக காத்திருக்கும் வேளையில் தூய ஆவியரின் துணைகொண்டு தீமையை அகற்றி தீயோரை மனம்திருந்திட அழைப்போம் ஆண்டவருக்கு காத்திருப்போம் இறையாசி நம்மோடிருப்பதாக.

அருள்திரு. A. **ஜெபசுஜி**

20-05-2018

**பெந்தக்கோஸ்து ஞாயிறு**

## வாரும் தூய ஆவியாரே, எம்மைப் புத்தாக்கம் செய்யும்
## COME HOLY SPIRIT RENEW US

| | |
|---|---|
| எசே. 37:1-14 | திப. 2:1-13 |
| திபா. 104:24-35 | யோவா. 16:1-11 |

***"அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர்."***

**திப. 2:4**

பஸ்கா விழா, கூடார விழா, பெந்தக்கோஸ்து விழா இவை மூன்றும் யூதரின் முக்கியமான விழாக்கள் ஆகும். பஸ்கா விழாவை தொடர்ந்து பெந்தக்கோஸ்து விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவர். கிரேக்க மொழியில் பெந்தக்கோஸ்து என்பது 50 என்ற எண்ணிக்கையைக் குறிப்பதாகும். பஸ்காத் திருவிழாவைத் தொடர்ந்து வரும் ஐம்பதாவது நாளை, பெந்தக்கோஸ்து திருவிழாவாகக் கொண்டாடினர். 50 நாட்களுக்குள் அறுவடை முடித்து கொண்டாடுகிற விழாவாகும். பஸ்கா விழாவினைக் கொண்டாடிய போது இயேசு சீடர்களுடன் இருந்தார். இப்போது சூழ்நிலை மாறுபட்டதாக இருந்தது. சீடருக்கு பெந்தக்கோஸ்து பண்டிகையைக் கொண்டாட அறுவடையோ விளைச்சலோ இல்லை. இச்சூழலில் 120 சீடர்கள் இருந்ததாக திப. 1:15-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. சீடர்கள் வலுவற்றிருந்த வேளையில் பெந்தக்கோஸ்து நாளன்று இயேசுகிறிஸ்துவின் வாக்குப்படி(யோவா. 16:7) தூய ஆவியார் வந்திறங்கி சீடர்களைப் புத்தாக்கம் செய்தார். சீடரின் புத்தாக்கத்திற்குத் தூய ஆவியார் செய்த செயல்களாகப் பின்வரும் உண்மைகளைப் புரிந்து கொள்ளலாம்.

### *1. துணிவைத்தரும் தூய ஆவியார்* : (திப. 2:2)

"கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி, அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது"

இயேசுகிறிஸ்து விண்ணுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபின் சீடர்கள் அச்சத்துடன் துணிவற்ற நிலையில் இருந்தனர். இதற்குக் காரணம் உரோமை ஆட்சியில் உரோம அரசரை ஆண்டவர் என்று அறிக்கை செய்ய வேண்டுமேயன்றி இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கை செய்ய முடியாது. கிறிஸ்துவை ஆண்டவர் என்று அறிக்கை

செய்வோரை யூதத் தொழுகைக் கூடங்களுக்குப் புறம்பாக்கினர். சீடர்களுக்குள் இருந்த துணிவற்ற நிலையால் நற்செய்தி அறிவிக்கச் செல்லாமல் தாங்கள் விட்டுவந்த மீன்பிடித் தொழிலுக்குச் சென்று விட்டனர் (யோவா. 21:3-11). இவ்வாறு அச்சத்துடன் சீடர்கள் கூடியிருந்த இடத்தில் திடீரென்று கொடுங்காற்று வீசுவது போன்ற ஓர் இரைச்சல் உண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. சீடர்களிடம் தூய ஆவியார் ஊற்றப்பட்ட பிற்பாடு அவர்கள் துணிவு கொண்டு இயேசுவை ஆண்டவர் என அறிக்கை செய்தனர் (திப. 2:36). பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் பாபிலோன் அடிமைத்தனத்தில் சிதறி நம்பிக்கையற்ற சூழலில் உலர்ந்த எலும்புகளாய் இருந்தனர். அவர்களுக்கு இறைவாக்கினர் எசேக்கியல் ஆண்டவரின் வாக்குப்படி உயிர்மூச்சு புகும்போது உயிரடையலாம் என்ற நம்பிக்கையைக் கொடுத்து சொந்த நாட்டில் வாழலாம் என்ற கருத்தை வலியுறுத்தினார் (எசே. 37:1-14). உயிரடைய ‘இணைதல்’ மிக முக்கியமானது ஆகும். நரம்புகளால் தொடுத்தல், சதையைப் பரப்புதல், தோலால் மூடுதல், உயிர்மூச்சுப் புகச் செய்தல் என்று ஒற்றுமை வலியுறுத்தப்பட்டுள்ளது. பெந்தக்கோஸ்து நாளில் சீடர்கள் ஒருமனதுடன் கூடி வந்தபோது தூய ஆவியார் அனைவருக்கும் துணிவைத்தந்து அனைத்து நாட்டவருடனும் இணைய உதவியருளினார். சீடர்களின் மவுனம் கலைக்கப்பட்டு நற்செய்தியைப் பேசத் துணிவு பெற்றனர். தூய ஆவியார் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும் கண்டித்து உணர்த்துபவர் (யோவா. 16:8). இந்தத் தூய ஆவியாரின் துணிவு பெற்றபின் பேதுருவின் அருளுரை மக்களின் தீச்செயல்களைக் கண்டிப்பதாக அமைந்தது (திப. 2:14-40). இன்றைய சூழலில் அச்சத்துடன் நீதியைப் பேசுவதற்குக் கூட முடியாமல் மவுன நிலையில் இருக்கும் நாம் இணையும்போது தூய ஆவியானவர் நம்மைத் துணிவுடன் செயல்பட வைக்கிறார்.

### ***2. தூய்மைப்படுத்தும் தூய ஆவியார் :*** (திப. 2:3)

பெந்தக்கோஸ்து நாளில் நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததாக திப. 2:3-இல் குறிப்பிடப் பட்டுள்ளது. நெருப்பு தூய்மைப்படுத்துதலுக்கு அடையாளம் (இச. 4:24, எசா. 6:7). பதரை நெருப்பினால் சுட்டெரிப்பதாக இயேசு குறிப்பிட்டார் (மத். 3:12). பதர் பார்ப்பதற்கு நெற்கதிரைப் போன்று இருந்தாலும் உள்ளே பயனற்றதாய் இருக்கும். அதுபோல் தூய்மையானவர் என்று வெளியே பார்ப்பதற்கு இயேசுவின் சீடர் இருந்தாலும் அவர்களின் உள்ளான நிலைமை இயேசுவைக் காட்டிக்கொடுத்தல், மறுதலித்தல் இயேசுவை

விட்டு தூரத்தில் பின்தொடர்தல், இயேசுவை விட்டுவிடுதல் என்று பக்தருக்கு ஒப்பான வாழ்வாகவே இருந்தது. அத்தகைய சீடர்கள் தூய ஆவியாரால் தூய்மைப்படுத்தப்பட்டனர். உயிர்த்தெழுந்த ஆண்டவர் சீடரிடம் நீங்கள் தூய ஆவியால் திருமுழுக்குப் பெறுவீர்கள் என்று கூறியிருந்தார் (தி.ப. 1:4). பிளவுற்ற நெருப்பு போன்ற நாவுகள் திருமுழுக்குக்கு அடையாளமாகவும் கூறப்படுகின்றன. திருமுழுக்கு தூய வாழ்வுக்கு அடையாளம். சீடர்கள் தூய ஆவியாரால் நிரப்பப்பட்ட போது திருமுழுக்கின் அனுபவம் பெற்று தூய வாழ்வு வாழ அர்ப்பணிக்கிறார்கள். அதுவே தொடக்ககால திருச்சபையின் பயிற்சியாக இருந்தது. ‘கும்ரான்’ குழுவினரிடம் இருந்த பண்பாகிய அனைத்தையும் பொதுவாகப் பயன்படுத்தும் வாழ்வியல் முறை தொடக்ககால திருச்சபையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இன்று மொழி, சமயம், சாதி, இனம், பொருளாதாரம் இவைகளால் சமத்துவ வாழ்வு வாழ இயலாத நிலையில், தூய ஆவியாரைப் பெற்றுள்ள அனைவரும் சமத்துவ முறையைப் பின்பற்றி தூய்மையுடன் வாழ அழைக்கப்படுகிறோம். பொன் நெருப்பினால் தூய்மையாக்கப்படுவதை போல் நாமும் தூய ஆவியரால் தூய்மையாக்கப்படுகிறோம். ஏமி கார்மைக்கேல் அம்மையார் பொற்கொல்லன் வீட்டுக்குச் சென்றார். பொற்கொல்லன் பொன்னை நெருப்பிலிட்டு தூய்மையாக்கிக் கொண்டிருந்தார். அம்மையார் பொற்கொல்லனிடம் நீங்கள் எதுவரை பொன்னை நெருப்பில் போடுவீர்கள் என்று கேட்டார். அதற்கு பதிலாக பொற்கொல்லன் தன்னுடைய முகம் எப்போது அந்தப் பொன்னில் தெரிகிறதோ அதுவரைக்கும் நெருப்பில் போடுவேன் அப்போது தான் தூய்மையாகும் என்றார். தூய ஆவியானவரும் ஆண்டவர் நம்மில் வெளிப்படுவதற்கு நம்மைத் தூய்மையாக்குகிறார்.

### *3. துரிதப்படுத்தும் தூய ஆவியார் :* (திப. 2:4)

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற நற்செய்தியை அனைவருக்கும் கூற வேண்டும் என்பதின் வேகத்தை உணர்த்த தூய ஆவியாரின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு மொழிகளில் பேசத் தொடங்கினர் (திப. 2:4). பல மொழி பேசும் மக்களும் புரிந்து கொள்ளும் முறையில் தூய ஆவியார் செயல்படுகிறார். இயேசுகிறிஸ்துவின் நாட்களில் எபிரேயம், கிரேக்கம், அரமேயம் ஆகிய மொழிகள் வழக்கத்திலிருந்தன. பெரும்பாலான பாமர மக்கள் அரமேய மொழியைப் பேசினர். ஆனால் தூய ஆவியார் ஊற்றப்பட்ட அன்று சீடரின்

செய்தி பல நாட்டவருக்கும் புரிந்தது. சீடர்கள் தங்களுக்கு மொழி தெரியாது என்று நற்செய்திப் பணிக்கு மொழியைத் தடையாக எண்ணக்கூடாது என்ற புரிதலை தூய ஆவியார் ஏற்படுத்தினார். மேலை நாட்டிலிருந்து இந்தியா வந்த நற்செய்திப் பணியாளர்கள் இந்திய மொழி தெரியாது என்று நற்செய்தியைச் சொல்லவில்லையானால் இந்தியாவில் நற்செய்தி பரவியிருக்க வாய்ப்பில்லாமல் போயிருக்கும். நான் என்னும் பெருமையுடன் நமக்குப் பெயர் உண்டாக வேண்டும் என்ற நிலையில் வாழ்ந்த போது மொழி மனிதரைப் பிரித்தது (தொ.நூ. 11:1-8). ஆனால் தூய ஆவியாரின் ஆற்றலுக்குட்பட்டு வாழ்வை அர்ப்பணித்தபோது மொழி பல நாட்டவரை இணைத்தது (திப. 2:4). கல்வி அறிவில்லாதவர், பேசத் தெரியாதவர் என்ற சீடரின் அச்ச உணர்வை தூய ஆவியார் மாற்றி நற்செய்தியாக வாழத் துரிதப்படுத்தினார். யூதருக்கு மட்டும் நற்செய்தி என்ற சிந்தனை மாறி உலகமனைத்திற்கும் நற்செய்தி (மத். 28:19) என்ற இயேசுவின் செய்தியைப் புரிந்து நற்செய்திப் பணியாற்றினர். நற்செய்தி என்பது துரிதமாய் அறிவிக்கப்பட வேண்டியது. இப்போது பேசாமலிருக்க வேண்டிய காலமல்ல என்பதை எஸ்தருக்கு மொர்தெகாய் உணர்த்தினார் (எஸ். 4:14). நீங்கள் பேசாவிட்டால் கற்கள் கூப்பிடுவதாக இயேசு கூறினார் (லூக். 19:40). நற்செய்தி என்பது பேச்சு மொழியாய் அல்ல வாழ்வுப் பாடமாய் அமைய வேண்டும். பலூன் வியாபாரி பலவர்ண பலூன்களை உயரமாகப் பறக்கவிட்டு விற்பனை செய்து கொண்டிருந்தார். அவர் பறக்க விட்ட பலூன்களில் கறுப்பு நிற பலூன் இல்லை. சிறுவன் ஒருவன் பலூன் வியாபாரியிடம் சென்று நீங்கள் கறுப்பு நிற பலூனைப் பறக்க விடவில்லையே! ஏன் கறுப்பு நிற பலூன் வானில் பறக்காதா? என்று கேட்டான். அதற்கு மறுமொழியாக பலூன் வியாபாரி எந்த பலூனும் மேலே பறக்கும் அதற்கு உள்ளாக அடைக்கப்படும் காற்றுதான் காரணம் என்று பதில் கூறினார். அதுபோல் துய ஆவியார் நமக்குள்ளாக இருக்கிறபடியினால் நாம் நற்பண்புகளோடு வாழ்ந்து துரிதமாக நற்செய்தியை அறிவிக்க முடியும்.

தூய ஆவியாரைப் பெற்றிருக்கிற நாம் தொடர்ந்து துணிவு பெற்று, தூய்மை வாழ்வுடன், துரிதமாய் நற்செய்தி அறிவிக்க அழைக்கப்படுகிறோம்.

அருள்திரு. S. **கிரீஷ்குமார்**

20-05-2018 D.M.P.B ஞாயிறு

# நற்செய்தி அறிவியுங்கள்

1அர. 7:3-10 திப. 11:19-30
திபா. 82 லூக். 19:1-10

**"இந்நாள் நல்ல செய்தியின் நாள். நாளைக் காலை வரை இதை வெளியிடாது மௌனமாய் இருந்தால் நாம் குற்றவாளிகள் ஆவோம். நாம் போய் இதை அரசமாளிகையில் அறிவிப்போம்."** 1அர. 7:9

'Mission' என்கிற ஆங்கிலச் சொல் இலத்தீன் மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. 'மிட்டரே' (mittere) என்ற வினைச்சொல்லுக்கு 'அனுப்பு' (to send) என்று பொருள். 'மிஷியோ' (misseo) என்பது இதன் வினைப்பெயராகிய 'அனுப்புதல்' என்பதாகும். 'பாஸர்' (Ba sar) 'ஷாலஹு' (Shalah) என்கிற எபிரேயச் சொற்களும் 'அப்போஸ்றெலோ' (apostelo) என்கிற கிரேக்கச் சொல்லும் 'அனுப்புதல்' (send) என்று மொழிபெயர்க்கப்படுகிறது.

திருமறை அருட்பணிக்கான அடித்தளத்தினை சிறப்புடன் அமைத்துள்ளது. இறைவன் சிலரை அனுப்புகின்றவராக அல்லாமல் தன்னை அனுப்பப்பட்டவராக அருட்பணியில் அழைத்து இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு பின் தம் சீடரை அழைத்து அதிகாரப்படுத்தி கட்டளைக் கொடுத்து அனுப்புகின்றார். அக்கட்டளை இன்று நம்மை அருட்பணிச் செய்ய அறைகூவல் விடுக்கின்றது. பேராய அருட்பணி ஜெபக்குழு (DMPB) ஞாயிறாகிய இன்று நாம் நற்செய்தி அறிவியுங்கள் என்ற தலையங்கத்தை மையப்படுத்தி சிந்திப்போம்.

## *1. அறிவிக்கப்பட வேண்டிய நற்செய்தி* : (2அர. 7 : 9)

இந்நாள் நல்லச் செய்தியின் நாள். நாளைக் காலைவரை இதை நாம் வெளியிடாது இருந்தால் நாம் குற்றவாளிகளாவோம். வாருங்கள் நாம் போய் அரச மாளிகையில் இதை அறிவிப்போம் என்று தொழுநோயாளிகளில் ஒருவர் மற்றவர்களுக்கு சொல்லுகிறதை தான் அறியாமையால் இருப்போர்க்கு அறிவிக்க இந்நாள் நல்ல நாள் என நாம் புரிந்து கொள்கிறோம். காலம் நமக்காய் காத்திருக்க காலத்தை சேமிக்கவும் முடியாது. நாம் காலத்தை பயன்படுத்தி நற்செய்தியை அறியாமையில் முடங்கி கிடப்போர்க்கு அறிவிப்பதே நமது கடமையாகும். திப. 2-ல் நாம் படிக்கும் போது பேதுரு நற்செய்தி அறிவிக்கும் நிலையில்

அறியாமையால் இருந்த மக்கள் அனைவரும் ஆண்டவரை அறிந்து கொண்டார்கள். திப. 2:41-ல் அறிந்து கொண்டவர்களோ திருமுழுக்குப் பெற்றார்கள். நம் வாழ்விடத்திலும் நற்செய்தியை அறியாமையினால் முடங்கி கிடப்போர்க்கு நற்செய்தி அறிவிக்க வேண்டியது நம் கடமையாகும். நாம் வாழ்வின் செயலாக்கத்திலேயே இந்நிலை நமக்கு தேவையானதாகும். இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள். அறிவிக்காவிடில் குற்றம் நம் மேல் சுமரும். ஒவ்வொரு இறைமக்களும் நாம் பெற்றிருக்கின்ற இன்பத்தை பிறருக்கு வாழ்வினூடாக நற்செய்தி அறிவிப்போம். அறியாதவர்கள், முடங்கி கிடப்போரையும் ஆண்டவரின் மந்தைக்குள் சேர்ப்போம்.

### ***2. ஆற்றல்படுத்தும் நற்செய்தி*** : (திப. 11 : 19)

அந்தியோகியா பட்டணம் ஆண்டவரைக் குறித்து அறியப்பட்டிருந்தது. திருச்சபை இருந்தது. திருத்தொண்டர் ஸ்தேவானின் மரணத்தை தொடர்ந்து ஏற்பட்ட துன்புறுத்தலால் சிதறிப்போயினர் கிறிஸ்தவர்கள். யூதருக்கு இறைவார்த்தையை அறிவித்தனர். அவர்களும் சைப்பிரசு, சிரேன் ஆகிய இடங்களை சேர்ந்த சிலர் அந்தியோகியாவில் கிரேக்கருக்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி நற்செய்தியை அறிவித்தார்கள். ஆண்டவரின் கைவன்மையை அவர்கள் பெற்றிருந்தார்கள். பெருந்தொகையான மக்கள் நம்பிக்கைக் கொண்டு ஆண்டவரிடம் திரும்பினர். அறியப்பட்டோரின் வாழ்வு சிதறிபோன போது நம்பிக்கையுடன் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. அவர்கள் வாழ்வுகள் முதன்மையாக்கப்பட்டது. இன்றைய நிலையும் இப்படிதான் ஆண்டவரைக் குறித்து அறிந்திருக்கிறோம். ஆனால் அறியாதவர்களைப் போல வாழ்ந்து வருகின்றோம். நற்செய்தியை நம்பிக்கையுடன் உள்ளார்ந்த நிலையில் ஏற்றுக்கொள்ளும்போது வாழ்வு நற்செய்தியின் சாரத்தால் முதன்மையாக்கப்படுகிறது.

### ***3. அர்ப்பண வாழ்வுக்கு நெறியூட்டும் நற்செய்தி*** :

(லூக். 19 : 1-10)

சகேயுவின் வாழ்வு அவல நிலையாக காணப்பட்டது. சகேயுவை அவரின் செயல்பாடுகளால் மக்கள் வெறுக்கிறார்கள். அநியாயமாக வரி வசூலித்து ரோமானியர்களுக்கு கொடுத்ததினால் மக்கள் முறுமுறுப்புடன் காணப்பட்டார்கள். உலகப் பிரகாரமான காரியங்களில் அவல நிலையோடு வாழ்ந்த சகேயு இயேசு கிறிஸ்து வருகிறார் என்று இயேசு கிறிஸ்துவை காண விரும்புகிறார். ஆனால் இயேசு கிறிஸ்து அவரை அறிந்திருந்தார். அவர் அருகில் சென்று சகேயுவை பெயர் சொல்லி அழைத்து உன் வீட்டில்

நான் தங்க வேண்டும். சீக்கிரமாய் வா என்று கூற சகேயு அவரை மகிழ்வோடு இல்லத்திற்கு அழைத்து சென்றார். இதைக்கண்ட ஜனங்கள் அவல நிலையோடு வாழ்கிறவன் இல்லத்திற்கு போகிறார் என்று முறுமுறுத்தார்கள். அவல நிலையோடு வாழ்ந்த சகேயு இயேசு கிறிஸ்துவை தனது இல்லத்திலும், உள்ளத்திலும் ஏற்றுக் கொண்டபோதோ அவர் தவறை உணர்ந்து அறிக்கையிட்டு அர்ப்பண வாழ்வுக்கு நெறிப்படுத்தப்படுகிறார். "இன்று இந்த வீட்டுக்கு மீட்பு உண்டாயிற்று" இழந்து போனதை தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார். DMPB திருநாளில் நாமும் நம் உள்ளத்திலும் இல்லத்திலும் சமூக வாழ்விலும் நற்சாட்சியாகிய கிறிஸ்துவை ஏற்று, நம்மையும் அர்ப்பண வாழ்வுக்கு நெறிப்படுத்தி நற்செய்தியின் சாரத்தை ஏற்று நானிலத்திற்கு நல்லவர்களாய் வாழ்வோம். நம் வாழ்வு ஒளிரட்டும். குன்றின் விளக்காய், மிளிரட்டும், வைரக்கல்லாய் பரவட்டும். எட்டுத்திக்காய் நிலைக்கட்டும் நிலை வாழ்வு. இறையாசி நம்மோடு இருப்பாதாக.

அருள்திரு. R. **சார்லஸ்**

27-05-2018 **பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு & திரித்துவ ஞாயிறு**

# நாம் மூவொரு கடவுளை வழிபடுகிறோம்
## WE WORSHIP THE TRIUNE GOD

தொ.நூ. 1:1-28 2 கொரி. 13:11-14
திபா. 2 யோவா. 1:1-18

***அப்பொழுது கடவுள், "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம்."*** தொ.நூ. 1:26

கிறிஸ்தவ நம்பிக்கைப்படி கடவுள் தந்தை, மைந்தர், தூயாவியார் என்னும் மூன்று தன்மைகளை உள்ளடக்கியுள்ளவர். கடவுள் ஒருவரே. இவ்வாறு கடவுளை ஒருவராகவும், ஒருவருள் மூவராகவும், மூவருள் ஒருவராகவும் பார்ப்பது கிறிஸ்தவ நம்பிக்கை. கணித அடிப்படையில் அல்லது எளிதான அறிவுக்குட்பட்டு மூவொரு கடவுளைப் புரிந்து கொள்ள முடியாது. ஆயினும் நம்பிக்கையின் அடிப்படையில் நாம் புரிந்து கொள்ளலாம். தொடக்கநூலில் வரும் பகுதிகளுள் (1:26; 3:22; 11:7) கடவுள் பன்மையில் (நாம், நம்மை) பேசுவதைக் காண முடிகிறது. புதிய ஏற்பாட்டில் மூவொரு கடவுளின் செயல்கள் ஒன்றாகத் தரப்பட்டுள்ளன (1கொரி. 6:11; 12:4-6; 2கொரி. 1:21,22; கலா. 3:11-14; 1தெச. 5:18,19). இயேசுகிறிஸ்து மத். 28:19-ல் தந்தை மைந்தர் தூயாவியார் திருப்பெயரில் திருமுழுக்கு கொடுக்க கட்டளை தருகிறார். 2கொரி. 13:13-ல் "ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூயாவியாரின் நட்புறவும்" என்னும் மூவொரு கடவுளின் ஆசியை பவுலார் மக்களுக்குத் தருகிறார். இந்திய கிறிஸ்தவ இறையியலாளர் கேசுப் சந்திரசென், தந்தை மைந்தர் தூயாவியாரை முறையே சத்(மெய்மை) சித்(அறிவுரு) ஆனந்தா(மகிழ்வு) என்று விளக்கினார். அவர் விளக்கப்படி தந்தை படைப்பாளர், அமர்ந்துறைபவர், தாமாக இருப்பவர், உண்மையானவர். மைந்தர் பயணம் செய்பவர், அன்பு காட்டுபவர், ஞானமுடையவர். தூயாவியார், தூய்மைப்படுத்துபவர், திரும்பி வரும் கடவுள், மீட்பவர். ஹெ. ஆ. கிருஷ்ணபிள்ளை மூவொரு கடவுளை "சச்சிதானந்தா" என்று விவரித்து ஞானக்கீர்த்தனையில் பாடியுள்ளார். ஏன் மூவொரு கடவுளை வழிபடுகிறோம் என்பதை இன்றைய திருமறைப் பாடங்கள் வழியாகத் தியானிப்போம்.

## 1. கடவுளின் சாயலாக வாழ மூவொரு கடவுளை வழிபடுதல் : (தொ.நூ. 1:1-28)

"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக மனுவைப் படைத்தான் தம்மை வணங்க" என்பது முதுமொழி. கடவுள் எல்லாவற்றையும் படைத்துவிட்டு மானிடரைப் படைத்தவிதம் வித்தியாசமானது (2:7,21). தொ.நூ. 1:26,27-ல் "அப்பொழுது கடவுள், மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம்" என்றார். கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுள் உருவிலேயே அவர்களைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். கடவுளின் சாயலாக வாழ வேண்டியவர்கள் கீழ்ப்படியாமையினால் கடவுளின் சாயலை இழந்தனர். கடவுளின் கட்டளையை மீறி தீயவன் சொன்ன கட்டளைக்குக் (நீங்கள் கடவுளைப் போல் இருப்பீர்கள் தொ.நூ. 3:5) கீழ்ப்படிந்தனர். கவர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்ததினால் கடவுளின் சாயலை இழந்தனர். தூய பவுலடியார் கொரிந்து திருச்சபைக்கு எழுதும்போது, "நான் பறைசாற்றிய செய்தி ஞானத்தின் கவர்ச்சியான சொற்களில் அமையவில்லை" என்று கூறினார் (1கொரி. 2:4,5). "கடவுளின் சாயலாக புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள்" (எபே. 4:17-24). இயேசு கிறிஸ்துவினிடத்தில் தீயவன் வந்து கவர்ச்சிகரமான வார்த்தைகளை சொன்னபோது கடவுளின் சாயலை இழக்கவில்லை (மத். 4:1-11). ஆகவே நாமும் கடவுளின் சாயலை இழக்காமல் மூவொரு கடவுளை வழிபடுவோம்.

## 2. நற்குணங்களோடு வாழ மூவொரு கடவுளை வழிபடுதல் (2கொரி. 13:11-14)

தூய பவுலடியார் கொரிந்து திருச்சபைக்கு எழுதும் இரண்டாம் கடிதத்தில், "சகோதர சகோதரிகளே; மகிழ்ச்சியாயிருங்கள்; உங்கள் நடத்தையைச் சீர்ப்படுத்துங்கள்; என் அறிவுரைக்குச் செவி சாயுங்கள்; மன ஒற்றுமை கொண்டிருங்கள்; அமைதியுடன் வாழுங்கள்;" என்று நற்குணங்களைப் பட்டியலிடுகின்றார். பிலிப்பியத் திருச்சபைக்கும் இவ்வாறு கூறுகின்றார் (பிலி. 4:8,9). இன்றைய திருச்சபையும் நற்குணங்களோடு வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறது. கேரளாவின் இடுக்கி நகரில் உள்ள ரெசிடென்சி பள்ளியிலுள்ள ஓர் ஆசிரியரின் பணப்பை திருடப்பட்டது. பணத்தை எடுத்தவர் யாராக இருந்தாலும் அதைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று ஓர் ஆசிரியர் கூறினார். அப்போது மீனாட்சி குட்டி என்ற தலைமை ஆசிரியர் கையில் நீளமான பிரம்போடு அங்கு வந்தார். பணத்தை எடுத்த ஒரு மாணவனுக்காக அனைத்து மாணவர்களையும் சோதனையிடுவது

நல்லதல்ல அவர்களைத் திருத்தி நல்லவர்களாக மாற்றுவதே ஓர் ஆசிரியரின் கடமை. பணத்தை எடுத்த மாணவர் தானாக முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். அதுவரை "என்னை நானே தண்டித்துக் கொள்கிறேன்" என்று சொல்லி விட்டு தன்னைத்தானே பிரம்பால் அடித்துக் கொள்ளத் தொடங்கினார் தலைமை ஆசிரியர். அக்காட்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்த மாணவர்கள் வேண்டாம், வேண்டாம் என்று கதறினார்கள். பணத்தை எடுத்த மாணவன் முன்னால் வருவான், தன்னைத் தடுப்பான் என்று தலைமை ஆசிரியர் நினைத்தார். ஆனால் வரவில்லை.

சில நிமிடங்கள் தொடர்ந்து பிரம்பால் அடித்ததில் சோர்ந்து போன தலைமையாசிரியர், "இனி என்னை நானே அடித்துக் கொள்ள மாட்டேன் நாளை காலையில் தேசியக் கொடி கம்பத்தின் கீழே அமர்ந்து உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன்" தவறு செய்தவர் ஒப்புக் கொள்ளும் வரை என்று கூறினார். மறுநாள் காலையில் தலைமை ஆசிரியர் கொடி மரத்தின் கீழ் உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். அனைத்து மாணவர்களும் சோகமாக அந்தக் காட்சியைப் பார்த்தப்படி வகுப்பறைக்குச் சென்றார்கள். உணவு இடைவேளை வந்தது. மாணவர்கள் திறந்த டிபன் பாக்ஸை திரும்பவும் மூடினார்கள். தலைமை ஆசிரியர் உண்ணாவிரதம் இருக்கும்போது நாம் எப்படி சாப்பிடுவது அனைத்து மாணவர்கள் கண்களிலும் கண்ணீர் சுரந்தது. அப்போது ஒரு மாணவன் கதறி அழுதபடி வேகமாக ஓடி வந்து தலைமை ஆசிரியரின் கால்களை பிடித்து கொண்டு "நான் தான் திருடினேன்... இனிமேல் திருட மாட்டேன்" என்று சொல்லி திருடிய பணத்தை அவரிடம் கொடுத்தான். தன் சத்தியாகிரகத்துக்கு நல்ல பலன் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்து அந்த மாணவன் கொண்டு வந்த உணவை கேட்டு வாங்கி அவனுடன் பகிர்ந்து சாப்பிட்டார். தவறு செய்த மாணவனைத் திருத்த தலைமை ஆசிரியர் உண்ணாவிரதம் இருந்ததினால் அந்த ஆசிரியருக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. பொதுக் கல்வித்துறை இயக்குனர் அனிலா ஜார்ஜ் விழாவில் கலந்து கொண்டு மாணவர்களை திருத்த ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்த தலைமையாசிரியரின் நற்குணங்களைப் பாராட்டி "ஸ்டூடன்ஸ் ஃப்ரெண்டலி டீச்சர்" என்ற விருதை வழங்கி சிறப்பித்தார்.

நாமும் நற்குணங்களோடு வாழ்ந்து மூவொரு கடவுளை வழிபடுவோம்!

## 3. ஒளி கொடுத்து வாழ மூவொரு கடவுளை வழிபடுதல்

(யோவா. 1:1-18)

யோவான் நற்செய்தியாளர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை கிரேக்கர்களுக்கு அறிவிக்கின்றார். "வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார்" (யோவா. 1:14). இவ்வாறு பிறப்பை அறிவிக்கின்றார். இவரின் பிறப்பை எசாயா இறைவாக்கினர் முன்னறிவிக்கும் போது, "காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்" என்று கூறினார் (எசா. 9:2). இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் வழி மேய்ப்பர் ஒளியைக் கண்டார்கள் (லூக். 2:9). அவரிடம் வாழ்வு இருந்தது. அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது; இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை. அந்த ஒளியைக் குறித்து திருமுழுக்கினர் யோவான், "அனைவரும் தம் வழியாக நம்புமாறு சான்று பகர்ந்தார். அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்து கொண்டிருந்தது. ஒளியான அவர் உலகில் இருந்தார். உலகு அவரால் தான் உண்டானது. ஆனால் உலகு அவரை அறிந்து கொள்ளவில்லை" (யோவா. 1:4-10). "நான் உலகிற்கு ஒளியாக வந்தேன்" என்று இயேசு கூறினார் (யோவா. 12:46). நாமும் ஒளி கொடுத்து வாழ வேண்டும் என்று திருமறை கூறுகிறது. நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள். விளக்கை மரக்காலுக்குள் வைப்பதில்லை. மாறாக விளக்குத் தண்டின் மீதே வைப்பர். அப்பொழுதுதான் வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளி தரும். இவ்வாறே உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களை கண்டு உங்கள் விண்ணக தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள் (மத். 5:14-16). நம்முடைய நற்செயல்கள் மற்ற மக்களுக்கு ஒளியூட்டுவதாக அமைய வேண்டும். அன்னை தெரசாவின் நற்செயல்கள் மக்களுக்கு ஒளியை ஊட்டியது. இதை விளக்கும் பாடல் வரிகள்:

நற்செயல் செய்வோம் நல்லதை செய்வோம்
இன்றும் என்றும் நன்றே செய்வோம்
அன்னை தெரசா செய்தாங்க அது நற்செயல் தானுங்க
வீதியில் கிடந்த பிள்ளைகளை
வீட்டிலே எடுத்து வளர்த்தாங்க
ஆதரவற்ற பிள்ளைகளை
அன்பு காட்டி அணைத்தாங்க

நாமும் கடவுளின் சாயலை இழக்காமல் நற்குணங்களோடு, பிறருக்கு ஒளி கொடுத்து வாழ மூவொரு கடவுளை வழிபடுவோம்.

அருள்திரு. T. **ஸ்டாலின் விஜு ஜோண்ஸ்**

| 03-06-2018 | மாணவர் ஞாயிறு |
|---|---|

# விண்ணிலிருந்து வரும் ஞானம்
## WISDOM FROM ABOVE

1அர. 3:16-28 யாக். 1:1-8
திபா. 119:33-40 லூக். 10:21-24

**"...நீதித்தீர்ப்பு வழங்குவதற்கெனக் கடவுள் அருளிய ஞானம் அவரிடம் உள்ளது என்று கண்டு, அவருக்கு அஞ்சி நடந்தனர்."** 1அர. 3:28

***முன்னுரை :***

ஒவ்வொரு கல்வியாண்டும் மிக வேகமாகக் கடந்து செல்கிறது. காலங்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. ஆண்டவர் தந்திருக்கும் புதியதொரு கல்வியாண்டுக்குள் அடியெடுத்து வைக்கும் அனைவரும் இறைவனின் அருட்கொடையான விண்ணிலிருந்து வரும் ஞானத்தை பெற முனைப்பு காட்ட வேண்டும். திருமறை முழுவதும் இந்த ஞானம் நிரம்பிக் காணப்படுகிறது. 119-ஆம் திருப்பாடல் ஞான இலக்கிய செல்வாக்குப் பெற்ற திருப்பாடல்களில் ஒன்றாகும். திருப்பாடல்களில் மிகப் பெரியப் பாடலும் இதுவே.

இந்தத் திருப்பாடல் 33 முதல் 40 வரை உள்ள வசனங்கள் நுண்ணறிவுக்காக கடவுளிடம் வேண்டுதல் செய்கின்ற ஒரு பகுதி ஆகும். இந்தத் திருவாக்குகள் திருச்சட்டத்தையும், அதனைக் கொடுத்த ஆண்டவரையும் புகழும் வண்ணம் காணப்படுகிறது. நியாயப்பிரமாணத்தையும் அதனைத் தவறாமல் கடைப்பிடிப்பதால் ஏற்படக்கூடிய உயர் இன்பத்தைப் பெறும் யூதப் பக்தியின் உயர் சிறப்புமிக்க மரபு இங்கு சொல்லப்படுகிறது. அதனால் வரக்கூடிய ஞானம் வாழ்க்கைக்குப் புத்துணர்ச்சியைத் தருவதாக எடுத்தியம்புகிறது. விண்ணிலிருந்து வரும் ஞானம் நமக்கு எதற்காகத் துணை செய்கிறது? அதனை நாம் ஏன் பெற்றுக் கொள்ள வேண்டும்? என்பதனை இந்தக் கல்வி ஞாயிற்றில் சிந்திப்போம்.

### *1. கடவுளின் பிள்ளைகளாக மாற ஞானம் தேவை :*

(1 அர. 3:16-28)

விண்ணிலிருந்து வரும் ஞானம் நம்மை அடையும்போது நம்முடைய வாழ்வில் ஒரு புதிய மாற்றத்தை உருவாக்கும். 1அர. 3:16-28 வரை படிக்கும்போது கடவுளிடமிருந்து ஞானத்தைப் பெற்றதால்

குழந்தைக்காகச் சண்டை போட்ட இரு பெண்களுக்கு நல்லதொரு தீர்ப்பினைக் கொடுத்து நீதியை நிலைநாட்டினார். காரணம் கிபியோனில் வந்த கனவில் சாலோமோன் ஞானத்தைக் கேட்கிறார்.

தன்னையொரு இளையவராகவும் வாழ்க்கையைக் குறித்த அனுபவம் இல்லாதவராகவும் எண்ணுகின்றார். எனவே, எது சரியானது எது தவறானது எனக் கண்டறியவும், நீதி செய்ய வேண்டும் என்கின்ற விருப்பத்தால் ஞானத்தைக் கேட்டார். இந்த இறைவேண்டுதல் கடவுளுக்கு மகிழ்ச்சியூட்டியது. செல்வமும் செல்வாக்கும் இத்துடன் கூட்டித்தரப்படும் என வாக்களித்தார். வரலாற்று ஆசிரியர் ஜோசிபஸ் குறிப்பிடும்போது "இந்நிகழ்வு சாலோமோன் 14 வயதாக இருக்கும்போது நிகழ்ந்தது" என்கிறார்.

கடவுளின் பிள்ளைகளாக வாழ்வது என்பது நீதி செய்வது, நியாயம் செய்வது, உண்மை பேசுவது ஆகும். சிறுவயதிலிருந்தே பிள்ளைகள் நற்பண்புகளைக் கடைப்பிடிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். குழந்தைகளுக்கு உடல் வளர்ச்சி மட்டுமல்ல; அத்தோடு முழுவளர்ச்சிக்குத் தேவையான ஞானம் கிடைக்க உதவி செய்ய வேண்டும். ஞானம் என்பது கடவுளின் அருட்கொடை. இதனை அவரிடமிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். ஞானத்தைப் பெற ஒரே வழி அவருக்கு அஞ்சுவதே (தி.பா. 111:10, யோபு 28:28). எனவே கடவுளின் பிள்ளைகளாக மாற அனைவருக்கும் விண்ணிலிருந்து வரும் ஞானம் இன்றியமையாதது ஆகும்.

## *2. சோதனைகளிலிருந்து பாதுகாக்க ஞானம் தேவை :*

(யாக். 1:1-8)

தூய யாக்கோபு தன்னுடைய கடிதத்தில் சொல்லும்போது, "ஞானத்தின் உறைவிடம் கடவுளே, சோதனைகளில் அகப்படும் வேளையில் தேவையானது ஞானம். இந்த ஞானத்தில் குறைவுள்ளவன் கடவுளிடம் கேட்டால் அவர் தருவார்." சோதனைகள் வருவது மானிட வாழ்வில் இயல்பானது. நாமாகவே சோதனைகளில் விழுவதும் உண்டு. சில நேரங்களில் கடவுள் தம்மக்களைச் சோதிப்பதும் உண்டு. இந்தச் சோதனைகளிலிருந்து வெற்றி பெறுவதற்கு விண்ணிலிருந்து வரும் ஞானம் மிக அவசியம். உதாரணமாக, யோபு தன் வாழ்வில் பல சோதனைகள் வந்த நேரத்திலும் கடவுளை மறுதலிக்காமல் அவரைக் குற்றம் சொல்லாமல், "...ஆண்டவர் அளித்தார்; ஆண்டவர் எடுத்துக் கொண்டார். ஆண்டவரது பெயர் போற்றப்பெறுக!" என்றார் (யோபு 1:21).

மேலும் யாக்கோபு எழுதின திருமுகம் 1:12 முதல் 18 வரை படிக்கும்போது "கடவுளும் சோதனையும்" குறித்து சொல்லப்படுகிறது. அதில் 1:12-ல் "சோதனையை மனவுறுதியுடன் தாங்குவோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்களது தகுதி மெய்ப்பிக்கப்படும்போது, தம்மீது அன்பு கொள்வோருக்குக் கடவுள் வாக்களித்த வாழ்வாகிய வெற்றிவாகையினை அவர்கள் பெறுவார்கள்."

எனவே, ஞானத்தின் உறைவிடம் கடவுளே. அவரிடம் அதனைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். இயேசுகிறிஸ்து தமக்கு வந்த மூன்று சோதனைகளிலிருந்தும் தீயவனை வெற்றிபெற திருமறை வசனங்களைத் தமது ஞானத்தால் சுட்டிக்காட்டி அதில் வெற்றிபெற்றார். தூய யோவான் சொல்லும்போது கடவுளிடமிருந்து பிறந்தோர் பாவம் செய்வதில்லை. கடவுள் அவர்களைப் பாதுகாக்கிறார். தீயோன் அவர்களைத் தீண்டுவதில்லை (1 யோவான் 5:18). அவ்வாறே கடவுளிடமிருந்து பெறும் ஞானமுடையோரையும் தீயோன் தீண்டாதபடி அவர் பாதுகாப்பார்.

தூய லூக்கா நற்செய்தி நூல் 10:21-ல் படிக்கும்போது "...ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர்." ஞானத்தின் அவதாரமாகிய இயேசுவை ஞானத்தின் பிள்ளைகளாகிய எளியோர் மட்டுமே அங்கீகரித்துள்ளனர். லூக். 7:35-ல் "எனினும் ஞானம் மெய்யானது என்பதற்கு அதை ஏற்றுக் கொண்டோரின் செயல்களே சான்று" என்றார். இது பாவிகள் என்று சொல்லப்பட்டோர் ஞானத்தின் (இயேசுவின்) பிள்ளைகளாக மாறிய (லூக். 7:18-35) ஆச்சரியமான இறையன்பின் அருட்செய்தியைக் காட்டுகிறது.

ஒரு புனிதருடைய ஞானம் எப்படிப்பட்டது என பார்ப்போம், கந்தகுப்தா என்கின்ற ஒரு புனிதர் இருந்தார். இவர் மணிப்பூர் அரசிற்கு கீழுள்ள மணிநகரில் வாழ்ந்து வந்தார். அங்கு வெகு சிலர் மட்டுமே கந்தகுப்தாவின் ஞானத்தை அறியாதிருந்தனர். அத்தோடு இவர் தரிசனங்களைச் சொல்வதிலும் வல்லவர். ஒருமுறை மணிப்பூர் அரசன் மணிராஜா இந்த புனிதருக்கு மரியாதை செலுத்த விரும்பி அவரை தன் அரசவைக்கு அழைத்து, வருங்கால அதிர்ஷ்டங்கள் குறித்து ஏதாகிலும் சொல்லுங்கள் எனக் கேட்டார்.

அரசனுடைய எண்ணத்தைப் புரிந்து வருங்காலத்தில் கிடைக்கும் பல ஆசிகளைச் சொன்னார். அரசன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். நிறைய பரிசுகளை கொடுத்தார். பின்னர் வருங்காலத்தில் நடக்க உள்ள துரதிர்ஷ்டங்களை சொன்னார் அப்போது அரசன் மணிராஜாவின் முகநாடி மாறியது.

திடீரென அரசன், "நிறுத்து, உன் தரிசனத்தை" எனச் சத்தமிட்டார். "என்ன மடத்தனத்தைச் சொல்கிறாய்" எனச் சொல்லி புனிதருக்கு மரண தண்டனையைக் கொடுத்தார். கந்தகுப்தா மெல்லிய சத்தத்துடன் சொன்னார். "அரசே! என்னுடைய கணிப்பின்படி என்னுடைய மரணம் தாங்களுடைய சாவுக்கு ஒரு மணி நேரத்திற்கு முன் நடக்கும்" அரசன் வியப்பில் ஆழ்ந்தார். தன் தவற்றைப் புரிந்து கொண்டு புனித கந்தகுப்தாவிடம் மன்னிப்பு கேட்டு அந்த மனிதரை வழியனுப்பி வைத்தார். இதிலிருந்து நாம் புரிந்து கொள்வது வலிமையைவிட ஞானத்தால் எல்லாம் செய்ய முடியும்.

ஞானம் என்பது அறிவு, விவேகம், புத்தி இவைகளை விட மேலானது. இது விண்ணிலிருந்து வருகிறது. ஞானம் கடவுளிடமிருந்து புறப்படுகிறது. ஆனால் அது கடவுள் மானிடருக்குப் பல கோணங்களில் கொடுக்கிறார். அன்றாட கிறறிஸ்தவ வாழ்வில் இதனை உணரலாம். இன்று அறிவுப் பெருக்கத்தின் வழி அல்லது பல மொழிகளைக் கற்பதன் வழி ஞானத்தை அடையமுடியும் என நினைக்கின்றனர். இந்த ஞானம் படிப்பறிவில்லாதவர்களுக்கும், ஏழைகளுக்கும் கிடைக்காது. ஏனென்றால் "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்; ஞானத்தையும் நற்பயிற்சியையும் மூடரே அவமதிப்பர்" (நீதி. 1:7).

விண்ணிலிருந்து வரும் ஞானம் மானிடர்களுக்குக் கொடுக்கப்படும் போது சோதனைகளினின்று விலகி கடவுளுடைய பிள்ளைகளாக மாறி நீதிக்குரிய செயல்களைச் செயல்படுத்தக் கூடிய மனப்பக்குவம் உருவாகும்.

அருள்திரு. K. **பிறின்ஸ்குமார்**

10-06-2018

**சுற்றுச்சூழல் ஞாயிறு**

# இறைமாட்சியைப் பறைசாற்றும் படைப்பு
## CREATION PROCLAIMS GLORY OF GOD

நீமொ. 8:22-31 திவெ. 21:1-8
திபா. 19 லூக். 8:22-25

***"அவற்றின் அறிக்கை உலகெங்கும் சென்றடைகின்றது. அவைகூறும் செய்தி உலகின் கடையெல்லைவரை எட்டுகின்றது."*** **திபா. 19:4**

சூழல்களுக்கு ஏற்றவிதமாய் வாழ கற்றுக்கொண்டவன் தான் மனிதன். வாழ்வுச் சூழல் ஒவ்வொரு மனிதனுக்கும் வேறுபட்டவை. சமூகத்துக்கு சமூகம் வேறுபாடுகள், இடத்துக்கு இடம் நாட்டிற்கு நாடு வேறுபாடுகள் ஏராளம். பலமொழிகளோடும் கலாச்சாரங்களோடும் வாழும் மனிதர்கள் அனைவரும் கடவுளின் சாயல்கள். கடவுளால் படைக்கப்பட்ட அனைத்து படைப்புகளும் கடவுளை மாட்சிமைப்படுத்தி வாழ்கின்றன. பூமி தன்னைத்தானே சுழன்று 365 நாட்களில் சூரியனை ஒரு முறை சுற்றி முடிக்கின்றது. கடவுள் தனக்கென கொடுத்த அச்சில் அணுகளவும் விலகாமல் நின்று தம் கடமையைச் செய்து கடவுளை மாட்சிமைப்படுத்துகிறது. வானமும் பூமியும், சூரியனும் சந்திரனும், விண்மீன்களும் அனைத்துப் படைப்புகளும் தங்கள் கடமைகளை காலம் தவறாமல் நிறைவேற்றி கடவுளை மாட்சிமைப்படுத்துகின்றன.

தி.பா. 19 இயற்கையில் வெளிப்படும் இறைவனின் வாக்குறுதியை விரிவாக விளக்குகிறது. ஆதி. 1-ம் அதிகாரத்தில் காணப்படும் படைப்பின் வரிசை இங்கே எடுத்தாளப்பட்டிருக்கிறது. வானத்தின் அழகே இறைவனுக்குரிய புகழ்ச்சிதான். வானம் பேசும் மொழி மனித அறிவுக்கு அப்பாற்பட்டது மனிதனால் புரிந்துகொள்ள கூடியதன்று. ஆனால் வானமும் பூமியும் அனைத்துப் படைப்புகளும் இறைவனின் மாட்சிமையை புகழ்ந்து கொண்டும் பறைசாற்றிக் கொண்டும் இருக்கின்றன. அவற்றின் அறிக்கை உலகெங்கும் சென்றடைகின்றது; அவைகூறும் செய்தி உலகில் கடையெல்லைவரைக்கும் எட்டுகின்றது (தி.பா. 19:4).

ஒவ்வொரு படைப்புகளின் இயக்கமும் அதை படைத்தவருக்கு மாட்சிமையாகவே இருக்கின்றது. கடவுளால் படைக்கப்பட்ட மனிதன் கடவுளுக்கு மாட்சிமையாய் அவரின் கட்டளையாகிய படைப்புகளைப் பண்படுத்திப் பாதுகாக்கின்ற (தொ.நூ. 2:15) பொறுப்பைப் பெற்றிருக்கிறான்.

ஆனால் மனிதனோ சுயநலத்தால் கடவுளின் திட்டத்தை மீறி இந்த உலகம் மாசுபடுவதற்கு காரணமாகமாறி விட்டான். நவீனமயமாக்கப்படுகின்ற உலகில் ஆடம்பர வாழ்வை விரும்பி ஓடுகின்ற மனிதனின் செயல்பாடுகளால் தூய்மையான காற்றை சுவாசிக்க இயலாத நிலை இன்று எட்டப்பட்டிருக்கிற்தது. விவசாய கழிவுகளை எரிப்பதும் வாகனங்களின் பெருக்கமும் தொழிற்கூடங்களின் வளர்ச்சியும் காற்றினை புகையாக்குகிறது.

காற்றிலிருக்கும் மாசு அளவுகள் அதிகரிக்கும்போது அவை மனிதர்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிப்புக்குள்ளாகச் செய்கின்றன. மாசு நிறைந்த விஷக்காற்றை சுவாசிப்பதினால் உடல் உறுப்புகள் செயலிழக்க ஆரம்பிக்கின்றன. குறிப்பாக டெல்லி குழந்தைகளில் நுரையீரல் அதிகமாக பாதிக்கப்படுகிறது. டெல்லியில் நிலவும் புகைமூட்டம் கிட்டத்தட்ட சிகரெட் புகைக்கு சமமானது. புகையினால் சிதிலமடையும் ஓசோன் படலமும் நேரடியாய் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. 2014-ம் ஆண்டிலிருந்து இதுவரை 90 ஆயிரம் குழந்தைகள் இறந்திருக்கிறார்கள். உயர்இரத்த அழுத்தம், நுரையீரல் புற்றுநோய், கொழுப்பு விகிதத்தில் ஏற்ற இறக்கம் இவைகளே இறப்புக்கு காரணமாய் அமைந்திருக்கின்றன. புகைமூட்டம் ஓசோன் மண்டலம் பாதிப்பு போன்ற காரணங்களினால், அதிக அளவில் பிஞ்சு குழந்தைகள் உயிரிழந்த நாடுகளில் இந்தியா முதல் இடத்தில் இருக்கிறது. இதே நிலை நீடித்தால் 2050 -ல் மனிதன் வாழ இயலாத பூமியாக உலகம் மாறிவிடும் என வல்லுநர்கள் எச்சரிக்கிறார்கள்.

ஆண்டவர் இந்த உலகத்தைப்படைத்து அதை நேசித்தார். மனிதனை ஒரு நோக்கத்தோடு ஆண்டவர் படைத்தார். ஆண்டவர் படைத்த உலகத்துடன் இணைந்து வாழ பண்படுத்தி, பாதுகாத்து, கடவுளின் திட்டத்தை நிறைவேற்ற கடவுளின் மாட்சிமையை வெளிப்படுத்த. ஆனால் நாம் கடவுளின் திட்டத்தை நிறைவேற்றி அவரை மாட்சிமைப் படுத்துகிறோமா? அல்லவென்றால் நாம் செய்ய வேண்டுவது என்ன? ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன?

### *1. இறைவனின் மாட்சியை இதயத்தில் ஏற்போம்* :

வெறுமையும் ஒழுங்கின்மையுமான பூமியை ஆண்டவர் ஒழுங்குபடுத்தி நேர்த்தியாய் படைத்தார். “பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது. அவரே அதை கடல்களுக்கு மேலாக அஸ்திபாரப்படுத்தி, அதை நதிகளுக்கு மேலாக

ஸ்தாபித்தார்'' (சங். 24:1,2). எனவே திருப்பாடல் ஆசிரியர் தண்ணீர்களுக்கு மேலே பூமியைப் பரப்பினவரைத் துதியுங்கள் (தி.பா. 136:6). பகலில் ஆளச் சூரியனையும் (136:8) இரவில் ஆளச் சந்திரனையும் நட்சத்திரங்களையும் படைத்தவரை துதியுங்கள் (136:9) என்று கடவுளின் மாட்சிமையை உள்ளத்தால் உணர்ந்து பாடுகிறார். நாம் வாழும் வாழ்க்கையும் நாம் வாழும் இந்த பூமியும் கடவுளின் அருட்கொடை என்பதை நாம் உள்ளத்தால் உணர வேண்டும். ஒருவர் நமக்கு பயனுள்ள பரிசு ஒன்றினைக் கொடுத்தால் அவருக்கு நன்றி செலுத்துவதும் அவருக்கென நமது இதயத்தில் நீங்காத இடமளித்து கனப்படுத்துவதும் மனித இயல்பு. ஆண்டவர் நமக்கு மதிப்பிட இயலாத இந்த உலகையும் படைப்புகளையும் நம் வாழ்வுக்கென பரிசாகக் (Gift) கொடுத்திருக்கிறார். அதனைப் பண்படுத்தி பாதுகாப்பதே அவரை மகிமைப்படுத்துவதற்கு நாம் செய்யும் கடமையாகும்.

## *2. படைப்பின் மேன்மைகளைப் பறைசாற்றுவோம்* :

படைப்புகள் அனைத்தும் மேன்மையானவைகள். ஒரு மனிதனை மரணம் சந்தித்துவிட்டால் அத்துடன் அவன் வாழ்வு முடிந்துவிடும். ஆனால் ஒரு மரத்தை வெட்டிவிட்டால் அது சில நாட்களில் மீண்டும் துளிர்க்க ஆரம்பித்துவிடும். தன்னை புதுப்பித்துக்கொள்ளும் ஆற்றல் மரங்களுக்கு உண்டு. பருவகாலங்களுக்கு கேற்பவும் தன்னைப் புதுப்பித்து சிறப்பாய் கனிகொடுக்க தன்னை ஆயத்தப்படுத்துகிறது (யோபு 14:7-10). சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் காலம் தவறாது தங்கள் கடமைகளை கடவுள் குறித்த கட்டளைகளில் நின்று நிறைவேற்றுகின்றன. ஆனால் மனிதனோ இயற்கையைச் சுரண்டி தன்னலத்தோடு வாழ்கிறான். இயற்கை வழங்கள் சுரண்டப்பட்டு உலகமே அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. வளர்ச்சி திட்டங்கள் நவீனமயமாக்குதல், தொழில் புரட்சி என்ற போர்வையில் இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன. சமீபத்திய (2015, 2017) சென்னை வெள்ளப்பெருக்கால் பல மக்கள் மடிந்து போயினர். பலர் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்தனர். காரணம் குளங்கள், ஏரிகள், வாய்க்கால்கள், ஆறுகள் போன்ற நீர் நிலைகள் அழிக்கப்பட்டு குடியிருப்புகளாக தொழிற்சாலைகளாக மாற்றப்பட்டது.

ஆண்டவர் படைத்த இயற்கை எழில்மிகு பூமியை பாதுகாக்கும் கடமை நம்முடையது. படைப்புகளின் மேன்மைகளைப் பற்றிய விழிப்புணர்வுடன் வாழ அழைக்கப்படுகிறோம். படைப்பின் மேன்மைகளை உலகுக்கு அறிவிப்பதில் கரிசனை கொள்வோம். நாம் உயிர்வாழ்வதற்கென ஆண்டவர் தந்த நிலம், நீர், காற்று மாசுபட்டுப் போகாமல் காத்திட முயற்சிப்போம்.

## 3. படைப்புகளோடு இணைந்து இன்புற்று வாழ்வோம் :

செயற்கை உலகத்தில் மயங்கி போய் நிற்கிறது மனித வாழ்வு. உணவிலும், உடையிலும், உறைவிடத்திலும் இலகுவான, ஆடம்பரமான செயற்கை நிலைகள் வளர்ச்சியடையும் காலம் இது? 2016 ஐக்கிய நாடுகள் சபை இயற்கையை பாதுகாக்கும் நோக்குடன் Consume with care என்னும் கருப்பொருளுடன் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. 720 கோடி மக்கள் ஒரே உலகம். வெறும் ஒரு குடும்பத்திற்கு கொடுக்கப்பட்ட உலகம் (ஆதாம், ஏவாள்) இன்று 720 கோடி மக்கள் பகிர்ந்து வாழும் உலகமாக மாறி இருக்கிறது. 2017 connect with nature என்னும் கருப்பொருள் விழிப்புணர்வுக்காய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயற்கையோடு மக்கள் இணைந்து வாழவேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். கடந்த 20 ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கும் காலநிலை மாற்றங்கள் மனித வாழ்வை திகைக்கச் செய்கிறது. வருடத்திற்கு வருடம் அதிகரித்து வரும் வெப்ப அளவு மனித உயிருக்கும் ஏனைய படைப்புகளுக்கும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதே நிலை தொடர்ந்தால் அழிவும் அழுகையுமே மிஞ்சி நிற்கும். ஆண்டவர் அருட்கொடையாய் தந்த இயற்கையுடன் இணைந்து வாழ்வது சிறப்பு. இயற்கை உணவினை, இயற்கை காற்றை, இயற்கை சூழல்களை அதிகம் நாடுவோம்.

சுற்றுசூழல் (உயிர் சூழல்) இல்லாத ஆன்மீகம் பொருளற்றது. “Spirituality without Ecological concern has no meaning” நாம் வாழும் உலகத்தின் இன்றைய சூழல்கள் நம்மை பல நிலைகளில் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது குறிப்பாக சுற்றுச்சூழல் பாதிப்புகள் மனித வாழ்வுக்கு பல தீமைகளை ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றன. இறைமக்களாய், அழைக்கப்பட்டவர்களாய் இறைவனின் மாட்சிமையை பறைசாற்ற வேண்டியவர்கள் படைப்புகள் கடவுளைப் புகழ்ந்து போற்றுகின்றன. அவைகளின் சத்தம் உலகெங்கும் கேட்கப்படுகிறது. நாமும் இறைவனின் மாட்சிமையை உள்ளத்தில் உணர்வோம் படைப்புகளின் மேன்மையை உலகுக்குச் சொல்லி விழிப்புணர்வை ஏற்படுத்துவோம் இயற்கையுடன் இசைந்து வாழ்ந்து மகிழ்வடைவோம்.

அருள்திரு. J. **வின்சென்ட் றாபர்ட்**

17-06-2018

# உண்மையோடும் ஆவியோடும் ஆண்டவரை வழிபடுங்கள்

## WORSHIP THE LORD IN TRUTH AND SPIRIT

எசா. 6:1-8 | 2 தெச. 2:13-17
தி.பா. 139 | யோவா. 4:15-26

***...அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில்தான் வழிபட வேண்டும் என்றார்.'' யோவா. 4:24***

வழிபாடு அல்லது தொழுகை என்பது எல்லா சமயத்தவர்களின் ஆன்மிகத் தேட்டம் ஆகும். எனினும் இது சமயத்திற்கு சமயம், ஆளுக்கு ஆள், இடத்திற்கு இடம் வேறுபட்டு காணப்படுகிறது. ஒவ்வொரு சமயமும் தங்களுக்கு என சில வழிபாட்டு முறைமைகளையும் அதற்கான சில நியதிகளையும் பின்பற்றுகின்றனர். கிறிஸ்தவ தொழுகை முற்றிலும் வாழ்வோடும், மானிட மீட்போடும் ஒன்றித்துள்ளது. அவராலேயன்றி வேறொருவராலும் மீட்பு இல்லை என்பதே கிறிஸ்தவத்தின் அடிப்படையாகவும், தொழுகையின் அச்சாராமாகவும் இருக்கிறது. நமது மீட்பரான கடவுள் உலகின் அனைத்து மக்களினத்தவராலும் போற்றப்படத் தக்கவர் என்பது திருமறையின் செய்தி (தி.வெளி. 7:9-17).

"யாராலும் எண்ணிக்கையிட முடியாத திரளான மக்களைக் கண்டேன். அவர்கள் எல்லா நாட்டையும், குலத்தையும் மக்களினத்தையும் மொழியையும் சார்ந்தவர்கள்; அரியணைக்கும் ஆட்டுக்குட்டிக்கும் முன்பாக நின்று கொண்டிருந்தார்கள்.... பின் அரியணை முன் முகம் குப்புற விழுந்து கடவுளை வணங்கினார்கள்'' (தி.வெ. 7:9a, 11b).

இந்த உலகில் நாம் தொழுகை நடத்துபவர்களாக தொழுகையில் பங்கேற்பவராக இருப்பதல்ல; மேலே குறிப்பிட்டுள்ளபடி ஆண்டவரின் திருமுன் நின்று வானதூதர்களுடன், மூப்பர்களுடன் அவரை தொழும் தொழுகையில் பங்கடைவோராக மாறும் வண்ணம் இந்த பூமியில் நமது தொழுகை ஆவியோடும், உண்மையோடும் அமைய வேண்டும் என்பதையே இந்நாளில சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

உண்மையில் வழிபாடு என்பது என்ன?

உண்மையான வழிபாட்டைக் குறித்து இயேசு கூறும் விளக்கமாக நற்செய்தியாளர் தூய யோவான் கூறுவது சமய, பாரம்பரிய கட்டுகளிலிருந்து விடுதலைப்பெற்று கடவுளுக்கு துதி செலுத்துவதே உண்மை வழிபாடாக அமையும். இந்நிலை இன்று தொழுகைகளிலும், ஆராதனை மையங்களிலும் காணப்படுகிறதா? ஆவியோடு மட்டும் தொழுவதல்ல அதில் உண்மைத்தன்மையும் காணப்படுதலே முழுமை பெற்ற தொழுகையாக அமையும். சமாரிய பெண்ணுக்கு இயேசு இதைத்தான் கற்றுக் கொடுத்தார். இந்த தொழுகை முறைமை நமக்கு கற்றுத்தரும் அழுத்தங்களை திருமறையின் துணையுடன் தொடர்ந்து சிந்திப்போம்.

## *1. ஆண்டவரோடு ஒன்றுபடுத்தும் தொழுகை* :

(யோவா. 4:20-24)

நமது நாட்டைப் பொறுத்தவரை கடவுளை வழிபடும் புண்ணியத்தலங்கள் பல இருக்கின்றன. இந்த குறிப்பிட்ட இடங்களிலே வழிபடும் போது கடவுள் நமது வேண்டலை கேட்கிறார் என்றும், நம்மை தூய்மையாக்குகிறார் என்பது போன்ற சிந்தனைகள் காணப்படுகின்றன. இதனை சமய மடமையாக கூறும் இயேசு கிறிஸ்து எங்கும் கடவுளை பணிந்திடலாம், ஆனால் உண்மையோடும், ஆவியுடனும் தொழுதிட அழைக்கிறார் (இ.ச. 11:29). கெர்சீம் மலையிலிருந்து வாழ்வின் நன்மையும், ஏபால் மலையிலிருந்து தீமையும் வருகிறது என இஸ்ரயேலர் நம்பினர். முற்பிதாக்கள் மலைகளில் கடவுளை வழிபட்டனர். இதனால் தான் சமாரிய பெண் கெர்சீம் மலையில் நாங்கள் தொழுகை செய்கிறோம் என்றார். (வி.ப. 3:1-18) பாலைநிலம், முட்செடி, மலை இவைகள் அல்ல அங்கே விளங்கும் கடவுளின் மாட்சியே முக்கியம் என்று இயேசு கூறுகிறார் (தி.ப. 16:24,25) சிறைசாலையில் இருந்த பவுலும் சீலாவும் தொழுதபோது கட்டுகள் அறுந்து விடுதலைப் பெற்றனர். ஆக தொழுகை இடமல்ல இறைவனே முக்கியம் அவரை இதயத்தால் எண்ணி தொழும் போது இறை ஆசியை பெற முடியும்.

நமது இன்றைய மனநிலையில் சில குறிப்பிட்ட இடங்களில் தான் கடவுளின் ஆவியார் இருக்கிறார் என்று எண்ணி கடவுளின் வாழ்விடமாக அவர் ஏற்றுக் கொண்ட ஆலயங்களை புறக்கணிக்கும் கலாச்சாரம் வளர்ந்து வருகிறது. வனாந்திரமாக இருந்தாலும், திருமண மண்டபங்களாக இருந்தாலும் ஆவியோடும் உண்மையோடும் ஆண்டவரை முன் நிறுத்தாத எந்த ஆராதனையும் உண்மை வழிபாடு ஆகாது. நமது உடையில்

மாற்றமும் வழிபாட்டு கூடங்களில் மாற்றம் அல்ல நம்மில் ஏற்படும் வாழ்வு சார்ந்த மாற்றமே தேவை.

## *2. அறச்செயல்களை வெளிப்படுத்தும் தொழுகை* :

(2தெச. 2:13-17)

எசாயா 58ஆம் அதிகாரத்தில் தொழுகை முறைகளை விட வாழ்வு முறைமையை சிறப்பானதாக கூறுகிறார். பண்டிகைகள் பலிகளிலும் கடவுளை மையப்படுத்திய வாழ்வே தொழுகையாக அமைய அறிவுறுத்துகிறார். தூய பவுலாரின் கருத்திலும் அதுவே. (2தெச. 2:13b, 17b) தூய ஆவியினால் தூய்மையாக்கப்பட்டவர்களாகிய நீங்கள் உண்மையை நம்பி மீட்படைய கடவுள் உங்களை தெரிந்தெடுத்துள்ளார். ஆகவே நீங்கள் நல்லதையே சொல்லவும் செய்யவும் உங்களை கடவுள் உறுதிபடுத்துவராக என்கிறார்.

நமது நற்செயல்களின் வழி இயேசுவை நாம் வாழும் சமயத்திற்குக் காட்ட வேண்டும்.

“இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களேன்
பேச்சிலல்ல செயலில் நல்ல இயேசுவை
வாழ்வோராய் காட்டுங்கள்......”

நம் பக்தி வாழ்வு என்பது திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும், நம்மிடத்தில் வாழும் ஏழைகளும் நலமடைய வாழ்வு பெற தூண்டுவதாக காணப்படுவதே தொழுகை (யாக். 1:27).

இன்றைய காலகட்டங்களில் வழிபாட்டினை வியாபார நோக்குடன் கூவி, கூவி விற்கும் மக்கள் சிலரால் வழிபாட்டின் சில உட்கூறுகள் மட்டும் மையப்படுத்தப்பட்டு வருகிறது. மனிதம் சார்ந்த நற்செயல்கள் வழி தொழுகை அமையும் என்பது மறக்கப்பட்டு போகிறது. உலகமே போற்றும் அன்னை இந்நிலைக்கு உயர்த்தப்பட்டது அவரது தொழுகை வெறும் கட்டிட அறைக்குள் இருந்ததினால் அல்ல அவர் வீதியில் நோயுற்றவர்களில் கடவுளைக் கண்டார். அவர்களின் காயம் கட்டினார். இதுவே சிறந்த தொழுகை முறைமையென்றும் கூறினார்.

இன்றைய நாட்களில் ஆன்மீக வாதிகள் என்று கூறுகிறவர்கள் அர்த்தமே சொல்ல முடியாதற்கு பெயரிட்டு அழைக்கின்றனர். மக்களின் நிலையைப் பார்த்தால் தேனை அருந்துவதற்குப் பதில் தேன் பகிர பயன்படுத்தப்பட்ட கரண்டிகளையே இன்னும் தொட்டு சுவைக்க முற்படுவது போன்று ஒரு சில தனி மனிதரையும் குறிப்பிட்ட சில அடையாளங்களையுமே முன் நிறுத்துகின்றனர்.

### *3. ஆய்ந்தறியத் தூண்டும் தொழுகை* : (எசா. 6:1-8)

தொழுகையில் பங்கேற்பவர்களும், பங்கேற்க அழைக்கிறவர்களும் இன்றைய நாட்களில் சொல்லும் வியாபார யுக்தி கடவுளைக் கண்டேன். கடவுள் என்னுடன் பேசினார் என்பதாகும்.

இந்த வழிபாடு வியாபார மையங்களும் விற்பனை முகவர்களும் மக்களிடையே போலியான விளம்பரங்களை தந்து இதுவே ஆன்மீகம் என அடையாளப்படுத்துகின்றனர்.

உண்மை தொழுகை நாம் கடவுளைக் காண்பது மட்டுமல்ல; கடவுளின் திருமுன்னில் நம்மைக் காண்பது; எசாயா கடவுளின் திருமுன்னில் அவரது திரு வெளிப்பாட்டினை கண்டார். அவர் இருந்த ஆலயம் ஆண்டவரின் மகிமைக்கு அடையாளமாக புகையால் நிரம்பியதையும் கண்டதோடு நின்றிடாமல் இந்த உன்னதமான ஆண்டவரை தொழுதிட வந்திருக்கிற தன்னுடைய நிலை என்ன என்பதை பார்த்து உணர்வடைந்தார். "ஐயோ நான் அழிந்தேன்; ஏனெனில் தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான்....."

இங்கு எசாயா முதலில் கடவுளின் மகிமையான எழுந்தருளுதலை கண்டபோது தனது நிலையை உணருகிறார். அதன் பின்பு தன்னை சுற்றி வாழ்பவர்களின் தன்மையை உணர்கிறார். இன்றைய தொழுகை தலங்களில் மக்களுக்கு கற்பிக்கப்படுவதும், போதிக்கப்படுவதும் நம்மை சுற்றி இருப்பவர்களை.

### *முடிவுரை* :

இன்றைய தொழுகை முறைமை நம்மை யார் என காணச் செய்கிறதா? சமய நெறியைவிட நீதியுள்ள வாழ்வுக்கு வழி நடத்துகிறதா? இடத்தை விட இறைவனை முக்கியப்படுத்துகிறதா? சிந்திப்போம். தொழுபவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தம்மை அவரது இயல்பு நிலைக்கு ஏற்ப தொழ வேண்டும் என விரும்பும் இறைவனது விருப்பத்தை இந்த உலகில் நிறைவேற்றுவோம். உலக மக்களினத்தார் யாவரோடும் அரியணையில் அமர்ந்திருக்கும் ஆட்டுக்குட்டியை தொழுவதற்கு தகுதியுடையவராகுவோம்.

"True worship that Liberates from all religious practices all enslavement of self, evil desire, world systems and produce life oriented results."

குற்றப்படுத்துவதும், குறை கூறுவதுமேயாகும். தங்களை காணாத அல்ல தன்னிலை உணர தூண்டாத எந்த பரவச தொழுகையும் ஆவியோடும் உண்மையோடும் காணப்படும் தொழுகை அல்ல.

பலர் இயேசுவிடம் நலன் பெற்றனர், நலம் நாடி வந்தனர் அதே நேரம் தன் பணியாளரது நலம் வேண்டி வந்த நூற்றுவர் தலைவன் தன்நிலை உணர்ந்தார். ஆண்டவரே நான் அதிகாரம் நிறைந்தவன் என்றும் நீர் என் இல்லம் வர நான் தகுதியற்றவன் ஒரு வார்த்தை மட்டும் சொல்லும் என் பணியாளன் பிழைப்பான் என்று கூறிய போது கடவுள் தமக்குப் பின் சென்றவரிலும் காணாத விசுவாசத்தைக் கண்டேன் என்று மெச்சி அவரது பணியாளருக்கு நலமருளினார்.

தொழுகை நம்மை கிறிஸ்துவின் முன் நிறுத்தி உய்த்துணர தூண்டுவதாக அமைகிறது. ஆவியோடும் உண்மையோடும் தொழுதல் பிறர்குறை காண்பது, நம்மை தூயவராக மாற்றாது; நமது குறைகளை நாம் காணும் போது தான் நாம் உண்மையாக தொழுபவராக மாறமுடியும். மேலும் தொழுகை, வாழ்வோடு ஒன்றிணையும் போது நம்மில் ஏற்படும் மாற்றமே இறைவனை வெளிப்படுத்தும் ஊடகமாய் அமையும். அத்தகைய நல் எதிர்நோக்கினில் நம்மையே ஒப்படைத்திடுவோம்.

அருள்திரு. P. **ஜேக்கப் பீட்டர்**

24-06-2018

# சீடத்துவத்தின் மதிப்பு

## COST OF DISCIPLESHIP

தானி. 6:11-23 2 கொரி. 6:1-10
தி.பா. 34 மாற். 10:35-45

**“உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர், அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும். ஏனெனில், மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்....” மாற். 10:44,45**

நாம் மகிழ்ச்சியான வாழ்வுக்கு தேவையானதென்று பணம், பதவி, பட்டம் ஆகியவைகளைத் தேடுகிறோம். பணத்தில் பாதுகாப்பையும், பதவியில் புகழையும், பட்டத்தில் அங்கீகாரத்தையும் தேடி அலைகிறோம். தம்மை பின்பற்ற விரும்பும் எவரும் இம்மூன்றையும் இழக்க தயாராக வேண்டும் என்பது இயேசு கிறிஸ்துவின் போதனை. செல்வம் கடவுளின் ஆசீர்வாதம் என யூதர்களும், சீடர்களும் நினைந்தபோது, “உம்மிடம் உள்ளதையெல்லாம் விற்று ஏழைகளுக்கு கொடும்... பின்பு வந்து என்னை பின்பற்றும்” என செல்வந்த இளைஞனுக்கு கொடுத்த அறிவுரை வழி செல்வம் முதன்மை அல்ல பின்னுக்கு தள்ளப்பட வேண்டியதென்று உணர்த்தினார். பதவியையும், அதிகாரத்தையும் தேடி அலைவது கடவுளை அறியாத மக்களின் பழக்கம். ஆனால் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் இவற்றைத் தேடி அலையக்கூடாது என்ற சவாலை முன் வைக்கிறார்.

சீடர்களால் இச்செய்தியை உட்கொள்ள முடியவில்லை. அவர்களுக்கு இந்த செய்தி திகைப்பும், அதிர்ச்சியும், அச்சமும் நிறைந்ததாய் அமைந்தது. ஏனெனில், இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டிய தன்னைப் பின்பற்றும் வாழ்வு எதிர்நீச்சல் போடும் வாழ்வு. ஒரு மனிதன் தன் விருப்பப்படி, தன்னைச் செழிப்பாக்கிக் கொள்ளும் வாழ்வல்ல. மாறாக, வாழ்வின் குறிக்கோளைக் குறித்த தெளிவோடு, தன்னை இழக்கின்ற வாழ்வாகும் பீட்டர் ட்றக்கர் (Peter Drucker) என்பவரின் கூற்றுப் போல, “பதவி ஒரு மனிதனுக்கு வசதிகளையும், வல்லமைகளையும் தருவதில்லை; மாறாக, பொறுப்பை அம்மனிதன்மீது சுமத்துகிறது.”

சீடர் என்பவர் ‘பின்பற்றுபவர்’, ‘கற்றுக்கொள்பவர்’ அல்லது ‘பயிற்சி பெறுபவர்’ ஆவார். கிறிஸ்தவத்தில், சீடர் என்பவர் இயேசு கிறிஸ்துவை பின்பற்றுபவர். அதாவது, அவரிடம் கற்று, அதை வாழ்வில் பயன்படுத்துபவர் ஆவார் (லூக். 6:40). பொதுவாக, எந்த குருவைப்

பின்பற்ற வேண்டும்? எதைக் கற்றுக்கொள்ள வேண்டும்? என்பதை சீடராக விரும்பும் நபரே (சீடரே) தீர்மானிப்பார். ஆனால், இயேசுகிறிஸ்து எனும் குருவே, யார் தனக்கு சீடராய் இருக்க வேண்டும்? தன்னுடைய சீடர் எதை பின்பற்ற வேண்டும்? என்பதைத் தீர்மானிப்பதாக அறியலாம். அவர் காட்டும் சீடத்துவம், அதன் சரியான மதிப்போடு தம் சீடர்கள் வாழ்வின் வழியாக வெளிப்பட வேண்டும் என எதிர்பார்க்கிறார்.

## *1. சீடத்துவத்தின் மதிப்பு - குற்றமற்றிருத்தல்*

".....அவர் (கடவுள்) திருமுன் நான் மாசற்றவன்..... அரசரே, உம் முன்னிலையிலும் நான் குற்றமற்றவனே...." (தானி. 6:22); "எவரும் குறைகூறா வண்ணம் எங்கள் திருப்பணியை ஆற்ற விரும்புகிறோம்...." (2கொரி. 6:3).

பாபிலோனில் சிறைபிடித்து கொண்டுபோகப்பட்ட தானியேல், சிறைப்பட்ட வாழ்விலும் அன்னிய நாட்டில், தன் ஒழுக்கத்திலும், உண்மைத் தன்மையிலும் மாற்றமற்றிருந்தார். உணவு உண்ணும் பழக்கத்தில் (1:12), இறைவேண்டல் செய்வதில் (2:17), ஆண்டவரைத் தேடுவதில் (9:3) உறுதியாயிருந்தார். தூய மனச்சான்றுடன் வாழ்ந்தார்; நாடு முழுவதும் வரி வசூலிப்பதற்கென்று 120 தண்டல்காரரை தரியு அரசர் நியமித்தார். இவர்களைக் கண்காணிக்க மூன்று மேற்பார்வையாளர்களையும் நியமித்தார். அந்த மூன்று பேரில் தானியேலும் ஒருவர், அந்த 120 தண்டல்காரரும், இரண்டு மேற்பார்வையாளர்களும் தானியேலின்மேல் குற்றம் சாட்ட வகை தேடியபோது, தானியேலிடம் எந்த தவறும் ஊழலும் காணவில்லை. அவர்கள் அனைவரும் தனக்கெதிராக ஒன்றுகூடி சூழ்ச்சி செய்தபோதும், தந்திரமாய் சட்டம் இயற்றப்பட்டபோதிலும் தானியேல் முறுமுறுக்கவில்லை; அரசரைப் பற்றி மற்றவர்களிடம் குறை கூறவுமில்லை. ஆனால், சிங்கம் தானியேலை எதுவும் செய்யாததைக் கண்ட அரசர் அவரை விசாரித்தபோது, தன் குற்றமற்ற நிலையை எடுத்துரைத்தார் (தானி. 6:22). அனைவருக்கும் முன்பாக குற்றமற்றவராய், கடவுளின் உண்மைச் சீடராய் திகழ்ந்தார்.

இயேசுகிறிஸ்துவால் பிடிக்கப்பட்டு, அவரின் சீடராய் பிற இனத்தாரிடையில் பணிசெய்த தூய பவுல் தம் வாழ்விலும், தம் திருப்பணியிலும் எவரும் குறைகூறா வண்ணம் செயல்படா விரும்புவதாகக் குறிப்பிடுகிறார் (2கொரி. 6:3). ஒருமுறை நற்செய்தியினிமித்தம் குற்றம் சாட்டப்பட்டவராய் உரோம ஆளுநர் பெலிக்ஸ் முன்பாக நிறுத்தப்பட்ட போது, தூய பவுல், ".....நானும் கடவுள் முன்னிலையிலும் மக்கள் முன்னிலையிலும் எப்போதும் குற்றமற்ற மனச்சான்றோடு வாழ முயலுகிறேன்" என்று கூறினார் (திப. 24:16). கிறிஸ்துவின் சீடர்கள், பிறர் எவருக்கும் இடையூறாக இருக்கக் கூடாது; அனைத்து சூழலிலும் குற்றமற்ற நிலையை நடத்தையில் காட்ட வேண்டும். அடிக்கப்பட்ட, குழப்பங்களில் சிக்கி, சிறையிலடைக்கப்பட்டு, வேதனை, இடர், நெருக்கடிகள்

தரப்பட்டாலும் இவைகளை மன உறுதியோடு தாங்கி குற்றமற்றிருக்க வேண்டும். பட்டினி கிடந்தாலும் கண்விழித்து, பாடுபட்டு உழைத்து, தூய்மை, அறிவு, பொறுமை, நன்மை, தூய ஆவியின் கொடைகள், வெளிவேடமற்ற அன்பு ஆகியவை கொண்டிருக்க வேண்டும். உண்மை பேசி, நேர்மையை படைக்கலமாக இரு கைகளிலும் தாங்கிக்கொள்ள வேண்டும். உலகத்தின் பார்வையில் ஏமாற்றுவோர் எனத்தோன்றினாலும் உண்மைப் பணியாளர்களாக, செத்துக்கொண்டிருப்பவர்கள் எனத்தோன்றினாலும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களாக, தண்டிக்கப்பட்டோர் எனத் தோன்றினாலும் கொல்லப்படாதவர்களாக, துயரமுடையவர்கள் எனத்தோன்றினாலும் எப்போதும் மகிழ்ச்சியாய் இருப்பார்களாக, எதுவும் இல்லாதவர்கள் எனத்தோன்றினாலும் எல்லாவற்றையும் உடையவர்களாக குற்றமற்றவர்களாக வாழ்ந்து காட்டுவதுதான் சீடத்துவத்தின் மதிப்பு (2கொரி. 6:4-10). நாம் குற்றமற்றிருந்தால், நமது செய்கை நேர்மையாயிருக்கும் (நீமொ. 21:8). கடவுளின் மாட்சிக்காக குற்றமற்றவர்களாக நேர்மையோடு வாழ்ந்து காட்டுவதே சீடத்துவத்தின் மதிப்பாகும்.

## *2. சீடத்துவத்தின் மதிப்பு - பணிவிடை செய்தல்*

"…..மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும்….. வந்தார்…." (மாற் 10:45).

"டியாக்கோனெய்ன்" என்ற கிரேக்க வார்த்தை 'உதவி செய்வது,' 'உதவி செய்யக் காத்திருப்பது' (உணவு மேசையில்), இவை போன்ற மதிப்பு குறைந்த வேலையைக் குறிக்கிறது. "டியாக்கோனியா" என்ற கிரேக்க வார்த்தை ஒரு அடிமையின் (டூலோஸ் - doulos) பணியைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டில், "டியக்கோனோஸ்" என்ற வார்த்தை வெளிப்படுத்தும் 'டீக்கன்' என்பவர் பணிவிடை செய்பவர். இவ்வார்த்தைகள் உணவு மேசையிலோ, ஒருவரின் தனிப்பட்ட தேவையிலோ உதவி செய்வதைக் குறிக்கிறது. எனவே, இங்கு டீக்கன் என்பவர் பணிவிடை செயல்கள் வழியாக 'உதவி செய்பவர்' ஆவார். இயேசு கிறிஸ்து இப்பணிவிடையைச் செய்தார். அவரின் சீடர்களும் இதைச் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றனர். பணிவிடையைக் குறித்து கூறும் டொனால்டு மெக்கனான் (Donald McGannon) என்பவர், "தலைமைத்துவம் என்பது செயல்பாட்டில் அடங்கியிருக்கிறதேயன்றி, பதவியில் அல்ல" என்று குறிப்பிட்டார்.

இயேசுகிறிஸ்து இறையரசுக்கான "சாலை விதிகளை" அறிமுகம் செய்யும்போது, வழக்கம் போல உலகத்தை தலைகீழாக மாற்றுகிறார் (வ. 42-44). இறையரசின் விதிகள் இவ்வுலக விதிகளிலிருந்து வேறுபட்டது; முற்றிலும் எதிரானது. ஆற்றல் வாய்ந்த ஆட்சியாளர்கள் தன்னலப்போக்குடனும், குறுகிய மனப்பான்மை கொண்ட சர்வாதிகாரிகள் தங்களுக்கு கீழானவைகளை மிகமோசமாக நடத்தும் போதும் இவ்வுலக

விதிகளின்படி வாழ்வோர் அதிகாரத்தை பெருமையாக எண்ணுகின்றனர். இறையரசில் மதிப்பும் புகழும் பிறரிடமிருந்து பெறுபவரையல்ல, பிறருக்கு பணிவிடை செய்பவரையே சேரும். அதிலும், மதிப்பின் முதன்மை என்பது தொண்டு செய்பவரைவிட (servant-diakonos), கீழான அடிமைப் பணிவிடை (slave - doulos) செய்பவரையே சேரும் (மாற். 9:35). ஒரு அடிமை ஒரே ஒரு எஜமானுக்கு மட்டும் பணிவிடை செய்வார். எஜமானின் கட்டளைக்கு இணங்கி அவ்வீட்டிலுள்ள அனைவருக்கும் பணிவிடை செய்யும் போதும் ஒரே ஒரு எஜமானுக்கு மட்டும்தான் பணிவிடை செய்வார். கிறிஸ்து அனைவருக்கும் பணிவிடை செய்ய, அனைவரின் அடிமைகளாக மாற நம்மை அழைக்கிறார். இயேசு கிறிஸ்து கொடுக்க விரும்புவதற்கு அதிகமாக கேட்பதில்லை. தொட்டில் முதல் கல்லறை வரை பணிவிடையையும், தியாகத்தையும் முன்மாதிரியாக்கினார். கடவுளுக்கு சமமான தன்மையிலிருந்தும், "தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிந்து தம்மைத் தாழ்த்திக் கொண்டார்" (பிலி. 2:6-8). அவர் மேற்கொண்ட திருப்பிறப்பும் (Incarnation), சிலுவையேற்றமும் (Crucifixion) மிகப்பெரிய பணிவிடை மற்றும் தியாகத்தின் செயல்களாக அமைகின்றன. 'கடவுள் அதிகாரத்துக்கல்ல பணிவிடைக்கே மதிப்பு கொடுக்கிறார்' எனக்கூறி வேறுபட்ட நெறிமுறைகளுக்கு இயேசுகிறிஸ்து நம்மை அழைக்கிறார். இங்கு, இப்போதே, இறையரசின் விதிமுறைகளுக்குட்பட்டு வாழத் தொடங்க சாவால் விடுக்கிறார். இது ஒரு கடினமான நிலைமாற்றமாக, ஆனால் திருச்சபை தொடர்ச்சியாக மீண்டும் கற்றுகொள்ள வேண்டிய ஒரு பாடமாக அமைந்திருக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் போதனைப்படி, உயர்ந்தவர் பணியாளராய் இருக்க வேண்டும்; தன் வாழ்வைக் கொடுப்பதிலும் இப்பணி அடங்கியிருக்கிறது. இங்கு உயர்வு அல்லது மேன்மை என்ன என்பதைக் கற்பித்தார். அதாவது, 1) பிறரைவிட வித்தியாசமாக சிந்திக்கவும், செயல்படவும் விரும்ப வேண்டும் (வ.42,43; 9:30-32); 2) பிறருக்கு அதிகம் பணிவிடை/தொண்டு செய்பவரே உயர்ந்தவர் (வ.43,44); 3) இயேசு கிறிஸ்துவே மிக உயர்ந்த பணியாளர், அதற்கும் மேலானவர். மேலும், தலைமைத்துவம் மற்றும் முதன்மையை விரும்புவதில் தவறில்லை. அதில் தவறு என்பது அதன் நோக்கத்தை மறந்துவிடுவதே ஆகும் (வ.44). பணியாளர் அல்லது அடிமை என்ற நிலையில் கிறிஸ்தவர்கள் அடிமைகளாக அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அதாவது, தாமாக கடவுளுக்கும், பிறருக்கும் பணி செய்ய தம்மைக் கொடுக்க விரும்புகிறவர்களாக இருக்க வேண்டும் (வ.43).

இயேசுகிறிஸ்து தம் சீடர்களின் கால்களைக் கழுவிய நிகழ்வு (யோவா. 13) பணிவிடைக்கு சிறந்த முன்மாதிரி ஆகும். அடிமைகள் தான் தலைவர்களின் கால்களைக் கழுவி வந்தனர். அனால், கால்களை கழுவ யூத அடிமைகளைக் கட்டாயப்படுத்தக் கூடாது என ஒரு சட்டம் இருந்தது. அந்த அளவுக்கு இது தாழ்வாகக் கருதப்பட்டது. அதுபோல சீடர்கள் குருவின் கால்களைக் கழுவும் வழக்கம் உண்டு. அனால், குரு சீடர்களின் கால்களை என்றுமே கழுவுவதில்லை. குருவும் தலைவருமான இயேசு தம் சீடர்களின் கால்களைக் கழுவி ஒரு வேறுபட்ட வரலாற்றைப் படைத்தார். பணிவிடை செய்வது, அது எப்படிப்பட்ட பணியாயிருப்பினும், தாழ்வான செயல் அல்ல; அது அன்புச் செயல்; பிறர் மீது கொண்ட அக்கறையின் அடிப்படையில் உருவாகும் செயல் என்பதை இந்நிகழ்வு வழியாக வெளிப்படுத்தினார். இதுபோல பணிவிடை செய்வோர் தான் இயேசு கிறிஸ்துவின் சீடர்கள். "டியக்கோனோஸ்" மற்றும் "டூலோஸ்" ஆகியவை இயேசுகிறிஸ்துவின் பணிவிடையின் சாயலில் உருவான திருச்சபையின் பணிவிடை ஆகும். தூய பவுல் தன்னை கடவுளுக்கு அடிமை (பிலி. 1:1) என்றும், பிறருக்கு அடிமை (1கொரி. 9:19) என்றும் ஒப்புக்கொடுத்து அனைவரும் 'ஒருவருக்கொருவர் அடிமைகள்' எனக் குறிப்பிடுவது சீடத்துவத்தின் 'பணிவிடை' எனும் மதிப்பைக் காட்டுகிறது.

## *3. சீடத்துவத்தின் மதிப்பு - உயிர் கொடுத்தல்*

"....மானிடமகன்...பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்..." (மாற் 10:45).

"சீடத்துவத்தின் மதிப்பு" (The Cost of Discipleship) என்ற நூலை எழுதிய டீட்றிச் போன்ஹோஃபர் (Dietrich Bonhoeffer) என்பவர் சீடத்துவத்தின் அழைப்பைக் குறிப்பிடும்போது, "கிறிஸ்து ஒரு மனிதரை அழைக்கும் போது, வந்து சாகவேண்டும் என்ற துணிவுமிக்கத் திட்டத்தை முன்மொழிகிறார்" (When Christ calls a man, he bids him, "come and die") என்கிறார். இது சீடத்துவத்தின் மதிப்பை வெளிப்படுத்தும் ஒரு முனைப்பான முயற்சியாக இயேசுகிறிஸ்து முன்வைக்கிறார். போன்ஹோஃபர் தன் கூற்றின்படி வாழ்ந்து காட்டினார். அமெரிக்கா ஐக்கிய நாட்டில் இறையியல் பேராசிரியராக அழைப்பு கிடைத்தும் அதை விட்டுவிட்டு, நாசிசத்திற்கு எதிராக குரல் கொடுக்க தன் சொந்த நாடான ஜெர்மனிக்கு திரும்பி வந்தார். தன் கொள்கைப்படி குரல் கொடுத்து வாழ்ந்தார். சர்வாதிகாரி ஹிட்லரை எதிர்த்ததினால் 1945-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தூக்கிலிடப்பட்டார்.

சீடத்துவம் என்பது எளிதான ஒன்றல்ல. அது கடினம் நிறைந்த பாதை. சீடத்துவத்தின் மதிப்பு உயிர்கொடுத்தலில் அடங்கியிருக்கிறது.

பதவியை எதிர்பார்த்த சகோதரர்களான இரு சீடர்களும் (யாக்கோபு, யோவான்) இயேசுகிறிஸ்து கேட்ட, “நான் குடிக்கும் துன்பக்கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா? நான் பெறும் திருமுழுக்கை உங்களால் பெற இயலுமா?” (மாற். 10:38) என்ற கேள்விகளின் வேதனை, துன்பம், தியாகம், இறப்பு இவைகளை உணர்த்தும் கேள்விகள்; இவை உயிர்கொடுக்க தாமாக முன்வரும் நிலையை உணர்த்தும் கேள்விகள். மானிட மகனாகிய இயேசுகிறிஸ்து பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுத்தார். அவரைப் பின்பற்றும் சீடர்களும் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றி பிறருக்காக உயிர்கொடுக்க வேண்டும். சீடத்துவத்தின் மதிப்பு என்பது பிறருடைய நல்வாழ்வுக்கென்று உயிர்கொடுத்தலில் அடங்கியிருக்கிறது. கிறிஸ்துவின் உண்மைச்சீடர் பிறருக்காக உயிர்கொடுக்க தயாராக வேண்டும்.

“ஆம்” எனப் பதில் கூறிய யோவான் மற்றும் யாக்கோபு உட்பட இயேசுகிறிஸ்துவின் பதினொன்று சீடர்களும் அவருக்காக, நற்செய்திக்காக இரத்தசாட்சிகளாக இறந்தார்கள் என்பது உண்மை. மத்தேயு எத்தியோப்பியாவில் இயேசுவுக்காய் வாளால் வெட்டப்பட்டு இறந்தார்; அந்திரேயா X வடிவ சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டார்; மாற்கு தெருவீதிகளில் நாயைப் போல் இழுத்து செல்லப்பட்டு சாகடிக்கப்பட்டார்; பெரிய யாக்கோபு தலை வெட்டி கொல்லப்பட்டார்; லூக்கா ஒலிவமரத்தில் தூக்கிலிட்டு கொல்லப்பட்டார்; யோவான் கொதிக்கும் எண்ணெயில் போட்டும் சாகாததால் பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டு, காட்டில் பட்டினி கிடந்து கொடிய வெயிலில் சுருண்டு விழுந்து இறந்தார்; பார்த்தலோமேயு உயிரோடு தோல் உரிக்கப்பட்டு கொல்லப்பட்டார்; தோமா ஈட்டியால் குத்தி கொல்லப்பட்டார்; பர்னபா கல்லெறியப்பட்டுக் கொல்லப்பட்டார்; பேதுரு சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டுக் கொல்லப்பட்டார்; சின்ன யாக்கோபு தடியால் அடித்துக் கொல்லப்பட்டார்.

உண்மையான சீடத்துவத்தின் மதிப்பு உலகப் பதவியிலும், செல்வத்திலுமல்ல. மாறாக, கடவுளுக்கும் மக்களுக்கும் முன்பாக குற்றமற்றிருப்பதிலும், உண்மையாய் தாழ்ந்து பணிவிடை செய்வதிலும், பிறரின் வாழ்வுக்காய் உயிர்கொடுப்பதிலும் தான் அடங்கியிருக்கிறது என்பதை உணர்ந்து இயேசுகிறிஸ்துவின் உண்மைச் சீடர்களாய் வாழ்வோம்.

அருள்திரு. T.P. **சலீம் தங்க குமார்**

# பொறுப்பாண்மை : வெளிப்படைத்தன்மையும் கணக்கொப்புவித்தலும்

## STEWARDSHIP : TRANSPARENCY AND ACCOUNTABILITY

வி. ப. 36:2-7 பிலி. 4:10-20
திபா. 116:12-19 லூக். 19:11-27

***"நன்று, நல்ல பணியாளரே மிகச்சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர்..."*** லூக். 19:17b

பொறுப்பாண்மை என்பது 'உக்கிராணத்துவம்' என்ற பொருள் தருகிறது. இதை விடவும் பொருள் நிறைந்தது பொறுப்பு மிக்க மனநிலை ஆகும். பொறுப்பாண்மை வளர வேண்டுமானால் உள்ளத்தில் உண்மை வேண்டும். உண்மையுள்ளோரே கடவுளுக்கு உகந்தோரும் நல்ல பொறுப்பாண்மையாளருமாயிருப்பர். மோசே கடவுளின் பணியிலும் அவர் உண்மையுள்ளவராயிருந்தார் (எபி. 3:2,5). ஆகவே 'உண்மை' என்பதே பொறுப்பாண்மைக்கு தகுதியாக இருக்கிறது.

### *1. பொறுப்பாண்மை : வெளிப்படைத் தன்மையோடு வாழ்தல்*

"அப்பொழுது மோசே, ஆணோ பெண்ணோ யாராயினும் இனிமேல் தூயகத்துக்காகக் காணிக்கை கொண்டு வர வேண்டாம் என்று ஒரு கட்டளை பிறப்பிக்க அது பாளையம் எங்கும் அறிவிக்கப்பட்டது. எனவே மக்கள் எதையுமே கொண்டு வருவதை நிறுத்தி விட்டனர்" (வி.ப. 36:6).

ஆலயப்பணிக்குத் தன்னார்வத்துடன் மக்கள் காணிக்கை கொடுத்தனர். பணிக்கு அதிகமாகவும் கொடுத்தனர் (வி.ப. 36:5). இனிமேல் காணிக்கை படைக்க வேண்டாம் என்று கூறுமளவில் மக்கள் தாராளமாய் கொடுத்தனர். ஆகவே தேவைக்கு கிடைத்தபோது இனிமேல் காணிக்கை படைக்க வேண்டாம் என்று அறிவிக்கப்பட்டது. இது மோசே வெளிப்படைத்தன்மையோடு பணியாற்றியதை குறிப்பிடுகின்றது.

இன்று இப்படிப்பட்ட வெளிப்படைத்தன்மை பெருமளவில் குறைந்து வருகிறது. தேவைக்கு அதிகமாக சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக ஊழல், லஞ்சம், ஏமாற்றுதல், திருடுதல் இவைகள்

இன்று மலிந்து காணப்படுகிறது. இஸ்ரயேலர் கானானுக்கு பிரயாணம் பண்ணிய வேளையில் ஆண்டவர் மக்களுக்கு மன்னாவை உணவாக கொடுத்தார். அது தேவைக்கு சேமிக்க சொல்லப்பட்டது. ஆனால் பலர் அதிகமாக சேமித்து வைத்தனர் (வி.ப. 16:17). அதிகமாக சேமித்த மன்னா மறுநாளில் பூச்சி பிடித்து நாற்றமெடுத்தது (வி.ப. 16:20). ஆண்டவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து உண்மையாய் வாழ இஸ்ரயேலர் மறுத்தார்கள். மனந்திருப்புதலுக்கு ஏற்ற கனிகளை கொடுங்கள் என்று போதித்த யோவான் அனைவரும் பொறுப்புகளை உணர்ந்து தேவைக்கு அதிகமாக எதையும் பெற்றுக்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்துகிறார் (லூக். 3:12-14). மானிட வார்வின் பொறுப்பாண்மையில் வெளிப்படத்தன்மையாகவே வாழமுயல்வோம்.

## 2. பொறுப்பாண்மை : முன்மாதிரியாக வாழ்தல் : (பிலி. 4:12)

வளமான சூழலிலும் வறுமையான சூழலிலும் ஒரே மாதிரியாக வாழ்ந்தவர் பவுல். தன் கடிதங்கள் அனைத்தின் இறுதியிலும், நடைமுறையிலே கிறிஸ்தவ வாழ்வு எவ்வாறு அமைய வேண்டுமென்று கூறுவது பவுலின் வழக்கம். பிலிப்பியருக்கும் இறைவன் தந்துள்ள நன்மைகளை எடுத்துக் கூறி அவற்றிற்கு நன்றி சொல்ல அழைக்கிறார். தன்னுடைய வாழ்வை அவர்களுக்கு முன்மாதிரியாகக் காண்பிக்கிறார். துன்பத்திலே துவண்டு விடுவதும், இன்பத்திலே இறுமாப்புக் கொள்வதும், வெறுமையில் வாடி விடுவதும், வளமையில் அகந்தையுறுவதும் மனித வாழ்வில் காணப்படுகிறது. ஆனால் பவுலோ வறுமையிலும் சரி, வளமையிலும் சரி, இம்மையிலும் சரி, இருப்பிலும் சரி உள்ளது போதுமென்றிருந்தார். இல்லாதது வேண்டாமென்றிருந்தார். பவுலின் வாழ்வு நமக்கெல்லாம் முன்மாதிரியாய் அமைய வேண்டும். எகிப்தில் யோசேப்பும், பாபிலோனில் தானியேலும் முன்மாதிரியாய் வாழ்ந்தார்கள்.

## 3. பொறுப்பாண்மை : உழைத்து வாழ்தல் : (லூக். 19 : 11-27)

வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆசை இருந்தால் மட்டும் போதாது மாறாக அதை அடைவதற்கான கடின உழைப்பும் மனத்திடமும் அவசியம். இத்தகைய பண்பு, முதல் இரு பணியாளர்களிடம் விளங்கியது. தங்களிடம் கொடுக்கப்பட்ட தாலந்துகளை இருமடங்கு உயர்த்தினர். உலகம் பெரிதும் போற்றுகின்ற சாதனையாளர்கள் சாதாரண குடும்பங்களில் பிறந்தவர்கள். உழைப்பால் தான் உலகை வென்றார்கள். ஆங்கில இலக்கியம் பெரிதும் கொண்டாடுகிற ஷேக்ஸ்பியர் குதிரை லாயத்தில் குதிரைச் சாணம் அள்ளிக் கொண்டிருந்தார். புவி ஈர்ப்பு விசையைக்

கண்டுபிடித்த ஐசக் நியூட்டன் சிறு வயதில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தார். கடின உழைப்பின் மேன்மையை உணர்ந்ததால் தான் 'கடின உழைப்பு எப்போது பயன் தரும்' வெறும் பேச்சினால் வருவது வறுமையே என்று நீதி. 14:23 கூறுகிறது.

இயேசு கிறிஸ்து கூறிய இந்த உவமையில் ராத்தல் இல்லாத மனிதர் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முதல் இரண்டு பேர் உழைப்பினால் அதிக ராத்தல்களை சம்பாதித்தனர். ஆனால் மூன்றாம் நபர் கிடைத்த ராத்தலை கொண்டு வேறு சம்பாதிக்காமல் துணியில் மறைத்து வைத்தான். கணக்கு கொடுக்க வேண்டிய வேளை வந்தபோது தான் உழைக்காததை, தான் செய்த தவறை மறைக்க ராத்தல் கொடுத்தவரையே குற்றஞ்சாட்டுகிறான். 'நீர் கடின உள்ளத்தினன்', 'விதைக்காத இடத்தில் அறுக்கிறவன்' என்று குற்றம் சாட்டுகிறான். வாங்கும் போது குறைகளைக் காணாதவன், திருப்பிக் கொடுக்கிற போது குறை காண்கிறான். இதன் மூலம் அதன் பலனையும் அவன் அனுபவிக்கின்றான்.

ஆகவே ஆண்டவர் நமக்கு கொடுத்திருக்கின்ற திறமைகளை பயன்படுத்தி வாழ்க்கையை வளமாக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கையில் நம்முடைய பொறுப்பை உணர்ந்து வெளிப்படைத் தன்மை உடையவர்களாகவும், முன்மாதிரியாகவும், ஆண்டவர் கொடுத்திருக்கும் திறமைகளை பயன்படுத்தி உயர்ந்து ஆண்டவரை மகிமைப் படுத்துகின்றவர்களாகவும் வாழ்வோம்.

அருள்திரு. S. **ஜாண் பிராங்கிளின் ராஜ்**

08-07-2018 இறையியல் கல்வி ஞாயிறு

# இறையியல் கல்வி : நம்பிக்கையை அறிதலும் செயல்படுத்துதலும்

## THEOLOGICAL EDUCATION : KNOWING AND DOING FAITH

வி.ப. 3:1-12 2திமொ. 2:1-13

தி.பா. 111 யோவா. 12:20-26

**"இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே." வி.ப. 3:14**

இறையியல் என்பது கடவுள் சார்ந்த அல்லது சமயம் சார்ந்த உண்மைகளை அறிந்து கொள்ள உதவுகின்ற அறிவியல் ஆகும். இது இறையுறவைப் பற்றியது. A.H. ஸ்ட்ராங் என்ற 20-ம் நூற்றாண்டின் இறையியலாளர் குறிப்பிடும் போது "இறையியல் என்பது கடவுள் சார்ந்த அறிவியல். அத்துடன் கடவுளுக்கும் அவர் படைத்த உலகுக்கும் இடையேயான உறவு குறித்து ஆய்வு செய்வதாகும்" என்கிறார்.

திருமறையைப் பொருளுணர்ந்து இலட்சிய கண்ணோட்டத்தோடு அறிவியல் சார்ந்து விளக்கவும், ஒரு மனிதரின் மடமையைப் போக்கி அவரிடமிருக்கும் ஆற்றலை வெளிக்கொணரச் செய்யவும் இறையியல் கல்வி உதவுகிறது. இன்றைய திருமறைப் பகுதியின் வழியாக இறையியல் கல்வியானது எவ்விதமாக நம்பிக்கையை அறிந்து செயல்பட வைக்கிறது என்பதை தியானிப்போம்.

### *1. அறியச் செய்கிறது* :

வி.ப. 3:2 "அப்போது ஆண்டவரின் தூதர் ஒரு முட்புதரின் நடுவே தீப்பிழம்பில் அவருக்குத் தோன்றினார்."

இஸ்ரயேல் மக்கள் எகிப்தியர்களின் அடிமைத்தனத்தில் சிக்கி உரிமை மறுக்கப்பட்டவர்களாக, ஓரங்கட்டப்பட்டவர்களாக, முகவரி அற்றவர்களாக நடத்தப்பட்டார்கள். இவர்களை விடுவிக்க யாரும் இல்லாதச் சூழலில் மோசே தன் மக்களின் நிலை உணர்ந்து மனம் பதை பதைத்தவராகத் தன் சுய பலத்தால் விடுதலை பெற்றுத்தர முயற்சித்தார். ஆனால் அம்முயற்சி தோல்வியுறவே பயத்தோடு எகிப்தை விட்டு ஓடி துன்புறும் தம் இனத்தவரிடமிருந்து அகன்று தொலைவில் மீதியானின் அர்ச்சகராகிய எத்ரோ என்பவரின் மருமகனாகவும், அவரது ஆடுகளை

மேய்ப்பவராகவும் வாழ்ந்து வந்தார். ஒரு நாளில் மோசே ஆட்டுமந்தையை பாலை நிலத்தில் கடவுளின் மலையாகிய ஒரேப் அருகே மேய்த்துக் கொண்டிருந்த போது கடவுள் அவருக்கு ஒரு காட்சியை அருளி தம்மை அறியச் செய்தார்.

சாதாரண காட்டுச்செடி (முட்செடி) ஒன்று தீப்பற்றி எரிந்தும் செடி வெந்து போகவில்லை. இக்காட்சியினை உற்று நோக்க, இது அற்புதக் காட்சி என்று மனதில் எண்ணி அருகில் வந்த மோசேயை கடவுள் முட்செடியின் நடுவினின்று அழைத்து எகிப்தில் இஸ்ரயேலரின் வாழ்வைக் குறித்து அறியச் செய்ய முதலில் தம்மை வெளிப்படுத்தினார். மோசே இறைவனை அறிந்துக் கொள்கிறார்.

தானியேல் 3-ம் அதிகாரத்தில் நேபுகாத் நேச்சார் என்ற அரசர் அறுபது முழ உயரமும் ஆறு முழ அகலமுமான பொற்சிலை ஒன்றைச் செய்வித்து அதை பாபிலோன் நாட்டிலிருந்த ‘தூரா’ என்ற சமவெளியில் நிறுத்தி வைத்து இதை பணிந்து தொழுது கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் எரிகின்ற தீச்சூழளையில் தூக்கிப் போடப்படுவார்கள் என்று அறிவிக்கச் செய்தார். இறையடியார்களாகிய சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ என்ற மூவரும் பொற்சிலையை வணங்கவில்லை. இதனால் கோபமுற்ற அரசரின் ஆணைப்படி அவர்கள் கட்டுண்டவர்களாக எரிகின்ற தீச்சூளையில் போடப்பட்டார்கள். தீச்சூளையில் நான்கு பேர் உலாவுவதைக் கண்டு தீச்சூளையிலிருந்து தூக்கி விடப்பட்டார்கள். கடவுளைக் குறித்த அறிவு இல்லாத அரசருக்கு கடவுள் தன்னை அறியச் செய்தார். ஆகவே கடவுளைக் குறித்து அறிந்து செயல்படுத்த இறையியல் கல்வி நமக்கு தேவை.

## *2. ஆற்றல்படுத்துகின்றது* :

விப. 3:10 “எனவே இப்போதே போ......”

இறைவனைக் குறித்து அறிந்து கொள்வதும், புரிந்து கொள்வதும் துவண்டு போனவர்களை ஆற்றல் படுத்துகின்றது. இறைவன் மோசேக்கு முட்செடி வழியாக காட்சி கொடுத்தார். இந்த முட்செடி எரிந்து கொண்டிருந்தது. ஆனால் அது வெந்து போகாததைக் கண்டு இது அற்புதக் காட்சி என்று எண்ணி அருகே வந்த மோசேயை ஆண்டவர் அழைத்து இஸ்ரயேலரை எகிப்தின் அடிமை வாழ்விலிருந்து விடுவிக்கும் பணிக்கு “இப்போதே போ” என்று சொல்லி ஆற்றல் படுத்துகிறார்.

இத்தகு அழைப்பைப் பெற்ற மோசே எகிப்தின் அரண்மனையில் வளர்ந்தவர். கொலைக்காரன் என்ற பெயரைப் பெற்றவர். எகிப்திய அரண்மனையில் இனி தனக்கு வாழ முடியாது என்பதை உணர்ந்த மோசே, ஒளித்து வாழ முற்படுகின்றார். இந்த நேரத்தில் கடவுள் மோசேயை அழைத்து எங்கு வாழ முடியாது என்று ஓடினாரோ அந்த பகுதியிலே சென்று விடுதலை பணியைச் செய்ய ஆற்றல்படுத்துகிறார். ஆக இறையியல் கல்வி சோர்ந்து துவண்டு போனவர்களை அற்றல்படுத்துகிறது.

லூக். 8:27-39-ல் இயேசுகிறிஸ்து கலிலேயாவுக்கு எதிரே இருக்கும் கதரேனருடைய பகுதியில் கரை இறங்கியதும் அந்நகரைச் சேர்ந்த ஒருவர் அவர் அருகே வந்தார். அவர் பேய் பிடித்திருந்தவர். நெடுநாளாய் ஆடை அணிவதில்லை. வீட்டில் தங்காமல் கல்லறைகளில் தங்கி வந்தார். இவர் விலங்குகளால் கட்டப்பட்டிருந்தும் அதை உடைத்தெறிந்து விடுவார். இத்தகு நிலையில் அனைவராலும் ஒதுக்கப்பட்ட, ஏளனப்படுத்தப்பட்ட நிலையில் இருந்த அந்த மனிதனைக் குணப்படுத்தினார் இயேசுகிறிஸ்து. சுகம் பெற்ற மனிதர் இயேசு கிறிஸ்துவிடம் தம்மை உடன் அழைத்துச் செல்லும் படி கேட்கின்றார் (லூக். 8:38). ஆனால் இயேசுகிறிஸ்து "உம்முடைய வீட்டிற்குத் திரும்பிப்போம்; கடவுள் உமக்குச் செய்ததையெல்லாம் எடுத்துக் கூறும்" என்றுச் சொல்லி அவரை அனுப்பி விட்டார் (லூக். 8:39). அதாவது யார் வெறுத்தார்களோ, ஏளனப்படுத்தினார்களோ, அந்த மக்கள் மத்தியிலே சென்று சாட்சியாக வாழ ஆற்றல்படுத்தி அனுப்புகிறார். ஆக, இறைவனைப் பற்றிய அறிந்து கொள்ளுதலும் புரிந்து கொள்ளுதலும் துவண்டு போனவர்களை ஆற்றல்படுத்துகிறது. எனவே இறையியல் கல்வி நமக்கு தேவை.

### *3. அர்ப்பணிக்கத் தூண்டுகிறது* :

வி.ப. 3:10 "....என் மக்களை எகிப்திலிருந்து நடத்திச் செல்வதற்காக நான் உன்னைப் பார்வோனிடம் அனுப்புகிறேன்."

இறைவனைப் பற்றிய புரிந்து கொள்ளுதல் அர்ப்பணிக்கத் தூண்டுகிறது. இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து கூக்குரலிட்டதை கடவுள் கேட்டு அவர்களை விடுவிக்க களம் இறங்கினார். அதற்காக மோசேயை அழைக்கிறார். மோசே பல நிலைகளில் மறுத்தார். ஆனால் கடவுள் அவரை ஆற்றல்படுத்தி அர்ப்பணிக்கத் தூண்டினார். அதாவது மோசே இறைவனுக்காகத் தன்னைத் துன்புறுத்தல்களை ஏற்க அர்ப்பணித்தார்.

தூய பவுலார் திமொத்தேயுவிற்கு எழுதின இரண்டாம் கடிதத்தில் திமொத்தேயுவிற்கு ஆலோசனை சொல்லும் போது "கிறிஸ்து இயேசுவின் நல்ல படைவீரனைப் போன்று துன்பங்களில் பங்கு கொள்" (2தீமொ. 2:3) என்று கூறுகிறார்.

இயேசு கிறிஸ்து தன்னை காணவிரும்பிய கிரேக்க மக்களுக்கு பதிலளிக்கும் போது "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்" (யோவா. 12:24) என்று குறிப்பிடுகின்றார். அதாவது கோதுமை மணியைப் போல துன்பத்தை அனுபவித்தால் தான் வாழ்வில் பலன் உண்டு என்று விளக்குகிறார். எனவே துன்பத்தை ஏற்க அர்ப்பணிக்க வேண்டும் என்ற அழைப்பு கொடுக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்து தன்னைப் பற்றி கூறும் போது தான் துன்புற வந்ததாக குறிப்பிடுகின்றார் (மாற். 10:45). எனவே இறைவனைப் பற்றிய புரிந்து கொள்ளுதல் நம்மை அர்ப்பணிக்கத் தூண்டுகிறது. இதற்கு இறையியல் கல்வி அவசியம்.

அன்பர்களே! இறையியல் கல்வி நம்பிக்கையை அறிந்து செயல்படத் தூண்டுகின்றது. அப்படியானால் இந்த இறையியல் கல்வி அறியச் செய்கிறது, ஆற்றல்படுத்துகிறது, அர்ப்பணிக்கத் தூண்டுகிறது என்பதை உணர்ந்து இறையியல் கல்வியால் இறைவனைக் குறித்து அறிந்து உணர்ந்து தெளிவு நம்பிக்கையில் பெற்று இறை ஆசிப் பெறுவோம்.

அருள்திரு. R. **டேவிட் ஜெப சிங்**

15-07-2018

# இறைமக்கள் : உப்பும் ஒளியும்

## PEOPLE OF GOD : SALT AND LIGHT

எசா. 49:1-7 எபே. 5:1-5
திபா. 27 மத். 5:13-16

***"நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாயிருக்கிறீர்கள்."*** மத். 5:13

மறுப்பும் எதிர்ப்பும் அனைத்து அமைப்பிலும் இடம்பிடிப்பது இயல்பானது இயேசு விண்ணகமேறிய பிற்பாடு, யூதர்கள் உரோம ஆளுகைக்கு எதிராக ஏற்படுத்திய கிளர்ச்சி வலுப்பெற்றது. இதன் விளைவாக எருசலேம் நகர் உரோமப் பேரரசுப் படைகளிடம் சிக்கியது. கொடுங்கோல் மன்னன் நீரோ தொடங்கிய அகோர அடாவடித்தனத்தில் இயேசுவை பின்பற்றிய பற்றாளர்கள் அகப்பட்டனர். அவமானங்களும் அவதூறுகளும் பலகோணங்களில் இவர்களுக்கு தரப்பட்டன. "இயேசுவே ஆண்டவர், சீசர் அல்லர்" என்னும் கிறிஸ்தவர்களின் அறிக்கை தேசதுரோகமானது என ஆட்சியாளர்களால் குற்றஞ்சாட்டப்பட்டனர். அந்நிய நாட்டு அடிமைகளை காட்டுவிலங்குகளுடன் போரிடச் செய்ததால், அவர்கள் பீறிக் கொல்லப்படும் காட்சியை கேளிக்கையாக கண்டுகளிக்க விரும்பாதவர்களை சமூகவிரோதிகள் எனக் கருதப்பட்டனர். சில நேரங்களில் கிறிஸ்தவ பற்றாளர்களை காட்டுவிலங்குகளுக்கு இரையாக்கியும் எரிதழலில் வீழ்த்தியும் வேடிக்கைப் பார்த்தனர். இத்துன்புறுத்தல்களின்போது மலைப் பொழிவின் நம்பிக்கை மொழிகளை மத்தேயு நற்செய்தியாளர் இவர்களுக்கு நினைப்பூட்டி, துன்பங்களை அவர்கள் இயல்பாக ஏற்க தூண்டுகிறார். நெருக்கடிகளும் நிம்மதியின்மையும் இறைமக்களாம் (People of god) நம்மை பின்தொடரும்போது உப்பும் ஒளியுமாக திகழவேண்டுமென்று நற்செய்தியாளர் நமக்கு அறைகூவல் விடுக்கிறார். இவண் தரப்பட்ட நற்செய்திப் பாடத்தில் அடிப்படையில் இறைமக்களாகிய நாம் எவ்வண்ணம் உப்பும் ஒளியுமாக செயல்படவேண்டும் என்பதை இரண்டு குறிப்பின்படி சிந்திப்போம்.

**1. சாரமுள்ள வாழ்வில் இறைமக்கள்** : (மத். 5 : 13)

"நீங்கள் உலகிற்கு உப்பாயிருக்கிறீர்கள்" உப்பு ஒரு வெண்மையான பொருள் (A white substance). உப்பு தன்னிலே பயனற்றது. அது இன்னொரு பொருளோடு சேரும்போது பயன்படும் மதிப்பை பெறுகின்றது. உப்பு சுவை தருகிறது. (யோபு 6:6) உணவைக் கெடாமல் பாதுகாக்க உதவுகிறது (வேலி. 21:6-8; 17:22; 2அரச. 2:19-22). பழங்கால பலிமுறைகளில் பலி பெருட்கள் உப்பிட்டதாக (லேவி. 2:13; எசே. 4:26) அறியமுடிகிறது. இது உடன்படிக்கையின் அடையாளம் (எண். 18:19; 2நாளா. 13:5) என கருதப்பட்டது. இப்படி பல நிலைகளில் உப்பு பயன்படுவதால் இது சாரமுள்ள உப்பு (லூக். 14:34,35) என இயேசு கூறுகிறார். தொடக்காலத்திருச்சபைப் பற்றாளர்கள் (விசுவாசிகள்) துன்புறுத்தலின் போது சாவுக்கு தயங்கியவர்கள் சாரமற்ற உப்பைப் போன்றவர்கள் எனவும் எந்தத் தயக்கமுமின்றி இரத்த சாட்சியாக இறந்தவர்களை சாரமுள்ள உப்பைப் போன்றவர்கள் என்றும் உவமையாக கூறுவதை புரிந்து கொள்ளலாம். சிறிதளவு உப்பு பெரிதளவு பொருளை சுவையூட்டச் செய்வதுபோல, தனிப்பட்ட வாழ்வில் ஆன்மீகத் தேடலில் சோதனையும், வேதனையும் வாட்டி வதைக்கும் தருணத்தில் நமது வாழ்வு, செயல், பேச்சு இனிதாயும் சாரமுள்ளதாயும் வெளிப்படுமாயின் (எபே. 5:1-5; கொலோ. 4:6) அனைத்தும் இடம் தெரியாமல் அகன்றுவிடும்.

நீதியினிமித்தம்வரும் துன்புறுத்தலை ஏற்கத்துணியும்போது கடவுள் உடனிருந்து விடுவிக்கிறார். பொற்சிலை வழிபாட்டிற்கு உட்படுத்தியதற்கு தயக்கமின்றி மறுத்த சாத்ராக், மேசாக், ஆபேத் நேகோ ஆகியோருக்கு தண்டனையாகத் தரப்பட்ட தீச்சூளையிலிருந்து விடுவித்தார் (தானி. 3:1-30). நற்செய்திப்பணியாற்றிய பவுலாருக்கு சிறைத்தண்டனை தரப்பட்ட நேரத்தில் துணிவுடன் ஏற்றுக்கொண்டார். கடவுளின் ஆற்றலால் சிறையின் கதவுகள் திறந்தன. கட்டுகள் கழன்றன. விடுதலைபெற்ற விதம் கண்ட சிறைச்சாலைக்காரன் மாற்றம்பெற்றான் (தி.ப. 16:23-31). இந்தியாவின் முதல் சீர்திருத்த சபை (First Protestand Missionary) மறைப்பரப்பு பணியாளரான சீகன்பால் ஐயர் 8 மாதப் பயணத்தில் 1706 ஜூலை மாதம் 9-ம் தேதி தரங்கம்பாடி வந்த போது டேனிஸ்பட்டு ஆளுநர் அவரை கரையில் இறங்க அனுமதிக்கவில்லை. அலைமோதும் கடலில் அனல் கக்கும் வெயிலை பொருட்படுத்தாது நின்றார். தன்னை, தன் சுகத்தை தியாகம் செய்து, எதிர்ப்பை ஏற்க துணிந்தால் 1707 மே 12-ல் ஐந்து தமிழர்களுக்கு திருமுழுக்குக் கொடுத்தார். தமிழ் தரணியில் சீர்திருத்த கிறிஸ்தவம் தவழ்ந்தது. கிறிஸ்துவின் அடியார்களாய் வாழ

அழைக்கப்படும் நாம் இயேசுவுக்காகவும் நீதிக்காகவும் துன்பத்தை பொருட்படுத்தாமல், அதனூடே சாரமுள்ள உப்பாய் திகழ்வோம்.

**2. சான்றுள்ள வாழ்வில் இறைமக்கள் :** (மத். 5 : 14)

"நீங்கள் உலகிற்கு ஒளியாயிருக்கிறீர்கள்." ஒளியிழந்த விழியும், விழியிழந்தப் பார்வையும் வழிக்கு உதவாது என்பர். ஒளி வழிகாட்டவும் ஒரு பொருள் இருக்கிறது எனச் சரியாக அறியவும் (Makes something clear) பயன்படுகிறது. அறிவியலின் தகவல்படி ஒவ்வொரு பொருளும் ஒளியை உமிழ்வதால் தான் உலகிலுள்ளவைகளை ஒவ்வொரு உயிரியும் ஒன்றுக்கொன்று பார்க்க முடிகிறது. ஒளி பிறபொருளைப்பார்க்க சான்றாகிறது. (Witness means a person who sees something happens and is able to describe). இருளின் பிடியில் இருக்கும்பொருள் ஒளிர்ந்தாலும் அறிய முடியாது. எப்போது இருளின் சக்தியை அழிக்கிறோமோ அங்கே ஒளி பிறக்கிறது. இருளுக்குள் ஒளி இரண்டற கலந்திருந்த போது இருளையையும் ஒளியையும் வெவ்வேறாகப் பிரித்தது தான் கடவுளின் அரிதான செயல் (தொ. நூ. 1:3). ஏனெனில் இறைவன் அணுக முடியாத ஒளியில் உறைபவர். அவர் ஒளியின் தந்தை அவர் ஒளியாகவே இருக்கிறார் அவரில் இருள் என்பதே இல்லை (1தீமோ. 6:16; 1யோவா. 1:5). ஒளி இறைவனின் உடை (தி.பா. 104:2), அவரது மகிமை (2தீமோ. 4:6). அவரே மானிடர்க்கு ஒளியாகவும் மீட்பராகவும் உள்ளார் (தி.பா. 27:1) கடவுள் தமது ஒளியை கிறிஸ்துவின் முகத்தில் வீசி (மத். 2:2; மத். 17:2-5), அவர் வழியாக தம்மை உலகிற்கு ஒளியாக வெளிப்படுத்தினார். கடவுளிடம் பெற்ற ஒளியால் கிறிஸ்து ஒளியிழந்த விழிகளைக் குணப்படுத்தினார். இவ்வுலகில் இருக்கும் வரை நானே உலகின் ஒளி என சான்றானார் (யோவா. 9:5). இருளின் நடக்கும் மக்கள் பேரொளியினைக் காண்பர் (எசா. 9:1) என்ற இறைவாக்கினர் முன் வாக்குப்படி அனைத்தும் நடந்தது.

கிறிஸ்துவின் ஒளியில் நடக்க அழைக்கப்படும் இயேசுவுக்காகவும், நீதிக்காகவும் வாழ சான்றாகும்போது மறைந்திருக்க முடியாது. அவர்கள் விளக்குத் தண்டின்மேல் ஏற்றி வைக்கப்பட்ட விளக்கை போன்றவர்கள், மட்டுமல்ல அவர்கள் மலைமேல் இருக்கும் பட்டணம் போன்றவர்கள் என உவமிக்கிறார் நமது ஆண்டவர் (மத். 5:14,15). விளக்குத் தண்டில் பொருத்தப்பட்ட விளக்கும் மலைமேல் இருக்கும் பட்டணமும் மறைந்திருக்க வாய்ப்பில்லை. அதுபோல் நீதிக்கான துன்பமும் தோல்வியும் வரும்போது கிறிஸ்துவின் சீடர்களாக வாழ அழைக்கப்பட்டவர்கள்

ஒதுங்கிய நிலையில் வாழ முடியாது. அவரவர் இருக்கும் இடத்தில் நிலவும் தீமைகள் என்றும் இருளை அகற்றும் ஒளி தீபங்களாக திகழ வேண்டுமென்று கிறிஸ்து வழியாக நற்செய்தியாளர் அறைகூவல் விடுக்கிறார். ஏனெனில் இருள்ளடைந்த உலகிற்கு ஒளியென சான்றாகவே இயேசுவின் பற்றாளர்களின் இயல்புத் தன்மையாகும்.

ஒரு மாணவன் தான் வரைந்த ஓவியத்தில் சமூகம் இருளாகிவிட்டது எனக்காட்டுவதற்கு முற்றிலுமாக இருளையே காட்டியிருந்தார். இன்னொரு மாணவனும் அப்படியே தன் ஓவியத்தில் இருளைக்காண்பித்து அரண்நடுவில் ஒரு சிறு விளக்கையும் அது காட்டும் விளக்கையும் அதன் வெளிச்சத்தையும் காண்பித்திருந்தான். நாம் வாழும் சமூகம் இருளாக இருந்தாலும் அதில் நாம் ஒரு சிறு விளக்காய் எரிந்து சிறு வெளிச்சத்தைக் காட்ட முயல்வோம். நம் வாழ்வு மற்றும் நடத்தை வழி ஒளியாயிருப்போம் (எபே. 5:8). துன்மார்க்க இருள் சூழ்ந்த நாட்களில் நோவா ஒரு விளக்காய் எரிந்தார். எகிப்தின் பாவ நாட்களில் யோசேப்பு ஒரு விளக்காய் எரிந்தான். மாறுபாடான மக்கள் நடுவில் யோவான் எரிந்து ஒளியை உமிழ்ந்தான். இவர்கள் வாழ்ந்தக் காலத்தின் வெளிச்சத்தின் சான்றுகள். ஆண்டவராகிய இயேசுவின் ஒளியில் நாமும் இரண்டற கலந்து இருளின் மக்களுக்கு வெளிச்சத்தின் சான்றாவோம்.

கிறிஸ்து தம் சீடர்கள் உப்பும் ஒளியுமாக இருக்க வேண்டும் என்றார். இவை இரண்டும் ஒன்றையொன்று தொடர்புடையவை. உப்பும் ஒளியும் சிறிதளவே போதுமானவை! அவைகள் இருக்குமிடத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். நாமும் வாழும் சமுதாயத்தில் சாரமுள்ள உப்பாய் கரைந்து சாட்சியுள்ள ஒளியாய் கலந்து மணம் கமழும் விழுமியங்களாவோம்.

அருள்திரு. அறிவர். S. **வில்சன்**

22-07-2018

# கிறிஸ்துவின் காயங்களால் அடையாளமிடப் பெற்ற அருட்பொழிவுத் திருப்பணி

## ORDAINED MINISTRY : MARKED BY THE WOUNDS OF CHRIST

1 சாமு. 22:12-23 கலா. 6:11-18
தி.பா. 56 யோவா. 21:15-19

**"...என் உடலில் உள்ள தழும்புகள் நான் இயேசுவுக்கு அடிமை என்பதற்கு அடையாளம்."** கலா. 6:17

அருட்பொழிவு (Ordination) என்பது இறைப்பணிக்காக பிரித்தெடுத்து அதற்காக திருநிலைப்படுத்துதலாகும். இந்த திருநிலைப்படுத்துதலில் கிறிஸ்துவின் பாடுகள், காயங்கள், சிலுவைப் பாதை, சிலுவை சார்ந்த அனுபவங்களை வாழ்வின் அனுபவமாக்குதல் உள்ளடங்கியிருக்கிறது. கிறிஸ்துவின் காயங்களின் வெளிப்பாடும், காயங்களின் அடையாளமும் அருட்பொழிவு திருப்பணியின் மேன்மை. திருத்தூதர் பவுல் தனது திருமுகங்களில் இச்செய்தினை மிகவும் தெளிவாக எடுத்துரைக்கிறார். கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்து பேதுரு குறிப்பிடும்போது "அவர் வையப்படும் போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்கு தம்மை ஒப்புவித்தார்" எனக் கூறுகிறார் (1பேது. 2:23). கிறிஸ்துவின் பாடுகள் அநியாயமானது (1 பேது. 2:10), கிறிஸ்துவின் பாடுகள் அச்சுறுத்துதல் நிறைந்தது (1பேதுரு 2:25). கிறிஸ்துவின் பாடுகள் திருப்பணிக்கு அடிச்சுவடாய் திகழ்கிறது (1பேது. 2:21). இத்தகைய பாடுகளின் பிரதிபலிப்பே அருட்பொழிவு திருப்பணி. அருட்பொழிவு வழிபாட்டில் திருவிருந்து பரிமாறுதல் இந்த பாடுகளையும், காயங்களின் அடையாளத்தினையும் வெளிப்படுத்துகின்றது. இந்நிலையில் கிறிஸ்துவின் காயங்களினால் அடையாளமிடப்பெற்ற அருட்பொழிவு திருப்பணி உயர்த்தும் மூன்று உண்மைகளை இன்றைய திருமறைப்பகுதி சார்ந்து சிந்திப்பது சிறந்தது.

### *1. சிலுவையின் மேன்மையைப் பிரதிபலிக்கும் அருட்பொழிவுத் திருப்பணி* : (கலா. 6 : 14)

தனது திருப்பணியின் மேன்மையினைக் குறித்து பவுல் குறிப்பிடும் போது சிலுவையினை மையமாகக் கொள்கிறார். கிரேக்கர்களும்

ரோமர்களும் சரீரத்தில் செய்யப்படும் விருத்தசேதனம் சிலுவை மரணத்திற்கு எந்நிலையிலும் ஈடாகாது. சிலுவை மரணம் மிகவும் கேவலமான, வேதனையான மரணம் என நம்பினர். கேவலமான வேதனையான சிலுவை மரணத்தை விட விருத்தசேதனம் மேன்மையானது என நம்பின உரோம சூழலில் பவுல் "நானோ நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் சிலுவையை அன்றி வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்ட மாட்டேன்...." நான் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன் என்கிறார். (கலா. 6:14,15) பவுல் தனது திருப்பணிக்கு அடித்தளமாக சிலுவை தான் எனக்கு மேன்மை என்பது அருட்பொழிவு திருப்பணியின் அடித்தளமாகும்.

சிலுவையின்றி சிங்காரமில்லை, சிங்காசனமில்லை, சீர்மிகு வாழ்வில்லை என்பதை கமாலியேலின் பாதத்தருகே அமர்ந்து கல்வி கற்று, திருச்சட்டத்தின் படி வாழ்ந்து சிறப்பு பெற்ற பவுல் கூறுவது அருட்பொழிவு திருப்பணியின் தகவாகும். விருத்தசேதனத்தை மேன்மையாக கருதுகிறவர்கள் திருச்சட்டத்தை கடைபிடிப்பதில்லை (கலா. 6:13). ஆனால் சிலுவையை மேன்மையாக கருதி திருப்பணியாற்றின பவுல், "எனக்கு ஆதாயமான அனைத்தும் கிறிஸ்துவின் பொருட்டு இழப்பு எனக் கருதினேன் (பிலி. 3:7), அவர்பொருட்டு நான் அனைத்தையும் இழந்து விட்டேன். கிறிஸ்துவை ஆதாயமாக்கி கொள்ள எல்லாவற்றையும் குப்பையாக கருதுகிறேன், கிறிஸ்துவையும் அவர்தம் உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறியவும் அவருடைய துன்பங்களில் பங்கேற்று, சாவில் அவரை ஒத்திருக்கவும் விரும்புகிறேன்" என்கிறார் (பிலி. 3:8-10). ஆகவே பவுல் சிலுவையின் மேன்மையினை பிரதிபலிக்கும் திருப்பணியாளராக தன்னை அடையாளப்படுத்துகிறார்.

இன்றைய திருப்பணியாளர்கள், திருப்பணி முறைகள் கிறிஸ்துவின் காயங்களை அடையாளப்படுத்தி சிலுவையின் மேன்மையினை உலகிற்கு பிரதிபலித்திட வேண்டும்.

### *2. சிலுவைப் பாடுகளை அச்சடையாளமாக்கும் அருட்பொழிவுத் திருப்பணி* : (கலா. 6 : 17)

"...என் உடலில் உள்ள தழும்புகள் நான் இயேசுவுக்கு அடிமை என்பதற்கு அடையாளம்."

பவுலின் காலத்தில் எகிப்திலும் சிரியாவிலும் அடிமைகள், குற்றவாளிகள், போர் கைதிகள் தங்களது வழிபாடு மரபு சார்ந்து உடலில் அடையாளங்களை வைத்திருந்தனர் (Tattoo) கிரேக்கர்களும் ரோமர்களும்

அடையாளங்களோடிருந்தவர்களை அயல்நாட்டான் எனக் கருதினர். ஆனால் பவுல் தனது திருப்பணியினைக் குறித்து குறிப்பிடுகையில் எனது உடலில் உள்ள தழும்புகளாகிய அடையாளங்கள் நான் கிறிஸ்துவோடு சிலுவையில்அறையப்பட்டிருக்கிறேன் என்பதற்கு அடையாளம். நான் கிறிஸ்துவின் அச்சடையாளங்களை என் உடலில் தரித்திருக்கிறேன் என்கிறார். கிறிஸ்துவின் காயங்களினால் அடையாளமிடப்பெற்ற அருட்பொழிவு திருப்பணியின் சாரம் இந்நிலையில் அமைந்திட வேண்டும்.

சிலுவையின் பாடுகள் வேதனை நிறைந்தது, தனிமைப்படுத்தப்பட்டது, அநியாயமானது, அச்சுறுத்தல் நிறைந்தது. ஆனால் அது உண்மையான கிறிஸ்தவ வாழ்வின் அடையாளம். பவுலின் திருப்பணி வாழ்வினைக் குறித்து படிக்கும் போது நெருக்கடிகள், இன்னல்கள், சிறையிலடைக்கப்படுதல், நாடுகடத்தப்படுதல், அடிக்கப்படுதல், வெறுக்கப்படுதல் போன்றவையாயிருந்தது. ஆனால் அவர் எந்நிலையிலும் சோர்ந்து போகாமல் தனது சிலுவையினை தானே சுமந்து திருப்பணியினை நிறைவேற்றினார். இனி வாழ்வது நானல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார் என்பது தனது சுயத்தை இழந்து கிறிஸ்துவை வாழ்வில் அனுபவமாக்கி கிறிஸ்துவின் பாடுகளில் பங்குபெற்று, கிறிஸ்துவின் காயங்களை தனது காயங்களாக்கின. அதாவது திருப்பணிக்காக காயப்பட்டு காயம் ஆறி சரீரத்திலுள்ள தழும்புகள் தற்போது அவர் கிறிஸ்துவின் அடிமை என்பதை உணர்த்துகிறது.

இன்றையத் திருப்பணி சூழலில், அருட்பொழிவு திருப்பணி அகந்தையின் பணியாக அமையாமல் அன்பின் பணிவிடையாய் மாறவேண்டும். அச்சுறுத்தும் பணியாக அமையாமல் அடிமையின் பணிவிடையாய் அமைதல் வேண்டும். இப்பணிவிடைக்கு நம்முன் கிறிஸ்து மாதிரியாக நிற்கிறார். கிறிஸ்துவின் பாடுகளை வாழ்வில் அச்சடையாளமாக்கி திருப்பணியினை தொடர வேண்டும்.

### *3. சிலுவைப் பாதையில் கிறிஸ்துவைப் பின்தொடரும் அருட்பொழிவுத் திருப்பணி* : (யோவா. 21 : 19)

“பேதுரு எவ்வாறு இறந்து...என்னைப் பின்தொடர் என்றார்.”

உயிர்த்தெழுந்த இயேசு விரக்தியிலே மீன்பிடித்துக் கொண்டிருந்த சீடர்களை சந்தித்து, வெறுமையோடிருந்தவர்களுக்கு, மிகுதியான மீன்களை கொடுத்து, உணவருந்த வாருங்கள் என அழைத்து உணவு கொடுத்தார் (யோவா. 21:1-14). இவர்களில் இயேசுவால் பாறை என அழைக்கப்பட்டு திருச்சபைக்கு அடித்தளமாக அருட்பொழிவு

செய்யப்பட்டவர் பேதுரு. ஆண்டவரே, உம்மோடு சிறையிடப்படுவதற்கும் ஏன், சாவதற்கும் நான் ஆயத்தமாக உள்ளேன் என்றவர் பேதுரு (லூக். 22:33). ஆனால் இயேசுவின் மரணத்திற்கு பின்னர் நான் மீன்பிடிக்க போகிறேன் எனக் கூறி மற்ற சீடர்களையும் மீன்பிடிக்க அழைத்து சென்றவர் இந்த பேதுரு (யோவா. 21:3). உயிர்த்தெழுந்த ஆண்டவர் பேதுருவின் அழைப்பினை இங்கே நினைவுபடுத்தி மூன்றுமுறை அவரிடம் நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா? எனக் கேட்டார். பேதுருவிடமிருந்து உறுதியான பதில் கிடைத்த பின்னர் அவனை தொடர் திருப்பணிக்காக அருட்பொழிவு செய்கிறார் (யோவா. 21:18,19).

இயேசு பேதுருவிடம் படவின் பாதையில் அல்ல, சிலுவைப்பாதையில் என்னை பின் தொடர வேண்டும் என்றார். படவின் பாதையில் மிகுதியான மீன்கள் கிடைக்கும் அது அதிக வருமானம் தரும். உனது விருப்பம் போல் வருமானத்திற்காக மனிதன் இருக்கும் இடத்திற்கு படவினை செலுத்தலாம். உனக்கு விருப்பமான இடத்தில் நடமாடலாம். ஆனால் சிலுவையின் பாதையில் என்னை தொடர்ந்தால் உனக்கு விருப்பமில்லாத வாழ்வு, விருப்பம் இல்லா இடம், விரும்பாத முடிவு. ஆனால் இறைவனது பெயர் உன்மூலம் மாட்சிமையடையும் என்றார் (யேவா. 21:19). இறைப்பெயரின் மாட்சிக்காக என்னைப் பின்தொடர வேண்டும், என் பாதை சிலுவைப்பாதை, பாடுகளின் பாதை, வேதனையின் பாதை, இடுக்கமான பாதை, எவரும் விரும்பாத பாதை என்ற இயேசுவின் அழைப்பிற்கு பேதுரு தன்னை ஒப்படைத்தார். சிலுவைப் பாதையில் கிறிஸ்துவை பின் தொடர்ந்த, தன்னை தலைகீழாக சிலுவையில் அறையும்படிக் கேட்டு, கி.பி. 68 ஆண்டில் இரத்த சாட்சியாக மரித்தார்.

கிறிஸ்துவின் காயங்களினால் அடையாளமிடப்பட்ட அருட்பொழிவு திருப்பணி கிறிஸ்துவின் சிலுவை பாதையில் அவரைப் பின்தொடரும் பணி, சிலுவைப் பாதையில் கிறிஸ்தவை பின்தொடரும் பணி சிலுவையோடு முடிவுறுவதில்லை, பாடுகளை வென்று பரமனோடு வாழும் வாழ்வில் திருநிலைப்படுத்துகிறது. ஆகவே அருட்பொழிவு திருப்பணியின் மேன்மையினை உணர்ந்து உண்மையாய், உத்தரவாதம் உடையோராய், ஒப்படைப்போடு இறைப்பணியாற்றி இறைப்பெயரை மாட்சிப்படுத்துவோம்.

அருள்திரு. A. **மகேர் ஷால் அஸ்பாஸ்**

29-07-2018

# திருமணத்தை மதியுங்கள்
# HONOUR MARRIAGE

மலா. 2:13-16 | 1கொரி. 13:1-14:1
திபா. 45 | மாற். 10:2-9

**"இருவரும் ஒரே உடலாய் இருப்பர்; இனி அவர்கள் இருவர் அல்ல; ஒரே உடல்."** மாற். 10:8

கடவுளின் படைப்பில் உன்னதமானது மனித இனம். மனிதனுக்கு இணையாகத் துணையைக் கொடுத்து, மனிதனின் தனிமை என்ற வெற்றிடத்தை மாற்றி முழுமை காண்கிறார் படைப்பாளராகிய இறைவன். குடும்பம் என்ற உன்னத அமைப்பை மையமாக வைத்துதான் இந்த உலகம் இயங்குகிறது. குடும்பத்தில் கிடைக்கும் தரமான அன்பும், உயர்ந்த பாசமும் எவ்விடத்திலும் கிடைப்பதில்லை. உலகத்தின் வருங்காலம் இவ்வமைப்பிலிருந்து வடிவமைக்கப்படுகிறது. இந்த அமைப்பை மிக அழகாக வடிவமைப்பது கணவன் மனைவியிடம் தான் இருக்கிறது. இதனை அற்பமாய் எண்ணாமல், தவறான சிந்தனையுடன் செய்யாமல் கருத்தோடும் இறைவேண்டலோடும் செய்ய வேண்டும் எனத் திருமண நாளில் உறுதிப்படுத்துகிறோம். எனவே திருமணம் மரியாதைக்கும், மதிப்புக்கும் உரியதாகும்.

## *1. திருமணம் : கடவுள் உருவாக்கிய (நிறுவனம்) அமைப்பு*

கடவுள் மனித இனத்தைப் படைக்காவிட்டால், படைப்புகள் அத்தனையும் அர்த்தமுள்ளதாகாது. ஆணின் உயர்வு பெண் உருவாக்கப்பட்ட போது தான் முழுமை அடைகிறது. திருமணம் ஒரு மனிதனுக்குக் கடமை, பொறுப்பு, அன்பு, பாசம் என்பவற்றைக் கற்றுத்தருகிறது. இவர்களால் மட்டுமே நல்ல சமுதாயத்தையும் உருவாக்க முடியும். ஒருவருக்கொருவர் ஏற்றதுணை இவர்களே. மனைவி கணவனுக்கு அடங்கியிருக்க வேண்டும் என்று எண்ணுவது அன்பிற்கு இலக்கணமாகாது. "கல்லானாலும் கணவர், புல்லானாலும் புருஷன்" என்ற எண்ணம் இன்று மாறி வருகின்றது. இது காலம் கொண்டுவந்த மாற்றம். இன்று கல்லானால் 'சாலைக்கு', (Road) புல்லானால் 'மாட்டிற்கு', மனிதனானால் 'எனக்கு' என்ற கோட்பாடு வளர்ந்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. கணவன் மனைவி ஒருவருக்கொருவர் "Soul mate"

(ஆன்ம நண்பர்) எனலாம். பகிர்வது, உணர்வுகளை மதிப்பது, எப்போதும் ஒன்றாய் இருந்து அன்பை வெளிப்படுத்துவது இந்த அமைப்பில் அடங்கியிருக்கிறது. பெண்கள் தங்களைச் சுயமாகக் காப்பாற்றிக் கொள்ளும் நிலையில் அடிமைகளாக இருப்பதை விரும்பவில்லை. எனவே சமம் இருந்தால் சுபம் தானாக வரும். ஏவாளைப் படைத்து ஆதாமிடத்தில் கொடுத்தவுடன் இதுவரை பெண்ணை காணாத மனிதன் சொன்ன வார்த்தை சிறப்புக்குரியது. ஆதாம் இயல்பாக, தானாக "இதோ! என் எலும்பின் எலும்பும், சதையின் சதையும் ஆனவர்" என்ற வெளிப்பாடு உறவின் நெருக்கத்தையும், எந்தச் சமயத்திலும், தத்துவத்திலும் காணமுடியாத அருமையான கூற்று. இருவர் அல்ல ஒருவர், ஒரே உடல் என்ற உயர்ந்த கோட்பாட்டை உலகிற்குத் தருகிறது. எத்தனை உறவுகளும், சொந்தங்களும் இருந்தாலும், ஓர் ஆணிற்கு மனைவியும், ஒரு மனைவிக்கு கணவனும் போல எந்த ஒரு நெருங்கிய சொந்தமும் இருக்க முடியாது. மற்ற சொந்தங்கள் விழுதும், மனைவி வாழ வைக்கும் வேருமாகும் என்ற உயர்ந்த தத்துவத்தைப் புரிந்தால் Home is the little heaven upon earth என்பது உண்மையாகும். இங்கு கிடைக்கிற அன்பு Empathetical அன்பு ஆகும். இது வேறு எங்கும் கிடைக்க முடியாது. எனவே இது ஆண்டவரின் அருள் கொடையாகும்.

## 2. திருமணம் : மனக்கோட்டையின் மாளிகை

திருமணம் உறவோடும், உரிமையோடும் வாழும் அமைப்பு. ஆதாம் கடவுளைப் பார்த்து "என்னுடன் இருக்கும்படி நீர் தந்த..." என்கிறார் (தொ.நூ. 3:12). இது நெருக்கமான அன்பின் அளக்கமுடியாத அளவுகோலாகும். அவன் அவளின், அவள் அவனின் உடம்பிற்குச் சொந்தமானவர் (1கொரி. 7:4). இதை வேறு எங்கும் பார்க்க முடியாது. உடலையும், அளக்கமுடியாத உள்ளத்தையும் அறிய முடிகிறது. சிக்மன்ட்ஃப்ராய்டு என்ற உலக உளவியல் நிபுணர், உள்ளத்தை உள்ளத்தில் ஏழில் ஒரு பகுதிதான் (1/7) அறிய முடியும். ஆனால், கணவன் மனைவி ஒருவரை ஒருவர் உள்ளார சார்ந்து வாழும்போது உள்ளத்தை 100/100 அறியலாம். They are neither dependent, nor independent but, interdependent என்ற தெளிவு வேண்டும். நான் இவரை/இவளை நம்பியா, இவர்/ இவள் இல்லாமல் முடியாதா என்ற ஆணவம் வந்தால் குடும்பம் குப்பைதான். இது ஒரு பிரச்சினை உள்ள அமைப்புதான். பிரச்சனைகளோடு இயங்கிக் கொண்டிருக்கிற ஓர் இலட்சியப் பயணம் குடும்ப வாழ்வு. குடும்பத்தில் பிரச்சனை இல்லாவிட்டால் அதுதான் ஒரு பிரச்சனை. பிரச்சனையின் காரணத்தைக் கண்டுவிட்டால் பிரச்சனையிலும்

இனிமையாக வாழலாம். இங்கு வேறுபட்ட அனுபவங்கள் அழகுக்கு நேராக வழி நடத்துகிறது. The happiest couples never have the same character but they have the best understanding of their differences. கணவன் அல்லது மனைவி, தங்கள் துணையிடம் சில வழிமுறைகளைச் செப்பனிட முடியாது என்று புரிந்தால், அவைகளோடு இசைந்து (உடைத்தல்ல) இயங்குவதுதான் வாழ்க்கை. கணவன்/மனைவி ஒருவருக்கொருவர் நேசிக்கத் தெரியாதவரின் வாழ்க்கை நலம் பெறாது.

தவறைக் கண்டால் கோபம் கொள்ளாது, பொறுமையுடன் சுட்டிக் காட்டலாம். கோபம் ஒரு தற்காலிகப் பைத்தியக்காரத்தனம் என ஓர் அறிஞர் கூறுகிறார். மன்னிப்பின் மாண்பை இந்த அமைப்புதான் கற்றுக் கொடுக்க வேண்டும். தவறு எல்லாருக்கும் வரும். ஆனால் மன்னிப்பு எல்லாருக்கும் வராது. தவறு அனைவருக்கும் வரும் என்று உணருகிறவன் மன்னிப்பான். மன்னிப்பின் மனம் பெற்றவரே ஆற்றல் பெற்றவர். மன்னிப்பு கோழையின் செயலல்ல.

ஒருவரையொருவர் அடக்கி ஆள வேண்டும் என்று நினைத்தால் அங்கே மிருகம் வெற்றி பெற்றது எனப் பொருள். எங்கே கணவன்/மனைவி ஒருவரையொருவர் தோற்றுப்போகத் தயாராக இருக்கும் குடும்பமே வெற்றி பெற்ற குடும்பம். இக்குடும்பத்தை மனமாளிகையாகக் காணலாம்.

### 3. திருமணம் : நல்ல வழித்தோன்றல்களை உருவாக்கும் நிறுவனம்

நாம் வாழ்வது நமக்காக மட்டுமன்று; வருங்கால நல்ல வழித்தோன்றல்களை உருவாக்குவதாகும். வருங்கால வழித்தோன்றலுக்கு நமது திருமணவாழ்வு நல்ல தடமாக வேண்டும் (மல். 2:15). தூய்மையான வழித்தோன்றலை உருவாக்கவே இந்தத் திருமணம். The good character will go generation to generation. நமது பிள்ளைகளுக்கு ஆகாரம், கல்வி, பொருளாதாரம் முதலிய வளர்ச்சியில் கவனம் செலுத்துவதைவிட நல்ல வாழ்க்கைத் தத்துவத்தையும், நெறியான வாழ்வையும், வாழ்க்கைத் தகவுகளையும் (values) கற்றுக்கொடுப்பதே பெற்றோரின் கடமை. தாய் தந்தையரின் இயல்பான குணங்கள் பிள்ளைகளின் வருங்கால வாழ்க்கை முறையை அமைக்கிறது. மாவீரன் நெப்போலியனிடம், ஒரு குழந்தை எப்போது கற்க ஆரம்பிக்கிறது எனக் கேட்டபோது, குழந்தை பிறப்பதற்கு 20 ஆண்டுகளுக்கு முன் எனப் பதிலுரைத்தாராம். ஆம் பிள்ளையின் தாய் குழந்தையாக இருக்கும்போது, பண்பு, பாசம், பெற்றோருக்கு, ஆசிரியருக்கு கீழ்ப்படிந்து நற்காரியங்களால், நல்ல இயல்பான குணங்கள்,

தனது இரத்தத்தோடு கலக்கிறது. வருங்காலம் திருமண உறவில் பிள்ளைபிறக்கும்போது, தாயைப்போல், நல்ல வழித்தோன்றல்கள் உருவாகும். ‘விதை ஒன்று போட சுரை ஒன்று முளைக்காது’, ‘அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறக்கும்’ இது முதுமொழி. இதைத்தான் மல்கியா இறைவாக்கினர் 2:15-இல் கூறுகிறார்.

வாழ்வு நம்மோடு முடியும் நிகழ்வல்ல; வருங்காலத்திற்கு நாம் ஒரு பாடநூல்

வரப்பு உயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும்

நெல் உயர குடி உயரும், குடி உயர கோன் உயரும்

இந்த கருத்தியல்களே கண்ணியமான குடும்ப உறவின் பாலங்களாகின்றன. திருமணம் எனும் நறுமணம் என்றென்றும் மணம் பரப்பிட வேண்டும்.

கணவன் மனைவி கடவுளின் அருள்கொடை. எவரிடமும் கூற முடியாத நிகழ்வுகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் நிறுவனம். இத்தகைய கருத்துப் பகிர்வால் சுமை குறைகிறது. இரத்த அழுத்தம் சமமாகிறது. கணவன் மனைவி ஒருவகையில் நோய் தீர்க்கும் மருந்து.

தாய்போனால் - பாசமும் உணவும் கிடைக்காது

தந்தை போனால் அரவணைப்பும், பொருளும் கிடைக்காது

குழந்தை போனால் வாரிசு கிடைக்காது

ஆனால் துணை போனால் அனைத்தும் போகும்.

எனவே, கடவுள் ஏற்படுத்திய திருமணத்தை மதிப்போம். மனநிறைவுடன் வாழ்ந்து புதிய சமூகத்தைக் கட்டிக் காப்போம். சமூகத்திற்கு நல்ல வழித்தோன்றல்களைக் கொடுப்போம்.

அருள்திரு. V. **டேவிட்**

05-08-2018

அருட்பணி ஞாயிறு

# அருட்பணி : கடவுளின் வேதனையைப் பகிர்தல்

## MISSION : SHARING GOD'S PAIN

எசா. 6:1-8 திப. 9:10-18
தி.பா. 40:1-13 லூக். 10:1-11

**"...யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?...."**
**எசா. 6:8**

உசியா அரசர் இஸ்ரவேலில் கி.மு. 792-740 வரை சுமார் 52 ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவர் அரியணை ஏறும்போது வயது 16. இவர் தந்தை அமட்சியாவைப் போல் கடவுளின் பார்வையில் மிக நேர்மையாக நடந்தும் கொண்டார். இவர் கடவுளைத் தேடினார்; கடவுளும் வெற்றிகள் பல கொடுத்தார். மலை பகுதிகளிலும், வயல் நிலங்களிலும் திராட்சைப் பயிரிட்டு வளர்த்தார். ஆற்றல் மிகு போர்ப்படையை உருவாக்கினார். இப்படி எல்லா நிலையிலும் வலிமைமிக்கவனானான். எகிப்தின் எல்லைவரை இவரது புகழ் பரவியது. இவர் எந்தளவிற்கு புகழ் சேர்த்தாரோ அந்தளவிற்கு ஆணவம் கொண்டார். மனமேட்டிமைக் கொண்டார். கடவுளுக்கு கீழ்படியாமல், கடவுளின் திட்டத்தை மாற்ற முயலுகின்றார் (2குறிப். 26:16). ஆரோனையும் அவன் குமாரரின் வழிமரபினர் மட்டுமே ஆசாரியப் பணிவிடை செய்ய நியமிக்கப்பட வேண்டும். ஆசாரிய பணியை இன்னொருவர் செய்ய கூடாது (எண். 3:10). இந்நிலையில் எருசலேம் ஆலயத்திற்குள் சென்று தூபம் காட்ட முயன்றார். உசியா மன்னரைப் பார்த்து ஆசாரியர்கள் சொல்கிறார்கள், மன்னரே! தூபம் காட்டுதல் உமது பணியல்ல, பரிசுத்தமாக்கப்பட்ட ஆரோனின் வழிமரபினராக ஆசாரியர்களின் பணி. இந்த தூய இடத்தை விட்டு வெளியேறுங்கள் என வேண்டுகிறார்கள். ஆனால் உசியா மன்னர் ஆணவத்தால் தூபம் காட்ட முற்படுகிறார். அதே நேரத்தில் அவன் நெற்றியில் குஷ்டரோகம் தோன்றியது. உசியா ஆலயத்திலிருந்து புறம்பார்ப்பட்டு ஒரு தனித்த வீட்டில் வாழ்ந்தார். தன் சாவு மட்டும் குஷ்டரோகியாய் இருந்தார் (1குறி. 26:18-21).

இப்படி கி.மு. 8ஆம் நூற்றாண்டில் நாட்டில் அரசர் இல்லாத சூழல், ஆலயத்தின் தூய்மை தன்மையை குறித்து கேள்வி எழுந்த நேரம்,

இறைமக்களை நல்வழிபடுத்தவும், பக்தி வழிகாட்டவும், இறையாலயத்தின் தூய தன்மையை நிலைநிறுத்தவும், யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார் என்ற அருட்பணியை குறித்த வேதனை வெளிப்படுத்தப்படுகிறது. இந்நிலையில் எசாயா இறைவாக்கினர் அருட்பணிக்காக இதோ அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்பும் என்றார் (எசா. 6:8).

## *1. இறைவனைத் தேடுதல் - இறையனுபவத்தை உணர்த்துகிறது :*

எசாயா எருசலேம் தேவாலயத்தில் நுழையும் போது ஆண்டவர் உயரமும், உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருப்பதை காண்கிறார். ஏசா. 6:2 ......ஒவ்வொரு சேராபின்கள் (Angelic beings) சேனைகளின் கடவுள் தூயவர், தூயவர், தூயவர் பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என புகழ்ந்துக் கொண்டேயிருந்தனர். தேவாலயம் வெண் புகையினால் நிறைந்திருந்தது.

விப. 19:18 ஆண்டவர் சீனாய் மலையில் மோசேக்கு காட்சி தர இறங்கி வந்த போதும், அந்த இடம் வெண்புகையால் நிறைந்திருந்தது. வெண்புகை - இறைபிரசன்னத்தின் வெளிபாடு. வெண் புகையின் நடுவில் பரிசுத்தராகிய கடவுளைக் கண்டேன் என குறிப்பிடுகிறார். ஆலயத்தினுள் சென்ற ஏசாயா ஒரு இறையனுபவத்தை பெறுகிறான். இறையவனை காண்பது அரிது என்ற காலகட்டத்தில், ஆலயத்திலே கண்ட இறைகாட்சி, இறைதரிசனம், இறையனுபவம், தன்னிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது. 'சேனைகளின் கடவுளை என் கண்கள் கண்டதே' என குறிப்பிடுகிறார்.

இறைவனை தேடுவதற்காக ஆலயத்தினுள் சென்றவர் ஓர் இறையனுபவம் பெறுகிறார். அந்த இறையனுபவத்தில் தன்னை மாற்றிக் கொள்ள விளைகிறார். இறை திட்டத்திற்கு தன்னை ஒப்படைக்க விரும்புகிறார். அருட்பணிச் செய்ய இறையனுபவம் தேவை. இறையனுபவமின்றி இறைபணி தொடர இயலாது. இறையனுபவம் புது தரிசனத்திற்கும், புது அர்பணத்திற்கும், அருட்பணியின் செயலாக்ககத்தில் நம்மை அழைத்துச் செல்கிறது.

## *2. இறையனுபவம் - இறையழைத்தலுக்குத் தூண்டுகிறது:*

எசாயா ஆலயத்திற்குள் பெற்ற இறையனுபவம், இறைபணிக்கான இறையழைத்தலாக மாறுகிறது. எசா. 6:8 யாரை நான் அனுப்புவேன்? என்ற ஏக்கம், அருட்பணியை குறித்த இறைவனின் ஏக்கம் இங்கே

வெளிபடுத்தப்படுகிறது. உசியா மன்னரின் சாவால் நிலைகுலைந்து போன மன்னனளை சீர்படுத்தவும், இறைபக்திக்கு நேராக வழிநடத்தவும் ஏசாயா ஒரு தீர்க்கராக அழைக்க பெறுகிறார். கடவுளின் அழைப்பு மனிதர்களாகிய நமக்கு பல நிலைகளில் வருகிறது. இறையழைப்பு இறைபணியின் முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது. இறைபணியின் தேவையும், இறைவனின் உன்னதமான எதிர்பார்வையும் நம்மிலே வெளிபடுத்தப்படுகிறது. இங்கே எசாயா தீர்க்கருக்குக் கிடைத்த இறையழைப்பு - அருட்பணியை குறித்து அல்லது இறைதிட்டத்தை நிறைவேற்ற இறைவனின் வேதனையை பகிர பல நிலைகளில் நம்மை அழைக்கிறார் என்பதை புரிந்துக்கொள்ள முடிகிறது.

## *3. இறையழைத்தல்-இறைத்திட்டம் நிறைவேற உதவுகிறது:*

எசாயா 6:8 - இறைக்காட்சியில் தன்னிலை அறிந்த எசாயா, இறைத்திட்டத்தை குறித்த தாகம் தனக்குள் ஏற்படுகிறது. இறைத் தரிசனத்தில் தன்னை இணைத்தும் கொள்கிறார். என் காரியமாய் யார் போவார் என்ற கேள்விக்கு இதோ அடியேன் இருக்கிறேன். என்னை அனுப்பும் என்கிறார். கடவுளின் காரியமாய் போவதற்கும், இறைத்திட்டம் தன்மூலம் நிறைவேறுவதற்கும் தன்னை முழுமையாக அர்ப்பணம் செய்கிறார். தன்னை ‘அடியேன்’ எனக் குறிப்பிடுவதன் மூலம் - இறைத்திட்டம் நிறைவேற தன்னைத் தாழ்த்துகிறார். 1சாமு. 3:10 குழந்தையான சாமுவேல் கூட ஆண்டவரே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று தன்னை தாழ்த்தி - இறைவார்த்தைக்கும், இறைதிட்டத்திற்கும் ஒப்படைக்கிறார்.

‘அடியேன்’ என தாழ்த்திய எசாயா 8ஆம் நூற்றாண்டில் மாபெரும் தீர்க்கராகவும், சமுக மாற்றத்தைஏற்படுத்துவோராகவும், திகழ்ந்தார். இறைதிட்டம் என்பது நமது அறிவிற்கும், விருப்பத்திற்கும் அப்பாற்பட்டது. எசாயா தீர்க்கரை போல அருட்பணியை குறித்த இறைவனின் வேதனையை புரிந்து இப்பாரினில் பகிர்ந்து வாழ நாம் அழைக்கப்படுகிறோம். இன்றும் நம்மூலமாய் இறைத்திட்டம் நிறைவேற நம்மை முழுமையாக ஒப்படைத்து வாழ்வோம்.

(கீர். 378) ஒன்றுமில்லை நான் ஐயா
உம்மாலன்றி ஒன்று செய்யேன்
அன்று சீஷர்க்களித்த ஆவியால்
இன்றே அடியேனை நிரப்பும்....

அருள்திரு. R. **பாபின் போஸ்**

12-08-2018

# திருமுழுக்கு : கிறிஸ்துவுடன் இறத்தலும் எழுதலும்

## BAPTISM : DYING AND RISING UP WITH CHRIST

தொ.நூ. 7:11-24 | உரோ. 6:1-14
தி.பா. 29 | யோவா. 12:20-26

**"அவ்வாறே, நீங்களும் பாவ வாழ்க்கையை பொறுத்தமட்டில் இறந்தவர்கள்; கிறிஸ்து இயேசுவோடு இணைந்து கடவுளுக்காக வாழ்கிறவர்கள் என்பதை எண்ணிக் கொள்ளுங்கள்." உரோ. 6:11**

'Baptism' (திருமுழுக்கு) என்பது 'Bapto' என்கிற கிரேக்க வேர்ச் சொல்லிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. இதற்கு முழுகுதல், கழுவுதல், சுத்தம் செய்தல் போன்ற பல பொருள்கள் உள்ளன. கிறிஸ்தவ திருமுழுக்கின் தொடக்கம் உலக மீட்பர் இயேசு தான் விண்ணுக்கு எடுத்துக் கொள்ளப்படும் முன் சீடர்களிடம் "தந்தை, மைந்தர், தூய ஆவியார் திருப்பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்" என கட்டளையிட்டார் (மத். 28:18,19). எனவே இத்திருத்த திருச்சபை திருமுழுக்கை முதல் சாக்கிரமந்தாக பின்பற்றி வருகிறது. ஆகவே கிறிஸ்தவ நம்பிக்கை வாழ்வு திருமுழுக்கிலிருந்து தொடங்குகிறது. (Baptism makes the entry into church and enables the growth of one's christian life in faith). இதன் உண்மையை St. Augstine "Baptism is an outward and visible sign of an inward and spiritual grace" எனக் கூறுகிறார். பழைய ஏற்பாட்டின் காலத்தில் பின்பற்றபட்ட பிறஇனத்தவர். திருமுழுக்கு, யூத திருமுழுக்கு, யோவானின் திருமுழுக்கு போன்றவைகளிலிருந்து வேறுபட்ட திருமுழுக்கே கிறிஸ்தவ திருமுழுக்கு ஆகும். இதை தூய பவுலார் கிறிஸ்துவுக்குள் திருமுழுக்கு பெற்ற அனைவரும் அவரோடு இணைகிறார்கள் (கலா. 3:27) என தெளிவாக கூறுகிறார் (Union with Christ). ஆகவே கிறிஸ்தவ திருமுழுக்கு கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் இறப்பில் நம்மை இணைத்து கொள்வது. மேலும் கிறிஸ்துவின் சபையோடும், விசுவாச வீட்டார் அனைவரோடும் இணைந்து புது மானுடத்திற்கு நேராக புதிய பயணம் செய்வது ஆகும் (கலா. 3:27,28). இதன் உண்மைகளை விளக்கமாகச் சிந்திப்போம்.

## *1. திருமுழுக்கு : கிறிஸ்துவின் இறப்பு மற்றும் உயிர்த்தெழுதலில் பங்கேற்பது*

(Baptism : Participation in Christ Death and Resurrection) :

இயேசுகிறிஸ்து யோர்தானில் திருமுழுக்கு பெற்று (மத். 3:15). இறைநீதியை வெளிபடுத்த பாடுபடும் பணியாளராக தன்னை அறிமுகம் செய்கிறார் (மாற். 10:38-40,45). ஆகவே கிறிஸ்தவர்கள் அவரோடு இறந்து திருமுழுக்கில் புது வாழ்வு வாழவேண்டும். பழைய மனித இயல்பை களைந்து, பாவத்திற்கு விலகி புதிய வாழ்வு (New life) வாழ கிறிஸ்துவின் உயிர்தெழுதலோடு இணைந்திருக்க வேண்டும் (ரோம. 6:3-11;கொலே. 2:3; எபே. 2:5,6).

தூய பவுலார் கொரிந்து திருச்சபைக்கு கடிதம் எழுதும்போது "சிலுவையில் அறையப்படல்" (Crucified) கிறிஸ்துவோடு திருமுழுக்கு (Baptized) இணைந்து கூறுகிறார். ஆகவே திருமுழுக்கு பெற்றவர்கள் அவரோடு திருச்சபையில் ஒன்றிப்பதும், கிறிஸ்துவின் சரீரத்தில் உண்மையாய் அஸ்கம் வகிப்பதும் ஆகும் (1கொரி. 12:13).

திருமுழுக்கில் இணைந்த அனைவரும் கிறிஸ்துவின் உடலாகிய சபையை கட்டுவதும், கிறிஸ்துவின் பணிக்கு தங்களை ஒப்படைப்பதும் (Jesus Mission) கிறிஸ்துவோடு விசுவாச வாழ்வை காத்துக்கொள்வதும் மிகவும் இன்றியமையாதது.

ஒரே முறை கிறிஸ்துவோடு இறப்பதும், அதை ஒரே திருமுழுக்கில் அறிக்கை செய்வதும் (எபே. 4:4) தூய வாரங்களை பெற்றுக்கொள்வதும் தினந்தோறும் பற்றுறுதியாளர்கள் அதை விசுவாச வாழ்வுக்குள்ளாக அனுபவிப்பது இதன் முக்கிய கூறுபாடு ஆகும்.

## *2. திருமுழுக்கு : மனமாற்றம் பெறுவது, மன்னிப்பது, தூய்மையாக்குதல்*

(Baptism : Conversion, Pardoning and Cleansing) :

திருமுழுக்கு என்பது பாவங்களை அறிக்கை செய்து மனமாற்றத்தைப் பெற்றுக்கொள்வது இது பெயர் மாற்றம் செய்வது அல்ல. இது கிறிஸ்தவ ஒழுக்கவியலோடு தொடர்புடையது. இருதயத்தின் பாவங்களை புறந்தள்ளி தூய்மையாக்குவது (எபி. 10:22). கிறிஸ்தவர்கள் நல்மனசாட்சியோடு வாழ்ந்து நாம் திருமுழுக்கின் வழியாக செய்துகொண்ட உடன்படிக்கையை காப்பாற்றுவது (1பேது. 3:21). பாவ அழுக்கான வாழ்வுகளிலிருந்து தூய்மைக்கு நேராக அழைத்து செல்வது (1கொரி. 6:11).

ஆகவே திருமுழுக்கு மனுக்குலத்தை தூய்மையாக்கி தூய ஆவியாரின் துணையோடு புதிய வாழ்விற்கு நேராக அழைத்து செல்கிறது. மேலும் ஆவியாரின் வரத்தை நம்பிக்கையோடு பெற்றுக்கொள்வது (திப. 2:38).

இந்த திருமுழுக்கு என்னும் அடையாளம் வழியாக அப்போதலர்கள் தனிமனித அடையாளத்தை கிறிஸ்துவோடு இணைந்து ‘மனந்திரும்புதல்’ என்னும் பொருளை உணர்த்தினார். (change of attitude and perspective) வாழ்வில் மொத்தமான எண்ணங்களும் செயல்களும் கிறிஸ்துவுக்கு நேராக மாற்றம் அடைய வேண்டும் என வலியுறுத்தினார். தீய வழிகளை விட்டு தூய்மை பெறவும், அதன்படி வாழவும், வாழ்ந்து காட்டவும் (Baptised life) தெளிவாக போதித்தனர்.

ஆகவே திருமுழுக்கில் நாம் பங்குபெற்றது அல்ல முக்கியம். அதனை வாழ்வில் கடைபிடித்து திருமுழுக்கு கூறும் உண்மை வழி வாழ்நாள் முழுவதும் நடப்பதே முக்கியம். ஆகவே திருமுழுக்கு புதிய வாழ்வுக்கு அடியெடுத்து வைக்கும் அழைப்பு. இது பற்றுறுதியாளர்களுக்கு அருளப்படும் அருள்கொடை (Gift).

### *3. திருமுழுக்கு : கிறிஸ்துவின் உடலோடு இணைவது*

(Baptism : Incorporation into the body of Christ)

கிறிஸ்தவர்கள் அனைவரும் திருமுழுக்கில் கிறிஸ்துவில் ஒன்றாக இணைகிறோம். தூய பவுலார் கலாத்திய திருச்சபைக்கு கடிதம் எழுதும்போதும் கிரேக்கரென்றும் இல்லை, யூதரென்றும் இல்லை என குறிப்பிடுகிறார் (கலாத். 3:27,28). எத்தனை முறைகளை பின்பற்றினாலும் திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவின் உடலோடு, அதாவது, திருச்சபையோடு இணைகிறோம். கிறிஸ்துவின் உடலின் உறுப்புகள் ஆகிறோம். மேலும் தூய பவுல் இதை விருத்தசேதனம் இஸ்ரவேல் சமூகத்தில் சேர்த்தது போல திருமுழுக்கு திருச்சபையில் சேர்வதற்கான அடையாளமாகும் (கொலோ. 2:11,12) எனக் குறிப்பிடுகிறார்.

திருமுழுக்கில் நாம் கிறிஸ்துவோடு இணைந்து, இனி நானல்ல கிறிஸ்து என்னில் வாழ்கிறார் என்கிற உண்மையை உணர்ந்து ‘நான் அவரோடும் அவர் என்னோடும் வாழ்கிறார்’ என்கிற உண்மையை உறுதி செய்வது ஆகும்.

நாம் உடலில் பெற்று கொண்ட திருமுழுக்கு கடவுளின் ஆலயமாகவும் (1கொரி. 6:11) ஆண்டவரின் மக்களாகும் பாக்கியத்தையும் (கலாத். 4:5) நமக்கு வழங்குகிறது.

ஆகவே நம்முடைய உயிருக்கு மேலாக கிறிஸ்துவின் பணியையும் (யோவ. 12:25,26) புதிய வாழ்வின் மகிழ்ச்சியை மக்கள் புரிந்து கொள்ளவும், விசுவாசத்தையும், நம்பிக்கையும், அன்பையும் அனைவரும் அனுபவிக்கவும் பூமியின் வாழ்வு அனைவருக்கும் சமாதானத்தை ஏற்படுத்தவும், கடவுள் நம்மை அழைத்து ஆற்றல்படுத்துகின்றார்.

எனவே, கிறிஸ்தவர்களான நாம் பெற்ற திருமுழுக்கின் உண்மையைப் புரிந்துகொண்டு, பாவ வாழ்வுக்கென இறந்து, நீதியான புது வாழ்வுக்கென உயிர்த்தெழும் அனுபவத்தை நமதாக்க வேண்டும். கிறிஸ்துவோடு இணைந்து, கிறிஸ்துவின் இயல்போடு வாழ வேண்டும்.

அருள்திரு. R. **ராஜபக்தசிங்**

15-08-2018 **இந்திய விடுதலைப் பெருநாள்**

# சமூக இசைவு
# COMMUNAL HARMONY

தொநூ. 11:1-9 2 திமொ. 2:14-26
திபா. 66 மத். 5:38-48

**"இதோ மக்கள் ஒன்றாக இருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் ஒரேமொழி பேசுகின்றனர்."** தொநூ. 11:6

விடுதலை என்பது வாழ்வின் சிறப்புமிகு அங்கீகாரம் "விடுதலை எனது பிறப்புரிமை" என பாலகங்காதர திலகர் முழக்கமிட்டார். இந்த உரிமையை அடைந்துவிட்ட நாம் இந்தியா ஒரு அடிமைப்படாத, அயலாட்சிக்கு உட்படாத, தன்னுரிமையுடைய நாடாக நம் கரங்களில் கிடைக்க பெரும் பங்களிப்பைத் தந்த தலைவர்களை நன்றியோடு நினைவுகூர்வோம். நாம் நமக்குள் சில கேள்விகளை கேட்க வேண்டும். நம் நாட்டின் விடுதலைக்கு போராடிய தலைவர்கள் சிந்தித்த விடுதலையைத் தான் உணர்ந்து மகிழ்கிறோமா? அதிகமாகிக் கொண்டிருக்கும் வறுமை, சாதியச் சண்டைகள், சமய அடிப்படைவாதங்கள், சமூக அசைவற்ற நிலைகளில் நம்மை எப்படி விடுதலையானவர்கள் என அழைக்க முடியும்? சமூகப் பிரிவினைகளை உருவாக்கி, இழுவை நிலைகளைக் கொண்டுவரும் தீமைகளை அகற்றி, உண்மையாக விடுதலையான ஒரு இந்தியாவைக் காட்சி கண்டு, அதை அடைய அனைத்து நிலைகளிலும் பாடுபட வேண்டும். நம் நாட்டில் சமூக இசைவு உருவாக்க உழைக்க வேண்டும்.

திருமறையும் இசைவுள்ள ஒரு சமூகத்தை படம்பிடித்துக் காட்டுகிறது. திருமறையில், படைப்பின் கதை, விடுதலைப் பயணம், சட்டங்கள் மற்றும் இறையரசு, புதிய வானம், புதிய பூமி, இறைமக்கள், மலைப்பொழிவு போன்ற கருத்தியல்களும் அமைதியும் இசைவுமுள்ள சமுதாயத்தைத் தெளிவுபடக் காட்டுகிறது. ஸ்ரீ நாராயணகுரு, "தந்தையாம் கடவுளின் கீழ் அனைவரின் சகோதரத்துவம்" என்ற கருத்தைக் குறித்துப் பேசினார்; மகாத்மா காந்தியடிகள், "விடுதலையின் சமூகம்" என்பதை வெளிப்படையாக ஆதரித்து வாதாடினார்; மார்ட்டின் லுத்தர் கிங் ஜூனியர், "அனைவருக்கும் சம உரிமை தரும் ஒரு சமுதாய(ம்)"த்தைக் கனவு கண்டார். இசைவுள்ள ஒரு சமூகத்திற்காக உழைப்பதே நம் கடமை

என்பதை நாம் உணரவேண்டும். இன்றைய திருமறைப்பகுதிகள் வழியாக ஒரு நாட்டின் சமூக இசைவுக்கு தேவையானவற்றைச் சிந்திப்போம்.

### *1. ஒற்றைநிலை தவிர்த்து பன்மை நிலையில் ஒற்றுமை காத்தல்* : (தொநூ. 11 : 1-9)

இங்கு ஒருமை என்பது ஒரே இனம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் என்ற நிலையில் தனிமை விரும்பிகளாக இருப்பதைக் குறிக்கிறது. சிநேயார் நாட்டில் குடியிருந்த மக்கள் ஒரே இனத்தவராய், ஒரே மொழி பேசுபவராய் வாழ்ந்தனர். தாங்கள் சிதறுண்டு போகக்கூடாது, அதே இடத்தில் வாழவேண்டும், என்ற எண்ணத்தோடு, தங்களுக்கு பெயர் உண்டாக்கி, தங்கள் பெயரை நிலைநாட்ட விரும்பி வானளாவிய கோபுரம் கொண்ட பட்டணத்தைக் கட்டத் தொடங்கினர். அவர்கள் செய்வது எதையும் எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று எண்ணினர். வேறு எவரைக் குறித்த கரிசனையின்றி தன்னலத்தோடு வாழ்ந்த அவர்கள் நிலையைக் கடவுள் கண்டு அவர்கள் மொழியைக் குழப்பி சிதறுண்டு போகச் செய்தார். "நான்", "நாங்கள் மட்டும்" என்ற ஒருமை எண்ணம் தன்னலம் (சுயநலம்) என்ற எண்ணத்தை உருவாக்கியது. தன்னலப் போக்கு கடவுளின் விருப்பத்துக்கும், ஒரு சமுதாயத்தின் இசைந்த வாழ்வுக்கும் எதிரானது. கடவுள் பல்வகைமையை (diversity) விரும்புகிறார். கடவுள் உலகத்தைப் படைத்தபோது பல்வகை உயிரினங்களைப் படைத்தார்; அதை "நல்லது" எனக் கண்டார் (தொநூ. 1:25). அனைத்தும், அனைவரும் ஒன்றையொன்று, ஒருவரையொருவர் சார்ந்து வாழவும் கடவுள் எதிர்பார்க்கிறார் (தொநூ. 1:29,30). "பல்வகைமையில் ஒற்றுமை" (unity in diversity) என்பது நம் நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்தும் கொள்கை. கடவுளும் அதைத் தான் விரும்புகிறார். பல மொழி பேசும் அருட்கொடையை தூய ஆவியார் நிறைவால் பெற்றுக்கொண்ட தொடக்க கால பற்றாளர்கள் ஒற்றுமையாயிருந்தார்கள் (திப. 2:4). யூதர், கிரேக்கர், அடிமைகள், உரிமைக்குடிமக்கள், ஆண், பெண் என்ற பல்வகை நிலை இருந்தாலும், கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள அனைவரும் ஒன்று என்பதுதான் இசந்த வாழ்வுக்கு தூய பவுல் கற்றுத்தரும் பாடம் (கலா. 3:28). பல இனம், மொழி, கலாச்சாரம், நிறம், நம்பிக்கை என பலவகையினராய் நாம் நம் நாட்டில் வாழும்போது அதில் ஒற்றுமையுடனும், இசைவுடனும் வாழ கடவுள் எதிர்பார்க்கிறார். எனவே, ஒருமை நிலையைத் தவிர்த்து பல்வகைமையில் ஒற்றுமையுடன் வாழ்வோம்.

## 2. பகைமையைத் தவிர்த்து அமைதி உருவாக்குதல் :

(2திமொ. 2:14-26)

சண்டை என்பது அமைதிக் குலைச்சலுக்கும், பிரிவினைக்கும் காரணியாகிறது. அமைதி நிறைந்த வாழ்வு இசைந்த வாழ்வின் வெளிப்பாடு. வார்த்தைகளால் உருவாகும் சண்டை பிரிவினைகளைக் கொண்டு வருகிறது. சண்டைகள் பயனற்றது. வார்த்தைகளைப் பற்றி வீணாய் சண்டையிடுவது கேட்போரின் அழிவுக்கு ஏதுவாகும். எனவே, இறைப்பற்றை விலக்கி, உண்மையை விட்டு விலக்கி நம்பிக்கையை சீர்குலைத்து நம்மை அழிக்கும் உலகப் போக்கிலான வீண் பேச்சுகளுக்கு விலகியிருக்க வேண்டும். சண்டைகளை உருவாக்கும் மடத்தனமான அறிவற்ற விவாதங்களை விட்டுவிட வேண்டும். மாற்றுக் கருத்துடையோர் முன்னிலையிலும் பணிவோடு நடந்து, சண்டையிடாதவர்களாயிருக்க வேண்டும். நம்மைத் தூய்மையாக வைத்துக்கொண்டு, எந்த நற்செயலையும் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும். தம்மிடத்தில் நம்மை கலனாக (பாத்திரமாக) வைத்திருக்கும் தலைவருக்கும் (எஜமான்), பிறருக்கும் பயன்படும் மதிப்புமிக்க கலனாயிருக்க வேண்டும். மேலும் தூய்மையான உள்ளத்தோடு கடவுளின் பெயரை அறிக்கையிட்டு, தொழுவதுண்டு, இறைவன் விரும்பும் நீதி, நம்பிக்கை, அன்பு மற்றும் அமைதி ஆகிய இவற்றை நாடித்தேட வேண்டும். அமைதி இறையாளுகையின் அடையாளம். அனைவரும் அனைத்து படைப்புகளுடன் அமைதியாக வாழ கடவுள் விரும்புகிறார். இந்தியாவின் பல்சமயச் சூழலில் சமய அடிப்படைவாதங்கள் பற்றாளர்களிடையே சண்டைகளை ஏற்படுத்தி, வன்முறை நிறைந்த நிலைக்கு சமுதாயத்தைத் தள்ளுகிறது. எனவே, சண்டைகளை உருவாக்கும் பகைமைகள், வேற்றுமைகளைக் களைந்து, அமைதியை ஏற்படுத்தி கடவுளின் மக்கள் என அழைக்கப்படும் பேற்றைப் பெறுவோம் (மத். 5:9). இது நாம் வாழும் சமூகத்தை இசைந்த வாழ்வுக்கு நேராக நடத்தும்.

## 3. பழிவாங்குதல் தவிர்த்து மிகைப்படியாகச் செயல்படுதல் :

(மத். 5 : 38-48)

பழிவாங்குதல் என்பது பகைமை உணர்வினால் எழுகின்ற செயல் ஆகும். ஒருவர் செய்த தீமைக்கு பதிலாகத் தீமை செய்தல் பழிவாங்குதலை குறிக்கும். இத்திருமறைப் பகுதியில் எவரையும் பழிவாங்க கூடாது என்பது இயேசு கிறிஸ்து கற்றுதரும் பாடமாகும். “கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்” என்பது பழிவாங்கும் செயலுக்கு நடத்தும் பழைய போதனை.

ஆனால், தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம் என்று கற்றுத்தருகிறார். மாறாக, வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுதல், எதிராக பொய் உரைப்பவர்களுக்கு விட்டுக்கொடுத்தல், ஒரு கல் தூரம் வரக்கட்டாயப்படுத்தினால் அதையும் மிஞ்சிச் செய்தல், பகைவரிடம் அன்புகூருதல், துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுதல், எதிராக நிற்பவர்களுக்கு நன்மை செய்தல் பழிவாங்குதலைத் தவிர்க்கும்; மன இசைவுக்கு நேராக நடத்தும் என்பது ஆண்டவரின் போதனை. தீமைக்குத் தீமை செய்யக் கூடாது. ஏனெனில், பழிவாங்குதல் கடவுளுக்குரியது என்பது இறைவாக்கு (இச. 32:35; உரோ. 12:19). எதிரியின் பசிக்கு உண்ணவும், தாகத்துக்கு தண்ணீரும் கொடுத்து, முடிந்தவரை எல்லாரோடும் அமைதியோடு வாழவேண்டும் என தூய பவுல் அறிவுரை கூறுகிறார் (உரோ. 12:18-20). மிகைப்படியாக அல்லது எதிர்பார்ப்புக்கு மிஞ்சி செய்வது (doing extra) பழிவாங்குதலைத் தடுக்கும். இச்செயல் சமூகத்தில் இசைந்த வாழ்வுக்கு வழிவகுக்கும்.

சமூக இசைவு ஒரு சமூகத்தின் மக்கள் வாழ்வின் நலனை உருவாக்கும். ஒரு சமூகத்தில் பிணக்கை ஏற்படுத்துவதும், இசைவை ஏற்படுத்தவதும் அச்சமூகத்தில் வாழும் மக்கள் கரத்தில்தான் உள்ளது. இந்தியச் சமூகத்தில் வாழும் நாம் தன்னலத்தோடு ஒருமையை விரும்பி, வீண் வாக்குவாதங்களால் சண்டைகளை உருவாக்கி, பகைமையுணர்வோடு பழிவாங்கி பிணக்கை உருவாக்காமல், பல்வகைமையில் ஒற்றுமை காத்து, மிகைப்படியாகச் செயல்பட்டு, அமைதியை உருவாக்கி சமூக இசைவை ஏற்படுத்தி வாழ்வோம்.

திரு. V.M. **விஜய் ஜாண்**

19-08-2018

# தூய ஒப்படைப்புப் பலி எனும் திருவருட்சாதனம்
## SACRAMENT OF HOLY QURBANA (HOLY SACRIFICE)

2அர. 4:42-44 1 கொரி. 11:23-30
திபா. 100 யோவா. 6:15-59

**“எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர். நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்” யோவா 6:56**

இறையடியவர்கள் இறைவனோடு இணைந்து வாழ அழைக்கப்பட்ட திருக்கூட்டம். இஸ்ரயேலர் தங்கள் ஆன்மிக வாழ்வில் உறுதியாய் நிலைநிற்கவும் இறைப்பற்றை வலுப்படுத்தவும் பலிகளைச் செலுத்தி கடவுளைப் புகழ்ந்தனர். முக்கியமாக கடவுள் தங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த நிகழ்வை ‘பஸ்கா’ பண்டிகையாகக் கொண்டாடி நினைவு கூர்ந்தனர். பஸ்காப் பண்டிகையில் ‘ஆட்டுக்கடா’ தேர்வு செய்வர். அது குற்றமற்றதும், பழுதற்றதுமாய் இருக்க வேண்டும். ஆட்டுக்குட்டி அடிக்கப்படும். ஆசாரியர் அதன் இரத்தத்தை எடுத்து அதைப் பலிபீடத்தின் அடியில் தெளித்து கொழுப்பை, பீடத்தில் வைத்து பலியிடுவார்கள். பண்டிகை கொண்டாடப்படுவதற்காக யூதர்கள் புறதேசங்களிலிருந்து எருசலேமில் ஒன்றுகூடி ஆன்மிகக் கடமைகளை நிறைவேற்றினர்.

தூய நற்கருணை என அழைக்கப்படும் திருவருட்சாதனம் நம்மை இறையவருடன் ஒப்படைக்கத் தரப்பட்ட ஒரு ஊடகமாகும். பலியாகும். இத்தொழுகையில் கடவுளுடைய தூய பிரசன்னத்தை உணர்வதும், அவர் மனுக்குல மக்களுக்காகப் பட்ட பாடுகளை நினைவு கூர்வதும் இறைவனோடும், இறையடியார்களோடும் இணக்கமாய் வாழத் தகுதிப்படுத்தி கொள்ளவும் தவறக் கூடாது. இயேசுகிறிஸ்து தமது சீடர்களோடு இறுதி இரவு உணவை ஆசரித்தபோது தமது சதையும் இரத்தமும் மக்கள் மீட்புக்காக சிலுவை எனும் பலிபீடத்தில் அடிக்கப்பட்ட ஆடாய் ஒப்புக் கொடுத்தார் (யோவா. 6:56). இயேசுகிறிஸ்து எனது மீட்புக்காய் தம்மைத் தியாகப் பலியாகத் தந்தார் என்று அறிக்கை செய்வோர் அவரோடு இணைந்து நிறைவாழ்வு பெறுவர் என்பதனை உறுதிபடுத்தினார். இயேசுகிறிஸ்து தமது இரத்தத்தால் ஏற்படுத்திய புதிய உடன்படிக்கை எனும் திருவருட்சாதனம் நமக்கு உணர்த்தும் சில இறையுண்மைகளைத் தியானிப்போம்.

## 1. நினைவுகூரக் கூடி வருதலைக் கற்றுத்தரும் பலி :

நற்கருணை தொழுகையில் பங்கேற்க கூடிவரும் இறைமக்களை ஆயத்தப்படுத்த பயன்படுத்தும் வாசகம் 1கொரி. 11:25b நீங்கள் இதிலிருந்து பருகும்போதெல்லாம் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள் என்றார். தூய ஒப்படைப்புத் திருப்பலி எனும் திருவருட்சாதனமாகிய தூய நற்கருணையை ஆசரிக்கும் போது கூடிவருதலும் நினைவு கூருதலும் மிக முக்கியமானவைகள். ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 15-ம் நாள் இந்தியச் சுதந்திரதினத்தில் நாட்டின் உயர் அதிகாரிகள், முப்படைத் தளபதிகள், மக்கள் போன்றோர் கூடி தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தும் சுதந்திரத்தை நினைவுபடுத்தும் செயல் மகத்தானது. வெவ்வேறு நாடுகளில் சிதறிக் கிடந்த யூதர்கள் எருசலேமில் கூடி பஸ்காப் பண்டிகையில் கடவுள் தங்களுக்குத் தந்த விடுதலையை விவரித்துக் கூறி நினைவு கூர்ந்தனர். இயேசுகிறிஸ்து சிலுவையில் நமக்கு ஏற்படுத்திய மீட்பை நினைவுகூரவும் ஒன்றுபட்டு ஆராதிக்கவும் நற்கருணை நம்மை அழைக்கிறது. பல பாவங்களுக்கு அடிமைப்பட்டு ஐக்கியத்தை உதாசீனப்படுத்தி, நற்கருணையில் நம்மை ஒற்றுமைப் படுத்தாமல் இருப்பது ஏற்புடையது அன்று என்பதை நினைவில் கொள்வோம்.

## 2. நிலைவாழ்வுக்குத் துன்பம் ஏற்றலைக் கற்றுத்தரும் பலி :

திப. 2:44-இல் தொடக்ககால திருச்சபை விசுவாசிகள் அனைவரும் ஒன்றாயிருந்தனர். மானிட ஈடேற்றத்திற்கு இயேசு துன்பம் ஏற்றார். மாற். 10:45-இல் இயேசுகிறிஸ்து, மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாக, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார் எனத் தம் பூலோக வாழ்வின் நோக்கத்தைக் குறிப்பிடுகிறார். மானிட ஈடேற்றத்திற்காக ‘பஸ்கா’ செய்ய இயலாததை கிறிஸ்து நிறைவேற்றி பூரண பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டியதாயிற்று. நற்கருணையில் பயன்படுத்தும் அப்பம் கோதுமை மணிகள் மாவாகப் பிசையப்பட்டு அப்பமாக மாற்றம் பெறும். திராட்சைப் பழம் பிழியப்பட்டால் மட்டுமே இரசமாக மாறும். பொன் ஆபரணங்கள் அழகு வடிவம் பெற அக்கினிக்குள் செல்ல வேண்டும். தமது சீடர்களோடு உணவு அருந்திய இறைமகன் இயேசு துன்பம் ஏற்றுப் பலியானார். யோவா. 6:53-ல் மானிட மகனுடையச் சதையை உண்டு இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார் நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழ செய்வேன். துன்புறும் அடியவரான கிறிஸ்து பலியானார்.

ஆதாமின் கீழ்ப்படியாமையால் தோன்றிய பாவம் வேரறுக்கப்பட்டு கிறிஸ்துவின் கீழ்ப்படிதலாகிய பலியால் மனுக்குலம் மீட்கப்பட தம்மை ஒரே பலியாய் ஒப்புக் கொடுத்தார்.

பாவத்தால் பாதாளம் நோக்கி விரையும் மக்களை விடுவிக்க நாமும் துன்பம் ஏற்க வேண்டும். ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றி வரக்கடவன்.

### *3. நிறைவுக்கு பகிர்ந்து வாழ்தலைக் கற்றுத்தரும் பலி :*

இறைமக்கள் பகிர்ந்து வாழும் பண்புடையவர்களாய்த் திகழ வேண்டும். பஸ்கா ஆட்டின் இரத்தம் பலிபீடத்தின் கீழ் தெளிக்கப்பட்டு தலைவன் ஆட்டை எடுத்துக் கொண்டுவந்து பஸ்கா விருந்தைப் பகிர்ந்து சாப்பிட்டு ஆண்டவரைப் புகழ்வார்கள். தமது உடலையும் தமது இரத்தத்தையும் உலக மக்களின் மீட்புக்காகப் பகிர்ந்து கையளித்தார். ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் பகிரப்பட்ட போது 5000க்கும் அதிகமான மக்களின் பசி மாறியது. அன்னை தெரசா அவர்கள் ஏழை மக்கள் மீது கொண்ட கரிசனை அவர்கள் புது வாழ்வு பெற வழிநடத்தியது. தம்மையே பலியாகப் பகிர்ந்த இறைமகனின் தியாக பலி உலக மக்களின் பாவத்தைப் போக்கியது. ஆன்மப் பசி அகற்றியது. ஆன்ம தாகம் தணித்தது. ஒருவன் என்னிடத்தில் விசுவாசமாயிருந்தால் அவனிடத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் புறப்படும். எனக்கு எல்லாம் என சுய நலத்தோடு வாழுகிறோமா?

சிலுவையில் தியாகப் பலியாய் ஒப்புகொடுத்த தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து ஏற்படுத்திய நற்கருணை அவரது தியாகத்தை நினைவு கூரக் கூடி வருதலையும் இறையரசுக்காகத் துன்பம் ஏற்றலையும் இறையரசில் உட்பிரவேசிக்க பகிர்ந்து வாழும் சமூகமாய்த் திகழவும் அழைப்பு விடுக்கிறது. கடமைக்காக நற்கருணை ஆசரிக்கிறவர்களாய் அன்றி தூய நற்கருணைஅனுபவத்தை நம் வாழ்வில் செயல்படுத்துவோம்.

அருள்திரு. J. **ஞானதாஸ்**

26-08-2018

# பன்மைத்துவம் :
# பொதுவான மானிடமும் நம்பிக்கையைப் பகிர்தலும்
# PLURALITY : COMMON HUMANITY AND FAITH SHARING

யோனா 4:1-11 திப. 8:26-40
தி.பா. 82 மத். 22:1-14

**"...வலக்கை எது இடக்கை எது என்று கூடச் சொல்லத்தெரியாத இத்தனை மக்களும் அவர்களோடு எண்ணிறந்த கால்நடைகளும் உள்ள இந்த மாநகருக்கு நான் இரக்கம் காட்டாமல் இருப்பேனோ என்றார்."** யோனா. 4:11

படைப்பில் பன்மைத்துவத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தினார் கடவுள். பன்மைத்துவம் என்ற பரந்த பார்வை காலப்போக்கில் குறுகி சமயம், சமூகம், குடும்பம், தேசம், ஊர் என்ற எல்கைக்குள்ளானது.

யோனாவின் வாழ்வு பன்மைத்துவ நம்பிக்கை பகிர்வுக்கு மிகப்பெரிய சவாலை முன் வைக்கின்றது. இஸ்ரயேலருக்குள் புற இனத்வரைப் பற்றிய வெறுப்பு அதிகமாக இருந்தது. கடவுள் தங்களுக்கு மட்டுமே உரியவர் என்ற சுய மேட்டிமை இஸ்ரயேலரிடம் இருந்தது. ஆனால் ஆண்டவர் அனைத்துலகுக்கும், அனைவருக்கும் உரியவர். கிருபை இரக்கம் ஆசிகள் இஸ்ரயேலருக்கு மட்டும் உரியதல்ல என்ற செய்தியை கடவுள் யோனா வழியாக சொல்லுகின்றார்.

யோனா என்றால் புறா என்பது பொருள் சமாதானத்தின் தூதுவராக யோனாவின் வாழ்வு அமைய வேண்டும் என்பது கடவுளின் விருப்பம் திருந்தினால் திருந்துவேன் என்பது எரே. 18:8-ல் இஸ்ரயேலருக்கு கொடுக்கப்பட் செய்தி. இது இஸ்ரயேலருக்கு மட்டுமல்ல நினிவே போன்ற புற இனத்தவருக்கும் உரியது என்பதையே யோனாவின் வாழ்வில் கடவுள் கொடுத்த செய்தியில் காணமுடிகின்றது.

## *1. பகையோடு விலகுதலல்ல பாசமுடன் பகிர்தல்* :

யோனா 4:3

பகை நீண்டகால, நிரந்தரத் தனிமைப்படுத்துதலை தருகின்றது பாசம் பிரிக்க முடியாத உறவை தருகின்றது. யோனா இஸ்ரவேலர் புற இனத்தவருடன் பகையோடு வாழ்ந்தது போன்று தானும் வாழ விரும்பினார்.

யோனா மூன்று நாள் பயண தூரமுடைய நினிவேயில் ஒரு நாள் பயணம் சென்றார். ஒருநாள் பயணத்திலேயே நினிவே ஆண்டவர் கூறியது போன்றே (1:2) அக்கிரமம் நிறைந்திருப்பதை அழிவிக்குரியது என்பதை கண்டிருப்பார். ஆண்டவர் கூறியது உண்மை என்பதை அறிய ஒருநாள் பயணமே போதுமானதாக இருந்தது. நினிவேக்கு சொன்ன செய்தி ஒருவசனத்திலேயே அமைகின்றது (3:4). யோனா கொடுத்த செய்தி 40 நாள் உண்டு நினிவே கவிழ்க்கப்படும். இந்த செய்தி அப்படியே நிறைவேற வேண்டும் என்று நினைத்தார் யோனா. செய்தியிலிருந்து வரும் மாற்றத்தை விரும்பவில்லை. ஆனால் நினிவே மக்கள் மாற்றமடைந்ததால் கடவுள் தன் முடிவை மாற்றினார்.

கடவுள் நினிவேயை அழிக்காமலிருந்ததை யோனாவால் ஏற்கமுடியவில்லை. கடவுளின் குணத்தோடு ஒப்புரவாக விரும்பவில்லை. தனது சாவை விரும்பினார் எலியாவும் சமய சவாலில் பாடுகள் வந்தபோது தனது சாவை விரும்பினார் (1அரச. 19:4). கடவுள் ஆயிரம் தலைமுறை இரக்கமுடையவர் என்ற இறைவாக்கினை (வி.ப. 34:6,7; யோவே. 2:13) யோனா கற்றிருக்க வேண்டும் ஆனால் பின்பற்றவில்லை. கடவுள் ஆயிரம் தலைமுறை இரக்கமுடையவராயிருக்கும் போது யோனா ஆயிரம் தலைமுறை பகையாயிருப்பதை விரும்பினார். ஆகவே கடவுள், யோனாவிடம் எரிச்சலாயிருப்பது நல்லதோ (4:4) என்றார்.

எரிச்சல் பகையை வளர்க்கின்றது

தொ.நூ. 4:5,6 - காயினின் எரிச்சல் ஆபேலை பழிவாங்க தூண்டியது.

நெகே. 4:1 - சன்பல்லாத்தின் எரிச்சல் நெகேமியா அலங்கம் கட்டுவதை தடுக்க தூண்டியது.

மத். 20:24 - இயேசு பகைவரிடம் அன்பு கூரச் சொன்னார்.

- பவுல், இயேசு சிலுவையில் பகையை அழித்து ஒப்புரவாக்கினார் என்கின்றார்.

புறஇனத்தவரின் மீட்பை விரும்பாத யோனா இரண்டுமுறை கடவுள் உணர்த்தியும் உணரவில்லை. யோனாவின் விசுவாசம் இருமுறை செத்த விசுவாசம் எனலாம். யூதா அழைக்கப்பட்ட விசுவாசிகளை இருமுறை செத்தவர்கள் (12) என்றார்.

பவுலைப் போன்று பரம தரிசனத்திற்கு கீழ்ப்படிந்து நற்செய்தியை பகிர வேண்டும் (தி.ப. 26:19). பவுல் யூத பக்தியில் பழகிப் போனவராயிருந்தும்

தன்னை புறஇனத்தின் திருத்தூதுவர் என்றார் (உரோ. 11:13). யோனாவால் புற இனத்தவரான நினிவே கடவுளிடம் பெற்றுக் கொள்ளும் சகாயத்தை ஏற்கமுடியவில்லை. ஆகவே மரணபரியந்தம் எரிச்சலாயிருப்பதை நல்லதாக காண்கின்றார் (4:9). கடவுள் பகையோடு மரண பரியந்தம் வாழச் சொல்லவில்லை பாசமுடன் நம்பிக்கையை பகிரச் சொல்லுகின்றார்.

## *2. பந்தல் நிழல் பக்தியல்ல பன்முகப் பகிர்தல்* : (யோனா 4 : 5)

...அவர் நமக்கு ஒரு பந்தலை அங்கே அமைத்துக் கொண்டு நகருக்கு நிகழப்போவதைப் பார்ப்பதற்காக அதன் நிழலில் அமர்ந்திருந்தார்.

இன்றைய திருச்சபை பல பந்தல் நிழல் பக்தி என்றே கூறலாம். திருச்சபை என்ற பந்தல் நிழலில் சுகமாயிருந்து சுகவீனமாயிருக்கும் சமூகத்தை எட்டிபார்க்காது நித்திரை மயக்கம் கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்ந்து வருகின்றது. நினிவேயின் அழிவை பார்க்க யோனா பந்தல் அமைத்தால் திருச்சபைக்கு வெளியே நிற்பவரை அங்கிகரிக்காத திருச்சபை யோனாவின் பந்தல் நிழல் என்றே கூறலாம். நான் நிழலிலிருந்து மற்றவர் வெயிலில் இருப்பதை பார்த்தல் அல்ல தன்நிழல் தனக்கு மட்டுமல்ல என்ற பரந்த பார்வை தேவை.

லூக். 15:24 - இளையமகன் திருந்தி வருவதை தந்தை ஏற்றார்

லூக். 15:28 - இளையமகன் திரும்பி வருவதை ஏற்கமறுக்கும் மூத்தமகன்

மனம் திரும்புதலை விரும்பாது அழிவை மட்டும் கூவி அழைக்கும் நற்செய்தி பந்தல் நிழல் பக்தியே நாற்பது நாளில் அழிவு போரிலா, இயற்கை சீற்றத்திலா எப்படிப்பட்ட அழிவு என்பதை கடவுள் சொல்லவில்லை. யோனா நகரத்திற்கு வெளியே நின்று பட்டணத்திற்கு வரும் அழிவை பார்க்க பந்தல் அமைத்தார். கடவுள் யோனாவை ஒருமுறை கூட திருத்த நினைத்தார். ஆமணக்குச் செடியை வளரச் செய்தார். தனக்கு கிடைத்த நிழலை குறித்து மகிழ்ச்சியைடைந்தார். மறுநாள் ஆமணக்குச் செடி காய்ந்தது யோனாவோ சோர்ந்து போனார். நிழலில் ஒருமுகம் பட்டுப்போனால் மறுமுகம் இதுவே. இன்றைய பந்தல் நிழல் பக்தி. எல்லாமிருக்கும் போது மகிழ்ச்சியாய் துன்பம் வரும் போது மறுதலிக்கும் விசுவாசத்தையும் இன்று பலரிடம் காணமுடியும். செழிப்பாய் நிழல் தந்து ஒரேநாளில் காய்ந்து போனதை குறித்து கவலைபட்ட யோனா பலநாள் இன்றும் வாழக்கூடிய பச்சைமரமாகிய நினிவேயை குறித்து கவலை

இல்லை. ஆமணக்குச் செடி யோனாவுக்கு சொந்தமானதல்ல, யோனாவின் உழைப்பின் பலன் அல்ல, யோனாவால் உரமூட்டப்பட்டதுமல்ல. தனக்கு சொந்தமல்லாத ஒன்றுக்காக கவலைப்படும் யோனா. இவ்வாறு யோனாவைப் போன்று பந்தல் நிழலில் தங்கி வேடிக்கை பார்ப்பவர்களது விசுவாசத்தை நாம் எப்படி புரிவது. யோனா பயணம் செய்த கப்பலிலுள்ளவர்கள் சரக்குளை எறிந்தனர் யோனாவோ தூங்கினார் (1:5). ஆபத்தில் அயர்ந்த நித்திரை, அக்கறையில்லா தூக்கம். ஆனால் இது தூங்கும் காலமல்ல, இன்று நடைபெறும் பல அழிவுகளை புறஇனத்தவருடன் தொடர்புபடுத்தி பேசுகின்றோம். யோனாவைப் போன்ற நமது பாதை மாற்றமா என்பதை திறனாய்வு செய்தல் வேண்டும். வாழ்வு, பேச்சு, செயல் அனைத்துமே நற்செய்தியின் பன்முக பகிர்தலுக்கான ஊடகமாக பயன்பட வேண்டும்.

### *3. பட்சபாதத்துடனல்ல பரிவுடன் பகிர்தல்* : (யோனா 4 : 10,11)

நினிவேயின் மனம் திரும்புதலை விரும்பாது தர்ஷீசுக்கு செல்ல விரும்பியது பட்சபாதம். தர்சீஸ் செல்ல காரணம் நினிவே மனம் திரும்பிவிடும் என்பது தான். புறஇனத்தவரிடம் கடவுளின் கிருபை செயல்படக் கூடாது என நினைத்தார். கடவுள் இஸ்ரயேலரை எச்சரிக்க பலமுறை பலதீர்க்கர்களை அனுப்பினார் ஆனால் திருந்தவில்லை. நினிவேக்கு ஒரே ஒரு தீர்க்கரை அனுப்பினார். ஒரே செய்தியால் மனம் மாறினார்கள். திரும்பினால் கடவுள் திரும்புவார் என்ற செய்தியை யோனா அறியவில்லை. கடவுள் திரும்பிவரும் அனைவரையும் ஏற்கின்றார். பட்சபாதமுள்ளவரல்ல.

உரோ. 2:11 - கடவுள் பட்சபாதமுள்ளவரல்ல

தி.ப. 10:34 - பேதுரு கடவுள் பட்சபாதமுள்ளவரல்ல

மனிதர் முகதாட்சணியம் பண்ணுகின்றார்கள் (தி.பா. 82:2). இயேசு முகதாட்சணியம் இல்லாத போதகர் (மத். 22:16). தொழுவத்தில் இல்லாத, தொலைந்த ஆடுகளையும் கூட்டி சேர்த்தல் கடவுளின் விருப்பம் (யோவா. 10:6) பிலிப்பு, கந்தாகே என்பவரின் மந்திரிக்கு நற்செய்தியை பகிர்ந்தார் (தி.ப. 8:35) உலக முழுமைக்குக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும் என்பது கடவுளின் விருப்பம்.

யோனாவின் கீழ்ப்படியாமை, பாதை மாற்றத்தை, பொறுமையுடன் கடவுள் ஏற்றுக் கொண்டார். மறுபடியும் யோனாவை தயாரிக்க விரும்பினார். ஆகவே மீனின் வயிற்றிலிருந்து உருவாக்கியவர் மறுபடியும்

நினிவேக்கு அனுப்பினார். பாதைமாறிய தன்னை மன்னித்த கடவுள் மற்றவர்களையும் மன்னிக்க வேண்டும் என்ற எண்ணம் யோனாவில் உருவாகவில்லை.

பன்மைத்துவம் நிறைந்த உலகில் மொழி, இனம், இடம், நிறம், சமயம், நம்பிக்கை என பல புரிதல் இருக்கும் உலகில் கடவுளின் பரந்த புரிதலை ஏற்றுக்கொள்ள வேண்டும். பகையோடு விலகி வாழ்வதை தவிர்த்து அனைவரிடமும் பாசம் காட்டும் பகிர்வில் வளர வேண்டும். பந்தல் நிழல் போன்ற சுகவாழ்வு தேடலும் பிறர்மீது அக்கறையில்லாத வாழ்வை தவிர்த்து பன்முகபகிர்தலுக்கு இறங்கி வர வேண்டும். பாரபட்சமில்லாக் கடவுளின் தியாகமான பகிர்வை உணர்ந்து அழிவுக்குரியவர்களை பரிவுடன் அக்கரை சேர்க்க நம்மை ஆண்டவரின் கரத்தில் கொடுப்போம்.

அருள்திரு. I. **ரெஞ்சித் வேதகுமார்**

02-09-2018 **கல்வி ஞாயிறு**

# இயேசுவே குரு

## JESUS THE GURU

நீ.மொ. 4:1-19 | தி.ப. 22:1-5
தி.பா. 141 | லூக். 4:31-44

**"...அவர் அதிகாரத்தோடு கற்பித்தார்."** லூக். 4:32

நமது நாட்டு கலாச்சாரத்தில் குரு என்பவர் மதிப்புள்ளவராகவும், அவரைப் பின்பற்றும் சீடர் குருவின் இலட்சியத்தை நிறைவேற்றுபவராக சித்தரிக்கப்படுகிறார். குருவாகிய இயேசு அவரது போதனைகள் வழி அவரது இலட்சியமான இறையரசை நிறுவிட சீடர்களாக நம்மைத் தெரிந்தெடுத்துள்ளார். இயேசு தம்மை குருவாக பல இடங்களில் கூறியுள்ளார். (மத். 26:18; யோவா. 13:13; மத். 23:10; யோவா. 1:9) சில இடங்களில் தம்மையே தலைமைக் குருவாக வெளிப்படுத்தி உள்ளார். மத். 23:10-ல் "நீங்கள் குருக்கள் என்று அழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்" என்றார்.

### *குருவின் சிறப்பு என்ன?*

மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் வரிசையில் இறைவனைப் புரிந்துகொள்ள குருவின் போதனையும் வழிகாட்டுதலும் சிறப்பானது.

ஆண்டவர் குருவாக ஒருவரில் காணப்படவேண்டிய பண்புகளை அவரது போதனைவழி வெளிப்படுத்துகிறார்.

### *1. ஆண்டவரின் போதனை அதிகாரமுள்ளது*
(Teaching of Jesus is Authoritative) :

அதிகாரம் உடையவர்களின் வார்த்தைக்கு அதிக மதிப்பு உண்டு. வார்த்தையினால் அதிகாரம் செலுத்த விரும்பினால் மக்கள் ஏற்பதில்லை. அதிகாரமுடையோர் வார்த்தைகளைச் சரியாகப் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றனர். திருமறையில் வேதபாரகர், பரிசேயர் போதனை செய்பவர்களாகக் காணப்பட்டனர். ஆனால் ஆண்டவர் அவர்களைக் காட்டிலும் அதிகாரமுடையவராய்ப் போதித்தார். மத். 7:28,29 இல் "இயேசு இந்த வார்த்தைகளை சொல்லி முடித்தபோது அவர் வேதபாரகரைப் போல் போதியாமல் அதிகாரமுடையவராய் அவர்களுக்கு போதித்தபடியால், மக்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்."

காரணம் அவருடைய போதனை அடிப்படையான சட்டம் சார்ந்ததாக காணப்பட்டது. மத்தேயு 5-வது அதிகாரத்தில் ஆறு தடவைகள் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சட்டத்தின் விளக்கத்தினைக் கூறினார். சட்டம் தன்னில் தான் அதிகாரம் உடையதல்ல. ஆனால் அதன் ஆற்றல் என்ன என்பதை மத். 5:22,28,32,34,39,44 ஆகிய வசனங்களின் வழி விளக்கி உள்ளார்.

அவரது போதனையினால் அற்புதங்களும், அடையாளங்களும் வெளிப்பட்டன. மனித வாழ்வில் இயல்பாகச் சந்திக்கும் பிரச்சனைகளுக்கு அவரது போதனை தீர்வாக அமைந்தது.

## *2. ஆண்டவரின் போதனை ஆச்சரியமானது*

(Teaching of Jesus is Amazing) : லூக். 4:36

போதனைகளைக் கேட்போர் பலர், ஆனால் அதற்கு கீழ்ப்படிவோர் சிலர். இங்கு அசுத்த ஆவி பிடித்த ஒருவன் கீழ்ப்படிகின்றான். சாதாரண நிலையில் இருப்போரே போதனைக்குக் கீழ்ப்படியாதிருக்கின்றபோது அசுத்த ஆவி பிடித்த ஒருவர் கீழ்ப்படிவது ஆச்சரியமானது. ஆண்டவரின் போதனைக்குக் கீழ்ப்படியாதிருப்பது அசுத்த ஆவி பிடித்தவனைக் காட்டிலும் தீதான காரியம். இன்று அனேக விதமான அசுத்த ஆவியின் எண்ணங்களினால் அடங்கிபோன நாம் ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தோமெனில் அற்புதம் நடைபெறும்.

- குடிக்கின்ற அசுத்த ஆவி
- எரிச்சல்படும் அசுத்த ஆவி
- கோள்கூறும் அசுத்த ஆவி
- பரிகாசம் செய்யும் அசுத்த ஆவி
- சண்டை உண்டுபண்ணும் அசுத்த ஆவி
- திருப்தியற்ற அசுத்த ஆவி
- ஏமாற்றும் அசுத்த ஆவி
- வஞ்சிக்கும் அசுத்த ஆவி
- இச்சிக்கும் அசுத்த ஆவி
- கீழ்ப்படியாத அசுத்த ஆவி
- தீமையோடு எதிர்த்து நிற்கும் அசுத்த ஆவி இன்னும் பல
- இவைகளை ஆண்டவர் போதனையில் மேற்கொள்வது ஆச்சரியம்.

### 3. ஆண்டவரின் போதனை மனிதரை மனிதராக மாற்றுகிறது (Teaching of Jesus is Humanazing) :

லூக். 4:33-35 வசனங்களில் அந்த மனிதனின் ஆள்தன்மை நிலை விளக்கப்பட்டுள்ளது. இதே பகுதி மாற். 1:21-28 வரை உள்ளது.

- அசுத்த ஆவி எனவே தூய்மையற்றவர்
- ஐயோ என்று கூறுகின்றார்
- கேள்வி கேட்கின்றார்

1. நசரேனாகிய இயேசுவே எங்களுக்கும் உமக்கும் என்ன? (தொடர்பை விரும்பாதவர்)
2. எங்களைக் கெடுக்கவா வந்தீர்?

- ஆண்டவரை அறிந்தும் அறியாதவர் போன்று நடக்கின்றார்.
- நீர் தூயவர் என்று உரத்த சத்தமிட்டான்

அவன் இருந்தது தொழுகைக் கூடம் ஆனால் அசுத்த ஆவி பிடித்திருந்தவனாய் இருந்தான். அவன் மனிதருக்காக வாழவில்லை. ஆண்டவரை அறிந்தவர்கள், அவருடைய பண்புடையவர்களாக வாழாவிட்டால் என்ன பயன்? ஆண்டவர் எதனைப் போதித்தாரோ அதனைச் செயல்படுத்தியிருக்கிறார். யோவா. 8:7-ல் முதலில் கல்லெறியக் கடவன் என்றார்.

மாற். 5:9-15 வரை 'லேகியோன்' என்ற பிசாசுகள் பிடித்தவனைக் குணப்படுத்தி மனிதனாக வாழச் செய்தார்.

மத். 9:20,21 - இல் பெரும்பாடுள்ள பெண்ணைக் குணப்படுத்தி வாழ்வை முழுமைபெறச் செய்கின்றார்.

மத். 9:27 - இல் தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று கூறி கூப்பிட்ட இரண்டு பார்வையற்ற மனிதாக்குப் பார்வை தந்து மனிதராக மாற்றியுள்ளார்.

மாற். 2:10 - இல் நான்கு பேர் சுமந்து வந்த திமிர்வாதக்காரனைக் குணப்படுத்தி உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார். இன்னும் பல நிகழ்வுகளும் அவரது போதனையும் மனிதரை மனிதராக வாழச் செய்தது.

அருள்திரு. Dr. A.R. **செல்லையா**

09-09-2018 **மகளிர் ஞாயிறு**

# கடவுளின் விடுதலைச் செயற்பாட்டில் பெண் பங்காளர்கள்

## WOMEN PARTNERS IN GOD'S LIBERATIVE ACT

| | |
|---|---|
| வி.ப. 1:15-22 | உரோ. 16:1-16 |
| திபா 148 | மாற். 15:37-41 |

***"இம்மருத்துவப் பெண்கள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால் அவர் அவர்கள் குடும்பத்தை தழைக்கச் செய்தார்."*** **வி.ப. 1:21**

பொதுவாக பெண்களுக்கு சிறப்பான அங்கீகாரமும் சிறப்பான பாராட்டும் கிடைப்பது மிகவும் குறைவு. உலகத்திலே பெரும்பாலும் மட்டம் தட்டப்படுவார்கள். பெண்கள் சில இடங்களிலே பெற்றோர்களால், பணியாற்றும் இடங்களில் பணியாளர்களால், திருமணத்திற்கு பின் கணவனால், பிள்ளைகளால், மருமக்களால், பேரப்பிள்ளைகளால் மட்டம் தட்டப்படுகிறார்கள். ஆனால் மருத்துவப்பெண்கள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால் கடவுளால் பெருமைப்படுத்தப்பட்டார்கள்.(வி.ப.1:15-22). அவ்வாறே சாலமோன் ஞானி பெண்களுக்கு ஒரு உயர்ந்த அங்கீகாரத்தைக் கொடுக்கிறார். ஞானமுள்ள பெண்கள் என்று நீதி.14:1-லும் விவேகமுள்ள மனைவியோ ஆண்டவர் அளிக்கும் கொடை (நீதி.19:14) என்றும் மீண்டும் ஒரு அங்கீகாரத்தைக் குறிப்பிடுகிறார். "ஞானமுள்ள பெண்கள்" என்று பெண்களைக் குறித்தக் கருத்துக்கொண்டு பல காரியங்களைச் சொல்கிறார். ஞானமுள்ள பெண்களின் செயல்பாடுகள் வீட்டைக் கட்டுகிறது என்று சாலமோன் சொன்னாலும், சமூகத்தைக் கட்டும் உன்னதமான பெண்மணிகளே மருத்துவப் பெண்மணிகள். (வி.ப.1:15-22). மட்டுமன்று சிலுவையின் கடைசி மட்டும் நின்று ஆறுதலாக இருந்தவர்களும் பெண்மணிகளே. (மாற். 15:37-41). இந்த பின்புலத்தில் சிந்தனையினைத் தொடர்வோம்.

### 1. *நிதானத்தினால் ஞானமுள்ளப் பெண் வீட்டைக் கட்டுகிறாள் :* (நீதி.14:1)

பெண்களுக்கு நிதானம் மிக மிக தேவை. நிதானமுள்ள பெண்கள் தங்கள் வீட்டைக் கட்டும் ஞானமுள்ள பெண்களாக மாறுகின்றனர். ஒரிசாவிலே கஞ்சம் என்றொரு மாவட்டம் இருக்கிறது. இங்குள்ள

Chatrapura என்ற இடத்தை சார்ந்த சூரிய நாராயண் தாஸ் என்ற மனிதர், மனைவியுடன் ஏற்ப்பட்ட தகராறிலே மனைவியைப் பயப்படுத்த உயிரியல் பூங்காவிற்கு அழைத்துச் சென்று சிங்கங்கள் நடமாடும் பகுதியிலே கொண்டு போய் விட்டார். சிங்கங்களும் அவரைக் கடித்துக் குதறி 50 அடி வரை இழுத்துச் சென்றது. எனினும் இந்த சிங்கங்கள் நெடுங்காலமாக உயிரியல் பூங்காவிலே வளர்ந்தப் படியினால் இவைகளுக்கு வேட்டையாடத் தெரியாது. ஆகவே இந்தப் பெண் உயிர் பிழைத்தாள். இந்த மனிதனைப் போல் வீட்டுப் பெண்களை “தற்கொலை” என்ற ஆயுதத்தால் மிரட்டி மனஅழுத்தம் ஏற்படுத்தும் கணவனும் உண்டு. பிள்ளைகளும் உண்டு. தன் நிதானத்தால் சமாளிக்கும் பெண் இதனை மேற்கொண்டு தன் இலட்சியத்தை அடைகிறாள்.

மருத்துவப் பெண்களாகிய சிப்ரா, பூவாவின் நிதானத்தோடுக் கூடிய செயல்பாடு எபிரேய குடும்பங்களைக் கட்டுவித்தது மட்டுமன்று, இவர்களின் குடும்பமும் இறைவனின் ஆசியால் முன்னிலை பெற்றது. எனவே நிதானத்தோடுக் கூடிய செயல்பாடு நமது குடும்பங்களையும், சமூகத்தையும் கட்டும் என்பதில் மாற்றமில்லை.

## ***2. விவேகத்தினால் ஞானமுள்ளப் பெண் வீட்டைக் கட்டுகிறாள் :*** (நீதி.19:14)

“விவேகமுள்ள மனைவியே ஆண்டவர் அளிக்கும் கொடை” வீட்டைக் கட்டுவதில் பெண்ணின் விவேகம் முக்கியமானது. விவேகம் இல்லாத வாழ்வு பண்பாடற்ற வாழ்வுக்கு சான்றாக அமையும். சிப்ரா, பூவா என்னும் எபிரேய மருத்துவப் பெண்கள் எகிப்திய மன்னனின் ஆணையைப் பெற்று பணி புரிகையில், தாங்கள் கற்ற மருத்துவப்பணியின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்த விழைகின்றனர். ஒரு மருத்துவரின் விவேகமிக்கப் பணி உயிர்களை காப்பாற்ற வேண்டியது. அந்த கடமையை விவேகத்தோடு இவர்கள் செயல்படுத்தினார். இந்த விவேகத்தோடுக் கூடிய சேமிப்பு வருங்கால வாழ்வை வளமூட்டுகிறது என்பது சாலமோனின் வலுவான உண்மை((நீதி.19:14).

வருமானம் எவ்வளவு இருந்தாலும் வாழும் முறையைப் பொறுத்தே அது இருப்பதும் போவதும் இருக்கிறது. விவேகமுள்ள பெண்கள் மட்டுமே தங்களுடைய வரவை கண்காணித்து விவேகத்தோடு செலவு செய்கின்றனர். கவனமாக இருப்பது விவேகமுள்ள பெண்களின் கடமையாகும். சிப்ரா, பூவா எபிரேய குழந்தைகளை காப்பாற்றுவதில் கவனமாக இருந்தனர். இதனால் அவர்கள் விவேகம் இஸ்ரயேலின் விடுதலைக்கு காரணியாக அமைந்தது.

### *3. நல்முயற்சியால் பெண் வீட்டைக் கட்டுகிறாள் :* (உரோ.16:4)

பிரிஸ்கா என்னும் பெண் தன் கணவனாரோடு கூட பவுலாரால் அழைக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்படுகின்றார். கூடாரம் பின்னும் பணியோடு கடவுளுடைய வார்த்தையை சொல்லக்கூடாத காலக்கட்டத்திலும் தன் நல்முயற்சியால் சொல்ல ஆரம்பித்தார். இதனால் பவுல் இவர்களை குறித்துச் சாட்சியாக சொல்லும் போது, அவர்கள் என் உயிரைக் காக்கத் தலைக்கொடுக்கவும் முன்வந்தார்கள். அவர்களுக்கு நான் நன்றிச் செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன் (உரோ. 16:4) எனக்கூறி அவர்களின் நல்முயற்சியைப் பாராட்டுகிறார். இத்தகைய தியாகச் செயல் அநேகரை கிறிஸ்துவுக்கு நேராகவும், தங்கள் விடுதலைக்கு நேராகவும் வழி நடத்தியது. நல்முயற்சி செய்த செய்கிற ஒரு பெண் தன் இல்லத்தோடுக் கூட சமூகத்தையும் கட்டுகிறாள்.

ஞானமுள்ள பெண்ணிடம் சாலமோன் கண்டுபிடித்த தலையாகிய குணம் உணர்வு திறம் (Sensitivity). உணர்வு திறம் என்பது ஆட்களின் உணர்வுகள், பிரச்சனைகள் முதலியவற்றை தான் உணர்ந்திருப்பதையும் புரிந்துக்கொள்ள முடிவதையும் வெளிக்காட்டுகிறது. ஞானமுள்ள பெண்ணிடத்தில் இருக்கிற ஞானம் என்பது இந்த உணர்வுத் திறனை தான் குறிக்கிறது. மகிழ்வாரோடு மகிழுங்கள், அழுவாரோடு அழுங்கள் என்று பவுலார் உரோ. 12:15 ல் குறிப்பிடுகிறார். எனவே ஞானத்தைச் சிறந்த முறையில் செயல்படுத்தி நல்ல ஒரு பெண்மணியாய், கடவுளின் விடுதலையை செயற்பாட்டில் முன்வைக்கிற பெண்களாய் நிதானத்தினால், விவேகத்தினால் நல்முயற்சியால் கட்டியெழுப்புகிறவர்களாய் வாழ முயல்வோம்.

திருமதி. **லலிதா தேவகடாட்சம்**

16-09-2018

# என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன்
## MY PEACE I GIVE TO YOU

| | |
|---|---|
| செக். 8:12-19 | உரோ. 5:1-5 |
| தி.பா. 119:161-176 | யோவா. 16:16-33 |

***"என் வழியாய் நீங்கள் அமைதி காணும் பொருட்டே நான் இவற்றை உங்களிடம் சொன்னேன்."*** யோவா. 16:33a

இயேசு கிறிஸ்து அற்புதங்களைச் செய்தார்; ஆற்ற மிக்கவராய் செயல்பட்டார்; அதிகாரமுடையவராய் போதித்தார்; ஆட்சியாளர்கள் அதிரும்படி வாழ்ந்தார்; நன்மை பெற்ற மக்கள் திரளாய் அவரைப் பின் தொடர்ந்தனர்; உடனிருந்த சீடர்களும் இறை ஆட்சியில் உயரிடங்களில் அமரலாம் என்றெண்ணினர். ஆனால் தனது பிரிவை சீடர்களிடம் பகிர்ந்த ஆண்டவர் வாழ்வளிக்கும் வார்த்தையாய் துன்பம் நிறைந்த வாழ்வில் அவர் மூலமாய் அமைதி உண்டு என்பதை அவர்களுக்கு உணர்த்துகிறார். வாழ்வும், அமைதியும் பற்றி மூன்று குறிப்புகளின் வாயிலாகச் சிந்திப்போம்.

### *1. அழுது புலம்பும் வாழ்வு* : (யோவா. 16:20)

"நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள்; அப்பொழுது உலகம் மகிழும் நீங்கள் துயருறுவீர்கள்." மனித வாழ்வை ஆராய்ந்து பார்த்தால் பிரச்சனைக்கு மேல் பிரச்சனை அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. ஓர் அடியெடுத்து வைத்தால் எட்டு அடி சறுக்குகிற நிலையில் உள்ளது. பவுல் அப்போஸ்தலன் சொல்லுகின்ற போது எப்பக்கத்திலும் நெருக்கப்படுகிறோம் என்கிறார். பலர் வாழ்வில் பிரச்சனைகளைக் கண்டு, கலங்கி ஏன் எனக்கு இந்தப்பாடு? நான் என்ன பாவம் செய்தேன்? இந்த உபத்திரவத்தினின்று விடுதலை இல்லையா? என பல்வேறு கேள்விகளோடு கலங்கி நிற்கின்றனர். தனது பிரிவின் போது இயேசு கிறிஸ்து கூறுகின்றபோது ஆண்டவரோடு இல்லாத நிலை தான் அவர்களுக்கு அழுது புலம்பும் வேளை (வ.19) என்கிறார். துன்பம், பிரச்சனை ஆகியவை எல்லாருக்கும் இயல்பாக உள்ளது தான். செக். 8:14-ல் கடவுள் தகாத செயலின் போது துணை நிற்பதில்லை என்கிறார். ஆண்டவருக்குள் நற்செயல்களைச் செய்யாமையும் மாயமான உபவாசமும் பயனற்றவை என்கிறார். அவைகள் ஆண்டவரை விட்டு நம்மைப் பிரிக்கின்றன. கலக்கத்தை ஏற்படுத்துகின்றன.

### *2. அடைக்கலம் தேடும் வாழ்வு* : (யோவா. 16:24)

கானாவூர் திருமண வீடு. பதட்டமான சூழல். திராட்சை ரசம் குறைவுபட்டது. வழி அறியாது நிற்கின்றனர். இயேசுவின் தாய் இயேசுவிடம்

பிரச்சனையை எடுத்துரைக்கிறாள். பின் பணியாளரிடம் "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்கிறாள் (யோவா. 2:3ff). இன்று மனித வாழ்வின் பிரச்சனைகளை யாரிடம் சொல்கிறோம். பதட்டத்துடன், இதமான வார்த்தைகளும் நம்மிடம் வருபவரிடம், குருடரான வழிகாட்டிகளிடம் சொல்கிறோம். மத். 7:15-ல் இயேசுநாதர், "போலி இறைவாக்கினரைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொண்டு உங்களிடம் வருகின்றனர்..." என்கிறார். ஆக, வாழ்வின் பிரச்சனைகளிலே, கலக்கங்களிலே எங்கே, யாரிடம் அடைக்கலம் தேடுகிறோம்? யோவா. 16:24-ல் அவர் பெயரால் கடவுளிடம் கேட்கச் சொல்கிறார். தி.பா. 119:170-ல் "என் மன்றாட்டு உம் திருமுன் வருவதாக! உம் வாக்குறுதியின் படி என்னை விடுவியும்" என்கிறார். இன்று திருமறை வாசிப்பது, ஜெபிப்பது ஓர் கடினமான காரியமாகவும், மறுக்கப்பட்ட தன்மையாயும் வளர்ந்து கொண்டிருக்கிறது. தி.பா. 119:162,174f -ல் வசனங்களின் மூலம் வாழ்வைத் தெளிவு படுத்துகின்றார்.

### *3. ஆண்டவர் அருளும் அமைதி வாழ்வு* : (யோவா. 16:33)

உயிருக்குப் பயந்து, நடுங்கி, கதவுகளைப் பூட்டி, பதுங்கியிருந்த சீடர்களிடம் உயிர்த்தெழுந்த ஆண்டவர் "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" (யோவா. 20:19) என்றார். மாற். 4:38ff -ல் சூறாவளிக் காற்றில் சிக்கித் தவித்து போதகரே, சாகப் போகிறோமே! உமக்குக் கவலையில்லையா? என்று கலங்கின சீடர்களிடம், "ஏன் அஞ்சுகிறீர்கள்? உங்களுக்கு இன்னும் நம்பிக்கை இல்லையா?" என்றார். ஆக, ஆண்டவர் எச்சூழ்நிலையிலும் தமது உடனிருப்பை பயத்தைப் போக்குகிறவராக, திடப்படுத்துகிறவராக, அமைதி வாழ்வை வழங்குகிறார். உரோ. 5:3f -ல் பிரச்சனை நிறைந்த வாழ்வு பற்றி "துன்பத்தால் மன உறுதியும், மன உறுதியாய தகைமை(பொறுமை)யும், தகைமையால் எதிர்நோக்கும் விளையும்" என்கிறார். யோவா. 16:21-ல் இயேசுகிறிஸ்து அவருடன் இருப்பவர்களுக்கு உலகின் துன்பம் பேறுகாலத்தில் தாயின் துன்பத்தைப் போன்றது. பின் மகிழ்வான, அமைதியான வாழ்வு உண்டென்பதை விளக்குகிறார். செக். 8:12-ல் கடவுளின் வார்த்தைகளைக் கைக்கொள்வோர், கடவுளின் ஆசியுடன் அமைதியாய் வாழுவர். கையிட்டு செய்யும் காரியங்களிலும், பயிர்களிலும் பலனைப் பெறுவர் என்கிறார்.

ஆக, பிரச்சனைகளைக் கண்டு அழுது புலம்பும் வாழ்வு எனக் கலங்க வேண்டாம். ஆண்டவரிடம் அடைக்கலம் தேடுவோம். திருமறையை வாசித்து, அவற்றை கைக்கொள்வோம். ஜெபிப்போம். அவர்அருளும் அமைதி வாழ்வை சுதந்தரிப்போம்.

அருள்திரு. முனைவர் D. **சாம் கிறிஸ்டோபர்**

23-09-2018

# வறுமைக்கு கிறிஸ்தவ மறுமொழி

## CHRISTAN RESPONSE TO POVERTY

ஆமோ. 8:4-7 யாக். 2:1-7
திபா. 145 லூக். 16:19-31

**"...இலாசர் இன்னல்களையே அடைந்தார். அதை நினைத்துக்கொள். இப்பொழுது அவர் இங்கே ஆறுதல் பெறுகிறார்."** லூக். 16:25

ஆந்திரா மாநில தலைநகர் ஹைதரபாத் நகரில் அழகுடன், கலை மற்றும் கலாச்சாரத்திற்கு அரணாக நிற்பது சார்மினார் கோபுரம். 1987ம் ஆண்டு நவம்பர் 13 அன்று பரிதாபமான மறக்க இயலாத நிகழ்வு நடந்தது. சுப்பிரமணியன்-அவனுக்கு 4 தங்கைகள், பெற்றோர் இல்லை, சொந்த வீடு இல்லை. சுப்பிரமணியன் வேலை செய்தால் தான் வீட்டில் உணவு. பசி, பட்டினி வாலிப பிள்ளைகளுக்கு திருமணம் நடத்த முடியவில்லை. காலம் முழுவதும் கண்ணீர் வடித்த இவர்கள் வாழ்வு கசந்து போய், வறுமையின் கோரப்பிடியில் சிக்கினர். நவம்பர் 13 அன்று சார்மினார் கோபுரத்தில் ஏறி சாலையில் குதித்தனர். விழுந்த இடத்திலேயே மரணம். கடைசி தங்கைக்கு வயது 8. உலகிலே வறுமை வாட்டி தங்களை மாய்த்துக் கொள்ளும் மனிதர் ஏராளம்.

இந்திய தேசத்தில் 31 கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளனர். இந்திய தேசத்தில் 1108 விதவிதமான சாதிகள். இதில் 774 பழங்குடியின மக்கள். ஆதிகாலம் தொட்டே தாழ்த்தப்பட்ட மக்கள் ஒடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, அடிமைகளாக நடத்தப்பட்டு வறுமை நிலை பெற்று வாழ்கின்றனர். இந்தியாவில் 37% தலித் மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர். இவர்களுக்கு கல்வி மறுக்கப்படுகிறது, சமுதாய அந்தஸ்து, அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகிறது.

நகர்ப் புறங்களில் தினசரியாக 28ரூ 65காசும், கிராமப் புறங்களில் 22.42காசும் கூலியாக பெறுபவர்களை வறுமைக் கோட்டிற்கு கீழாக வாழ்கின்றனர் என அரசு புள்ளி விபரம் கூறுகிறது. தற்போது இந்தியாவில் 21.9% மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழாக வாழ்கின்றனர்.

வறுமைக்கான காரணங்களை பட்டியலிட்டால் பலவித காரணங்களை சொல்லலாம். அறியாமை, கல்வி கிடைக்காமை, உழைக்க

வாய்ப்பின்மை, நோய்கள், இயற்கை, பேரழிவுகள், சமூக வேறுபாடு, சாதீய ஒடுக்குதல்கள், அடிப்படை வசதிகள் கிடைக்காமை, உரிமைகள் மறுக்கப்படுதல் என சொல்லிக் கொண்டே போகலாம்.

அரசையும், நிறுவனங்களையும் குறை கூறி, ஏழைகளை, வறுமைப்பட்டோரை, மூலதனமாக்கி வசதியாக வாழ்வோரும் உண்டு. சேவையை போர்வையாக்கி பணம், புகழ் சம்பாதித்த பலரும் உண்டு.

வறுமை என்றதும் பொருளாதார வறுமையே நம் கண்களில் தெரிகிறது. வளர்ந்து வரும் சமூகங்களில் இன்று உறவு வறுமை, பக்தி வறுமை, ஆன்மீக வறுமை, அறிவு வறுமை, மனித நேய வறுமை, கலாச்சார வறுமை ஆகியவைகளும் ஆங்காங்கே வெளிப்படுகின்றன. அதிலும் குறிப்பாக ஆன்மீக வறுமையைப் பற்றி எவரும் புரிவதே இல்லை. பொருளாதார நாட்டம், ஆதிக்க வெறி, அதிகார போதை தலைக்கேறிய நிலையில் இன்று ஆன்மீக வறுமை தன் கோர முகங்களை சமயங்களுக்குள் காட்டிக் கொண்டிருக்கிறது. கிறிஸ்தவ சபைகளும், ஆன்மீக வறுமையால் பாதிக்கப்பட்டு வெறிச்சோடியுள்ளது. இந்த வறுமை பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு திறந்த மனம் தேவை. உயர்ந்த இலட்சியம் தேவை. போராட்ட குணம் தேவை. திருமறை பல்வேறு அனுபவங்களை, உணர்வுகளை உணர்த்துகிறது. கிறிஸ்துவின் திருப்பணி திட்டம் வறுமையை மேற்கொள்ள தூண்டுதல் தருகிறது, துணை செய்கிறது.

## *1. திணிக்கப்பட்ட வறுமைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் ஆண்டவர்* :

ஆமோஸ் 8:4-7, தேசத்தில் சிறுமைப்பட்டவர்களை ஒழியப்பண்ணி, எளியவர்களை விழுங்கி (வ.4) தரித்திரரை பணத்திற்கும் எளியவர்களை ஒரு ஜோடி செருப்பிற்கும் கொள்ளும் படிக்கும் (வ.5) அவர்களை செய்கைகளை நான் ஒரு போதும் மறப்பதில்லை (வ.7).

திணிக்கப்பட்ட வறுமை என்பதற்கு ஒரு வரலாற்று பின்னணியம் உண்டு. கி.மு. 8ம் நூற்றாண்டின் மத்திய காலம். 2ஆம் யொரேபெயாம் அரசரின் ஆட்சியில் சீரியாவின் வீழ்ச்சி காலம் இஸ்ரவேல் தேசம் ஓரளவு சமாதானம், செழுமை பெற்று எழுந்த காலம். வணிக தொடர்புகள் துவங்கின. செல்வந்தர் எண்ணிக்கை பெருகியது. யூத்த காலங்களில் வறியவர்களாக்கப்பட்ட (திணிக்கப்பட்ட) மக்கள் வறுமைக்குள்ளே இருக்க செல்வந்தர்களின் கொடுமை, அநீதி ஏழைகள் மீது இன்னும் திணிக்கப்பட்டது. வாங்கல், கொடுத்தல் எனும் வர்த்தக நிலைகளில் நீதி நியாயம் புரட்டப்பட்டது. அதிக லாபம் ஒன்றே குறிக்கோளானது.

ஆண்டவர் இதனை கண்ணோக்கினார். ஏழைகள் இன்னும் ஏழைகளாயினர். ஆண்டவர் இந்த திணிக்கப்பட்ட வறுமைக்கு எதிராக குரல் கொடுத்தார். தீர்க்கனை எழுப்பினார். கோபக்குரல்கள் தொனித்தன. ஆமோஸ் 8:2 என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முடிவு காலம் வந்தது. இனி அவர்களை மன்னிக்கமாட்டேன். 8:7 அவர்கள் செய்கைகளையெல்லாம் நான் ஒரு போதும் மறப்பதில்லை. ஆண்டவரின் கோபக்குரல்கள் இவை. தற்கால கிறிஸ்தவரின் நிலையை யாக்கோபு 2:2,3,6 -ல் யாக்கோபு படம் பிடித்து காட்டுகிறார். ஆடையை வைத்து மனிதனை மதிப்பிடும் கலாச்சாரம். ‘மினுக்குள்ள’ என்பது இன்று ஆபரணங்களை அடையாளப்படுத்துகிறது. வசதிகளை வைத்து மனிதனை மதிப்பிடுகிற, மரியாதை அளிக்கிற கிறிஸ்தவர்களும் ஆண்டவருக்கு விரோதிகளே. பொருளாசை விக்கிரக ஆராதனைக்கு இணையானது கொலோ. 3:5; வெளி. 22:15. ஆண்டவரின் கோபத்திற்கு ஆளாகாமல், வறுமைக்கு எதிலாக குரல் கொடுப்பது ஆண்டவரின் பிள்ளைகளுக்கு அழகு சேர்க்கும்.

## *2. வறுமையால் வாடுபவரோடு இணைந்து கொள்ளும் ஆண்டவர் :*

லூக். 16:22-25 தரித்திரன் மரித்து ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய்விடப்பட்டான். இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான்.

பொருளாசைக் காரராகிய சமயத்தலைவர்கள் பரிசேயருக்கு இந்த பகுதியின் வழியாக சூடான உண்மை ஒன்றை சொன்னார் கிறிஸ்து (லூக். 16:14,15). ஆண்டவருக்கும், உலகிற்கும் ஊழியம் செய்யக் கூடாது என்பதே அவ்வுண்மை. சீடர்களுக்கும் இது பொருந்தும். ஆண்டவர் இயேசு மிகத் தெளிவுள்ளவராக தம் பணி வறுமைபட்டோருக்கு உரியது என ஓங்கி உரைத்த பகுதி இது. நற்செய்தியாளர்கள் பலரும் இவ்வுண்மையை ஒளிவு மறைவு இல்லாமல் தெளிவாக அறிவுறுத்தியுள்ளனர்.

லூக். 4:18 தரித்திரருக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் படி என்னை அபிஷேகம் பண்ணினார். நொறுங்குண்டவர்களை விடுதலையாக்க என்னை அனுப்பினார்.

லூக். 14:13 விருந்து பண்ணும் போது ஏழை, ஊனரை, சப்பாணிகளை, குருடரை அழைப்பாயாக.

மத். 25:40 சிறியவராகிய என் சகோதரர்களான இவர்களில் ஒருவனுக்கு எதை செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்.

லூக். 6:20 தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள். பரலோக ராஜ்யம் உங்களுடையது.

மாற். 2:16 ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென்ன?

இப்பகுதிகளின் வழியாக கிறிஸ்துவின் மனநிலை, உள்ளார்ந்த உணர்வு முன்னிறுத்தப்படுகிறது. ஏழை லாசருவை குறிப்பிட்டு பெயர்சொல்லும் ஆண்டவர் ஐசுரியவான் பெயரைக் கூட குறிப்பிடவில்லை.

தரித்திரர், ஏழைகள், சிறியவர், குருடர், ஊமையானவர்கள், பாவிகள் இவர்களெல்லாரும் வறுமையின் மறுவடிவங்கள். இவர்களோடு இணைந்து, இவர்கள் தேவைகளை சந்தித்து, இவர்களையும் மனிதராக மதித்து, இவர்களை மேன்மைப்படுத்தி, இவர்களை மாதிரிகளாக்கி பணியாற்றுவதிலே ஆண்டவருக்கு அலாதி பிரியம். அதுவே அவரது திட்டம். இந்த பணியை தொடர்ந்து செய்யவே திருச்சபை, திருப்பணி இயக்கங்கள், கிறிஸ்தவர்கள், ஆயர்கள், பேராயர்கள், முதன்மை பேராயர் என்ற பட்டங்களும், பதவிகளும். ஆனால் இன்று எவரோடு நம்மை அடையாளப் படுத்துகிறோம். யாரை முன்னிலைப் படுத்துகிறோம் ஆராய வேண்டிய உண்மை. அனைத்திலும் கமிஷன் தருபவர்களோடு, நீதிமன்ற வழக்குகளுக்கு துணையாய் இருப்பவர்களோடு, அதிகாரத்தை கேள்வி கேட்காமல் குனிந்து கும்பிடு போடுபவர்களோடு, இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நின்று வறுமைப்பட்டோரோடு நம்மை இணைத்துக் கொள்வோம்.

### *3. வறுமையை வேரறுக்க வழிகாட்டும் ஆண்டவர்* :

லூக். 6:35,36,38 கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள். இரக்கமுள்ளவர்களாயிருங்கள், கொடுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும். லூக். 6:30 உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு திரும்ப கேளாதே. மத். 5:42 கேட்கிறவனுக்கு கொடு. கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே. நீதி. 19:17 ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான். சங். 37:26 இரங்கி கடன் கொடுக்கிறவன் சந்ததி ஆசீர்வதிக்கபடும். சங். 112:9 ஏழைகளுக்கு கொடுத்தவன் நீதி என்றென்றைக்கும் நிற்கும். அவன் கொம்பு உயர்த்தப்படும். நீதி. 17:31 தரித்திரனுக்கு தயை செய்கிறவனோ ஆண்டவரை கனம் பணணுகிறான்.

வறுமையை போக்க, மாற்ற, ஆண்டவர் அற்புதமான மாற்று வழிகளை தந்திருக்கிறார். இரக்கம் செய்தல், ஆதரவளித்தல், கடன் கொடுத்தல், உதவி செய்தல், பகிர்ந்தளித்தல், தயை செய்தல் இவைகளால் வறுமைப்பட்டவர்களை மீட்க முடியும், மனிதர்களாக்க முடியும் என்பது

ஆண்டவர் சுட்டிக்காட்டும் வழிமுறை. எளியோர் படும் துன்பங்களில் இணைந்த ஆண்டவர் விடுதலைக்கான வழிகளை அனைத்து இறைமக்களுக்கும் தனது இதய பாரமாக உணர்த்துகிறார். உணர்வடைந்தோர் உதவுகிறார்கள். உணர்வடையாதோர் இதயத்தை கல்லாக்கி கொள்கிறார்கள். வறியவர்களுக்குக்காக பரிந்து பேசும் ஆண்டவர், வறுமைப்பட்ட சமூகத்தின் துயர்களில் மக்கள் தலைவராக பங்கேற்பதோடு, அவரை தொழுது கொள்ளும் மக்களும், பின்பற்றுபவர்களும் மாற்றங்களுக்கான கருவிகளாக செயல்பட வேண்டும் என்று விரும்புகிறார்.

“ஒடுக்கப்பட்டோர், வறுமைப்பட்டோர், புறக்கணிக்கப்பட்டோரின் சார்பாக இயேசு இயங்கியதன் மூலமாக, மதங்களையே புரட்டிப் போட்டு முற்போக்கான முதல் முயற்சிகளை இயேசு கிறிஸ்து எடுத்தார்” என நோபல் பரிசு பெற்ற பேராயர் டெஸ்மாண்ட் தத் குறிப்பிட்டுள்ளார்.

வறுமை மேகம் போன்றது. இயற்கை மாற்றங்களால் கலைந்து விடும் அல்லது சூரியன் வந்தால் சுருங்கி விடும். நாம் எப்போது சூரியனோடு இணையப் போகிறோம் என்பது தான் கேள்வி? கிறிஸ்து நீதியின் சூரியனாக உள்ளார். சூரியன் ஆற்றலின், சக்தியின் அடையாளம். சூரியனோடு இணைந்து ஆற்றலோடு பயணம் செய்தால், வறுமை எனும் மேகத்தை ஆற்றலிழக்க செய்ய நம்மால் முடியும்.

வறுமைதன்னை வாழவிடவில்லை என்ற போதும், கொள்கை பிடிப்போடும், இலட்சியத்தில் தெளிவோடும் இறுதி வரை போராடியவர்களே வெற்றி பெற்றுள்ளார்கள்.

ஆண்டவரால் வாழ்வு, விடுதலை, உயர்வு பெற்ற நாம் ஆண்டவரோடு இணைந்து வறுமையை வேரறுக்க இறுதி மூச்சு உள்ளவரை போராடுவோம். இறை அருள், ஆசி நம்மோடு நின்று நிலவுவதாக.

அருள்திரு. S. **கிறிஸ்டோபர் ஏசுமணி**

27-09-2018

**தென்னிந்தியத் திருச்சபைத் திருநாள்**

# வழிபாட்டில் ஒன்றிப்பு
# UNITY IN WORSHIP

நெகே. 2:17-20 உரோ. 8 : 31-39
தி.பா. 66 லூக். 9:1-6

**"இனியும் நமக்கு சிறுமை வராதபடி எருசலேமின் மதில்களை கட்டியெழுப்புவோம் வாருங்கள்." நேகேமியா 2:17**

## *தென்னிந்தியத் திருச்சபை வரலாற்றுச் சுருக்கம்*

எடின்பர்க்கில் 1910 ஆம் ஆண்டு நடந்த உலக அருட்பணியர் மாநாடு ஒற்றுமைக் குறித்து வினா எழுப்பி விவாதித்தது. அந்த விவாதத்தின் விடையாக தென்னிந்தியாவில் திருச்சபைகளும் அருட்பணி இயக்கங்களும் ஒன்றாய் செயல்படுவதற்கு வழி வகுத்தது. மூப்பராளுகை திருச்சபையும் சபை அருளுரை திருச்சபையையும் சபை ஆளுகை திருச்பையையும் ஐக்கியத்திற்கான முயற்சிகளை மேற்கொண்டது. இதன் குடும்ப ஐக்கிய முயற்சிகள் தடையின்றி வளர ஆரம்பித்தது. 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29, 30 ஆகிய நாட்களில் H.A. Popley அவர்கள் தலைமையில் திருச்சபை ஐக்கியத்திற்கான இந்திய ஆயர்கள் மாநாடு நடந்தது. இதில் 56 அங்கத்தினர்களாக முறையே ஆஸ்திரிக்கா, வெஸ்லியன் தென்னிந்திய ஐக்கியத் திருச்சபை மற்றும் சுவீடன் திருச்சபைகள் பங்கேற்றது. H.A. Popley, Sherwood, Eddy, Bishop V.S. அசரியா மற்றும் U. சான்டியாகோ இன்னும் பலர் இணைந்து தரங்கம்பாடி சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. இதன் வழி ஐக்கியத்திற்கான நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அவை,

1. திருமறையே மீட்பிற்கு அடிப்படையானது.
2. அப்போஸ்தல மற்றும் நிசேயா பற்றுறுதி அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது
3. இயேசு கிறிஸ்து காண்பித்த இரண்டு திருமுழுக்கு மற்றும் திருவிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.
4. பேராயராளுகை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த நான்கு முக்கிய தீர்மானங்களுக்கு தரங்கம்பாடி சுற்றறிக்கை வெளிவந்து 1920 முதல் 1945 வரை பல்வேறு பட்ட ஐக்கிய பேச்சுவார்த்தைகள், சுற்றறிக்கைகள் மூலம் முயற்சிகள் நடைபெற்று பின்னர் 1947 ஆம் ஆண்டு செப்டம்பர் 27-ம் நாள் சென்னையிலுள்ள புனித ஜார்ஜ் கதீட்ரல் பேராலயத்தில் தென்னிந்திய திருச்சபை உருவானது. அத் தொழுகையில் 9 புதிய பேராயர்கள் பணியமர்த்தப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து தென்னிந்தியத் திருச்சபைச் சட்டம் உருவாக்கப்பட்டது. தென்னிந்திய திருச்சபை நோக்கத்திற்கு மைய சாராம்சம் யோவான் 17:21 எல்லோரும் ஒன்றாயிருப்பார்களாக என்பதாகும். இதனடிப்படையில் 1950 ஆம் ஆண்டு வடக்கு தமிழ் திருச்சபை மன்றமும் 1959 ஆம் ஆண்டு களரீஸ் பாசல் அருட்பணி இயக்கமும் தென்னிந்திய திருச்சபையோடு இணைந்தோம். 1975 ல் C.S.I., C.NI மார்த்தோமா திருச்சபைகளோடு Inter Communion மற்றும் அருட்பணி ஒற்றுமைக்கான பேச்சுவார்த்தை ஆரம்பமாகி 1978 ல் கூட்டு மன்றம் உருவானது. 1900 ல் ஆரம்பமான ஐக்கிய முயற்சிகள் 1947 ல் வடிவம் பெற்று இன்றும் வளர்ச்சியில் முயற்சியினை முன்னெடுத்து முன்னோடியாய் திகழ்கிறது. தென்னிந்திய திருச்சபை தென்னிந்திய திருச்சபை நாளை முன்னிட்டு அதன் நோக்கமாய் ஒன்றிப்பு என்று தடையங்களை முன்னிறுத்தி இன்றைய வழிபாட்டில் நமது ஒன்றிப்பு எங்ஙனம் என்பதை ஈண்டு

### *1. இன்முகத்தோடு இணைந்த இறைப்பணி* (நெகே. 2:17)

இழிநிலையில் நாம் இருக்கிறோம் என்பதையும் எருசலேம் பாழடைந்து எருசலேம் பாழடைந்து கிடப்பதையும் அதன் வாயிற்கதவுகள் தீக்கிரையாக்கப்பட்டிருப்பதையும் நீங்களே பாருங்கள். இனியும் நமக்கு சிறுமை வராதபடி எருசலேமின் மதில்களை கட்டியெழுப்புவோம்.

எருசலேம் நகரம் பெரியது. ஆனால் மக்கள் மகாதீங்கையும் நிந்தைகளையும் அனுபவித்து சிதறுண்டிருக்கிறார்கள். இந்நிலையில் நெகேமியா அறிந்து எருசலேம் அரங்கம் அலங்கோலமாய் இடிக்கப்பட்டிருக்கிறது கண்டு கண்கலங்கி இறைவனிடம் நம்பிக்கை கொண்டு நோன்பிருந்து விண்ணக கடவுளிடம் மன்றாடுகிறார். மன்றாட்டில் நிலையோடே அரசனிடம் சென்று எருசலேம் நிலைக்கூறி அரங்கம் கட்ட அனுமதி பெறுகிறார். அந்த அனுமதியில் அகமகிழ்ச்சியோடு சிதறியிருக்கிற மக்களை பார்த்து இன்முகமாய் இடிந்த அலங்கத்தை கட்ட எழுந்து கட்டுவோம் என்று அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பை ஏற்று அந்த நல்ல வேலைக்கு தங்கள் கைகளை திடப்படுத்தினார்கள். ஓர்

நெகேமியாவால் அலங்கதை கட்டினது மட்டுமல்லாமல் சிதறுண்ட மக்களை ஒன்றுபடுத்தி இறைவனோடு வழிபட்டு மன்றாடினால் எருசலேமில் அலங்கம் பாழாய் கிடந்து புதிய அலங்கம் கட்ட ஒன்றித்து வெற்றி கண்டதுபோல நம் திருச்சபை வாழ்வில் இடிந்துபோன அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் பெற்ற தரணியில் உன்னத வாழ்வைப் பெற்று உயர்வோம். வாழ இன்முகமாய் இணைந்த இறைபணியை ஏற்று ஏற்றம் பெற்றிட நம்மை அர்ப்பணிப்போம்.

## *2. இயல்பு வேறுபாடுகளைக் களைந்து ஒன்றிணைந்த திருச்சபை* (உரோ. 8:33)

கடவுள் தேர்ந்து கொண்டவர்களுக்கு யார் குற்றம் சாட்ட இயலும்? அவர்கள் குற்றமற்றவர்கள் காட்டுபவர் கடவுளே.

நம் தென்னிந்திய திருச்சபை வேறுபாடுகளை களைந்து ஒன்றிணைந்த திருச்சபை விடவேண்டியவற்றைவிட்டு நாடவேண்டியவற்றை நாடி வாழ வேண்டியது நம் கடமை. இயேசுவின் சிலுவை துன்பங்களே கடவுளின் அன்பை நமக்கு வெளிப்படுத்தின. இந்த அன்பே சாவைக்கூட வென்றது. இதை நாம் உள்ளத்தில் தேக்கி வைத்தால் எந்தவித துன்பங்களையும் நாம் வென்றிட முடியும். இந்த அன்பே நம் வாழ்வின் தூண்டுகோலாகும். இந்த இறையன்பில் வெளிப்படும் இறையாற்றல் ஒரு மனிதனை முழுமையான வாழ்வுக்கு எடுத்து செல்கிறது. இந்த இறையன்பில் ஆற்றல் நம்மில் வெளிப்படும் போது சோதனைகளையும் வேதனைகளையும் கொண்டு வரும் காரணிகள் கரைந்து வாழ்வு சுவையேற்றப்பட்டு வாழும் திருச்சபை, சமூகம், குடும்பம் மாதிரியாகிறது. கிறிஸ்துவின் அன்பின் ஆற்றல் குற்றமற்ற நிலைகாட்டி மனிதனை இறையாற்றலாலே கவுரப்பட்டு நித்திய வாழ்வுக்கு ஆயத்தப்படுத்துகிறது. நம் வாழ்வில் கடவுள் காட்டும் நிலையான வாழ்வுக்கு ஒப்புக்கொடுப்போம்.

## *3. இறையரசை விரிவுப்படுத்த ஒன்றிணைந்த திருச்சபை* (லூக். 9:2)

இறையாட்சி பற்றி பறைச்சாற்றவும் உடல்நலம் குன்றியோரின் பிணிதீர்க்கவும் அவர்களை அனுப்பினார்.

இறைப்பணியானது இவ்வுலகில் மகத்துவம் பெற்ற பணியாக கருதப்பட்டு இறை நம்பிக்கையில் நலிவடைந்தோர்க்கு நம்பிக்கையூட்டும் பணியாய் இறையாட்சிக்குரியோரும் வாழ வழிகாட்டும் பணி என்பதையும் மறைநூல் நமக்கு கற்று தருகிறது. இந்த இறைப்பணி பொருள் பொதிந்த

வாழ்வை உயர்நோக்கோடு எடுத்து செல்லும் உயர்வான பணியாகும். இயேசுவோடு வாழ்ந்து பணி செய்த பன்னிரு திரு தூதுவர்கள் அனுப்பப்படும்போது சகல ஜாதியினருக்கு நற்செய்தி அறிவித்த படவேண்டும் என்று கட்டளை கொடுத்து இறையன்பில் அர்ப்பணிப்பின் பணிக்கு ஆயத்தப்படுத்துகிறார். இதிலிருந்தே பணிக்கு அடித்தளமிட்டு பிரிந்து கிடந்த அவலங்களை நற்செய்தி வாயிலாக ஒன்றிணைக்கிறார். சீடத்துவ பணியாளர்களை ஒன்றிப்பின் பணிக்கு முக்கியப்படுத்தி ஆயத்தப்படுத்துகிறார். இறைபணியில் மகத்துவத்தினர் இன்றும் தழைத்தோங்கி கொண்டிருக்க தென்னிந்திய திருச்சபை முன்னெடுத்து நிற்கும் ஒன்றிபின் அருட்பணியினை நிலைநாட்டி 70 ஆண்டை பூர்த்தி செய்து 71 வது ஆண்டில் காலடி எடுத்து வைத்து அன்பின் இறைப்பணிக்கு முன்னோடி திருச்சபையாக முன்மாதிரியாகிறது. தென்னிந்தியத் திருச்சபை இறையாட்சிப்பற்றி கரிசனை கொண்டு இறையன்பரின் அர்ப்பணிப்பின் பணியினை முக்கியப்படுத்தி உடல்நலம் குன்றியோரின் பிணிதீர்க்கவும், சகல பேர்க்கும் நற்செய்தி கொடுக்கவும், மனம்நலம் குன்றியோர்க்கு மறைநூல் வழியாய் மறை வளம் கொடுத்து மக்கள மனவளம் பெறவும், சிறார்கள் சிதறியும் பதறியும் விடாது சீராய் வாழ சீராய் வளர்த்த இயேசுவை போல் விசுவாசத்தில் வளர்ந்திடவும், இளையோரும், பெண்களும் நெறியோடு வளர்ந்திட நெறிக்கடிட்டு மறைபயிற்சிகளும் மனித வார்வில் மறையாட்சிக்குரியோரோ அடித்தளமிட்டு வாழ இறையன்பனின் அர்ப்பணிப்பின் பணிக்கு ஆயத்தமாக்குகிறது. இனியும் நமக்கு சிறுமை வராதபடி எருசலேமில் மதில்கள் கட்டியெழுப்புவோம். வாருங்கள் என்ற நெகேமியாவால் அறைகூவலுக்கு செவி சாய்த்து ஆழமான இறை நம்பிக்கையுடனே வாழ்வை எதிர்நோக்குவோம். இன்முகத்தோடு இணைந்த இறைப்பணியில் இயல்பு வேறுபாடுகளை களைந்தவர்களையும் இறையரசை விரிவுப்படுத்து பணியில் வழிபாட்டின் அன்பின் நிலை உணர்ந்து ஒன்றிணைந்த உள்ளத்தோடு மேற்கூறப்பட்ட காரணங்களை வாழ்வோடு இணைத்து இறையன்பின் அர்ப்பணிப்பின் பணிக்கு அர்ப்பணம் செய்வோம்.

திரு. J. **பிரபின் செல்வமணி**

30-09-2018

**முதியோர் ஞாயிறு**

# முதியோரின் ஞானம்

## THE WISDOM OF THE ELDERLY

தொநூ. 24:1-14 2திமொ. 1:3-14
திபா. 92 லூக். 1:5-7

***"அவர்கள் முதிர்வயதிலும் கனிதருவர்; என்றும் செழுமையும் பசுமையுமாயிருப்பர்."*** திபா. 92:14

வெ. இறையன்பு என்பவர் எழுதிய "அவ்வுலகம்" என்ற நூலில் "எங்கேயோ இருக்கும் செவ்வாய் கிரகத்தில் உயிர்கள் வாழ்கின்றனவா என்பதை அறிந்து கொள்வதில் காட்டும் அக்கறையை, நம்மோடு வாழ்கின்றவர்கள் எப்படி இருக்கின்றனர் என அறிவதற்கு நாம் காட்டுவதில்லை. உறவுகள் கசந்து போன காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். முதியவர்கள் வீடுகளில் இருந்து துரத்தப்படுகிறார்கள், பணத்தாசை குடும்பங்களை சிதறடித்து ரத்த உறவுகளை துண்டித்து தனி மரங்களாக்கி வருகிறது" என்கிறார். நாம் வாழும் காலத்தின் நிஜமான பிரதிபலிப்பே இந்நூல் கூறும் செய்தி. நம் குடும்பங்களில் தற்காலச் சூழலில் முதியோர்களுக்கு உரிய மரியாதை தரப்படுவதில்லை என்பது உண்மையே. ஒரு காலத்தில் முதியோர் இல்லங்கள் தேவையா? என்று கேள்வி எழுப்பினோம், தற்போது முதியோர் இல்லங்கள் A home away from home என்று மழுப்பலான பதில் கூறி முதியோர் இல்லங்களை ஏற்றுக்கொண்டோம். கல்வி, வேலை என்று காலத்தின் கட்டாயத்தில் பிள்ளைகள் தூர இடங்களிலோ, அயல் நாடுகளிலோ செல்லும் சூழல்களில் முதுமை பருவத்தில் வாழ்பவர்கள் தனிமை, வெறுமை, நோய்கள், குடும்ப பாரங்கள், வருமானமில்லா சூழல்களில் சிக்கி தவிக்கின்றனர்.

முதியோர்கள் குடும்பங்களில் அங்கமாக இருப்பது நம் அனைவருக்குமே ஆசீர்வாதம் என்பதே இன்றைய திருமறை தியானப் பகுதிகள் கற்றுத் தரும் செய்தி.

### *1. இறைநம்பிக்கையில் தலைமுறையை வளர்த்த முதியவர்* : (தொ.நூ. 24 : 7)

முதியோரின் ஆழ்ந்த அனுபவம் குடும்பங்கள் வாழவும் வளரவும் தலைமுறைக்கும் வழிகாட்டுகின்றது. குடும்பங்கள் ஆண்டவரில்

கட்டப்படவேண்டும் என்ற உயரிய நோக்கம் ஆபிரகாமின் வார்த்தைகளில் வெளிப்படுகின்றது. ஆபிரகாம் வாழும் தலைமுறைக்கும், வளரும் ஈசாக்கின் தலைமுறைக்கும் வழிகாட்டுகின்றார் ஆபிரகாமின் இரண்டு நிபந்தனைகள் "இக்கானான் நாட்டு பெண்களிடையே என் மகனுக்கு பெண்கொள்ள மாட்டாய்...." (தொ.நூ. 24:3). மேலும் "என் உறவினிடம் என் மகன் ஈசாக்கிற்கு பெண் கொள்வாய்" (தொ.நூ. 24:4). யார் இந்த கானானியர்? இவர்கள் நோவாவின் மகனாகிய காம் வழித்தோன்றல்கள். இந்த வம்சத்தில் வந்த கானான் காமின் மகன். நோவாவின் கரத்திலிருந்து சாபத்தை பெற்றுக் கொண்டவர் (தொ.நூ.9:10). இந்த வம்சத்தில் வந்தவர்கள் பாபேல் கோபுர கட்டுமான பணியிலும் ஈடுபட்டார்கள். இறைவனிடமிருந்து தண்டனையும் பெற்றார்கள். ஆகவே, ஆபிரகாம் கானானியரின் கலாச்சாரம், செயல்பாடுகளை அறிந்தவர். இந்த கானானிய கலாச்சார வாழ்வு விசுவாச வாழ்வுக்கு தடையாக மாறிவிடுமோ என்று எண்ணி ஈசாக்கிற்கு ஏற்ற துணை இறை அச்சம் நிறைந்த பெண்ணாக அமைவது நலம் என்று உறுதியாக தீர்மானம் எடுத்து, தன்னை அழைத்த ஆண்டவர் நடத்துவார், ஆண்டவரே அரண், அவரே என் நம்பிக்கை என்று இறை நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றார்.

முதியவராகிய ஏலியின் வழிகாட்டுதல் பெற்ற சாமுவேல் இறைசத்தம் கேட்டு இறைநம்பிக்கையில் வளரும் வாய்ப்பு பெற்றார். சிமியோனின் ஆசி இறைமகன் இயேசுவின் திருப்பணியையும், இறைநம்பிக்கையின் எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்தியது (லூக். 2:29-35). யாக்கோபு யோசேப்பின் புதல்வர்களுக்கும், தம் பிள்ளைகளுக்கும் ஆசி வழங்கி அவர்கள் அனைவரும் இறை நம்பிக்கையில் வளர தூண்டுகின்றார் (தொ.நூ. 48:49). முதியோரின் ஆழ்ந்த அனுபவமெனும் பொக்கிஷம் (Treasure of experience) நமக்கும் நம் எதிர்கால சந்ததிக்கும் கலங்கரை விளக்காக நிற்கின்றது. கலங்கரை விளக்கு எப்படி ஒளி கொடுத்து வழிகாட்டுகின்றதோ, அவ்வண்ணமே முதியோர்கள் ஆபிரகாம் அழைத்த ஆண்டவரின் செய்தியை மகனுக்கும், மருமகளுக்கும் கற்றுக்கொடுத்து மரபு சங்கிலி அறுந்துவிடாமல் காக்கின்றார். ஆபிரகாம் ஈசாக்கை இறைப்பற்றில் வளர தூண்டுகின்றார். இங்கே "**இளையோரின் வேகமும் முதியோரின் விவேகமும்**" இணைகின்றது, தலைமுறை இடைவெளி (Generation gap) மறைகின்றது; புதிய விசுவாச சமூகம் வளருகின்றது.

## *2. இறைநம்பிக்கையில் பேரனை வளர்த்த முதியவர் (மூதாட்டி) :* (2திமொ. 1 :5)

இன்றைய பெருபான்மையான இல்லங்களில் பாரம்பரிய, பரம்பரை கதைசொல்லும் முதியவர் இல்லை. மறுபுறம் முதியவர்கள் இல்லங்களில் வாழ்ந்தாலும் அவர்கள் பேரக்குழந்தைகளை காக்கும் ஆயாக்களாகவும், கதை கூறமுடியாத மௌனிகளாகவுமே உள்ளனர். திமொத்தேயு என்ற தலைவனை உருவாக்கியதில் ஒரு முதிய தாயார் சிறப்பிடம் பெறுகின்றார். சிறு வயது முதலே இறை வார்த்தைகளை மனதில் விதைத்து போதித்து இறை நம்பிக்கையில் வளர்த்து வார்த்தெடுக்கின்றார். ஆகவே, அருட்பணியாளர் பவுல் பாட்டியிடமிருந்த விசுவாசம் பேரனிடம் இருப்பதைக் கண்டு மகிழ்ந்து திமொத்தேயுவை இறை நம்பிக்கையில் நிலைத்து நிற்க தூண்டுகின்றார்.

திமொத்தேயுவின் பெற்றோர் இரண்டு கலாச்சார பின்னணியத்தை சார்ந்தவர்கள் (தி.ப. 16:1-3). இத்தகைய கலாச்சார பின் புலத்தை உடையவர் திருவசனத்தில் எப்படி தேர்ச்சி பெற்றார்? கிறிஸ்துவை மேசியாவாக எப்படி அடையாளம் கண்டார்? அவருடைய இல்லம் வசனத்தை கற்றுகொடுத்தது (2திமொ. 3:13). இறை நம்பிக்கையில் பேரன் வளர தூண்டுதலாய் நின்றது அவரின் பாட்டி லோயி (லோவிசாள்). அத்தகைய விசுவாசத்தை திமொத்தேயுவிற்கு நினைவூட்டி அதை அவரில் கண்டதை எண்ணி மெச்சுகின்றார். ஆம்! விசுவாச பண்பில் நம் இளைய தலைமுறையை பயிற்றுவிக்க நம் இல்லங்களில் தாத்தா, பாட்டிகளுக்கு இடம் உண்டா? ஒரு மோசேயை உருவாக்கிய தாயின் பங்கு! ஒரு திமொத்தேயு உருவாக்கிய பாட்டியின் பங்கு! ஒரு சாமுவேலை உருவாக்கிய ஏலி தாத்தாவின் பங்கு! நம் இல்லங்களிலும் இறை நம்பிக்கையை விதைக்கும் முதியவர்கள் உண்டு. ஆம்! முதியவர்களின் இறை நம்பிக்கை நம்மை, நம் தலைமுறையை நல்வழிபடுத்தும்.

## *3. இறைநம்பிக்கையில் நிலைத்திருந்த முதியோர் :* (லூக். 1 : 6)

உலகின் பார்வையில் முதுமை வீழ்ச்சியின் அடையாளமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இறைவன் முதுமையிலும் இறை நம்பிக்கை கொண்டோரை வளர்ச்சிக்கு நேராகவே நடத்துகிறார். செக்கரியா, எலிசபெத் தம்பதியினர் முதுமையிலும் இறைப்பற்றை விடவில்லை, இறைவனும் அவர்களை கைவிடவில்லை. இத்தம்பதியருக்கோ முதுமைகால துணையாக குழந்தை செல்வமில்லை, இருப்பினும் வழிபாட்டிலும், மன்றாட்டிலும் பங்கெடுப்பதை நிறுத்தவில்லை. இறைவன் கரத்தில் தம்மை தந்தவர்களை அவர் நடத்துகின்றார், புதிய ஆசியை

பொழிகின்றார். இறைவன் ஆபிரகாமை தெரிந்து கொள்வதும் பயன்படுத்துவதும் முதுமை காலத்தில் தான் (தொ.நூ. 12:4). முதுமையில் உயர்ந்த தரிசனங்களையும் கொடுத்து நீர் பயணித்து செல்லுமென்கிறார். இறைவன் ஆபிரகாமை வாழ அழைக்கிறார் வாழ்ந்து காட்ட பயிற்றுவிக்கின்றார். இவ்வுலகம் இளமையும், பன்முக திறமையும் உள்ளவர்களை தேடுகின்றது. இறைவன் தளர்ந்த, முதிர்ந்த மனிதர்களையும் பயன்படுத்துவேன் என்று கூறுகின்றார் இறைவன் வலியோரை வெட்கப்படுத்த, வலுவற்றவை என உலகம் கருதுபவற்றை தேர்ந்து கொண்டார் (1 கொரி 1:27).

முதுமை காலத்தில் மனித உறவுகள் ஏற்றுக்கொள்ளாமை, உடல் உள்ளம் தளர்ந்த நிலைமை, கோபம், தாழ்வு மனப்பான்மை, ஒன்றுக்குமே லாயக்கில்லையோ என்ற மனசோர்பு, பயம் என்று உணர்ச்சிகள் வெளிப்படும் காலம். இக்காலத்திலும் இறைவனோடு நடைபயிலுவோம், இறை நம்பிக்கையில் வளருவோம். நிச்சயம் "**முதுமை ஒரு புதுமை**" ஆகும்.

இறை நம்பிக்கையில் தினமும் நடைபயிலுவோம், இளமையோ! முதுமையோ! அவர்மீது பற்றுக்கொண்டு நடப்போர் நிச்சயம் "ஆண்டவரின் இல்லத்தில் நடப்பட்டோர்.....முதிர் வயதிலும் கனிதருவர்; என்றும் செழுமையும் பசுமையுமாயிருப்பர்" (தி.பா. 92:13,14).

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் பிச்சை எடுத்து வாழ்வை ஓட்டிக் கொண்டிருந்த முதியவர் ஒருவருக்கு ஒரு பெண்மணி அலுவலகம் செல்லும் சூழலில் உணவு கொடுத்தார், கொடுத்துவிட்டு புகைப்படம் எடுத்து முகநூலில் பதிவேற்றம் செய்தார்! என்ன ஆச்சரியம் இவர் ஒரு ஓய்வுபெற்ற ஆசிரியை என்று அவர்களிடம் பயின்ற மாணவ மாணவியரின் பதில் கிடைத்தது. இவர் பெயர் வல்சலை அம்மாள், கணக்கு ஆசிரியையாக 33 ஆண்டுகள் கணக்கு சொல்லி கொடுத்தவரின் வாழ்க்கை கணக்கு தவறாகிவிட்டது, கணவர் இறந்ததும், மகன் இவரை அம்மாவே இல்லை என சொல்வதைக்கூட புரிந்துகொள்ளும் மனநிலை கூட இவருக்கு இல்லை (தி இந்து (தமிழ்), நவம்பர் 23, 2017 நெல்லை பதிப்பு, பக். 10). இறைமக்களாகிய நாம் "....முதுமை அடையும் போது...இழிவாக எண்ணாது" (நீதி. 23:22). "முதியோரிடம் கடுமையாயிராதே, அவர்களை தந்தையராக மதித்து ஊக்குவி..." (1திமொ. 5:12).

முதியோரிடம் கொட்டிக் கிடக்கும் ஞானத்தை, அனுபவத்தை வாழ்வுக்கு சொந்தமாக்குவோம். இறைநம்பிக்கையுள்ள சமூகத்தை உருவாக்குவோம்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

| 07-10-2018 | **இறைமக்கள் ஞாயிறு** |
|---|---|

# இறைமக்களின் திருப்பணி

## MINISTRY OF THE LAITY

| | |
|---|---|
| 1 சாமு. 25:14-28 | 1 தெச. 4:1-12 |
| தி.பா. 23 | லூக். 10:25-37 |

***"...அவருக்கு இரக்கம் காட்டியவரே என்றார். நீரும் போய் அப்படியே செய்யும் என்று கூறினார்."*** **லூக். 10:37**

திருப்பணியில் இறைமக்களின் பணி என்பது முக்கியமானதாகும்.
ஒருங்கிணைத்தல்
நற்செய்தி அறிவித்தல்
மனித மாண்புக்கும், மனித விழுமியங்களுக்கும் உந்துதலாக இருத்தல்

OWEN C. THOMAS : என்பவர் திருப்பணி என்பது திருச்சபையின் அடையாளத்தில் நிறைவேற்றப்பட வேண்டியது என்கிறார். இறைமக்கள் எனக் குறிப்பிட பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை "லெயிட்டோஸ்" என்பதாகும். இது 'Prisbetros' என்ற வார்த்தையோடு தொடர்புடையது. குருத்துவப் பணியில் ஆயர்கள் Presbyter இறைமக்கள் Laitos அழைக்கப்படுகின்றனர். திருப்பணியை நிறைவேற்றுவது அனைவரது பொறுப்பாகும். திருப்பணியில் திருச்சபையின் பணி என்பது மிக முக்கியமானதாகும். 1பேது. 2:9-ல் இறைமக்கள் அனைவரும் அரசக் குருக்களின் கூட்டத்தினர் என்கிறார். திருச்சபையில் மந்தைகளாகவும் உலகிலே அரசக் குருக்களாகவும் செயல்பட வேண்டியவர்கள். தி.வெ. 1:6 நம் கடவுளும் தந்தையுமானவருக்கு ஊழியம் புரியும் குருக்களாக ஏற்படுத்தினார். இதையே 5:10; 20:6 -லும் குறிப்பிடுகிறார். அப்படியெனில் இறைமக்களின் பணி என்ன?

### *1. உறவுகளைக் கட்டுகின்ற பணி* : (1 சாமு. 25 : 14-28)

உணவு இல்லாமல் கூட வாழலாம் ஆனால் உறவுகள் இல்லாமல் வாழ முடியாது. அத்தகைய உன்னதமான பணியே இறைமக்களின் பணியாகும். 1சாமு. 25:14-28 -ல் சிறப்பான செய்தியை அறிவிக்கிறது. கர்மேலில் சொத்துக்களை உடைய நாடாய் செல்வ செழிப்புடன் இருந்தான். தாவீதும் அவனோடுயிருந்தவர்களும் அவ்விடத்தில் இருந்த போது "நாபாலின்" வேலைக்காரர்களுக்கு ஆதரவாகவும், உடைமைகளுக்கு பாதுகாவலராகவும் இருந்தவர்கள்.

உரோமம் கத்தரிக்கும் விழாவின் ஆயத்த நிலையின் போது தாவீது 10 வாலிபர்களை அனுப்பி சில ஆடுகளைக் கேட்கக் கூறுகிறார்.

ஆனால் நாபாலோ அவர்களை அவமானப்படுத்தி அனுப்பி விட்டான். தாவீதைக் கொச்சைப்படுத்தினான். இந்தச் செய்தியைக் கேட்ட தாவீது சீற்றம் கொண்டு 400 பேருடன் புறப்பட ஆயத்தம் செய்கிறார்.

இந்நிலையில் தான் அபிகாயில் துரிதமுடன் செயல்படுகிறாள். 1சாமு. 25:23 இல் கழுதையினின்று வேகமாக இறங்கி அவர்முன் தரையில் முகக் குப்புற விழுந்து வணங்கினார். 24-ல் பழி என்மேல் மட்டும் இருக்கட்டும். ஞானத்துடனும், அறிவுக் கூர்மையுடனும் பேசுகிறாள். 26-ல் நீர் இரத்தத்தைச் சிந்தாதவாறும், நீர் உம் கைகளினால் பழிக்குப்பழி வாங்காதவாறும் உம்மைத் தடுத்தவர் ஆண்டவரே. சினம் சீற்றமாகி பகைமையாகிறது. அது கொலையாக மாறிவிடாமல் சமாதனக் கருவியாக முந்திக் கொள்கிறாள். பகை நிறைந்த இடத்தில் (உலகத்தில்) சமாதானத்தைக் கட்டும் பணி இறை மக்களின் பணியாகும். லூக். 10:5 எந்த வீட்டில் சென்றாலும் இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக எனக் கற்றுக் கொடுத்தார். 2கொரி. 5:18,19 -ல் பவுலார் இரு உண்மைகளைச் சொல்லுகின்றார்.

ஒப்புரவாக்கும் திருப்பணி
ஒப்புரவுச் செய்தியை ஒப்படைத்தார்

அப்படியெனில் ஒப்புரவாக்குதல் என்பது வார்த்தையிலும், செயலிலும் வெளிப்பட வேண்டும். இறைமக்களின் பணி உறவைக் கட்டுவதே.

***2. உடைவுகளைக் கட்டும் பணி*** : (லூக். 10 : 25-37)

நல்ல சமாரியனின் நற்செயலை குறிப்பிடும் இயேசு கிறிஸ்து இத்தகைய சிறப்புப் பெற குற்றுயிராய் இருந்தவரிடம் காட்டிய மனதுருக்கமே (Compassion). மனதுருக்கத்தின் சரியான விளக்கம் "குடல் துடிப்பு" "நெஞ்சம் பதறுதல்" 1அரச. 3:26-ல் இதை அறியலாம். குழந்தையை இரண்டாக வெட்டி..... அரசர் குறிப்பிட்ட போது உண்மையான தாயின் "குடல் துடிப்பு" "நெஞ்சம் பதறுதல்" குழந்தைக்காக துடிக்கும் தாயின் செயலே மனதுருக்கத்தின் சரியான விளக்கம். திருப்பணியின் பார்வை இதுதான். மத். 9:36 திரண்டிருந்த மக்கள் மேல் பரிவு கொண்டார். 9:35 அவர்களை ஆரோக்கியப்படுத்தினார். இந்தப் பரிவு தான் இறைமக்களின் திருப்பணி. சோமாலியா நாட்டில் பஞ்சம் தண்ணீர் கூட

இல்லை. மாட்டின் சிறுநீரைக் குடிக்கும் அவலம். கெய்லி நாட்டில் சாப்பாடு இல்லாமல் களிமண்ணிலே கேக்காக சாப்பிடும் நிலை நம்மைச் சுற்றிலும் உடைவுகளோடு காணப்படும் மக்கள். நல்ல சமாரியனின் மனதுருக்கம் எல்லாவற்றையும் இழக்க உந்துகின்றது. இயேசு கிறிஸ்துவில் காயம் கட்டும் உன்னதமான பணி செய்வது தான் முக்கியம்.

***3. உலகத்தைக் கட்டும் பணி*** : (1தெச. 4 : 11,12)

திருச்சபைக்கு வெளியே இருக்கிறவர்களின் நன்மதிப்பைப் பெறுகின்ற வகையில் செயல்படுதலே சிறப்பு. உலகத்திற்கு கிறிஸ்துவை அறிவிக்கும் பணி. ஆகவே தான் இயேசு கிறிஸ்து பூமிக்கு உப்பு உலகத்திற்கு வெளிச்சம் என்றார். பக்தர் இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களே....எனப் பாடுகிறார். இறைமக்களின் இறைப்பணியில் வெளிப்படுத்தும் அடையாளச் செயல் பாலமாகச் செயல்படும் பணியே. அதாவது உறவுகளுடன், உணர்வுகளினூக்கமாக செயல்படும் உன்னதப் பணி. அப்ணியில் தான் மக்கெதோனியா மக்கள் தங்களையே கொடுத்தார்கள். எந்த நிலையில் என்றால் உபத்திரவம், கொடிய தரித்திரம் என்ற நிலைகளிலும் தளர்வுற்றுப் போகாமல், தனித்துவத்துடன் உன்னத பணியால் உயர்ந்து நின்றார்கள். இம்மக்கள் தயாளத்துவத்தை தெசலோனிக்கேய இறைமக்களுக்குத் தெளிவுபடுத்தி அவர்களையும் ஊக்கப்படுத்துகிறார் தூய பவுலடியார். 1தெச. 1:58-ல் ஏனெனில் நாங்கள் நற்செய்தியை... நாங்கள் எடுத்துச் சொல்ல வேண்டிய தேவையே இல்லை எனக் குறிப்பிடுகிறார். மிகுந்த வேதனை நடுவில் ஏற்றுக் கொண்டார்கள் பின்பற்றினார்கள் முன்மாதிரியானார்கள். எதிர்பாராமல் ஆண்டவருக்கு மகிமையாய் நிறைவேற்றும் சிறப்புமிகுப் பணிவிடை என்ற நிலையிலே தெசலோனிக்கேய திருப்பணி தொடர்ந்தது. அவ்வாறே இன்றைய நாட்களிலும் இறைமக்களின் திருப்பணி இத்தகைய தன்மைகளை உள்ளடக்கி இருத்தல் வேண்டும் என எதிர்பார்ப்புடன் தூண்டப் பெறுகிறோம். திருப்பணியைக் குறிப்பிட்ட எல்கைக்குள் சுருக்கிக் கொள்ளாமல் இறைக் கட்டளையேற்று உலகின் எல்லை வரைக்கும் படர்ந்து விரியட்டும். வீழ்ந்தவர்களாய், விடியலைக் காண இயலாதவராய் விரக்தியுடன் வாழும் எண்ணற்ற மக்களின் இதயத்தில் இறை நம்பிக்கையை ஊன்றிடுவோம். எழும்பு எழும்பு என்ற குரலில் இயக்கமுள்ள வாழ்வுக்கு ஏணிப்படிகளாவோம், இறையரசின் பணியாளராய் இவ்வுலகை இறையவருக்கு சொந்தமாக்கிடுவோம்.

அருள்திரு. முனைவர் **முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்**

# மாற்றுத்திறனுடையோர் : மாண்பும், சார்பும்
## DIFFERENTLY ABLED : DIGNITY AND DEPENDENCE

விப. 4:10-17 திப. 3:1-10
திபா. 103:1-33 மத். 17:14-21

**"...நானே உன் நாவில் இருப்பேன்."** விப. 4:12

இறைவன் மனிதரைத் தம் உருவிலும், சாயலிலும் உருவாக்கினார். அவரது உரு என்பது (ரூபம்) இயல்பையும், சாயல் என்பது அவரைச் சார்ந்து வாழ வேண்டியதன் அவசியத்தையும் அவரது மாண்பை வெளிப்படுத்த வேண்டியதின் பொறுப்பையும் சுட்டிக் காட்டுகிறது. படைப்பிலேயே மனிதரில் இறைவனின் ஆளுமையும், ஆற்றலும் இயல்பிலேயே இணைந்து மனிதனைப் பொறுப்புடையவராகவும், சிறப்புடையவராகவும் உருவாக்கி விடுகின்றன. எனவே மனிதர் குறைவில்லாத, முழுமையான, சுகவாழ்வு வாழ வேண்டியது மிக முக்கியமானதாகும். உடலில் குறை ஏற்பட பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவை நலவாழ்வுக்கு ஊறுவிளைவிப்பது உண்மையே. இந்நிலையில் உடலில் ஏற்படுவது குறையன்று. உள்ளத்தில் ஏற்படுவதே குறை எனும் கூற்றை உறுதிப்படுத்துகின்ற வகையில் இத்தகையோர் மாற்றுத்திறனுடையோர் எனும் சிறப்புடன் அறியப்படுகின்றனர். சமூகத்தில் இவர்கள் முழு மனிதர்களாக மதிக்கப்பட வேண்டும். இவர்களில் மறைந்திருக்கும் திறமைகள் வெளிக்கொணரப்பட வேண்டும். இவர்களும் இறைவனின் அன்புக்குரியவர்களே என்பது அனைவருக்கும் சொல்லப்பட வேண்டும். மாற்றுத்திறனுடையோர் மாண்பு குறித்து இன்றைய திருமறைப் பகுதிகள் துணையுடன் சிந்தனை செய்வோம்.

### *1. "அவன் உனக்கு வாயாக இருப்பான்"* : விப. 4:16

"அவன் உனக்கு வாயாக இருப்பான் என்பது ஆண்டவரின் அருள்வாக்காகும்"

சாதனை வீரனாய் இஸ்ரயேலரின் சரித்திரத்தில் இன்றுவரை மதிக்கப்படும் சரித்திர நாயகன் மோசே. பாலை நிலத்தில் பற்றியெரிந்தும் தீய்ந்துப் போகாத முட்புதரின் அரிய காட்சி வழி இறைஅழைப்பைப் பெற்றும் அதனை முழுமையாய் ஏற்க, தனது இயல்பையும்,

இயலாமையையும் (4:10) இறைவனிடம் தெரியப்படுத்தினார். அதற்கு ஆண்டவர் "மனிதனுக்கு வாய் அமைத்தவர் நானே," நீ இப்போதே போ, நான் உன் நாவில் இருப்பேன், நீ பேசவேண்டியதை உனக்குக் கற்பிப்பேன் என்றார். உன் சகோதரன் ஆரோன் நாவன்மை உடையவன். அவன் உனக்கு வாயாக இருப்பான் (4:16) என்று கூறி தைரியப்படுத்தினார்.

இறைவன் நமது இயல்பையும், இயலாமையையும், இல்லாமையையும் அறிந்தே நம்மிடம் பொறுப்புகளை ஒப்படைக்கிறார். திறனற்ற மோசே தன்னைத் திறனாய்வு செய்தபோது இறைவன் மாற்றுத்திறனை ஏற்பாடு செய்கிறார். மோசேயின் கையிலிருந்த சாதாரண கோலை, அசாதாரண காரியங்களைச் செய்யும் அதிசயக் கோலாக மாற்றினார். இறைமக்கள் மிகப்பெரிய விடுதலையைப் பெற்றனர். அவரால் செய்யக்கூடாத அதிசயம் ஒன்றுண்டோ? நம்மையும் அவர் தம் சித்தப்படி முழுமையாய்ப் பயன்படுத்த மறுபடியும் அர்ப்பணித்து திறனுடையவர்களாவோம்.

### *2. "என்னிடம் கொண்டு வாருங்கள்"* : மத். 17:17

இது அருள்நாதர் இயேசுவின் கட்டளையாகும் வலிப்பு நோயால் பெரும் துன்பத்தை அனுபவித்த சிறுவனின் தந்தையின் வேண்டுதலுக்கிணங்கி இயேசு பிறப்பித்த கட்டளை இது. இவ்வுலகில் நோயினாலும், பேயினாலும் பாதிக்கப்பட்டவர்கள் மாண்புடனும், மதிப்புடனும், மரியாதையுடனும் வாழ வேண்டும் என்பதில் இறைமகன் இயேசு மிகவும் கருத்தாயிருந்தார். விடுதலை, மறுவாழ்வு என்பவைகள் அவரது பணி அறிக்கையில் இடம் பிடித்துள்ள முக்கியமான கரிசனைகளாகும் (லூக். 4:18,19). உடல் குறைபாடு உடையோர் அனைவரும், பாவிகள், சாபத்துக்குரியோர் (லேவி. 21:17-22). எனவே ஆலயம் செல்லவோ, அருட்பணிகளை நிறைவேற்றவோ அனுமதி இல்லை. மாமன்னர் தாவீதும் மாற்றுத்திறனுடையோரை அவமதித்ததாக திருமறையில் குறிப்பு உண்டு (2சாமு. 5:6-10). ஆனால் தாவீதின் குமாரன் (மத். 1:1) என மதிப்புடன் அழைக்கப்படுகிற அருள்நாதர் இயேசு மாற்றுத்திறன் படைத்தோரை ஆலயத்தினுள் அனுமதித்தார் (மத். 21:14).

பாவத்தின் பக்கவிளைவே இவ்வுலகின் அலங்கோலங்களாகிய பசியும், பற்றாக்குறையும், பிணியும், மரணமும் என்பதைத் திருமறை பல சான்றுகளுடன் உறுதி செய்துள்ளது. பாவத்துக்கும் நோய்க்கும் நெருங்கிய உறவு இருப்பதை உன்னிப்பாகக் கவனித்தால் உய்த்துணர நம்மால் முடியும்.

ஆயினும் இறைமகன் இயேசுவின் இரக்கம், என்னிடம் கொண்டு வாருங்கள் எனும் கரிசனையை வெளிப்படுத்தி சுகவாழ்வை அருள்கின்றது. தாவீது கூறுகிறார், அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார். உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார் (திபா. 103:3). மாற்றுத்திறனுடையோர் முழுநலம் பெறுவதே மேசியாவின் பணி நிறைவேற்றம் என்று யோவானுக்கு இயேசு உணர்த்தினார் (மத். 11:1-6). இயேசு குணமாக்குகிறார். நமது குறைவுகளை அவரிடம் கொண்டு வருவோம்.

### 3. *“என்னிடம் உள்ளதை உன்னிடம் கொடுக்கிறேன்”* :

(திப. 3:3)

இது திருத்தூதரின் வாக்குறுதியாகும். இல்லாமையிலிருந்து எல்லாவற்றையும் தமது வார்த்தையினால் உருவாக்கிய அனைத்து ஆற்றலும் பொருந்திய “இருக்கின்றவராகவே இருக்கின்றவர்” (யாத். 3:14) என்று தம்மை மோசேக்கு அறிமுகப்படுத்திய இறைவனும், அவரது திருமகனாகிய அருள்நாதர் இயேசுகிறிஸ்துவும் மாற்றுத்திறனுடையோர் மாண்புடன் வாழ வழிநின்றது போன்று திருத்தூதர்களும் ஆவியாரின் பெலத்துடன் அருட்பணியை நிறைவேற்றினர்.

ஒரு நாள் இறைவேண்டல் செய்யும் நேரமாகிய பிற்பகல் 3 மணிக்கு பேதுருவும், யோவானும் எருசலேம் கோவிலுக்குச் சென்றனர். அப்பொழுது பிறவியிலேயே நடக்கவியலாதிருந்த ஒருவர் அவர்களிடம் பிச்சை கேட்டார். பேதுரு அவரிடம், வெள்ளியும், பொன்னும் என்னிடம் இல்லை. என்னிடம் உள்ளதை உனக்குத் தருகிறேன், நாசரேத்து இயேசுகிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும் என்று கூறி அவரது வலக்கையைப் பற்றிப் பிடித்துத் தூக்கிவிட்டார். உடனே அவரது காலடிகளும், கணுக்கால்களும் வலுவடைந்தன (3:7) அதுவரை அடுத்தவர்களின் தயவினால் வாழ்ந்தவர் இப்போது ஆண்டவரின் பெலத்தால் தன் சொந்தக்காலில் நின்றார். அங்கவீனர்களுக்கு அத்தியாவசியத் தேவை அங்கீகாரமே. பிச்சைக் காசைக் கொடுத்து அவர்களது திறமையைக் கொச்சைப்படுத்தாது மறுவாழ்வு கொடுப்பது திருச்சபையின் விசுவாசக் கடமை. அப்போஸ்தலர்களின் அன்புகலந்த நற்கரிசனையும், ஆவியுடனான தூரக்காட்சியும் அங்கவீனமான மனிதனுக்குள் மாண்பையும், மதிப்பையும், பொறுப்பையும், சிறப்பையும் ஏற்படுத்தினது (3:8).

'ஊனம்' இன்றைய சூழலில் எதனால் ஏற்படுகின்றது என்ற அறிவும், விழிப்பும் அனைவருக்கும் அவசியம். உணவு, தண்ணீர், காற்று, ஒலி போன்றவைகளில் ஏற்படும் மாசுகளினாலும், பாக்கு, புகையிலை, போதைப் பொருட்களினாலும், தூய்மையற்ற, ஒழுங்கீனமான உறவுகளாலும் அடி, தடி, சண்டை, போர், பயங்கரவாதம்,போன்றவைகளாலும் அங்கவீனம் ஏற்படுகின்றது. இவைகளைத் தவிர்ப்பதும், அகற்றுவதும், அதனால் பாதிக்கப்பட்டோரை மீட்டெடுப்பதும், மாண்புடன் இறைவனைச் சார்ந்து மாற்றுத்திறனுடையோராய் வாழ்வதைத் திருச்சபை உறுதிப்படுத்த வேண்டும். "இவர்கள் என் சகோதரர்கள்" (மத். 25:40) என அடையாளப்படுத்தி அங்கீகரித்தார். அத்திருப்பணியை இறைமக்களாய் இணைந்து தொடர்ந்து நிறைவேற்ற உறுதி எடுப்போம்.

அருள்திரு. D. **ஜாண் ஜெப தாஸ்**

14-10-2018

N.M.S. **ஞாயிறு**

# அருட்பணிக்கான இறையனுப்புதல்

விி. ப. 3:1-10 | 2திமொ. 5:1-5
தி.பா. 68:1-11 | லூக். 10:1-9

**"நான் உன்னை....அனுப்புகிறேன்."** விப. 3:10

எபிரேய மக்கள் எகிப்தில் மனிதமாண்பு இல்லாமல் அடிமைகளாக நடத்தப்பட்ட காலத்தில் இறைவன் மோசேயை அழைத்து, பயிற்றுவித்து விடுதலைப் பணிக்காக அனுப்புவதை இப்பகுதியில் படிக்கிறோம். மோசேயின் வாழ்வை மூன்று கட்டங்களாக பிரிக்கலாம்.

(a) எகிப்தில் அரண்மனை வாழ்வு (b) மீதியான் நாட்டில் மேய்ப்பு தொழில் மற்றும் குடும்பத் தலைமை பொறுப்பு. (c) இஸ்ரயேலரை வழிநடத்தும் தலைவர். இந்த மூன்றாம் நிலை ஒரேப்பில் கடவுள் மோசேயை சந்திப்பதிலிருந்து தொடங்குகிறது. இஸ்ரயேல் மக்களின் புலம்பலைக் கேட்டக் கடவுள் தாம் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார். இஸ்ரயேலரை பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து மீட்பதற்காக தீயின் நடுவில் தோன்றி இப்போதே போ என்று ஆணையிடுகிறார். விடுதலைப்பணிக்காக இறைவனால் அனுப்பப்பட்ட மோசேக்கு காலதாமதம் செய்வதற்கான வாய்ப்பு தரப்படவில்லை. காலதாமதம் செய்யும் ஒவ்வொரு நிமிடமும் இஸ்ரயேலர் எகிப்தில் அதிகமாக துன்புறுவர் என்பதை அறிந்த ஆண்டவர் மோசேயை விடுதலைப் பணிக்காக துரிதப்படுத்துகிறார். ஆனால் மோசே கடவுள் இஸ்ரயேலர் மீது கொண்டிருந்த கரிசனையையும், துரிதப்படுத்துவதற்கான அவசரத்தையும் உணராமல் சாக்குப்போக்குகளைச் சொல்லி ஐந்து முறை கடவுளின் அனுப்புதலை ஏற்காமல் விலகிச் செல்ல முயன்றார்.

1. முதல்முறை மோசே விடுதலைப் பணிக்கு தலைமையேற்க தமக்கு தகுதியில்லை என கூறி நான் எம்மாத்திரம் என்றார். பார்வோனிடம் செல்வதற்கும், இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்துப் போவதற்கும் நான் யார்? என்றார். (விப. 3:11)

2. இரண்டாவது முறை மோசே கடவுள் அனைத்தையும் கடந்தவர், மனித அறிவுக்கு அப்பாற்பட்டவர், அவர் பெயர் யாவே இந்த மறைபொருளை கூறுவதற்கு எனக்கு தெரியாது என கூறுகிறார். இதோ இஸ்ரயேல் மக்களிடம் சென்று உங்கள் மூதாதையரின் கடவுள் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார் என்று நான் சொல்ல, அவர் பெயர் என்ன? என்று அவர்கள் என்னை வினவினால், அவர்களுக்கு என்ன சொல்வேன் ? (விப. 3:13)

3. மூன்றாவது முறை கடவுளை தாம் கண்டதாக கூறினால் நம்ப மாட்டார்கள் எனக் கூறுகிறார். மோசே இதோ அவர்கள் என்னை நம்ப மாட்டார்கள்; என் பேச்சைக் கேட்கவும் மாட்டார்கள். ஏனெனில் ஆண்டவர் உனக்கு காட்சியளிக்கவில்லை என்று சொல்வார்கள் (விப. 4:1)

4. நான்காவது முறை மோசே தாம் தலைமையேற்கும் தகுதியும் அதற்குரிய மொழி புலமையும், பேச்சுத்திறனும் இல்லை என கூறி நாவன்மை அற்றவன் என்றார். மோசே ஆண்டவரிடம்: ஐயோ! ஆண்டவரே! நீர் உமது அடியானிடம் பேசுவதற்கு முன்போ, பேசிய பின்போ, நாவன்மை அற்றவன் நான்! ஏனெனில், எனக்கு வாய் திக்கும்; நாவும் குழறும் என்றார். (விப. 4:10).

5. ஐந்தாவது முறையும் மோசே விடுதலைப் பணியும் இஸ்ரயேலருக்கு தலைமை கொடுப்பதும் மிகவும் சிரமமானது என நினைத்து வேறு ஒருவரை அனுப்பும் என்கிறார். ஆண்டவரே தகுதியுடைய வேறு ஒருவரை நீர் இப்போதே அனுப்பி வைப்பீராக! (விப. 4 :13).

மோசே ஐந்து முறை சாக்குபோக்கு கூறி கடவுளின் அனுப்புதலுக்கு கீழ்படியாமல் விலகிச் செல்ல முயன்ற போதும் கடவுள் மோசேயை திடப்படுத்தி, ஆரோனின் பராமரிப்பில் ஒப்படைத்து மீட்பு பணிக்காக அனுப்புகிறார். இங்கு அழைத்து அனுப்பும் கடவுள் பணிச்சூழலுக்கு ஏற்ற ஆற்றலை தருபவர் என்பது உறுதி செய்யப்படுகிறது.

அருட்பணி உள்ளூர் திருச்சபைகள் மற்றும் திருமுழுக்குப் பெற்ற அனைத்து விசுவாசிகளின் கடமை என்பதை அறிந்திருக்கும் நாம் எந்த சூழ்நிலையிலும் கடவுளுடைய அனுப்புதலுக்கு கீழ்ப்படியாமல் விலகிச் செல்ல இயலாது. கடவுளின் அனுப்புதலுக்கு கீழ்ப்படிய தேவையான சில பண்புகளை விளக்கமாக குறிப்பிட விரும்புகிறேன்.

## *1. அனுப்புதலை ஏற்க தடையாக இருப்பவற்றை விட்டு விடல் :*

மோசேக்கு இறைவன் காட்சி வழங்கிய நேரத்தில், அவர் தனது மாமனார் எத்திரோவின் பராமரிப்பில் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து ஆடு மேய்க்கும் தொழிலைச் செய்து வந்தார். மோசேக்கு மாமனார் வீடு, தொழில், குடும்பம் அனைத்துமே அனுகூலமாக இருந்தது. இத்தகைய மகிழ்ச்சியான சூழலிலிருந்து சவால் நிறைந்த விடுதலைப் பணிக்கு புறப்பட கடவுள் ஆணையிடுகிறார். கடவுளின் அனுப்புதலை ஏற்க மோசே தனக்கு இதமாக இருந்த அனைத்தையும் விட்டுவிட வேண்டியிருந்தது.

தொடக்க நூல் 12 :1இல் ஆண்டவர் ஆபிராமை நோக்கி, உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல் .

கடவுளின் ஆணை பெற்ற ஆபிரகாம் கடவுளின் அனுப்புதலுக்கு பரிபூரணமாக கீழ்ப்படிந்து தன்னுடைய நாடு, இனம், தந்தை வீடு அனைத்தையும் விட்டுவிட்டு தாம் போகும் இடம் இன்னதென்று தெரியாமல் புறப்பட்டுச் சென்றார். லூக்கா 9:3இல் இயேசு தமது சீடர்களிடம், பயணத்திற்குக் கைத்தடி, பை, உணவு, பணம் போன்ற எதையும் எடுத்துக்கொண்டு போக வேண்டாம். ஓர் அங்கி போதும். என்றார். மகிழ்ச்சியான பயணத்திற்கும், திருப்பணிக்கும் தடையாக இருக்கிறவைகளுக்கு முன்னுரிமை கொடுக்காமல் அவற்றை விட்டு விட்டு நற்செய்தி அறிவிப்பு பணியில் ஈடுபட ஊக்குவிக்கிறார்.

பவுல் தீமொத்தேயுவிடம் (1திமொ 6:10,11) உலகப்பற்று, தீய நாட்டம், பொருளாசை, வீண் பேச்சு முரண்பாடான கருத்துக் கூறல் போன்ற அனைத்திலிலிருந்தும் விலகியிரு என்றும், கிறிஸ்துவுக்கு சாட்சி பகருவதற்கும், கடவுளின் கருவியாக இருந்து கிறிஸ்தவ நம்பிக்கையை இறைமக்கள் வாழ்வில் ஆழப்படுத்துவதற்கும் தடையாக இருக்கும் அனைத்தையும் தவிர்க்க வேண்டும் என திட்டவட்டமாக கூறுகிறார்.

நமது வாழ்வில் உலகப்பொருள் மீதான மிதமிஞ்சிய ஆர்வத்தால் கடவுளுக்கு கொடுக்க வேண்டிய இடத்தை உலகப்பொருளுக்கு கொடுத்துவிடாமல் இறை அனுப்புதலை முழுமனதோடு ஏற்க அறிவுறுத்தப்படுகிறோம்.

## 2. கடவுளின் தரிசனத்துக்குக் கீழ்ப்படிதல் :

கடவுளின் காட்சியை பெறுதல் ஒரு அடையாளமாக இல்லாமல் ஆழமான ஆன்மீக உணர்வாக அமைந்துள்ளது. கடவுளை நேரிடையாக காணும் காட்சியில் தான் நற்செய்தியை அறிவிப்பதற்கான கடவுளின் அழைப்பையும் நாம் உணர முடியும். அப்போது ஆண்டவரின் தூதர் ஒரு முட்புதரின் நடுவே தீப்பிழம்பில் அவருக்குத் தோன்றினார். அவர் பார்த்த போது முட்புதர் நெருப்பால் எரிந்து கொண்டிருந்தது. ஆனால் அம்முட்புதர் தீய்ந்து போகவில்லை (விப. 3:2.)

கடவுள் மோசேக்கு எரியும் தீப்பிழம்பின் வழியாக காட்சியளித்து இஸ்ரயேலரை எகிப்திலிருந்து விடுவிக்கும் விடுதலைப் பணிக்கு பிரித்தெடுக்கிறார்.

திருத்தூதர் பணிகள் (அப்போஸ்தலர்) 26ஆம் அதிகாரத்தில் கைதியாக இருந்த பவுல் தன்னுடைய அழைப்பை குறித்து அகிரிப்பா அரசனிடம் கூறும் போது, கடவுளிடமிருந்து கிடைக்க கூடிய தரிசனத்தின் முக்கியத்துவத்தையும் அந்த தரிசனத்துக்கு கீழ்படிய வேண்டியதின் கட்டாயத்தையும் வெளிப்படையாக அறிவிக்கிறார்.

தமஸ்குவுக்கு வேறு நோக்கத்தோடு பயணித்து கொண்டிருந்த போது தான் பெற்ற தரிசனத்தை சித்தரிக்கும் பவுல், இந்த தரிசனத்தின் வழியாக கடவுளின் அழைப்பு, கடவுளின் தெரிவு, கடவுளின் அனுப்புதல் ஆகிய அனைத்தும் தனக்கு கிடைத்ததாக எடுத்துரைத்து, அந்த பரம தரிசனத்துக்கு கீழ்படியாமலிருக்க முடியாது என்ற தனது நிலைப்பாட்டை திட்டவட்டமாக எடுத்துக் கூறுகிறார்.

இன்று திருச்சபைகளுக்கும், திருமுழுக்கு பெற்ற அனைத்து இறைமக்களுக்கும் அருட்பணிக்கான தரிசனம் தரப்பட்டுள்ளது. இந்த தரிசனத்துக்கு நாம் அணை போட முடியாது. இது கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்கும் அனைவருக்கும் தரப்படுகின்ற இறைவனின் கொடையாகும். கடவுளின் தரிசனத்துக்கு கீழ்ப்படிந்து அவரது அனுப்புதலை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் நற்செய்தி சமுகமாக மாறுகிறார்கள்.

## 3. அருட்பணிக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துதல்:

அடிமை நிலையில், ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்டு, நம்பிக்கையிழந்த நிலையில் வாழ்ந்த இஸ்ரயேலரை விடுவிக்கும் பணி தமக்கு

தரப்பட்டதையும் அதற்காகவே தாம் அனுப்பப்பட்டுள்ளதையும் மோசே உணர்ந்த போது தனக்கு கிடைத்த வாய்ப்பை நழுவவிடாமல் விடுதலைப் பணிக்காக புறப்பட்டார். மோசே தம் மாமனார் இத்திரோவிடம் திரும்பிச்சென்று, அவரை நோக்கி, எகிப்தில் உள்ள என் இனத்தவரிடம் நான் திரும்பிப் போகவும், அவர்கள் இன்னும் உயிரோடு இருக்கிறார்களா என்று பார்க்கவும் வேண்டும் என்று கூற, இத்திரோ மோசேயைப் பார்த்து, சமாதானமாய்ப் போய்வா என்றார்.(விடுதலைப்பயணம் 4:18).

மாற்கு 6:30-44 வரையுள்ள நற்செய்தி பகுதியில் இயேசுநாதர் தனக்கு அருட்பணியாற்ற கிடைத்த வாய்ப்பை நழுவவிடாமல் எப்படி பயன்படுத்தினார் என்பது சித்தரிக்கப்பட்டுள்ளது.

இயேசு தனிமையான ஒரு இடத்திற்கு ஓய்வெடுக்க செல்கிறார். தனிமை, சோர்வு, பசி, யோவானின் மரணத்தால் ஏற்பட்ட துயரம் ஆகிய அனைத்தும் ஒன்றே இணைந்த சூழலில் அவருக்கு ஓய்வு தேவைப்பட்டது. ஆனால் துன்பத்துடனும், துயரத்துடனும் வாழ்ந்த மக்கள் கால்நடையாய் ஓடி இயேசு இருந்த இடத்தை தேடிவந்து அவரை சூழ்ந்து நின்றனர். இவர்கள் ஆயரில்லாத ஆடுகளைப் போல அலைந்து கொண்டிருந்த பரிதாப நிலையைப் பார்த்து பரிவு கொண்ட இயேசு தனக்கு கிடைத்த வாய்ப்பை நழுவ விடாமல் தன்னுடைய சோர்வையும், களைப்பையும், பொருட்படுத்தாமல் அவர்களுக்கு போதிக்க தொடங்கினார். அத்துடன் அவர்களது பசியை அறிந்து உணவளிக்க தேவையான ஒழுங்குகளைச் செய்தார். இன்று நாம் நமக்கு கிடைக்கும் அனைத்து வாய்ப்புகளையும் அருட்பணியில் பயன்படுத்துகிறோமா என்பதை சிந்திக்க வேண்டும்.

லூக்கா 10 : 2 இல் சீடர்களை அருட்பணிக்காக அனுப்பும் போது அறுவடை மிகுதி : வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள். என வேண்டுகோள் விடுத்தார்.

இங்கு சீடத்துவ பணிக்கான அனுப்புதல் ஒரு தொடர் நிகழ்ச்சி என்பதை ஆண்டவர் இயேசு வலியுறுத்துகிறார். சீடத்துவ வாழ்வு வாழ விரும்புவோர் ஆண்டவரின் அனுப்புதலுக்கு உட்பட்டு அருட்பணியாற்ற துரிதமாக புறப்பட வேண்டும். பவுல் தீமொத்தேயுவுக்கு கூறும் போது, (2திமொ. 4:2) இறை வார்த்தையை அறிவி. வாய்ப்பு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் நீ கருத்தாயிரு என்கிறார்.

அருட்பணிக்காக நமக்குத் தரப்படும் வாய்ப்புகளை பயன்படுத்தி எவ்வளவு துரிதமாய் நற்செய்தியை அறிவிக்க முடியுமோ அவ்வளவு துரிதமாக அறிவிக்க செல்வது நற்செய்தியாளரின் பிரதான கடமையாக இருக்க வேண்டும்.

அருட்பணிக்கான கடவுளின் அனுப்புதலை ஏற்பதும் நாம் எவ்வித மறுப்புமின்றி துரிதமாக புறப்படுதலும் கடவுள் நமக்கு தரும் சிறந்த வாய்ப்பாகும். கடவுளுடைய அனுப்புதலுக்கு கீழ்ப்படியாமல் விலகிச் செல்ல நினைக்க கூடாது. கடவுளுக்கு தரவேண்டிய இடம் வேறு எந்த ஒரு காரியத்துக்கும் சென்றுவிடக் கூடாது. கடவுளின் அழைப்பையும் அனுப்புதலையும் ஏற்காமல் விலகிச் சென்ற நேரங்களை நினைத்து கடவுளுக்காக வேலை செய்யும் வாய்ப்பு முடிந்து விட்டது என நினைக்காமல் கடவுள் வழங்கும் புதிய வாய்ப்புகளை தவறாமல் பயன்படுத்தி துரிதமாய் புறப்பட இறைவன் உதவி செய்வார். ஆமென்.

தொடக்கநூல் 27: 30-38 இல் ஏசா ஈசாக்கிடம் ஆசி பெற வந்த போது தான் ஏமாற்றப்பட்டு தனக்கு கிடைக்க வேண்டிய ஆசியை இழந்த நிலையில் தந்தையின் ஆசிகளில் கொஞ்சமாவது தனக்கு கிடைக்காதா என கெஞ்சிய போதும், நீர் எனக்கென ஒன்றும் வைக்கவில்லையா என கூக்குலிரலிட்டு அழுத போதும் அவரால் எதையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே வாய்ப்புகளை தவறவிடாமல் கடவுள் தரும் வாய்ப்பை தவறாமல் பயன்படுத்தி ஆண்டவரின் அருட்பணியில் துடிப்புடன் ஈடுபட அறிவுறுத்தப்படுகிறோம்.

## NMS அறிமுகம்

கன்னியாகுமரிப் பேராயம் அக்டோபர் மாதத்தை இந்திய சுதேச மிஷனெரி சங்க ஞாயிறாக கொண்டாடுகின்றது. இதற்காக பேராயருக்கும், பேராயத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திய சுதேச மிஷனெரி சங்கம் 1905ஆம் ஆண்டு பேராயர் V.S. அசரியா அவர்களால் தன்னுடைய சமகாலத்து நண்பர்களான 17 இளைஞர்களின் உற்சாகமான ஈடுபாட்டுடன் கிறிஸ்து பிறப்பு நாளன்று செராம்பூரில் தொடங்கப்பட்டது. இச்சங்கம் இந்திய தேசிய திருச்சபைகளின் மாமன்றத்தால் (NCCI) அங்கீகரிக்கப்பட்ட ஒரே அருட்பணி இயக்கமாகும். தென் இந்திய திருச்சபை, வட இந்திய திருச்சபை, மார்த்தோமா திருச்சபைகள், மெதடிஸ்ட் திருச்சபைகள், லுத்தரன் திருச்சபைகள் போன்ற பெரும் திருச்சபைகளால் அங்கீகரிக்கப்பட்டு NCCI உறுப்பு திருச்சபைகளுடன் இணைந்து

மிஷனெரிப் பணியில் ஈடுபட்டுள்ளது. இச்சங்கம் சுய அறிவிப்பு (Self Proclamation) சுய ஆதரவு (Self Support) சுய ஆட்சி (Self Governance) என்னும் தகவுகளை ஆதாரமாகக் கொண்டு என் வாழ்நாளில் எல்லோருக்கும் கிறிஸ்து என்னும் இலக்குடன் செயல்படுகிறது. இந்திய நாட்டில் 21 மாநிலங்களிலும், அண்டை நாடுகளான நேபாளம், பூட்டான், இலங்கை ஆகிய நாடுகளிலும் நற்செய்தியை அறிவித்து வருகிறது. இச்சங்கத்தில் 241 மி னெரி குடும்பங்கள், 106 முன்னேற்றப்பணி மி னெரிகள், 6 ஒருங்கிணைப்புச் செயலாளர்கள், 100 சேவை மைய பணியாளர்கள் என சுமார் 440 பேர் நற்செய்தி அறிவிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் பழங்குடியின மாணவ, மாணவிகளுக்கு கல்வி பணியின் மூலம் கிறிஸ்துவின் வாழ்வை உறுதி செய்வதற்காக 8 விடுதிகளை தொடங்கி 450 பழங்குடியின மாணவ, மாணவிகளை ஆதரித்து வருகிறோம். மேலும் மருத்துவமனைகள், சுகாதார நிலையங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் வழியாக நற்செய்திப்பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. 117 ஆண்டுகள் பாரம்பரியமுடைய இந்திய சுதேச மி னெரி சங்கத்திற்கு சென்னைப் பேராயர் பேரருட்திரு.அறிவர். ஜார்ஜ் ஸ்டீபன் அவர்கள் தலைவராக செயல்படுகிறார்கள். பேராயரின் சீரிய தலைமைத்துவத்தால் இச்சங்கம் மிகப்பெரிய எழுச்சியைப் பெற்று வேகமாக வளர்ந்துவருகிறது. இச்சங்கத்தின் பணிவிடைகளை இறைவேண்டலில் நினைவு கூரவும் ஆண்டவருடைய வழிகாட்டுதலின்படி தாராளமாக காணிக்கைளை வழங்கி இந்த மகத்தான ஊழியத்தை தாங்கவும் அன்புடன் அழைக்கிறோம்.

அருள்திரு. S. **கிறிஸ்டோபர் விஜயன்**

21-10-2018 **இளையோர் ஞாயிறு**

# பொருளுள்ள வாழ்வுத் தேடலில் இளையோர்
## YOUTH IN SEARCH OF A MEANINGFUL LIFE

தொ.நூ. 39:1-23 எபி. 12:1-11
தி.பா. 17 யோவா. 1:43-51

**"எனவே, திரண்டுவரும் மேகம்போல் இத்தனை சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து நிற்க எந்தச் சுமையையும், நம்மைப் பற்றிக்கொண்டிருக்கும் எந்தப் பாவத்தையும் உதறித் தள்ளிவிட்டு, நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக." எபி. 12:1**

***முன்னுரை* :**

மனித வாழ்வு தேடல்கள் நிறைந்தததது. நம்முடைய பலவித தேடல்களில் 'பொருளுள்ள வாழ்வு' வாழ விரும்புகிறோம். ஆனால், 'பொருள்' என்பதை எப்படி புரிந்து கொண்டிருக்கிறோம். ஆம் நம் வாழ்வில் 'பொருள்' என்று செல்வத்தை தேடுகிறோமா? அல்லது 'பொருள்' என்று அர்த்தமுள்ள வாழ்வை தேடுகிறோமா? என்பதுதான் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கும் மிகப் பெரிய கேள்வி. மத். 19:16-24 வரையுள்ள வசனங்களில், இயேசுகிறிஸ்துவிடம் வந்த இளைஞன் அர்த்தம் என்னும் பொருளுள்ள வாழ்வைத்தான் விரும்பினான், 'நிலை வாழ்வை பெற நான் என்ன செய்ய வேண்டும்' என்ற அவனது கேள்வி இதனை வெளிப்படுத்துகிறது. ஆனால் அவனது தேட்டத்தில் செல்வமென்னும் பொருளே முக்கியத்துவம் பெற்றிருந்தது. முடிவு? அவனது வாழ்வு அர்த்தமற்ற ஒன்றாக அமைந்துவிட்டது. செல்வம் என்னும் பொருளை அல்ல, அர்த்தம் என்னும் பொருளையே வாழ்வில் தேட திருமறை வலியுறுத்துகிறது. தரப்பட்டுள்ள திருமறைப் பகுதிகளின் அடிப்படையில் பொருளுள்ள (அர்த்தமுள்ள) வாழ்வு என்பது என்ன என்று சிந்திக்க விளைவோம்.

***1. பொல்லாப்புக்கு விலகுதல்*** : (தொ.நூ. 39 : 9)

பொருளுள்ள வாழ்வின் அடித்தளம் பொல்லாங்குக்கு விலகுதல் ஆகும். நாம் வாழும் இந்த உலகம் பொல்லாங்குகளால் நிறைந்துள்ளது. இளையோர் தங்களது வாழ்வை பொருள் பொதிந்ததாக்கும் வகையில் பொல்லாத சிந்தை, செயல்களுக்கு விலகியிருக்க வேண்டியது அவசியம். பொல்லாதவனாகிய பிசாசு தனது மாய வலையில் மக்களை குறிப்பாக,

இளையோரை வீழ்த்தும்படி தந்திரமான சதி வேலைகளை நிகழ்த்துவான். எனவே பொல்லாங்கானவைகளுக்கு நாம் விலகியிருக்க வேண்டும். எபிரேயருக்கு எழுதிய நிருபம் 2:2-ல் ஆக்கியோன் நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தை தள்ளிவிட்டு விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி...ஓடக்கடவோம் என்கிறார். நமது பார்வை/இலக்கு இயேசுவாயிருக்கும்போது இப்படிப்பட்டவைகளை எளிதில் விலக்க இயலும். இந்த இளமைப்பருவத்தில் இளையோரை எளிதில் வசப்படுத்தியிருக்கின்ற அல்லது வசப்படுத்த இருக்கின்ற பொல்லாங்கு இளவயதின் இச்சையாகும். பிசாசுக்கு எதிர்த்து நிற்கும்படி ஆலோசனை கூறும் பவுலடியார் (எபே. 6:11) இளவயதின் பாலியல் இச்சைகளுக்கு விலகி நிற்கும்படி (2திமொ. 2:22) அறிவுறுத்துகிறார். எதிர்த்து நின்று வெற்றிபெற இயலாத தீமை பாலியல் இச்சை. இதனை உணர்ந்திருந்த யோசேப்பு "இந்த பொல்லாப்புக்கு நான் வருவதெப்படி என்று கேட்டான்." தீங்கு, பாவம், பொல்லாங்கு நெருங்கி வருகையில் தன் வஸ்திரத்தைகூட விட்டுவிட்டு ஓடி வருவதை காணமுடிகிறது. (தொ.நூ. 39:7-12). ஆனால் யாரும் நம்மை காணவில்லை என்னும் எண்ணம் வரும்போது நமது கால்கள் தீமைசெய்ய விரைந்து ஓடுகிறது. ஆனால் யோசேப்பு கடவுள் என்னைக் காண்கிறார் என்ற உணர்வுடன் கடவுளுக்கு விரோதமாக நான் தீமை செய்வது எப்படி என்று கூறி பொல்லாங்குக்கு விலகி ஓடுகிறான். பொல்லாப்புக்கு செய்கிறவன் ஒளியை பகைக்கிறான். (யோவா. 3:20). பவுல் தீத்துக்கு ஆலோசனை கூறும்போது எதிரியானவனை வெட்கப்படுத்த பொல்லாங்கான தவறுகளுக்கு விலகியிருக்கும்படி (தீத்து 2:8) ஆலோசனை கூறுகிறார்.

### *1. பொறுமையாய் இருத்தல்* **:** (எபி. 12 : 1)

பொருளுள்ள வாழ்வின் அச்சாணி பொறுமையாய் இருத்தல் ஆகும். இளமைப்பருவம் துடிப்புள்ள பருவம், ஆராயாமல் அவரச அவரசமாக காரியங்களை செய்ய விளையும் பருவம். 'இளங்கன்று பயம் அறியாது' என்ற பழமொழிக்கேற்ப அவசர முடிவுகள், உடனடித் தீர்வுகள் எடுக்கப்படும் பருவம். இளரத்தம் பொதுவாக பொறுமைக்கு இடமளிப்பதில்லை. அதனால் அர்த்தமுள்ள வாழ்வை தேடும் இளையோர் தங்கள் வாழ்வில் பொறுமையை கடைபிடிக்க வேண்டியது மிகவும் அவசியம். வாழ்க்கையை ஓட்டத்திற்கு ஒப்பிடும் எபிரேய நிருப ஆக்கியோன். பொறுமையோடு ஓடக்கடவோம் என்கிறார். ஆத்திரம் அவசரமாக எடுக்கும் முடிவுகள் அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. இந்த காலக்கட்டங்களில் பொதுவாக இளையோர்

அவசரப்படும் காரியங்களில் ஒன்று, தங்களது எதிகால துணையை தேடுதல், தீர்மானித்தல். மிகவும் பொறுமையுடன் செயல்படவேண்டிய இந்த விஷயத்தில் அவசர அவசரமாக முடிவெடுத்து விட்டு அழுகை, கண்ணீரோடே வாழ்வை நகர்த்தும் இளையோர் பலர். வாழ்க்கை துணை என்பது கடவுளால் தரப்படுவது என்பதை உறுதியாக நம்புகின்ற நாம், இந்த விஷயத்தில் பொறுமையாக செயல்பட அழைக்கப்படுகிறோம். ஆதாமை படைத்த கடவுள் தனிமனிதனான ஆதாமிடம் தனது படைப்புகளாகிய மற்ற உயிரினங்களை எல்லாம் பெயரிடும்படியாக ஜோடி ஜோடியாக கொண்டு வருகிறார். தனியாளாய் இருந்த ஆதாம், தனக்கும் ஜோடி தேவையென உணர்ந்தாலும் அதற்காக அவன் அவசரப்படவில்லை. கடவுள் அவனுக்கு அயர்ந்த நித்திரையை வரபண்ணினார். தனக்கு துணையை தேடி அலையவில்லை. மாறாக, உறங்கினான் (ஆதி. 2:18-23). வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமானால் ஆதாம் அமைதியாக, பொறுமையாக இருந்தான். கடவுள் அங்கு செயல்பட்டார். ஏற்றதுணையை ஆதாமுக்கு உண்டாக்கினார். வாழ்க்கை துணைக்கென்று பொறுமையாக இருக்க வேண்டிய இளையோர்கள் அலைந்து திரிந்து, இங்கும் அங்கும் ஓடி எடுக்கும் அவசர முடிவுகள், “ஆயிரங்காலத்துப் பயிர்”, “ஆயுள் முழுவதுக்கும்” என்றெல்லாம் வர்ணிக்கப்படும் திருமண வாழ்வை “ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்” என்னும் அரைகுறை நிலையில் நிறுத்தி விடுகிறது. “பொறுமையை பெருமை” என்பதை உணர்ந்து பொறுமையினால் நமது வாழ்வையும் ஆத்துமாக்களையும் காத்துக் கொள்ளவும் (லூக். 21:19), அர்த்தமுள்ள வாழ்வை அனுபவிக்கவும் அழைக்கப்படுகிறோம்.

***3. பொய்மையைக் களைதல்*** : (யோவா. 1 : 47)

இயேசு, நாத்தான்வேலை தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக்குறித்து இதோ, கடபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார்.

பொருளுள்ள வாழ்வின் அழகு, பொய்மையை களைதலாகும். அதாவது சூது, வாது, கள்ளம், கபடம் முதலியன இல்லாத வாழ்க்கை. பொய்மையான வாழ்வு கபடு, தீமை, மாய்மாலமான போலி வாழ்வைக் குறிக்கும். நாத்தான்வேல் குறித்து இயேசு கிறிஸ்து கூறும் சாட்சி அவனை பொய்மையற்ற, போலித்தனமற்ற உண்மையான மனிதனாக உலகிற்கு காட்டுகிறது. வாலிபனான நாத்தான்வேல் மனதில் பட்டதை பளிச்சென கூறும் தன்மை உடையவர். இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான பிலிப்பு இயேசுவைக் குறித்து நியாயபிரமாணத்தில் மோசேயும்

தீர்க்கதரிசிகளும் யாரைக் குறித்து கூறியிருக்கிறார்களோ அவரைக் கண்டோம்; அவர் நாசரேத்தூராகிய இயேசுவே என்று கூறிய போது 'நாசரேத்திலிருந்து யாதொரு நன்மையும் உண்டாகக்கூடுமோ' என்று தனது மனதில் பட்டதை ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக கூறினார். இவர்தான் இயேசுகிறிஸ்துவின் சீடராக இயேசுவை பின்தொடர்ந்தவர், இவரே பர்த்தலமேயு என்று அழைக்கப்படுகிறார் என வேத வல்லுனர்கள் கருதுகிறார்கள். இவர் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் போலித்தனமுடையவரல்ல, அர்த்தமுள்ள வாழ்வை இந்த பொய்மை, போலித்தனம், கபடம், கள்ளம், வன்மம், சூது, வாது முதலிய தீய குணங்களை வைத்துவிட்டு உதட்டில் புன்னகையும் முகத்தில் மலர்ச்சியும் காட்டும் பொய்மை தன்மை களையப்படவேண்டும். இயேசுவைக் குறித்து இயேசுவின் வாழ்விடத்தைக் குறித்து நாத்தான்வேல் தரக்குறைவாகவே பேசிய போதிலும், அவனைக் குறித்து இயேசு உயர்வாக கூறுகிறார். எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ அவன் பாக்கியவான் (சங். 32:2) என்று திருமறை கூறுகின்றது. (சங். 24:4; நீதி. 26:24; பிலி. 2:15; 1பேது. 2:2) முதலிய வசனங்கள் கபடற்ற, பொய்மையற்ற வாழ்வின் அவசியத்தையும், அர்த்தத்தையும் விளக்குகின்றன.

***முடிவுரை* :**

பொருள் நிறைந்த, அர்த்தமுள்ள வாழ்வினை தேடும் நாம், நம் வாழ்வில் பொல்லாப்புக்கு விலகி, பொறுமையாய் இருந்து, பொய்மையை களைந்து செயல்படுவோம். ஆண்டவர் தாமே நமது வாழ்வை பொருளுள்ள வாழ்வாக அமைப்பதற்கான ஆற்றலையும், அறிவையும், அனுபவங்களையும், அருளுவாராக! இறையாசி நம் அனைவருடனும் நிறைவாய் தங்கியிருப்பதாக!! ஆமென்!!!

அருள்திரு. M. **இம்மானுவேல் கின்சன்பெல்**

28-10-2018 **சீர்திருத்த ஞாயிறு**

# சீர்திருத்தப்பெற்ற சீர்திருந்தும் திருச்சபை

## CHURCH : REFORMED AND REFORMING

இச. 26:4-11 திப. 2:43-47
திபா. 109:21-31 மத். 13:33-35

***"அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்."*** **திப. 2:42**

திருச்சபை வரலாற்றில் சீர்திருத்தம் 16-ம் நூற்றாண்டில் ஏற்பட்டது. ஆனால் சீர்திருத்தச் சிந்தனைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே குரலாக ஒலித்து, அதன் அறுவடை மார்ட்டின் லுத்தர் காலத்தில் நிறைவேறியது. திருச்சபை கடவுளின் விருப்பத்தை நிறைவேறியது. அமைக்கப்பட்டது. கடவுளுடைய விருப்பத்திற்கு மாறாக திருச்சபை செல்லும் போது கடவுள் அதைத் தடுத்து, அவரது திருவிருப்பத்தை, திருத்திட்டத்தை நிறைவேற்றி வழிநடத்துகிறார். இடைக்கால வரலாற்றில் திருச்சபை தடம் புரண்ட போது தமது அடியவர்கள் வழியாக அவரது விருப்பத்தை நிறைவேற்ற மாற்றத்தை, ஏற்படுத்தினார். இதைத்தான் வரலாற்றில் 'திருச்சபைச் சீர்திருத்தம்' என அழைக்கிறோம்.

16-ம் நூற்றாண்டில் பாவம், புண்ணியம், திருவருட்சாதனம், அருள், திருச்சபையின் அதிகாரம் போன்றவற்றைப் பற்றிய தவறான கருத்துக்கள் திருமறை சார்ந்த கிறிஸ்து நம்பிக்கைக்கு எதிராக இருப்பதை மார்ட்டின் லுத்தர் உணர்ந்தார். இதனை திருச்சபைகளில் தொடரும் 'பாபிலோனிய அடிமைத்தனம்' என அழைத்தார். 'இத்தகைய அடிமைத்தனத்திலிருந்து விடுபட மனிதன் இறைவனோடுகொள்ளும் நேரடி தொடர்பால் மட்டுமே முடியும்' என்றார். குறிப்பாக, மக்கள் சமய வாழ்வில் கொண்டிருந்த பற்றுறுதி, மக்களின் நடவடிக்கைகளால் முரண்பட்டபோது, அவற்றை முறைப்படுத்தி, இலகுவாக்கி சாதாரண மக்களும் ஆன்மிக அனுபவத்தைத் தடையின்றி அனுபவமாக்க, திருச்சபையில் ஏற்பட்ட சீர்திருத்தம் துணை நிற்கும் என நம்பினார்.

ஜாண் விக்ளிப், ஜாண்ஹஸ், மார்ட்டின் லுத்தர், ஜாண் கால்வின், உல்டிரிட்ச் சுவிங்லி போன்றோர் மக்களுக்குச் சீர்திருத்த கருத்துக்களைப் போதித்தனர். மனிதனது பற்றுறுதியும், கடவுளின் மன்னிப்பும் சமய வாழ்வின் அடித்தளம் என்பது சீர்திருத்தச் செம்மல்களின் அடிப்படை கருத்து. புனிதர் வணக்கம், அதிகாரப் போட்டி, பாவமன்னிப்புச் சீட்டு

விற்பனை போன்றவை வழி திருச்சபை திருமறையிலிருந்து விலகிச் சென்றிருப்பதைக் கண்டு சீர்திருத்தத்தில் மார்ட்டின் லுத்தர் ஈடுபட்டார். கடவுளிடம் மனிதன் கொள்ளும் பற்றுறுதியை விட, மனித சமயச் சடங்காசாரம் மேலோங்கி நின்றதைக் கண்ட மார்ட்டின் லுத்தர் மக்களின் ஆன்மிக வாழ்வுக்கு எல்லாமாக இருப்பது;

1. திருமறை மட்டுமே (Scripture Alone/Solascriptura)
2. பற்றுறுதி மட்டுமே (Faith Alone/Solafide)
3. அருள் மட்டுமே (Grace Alone/Solagratia)

என்ற 'விசுவாச அறிக்கைகளை வலியுறுத்தி நேர்மையுடையோர் தம் நம்பிக்கையால் வாழ்வு அடைவர்' (உரோ. 1:17) என்பதில் உறுதியாயிருந்தார். 1517-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் நாள் 95 தர்க்க நியாயங்களை (95 Thesis) 'விட்டன்பர்க்' ஆலய வாசலில் ஆணி அறைந்து மக்கள் பார்வைக்கு வைத்து சமயச் சீர்திருத்தத்திற்கு வழி வகுத்தார். சீர்திருத்தப்பட்ட திருச்சபை, சீர்திருந்தும் திருச்சபையாய்த் தொடர்ந்து பயணிக்க இன்றைய திருமறை பகுதி நமக்கு உணர்த்தும் செய்தியைக் கற்றுக்கொள்வோம்.

## *1. கற்றுகொண்டவைகளில் உறுதியாய் நிலைத்திருப்போம்*

"அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும்..........உறுதியாய் நிலைத்திருந்தார்கள்". (திப. 2:42)

தொடக்ககால திருச்சபையின் பற்றுறுதி வாழ்வு அனுபவம் இங்கு விவரிக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்துவைத் தலைவராகக் கொண்ட திருச்சபையின் உண்மைச் செயல்பாடு இங்கு சொல்லப்படுகிறது. இறைமக்கள் திருத்தூதர் கற்பித்த போதனைகளை ஏற்று வாழ்ந்தனர். சீர்திருத்தப்பட்ட திருச்சபை, சீர்திருந்தும் திருச்சபையாய்த், தொடர்ந்து பயணிக்க இவ் அனுபவம் தேவை. கேட்கின்ற உண்மைப் போதனைகளை வாழ்வில் சாதனையாக, வாழ்க்கை முறையாக மாற்றும் அனுபவம் அவசியம்.

தூய பவுலடியார் தன் உடன் பணியாளர் தீமோத்தேயுவுக்கு அறிவுரை கூறும்போது, நடத்தைகளில் சீர்ப்படுத்தப்படுதலின் அவசியத்தை வலியுறுத்துகிறார் (2திமொ. 3:14). "நீ கற்று, உறுதியாய் அறிந்தவற்றில் நிலைத்துநில்" மார்ட்டின் லுத்தர் திருமறையைப் படித்தபோது 'நேர்மையுடையோர் தம் நம்பிக்கையால் வாழ்வு அடைவர்' (உரோ. 1 : 17) எனக் கற்றுக்கொண்டார். ஆனால் , இந்தத் திருமறைப் போதனைக்கு எதிரான திருச்சபையின் செயல்பாட்டை எதிர்த்தார்.

பாவமன்னிப்புச் சீட்டோ, சமய அதிகாரமோ நமக்கு மீட்பைத் தராது என உறுதியாய் எடுத்துரைத்தார். 'மீட்பு' இலவசமாக இயேசு கிறிஸ்துவால், அவரது சிலுவை மரணத்தின் வழி அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது என்றார். 1521-ம் ஆண்டு வோர்ம்ஸ் நகரில் பேரரசர் சார்லஸ் தலைமையில் நடந்த ஆலோசனை மன்றத்தில் மார்ட்டின் லுத்தர் தனது கூற்றைத் திரும்பப் பெற, மறுதலிக்க வற்புறுத்தி விசாரணை மன்றத்தில் நிறுத்தப்பட்டபோது, "ஒருவேளை மரணமே வந்தாலும் அதை ஏற்றுக்கொள்வேனே தவிர, நான் கற்று, தெளிவடைந்து அறிக்கை செய்தவற்றிலிருந்து பின் வாங்கமாட்டேன்" என்று கூறி 'Here I Stand' என உறுதியாய் நின்று சீர்திருத்தத்திற்கு வித்திட்டார்.

இன்று சீர்திருத்தத் திருச்சபை எங்கே நின்றுகொண்டிருக்கிறது? கற்றுக் கொண்டவைகளிலா? சீர்திருத்தப்பட்ட திருச்சபை இன்று சீர்திருந்தும் திருச்சபையாகப் பயணிக்க வேண்டும். அதற்கு திருமறையில் கற்றவைகளில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும். "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு ஆனால் அது எனக்குத் தகுதியாயிராது" என திருமறை போதிக்கிறது. சீர்திருத்தச் செம்மல் மார்ட்டின் லுத்தர் திருமறை மட்டுமே (Scripture alone) நம்மைச் சீர்ப்படுத்தும் என உறுதியாய் உரைத்தார். தொடக்ககால திருச்சபையைப்போல் திருமறை வசனங்களின்படி வாழ்வோம். வேதத்தின்படி நடக்கின்ற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள், கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம், வாலிபன் தன் வழியை எதனால் சுத்தம்பண்ணுவான் உமது வசனத்தின் படி தன்னைக் காத்துக்கொள்கிறதினால்தானே, நீங்கள் வளரும்படி....திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள் போன்ற திருமறை சத்தியங்கள் நமக்கு நன்கு அறிந்த, அறிவிக்கப்பட்ட, பழக்கப்பட்ட திருமறை வசனங்கள் என விட்டுவிடவேண்டாம். மீண்டும் மீண்டும் நம் தலைமுறைகளுக்குக் கற்றுக்கொடுப்போம். சீர்குலைந்து கொண்டே செல்லும் இந்தச் சமூகத்திலிருந்து காக்கப்பட்டு, சீர்குலையாமல் சிறப்புடன் செல்ல தங்களை சீர்ப்படுத்திக் கொள்வார்கள். இன்று திருச்சபைகளில் அதிகாரப் போட்டிகள், அணி சார்ந்த பிளவுகள், ஆகியவற்றின் வேகம் அதிகரித்துவிட்டன. "கிறிஸ்து இப்படி பிளவுபட்டுள்ளாரா?" எனப் பவுலடிகளார் கேட்கிறார் (1கொரி. 1:13) அதிகாரம், பதவி இவைகளை முன்னிலைப்படுத்திச் செல்லும் வாழ்வை விடுத்து, திருமறையில் நாம் கற்றவைகளில் நிலைத்திருந்து முன்னேறிச் செல்லும் போது நாம் சீர்திருந்தும் திருச்சபையாய்ப் பயணிக்கமுடியும்.

## 2. நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும் உறுதியாய் நிலைத்திருப்போம்

"அவர்கள்...நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும்.....உறுதியாய் நிலைத்திருந்தார்கள்". (திப. 2:42)

சீர்திருத்தப்பட்ட திருச்சபை, சீர்திருந்தும் திருச்சபையாய்ப் பயணிக்க அன்பு, பகிர்வு அதிகமாக தேவை. விண்ணக வாழ்வைப் பெற இவை தேவை என இயேசு கிறிஸ்து போதித்தார். விண்ணக வாழ்வை விரும்பி கிறிஸ்துவிடம் வந்த இளைஞன் சிறு பருவமுதல் கற்பனைகளை கைக்கொண்டு வாழ்ந்தும், தனக்கு உள்ளவைகளை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்க முன்வராத போது துக்க முகமாய்த் திரும்பிப் போனான். அதே வேளையில் கிறிஸ்துவைச் சந்தித்த போது தனக்கிருந்தவைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன் என்ற சகேயு மகிழ்வுடன் மீட்பைப் பெற்றார். 'என் வாழ்க்கையில் எனக்கென்று இருப்பதைப் பிறருக்குப் பகிர்வதால் நான் பாதிப்படைந்து விடுவேனோ' என்ற அன்பில்லாத சுயநலச் சிந்தனை பகிருவதற்குத் தடையாக உள்ளது. 'இந்தச் சிறியரில் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்' என்று நாம் திருமறையின் வழியாகக் கற்பிக்கப்பட்டவைகளில் நிலைத்திருந்தால் நாம் பகிரும் பண்பில் வளருவோம். இதைத் தொடக்ககாலத் திருச்சபை செய்தது. அவர்கள் 'அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப பகிர்ந்து அளித்தனர்' (திப. 2:45). இப்பண்பில் வளர்ந்த போது, எருசலேம் கிறிஸ்தவர் பஞ்சத்தில் வாடிய போது மாசிதோனியத் திருச்சபை வறுமையிலும் உதவிக்கரம் நீட்டியது. கிறிஸ்து தம்மையே இந்த உலகுக்குக் கொடையாகத் தந்ததைப் போல நாமும் நட்புறவுடன் பகிர்ந்து வாழ அழைக்கப்படுகிறோம். தொடக்ககாலத் திருச்சபை மக்கள் பேருவகையோடும், எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தைப்பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள் (திப. 2:46). அவர்கள் கடவுளைப் போற்றி வந்தார்கள். எல்லா மக்களுடைய நல்லெண்ணத்தையும் பெற்றார்கள். ஆண்டவர் தாம் மீட்டுக் கொண்டவர்களை நாள்தோறும் அவர்களோடு சேர்த்து கொண்டே இருந்தார். மார்ட்டின் லுத்தர் அருள் மட்டுமே (Grace alone) நம்மை காக்கும் என்றார். இறைவனின் அருளில் வளர அவர் விருப்பப்படி நட்புறவுடன், பகிர்ந்து சீர்திருந்தும் திருச்சபையாய் வளருவோம்.

## 3. இறைவேண்டலில் உறுதியாய் நிலைத்திருப்போம்

"அவர்கள்....இறைவேண்டலிலும்.....உறுதியாய் நிலைத்திருந்தார்கள்". (திப. 2:42)

சீர்திருந்தும் திருச்சபையாய் வளர அடிப்படைத் தேவை இறைவேண்டல். இறைவேண்டல் இறை உறவை உறுதிப்படுத்தும். இறை

உறவு நம்பிக்கையை வலுப்படுத்தும். நம்பிக்கை நல்லுறவை ஏற்படுத்தும். நல்லுறவு ஒருமைப்பாட்டை உருவாக்கும். "நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாய் இருந்தனர்" என்பது இறைவாக்கு (திப. 2:44). "நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" என்ற இயேசு கிறிஸ்துவின் விருப்பம் இங்கு நிறைவேறியது (யோவா. 17:22). இறைவேண்டல் இறைமக்கள் ஒன்றாய் வாழ வழிவகுக்கும். தென் இந்தியத் திருச்சபை ஓர் ஒருமைப்பாட்டின் அடையாளம். வேறுபட்ட கொள்கைகளை விட்டு கிறிஸ்துவை மையப்படுத்தி 1947-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ம் நாள் திருச்சபைகள் இணைந்தபோது உலகம் வியந்தது.

தொடக்ககாலத் திருச்சபையில் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்த போது மக்கள் அனைவரிடமும் அச்சம் உண்டாயிற்று. சிதறடிக்கப்பட்டவர்களாய் கடந்து சென்றவர்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்தபோது 'உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்து விட்டார்கள்' என்றனர். இன்று பிறரைக் கண்டு பயப்படும் அனுபவம் கிறிஸ்தவர்களிடம் உண்டு. ஆட்சி, அதிகாரம் இவைகளை கண்டு பயப்படுகிறோம். ஆனால் ஆண்டவரிடம் மன்றாடும்போது தொடக்காலத் திருச்சபை போன்று திருச்சபை சீர்திருந்தும் சபையாக முன்னேறும். மார்ட்டின் லுத்தர் கூறியதுபோல 'பற்றுறுதி மட்டுமே' (Faith alone) நம்மை நடத்தும். தூய்மைமிகு விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு நம் வாழ்வைக் கட்டியெழுப்ப வேண்டும். (யூதா. 20) திருமறை சத்தியங்கள் உபதேசத்திற்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருந்துதலுக்கும், நீதியைப் படிப்பித்தலுக்கும் பயனுள்ளதாயிருக்கிறது (2திமொ. 3:16,17).

'பொகீமியாவின் சிங்கம்' என்று அறியப்பட்ட ஜாண் ஹாஸ் என்பவர் 33-வது வதில் குருவானவரானார். சிறந்த அருளுரையாளர். பாவமன்னிப்புச் சீட்டு விற்பனையைக் கண்டித்தார். அவர் அருளுரை ஆற்ற தடை விதிக்கப்பட்டது. பின் திருச்சபையிலிருந்து நீக்கப்பட்டார். 1415-ல் தீயிலிட்டுக் கொல்லப்பட்டார். சாகும்போது "நான் தீயவைகளை போதிக்கவில்லை. உதடுகளால் போதித்ததை இப்பொழுது என் இரத்தத்தினால் முத்திரையிடுகிறேன்" என்று கூறி இறந்தார். 'சீர்திருத்தம்' என்பது முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட ஒரு நிகழ்வு அல்ல. அது தொடர் நிகழ்வு. இன்றைய திருச்சபையிலும், வருங்காலத் திருச்சபையிலும் அதனதன் காலத்திற்கு ஏற்ப சீர்திருத்தம் நடைபெற்றுக்கொண்டே இருக்க வேண்டும். திருச்சபைகளில் இருக்கும் சுயநலம், அநீதி, ஏற்றத் தாழ்வு, போன்ற சீர்கேடுகளிலிருந்து திருச்சபையைச் சீர்திருத்த கடவுளின் கரத்தில் கருவிகளாக நம்மை ஒப்படைப்போம்.

அருள்திரு. T. **டேவிட் கிளேட்சன்**

04-11-2018 **உலகத் திருமறைப்பள்ளி ஞாயிறு**

# திருச்சபையில் சிறார்
# CHILDREN IN THE CHURCH

1 சாமு. 3:1-10-விப. 2:1-10 3 யோவா. 1:1-15
தி.பா. 47 லூக். 18:15-17

***"சிறுவன் சாமுவேல் ஏலியின் மேற்பார்வையில் ஆண்டவருக்கு ஊழியம் செய்து வந்தான்."*** 1சாமு. 3:1

இல்லத்தை அழகுறச் செய்து மகிழ்வினை தந்திடச் செய்யும் இறைவனின் அருட்கொடைகள் தான் குழந்தைச் செல்வம். குடும்பம் என்பது மரம் போன்றது. குழந்தைகள் தளிர்கள். குழந்'தை' தை போன்றவர்கள். அதாவது நாற்று போன்றவர்கள். திருச்சபையின் தீபங்கள். இல்லத்தின் ஒளிவிளக்குகள். பெற்றோருக்கு மகிழ்வை, நிறைவைத் தரக்கூடியவர்கள். இறைவனுக்குரிய குணங்களைத் தன்னகத்தே கொண்டவர்கள். எனவே தான் 'குழந்தையும் தெய்வமும் மனத்தால் ஒன்று, மன்னிக்கும் குணத்தால் ஒன்று' என்று முன்னோர் கூறுவர். இயேசு கிறிஸ்துவும் இவர்கள் இறையரசுக்குரியோர் என்று உறுதிப்பட முழங்கினார். அத்துடன் இக்குழந்தைகளைப் போல மாறுவோர் மட்டுமே இறையரசில் நுழைய முடியும் என கூறினார் (லூக். 18:17). இக்குழந்தைகள் கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளோடு, திருமறையின் பாதையில் திருச்சபையில் வளர்க்கப்பட வேண்டியவர்கள். இது திருமறை நமக்கு கற்றுத் தரும் உண்மை. திருச்சபையில் சிறார் என்ற தலைப்பில் திருமறை ஊடாக இன்றைய திருமறைப் பகுதியை மையப்படுத்தி ஈண்டு தியானிப்போம்.

## *1. ஆலயப் பணிவிடைகளில் சிறுவர்* :

1சாமு. 3:1 "சிறுவன் சாமுவேல் ஏலியின் மேற்பார்வையில் ஆண்டவருக்கு ஊழியம் செய்து வந்தான்."

எப்ராயீம் மலை நாட்டைச் சார்ந்த எல்க்கானா அன்னாள் தம்பதியரின் மகன் சாமுவேல். சாமுவேல் அன்னாளின் பொருத்தனை மன்றாட்டிற்கு பலனாக கிடைத்தவர். சாமுவேல் பிறந்த மகிழ்ச்சியால் தன் பொருத்தனையின் படி அன்னாள் சாமுவேலை ஆலயத்தில் கொண்டு விட்டார். இதனால் சாமுவேல் ஆலயத்தில் வளர்ந்தார். ஆலயத்தின் பணிவிடைகளை ஆசாரியராகிய ஏலி என்பவரின் மேற்பார்வையில் செய்து வந்தார் (1சாமு. 3:1) ஆலயப் பணிவிடைகளை உண்மையோடு,

கடமையுணர்வோடு சிறுவர் சாமுவேல் கவனித்து வந்தார். கடவுளின் ஆலயத்தில் இருந்த விளக்கு அணைந்து போகாமல் தினமும் வேளா வேளை எண்ணெய் ஊற்றினார். மேலும், ஆலயம் என்பது ஆண்டவருடன் உறவாடும் இடம் எனவும், ஜொலிக்கும் இடம் எனவும் தெளிவாய் அறிந்திருந்தார். எனவே ஆலயத்தை பரிசுத்தத்தோடும், தூய்மையோடும் பாதுகாத்தார். இன்று நாம் எப்படி இருக்கின்றோம்? ஆலயத்தில் பக்தியோடும், பரிசுத்தத்தோடும் கலந்து கொள்கின்றோமா? ஆலயம் எப்போதும் தூய்மையாக இருக்க வேண்டும். அழுக்குகள் அகற்றப்பட வேண்டும். மின்சாரத்தைப் பயன்படுத்துவது முதல் எல்லாவற்றிலும் கட்டுப்பாடுடனும் ஒழுக்கத்துடனும் செயல்பட வேண்டும். ஒழுக்கமற்று ஆலயத்தை அசுத்தப்படுத்திய ஏலியின் பிள்ளைகளின் வாழ்வு நமக்கு எச்சரிக்கையாக அமைந்துள்ளது. எனவே நாம் ஆலயப் பணிவிடைகளில் ஈடுபடவேண்டும். சிறுவர் சாமுவேல் ஆலயப் பணிவிடைகளைக் கருத்தாய் செய்ததால் வாழ்வில் இறைவாக்கினராக, குருத்துவப் பணிச் செய்யும் ஆசாரியராக, மக்களை நியாயம் விசாரிக்கும் நீதித் தலைவராக உயர்வு பெற்றார்.

## *2. ஆண்டவரின் சத்தம் கேட்கும் சிறுவர்* :

1சாமு. 3:1 அப்போது ஆண்டவர், “சாமுவேல்” என்று அழைத்தார்.

ஆண்டவரின் சத்தம் கேட்பது மிகச் சிறந்த அனுபவம் ஆகும். சாமுவேல் ஆலயப் பணிவிடைகளில் ஈடுபட்டதால் ஆண்டவரின் சத்தம் கேட்கும் பேறு பெற்றார்.

அரசர் தாவீதுக்கு பின் அவர் மகன் சாலமோன் அரச பொறுப்பை ஏற்றார். கிபியோனில் கடவுளுக்கு பலிசெலுத்திய பின் சாலமோன் கடவுளின் தரிசனத்தைக் கண்டார். அதில் “உனக்கு என்ன வேண்டும் கேள்” என்று கடவுள் கேட்ட வேளை எனக்கு ஞானம் வேண்டும் என்று சாலமோன் கேட்க, கடவுள் ஞானத்தால் அவரை நிரப்பினார், எனவே சாலமோன் கடவுளின் சத்தத்தைக் கேட்டார் (1அர. 3:3-15). ஆண்டவரை சார்ந்து ஆண்டவரின் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு கீழ்ப்படிந்து வாழும் போது நாமும் ஆண்டவரின் சத்தம் கேட்கிறோம்.

“தீமை செய்வோர் கடவுளைக் கண்டதில்லை” (3யோவா. 4-15) என்பது திருமறை நமக்கு தரும் உண்மை. எனவே நாம் கடவுளின் சத்தம் கேட்க தீமையை செய்வதை விட்டு விட வேண்டும். தீமை என்றால் பிறரை ஏளனப்படுத்துதல், பெற்றோருக்கு, ஆசிரியருக்கு, நம்மைவிட பெரியவர்களுக்கு கீழ்ப்படியாமை, கடமையை சரியாக செய்யாத நிலை, ஆலயத் தொழுகைகளில் சரிவர பங்கு பெறாதது, திருமறை வசனங்களை

படித்து அதன் படி வாழாதது, கோள் சொல்லுதல், பொய் பேசுதல், கெட்ட வார்த்தை பேசுவது போன்றவையெல்லாம் தீமைகள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய தீமைகளை விட்டு விட்டு ஆண்டவரின் சத்தம் கேட்கும் அனுபவத்தை பெற்றுக் கொண்டு உயர்வு பெறுவோம்.

### 3. ஆசி பெறும் சிறுவர் :

1சாமு. 3:19 "சாமுவேல் வளர்ந்தான்; ஆண்டவர் அவனோடு இருந்தார்; சாமுவேலது வார்த்தை எதையும் அவர் தரையில் விழவிடவில்லை."

ஆலயப் பணிவிடைகளைச் செய்த சாமுவேல், ஆண்டவரின் சத்தம் கேட்கும் அனுபவத்தைப் பெற்ற சாமுவேல் இறைவனின் ஆசி பெறும் சிறுவராக மாறினார். இறைவனின் சத்தம் கேட்ட சிறுவர் சாமுவேல் அதற்கு தன்னை தாழ்த்தினார். இதனால் இறைவனது ஆசியாகிய உயர்வைப் பெற்றார். இஸ்ரவேலில் நீதித்தலைவராக, குருவானவராக, அரசர்களை திருநிலைப்படுத்தும் அனுபவத்தைப் பெற்றார்.

இயேசுகிறிஸ்து சிறார்களை மிக மிக அதிகமாக நேசித்தார். சிறார்களை தொட வேண்டும் என்று சிலர் அவர்களை இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு வந்தனர். இதைக் கண்ட சீடர்கள் அவர்களை அதட்டினர். எனினும் இயேசுகிறிஸ்து "சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்; அவர்களை தடுக்காதீர்கள்; ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது" (லூக். 18:15,16) என்று கூறி சிறார்களை அரவணைத்து ஆசி வழங்கினார். இன்று திருமறையை, ஆண்டவரைக் குறித்துக் கற்றுக் கொள்ள ஆலயம், ஓய்வு நாள் பள்ளி உள்ளிட்ட கிளை சங்கங்களை ஆண்டவர் நமக்குத் தந்துள்ளார். அவற்றில் முழு ஈடுபாட்டுடன் இணைந்து கற்றுக் கொள்ளவும், செயல்படவும் அழைக்கப்படுகிறோம். ஆலயக் கூட்டுறவில் இணைந்து ஆண்டவரைத் தொழுது கொள்ளும் போது, அன்று சிறாரை அரவணைத்து ஆசி வழங்கிய நமது ஆண்டவர் இன்றும் நம்மை அரவணைத்து ஆசி வழங்குகிறார். எனவே இயேசு கிறிஸ்துவை தேடி பணிந்து கொண்டு இறை ஆசி பெறுவோம்.

ஆலயத்தை நேசிப்பது சிறப்பு. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது முதுமொழி. இந்த முதுமொழிக்கேற்ப திருச்சபையில், பணிவிடைகளில் இணைந்து செயல்பட்டு, ஆண்டவரின் சத்தம் கேட்கும் அனுபவத்தோடே ஆசி பெறும் அனுபவம் பெற்று முன்னேறிச் செல்வோம்.

அருள்திரு. A. **பிறைட் சாலமோன்**

11-11-2018

ஒன்றிப்பு ஞாயிறு

# விளக்குத்தண்டுகளின் மீதுள்ள விளக்கு
## LIGHT ON THE LAMP STANDS

சக. 4:1-14 1கொரி. 3:10-15
தி.பா. 27 மத். 5:14-16

**"நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்." மத். 5:14**

ஒளி தரும் விளக்குகள் பலவகைப்படும். அகல்விளக்கு, அலங்கார விளக்கு, ஆயிரம் விளக்கு, அணையா விளக்கு என்பவை அவற்றுள் சில. அடிவானில் தோன்றுகின்ற விடிவெள்ளி முதல் ஆலயவாயிலிலிருக்கும் குத்துவிளக்கு வரை எல்லாமே ஒளி கொடுக்கக்கூடிய ஊடகங்கள். இறைவனால் படைக்கப்பட்ட (God's creation) சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இந்த அகில உலகிற்கும் ஒளி கொடுக்கும் தங்கள் கடமையைத் தவறாமல் ஆற்றுகின்றன. மனிதர்களால் உருவாக்கப்பட்ட (human - made) தற்கால, தற்காலிகமான ஒளி கொடுக்கின்ற பல்வேறு நவீன கருவிகளான பல்புகள், டியூப் லைட்கள், எமர்ஜென்சி லைட்கள் ஒரு குறிபிட்ட காலத்திற்கு ஓர் எல்லைக்குள் ஒளி கொடுக்கின்றன. புதுமனைப் புகுவிழா, திருமண விழா என மங்கலகரமான நிகழ்வுகளிலும், ஏன் மரண வீட்டிலும் (மெழுகுவர்த்தி) ஒளி முக்கிய இடம் பிடித்துள்ளது. இருளைப் போக்கி, அச்சத்தை நீக்கி ஒளி நமக்கு வாழ்வு தருகிறது. பயணத்தில் நமக்கு முன்பாக அபாயம் இருக்கிறது என்பதை சிக்னலில் Red light மூலமும் வாழ்வில் Red light area மூலமும் எச்சரிக்கப்படுகிறோம். விளக்குகள் ஒளியைத் தருவதோடு வாழ்விற்கான அர்த்தத்தையும் தருகின்றன. நாம் உலகிற்கு ஒளியாக இருக்க வேண்டும் என இயேசு கிறிஸ்து நமக்கு அன்புக் கட்டளை தருகிறார். மத் 5:14-16 வசனங்களை மையமாக வைத்து விளக்குத் தண்டின் மீதுள்ள ஒளி எப்படிப்பட்டது என்று மூன்று காரியங்களைச் சிந்திப்போம்.

### *1. பிரகாசிக்கிற ஒளி* **(Shining light) :** (வ. 14)

இயேசுகிறிஸ்துவின் மலைப் பிரசங்கத்தின் ஒரு பகுதியாக இந்த வார்த்தைகள் இடம் பெறுகின்றன. மத். 5:13,14 வசனங்களில் ஆண்டவர் மக்கள் யாவரும் அறிந்திருந்த, அன்றாட வாழ்வில் பயன்படுத்திய உப்பு மற்றும் ஒளி என்கிற இரண்டு உருவகங்களைப் பயன்படுத்துகிறார். வசனம்

14-ல் 'நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள்' என்கிறார். ஏன்? இருள் இறப்பிற்கு அடையாளம் (யோபு 3:5; 10:21). இருள் தோல்விக்கும், பாடுகளுக்கும் (புல.3:2), மதியீனத்திற்கும் (யோபு 37:19), பாவத்திற்கும் (யோபு 24:16; தி.பா. 74:20) அடையாளமாகத் திருமறை சித்தரிக்கின்றது. ஒளியானது இரட்சிப்பிற்கும் (யோபு 29:3; ஏசா. 58:8), ஞானத்திற்கும் (தி.பா. 19:9; 119:105), நீதிக்கும் (ஏசா. 42:1-3; 49:6) வாழ்விற்கும் (தி.பா. 56:13; மல். 3:20) அடையாளமாக சொல்லப்படுகிறது. இறைவனை ஒளியோடு ஒப்புமைப்படுத்தியிருக்கிறார் சங்கீதக்காரன் (தி.பா. 27:1). இப்படிப்பட்ட ஒளிக்கு எல்லை இல்லை. அது அந்தகாரத்தை அகற்றி அகில உலகிற்கும் இரட்சிப்பைத் தருகின்றது. இங்கு 'உலகம்' என்பது அகில உலகத்தினையும் (whole world) குறிக்கிறது. ஏதோ ஒரு இல்லத்திற்கோ, இறை இல்லத்திற்கோ, இதர நிறுவனங்களக்கோ அல்ல. அகில உலகம் முழுமைக்கும் என்கிறபோது ஒரு குறிபிட்ட இனத்திற்கு மட்டுமல்ல புற இனத்துக்கும் ஒளி தருகின்ற நிலையில் வாழ வேண்டும். 14bயில் 'மலையின் மேலிருக்கிற பட்டணம்' என்பது எல்லா மக்களுக்கும் ஒளி கொடுக்கிறது. அது ஒரு தனிப்பட்ட ஒளியல்ல, பலவிளக்குகளின் தொகுப்பாகும். பழங்காலத்தில் மலையின் மேலிருக்கிற பட்டணத்தை சுண்ணாம்பு கற்கள் கொண்டு கட்டினர். இரவில் சந்திரன், நட்சத்திரங்கள் ஒளி அதிலே படும்போது அந்த பட்டணம் எல்லா மக்களும் அறிகிற வகையில் பிரகாசித்தது. இரவில் சந்திரனுடைய ஒளி இல்லாவிட்டாலும், ஜன்னல் ஓரங்களில் வைக்கப்பட்டிருக்கிற விளக்குகள் மிக அழகாக பார்க்கின்றவர்களுடைய கண்களைக் கவரும் வண்ணம் ஒளியின் தொகுப்பாக இருக்கும். ஒளியான கடவுள் இயேசுகிறிஸ்து மலையின் மீது அமர்ந்து இந்த உருவகத்தை மக்களுக்குச் சொன்னதில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில் ஏசா. 9:1,2 வசனங்களில் செபுலோன் நாட்டிற்கும், நப்தலியின் நாட்டிற்கும் ஒளி தருவதோடு கடற்கரையருகிலும், யோர்தான் நதியோரத்திலுமுள்ள பிற இனத்தாருடைய கலிலேயா பிற்காலத்திலே மேன்மை வரச்செய்வார் என்ற இறைவாக்கின் நிறைவேறுதலாக பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளியாக செயல்பட்டார் (லூக். 2:30-32). ஏசா. 9:2-ல் காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர்ஒளி உதித்துள்ளது எனப்படிக்கிறோம். மரண நாட்டில் வாழுகின்ற மக்களுக்கும், பிற இனமக்களுக்கும் சுடர் ஒளி இயேசுகிறிஸ்து. (யோவா. 1:9; தி.வெ. 22:16) ஏதோ ஒரு குறிபிட்ட இடத்திற்கோ, இனத்திற்கோ அல்ல, ஆனால் உலகமனைத்திற்கும்

விடிவெள்ளியாக வந்தார். எருசலேமை "A light of the gentiles" என அழைப்பது, பிரகாசத்தை ஒளி யூதர்களுக்கு மட்டுமல்ல. உலகமனைத்திற்கும் என்பது தெளிவாகிறது.

ஒருமுறை அயல்நாட்டு அருட்பணியாள் ஒரு இந்துமத நண்பர் கேட்டார். உங்களுடைய முகத்தில் என்ன பூசியிருக்கிறீர்கள்? உங்களுடைய முகம் மிகப்பிரகாசமாக இருக்கிறது என்றார். ஒன்றும் பூசவில்லை என மறுமொழி கொடுத்தார் அந்த அருட்பணியாளர். இல்லை நான் சென்ற சூரத், ஆக்ரா, மும்பையிலும் உங்களைப்போல இறைப்பணி செய்கிறவர்களிடமும் அதே பிரகாசத்தைக் கண்டேன் என்றார். பிறகுதான் அந்த அருட்பணியாளர் சொன்னார் என் முகப் பிரகாசத்திற்கு வெளிப்படையான பூச்சை நான் பயன்படுத்தவில்லை. எனக்குள் இருக்கின்ற இயேசுகிறிஸ்துவாகிய ஒளியே என்னை பிரகாசிக்கச் செய்கிறார் என்று. நம்முடைய வாழ்வு பிரகாசிக்கிற ஒளியாக இருக்கிறதா?

### *2. பயன்தரும் ஒளி* : (வ. 15)

பாலஸ்தீன தேசத்தில் வீடுகளில் ஒரு சிறிய ஜன்னல் தான் இருக்கும். எப்போதும் இருண்டு காணப்படுகிற இல்லத்தில் விளக்கு இன்றியமையாதது. களிமண்ணால் செய்யப்பட்ட விளக்குகளில் ஒலிவ எண்ணெய் நிரப்பி பஞ்சினால் செய்யப்பட்ட திரியை விளக்கு எரிய பயன்படத்துவர். பொதுவாக, விளக்கு மரத்தினால் செய்யப்பட்ட விளக்குத்தண்டின் மீது வைக்கப்பட்டிருக்கும். மெனோரா எனப்படும் (Golden lamp stand) கொண்ட விளக்கும் இஸ்ரவேலில் மிகப்பிரசித்தி பெற்றது. தீப்பெட்டிகள், lighter போன்றவை இல்லாத காலத்தில் அடிக்கடி விளக்கை கொளுத்துவது என்பது கடினமான காரியம். எனவே வீட்டினர் வெளியே செல்லும்போது பாதுகாப்பு காரணம் கருதி அதை மரக்காலால் மூடி வைத்துச் சென்றனர். மரக்கால் என்பது கூடை போன்ற அமைப்புடைய ஒன்று. மரக்காலில் மூடிவைக்கும் போது வீட்டிலே ஒளி இருக்காது. ஆனால் அந்த விளக்கு, விளக்குத் தண்டிலோ அல்லது விளக்கு குழி என்று சொல்லப்படுகிற இடத்திலோ வைக்கப்படும்போது அது இல்லத்தில் உள்ளோருக்கு ஒளி கொடுக்கிறது. மலையின் மேலிருக்கிற பட்டணம் எப்படி 'எல்லோருக்கும்' (Universal) ஒளி கொடுக்கிற ஒளியின் தொகுப்பாக இருக்கிறதோ அதே போல விளக்குத்தண்டின் மேலுள்ள விளக்கு இல்லத்தில், இருக்கிற இடத்தில் தனிமனிதன் (individual) ஒளியாக செயல்படுவதைக் குறிக்கிறது. 1யோவா. 1:7-ல் இறைவன் ஒளியிலே இருக்கிறது போல நாமும் ஒளியிலேநடந்தால் ஒருவரோடு ஒருவர்

ஐக்கியப்பட்டிருப்போம். எப்படி பிரயோஜனப்பட வேண்டுமென்றால் விளக்கிலே இருக்கின்ற எண்ணெயும், திரியும் எப்படி தங்களை அழித்து பிறருக்கு ஒளிதருகிறதோ அதேபோல சுயம் என்கின்ற விருப்பத்தை அழித்து பிறருக்கு பிரயோஜனமாய் ஒளி கொடுத்து வாழ வேண்டும். மங்கியல்ல எழும்பிப் பிரகாசிக்க வேண்டும் (எசா. 60:1). அதோடு எரிந்து பிரகாசிக்க வேண்டும். திரியானது எரியாவிட்டால் ஒளி கிடைக்காது. எனவே மரக்காலில் மூடி வைக்கப்பட்ட விளக்காக அல்ல, விளக்குத் தண்டின் மீது வைக்கப்பட்ட விளக்கின் ஒளியாக பிரயோஜன முள்ளவர்களாக செயல்பட வேண்டும்.

அருட்தொண்டரான வில்லியம் கேரி இந்தியா வந்த போது மனிதர்களுடைய வாழ்வின் இருண்ட நிலையைக் கண்டபோது வேதனை கொண்டவராய் இரவு பகல் பாராத உழைத்து, வேதாகமத்தை பல மொழிகளில் மொழி பெயர்த்து பல்வேறு சோதனைகளைச் சந்தித்து (burning midnight oil) 'சதி' என்றழைக்கப்படுகின்ற 'கணவனுடைய பாடையிலே/ சிதையிலே மனைவியையும் தூக்கிப்போட்டு சாகடிக்கும்' முறையை அடியோடு ஒழித்து மக்களுடைய வாழ்வில் ஒளி ஏற்றினதின் விளைவாக அவர் 'இருளில் மெழுகுவர்த்தி' (Candle in the darkness) என அழைக்கப்படுகிறார்.

### *3. பிரதிபலிக்கிற ஒளி* : (வ. 16)

'இவ்விதமாய்' என்கிற வார்த்தையானது வசனம் 14,15யை 16யோடு இணைக்கிறது. இந்தப்பிரகாரமாய் உலகத்திலும், இல்லத்திலும் ஒளியானது பிரகாசிக்கும் போது, பிரயோஜனப்படும் போது, மனுஷர் உங்களுடைய நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்களை பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது. ஒளியில் இருக்கின்ற பொருளோ, நபரோ மறைந்திருக்க முடியாது. இயேசுகிறிஸ்துவாகிய ஒளி நம்மீது படும்போது நாம் பிரகாசிப்பதோடு அந்த ஒளியினைப் பிரதிபலிக்கிறோம். பல நேரங்களில் ஒளியில் இருந்தாலும் நற்செயல்களை செய்யாமல் பெயரளவில் கிறிஸ்தவர்களாய் வாழ்வதுண்டு. 'நற்செயல்கள்' என்ற பதத்திற்கு இரண்டு கிரேக்க வார்த்தைகள் 1. அகத்தோஸ் (Agathos) - good 2. Kalos - காலோஸ் - beautiful, attractive என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன.

நன்மையான, அழகான ஒளிக்கதிர்கள் நம்மீது படும்போது இது மற்றவர்களுக்குப் பிரயோஜனப்படுவதோடு பிதாவினை பறைசாற்றுவதற்கும், பிரதிபலிப்பதற்கும் உதவியாக இருக்கிறது. தி.பா. 4:6-ல் கர்த்தாவே உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள் மேல்

பிரகாசிக்கப்பண்ணும் என்கிறார் சங்கீதக்காரன். பிரகாசிப்பது என்பது ஒளிகொடுப்பது. ஆனால் பிரகாசிக்கப்பண்ணுவது என்பது பிரதிபலிப்பது. அப். 9:3 வசனத்திலிருந்து ஒரு ஒளி வந்து சவுலை தமஸ்கு தெருவிலே சந்தித்த பிறகு அவருடைய வாழ்க்கையில் ஓர் தலை கீழ் மாற்றம் ஏற்படுகிறது. ஸ்தேவானின் மரணத்தை ஒரு பார்வையாளராகப் பார்த்துக் கொண்டிருந்தவன் இயேசு கிறிஸ்துவுக்காக மரிக்கவும் துணிகிறான் சபைகளை பாழாக்கிக் கொண்டிருந்தவன் (அப். 7:58), பின்னாளில் சபைகளைக் கட்டுகிறான். எபிரேயரில் பிறந்த எபிரேயன் (பிலி. 3:5) பின்னாளில் ஆணென்றுமில்லை பெண்ணென்றுமில்லை, யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை என (கலா. 3:16)ல் கூறுவதிலிருந்து அவர் பிதாவினுடைய மகிமையை தன் நற்கிரியைகளின் மூலம் பிரதிபலிக்கிறார். இருண்ட கண்டம் (Dark continent) என்றழைக்கப்படும் ஆப்பிரிக்காவிற்கு அருட்தொண்டராக பணியாற்றி இயேசு கிறிஸ்துவின் ஒளியைத் தன் வாழ்வில் பிரதிபலித்த டேவிட் லிவிங்ஸ்டென் அவர்கள் ஆப்பிரிக்காவிற்கு ஒளி கொடுத்ததோடு மக்களுக்கு தன் இருதயத்தையே கொடுத்தார்.

கிறிஸ்தவர்கள் ஒளி கொடுப்பதிலே பல நிலைகளில் செயல்படுகின்றனர்.

Festive lights - Christmas போன்ற பண்டிகை காலங்களில் மட்டும் ஒளி கொடுக்கின்ற அலங்கார விளக்குகள்.

Flash lights - திடீரென அவசரத்திற்கு பயன்படுகிற torch light போல ஒளி கொடுத்து மறைகின்றனர்.

Flashing lights - மின்னல் போன்று விட்டு விட்டு ஒளி கொடுக்கிறவர்களாக இருக்கின்றனர்.

Tube lights - எவ்வளவு கற்றாலும், எச்சரிப்பு பெற்றாலும், மிகவும் மெதுவாக செயல்படுகிறவர்களாக ஒரு சிலர் இருக்கின்றனர்.

Candle lights - பாதுகாப்பற்ற, காற்றினால் அலைக்கழிக்கப்படுகின்ற, அணைந்து போகிறவர்களாக இருக்கின்றனர்.

ஆனால் நாம் இயேசு கிறிஸ்துவை பிரகாசிக்கிற, பிரயோஜனமான, பிரதிபலிக்கிற விளக்குகளாக, விடிவெள்ளிகளாக செயல்பட்டு பிதாவை நம் வாழ்வில் மகிமைப்படுத்துவோம். 481வது ஞானப்பாடலின் வரிகளான "இயேசு கற்பித்தார் ஒளி வீசவே" நாம் எப்படி பிரகாசமுள்ளவர்களாக, பிரயோஜனமுள்ளவர்களாக, பிரதிபலிக்கிறவர்களாக இருக்கமுடியும் என்பதை 'சிறுதீபம்' நமக்கு காட்டுகிறது.

முனைவர். **சோபனா கின்சன்பெல்**

18-11-2018

**பெண் குழந்தைகள் ஞாயிறு**

# பெண் குழந்தையைப் பாதுகாத்தல்
## PROTECTING THE GIRL CHILD

யோபு 42:10-17 | தி.ப. 16:16-18
தி.பா. 45:8-14 | மத். 15:21-28

**"யோபுவின் புதல்வியரைப் போல் அழகுவாய்ந்த நங்கையர் நாடெங்கும் இருந்ததில்லை. அவர்களின் தந்தை, அவர்களின் சகோதரர்களோடு அவர்களுக்கும் சொத்தில் உரிமை கொடுத்தார்." யோபு 42:15**

மனுக்குலம் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டது. "கடவுள் தம் உருவில் மனிதரைப் படைத்தார். கடவுளின் உருவிலே அவர்களைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாகவே அவர்களை படைத்தார்" (தொ.நூ. 1:27).

பெண்கள் மற்றும் பெண்குழந்தைகளுக்கு எதிரான வன்முறை, பெண்குலத்தையே அழித்துவிடுமோ என்கின்ற பயம் நிறைந்த சூழலை சமுதாயம் உருவாக்கியிருக்கிறது. "ஆணில்லாமல் பெண்ணில்லை, பெண்ணில்லாமல் ஆணில்லை" என்ற நிலை இருக்கின்றபோதே, விகிதாச்சார அடிப்படையில் இந்தியாவில் ஆண்களை விட பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது. 2001-ஆம் வருடத்தில் ஆயிரம் ஆண்களுக்கு 933 என்ற விகிதாச்சாரத்தில் பெண்களின் எண்ணிக்கை குறைந்திருந்தது. விழிப்புணர்வு நிகழ்வுகளின் வாயிலாக 2017ம் ஆண்டில் ஆயிரம் ஆண்களுக்கு 945 என்ற எண்ணிக்கையில் விகிதாச்சாரம் உயர்ந்திருக்கிறது. ஆயிரத்தில், ஐம்பத்தி ஐந்து பெண் குழந்தைகளைக் கொன்று சாபம் நிறைந்த சமுதாயத்தில் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் பெண் குழந்தைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவது அவசியமாயிருக்கிறது. திருமறையின் அடிப்படையில் பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு நாம் செய்ய வேண்டிய காரியங்களை மூன்று தலைப்புகளில் சிந்திப்போம்.

### *1. கல்வி கற்கும் உரிமையளித்துப் பாதுகாத்தல்* :

"மரியாவோ, நல்லப் பங்கைத் தெரிந்துக் கொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்பட்டது" (லூக். 10:42). இயேசு மார்த்தா, மரியாள் இருந்த வீட்டிற்குச் சென்றபோது மார்த்தா அவரை வரவேற்றாள், மேலும்

பலபணிகள் புரிவதில் பரபரப்பாகி இயேசுவிடம் வந்து ஆண்டவரே, நான் பணிவிடைச் செய்ய என் சகோதரி என்னைத் தனியே விட்டு விட்டாளே, உமக்கு கவலையில்லையா, எனக்கு உதவி புரிய அவளிடம் சொல்லும் என்றதற்கு, இயேசு மார்த்தா நீ பலவற்றைப் பற்றி கவலைப்பட்டுக் கலங்குகிறாய். ஆனால் தேவையானது ஒன்றே, மரியாவோ நல்லப் பங்கைத் தெரிந்தெடுத்துக் கொண்டாள். அது அவளிடமிருந்து எடுபடாது என்று பெண்கள் கற்பதின் அவசியத்தை இயேசு வலியுறுத்துகிறார். பவுல் கமாலியேலின் பாதத்திலிருந்து கற்றுக் கொண்டார். இயேசு மரியாவிடம் சொன்ன இந்த வார்த்தை தான் கிறிஸ்தவ மிஷனெறிகள் பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க காரணமாக அமைந்தது. நமது மாநிலத்திற்கு வருகை தந்த மிஷனெறிகள் பெண்கல்வியை ஊக்குவித்ததின் அடையாளங்கள் தான் "டதி மகளிர் மேல்நிலைப்பள்ளி, மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி", இன்றும் பல கல்வி நிறுவனங்கள் சாட்சியாக நம்முடைய மாநிலத்தில் இருக்கின்றன. இந்த கல்வி நிறுவனங்களில் கற்றுக் கொண்ட மாணவிகளால், அவர்களது குடும்பத்தரம் உயர்ந்ததுமல்லாமல், சமூக வாழ்க்கைத் தரமும் உயர்ந்திருக்கிறது. இயேசு தேவையானது ஒன்றே என்று சொன்ன வார்த்தையின் வாயிலாக சமையலறையில் அடைபட்டிருந்த பெண்களின் சிறையிருப்பை மாற்றி பாதுகாப்பை உறுதி செய்தார்.

## *2. சொத்துரிமை அளித்துப் பாதுகாத்தல்* :

"யோபுவின் புதல்வியரைப் போல் அழகு வாய்ந்த நங்கையர் நாடெங்கும் இருந்ததில்லை. அவர்களின் தந்தை அவர்களின் சகோதரர்களோடு சொத்தில் உரிமைக் கொடுத்தார்."

பழைய ஏற்பாட்டு கால சமுதாயம் ஆண் ஆதிக்கம் நிறைந்ததாக காணப்பட்டது. திருமறையில் பல பெண்களின் பெயர்கள் மறைக்கப்பட்டு இருக்கின்றன. யோபு கடவுளை முழுமையும் அறிந்து அவரோடு உரையாடியதன் காரணமாக அவருடைய பெண்குந்தைகளின் சுதந்திரத்தை பாதுகாக்கிறவராக செயல்பட்டு இருக்கிறார். அவருடைய பெண் பிள்ளைகளின் பெயர்கள் திருமறையில் இடம் பெற்றது மட்டுமல்லாமல் சொத்தில் உரிமையும் கொடுத்து தன் பெண்பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்திருக்கிறார். நமது சமுதாயத்தில் வரதட்சனை என்ற பெயரிலே பெண்களுக்கு நகையும், பணமும் கொடுக்கப்படுகிறது. இவைகள் சீக்கிரத்தில் செலவழிக்கப்பட்ட நிலையில் பெண்கள் எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல் அடிமைப்படுத்தப்படுகிறார்கள். இதனால் பல

இன்னல்களுக்கு உள்ளாகிறார்கள். (எ.கா. பெண்களை தீ வைத்து கொளுத்துதல்). தாங்கள் அனுபவிக்கின்ற இன்னல்களை தன்னுடைய பெண் பிள்ளைகள் அனுபவிக்க வேண்டாமென்கிற நோக்கில் கருவிலே அழிக்கவும் (Female FETICIDE) துணிந்து விடுகிறார்கள். பிறந்த பெண் பிள்ளைகளை கள்ளிப்பால் ஊற்றியும் கொன்று விடுகிறார்கள். சொத்தில் பெண்களுக்கு உரிமை கொடுப்பது அவர்களுக்கு தன்னம்பிக்கை அளிக்கும். எண்ணிக்கை 27-ஆம் அதிகாரத்தில் செலோபுகாத்தின் புதல்வியர் தங்கள் சொத்துரிமையைப் போராடி பெற்றுக் கொண்டனர். பெண்குழந்தைகளை பாதுகாக்க வேண்டுமாயின் அவர்களுக்கு சொத்துரிமை அளிப்பது இன்றியமையாததாகும்.

### *3. விடுதலை அளித்துப் பாதுகாத்தல்* :

"நீ இவரை விட்டுப் போகுமாறு இயேசுவின் பெயரால் கட்டளையிடுகிறேன்" தி.ப. 16:18. அப்போஸ்தலனாகிய பவுல் இறைவேண்டல் செய்யும் இடத்திற்கு சென்று கொண்டிருந்த போது குறிசொல்லும் ஆவியைக் கொண்டிருந்த பெண் எதிராக வந்த பவுலையும் சீலாவையும் பார்த்து இவர்கள் உன்னத கடவுளின் பணியாளர்கள் மீட்பின் வழியை உங்களுக்கு அறிவிக்கிறவர்கள் என்று பல நாள் சொல்லிக் கொண்டிருந்தாள். இந்தப் பெண் குறி சொல்லும் ஆவியை தம்மில் கொண்ட அடிமைப் பெண் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவரை அடிமையாக வைத்து இவரின் மூலமாக சிலர் வருவாய் பெற்றிருந்தார்கள். இவரை பவுல் அப்போஸ்தலர் அசுத்த ஆவிகளிலிருந்து விடுதலை அளித்து பாதுகாக்கிறவராக செயல்பட்டார். இவ்விதமாக பெண்கள் சமுதாயத்தில் சுரண்டப்படுகின்ற நிலைமை எங்கும் காணப்படுகிறது. விபசாரத்தில் பெண்களை ஈடுபடுத்தி அதன் மூலம் வருவாய் பெறுகின்றவர்கள் நம் சமுதாயத்தில் இன்னும் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

கானானியப் பெண் இயேசுவிடம் வந்து, ஐயா தாவீதின் மகனே, எனக்கு இரங்கும் என் மகள் பேய் பிடித்து கொடுமைக்குள்ளாயிருக்கிறாள் (மத். 15:22) எனக் கதறி தன்னுடைய மகளின் விடுதலைக்காக தன்னையே தாழ்த்தி அர்ப்பணிக்கிறாள். இயேசு அம்மா உனது நம்பிக்கை பெரியது நீ விரும்பியவாறே உனக்கு நிகழட்டும் என்று அந்த பெண்ணின் மகளை சுகமாக்கி விடுதலையளித்து பாதுகாக்கிறவராக செயல்படுகிறார். இயேசுவின் எல்லா செயல்பாடுகளும் விடுதலையளிக்கும் செயல்பாடுகளாகவே நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பெண்குழந்தை பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் பிறக்கின்ற பெண்குழந்தைகளை சுமையாக கருதாமல், புறக்கணிக்காமல் அவர்களை மதித்து, போற்றிப் பாதுகாக்க கடமைப்பட்டிருக்கிறோம். அப்படியாக நாம் செயல்படுகின்ற போது இல்லத்திலும் சமுதாயத்திலும் உலகத்திலும் சமாதானமான வாழ்வைப் பெற்றுக் கொள்ள முடியும். பெண் குழந்தைகளை அழிக்க எடுக்கின்ற முயற்சிகள் இல்லத்தையும், சமுதாயத்தையும் உலகத்தையும் அழிவுக்கு நேராக வழிநடத்தும். எனவே, பெண்குழந்தைகளுக்கு கல்வி கற்கும் உரிமையையும், சொத்துரிமையையும், விடுதலை வாழ்வையும் அளித்து அவர்களை பேணிபாதுகாப்பது நமது கடமையாகும். அதுவே இறையாட்சியின் அடையாளமாகும்.

அருள்திரு. S. **ராஜலின் ஜெயம்**

25-11-2018

# ஆண்டவரின் வருகைக்காக இறைவேண்டலோடு காத்திருத்தல்

## WAITING PRAYERFULLY FOR THE COMING OF THE LORD

மலா. 4:1-6 | 2 தெச. 2:1-17
தி.பா. 121 | மத். 25:1-13

**"ஆனாலும் என் பெயருக்கு அஞ்சி நடக்கிற உங்கள் மேல் நீதியின் கதிரவன் எழுவான்."** மலா. 4:2

மலாக்கி என்னும் இறைவாக்கு நூல் கி.மு. 5-ம் நூற்றாண்டில் எருசலேம் கோவில் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டதற்கு பின் தோன்றியது. குருக்களும், மக்களும் சமயக் கடமைகளில் தவறினர். அவர்கள் ஆண்டவருக்கு சேர வேண்டிய காணிக்கையை முறைப்படி செலுத்தவில்லை. அவர்தம் கட்டளைகளைக் கடைபிடிக்காது அவரை அவமதித்தனர். அவரை களங்கப்படுத்தினர். எனவே ஆண்டவர் தம் மக்களுக்குத் தண்டனை வழங்கவும், அவர்களைத் தூய்மைப்படுத்தவும், அவரது வழியை ஆயத்தம் செய்யவும் அவரது உடன்படிக்கை பற்றி எடுத்துரைக்கவும் அனுப்புவார் என்பதை இறைவாக்கினர் எடுத்துரைக்கிறார். எனவே இறைமக்களாகிய நாம் ஆண்டவரின் வருகைக்காக காத்திருத்தல் மிகவும் அவசியம்.

### *1. நீதியின் வாழ்வுக்காய்க் காத்திருங்கள்* : (மலா. 4:1-6)

தூர நாடு சென்ற தகப்பன் எப்போது வருவார் என ஒவ்வொரு நாளும் தன் தாயிடம் கேட்டான் மகன் சாமுவேல். உன் தகப்பன் இன்று அல்லது நாளை வருவார் என்று தாய் பதில் சொன்னாள். இப்படியாக காலங்கள் சென்றன. தகப்பன் எப்படி இருப்பார் என்பதையே மகன் மறந்து போனான். தாயின் சொல்லுக்கு கீழ்படிவது இல்லை, பள்ளி பாடங்களை படிப்பது இல்லை. கெட்ட நண்பர்களுடன் ஊர் சுற்றும் சிறுவனாய் மாறினான் இந்த சாமுவேல். என்றும் அழுகையுடன் இருக்கும் தாய் முகத்தில் அன்று மகிழ்ச்சி தன் பக்கத்து வீட்டு நண்பர்களிடம் தாய் சொன்னார் "அவர் வருகிறார்" என் காத்திருப்பபின் காலங்கள் தீர்ந்தது. சாமுவேல் தம்பிக்கோ பயம் பிடித்து கொண்டது. தன் தகப்பன்

கோபக்காரர் என்றும் மிக கண்டிப்புடன் நடந்து கொள்பவர் என்றும் தாயினால் அறிந்திருந்தான் சாமுவேல். தகப்பன் வந்துவிட்டார். இல்லத்தில் மகிழ்ச்சி சாமுவேலோ மறைந்து இருந்தான். ஆனால் தகப்பனோ சாமுவேலை அழைத்து அருகில் அமர்த்தினார். தான் வாங்கி வந்த பொருட்களை பரிசாக கொடுத்தார். நன்கு படிக்க வேண்டும் கீழ்படிதலுள்ள பிள்ளையாக வளர வேண்டும் என ஆலோசனை சொன்னார். சாமுவேலும் தான் அவ்வாறு படிப்பதாக தகப்பனிடம் உறுதி சொன்னான், பயம் நீங்கியது மகிழ்ச்சி பெருகியது.

மல்கியா இறைவாக்கினர் நீதியின் சூரியனாம் ஆண்டவரின் வருகையை எதிர்நோக்கி காத்திருக்கும் மக்களுக்கு ஆண்டவரின் வருகை எப்படி இருக்கும் என்பதை உரைக்கிறார் (மலா. 4:1-6). ஆண்டவரின் பெயருக்கு அஞ்சியிருக்கிற மக்கள் மீது நீதியின் கதிரவன் எழுவான். அவனுடைய இறக்கைகளில் நலம் தரும் மருந்து இருக்கும். நீங்களும் தொழுவத்திலிருந்து வெளிவரும் கொழுத்த கன்றுகளைப் போல வளருவார்கள் என்றும் அறிவிக்கிறார்.

நீதியின் கதிரவனாம் ஆண்டவருக்காய் காத்திருப்போரே நீங்கள் ஒரேப்பிலே இஸ்ரயேலரெல்லாருக்காகவும் மோசே வழியாக கற்பிக்கப்பட்ட திருச்சட்டமாகிய கட்டளைகளையும் நியாயங்களையும் நினையுங்கள் அவைகளை கைகொள்ளுங்கள் என உரைக்கிறார். எனவே நாம் நீதியின் வாழ்வுக்காய் இறைவேண்டலுடன் காத்திருப்போம்.

## *2. நம்பிக்கையின் வாழ்வுக்காய்க் காத்திருங்கள்* :

(2தெச. 2:1-17)

ஆண்டவரின் நாள் எப்படி இருக்குமோ என்ற கலக்கம் தொடக்கக்கால விசுவாசிகள் நடுவில் பெருகி வந்தது. ஆண்டவரின் நாள் குறித்து கலக்கமான சூழல் தெசலோனிக்க திருச்சபையில் காணப்பட்டது (2தெச. 2:2). இதற்கான காரணம் தான் என்ன என ஆராய்கையில் ஆண்டவரின் நாள் குறித்து ஏமாற்றமான மோசம் போக்கும் செய்திகளை அறிவிக்கும் மக்கள் தெசலோனிக்கேயர் நடுவே பெருகி இருந்தனர். அது மாத்திரமல்லாமல் திருத்தூதுவர் கடிதங்களை போன்றே போலியான கடிதங்கள் வழியாக தெசலோனிக்கேய மக்களுக்கு ஆண்டவர் நாள் சமீபமாயிற்று என செய்தி சொன்ன மக்கள் இருந்தனர் (2தெச. 2:2). இவர்களை பவுலடிகளார் அழிவுக்குரியவர்கள் (2தெச. 2:3) என்றும் பொய் உரைத்தல் (2தெச. 2:12) அதன் வெளிப்பாடு என்றும் குறிபிட்டு அத்தகைய செயல் புரிவோர் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்றும்அறிவிக்கிறார்.

மேலும் அத்தகைய பாவ மனிதன் எதிர்த்து நிற்பவனாயும், ஆண்டவரின் ஆலயத்தில் அமர்ந்து தன்னை தான் கடவுள் என உயர்த்துபவனாகவும் வெளிப்படுவார் (2தெச. 2:4). இவை நடைபெறும் காலத்தில் ஆண்டவரின் நம்பிக்கையில் நிலைப்போர், இயேசு கிறிஸ்து வழியாக அருளப்படும் அன்பு, நித்திய ஆறுதல், நல்நம்பிக்கை (2தெச. 2:16) என்றும் கிருபைகளால் உறுதியாய் நிலைநிறுத்தப்படுவர் என வலிமையான விசுவாச உறுதியை வாழ்வுக்காய் இறைவேண்டலுடன் காத்திருப்போம்.

### ***3. நித்திய வாழ்வுக்காய்க் காத்திருங்கள் :*** (மத். 25:1-13)

காத்திருப்பின் காலங்கள் நிறைவு பெற்று புதிய வாழ்வு பெற மிகமிக ஆயத்தம் தேவை. மத். 25:1-13-ல் மணவாளனுக்கு எதிர்கொண்டு போன பெண்கள் தீவட்டிகளைப் பிடித்திருந்தனர். ஐந்துபேர் விளக்குகளுடன் எண்ணெய் எடுத்து சென்றனர். மற்ற ஐந்து பேரோ எண்ணெய் எடுத்து செல்லவில்லை. இங்கு எண்ணெய் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. அது விளக்காகிய வாழ்வை எரிய செய்கிறது. இந்த உவமையில் நாம் உணர்ந்து கொள்வது என்னவெனில் பத்து பெண்களும் புறப்பட்டனர் (மத். 25:1), மணவாளன் வருகிறார் என்ற குரல் கேட்டபோது எல்லா பெண்களும் எழுந்திருந்தனர் (மத். 25:7), முன்மதியற்றவர்களாக எண்ணெய் கொண்டு செல்லாத பெண்கள் முன்மதியுடன் சென்ற பெண்களிடம் இரவல் கேட்டனர் (மத். 25:8), அது மாத்திரமல்லாமல் எண்ணை இல்லை என தெரிந்தும் விளக்குகளை எரியச் செய்ய முயற்சிக்கின்றனர் (மத். 25:8). இந்த செயல் மணவாளனை ஏமாற்றும் அனுபவமாகவும், தங்களையும், தங்களுடன் இருக்கும் முன்மதியுள்ள பெண்களையும் ஏமாற்றும் செயலாக காணப்பட்டது.

விளைவு முன்மதியற்ற பெண்கள் முழுமையாக ஏமாற்றம் கண்டனர். எனவே நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து தமது வருகையை அறிவித்து “எனவே விழிப்பாயிருங்கள்; ஏனெனில் அவர் வரும் நாளோ, வேளையோ நாளிகைகையாவது நீங்கள் அறியாதபடியால் உங்களுக்குத் தெரியாது” (மத். 25:13) என்கிறார். எனவே நித்திய வாழ்வுக்காய் இறைவேண்டலுடன் காத்திருப்போம்.

அன்பர்களே! ஆண்டவரின் வருகைக்காக இறை வேண்டலோடு காத்திருப்போம். நீதியின் வாழ்வுக்காய், நம்பிக்கையின் வாழ்வுக்காய், நித்திய வாழ்வுக்காய் பொறுமையுடன் இறைவேண்டலோடு காத்திருப்போம். இறை ஆசிப்பெறுவோம்.

அருள்திரு. **ஜோசப் C.G. செனித்**

02-12-2018

வருகையின் ஞாயிறு

# எலிசபெத்துடன் மரியாவின் சந்திப்பு: நற்செய்தியைக் கொண்டாடுதல்

# MEETING OF MARY WITH ELIZABETH : CELEBRATING THE GOOD NEWS

| | |
|---|---|
| வி. ப. 2:1-10 | தி.ப. 9:10-18 |
| தி.பா. 117 | லூக். 1:46-56 |

***"...எலிசபெத்தை வாழ்த்தினார்."*** லூக். 1:40

நற்செய்தி என்பதே கொண்டாட்டமான நிகழ்வாகும். பொதுவாக, ஒன்றைப் பெற்றுக் கொள்ளுதல் என்பது நற்செய்தியாகவும், இழந்து விடுதல் என்பது துர்ச்செய்தியாகவும் நாம் அறிந்திருக்கிறோம். லூக். 1-ம் அதிகாரத்தில் இரு நற்செய்தியைக் காணலாம். அது பிறப்பின் செய்தியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (i) யோவானின் பிறப்பு (ii) இயேசுவின் பிறப்பு இந்த பின்புலத்தில் நமது சிந்தனையை தொடருவோம்.

## *1. நற்செய்திக்கான ஆயத்தம்* :

நற்செய்தியின் விடியல் கடவுளே. யாக். 1:17-ல் நல்ல கொடைகள் அனைத்தும் நிறைவான வரமெல்லாம், ஒளியின் பிறப்பிடமான விண்ணகத் தந்தையிடமிருந்தே வருகின்றன எனக் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு நற்செய்தியும் விண்ணிலிருந்தே திட்டம் செய்யப்படுகிறது. அவ்வாறே கிறிஸ்துவின் பிறப்பிலும் முன் ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்தது. அவை இறைவாக்கின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எசா. 40:3 -ல் குரலொலி ஒன்று முழங்குகின்றது பாலைநிலத்தில் ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள், என்ற வாக்கின் நிறைவேறுதலாக திருமுழுக்கினர் யோவானின் முழக்கம் (லூக். 3:3-6) அவ்வாறே லூக். 1:13-ல் தூதர் செக்கரியாவிடம் கூறுவது. லூக். 1:31 மரியாவிடம் உரைத்ததெல்லாம் நற்செய்தியின் ஆயத்தமே. எசா. 9:6-ல் ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார் என்பதும் எசா. 11:1-ல் ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர்விடும் என்ற கூற்றும் மீகா. 5:2-ல் எப்ராத்தா எனப்பட்ட பிறப்பிடம் என்பதும், முதலாம் குடி மதிப்புக்காக எருசலேம் செல்ல வேண்டுமென்பதும்.

கலா. 4:5 -ல் காலம் நிறைவேறிய போது..... மரியாவிடம் தோன்றினார் என்பதும் இதனுடைய செய்தியே. இந்நிலையில் மானிட ஆயத்தங்களும் முக்கியமானதாகும் என்பதையும் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

சகரியா எலிசபெத் குடும்பம் குற்றமற்றவர்களாக நடந்து வந்தார்கள். (லூக். 1:6) அவர்கள் முதிர்ந்தவர்களாயிருந்தார்கள், எலிசபெத்து கருவுற இயலாதவராய் இருந்தார் (லூக். 1:7). ஆனால் இறைவனோடு இருந்தனர். இறைவனோடு பேசினர், அந்த வேண்டுதல் ஏற்கப்பட்டது. (லூக். 1:13). ஆயத்தத்தின் அலங்காரத்தில் மேன்மை பெற்றவர்களாயிருந்தனர். சகரியா எலிசபெத் குடும்பம், அவ்வாறே மரியாவும் ஆயத்தப்படுகிறார். வானதூதரின் வாக்கு "அருள் மிகப் பெற்றவரே" வாழ்க (லூக். 1:28). ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் என்ற வாழ்த்தும் ஆயத்தப்படுத்துதலின் அங்கீகாரமே. Madona என்பவர் சிறப்பாக படம் வரையும் திறன் பெற்றவர். மரியா படம் வரைந்தவர். அவரிடம் கேட்கப்பட்ட கேள்வி ஏன் மரியாவை வரைந்தீர்கள் என்பதாக. அதற்கு அவரின் பதில் மரியாவின் இறைத்தாழ்மை, சிந்தனைத் தெளிவு, இறை அருள் என்னைக் கவர்ந்தது என்றாராம். இன்றைய நிலையில் நற்செய்தியை நாமும் பெற வேண்டுமெனில் முனைப்பான பார்வை, அர்ப்பணம் முக்கியமானதாகும்.

## *2. நற்செய்திக்கான அங்கீகாரம்* :

எதிர்பார்த்திருந்த நற்செய்தி எதிர்பாரா சூழலில் அருளப்படுகிறது. வான்தூதரின் வாயிலான நற்செய்தி அங்கீகரிக்கிறது. லூக். 1:19-ல் ......உம்மோடு பேசவும் இந்த நற்செய்தியை உமக்கு அறிவிக்கவும் அனுப்பப்பட்டேன். செக்கரியாவின் ஊனியல் சார்ந்த சிந்தை நற்செய்தியின் கொண்டாட்டத்தை மட்டுப்படுத்தி விடுகின்றது.

லூக். 1:18 இது நடைபெறும் என எனக்கு எப்படி தெரியும்? நாங்கள் வயதானவர்களல்லவா? செக்கரியாவில் ஏற்பட்ட சந்தேக அதிர்வால் இறை தண்டனைக்குட்படுத்தப்பட்டார். (லூக். 1:20) அவை நிறைவேறும் வரை பேச்சற்றவராய் மாறுகிறார். ஆனால் இந்த தண்டனை அவரது விசுவாசத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இந்நிலையில் தான் செக்கரியாவின் பாடலும் வெளிவந்தது (லூக். 1:67-80). ஆனால் மரியாவோ இறைக்காட்சியைப் பெற்றவுடன் (லூக். 1:29) கலக்கத்தின் நடுவிலும் திடன் பெற்றவராய் இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே (லூக். 1:34) எனக் கேட்டு "நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு

நிகழட்டும்'' என ஒப்படைக்கிறார். ஆண்டவரின் உறுதிமொழிகள் உன்னதமானவவை, அவைகளை பொறுமையுடனும் பொறுப்பான ஒப்படைப்புடனும் பெறுதல் சிறப்பானதாகும். நற்செய்திக்கான அங்கீகாரத்திற்கு நம்மையும் நாம் ஒப்படைப்பதே மேலானதாகும்.

## *3. நற்செய்தியின் அக்களிப்பு* :

மரியா எலிசபெத்தின் இல்லத்திற்கு சென்று வாழ்த்துகிறார். (லூக். 1:40) நெடிய நாட்களின் இடைவெளிக்குப் பின்னர் உறவினில் ஏற்படும் உன்னத பிணைப்பு உளம் நிறைந்த வாழ்த்துதலாக வெளிப்படுகிறது. அது எலிசபெத்தின் உள்ளத்துக்குள் அக்களிப்பை தர வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. இது வரையிலும் இல்லாத புதிய பூரிப்பு தி.பா. 114:4b ஆட்டுக்குட்டிகள் போலும் துள்ளிக் குதித்தன என்ற கவியரசரின் வாக்கு இங்கே பொருத்தமாகிறது. மகிழ்வொலியுடன் மலர்ந்த வாழ்த்துக்கள் மனம் நெகிழச் செய்யும் நிகழ்வாகிறது. மட்டுமன்று உண்மையான வாழ்த்து உறவுகளை உறுதிப்படுத்தி உள்ளங்களை ஒன்றிணைக்கும் என்பதையும் யோவா. 3:29-ன் வாயிலாக நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். கிறிஸ்து பிறப்பு நாட்கள் இந்த அக்களிப்பினையும், ஆனந்தத்தினையும் தரும் நாட்களாக அமைய வேண்டும். மரியாவின் வாழ்த்துக்களால் எலிசபெத்து தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டார் என்பதும் அந்த ஆட்கொள்ளப்படுதலில் "என் ஆண்டவரின் தாய்'' என அறிக்கையிடுகிறார். எலிசபெத் வயது வேறுபாடு பாராமலும், குடும்ப மேன்மையை நினைந்து கொள்ளாமலும் வாழ்த்தும் வாழ்த்து நல் முன்மாதிரியன்றோ. சந்திப்பில் ஏற்பட்ட சத்துவமான அனுபவம் நற்செய்தியாக கொண்டாட்டம் பெறுகிறது.

கிறிஸ்து பிறப்பு கொண்டாடத்திற்குரிய ஆயத்தங்களில் முன்னெடுத்துச் செல்லும் அனைவரும் உறவுகளுக்கு முன்னூக்கம் தர வேண்டும். அதுவே நம்மிடம் எதிர்பாக்கப்படும் எதிர்பார்ப்பாகும். விண்ணின் விடியலை மண்ணின் மானிடருக்கு பரப்புரை செய்யும் அனைவரிடத்திலும் மகிழ்வும், பகிர்வும் தொடரட்டும். இந்த உறவு பயணத்தில் மகிழ்வொலி இழந்திருப்போரையும் மனதில் நிறுத்தி மகிழ்ச்சிப்படுத்துவோம். அதுவே நம்மை விண்ணகச் சந்திப்புக்கு நேராக ஒருமுகப்படுத்தட்டும்.

அருள்திரு. D. **ஜஸ்டின் தேவதாசன்**

09-12-2018

**விவிலிய ஞாயிறு &**
**வருகைக்காலம் இரண்டாம் ஞாயிறு**

# இறைவாக்கு : தூண்டப்பெற்றது தூண்டுவதற்கே

## WORD OF GOD : INSPIRED TO INSPIRE

1 அர. 19:1-21 தி.வெ. 10:1-11
தி.பா. 119:33-40 லூக். 1:39-45

***அப்பொழுது ஆண்டவர் "வெளியே வா; மலை மேல் என் திருமுன் வந்து நில். இதோ! ஆண்டவராகிய நான் கடந்து செல்லவிருக்கிறேன்" என்றார்.*** 1அர. 19:11

இறைவாக்கு இறைவிருப்பத்தையும், இறைத்திட்டத்தையும் இறைமக்களுக்கு அறிவிக்கும் ஊடகமாகும். இறைவாக்கு காட்சிகள் வழியாகவும் (ஆபிரகாம் - தொ.நூ. 15:1) அடையாளங்களினூடாகவும் (eg. மோசே - வி.ப. 3:2) தூதர் வாயிலாகவும் (eg. எலியா - 1அர. 19:5) இறைவாக்கினர்கள் மூலமாகவும் (eg. ஆகாபு - 1அர. 21:17-24) வழங்கப்படுகிறது. திருப்பாடகர் தாவீது கடவுளிடம், இறைவாக்குகளால் உமது திருச்சட்டங்களின் வழிகாட்டுதலில் வாழவும், தன்னல பாதையில் பயணிக்காமல் கடவுளின் ஒழுங்கு முறைகளில் நாட்டங்கொள்ளவும் என்னைத் தூண்டும் (தி.பா. 119:39-45) என இறைவேண்டல் செய்கிறார். இறைவாக்கு செயல்படும் ஆற்றல் (Action oriented) மிகுந்தது. எனவே முடங்கியிருப்போரை தூண்டியெழுப்பி இறையாற்றல் பெற்று செயல்பட வைக்கிறது. இன்றைய விவிலியப் பாடங்களில் வெளிப்படும் இறைவாக்கின் தூண்டுதல்களையும் அதனால் விளையும் நற்பலன்களையும் தியானிப்போம்.

### *1. இறைவாக்கு உணவு வழங்கித் தூண்டுகிறது* :

1அர. 19:5b ....வானதூதர் அவரை தட்டி எழுப்பி, "எழுந்து சாப்பிடும்" என்றார்.

அரசர் ஆகாபு சீதோனிய மன்னர் எத்பாகாலின் மகள் ஈசபேலை மணந்து கொண்டு பாகால் வணக்கத்தை தொடங்கினார். இது கடவுளுக்கு கோபமூட்டும் செயலாய் அமைந்தது. இந்நிலையில் மழையில்லாத பஞ்சத்தின் நாட்கள் வரப்போகிறது என்ற இறைவாக்கை ஆகாபு அரசருக்கு அறிவித்தார் இறைவாக்கினர் எலியா. இறைவாக்குப்படி அரசருக்கு மறைந்து வாழ்ந்த எலியா பஞ்சத்தின் மூன்றாம் வருடத்தில் அரசரை சந்திக்கிறார். இருமனத்தோராய் தத்தளித்துக் கொண்டிருந்த

மக்களுக்கு, ஆண்டவரே கடவுள் என உணர்த்திட விரும்பினார் எலியா. ஆகவே, பலியை படைத்து பாகாலின் பொய்வாக்கினர்கள் பாகாலை அழைக்கட்டும், நானும் பலியை படைத்து கடவுளை அழைப்பேன்; நெருப்பின் வாயிலாய் பதிலளிப்பவரே உண்மையான கடவுள் கூறினார். எலியாவின் பலி நெருப்பினால் ஏற்கப்பட மக்கள் "ஆண்டவரே கடவுள்" என அறிக்கையிட்டனர். எலியா பாகாலின் பொய்வாக்கினர்கள் அனைவரையும் கீசோன் ஓடைக்கு கொண்டு போய் கொன்றார். சினந்தெழுந்த ஈசபேல், நானும் நாளை இந்நேரத்திற்குள் உன் உயிரை பறிப்பேன் என சூளுரைத்தான். அச்சமுற்ற எலியா உயிர்பிழைக்க ஓடினார். ஒரு சூரைச் செடியின் கீழ் அமர்ந்து கொண்டு, "என் உயிரை எடுத்துக் கொள்ளும்" என மன்றாடினார். மனமும், உடலும் சோர்புற்ற நிலையில் அங்கேயே படுத்துறங்கினார் எலியா. வானதூதர் வந்து அவரைத் தட்டி எழுப்பி, "எழுந்து சாப்பிடு" என்றார் (1அரச. 19:4-6).

கெரீத்து ஆற்றங்கரையில் மறைத்து வைத்து காகங்களைக் கொண்டும், சாரிபாத்துக் கைம்பெண்ணைக் கொண்டும் உணவு வழங்கி பாதுகாத்த கடவுள் தம் தூதரை இப்போது அனுப்புகிறார். வாழ்வு போதும் என மன்றாடிய எலியா மேலும் வாழ வேண்டுமென எலியாவை மீண்டும் தூதர் தட்டியெழுப்பி உணவளித்தார் (1 அப். 19:7). அவ்வுணவினால் ஆற்றல் பெற்ற எலியா நாற்பது நாட்கள் நடந்து ஒரேபு என்ற கடவுளின் மலையை அடைந்தார். இம்மலையில் தான் மோசேயை எரியும் முட்புதர் வாயிலாய் கடவுள் சந்தித்தார்.

பஞ்சகாலத்தில் பாகாலின் பொய்வாக்கினருக்கு அரச பந்தியில் விருந்து படைக்கப்பட்டது (1 அரச. 18:19). நாட்டு மக்களோ கைவசமிருந்த உணவுகளை சாப்பிட்டு, பஞ்சத்தால் மாண்டு போகும் நிலை (1அரச. 17:12). பஞ்காலத்தில் விருந்த படைத்து பராமரித்தும் பாகால் பொய்வாக்கினரின் வாழ்வு சடிதியாய் முற்றுப்பெற்றது. வாழவிட மாட்டேன் என ஈசபேலினால் சூளுரைக்கப்பட்ட எலியாவை கடவுள் உணவு கொடுத்து வாழ்வித்தார்.

இந்த உணவூட்டும் நிகழ்வு, எலியாவின் வயிற்றுப் பசியகற்றும் சாதாரண நிகழ்ச்சியல்ல; அது இறையுணர்வூட்டும் மாபெரும் செயல். உயிரிழந்த சாரிபாத்துக் கைம்பெண்ணின் மகனை உயிரோடெழுப்பிய எலியா உயிர் வேண்டாம் என கடவுளிடம் கேட்கிறார். உணவு கொடுப்பவரும், உயிர் வாழ செய்பவரும் கடவுள். உயிரை மறுக்கும் அல்லது பறிக்கும் உரிமை நமக்கில்லை. உயிர் தந்த கடவுளுக்காக பற்றுறுதி உணர்வுடன் வாழ வேண்டும் என்றே அவர் எதிர்பார்க்கிறார். இறை

உணவால் தூண்டபெற்ற எலியா துடிப்புடன் செயல்படுகின்றார். பயணதூரம் இன்னும் இருக்கின்றது என்பதை உணர்வுப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு கடவுளுக்காக தொடர்ந்து பயணித்தார் அவர். இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும் (மத். 6:11) என இறைவேண்டல் செய்யும் போது உயிர்வாழ மட்டுமல்ல; இறை உணர்வுடன் வாழ அருள் செய்யும் என்ற மன்றாட்டு சிந்தனை அதில் நிறைந்திருக்க வேண்டும். உணவற்றோர் உணவு பெற உழைக்கும் உணர்வு தரும் என்ற வேண்டுதலிலும் நிச்சயமாக அதில் இடம்பெற வேண்டும். இறைவாக்கால் நாம் தூண்டப்பெற்றது தூண்டுவதற்கே உணவால் நாம் உயிரூட்டம் பெறுவது உணவில்லாதோர்க்கு உணவு வழங்கி உயிர் ஊட்டுவதற்கே. வாழ்வு வழங்கும் உணவாகிய இயேசுவிடம் சென்று (யோவா. 6:34,35) பசியகன்று பசித்திருப்போரின் பசியகற்றுவோம்.

## *2. இறைவாக்கு உறவு வழங்கித் தூண்டுகிறது* :

1அர. 19:13 "…..எலியா, நீ இங்கே என்ன செய்கிறாய்!" என்று ஒரு குரல் கேட்டது.

ஒரேபு மலைக் குகையில் இரவைக் கழித்த எலியாவிடம் கடவுள் "நீ இங்கே என்ன செய்கிறாய்?" என வினவினார் (1அரச. 19:9). ஆண்டவரே, நான் உம்மிடம் பேரார்வம் உள்ளவனாகவே இருக்கிறேன். ஆயினும், மக்கள் உம் உடன்படிக்கையை உதறி, பலிபீடங்களை தகர்த்து விட்டனரே என தளர்வுடன் பேசினார் எலியா. ஆற்றல் பெற்ற எலியா மீண்டும் சோர்வடைந்ததை கண்ட கடவுள் நேரடியாய் சந்திக்க விரும்புகிறார்; "என் திருமுன் வந்து நில்" என அழைக்கிறார். நேரடி சந்திப்பும், உரையாடலும் உறவுக்கு பலமளிக்கிறது. கடவுளுடனான சந்திப்பாலும், உறவுடன் கூடிய உரையாடலினாலும் இறைவன் திருமுன்னிலிருந்து விலகிப் பயணித்த எலியாவின் பாதை (யூதாவிலிருந்து பெயோர்சேபா) இறைதிட்டப்படி திரும்புகிறது. "நீ வந்த வழியே திரும்பித் தமஸ்கு பாலைநிலம் நோக்கிச் செல்" (1அரச. 19:15). எலியா மறுப்பேதுமின்றி கீழ்படிந்தார். இறை சந்திப்பால் ஏற்பட்ட இறையுறவு இங்கே சிறப்படைகிறது. வானதூதரால் இறைவாக்கைப் பெற்ற மரியா, "நான் ஆண்டவரின் அடிமை" (லூக். 1:38) என இறை விருப்பத்துக்கு தம்மை ஒப்படைத்தார். எலிசபெத்து கருவுற்றிருக்கும் செய்தியை தூதர் வழியாக அறிந்த மரியா எலிசபெத்தை சந்திக்க விரைந்தார் (லூக். 1:39,40). மரியா எலிசபெத்தை சந்தித்து மனதார வாழ்த்தி உறவை வலுப்படுத்தினார். அவ்வேளையில் எலிசபெத்தின் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியாய்

துள்ளிற்று (வ.41). உறவுப் பரிமாற்றத்தின் உயர்நிலையாய் அந்நிகழ்வு அமைந்தது எனில் மிகையேதுமில்லை. எலிபெத்தும் தூயாவியாரால் ஆட்கொள்ளப்பட்டு மரியாவையும், வயற்றில் வளரும் குழந்தையையும் வாழ்த்தினார் (வ. 42-45). இவ்வாழ்த்தின் முத்தாய்ப்பாய் அமைவது "ஆண்டவர் உமக்குச் சொன்னது நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" (லூக். 1:45) என்பதாகும். இறைவாக்கு இறை ஆசியின் செய்தி ஊடகமாய் இவ்விடத்தில் அமைகிறது. அது மரியாவையும், எலிசபெத்தையும் தூண்டி இறை திட்டத்தை புரிந்துகொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும் வழி கோவியது. இறைவாக்கை பெற்றுக்கொள்வதின் சிறப்பு, அதனை நம்பி ஏற்றுக்கொள்வதிலேயே அமைகிறது.

இன்றைய உலகின் பரபரப்பான இயக்கத்தில் ஒருவரையொருவர் வாழ்த்தவும், உறவினைப் பகிரவும் நேரமில்லை என்பது நமது தட்டிக்களிப்பு. உலகில் வாழும் ஈனப்பிறவிகளாகிய நம்மை சந்தித்து உறவு ஏற்படுத்த உன்னதத்திலிருந்து விடிவெள்ளியாம் இயேசுகிறிஸ்து வந்தார். பாவத்தின் பகையை தகர்த்து மீட்பின் உறவை ஏற்படுத்தினார். மீட்பரின் பிறப்பினை நினைந்து கொண்டாடும் இந்நாட்களில் மறந்துபோன, இழந்துபோன, உடைந்துபோன உறவுகளை சீராக்க செயல்படுவோம். தொடக்கத்தில் இருந்த வாக்கு, வாழ்வை தன்னகத்தே கொண்டவராக மானிடர்க்கு ஒளியாக இருக்கிறார் (யோவா. 1:1-4). அவ்வாக்கு நம்மிடம் வந்துள்ளார். இவ்வாக்குரல் நாம் தூண்டப்பெற்றது தூண்டுவதற்கே. இறைவாக்கு நமக்கு வாழ்வு வழங்கி தூண்டுகிறது. நாம் பிறருடன் உறவை வளர்த்து, உறவுள்ளோராய் வாழ அவர்களை தூண்டுவோம்.

## 3. இறைவாக்கு உன்னதப்பணி வழங்கித் தூண்டுகிறது :

1அர. 19:16b சாபாற்றின் மகன் எலிசாவை உனக்குப் பதிலாக இறைவாக்கினராக அருள்பொழிவு செய்.

"நான் வாழ்ந்தது போதும்" எனக் கோரிய எலியாவை தம் வாக்கினால் திடப்படுத்திய கடவுள் சிரியாவின் மன்னனாக அசாவேலையும், இஸ்ரயேலின் அரசனாக நிம்சியின் மகன் ஏகூவையும் திருப்பொழிவு செய்யவும், எலிசாவை இறைவாக்கினராக அருள்பொழிவு செய்யவும் அனுப்பி வைக்கிறார்.

இறைப்பணி இடையே இடறி முடங்கி விடும் பணியல்ல; அது தொடர்ந்து பயணிக்க வேண்டிய உன்னதபணி. அப்பணியினை நாமாக நிறுத்திவிட இயலாது. எலியா இறைப்பணிக்கு முற்றுப்புள்ளி வைக்க

முற்பட்டார். ஆனால் கடவுள் தாம் திட்டமிட்ட காலம் வரையிலும் எலியாவை பயன்படுத்தினார். எலியாவின் இறைப்பணி தொடர்ச்சி எலிசாவிடம் ஒப்படைக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் நற்செய்திப்பணி தொடர்ச்சி அவரது சீடர்களிடமும், நம்மிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது (மத். 28:16-20).

யோவானுக்கு அருளப்பெற்ற திருவெளிப்பாடு 10-ம் அத்தியாயத்தில் தம் வலது காலை கடலின் மீதும் இடது காலை நிலத்தின் மீதும் வைத்திருந்த வானதூதர் கையிலிருந்த சுருளேட்டைப் பெற்று சாப்பிடும் செய்தி அமைந்துள்ளது. வாயில் இனிப்பாய் வயற்றில் கசப்பாயிருந்த அந்நிகழ்ச்சி, இறைவாக்கினை எங்கும் எடுத்துரைக்க வேண்டுமென கூறப்படுகிறது (தி.வெ. 10:11).

கடவுள் எசேக்கியேலை இறைவாக்குரைக்க அழைக்கும் நிகழ்ச்சியில், சுருளேட்டை தின்னக்கொடுத்து இஸ்ரயேல் வீட்டாரிடம் போய் என் சொற்களை அவர்களுக்கு எடுத்துக்கூறு (எசே. 3:1-4) என அனுப்புகிறார். இறைவாக்கு, மானுடரின் தீமைகளைக் கண்டு அஞ்சிடாமல் தைரியமாய் கடவுளின் செய்தியைக்கூறத் தூண்டுகிறது (எசே. 2:4-7). இறைவாக்கால் நாம் தூண்டப்பெற்றது தூண்டுவதற்கே. இறைவாக்கு நம்மை தூண்ட இடமளித்தல் மட்டுமே, நாம் தூண்டப் பெற்றவர்களாக மாற இயலும், பிறரை தூண்ட இயலும்.

யோவான் நற்செய்தி நூலில் இயேசுநாதர் கூறிய நல்ல ஆயர் உவமையில், ஆடுகளை பெயர் சொல்லிக் கூப்பிடும் போது ஆயரின் குரல் உணர்ந்து அவரை பின்தொடரும் நிலையை குறிப்பிடுகிறார். நல்ல ஆயர் இயேசுவின் குரல் உணர்ந்து ஏற்று மந்தையின் நல்ல ஆடுகளாய் வாழ்வோம்; மந்தைக்குள் ஆடுகள் வர வாய்ப்பளிப்போம்.

ஜெர்மன் நாட்டு இளவரசர் உல்லியம் ஒரு கட்டிட தொழிலாளி. புதிதாக இயேசுவை ஏற்றுக் கொண்ட அவர் இறைவாக்குகளை படிக்க படிக்க அவ்வாக்குப் படியே வாழ வேண்டுமென்ற தூண்டுதல் பெற்றார். நற்பண்புகள் நிறைவாய் அவரிடம் வெளிப்பட்டன. இம்மாற்றத்தைக் கண்ட, உடன் பணியாளர்கள் அவரை 'கிறிஸ்தவ கிறுக்கன்' என அழைக்கலாயினர். அதற்காக அவர் வருத்தப்படவில்லை. மனந்தளராமல் திருவாக்குகளை தொடர்ந்து படித்தார். நண்பர்களே, 'நீ தலைகீழாக நின்றாலும் இறைவாக்குப்படி வாழ இயலாது; வீணாக முயற்சிக்காதே' என கூறினார். மத். 5:13-16 வரையுள்ள திருவாக்குகள் உல்லியத்தை உற்சாகப்படுத்தியது. மண்ணுலமுக்கு உப்பாக, உலகிற்கு

ஒளியாக வாழ தீர்மானித்தான். ஏளனங்களை பொருட்படுத்தாமல் நற்செயல்கள் புரிந்து வாழ்ந்தான் உல்லியம். மாலையில் நண்பர்கள் அப்படியே விட்டுச் செல்லும் சேறு படிந்த பூட்சுகள் அனைத்தையும் சுத்தம் செய்து வைப்பான். காலையில் அவர்கள் பார்த்து ஆச்சரியப்படுவர். அவனது நற்செயல்களால் தூண்டப்பெற்ற நண்பர்களும் இயேசுவை ஏற்றுக் கொண்டனர்.

கடவுளுக்காக சிறப்பாய் ஒளிர்ந்து கொண்டிருந்த எலியா ஈசபேலின் சூளுரையால் மனங்கலங்கி மங்கிப் போனார். எனவே, இறைப்பணியை உதறினார்; உலகில் வாழ்வதையே வெறுத்தார். தூண்டியெழுப்பும் இறைவாக்கு அவரை சிறப்பாய் தூண்டி மீண்டும் ஒளிரச் செய்தது. இறைசந்திப்பு அவரை ஆற்றல்படுத்தியது. தூண்டப்பட்ட அவர், தொடர்பணி செய்யும்படி எலிசாவைத் தூண்டினார். இறைவாக்கால் தூண்டப்பெற்ற மரியா விரைந்து சென்று எலிசபெத்தை சந்தித்தார். உணர்வு பரிமாற்றமும், உறவு பரிமாற்றமும் அங்கு நிகழ்ந்தது. இறைவனின் திருத்திட்டப்படி அவரது பணி செய்யும் முன்தூதரையும், மேசியாவையும் கருதாங்கிய எலிசபெத்தும், மரியாவும் ஒருவரையொருவர் வாழ்த்தி மகிழ்ந்தனர். சுருளேட்டை தின்ற யோவான் தொடர் பணிக்கு தூண்டுதல் பெற்றார். உயிர்தரும் உணவும், உணர்வுதரும் உறவும், உன்னதரின் பணியும் அருளுகின்ற இறைவாக்கால் தினமும் தூண்டப்பெற்று, தூண்டுவோமாக.

அருள்திரு. R. **ஹென்ஸ்லின் நேசராஜ்**

16-12-2018 **வருகைக்காலம் மூன்றாம் ஞாயிறு**

# பாவக்கட்டிலிருந்து விடுதலை
# DELIVERANCE FROM THE BONDAGE OF SIN

வி. ப. 14:1-14 உரோ. 8:1-11

தி.பா. 37:1-12 யோவா. 8:31-38

**"...அதாவது, ஊனியல்பு கொண்ட மனிதரைப் போன்றவராய் தம் சொந்த மகனை அனுப்பி மனிதரிடமுள்ள பாவத்திற்கு முடிவு கட்டினார்." உரோ. 8:36**

திருச்சபை ஒன்றில் இறைவேண்டல் கூடுகையிலே வாலிபர் ஒருவர் கடவுளே என்னைச் சூழ்ந்திருக்கும் வலைப்பின்னல்களை (பாவங்களை) என்னைவிட்டு மாற்றும் (Lord take the cobweb out of my life) என்று தொடர்ந்து வேண்டிக்கொண்டேயிருந்தார். அன்று மட்டுமல்ல இதன் முன்பும் இறைவேண்டல் வேளையிலே அதே பொருளில் அவர் வேண்டுவதை பெரியவர் ஒருவர் கவனித்தார். அன்றும் அப்படியே வேண்டின போது பெரியவர் குறுக்கிட்டு கடவுளே இந்த மனிதரை பிடித்திருக்கிற சிலந்தியைக் கொல்லும் ("Kill the Spider Lord") என வேண்டினாராம். பாவத்திலிருந்து மன்னிப்பை வேண்டிக்கொண்டு, அதே பாவத்தை திரும்ப, திரும்ப செய்து கொண்டிருப்பதை நடைமுறையில் காண்கிறோம். பாவத்தின் காரணத்தையும், தன்மையையும், ஆராய்ந்து பாவக்கட்டிலிருந்து விடுதலை பெற இந்த திருவருகைக்காலம் நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

மனிதன் இறைவனுக்காக வாழவே படைக்கப்பட்டவர். படைத்ததின் நோக்கத்திலிருந்து எப்போது கடவுளை விட்டு விலகுகிறோமோ, பாவத்தில் அல்லது தீயவனின் பிடியில் சிக்கிக் கொள்கின்றோம். பாவ வாழ்விலிருந்து விடுபட நினைத்தாலும் இயலாமல், பாவியாகவே மரணித்து நிலை வாழ்வின் நிச்சயத்தை இழந்து விடுகின்றோம். எனவே தான் பவுலார், "பாவம் உங்கள் மீது ஆட்சி செலுத்தக் கூடாது" (உரோ. 6:14) என்கிறார். பாவம் ஒருவரை ஆண்டு கொண்டது என்றால், அதிலிருந்து விடுபடுவது கடினமானது. ஆகாயத்தில் பறந்து சென்ற கழுகு, நீர்வீழ்ச்சியை நெருங்கி கொண்டிருந்த ஆறு ஒன்றில், இறந்து மிதந்து சென்ற விலங்கு ஒன்றை கண்டது. உணவாக அதனை உட்கொள்ள ஆவல் கொண்ட கழுகு விரைவாக ஆற்றில் மிதந்து கொண்டிருந்த இறந்த விலங்கின் மீது அமர்ந்து உண்ணத் துவங்கியது. நீர் வீழ்ச்சியினில் ஆர்ப்பரித்து விழும் தண்ணீரின் ஓசையும் கேட்டு

கொண்டே இருந்தது. இன்னும் சில வினாடி நேரத்தில் நீர்வீழ்ச்சி வந்துவிடும், அதற்கு முன்பு எழுந்து பறந்திட வேண்டும் என கழுகு நினைத்தது. ஆனால் உணவின் சுவை காலத்தை கருதிடவும், கணித்திடவும் வாய்ப்பளிக்கவில்லை. நீர்வீழ்ச்சியின் அருகே கழுகு எழுந்து பறந்திட முயற்சித்த போது இயலவில்லை. ஏனெனில் கழுகின் கால்கள் விலங்கின் நரம்புகளுக்கிடையே புதைந்த காரணத்தால் நீர்வீழ்ச்சியில் விலங்போடு விழுந்து இறந்து போனது கழுகு. பாவத்தின் தன்மையும் இத்தகையதே. பாவ வாழ்வில் சுவை கொண்டால் புதைந்து போவது தான் முடிவாக இருக்கும். எனவே பாவ வாழ்விலிருந்து விலகி வாழ அழைக்கப்படுகிறோம். தரப்பட்டுள்ள திருமறைப்பகுதியின் வழியாய் பாவத்தின் தன்மைகளையும், அவற்றிலிருந்து விடுதலை பெறுவதின் வழியையும் சிந்திப்போம்.

## *1. "கட்டமைப்பு" பாவத்திலிருந்த விடுதலை* **(Deliverance from structural sin) :** (வி.ப. 14 : 13,14)

இஸ்ரயேலரில் விடுதலைப் பயணத்தின் ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக நின்றது செங்கடல். துரத்தி வந்த பார்வோனின் படைக்கும், எதிராக நின்ற செங்கடலுக்கும் பதிலளிக்க இயலாமல் இஸ்ரயேலர் கலங்கினார்கள். அச்சுறுத்தப்பட்ட இஸ்ரயேலர் ஆண்டவரை நோக்கி, கூக்குரல் இட்டனர். "மோசேயை நோக்கி, எகிப்தில் சவக்குழிகள் இல்லையென்றா நீர் எங்களை பாலை நிலத்தில் சாவதற்கு இழுத்து வந்தீர்?... எகிப்தியருக்கு ஊழியம் செய்வதே எங்களுக்கு நலம்" என்றனர் (வி.ப. 14:11,12). இங்கே "எகிப்தியர்" என்ற வார்த்தை அடிமைத்தனத்தின் குறியீடாக இருக்கின்றது. இஸ்ரயேல் எனும் சமூகத்தை அடக்கி ஒடுக்கிய ஆபத்தான குறியீடு. எகிப்தின் அடிமைத்தன கட்டமைப்பிலிருந்து ஆண்டவரின் இரக்கத்தால் வெளியேறிய பின்பும் அடிமைத்தன வாழ்வையே "நலம்" என கருதிய இஸ்ரயேலரின் மன ஓட்டங்களை புரிந்து கொள்ள வேண்டும். விடுதலை பெற்றபின்னும் அடிமைத்தனத்தை மெச்சிய அபத்தமான செயல், விடுதலை வாழ்வின் உண்மை நிலையை உணர முடியாமல் செய்ததை இப்பகுதியில் காண்கிறோம்.

இன்று எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்த இஸ்ரயேலரைப் போல, ஆண்டவரால் அழைக்கப்பட்ட மக்களையும் அடிமைப்படுத்துகின்ற பாவங்கள் பல உண்டு. ஊழல், பேராசை, அதிகார வேட்கை, பெருமை, பொறாமை போன்றவைகளால் ஆளுகை செய்யப்படுகின்ற அநேகர் உண்டு. இப்பாவங்களின் விளைவுகள் பெருந்துன்பங்களை தந்தாலும், அதன் இனிமைகளிலிருந்து வெளியேற முடியாமல் தவிக்கும் நபர்களும்

உண்டு. நம்மையும் நம் சமூகத்தையும் கட்டமைத்திருக்கும் பாவங்களை அடிமைப்படுத்தும் இன்று நீங்கள் காணும் எகிப்தியரை இனிமேல் என்றுமே காணப்போவதில்லை என்ற உறுதியோடு, கிறிஸ்துவை எதிர்நோக்குவோம்.

### *2. "இயல்பான" பாவத்திலிருந்து விடுதலை*
**(Deliverance from habitual sin) :** (யோவா. 8 : 31-38)

இயேசு யூதர்களோடு உரையாடுகின்ற போது, தமது வார்த்தைகளை கடைப்பிடித்ததால் சீடர்களாக, உண்மையை அறிந்தவர்களாக இருப்பீர்கள், உண்மை விடுதலை அளிக்கும் (யோவா, 8:31,32) என குறிப்பிடுகின்றார். மறுமொழியாக "உங்களுக்கு விடுதலை கிடைக்கும்" என்று எப்படி நீர் சொல்லலாம் நாங்கள் யாருக்கும் அடிமைகளாய் இருந்ததே இல்லை, நாங்கள் ஆபிரகாமின் வழிமரபினர் ஆயிற்றே என்றனர் யூதர்கள். இங்கே தங்களின் அடிமை வாழ்வை யூதர்கள் நினைக்கவில்லை அல்லது ஏறக்குறைய எப்போதுமே பிற நாடுகளுக்கு அடிமையாகி இருந்த காரணத்தால் "அடிமைகள்" என்கிற நிலை அவர்களுக்கு வழக்கமான ஒன்றாகவே இருந்திருக்க வேண்டும். இன்றும் பாவங்களுக்கு அடிமையாகிப் போனவர்கள் பலர், தாங்கள் பாவ வாழ்விலே வாழுகிறோம் என்பதை உணராமலே வாழ்கின்றார்கள். பழக்கமாகிப்போன பாவங்கள் வழக்கமாக இருப்பதை காண இயலும் (எ.கா. மது, போதை, சூதாட்டம் etc) வழக்கமான பாவத்திலிருந்து விடுபட, அப்பாவத்தை அடையாளம் கண்டு கொள்வது அவசியம். பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமைகள். எனவே, பாவ வாழ்விலிருந்து விடுபட, பாவத்தில் வாழ்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ள இயேசுவுக்கு வாழ்வில் இடம் கொடுக்க வேண்டும். அப்போது தான் நமது பாவங்களை அடையாளங்கண்டு அகற்றிட முடியும்.

### *3. "தனிமனிதர் சார்ந்த" பாவத்திலிருந்து விடுதலை*
**(Deliverance from personal sin) :** (உரோ. 8 : 36)

ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஊனியல்புக்கு ஏற்ற செயல்கள் பாவ வாழ்க்கைக்கு நேராக நடத்துகின்றன. கலா. 5:19-21 -ல் ஊனியல்பின் செயல்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மேலும் ஊனியல்புக்குரிய மனநிலை கொண்டிருப்போருக்கு வருவத சாவே என்றும், ஆவிக்குரிய மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது வாழ்வும் அமைதியும் எனவும் உரோ. 8:6-ல் சொல்லப்படுகின்றது. ஊனியல்புக்குரிய நிலையில் வாழ்பவர்கள் கடவுளுக்கு பகையானவர்களாகவும், கடவுளின் சட்டத்திற்கு கட்டுப்படாதவர்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றது. எப்போது மனிதர் கடவுளின் விருப்பத்திற்கு மாறாக மீறுதல் செய்தானோ, அப்போதே பாவம் உலகில் பிரவேசித்தது. ஆதிப்பெற்றோர் ஊனியல்புக்கு கொடுத்த

முக்கியத்துவம் பாவத்திற்கு அடித்தளமிட்டது. "உண்பதற்கு சுவை, கண்களுக்கு களிப்பு, அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கது (தொ.நூ. 3:6)" என்ற தனிமனித ஆசைகள் உந்தப்பட்டதே பாவத்திற்கு அடிகோலியது. குடும்பமாக, சமூகமாக, சுட்டு வாழ்க்கை மனிதன் வாழ்ந்தாலும் "தனி மனிதனாக" சிந்திக்கவும், செயலாற்றவும், வாழ்ந்திடவும் அதிகம் இடமிருக்கின்றது. இந்த "தனிநபர்" வாழ்வில் ஆவிக்குரிய எண்ணங்களே ஆக்கிரமித்து இருத்தல் அவசியம். ஊனியல்புக்குரிய சிந்தனைகளுக்கு ஊக்கம் கொடுக்காதபடி வாழ அழைக்கப்படுகின்றோம். அடிக்கடி பாடக்கேட்கும் கீர்த்தனைப் பாடல் வரிகள், நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது.

தேகம் மோகம் மிஞ்சி வேகங்கொண்டாலும்

திடமனதாயிருந்தடல் புரிவாயே - வாராவினை

தனிமனித வாழ்வில், கடவுள் செயல்படுகிறார். எனவேதான் காணாமல் போன ஆடு உவமையில் (லூக். 15), காணாமல் போன ஆட்டை கண்டுபிடிக்கும் மேய்ப்பனின் பணி கரிசனையுடன் பார்க்கின்றது. ஒவ்வொரு மனிதனுடைய பாவத்திலிருந்தம் விடுதலை அருளும்படியாய் "ஊனியல்பு கொண்ட மனிதரைப் போன்றோராய் தம் சொந்த மகனை அனுப்பி மனிதரிடமுள்ள பாவத்திற்கு முடிவு கட்டினார்" (உரோ. 8:3).

இன்றைய உலகில் பாவம் மனிதனை அடிமைப்படுத்தி கட்டமைப்புக்குள்ளான், வழக்கமாகிப்போன மற்றும் தனிமனிதர் சார்ந்த நிலைகளில் வெளிப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. பாவத்தின் தன்மைகள் பரிச்சயமாகிப் போனதாலோ என்னவோ பாவ உணர்வுகள் குறைந்து இறைபயம் இன்றி மனிதன் வாழ்கின்றான். ஆனால் "தீமைசெய்வோர் வேரறுக்கப்படுவர்" தி.பா. 37:9 அறிவுறுத்துகின்றது. எனவே,

"இன்று கண்ட எகிப்தினை என்றுமே இனிகாண்பதில்லை" என
சபதம் எடுப்போம்

"மகன்(கிறிஸ்து) உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையில் விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள்" என்பதை ஏற்று கிறிஸ்துவுக்கு வாழ்வில் இடங்கொடுத்து பாவத்தளைகளை முறிப்போம். ஊனியல்பு கொண்ட மனிதரைப் போன்றோராய் இம்மண்ணிலே வந்து நம்மிடமுள்ள பாவத்திற்குக் கழுவாயாக இருக்கின்ற இயேசுவை ஏற்றுக் கொள்வோம்.

அருள்திரு. R. **ஐசக் மெரின் சிங்**

23-12-2018

வருகைக்காலம் நான்காம் ஞாயிறு

# மாரநாதா : ஆண்டவரே வாரும்

## MARANATHA : O LORD COME

இச. 18:15-22 1 கொரி. 16:13-24
திபா. 28 யோவா. 1:1-14

**“வாக்கு மனிதர் ஆனார்; நம்மைடையே குடிகொண்டார்.”** யோவா. 1:14a

“மாரநாதா” எனும் வார்த்தை திருமறையில் ஒரு முறை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது (1கொரி. 16:22) எனினும் அழுத்தம் பெற்று திருச்சபையின் பல நிலைகளில் பிரதிபலிக்கிறது என்றால் மிகையாகாது. “மாரநாதா” என்பது ஒரு அரமேய வார்த்தை. இதன் பொருள் இதை பிரித்து பயன்படுத்துவதில் மாறுபடுகிறது. குறிப்பாக ‘Mar’என்பது ‘Lord’, ‘an’என்பது ‘our’, ‘atha’என்பது ‘to come’. எனவே, ‘Maran’ ‘athah’ பொருள் ‘Our Lord is coming or ‘comes’ or ‘has come’ ஆண்டவர் வந்துள்ளார் என்றும், ‘Mar’- ‘Lord’ ‘ana’- ‘our’, ‘tha’- ‘come’ ‘marana’ ‘athah’ என்பதன் பொருள் ‘our Lord, comes’ அல்லது ‘come back’, “ஆண்டவரே வாரும்” என்றும் பொருள்படுகிறது. தொடக்ககால திருச்சபையில் இதை ஓர் அறிக்கையாகவும், அல்லது வேண்டுதலாகவும் பயன்படுத்தினர். கிறிஸ்துப் பிறப்புக்கு முந்தைய ஓய்வு நாளில் இதை எப்படிப் புரிந்து கொள்வது. கிறிஸ்து வந்து விட்டாரென அறிக்கையிட்டால் அதன் தாக்கம் என்ன என்ற கேள்வி எழுகிறது. ஆனால், ‘கிறிஸ்துவே, திரும்ப வாரும்’ என வேண்டுதல் ஏறெடுத்தால், ஏன் வரவேண்டும்? யார் அவர் வருகையை விரும்புகிறார்? என்ற கேள்விகள் எழுகின்றன. ஆயினும் இந்தச் செய்தியில் எதிர்கால வருகையை மையப்படுத்திச் சிந்திக்க விழைகிறோம்.

### *1. ஆண்டவரே, ஆன்மிக வாழ்வைச் சீர்ப்படுத்த வாரும்* :

இறைசாயலில் படைக்கப்பட்ட மனிதர்கள் படைப்பாளரைச் சார்ந்து வாழ்ந்து வந்தனர். தொடக்க நூலில் “கடவுளுடன் உரையாடினர்”, “கடவுளுடன் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர்” போன்ற கூற்றுகள் அதற்கு எடுத்துக்காட்டுகள். ஆனால் பிந்தைய காலங்களில் அதை இழந்து தவித்தனர். இன்றும் இறைவனுக்குரிய இடத்தில் பொருளை வைத்து வணங்குவதால் ஆன்மிகத்தில் தொய்வு ஏற்படுகிறது. அதன் தாக்கம் சமூக,

சமுதாய, குடும்ப, ஆன்மிக நிகழ்வுகளில் பரவிக்கிடக்கிறது. "கடவுள் ஒருவரே" என்று இஸ்ரயேல் மக்களுக்குக் கூறப்பட்டாலும் (வி.ப. 6:4-9; 11:13-21). அவர்கள் அதை மறந்து தவித்தனர். கடவுளின் இடத்தில் வேறொருவரை வைத்துப் பார்க்க நினைத்த பொழுது வீழ்ச்சி, சிறைப்பிடிக்கப்படுதல், வாழ்வில் செழிப்பற்ற தன்மை ஏற்பட்டது. 'கிறிஸ்துவே வாரும்' என்பது குறைந்து போன அல்லது தளர்ந்து போன ஆன்மிக உறவைச் சீர்ப்படுத்த வாரும் என்பதாக அமைகிறது. இறைவனை விட்டு நம்மை பிரிக்கும் காரணிகள் எதுவாக இருந்தாலும் அதைக் களைய முன்வர வேண்டும். ஆன்மிக வாழ்வு செழிக்க நம்முள் வாழும் இறைவனை காண வேண்டும். சிதைந்த மானுடத்தைச் சீர்ப்படுத்துவதால் ஆன்மிகம் வளம்பெறும். கடவுளை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்வதால் ஆன்மிகம் புதுப் பொலிவுறும் (யோவா. 4:24).

### *2. ஆண்டவரே, உடைந்த உறவுகளைச் சீர்ப்படுத்த வாரும்* :

கடவுள் தாம் படைத்த அனைத்தையும் நல்லது என்று கண்டு கொண்டார். கடவுளின் சாயல், ஆளுமைத் தன்மை, படைக்கும் ஆற்றல், படைப்பின் நோக்கம் படைப்புகளின் வாயிலாக வெளிப்பட்டது. படைப்பில் வெளிப்பட்ட கடவுளின் மாட்சி, நாம் அதை அழித்து சிதைத்தால் வருந்துகிறது. மனித தவறுகளால் படைப்பு வேதனையடைகிறது என்று கூறப்பட்டுள்ளது (உரோ. 8:19-22; தொ.நூ. 3:17-19). கடவுள் படைப்புகளைப் பாதுகாக்கப் பணிக்கிறார். உருக்குலைந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அழைக்கிறார். கலாச்சார வன்முறைகள், மதவாதக் கோட்பாடுகள், பிரிவினைகளை ஏற்படுத்தி மனிதர்களுக்கிடையில் உறவுச் சிதைவை விளைவிக்கிறது. கிறிஸ்துவின் வருகை இத்தகைய பிரிவினைகளை அகற்ற உதவ வேண்டும். பயபக்தியுள்ள வழிபாடு, பொறுப்புள்ள உக்கிராணத்துவம், தன்னலமற்ற சேவை மனப்பாங்கு உடைந்த உறவுகளைச் சீர்ப்படுத்த உதவுகிறது. மேலும் அன்பை மையமாக வைத்து வன்முறைகளை தவிர்க்க முயல்வோமானால் பாகுபாடற்ற சமுதாயத்தையும் உருவாக்க இயலும்.

### *3. ஆண்டவரே, எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வாரும்* :

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பலர் எதிர்பார்த்தனர். இறைவாக்கினர் வழியாகவும் அரசியல் வல்லுநர்களாலும் மேசியா பிறப்பார் என்ற கருத்து இஸ்ரயேல் மக்களில், சிறையிருப்புக்குப் பின்பு ஆழமாகப் பதிந்து காணப்பட்டது. "ஆண்டவரே வாரும்" என்பது ஏக்கத்தின் வெளிப்பாடு ஆகும். மேய்ப்பர்களுக்கிடையில் மேசியா "மிக்தல்

ஏதேர்'' என்கின்ற கோபுரத்தில் வெளிப்படுவார் என்ற நம்பிக்கை காணப்பட்டது. தொ.நூ. 35:21 ராகேல் அங்கு அடக்கம் பண்ணப்பட்டார்; மீக். 4:8, லூக். 2:10-12 மேய்ப்பர்கள் அங்கு மந்தை மேய்த்துக் கொண்டிருந்தனர். Talmud தால்மூத் (மோசேயின் சட்டம்) மற்றும் Midrash மித்ராஷ் (எபிரேய விலிய விளக்கவுரைகளில்) மேய்ப்பர்களின் இந்த நம்பிக்கை குறித்து காணலாம். இவர்கள் 'மிக்தல் ஏதேர்' (Tower of the flocks) என்ற இடம் முதல் எருசலேம் வரை ஆடுகளைப் பராமரித்தனர். இந்த ஆடுகள் எருசலேம் தேவாலயத்தில் பலியிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. அவர்களுக்கு இறைத்தூதர் அடையாளத்தைக் கொடுத்து அனுப்பி வைத்தார். சமுதாயத்தின் ஓரங்களில் வாழும் மக்கள் மேசியாவின் வருகைக்காக காத்திருந்தனர். மேய்ப்பர்கள் மற்றவர்களுக்கு அருவருப்பானவர்கள் ஆகவே ஓரங்கட்டப்பட்டனர். இன்றும் பலர் பல காரணங்களால் ஓரங்கட்டப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மேசியா வருகை விடுதலையின் அடையாளம். நமது பண்டிகைகளும் அத்தகைய நம்பிக்கையை மக்களுக்குத் தரவேண்டும்.

மாரநாதா என்பது "ஆண்டவரே வாரும்" என்று பொருள்படும். ஆனால் ஆண்டவரின் வருகையை எதிர்பார்க்கும் நாம் சிதைந்த ஆன்மிக வாழ்வைச் சீர்ப்படுத்தி, படைப்புகளோடும், மற்றவர்களோடும் உடைந்த உறவுகளை நேர்ப்படுத்தி, ஓரங்களில் தள்ளப்பட்டு விடுதலைக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் மக்களின் மனம் குளிர்ந்திட உணர்ந்து செயல்பட வேண்டும். கடவுளால் தனியாக அனைத்தையும் செயல்படுத்த முடியும். படைப்பில் அதை விளங்கச் செய்தார். ஆனால் கடவுள் நாம் இன்றி எதையும் செய்வது இல்லை. உடைந்த உறவுகள் சீராக புதிய உலகம் படைக்கப்பட நமது ஒப்படைப்பு அவசியம். ஆகவே தான் "Christ's coming is our becoming" அதாவது கிறிஸ்துவின் வருகை என்பது நம்மை தகுதியாக உருவாக்குதல் என்பதாகும். ஆண்டவரின் வருகைக்கு நமது பங்களிப்பு அவசியம் என்பதை இதன் வழி உணரலாம். வளமான சமுதாயம் உருவாக, உடைந்த உறவுகள் கட்டப்பட வேண்டும். ஆன்மிக வாழ்வு புதுப்பொலிவு பெற மேசியா வருகிறார். விழாக்கள் குறிப்பிட்ட காலத்திற்கும் நிகழ்வுகளுக்கும் அப்பாற்பட்டு பொதுவான எதிர்பார்ப்புகளை உள்ளடக்கியதாக அமைந்தால் மானுடம் சிறப்புறும். 'மாரநாதா' என்பது 'ஆண்டவரே வாரும்' என்ற வேண்டுதலாக மட்டுமல்ல 'இதோ அடியேன் பயன்படுத்தும்' என்று அமைய வேண்டும். நாம் இணைந்து 'ஆம் வாரும்' என்றும் 'எனது பங்கு என்ன' என்றும் சிந்திப்போம்.

அருள்திரு. முனைவர் M. **ஜஸ்டின் மோசஸ்**

24-12-2018

**கிறிஸ்துப் பிறப்புக்கு ஆயத்தம்**

# உலகில் அமைதி

## PEACE ON EARTH

எசா. 52:7-10 தீத். 2:11-14
தி.பா. 96 லூக். 1:67-79

**"மண்ணுலகின் எல்லைகள் யாவும்...நம் கடவுள் அளிக்கும் மீட்பைக் காணும்."** எசா. 52:10b

இன்றைய உலகில் எங்கு நோக்கிடினும் அங்கெல்லாம் அமைதியின்மை. அதனால் வரும் அவலங்கள் அதிகரித்துள்ளன! உலகத்தலைவர்கள் அரசியல் மற்றும் ஆன்மீக வழியில் உலக அமைதியை உருவாக்க அரும் பாடுபட்டும் ஈடுபட்டும் வருகின்றனர். வீட்டுக்கு வீடு... நாட்டுக்கு நாடு... மட்டுமன்றி தனி மனித உள்ளங்களிலும் இல்லங்களிலும் அமைதியென்பது உறங்கிக்கிடக்கும் நிலைகள்? உருப்படாத நிலையில்... உருண்டை உலகு... உருக்குலையும் வண்ணம்... உள்ளமை கண்டிடலாம்?

இத்தகைய கண்ணோட்டத்தில் கி.மு. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமைதியின்றி உறங்கிக்கிடந்த உலக மக்களுக்கு விழிப்புணர்வு கொடுக்கும் வண்ணம் ஏசாயா எனும் மாபெரும் இறைவாக்கினரின் வாயிலாக கடவுள் உலக மக்களைத் தட்டியெழுப்புகின்றார்! எனும் உண்மைகளைக் கண்டிடலாம்!

### *1. கடவுளின் அருட்செய்தியால் வரும் உலக அமைதி* :

"நற்செய்தியை அறிவிக்கவும், நலம் தரும் செய்தியை உரைக்கவும்" எசா. 52:7a.

யூதாவின் மக்களுள் பலர் பாபிலோனில் அடிமைகளாக நசுக்கப்பட்டு, நம்பிக்கை இழந்து இருந்த காலச்சூழலில் கடவுள் தம்மக்களுக்கு அமைதி அருளிட அவர்களது சொந்த வீடு நாடு எனும் வாழ்வினை அருளிட எருசலேமுக்கு அழைத்து செல்வார் என்று இறைவாக்கினர் ஏசாயா மூலமாக முழக்கமிடுகின்றார்!

இன்னவர் இயேசுவின் இவ்வுலக பிறப்பின் போது உலகில் அமைதியின்றி மக்கள் அழுதனர். எனவே இறைவாக்கினர் ஏசாயா அறிவித்த அருள்நிறைந்த கடவுளின் செய்திப்படி எங்களுக்கு அமைதியருளும் மேசியாவின் பிறப்புக்காக வழிமேல் விழிவைத்துக்

காத்திருந்தனர். விண்ணுலகு இச்சூளலில் உலக மக்களுக்கு கடவுளின் ஆணையால் கடந்து வந்த விண்தூதர் "அஞ்சாதீர்கள் இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்! இன்று ஆண்டவராகிய மேசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்" (லூக். 1:10,11) என்று அறிவிக்கிறார். அன்றியும் அன்றே அதே வேளையில் விண்ணகத் தூதர் பேரணி அந்த தூதருடன் சேர்ந்து

"உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக!

உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக். 1:13,14) என்று பாடி புகழ்ந்தனர். இந்த அருட்செய்தியைக் கேட்டதும் இடையர் கூட்டம் தங்களுக்கு மட்டுமன்றி தாங்கள் வாழும் உலக மக்களுக்கும் மொத்தமாக வரக்கூடிய அமைதியைத் தரக்கூடிய கடவுளைப் புகழ்ந்தனர்! மகிழ்ந்தனர்!

கிரேத்துத் தீவில் திருச்சபை வளர்ச்சி குன்றிய சூழலில் அமையற்றுப் போயிற்று. பவுலார் தீத்துவுக்கு எழுதிய கடிதத்தில் கிறிஸ்தவ நல்லொழுக்கம், அன்புடைமை எல்லாம் உலக அமைதிக்கு வழிதிறக்கும். எனவே பாவங்கள், பகைமைகள், வாக்குவாதங்கள், பிரிவினைவாதங்கள் ஆகியவை அகன்றிட வேண்டும் என்ற அருட்செய்தியால் வரும் அமைதியை பவுலார் வலியுறுத்துகிறார் (தீத்து 2:1-14).

உலக அமைதிக்கு அடிப்படையாக எல்லா ஜனத்துக்கும் மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கும் நற்செய்தியை அறிவிக்கிறேன்! என்று உரைத்த வான்தூதரின் வாக்கு இன்பர் இயேசுவின் பிறப்பால் அன்று தொடங்கி இன்றும் உலகமெங்கும் தொடர்ந்த வண்ணம் உள்ளமை சிறப்பு!

### *2. கடவுளின் அரசாட்சியால் வரும் உலக அமைதி* :

"உன்கடவுள் அரசாளுகின்றார்" எசா. 52:7b.

மனித ஆளுகை மக்களுக்கு அழுகையும் அழிவையும் கொடுத்தவண்ணம் அமைகிறது. உலக அமைப்பு முறைகளும், ஆட்சி முறைகளும், உலக மக்களின் அமைதியைக் குலைக்கும் வண்ணம் தொடர்கின்ற இக்காலச்சூழலில் அடக்குமுறை, வன்முறை, தீவிரவாதங்களும் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றன! சமயத்திலும், சமூகத்திலும், சபைகளிலும் ஆட்சி என்ற பெயரில் சூட்சிகளும், வீழ்ச்சிகளும், விபரிதக்காட்சிகளும் மலிந்து விட்டன! சுகபோகங்களும், செல்வப் பெருக்குகளும், செல்வச் செருக்குகளும், ஏழைகளையும்,

எளியோரையும் வெகுவாக பாதித்துள்ளன! அரசியல் அடக்கு முறைகளும், ஆன்மீக முடக்கு முறைகளும் அதிகரித்துள்ளன. அகில உலகிலும் அமைதி வரும் என எதிப்பார்த்த உலகில் அழிவுகள் வரும். அவலங்களை கண்டு கடவுளும் கண்ணீர் வடிக்கும் காலம் இது!

எசாயாவின் காலமும் இதுபோல்தான் என்றிடலாம்! அசீரியர்களின் வலிமைமிக்க ஆட்சிக்கும்; அச்சுறுத்தலுக்கும் யூதா நாட்டுமக்கள் அடிபணிந்து வாழும் சூழலில், அவர்கள் கடவுளுக்கு அடங்காமல், அகங்காரம் கொண்டவர்களாயும், அவர்கள் தலைவர்கள் நீதியோடும், நேர்மையோடும் ஆட்சி செய்யாமல் சுகபோகங்களில் திளைத்து செழித்து வாழ்ந்தபோது கடவுளின் ஆட்சிக்கு இடம் கொடுக்கவில்லை! கடவுளுக்கு அவர்கள் செவி கொடாததால் இருளும், அழிவும், அழுகையுமே வரும்என கடவுள் யூத மக்களை எச்சரிக்கிறார்!

ஆயினும் தாவீதின் வழி மரவில் தோன்றவிருக்கும் ஓர் ஒப்பற்ற அரசர் மூலம் அனைத்துலகும் அமைதிபெறும் பொற்காலம் வரவிருந்ததையும் ஏசாயா முன்னறிவிக்கிறார்!

இக்காலகட்டத்தில் தான் அகஸ்து சீசர் தம் பேரரசு முழுவதும் மக்கள் தொகையைக் கணக்கிடுமாறு கட்டளை பிறப்பிக்கிறான். அதன்படி சீரிய நாட்டில் சிரேனியு ஆளுநராய் இருந்தபோது முதன்முதலில் உலகமக்கள் தொகை கணக்கிடப்பட்டது.! (லூக். 2:1,2) மக்கள் வெள்ளம் அலைமோதும் அலைச்சல்கள் அரசியல் அடக்கு முறைகளும், அடாவடித்தனங்களும், ஆடாத ஆட்சிகளும் அதிகரித்தன. தம் பெயர்களைப் பதிவுச்செய்ய மக்கள் அவரவர் ஊர்களுக்குப் பணிக்கின்றனர். இத்தகைய பயணத்தில் தான் கலிலேயாவிலுள்ள நாசரேத்து ஊரிலிருந்து யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்கு நீதிமான் யோசேப்பு, மரியாள் தம்பதியர் சென்றனர்.

அப்போது விடுதியில் இடமின்றி நம்விடுதலை அரசர் இயேசுவை மரியாள் ஈன்றெடுத்தார். முன்னணையில் காட்சியளிக்கிறார் யூதமன்னவர் இயேசு குழந்தை வடிவில் கடவுளின் அரசாட்சியால் உலக அமைதியை கொண்டுவரப் பிறந்த இயேசுவைக் கொலை செய்ய கங்கணம் கட்டினான் கடூர அரசன் ஏரோது! இருப்பினும் விண்ணினின்று மண்ணிற்கு இறையரசை பிரகடனம் செய்யவந்த இறைமைந்தர் இயேசுவை அசைக்கவும், அழிக்கவும், ஒழிக்கவும் அரசனாலோ, அரக்கனாலோ உலக அமைதியைக் கெடுக்கும் ஆதிக்க சக்திகளாலோ இயலவில்லை!

உலக அமைதிக்காய் வந்த இயேசுவின் அரசை அழித்திட அவர்தம் பிறப்பிலேயே ஒழித்திட, சதிவலைகளைப் பின்னியவர்கள் ஆண்ட கலிலேயா, சிரியா நாடுகளில் இயேசு தம் கடவுளின் அரசாட்சியை ஆரம்பிக்கிறார். அடக்குமுறை அரசால் தொழுவத்தில் பிறந்த இயேசு தொழுகைக் கூடத்தில் கடவுளின் அரசாட்சியை ஆரம்பித்து உல அமைதிக்கு அடியெடுத்து வைக்கிறார். "தொழுகைக் கூடங்களில் கற்பித்தார், நற்செய்தியை பறைசாற்றுகிறார்" இயேசுவினால் உலகில் அமைதியிழந்த பிணியாளர், குணம்பெற்றனர், பேய்பிடித்தோர், நோய் பிடித்தோர், மதிமயங்கியோர், முடக்கு வாதர்கள் அனைவருக்கும் இறையரசின் தாக்கத்தை வெளிப்படுத்திக் குணமளிக்கிறார்.

சகரியாவின் புதல்வர் முனிவர் யோவானும் யூதா வனத்தில் வந்து "மனம்மாறுங்கள் கடவுளின் அரசாட்சி நெருங்கி வந்துவிட்டது" என பறை சாற்றுகிறார் (மத். 3:1,2). திருவண்ணாமலையை சார்ந்த ஆயர் அவர்கள் அருள்திரு. வே. மாசிலாமணி இயற்றிய கீர். 101-ல் கடவுளின் அரசாட்சியால் உலக அமைதியை வலியுறுத்துகிறார். ஆக கடவுளின் அரசாட்சி அமைதியை தருகிறது என்பதை உணர்ந்து வாழ்வோம்.

### *3. கடவுளின் பேரருளால் வரும் உலக அமைதி* :

"மண்ணுலகின் எல்லைகள் யாவும் நம் கடவுள் அளிக்கும் மீட்ப்பைக் காணும்" எசா. 52:10b.

மீட்பு என்பதை பாவத்தினின்றும் எகிப்தின் அடிமைத்தனத்தினின்றும் வந்திட்ட மீட்பைக் குறித்தும் குறிப்பிடுகிறார் (எசா. 52:4). அன்றியும் வாழ்வதற்கு வீடு வாசல்யின்றி கடும்வேலைச் செய்து அதற்குரிய கூலி கொடாமல் படுத்தும் ஒடுக்குதல் "அவர்களை ஆளுவோர் தற்பெருமை கொள்கின்றனர்" (ஏசா. 52:5). இவர்களால் கடவுளின் பெயர் எந்நாளும் இகழப்படும் இழிநிலை! இத்தகைக் கொடூரர்களிடமிருந்தும், கடும் வறுமை, வதைகள் கொடுப்போரிடமிருந்தும் தம் மக்களை கடமையுணர்வு கொண்ட கடவுள் தம் மகன் இயேசுவை உலகில் அனுப்பி கடவுளின் பேரருளால் உலக அமைதியினை உருவாக்கிட இறங்கி வருகிறார்.

தொழுகையிடம் இருக்கும் எருசலேம் ஆலயம் அழுகையிடமாக மாறிவிட்டது. ஆளுகை செய்யும் ஆன்மீகத் தலைவர்கள் கூட துன்புறும் குழந்தைகள், பெண்கள், வலுவிழந்தோர் மீது பாசம் காட்டிடாமல் வணிக நோக்குடையோர், வலியோர்கள், ஆசனப்பிரியர்கள், அடக்கு

முறையாளர்கள் என ஆகி விட்டனர். எருசலேம் பாழ்இடங்களாயின. பாடுகள் பெருகின! பக்திபாடல்கள் அற்றுப்போயின! ஆடம்பர பிரியர்களால் ஆறுதல் அற்றுப்போயின (ஏசா. 52:9). மீட்பு என்பது உலகின் மனிதனின் பணபலத்தாலோ, புயபலத்தாலோ வருவதல்ல. கடவுளின் ஓங்கிய புயத்தால் தூய புயத்தால் வருவது என ஏசாயா வாயிலாய் கடவுள் உரைக்கிறார் (ஏசா. 52:10). சாதிவெறி, அதிகாரவெறி, பண ஆதிக்க வெறிகள் நிறைந்த நம் நாட்டிற்கும் திருச்சபைக்கும் இச்செய்தி சவாலாக அமைந்துள்ளமை கடவுளின் அதிரடி மீட்பின் செயல்கள் மூலம் வரும் உலக அமைதியின் நோக்கங்கள் ஆகும். "உலகெங்கும் வாழ்வோரை ஆண்டவரைப் போற்றி பாடுங்கள்; அவர் பெயரை வாழ்த்துங்கள்; அவர் தரும் மீட்பை நாள்தோறும் அறிவியுங்கள்" என (தி.பா. 96:2)-ல் எபிரேய கவிஞர் கவிதை பாடுகிறார்.

இயேசுவின் பிறப்பு அவர் சிறப்பு யாதெனில் உலகை மீட்டிட உன்னதத்தை விட்டிறங்கி உலகில் தாழ்மையின் கோலம் தரித்தார்! அவதரித்தார்! உலகில் மீட்பு பணிக்கென தன்னைப்பணித்தவர். இறையியல் பயணத்தில் ஜெப ஆலயத்தில் சென்று தமது மீட்பின் நிலைப்பாட்டை உறுதி செய்கிறார். இருதயம் நறுங்குண்டோர்க்கு சுகம் , சிறைப்பட்டோர்க்கு விடுதலை, பாதிக்கப்பட்டோர்க்கு அநுக்கிரக வருடத்தையும் கூறி தம் மீட்பின் செயலால் உலகில் துன்புறுவோர் அமைதி பெறும் அடைக்கலமானார் (லூக். 4:18,19). துன்பப்படுவோர், அந்நியரானவர்கள், நோயினால் பாதிக்கப்பட்டோர் இவர்களை இறைவனின் பேரருளால் மீட்டு இறைவன் அமைதி தருகிறார்.

இத்தகைய நிலையில் உலகில் அமைதி இழந்தோர்க்கு இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் சிந்தனையை செயல்படுத்தி அனாதையர் இல்லங்கள், முதியோர் காப்பகங்கள், சிறைப்பணி, மருத்துவப்பணி, கல்விப்பணி (மத். 25:35,36) உணவளித்தல், உடையளித்தல், ஆபத்தில் உதவி தேடுவோரைக்கண்டு உதவி கரம் நீட்டுவது போன்றவை கடவுளின் பேரருளால் நாம் பெற்ற அமைதியை பிறரும் பெற்றுக்கொள்ள செய்கிறோம்.. இதை உணர்ந்து நாம் செயல்பட அழைக்கப்படுகின்றோம். அன்பானவர்களே! அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் கரி பூசிய வீட்டில் விறகுவெட்டியின் புதல்வராக பிறந்து அடிமை வியாபாரத்தை நாட்டைவிட்டே அகற்றிடும் கருவி ஆனார்.

செராம்பூருக்கு வந்து செருப்புத் தைக்கும் தொழில் புரிந்து இறையியல் கல்லூரியை உருவாக்கி கைம்பெண்களை கொல்லும்

உடன்கட்டை ஏறுதல், சிசுகக்களை அளிக்கும் நரபலிகள் அனைத்தையும் நம் நாட்டைவிட்டு அகற்றிடும் மீட்பு பணியால் உலக அமைதிக்கு அடித்தளமிட்டார் அருட்பணியாளர் வில்லியம்கேரி அவர்கள். அழுக்கு மண்ணில் பிறந்த இயேசு... தச்சனின் மகன் என வளர்ந்த இயேசு... பழிச்சொல்லுக்கு ஆளான மரியாளின் மகனாய் பிறந்து ஏரோதின் சிசுக்கொலை வெறிக்கு தப்பிய இயேசு இத்தகைப் பாடுகள் படுவோரை பட்சிக்கப்படாமல் இரட்சிக்க தம் மீட்பின் செயலை இன்றும் அவராது அருட்செய்தியால், அரசாட்சியால், பேரருளால் உலகெங்கும் ஆக்கப்படுத்தி அமைதி தந்து வருகிறார். இறையடியார்களாகிய நாம் இதை உணர்ந்து அமைதி ஏற்படுத்த முயற்சிப்போம்.

உலக அமைதியென்று குரல் கொடுப்போர்...
உடனிருப்போருக்கு உதவி செய்யாமல் அவர்களை
உடைந்த பாத்திரங்களாய் உதறி எறிந்து விட்டு
உதவாக்கரை ஏரோதுபோல் அரண்மனையை
உறைவிடமாய்க் கொண்டு சொர்க்கபுரியென சொகுசாய்
உறைந்திருக்கும் உருக்கு மனிதர்களாய்
உருக்கமில்லாமல் அடிமைகளையும்
உதவியற்ற உன்னதரின் அடியார்களையும்
உருக்குலையச் செய்வோர்
உன்னதர் இயேசுவால் வரும்
உலக அமைதியை வாயளவில்
உரத்தகுரலில் பறைசாற்றும் வாயாடிகள்
உணர்வர்களா? உதவுவார்களா?
உலக அமைதிக்கு!

அருள்திரு. D.S. **செல்வராஜ்**

25-12-2018 **கிறிஸ்துப் பிறப்புப் பெருவிழா**

# கிறிஸ்துப் பிறப்பு : ஒரு புதிய விடியல்

## CHRISTMAS : A NEW DAWN

எசா. 9:1-7 கலா. 4:1-7
திபா. 98 லூக். 2:1-14

**"காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்; சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது."**
**எசா. 9:2**

கவலை மிகுந்த மக்கள் மத்தியில் நாம் வாழ்கிறோம். சென்ற காலங்களிலும் எதிலும் கவலை கொள்ளும் மானுடர் வாழ்ந்திருக்கின்றனர். ஆனால், இக்காலத்தில் பொதுவாக எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கையின்மையும், கவலையும் அதிகமான மக்களிடையே காணப்படுகிறது. அணு ஆயுதங்களின் பெருக்கம், இயற்கையின் பேரிடர்கள், தீவிரவாதம், வன்முறைகளின் அதிகரிப்பு, மக்களிடையே வளர்ந்து வரும் பெரும்பான்மை மனப்பான்மை, ஆதிக்கம் செலுத்தும் மனப்போங்கு இன, நிற, மொழி, சமயம் சார்ந்த வேறு பாடுகளின் தாக்கங்கள், தற்கொலைகள், புதுப்புது வியாதிகள், என்பவைகள் எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கையின்மைக்கும், கவலைக்கும் காரணங்களாக அமைகின்றன. John Rader Piatt என்பவர் The step to man (New York John Wiley And Sons Ltd 1966P.196) என்னும் நூலில் கற்பனையில் தான் உலகம் நல்லது போல் இருக்கிறது; ஆனால் உண்மையில் உலகம் மிகவும் ஆபத்தானதாக மாறிவிட்டது எனக் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வித 'சூழ்மையில் கிறிஸ்து பிறப்பு : ஒரு புதிய விடியல்' என்னும் பொருளில் சிந்திப்பது நம்மை நல்ல எதிர்நோக்குடைய வாழ்வுக்கு நேராய் நடத்தும்.

### *1. பாவம் என்னும் இருளை அகற்றும் விடியல்* :

> காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள் (எசா. 9:2)

பாவம் என்பது கடவுளின் சித்தத்திற்கு எதிராக தவறு செய்கிற, குறிக்கோளின்றி அலைகிற, கடவுளுக்கு எதிராக நடக்கிறவைகளாக திருமறை கூறுகிறது (ஏசா. 1:2; எரே. 5:23) அருள்நாதர் இயேசுவும் தனது போதனையில் பாவம் என்பது கிளர்ச்சியும், கீழ்ப்படியாமையுமென்று அறிவுறுத்தினார் எ.கா. இளைய மகன் உவமை (லூக். 15)

பாவம் மானுடரின் முழு ஆள்தத்துவத்தின் செயல்பாடாகவும் இருக்கிறத. எசாயா இறைவாக்கினர் உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை உங்கள் உடலில் நலமே இல்லை. காயங்கள், கன்றிப் போனவடுக்கள், சீழ்வடியும் புண்கள் என்பவைகளால் நிறைந்துள்ளன என்றார் (எசா. 1:6). இருதயமே அனைத்துப் பாவங்களுக்கும் வேராயிருக்கிறது (எரே. 4:14; 7:24; சங். 51:6-10) அருள்நாதர் இயேசுவும் விபசாரத்திற்கு வேராயிருப்பது உள்ளத்தின் உணர்வாகிய இச்சையெனவும் (மத். 5:28) வன்முறைக்கு வேராயிரப்பது உள்ளத்தின் கோபம் (மத். 5:22) எனவும் குறிப்பிட்டார். ஆகவே பாவம் என்பது ஆவி, ஆத்துமா, சரீரம் அகிய அனைத்துடனும் தொடர்புடையது.

பாவம் இருதயத்தை இருளடையச் செய்கிறது. தூய பவுலார் அனைவரும் குற்றவாளிகளே; அவர்களது குற்றங்கள் உள்ளத்தை இருளடையச் செய்கிறது என குறிப்பிட்டார். (உரோ. 1:18-23) பாவம் சுறா மீன் தைலம் போன்றது என்றார் ஒருவர் (Shark Tonic) இது அறிவுறுத்தும் செய்தி சுறா மீனுக்கு கொடுக்கும் நலதைலமோ அல்லது சுறா மீனிலிருந்து எடுக்கப்படும் நலத்தைலமோ அல்ல. இதன் சரியான பொருள் அசைவற்ற தாகமாற்றும் தைலம் (Tonic immobility) என்பதாகும். சுறா மீன் ஆபத்தானது, அதனைப் புரட்டிப் போடுவார்கள். அப்பொழுது அது அசைவற்றதாக இருக்கும். அதனைப்போன்றது தான் பாவ நலத்தைலம் (Sin Tonic) பாவம் மானுடரின் வாழ்க்கையை அசைவற்றதாக, இயங்க முடியாததாக மாற்றிவிடும். பாவம் என்பது அழிவின்குழி, சேறு நிறைந்த பள்ளம் என்றார் தாவீது (சங். 40:2).

என்றைக்கு மானுடர் பகுத்து அறியும் அறிவை துர்ப்பிரயோகம் செய்தார்களோ அன்றே ஒரு பெரிய வெளிச்சம் தேவை என்பதனை மானுடர் அறிந்து விட்டார்கள். அந்த வெளிச்சம் உலகில் எந்த மனிதரிடமிருந்தும் வர முடியாது. ஏனெனில் நல்லவன், ஒரு தவறும் செய்யாதவன், ஒரு குற்றம் கூட இல்லாதவன் என்று ஒருவரும் உலகில் இல்லை. Karly Jung என்பவர் "Epilogue" Modern man in search of a soul (New York Rutledge 1933) என்னும் நூலில் பசி பட்டினி அல்ல; கேன்சர் அல்ல; மனிதனே மனுக்குலத்திற்கு மிகவும் ஆபத்தானவனாக இருக்கிறான் என்றார். Albert Einstein என்பவர் உண்மையான பிரச்சினை மானுடருடைய இதயங்களிலும், மனங்களிலும் தான் இருக்கிறது. பௌதீகத்தின் பிரச்சினை அல்ல; அறநெறியான பிரச்சினை. மனிதனின் தீயாவியை (evil spirit) denature பண்ணுவதை விட plutonium என்பதனை denature பண்ணுவது எளிதானது என்றார்.

அருள்நாதர் இயேசு பாவம் என்னும் இருளை அகற்றும் விடியலாக இருக்கிறார். ஏனெனில் அவர் பெயர் இயேசு; மானுடரை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பவர் (மத். 1:21) தீமைக்கு அடிமைப்பட்டுக் கிடந்த மானுடரை கடவுளின் பிள்ளைகளாக மாற்றினார். நரகத்திற்குப் பங்காளிகளான மானுடரை பரலோகத்தின் பங்காளிகளாக மாற்றினார். பாவக்கறை படிந்த மானுடரை தனது இரத்தத்தால் கழுவி தூய்மையாக்கினார். மானுடரின் தோழனாக, மருத்துவராக, பரிந்து பேசுகிறவராக, உணவாக, பலியாடாகத் தன்னை விளங்கப் பண்ணினார். இந்த இயேசு பாவம் என்னும் இருளை அகற்றும் விடியல் அன்றோ!

## *2. பாடு என்னும் இருளை அகற்றும் விடியல்* :

சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது (எசா. 9:2).

இயேசுகிறிஸ்து பாடு என்னும் கனத்த இருள் நடுவில் உதிக்கப் போகும் பேரொளியென எசாயா இறைவாக்கினர் அறிவித்தார். அவர் யூத குலத்தில் தோன்றினாலும் முழு உலகத்திற்காகவும் உதித்தவர். எசாயா இறைவாக்கினர் இதனை உறுதிசெய்கின்றார். செபுலோன் நாட்டிலும், நப்தலி நாட்டிலும் பிற இனத்தவர் வாழும் கலிலேயாவிலும் காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்; சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர்ஒளி உதித்துள்ளது எனக் குறிப்பிட்டார். எசா. 9:1,2 மத்தேயு நற்செய்தியாளர் இயேசு கலிலேயாவில் பணி தொடங்கும் நிகழ்வைக் குறிப்பிடும் போது ஏசாயா இறைவாக்கினர் கூறிய இந்த இறைவார்த்தை இயேசுவின் பணியில் நிறைவேறிற்று என்றார் (மத். 4:13,14).

செபுலோன் என்பவர் யாக்கோபு லேயாள் தம்பதியருக்குப் பிறந்த ஆறாவது மகன். பன்னிரண்டு கோத்திரங்களில் செபுலோன் ஒரு கோத்திரமாகும். ஆண்டவர் மோசேயைப் பார்த்து இஸ்ரயேலிலே இருபது வயது உள்ளவர்கள் முதல் யுத்தத்திற்கு புறப்படத்தக்கவர்களை கணக்கெடுக்கும் படியாக கட்ளையிட்டார். அதன்படி செபுலோன் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள் 57400 பேர். எண். 1:31 கலிலேயாவுக்கு அருகாமையிலுள்ள ஒரு சிறந்த பகுதி செபுலோன். இங்கு செபுலோன் கோத்திரத்து மக்கள் வாழ்ந்தார்கள்.

நப்தலி என்பவர் யாக்கோபுக்கும், பில்காளுக்கும் பிறந்த இரண்டாவது மகன் ஆதி. 46:24,25 மோசேயின் கணக்கெடுப்பின் போது இருந்தன. வீரர்கள் 53400 பேர் எண். 1:43 நப்தலி கோத்திரத்து மக்கள்

வாழ்ந்த இடம் நப்தலியென அழைக்கப்பட்டது. இது கலிலேயாவுக்கு அருகாமையிலுள்ள வளமிக்க பகுதி, எர்மோன் மலைப்பகுதியும் கெனேசரத்து கடற்கரைப் பட்டணமும் இந்த பகுதியைச் சார்ந்தாகும்.

செபுலோன் நப்தலி ஆகிய பகுதிகள் ஒரு கால கட்டத்தில் மிகவும் புகழ் வாய்ந்ததாக இருந்தது. தெபோராளுடனும், கிதியோனுடனும் இம்மக்கள் இணைந்து செயல்பட்டார்கள். நியா. 5:18; 7:23 அப்படிப்பட்ட செபுலோனும் நப்தலியும் கி.மு. 733-ல் அசீரிய நாட்டு அரசனாகிய திகிலாத் பிலேசர் படையெடுப்பால் மிகவும் பாதிப்படைந்தது. 2அரச. 15:29 இங்கு வாழ்ந்த மக்கள் சிறைப்பிடிக்கப்பட்டு ஆசீரியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். புற இனத்தவரும் அகதிகளும் இங்கு குடியேற்றுவிக்கப்பட்டார்கள். பிற்காலத்தில் இவர்கள் கலப்பின மக்களாக மாறினர். அருள்நாதர் இயேசுவின் காலத்தில் இவர்கள் அடைந்த பாடுகளுக்கு அளவே கிடையாது. சமூக அடிமைத்தனங்கள், ஏழ்மை, வறுமை, கல்வியறிவில்லாமை, சுகாதரசீர்க்கேடுகள் ஆகிய அனைத்தும் இங்கே காணப்பட்டன.

1950-இல் வாஷிங்டன் நகரில் நார்த்கேட் ஷாப்பிங் சென்டர் என்ற வணிக வளாகத்தில் 67.36 மீட்டர் உயரமுள்ள டக்ளஸ் மீர் என்ற கிறிஸ்மஸ் மரம் நிறுத்தப்பட்டது. இதுதான் உலகிலேயே மிகப்பெரிய கிறிஸ்மரம் என சொல்லப்படுகிறது. இந்த கிறிஸ்மஸ் மரத்தில் ஒரு படம் அனைவரையும் கவரக்கூடியதாக இருந்தது. காலணி அணியாத ஒரு மனிதன் கடினவேலை; கடன் சுமை, வியாதி, பல இழப்புக்கள், வன்முறையின் பாதிப்பு என்னும் ஒரு பெரிய பாரத்தை தன் தோள்மேல் சுமந்து தரையையே பார்த்துக் கொண்டிருக்கிறதைப் போன்ற காட்சியும்; அதினூடே ஒரு மாபெரும் நட்சத்திரம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதைப் போன்ற காட்சியும் இடம்பெற்றிருந்தது. மானுட வாழ்வு பல்வேறு நிலைகளில் பாடுகள் நிறைந்ததே. பாடுகளை அகற்றும் புதிய விடியலாக இயேசு அவதரித்தார். இதனை செக்கரியாவின் பாடலும் தெளிவுப்படுத்துகிறது (லூக். 1:78,79).

### *3. பலுகிப் பெருகச் செய்யும் விடியல்* :

புதிய விடியலாகிய அருள்நாதர் இயேசு பாவப்பிடியிலும், பாடுகள் நடுவிலும் வாழும் மக்களுக்கு மேன்மை வரச்செய்வார் (எசாயா 9:1). அவர்களை பல்கிப்பெருகச் செய்வார்; அவர்கள் மகிழ்ச்சியை மிகுதிப்படுத்துவார்; சுமையாக இருந்த நுகத்தை உடைத்தெறிவார் (எசா. 9:3-5) என ஏசாயா இறைவாக்கினர் அறிவுறுத்தினார். அருள்நாதர்

இயேசுவும் நான் மானுடர் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன் என்றார் (யோவா. 10:10). அருள்நாதர் இயேசு நிலையான வாழ்வை வழங்குபவர்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர்கள், இந்நாள் பிரதமர் சொன்ன, சொல்லுகிற "இந்தியா ஒளிர்கிறது", "இந்தியா வளர்கிறது", "தூய்மை இந்தியா" ஆகிய அனைத்தும் கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. ஆனால் இந்தியாவின் உண்மை நிலை ஏழ்மை, வறுமை, கடன்சுமை, பலவித வியாதிகள், அதிகரிக்கும் தற்கொலைகள், வளரும் வன்முறை எனச் சொல்லிக் கொண்டே போகலாம். வாரிசு அரசியல், சாதீய அரசியல், மதவாத அரசியல், நிரந்தர கொள்கையற்ற அரசியல் ஆகியவைகளால் ஜனநாயகம் கேள்விக் குறியாகியுள்ளது. சமயம், அரசியல், பொருளாதாரம், சுகாதாரம், கல்வி என அனைத்து துறைகளிலும் இருள் படர்ந்துள்ள சூழல்தான் காணப்படுகிறது. இவைகள் ஆபத்தானவைகளாகவும், பெரும் அச்சுறுத்தல்களாகவும் இருக்கின்றன.

இவ்வித சூழமைவில் ஆண்டவர் தரும் செய்தி இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார் என்பதாகும் (லூக். 2:11). ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் பாவமென்னும் இருளையும், பாடு என்னும் இருளையும் அகற்றும் புதிய விடியலாகவும்; பல்கிப் பெருகச் செய்யும் புதிய விடியலாகவும் இருக்கிறார்; அவரை வாழ்த்தி, வணங்கி ஆராதிப்போம்.

அருள்திரு. A. **வில்லியம் தாமஸ்**

30-12-2018

**கிறிஸ்துப் பிறப்புக்குப் பின்வரும்**
**முதலாம் ஞாயிறு & குடும்ப ஞாயிறு**

# குடும்பம் எனும் நலமருளும் இடம்
## FAMILY AS HEALING SPACE

| | |
|---|---|
| தொ.நூ. 33:1-11 | எபே. 6:1-9 |
| தி.பா. 91 | லூக். 15:11-24 |

***"அவர் அவர்களுக்கு முன் சென்று தம் சகோதரரை நெருங்கிச் செல்கையில் ஏழு முறை தரையில் வீழ்ந்து அவரை வணங்கினார்."*** **தொநூ. 33:3**

படைப்பின் சிகரம் மனிதன். அந்த மனிதனின் வாழ்வுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுப்பது குடும்பமாகும். குடும்பத்தில் அருள்வாழ்வு சிறப்புற்றால் சமூகத்திலும் உயர்வாழ்வு சாத்தியமாகும். எதாவது, ஒரு மனிதனைச் சிறப்புள்ளவனாக்குவதும், நல்ல ஒரு திருச்சபையும், சமுதாயத்தையும் உருவாக்குவதும் குடும்பமே; இறையரசை விரிவுபடுத்தக் கடவுள் பயன்படுத்தும் அற்புதமான ஒரு கருவியும் இக்குடும்பமே. ஆனால் இந்நாட்களில் குடும்பங்களின் கலையும் கற்பனையும், அதன் மொழியும் நெறியும், பழக்கவழக்கங்களும் பண்புநலன்களும் உடைவுகளுக்கும் உள்ளத்தின் காயங்களுக்கும் நேராக வழிநடத்துவது மிகவும் வேதனைக்குரியதாகும்.

ஒரு முறை பள்ளி ஆசிரியர் மாணவ மாணவிகளின் பெயர்களையும், அவர்களின் பெற்றோர்களின் பெயர்களையும் அறிமுகம் செய்ய சொன்னராம். அப்போது ஒரு குழந்தை தனது அப்பாவின் பெயர் பேய் என்றும், அம்மாவின் பெயர் நாய் என்றும் சொன்னதாம். அதற்கு ஆசிரியர் விளக்கம் கேட்ட போது, அக்குழந்தை கீழ்காணும் விளக்கத்தை சொன்னது. அப்பா நன்கு சாராயம் குடித்துவிட்டு இரவு 12 மணிக்கு வரும்போத அப்பாவை அம்மா "சீ பேயே" என்பாராம். அதற்கு அப்பாநீ போ நாயே என்பாராம் இந்நிகழ்வு போல குடும்பத்தில் அம்மாவும், அப்பாவும், நாயாகவும், பேயாகவும் மாறினால் குடும்ப வாழ்வில் உயிரியக்கம் இருக்காது, மாறாக மனதளவில் முரண்பாடுகள் தான் அதிகரிக்கும், அத்துடன் குடும்பம் நல வாழ்வை இழந்து போகும். இத்தகைய வாழ்க்கை நிலையை உற்று கவனித்த கவிஞர் ஒருவர் கூறும்போது

"அக்கம் பக்கம் பாக்காம
அங்கே இங்கே நிற்காம
வண்டிமாடு இரண்டும் நேரே ஓடுது
குடும்ப வாழ்க்கையின் பயணம் தான் திண்டாடுது" என்கிறார். இப்படி நல்லிணக்கம் இல்லாத குடும்பங்களில் நல வாழ்வு ஒரு போதும் மலர வாய்ப்பு ஏற்படாது. ஆனால் இடுக்கண்கள், இன்னல்கள், முரண்பட்ட கருத்துக்கள் ஏற்படும்போது காயங்களை குணப்படுத்தவே கடவுள் குடும்பம் என்னும் உறுதியான அமைப்பை வடிவமைத்தார் என்ற பேருண்மையை உணர்ந்து செயல்பட இறைமக்கள் தங்களை அர்ப்பணிக்க தவறி போககூடாது. தொ.நூ. 33-ல் ஆசிக்கும், ஆஸ்திக்கும் ஆசைப்பட்ட யாக்கோபு, தன்னுடன் ஒரே வீட்டில் வளர்ந்த தனது சகோதரனை ஏமாற்றியது தவறு என உணர்ந்து, தனது சகோதரன் ஏசாவின் உள்ளில் ஏற்பட்ட அக காயத்தை புரிந்து "முன் சென்று தம் சகோதரரை நெருங்கிச் செல்கையில் ஏழுமுறை தரையில் வீழ்ந்து அவரை வணங்கினார்" (33:3). இச்செயல் அவர்களது குடும்ப உறவில் நலமருளும் நல்மருந்தாக அமைந்தது. இந்த நானிலத்தில் நலமருளும் நற்செயல் நமது குடும்பத்திலிருந்து தான் ஆரம்பமாக வேண்டும் என அன்னை தெரசா அவர்கள் தெளிவான ஆலோசனை தந்திருக்கிறார்கள் யாக்கோபைப் போல குடும்பங்களில் நலவாழ்வு ஏற்பட வேண்டும் என ஏக்கம் கொள்ளும் நாம், எப்படி நலவாழ்வு மலரும் என்பதை குறித்து சிந்தனை செய்வது சிறப்பாயிருக்கும்.

## *1. நல்லுள்ளத்தால் மலரும் நலவாழ்வு* :

குடும்பம் என்பது நல்லுள்ளங்களின் சங்கமமாகும். பொதுவாக குடும்பத்தில் நலவாழ்வு மலர செய்வது பணமோ, சமதாய அந்தஸ்தோ அல்ல, மாறாக நல்லுள்ளங்களே ஆகும். நல்ல குடும்பம் நல்லுள்ளத்தால் மட்டுமே கட்டியெழுப்பப்படும். எப்படியெனில், நல்லுள்ளத்தால் குடும்பத்தார் இணைந்திருந்தால் அக்குடும்பம் குலவிளக்காக ஒளிரும், அதே வேளையில் உள்ளங்கள் முரண்பட்டிருந்தால் அக்குடும்பம் அணைந்த விளக்காய் புகைந்து கொண்டேயிருக்கும். ஆகவே தான் நல்லுள்ளம் கொண்ட ஏசா மற்றும் யாக்கோபு ஆகிய ஒரே வீட்டாரும் சகோதரரும் பெருந்தன்மையோடு தங்கள் தவறான செயல்களை மறுபரிசீலனை செய்து கொண்டபடியால் நலவாழ்வும், உறவு நிலையும் மீண்டும் மலர்ந்தது அவைகள் மங்கிபோகவில்லை. தொ.நூ. 27-ல் தந்திரமாய் தன் அண்ணனாகிய ஏசாவின் ஆசீர்வாதத்தை பெற தாயராகிய ரெபேக்காள் ஆலோசனை சொன்ன போது, இது தவறு என உணராது

தாயின் வழிகாட்டுதலின் படி செயல்பட்டு ஆசீர்வாதத்தை தட்டி சென்றான். தங்களது சுயநலத்தால் இந்த செயல் நிகழ்ந்தது. ஆனால் பின்பு இருவரும் மன உளைச்சலுக்குள்ளானர்கள், குடும்பத்தில் பகையுணர்வு வலுவடைந்தது, சகோரத்துவ பாசம் மறைந்தது. இப்படி மனஉளைச்சலாலும், பகையுணர்வாலும், பாசமின்மையினாலும் நலவாழ்வை இழந்த குடும்பத்தில் மீண்டும் நலவாழ்வு மிளிர காரணம் ஏசா, யாக்கோபினுடைய நல்லுள்ளம் தான். கயமையுடன் செயல்பட்ட யாக்கோபு தன் சகோதரனுக்கு செய்த துரோக செயலை உணர்ந்ததுடன் ஏசாவின் உணர்வினை மதித்து தனது முழு குடும்பத்தாருடனும் உடமைகளுடனும் ஏசாவை சந்திக்க வருகிறார். இந்நிகழ்வில் உடன்பிறப்புகளின் நல்லுள்ளம் பல நல்ல உண்மைகளை வெளிப்படுத்தியது. தொ,நூ. 33:3-ல் யாக்கோபு முதல் வரிசை, இரண்டாம் வரிசை, இறுதி வரிசையையும் கடந்து “அவர் அவர்களுக்கு முன் சென்று, தம் சகோதரரை நெருங்கிச் செல்கையில் ஏழுமுறை தரையில் வீழ்ந்து அவரை வணங்கினார்.” இங்கு குடும்ப நலவாழ்வுக்கு குந்தகம் செய்த யாக்கோபு இப்போது மூன்று வரிசைக்கும் முன்வந்து, ஏசாவுக்கு அருகில் வந்து, அவர்முன் ஒருமுறையல்ல ஏழுமுறை தரையில் வீழ்ந்து அவரை வணங்கினார். அத்துடன் 33:6,7ன்பதின்படி அப்பொழுது வேலைக்காரிகளும் அவர்களுடைய பிள்ளைகளும் அணுகி ஏசாவை வணங்கினர். அவ்வாறே ராகேலும் நெருங்கி வந்து வணங்கினர். இங்ஙனம், தீய உள்ளத்துடன் ஆசீர்வாதத்தை அபகரித்த யாக்கோபு இப்போது நல்லுள்ளத்துடன் நலவாழ்வு மலர அவரும் அவர்தம் முழு குடும்பத்தின் உறுப்பினர்களும் முழுமனதுடன் முன்வருவது சிறப்பான அணுகுமுறையாகும்.

இன்றைய நற்செய்தி பாடத்திலும், இளைய குமாரனின் இல்லத்தில் மிகுந்த மகிழ்விற்கும் விருந்திற்கும் காரணம் அவரது தந்தையாரின் நல்லுள்ளமே. லூக் 15:20 படி குடும்பத்தில் நலவாழ்வு மலர வேண்டும் என்ற பேராவலோடு, உறவை உதறி தள்ளிவிட்டு சென்ற மகன், தொலைவில் வந்துகொண்டிருந்தபோதே அவர் அவரை கண்டு, பரிவுகொண்டு, தானாகவே ஓடிபோய் அவரை கட்டித் தழுவி முத்தமிட்டார். நல்லுள்ளத்துடன் ஏற்றுக்கொண்டு இல்லத்திற்கு அழைத்து வந்து ஆஸ்தியை அழித்தவனுக்கு அன்பையும், அரவணைப்பையும், அங்கீகாரத்தையும், ஆசீயையும் வழங்கினார். இந்த நல்லிணக்கத்திற்கும் நலவாழ்விற்கும் ஆணிவேர் நல்லுள்ளமே.

நல்லுள்ளத்துடன் வாழும் போது நம் குறைகள் கண்ணுக்கு தெரிய ஆரம்பித்துவிடும், அகந்தை என்னும் பாறையானது சுக்கு நூறாக்கப்படும். பிறரை காயப்படுத்தாமல் காயங்கட்டும் நிலை உருவாக செய்யும். அதே வேளையில் தீய உள்ளம் ஓர் தேங்கிய குட்டை போன்றது, முடை நாற்றமெடுக்கும், கோபம், சந்தேகம், வீண் எண்ணம், அகந்தை, எரிச்சல் போன்றவற்றை உருவாக்கும். எனவே நலமருளும் மருந்தாகிய நல்லுள்ளத்துடன் வாழ முயற்சி செய்வோம்.

## *2. நல்லுறவால் மலரும் நலவாழ்வு* :

மனிதன் என்பவன் தனியாக வாழ படைக்கப்படவில்லை. அவன் குடும்பமாக சமூகமாக உறவில் வாழ படைக்கப்பட்டிருக்கிறான். உறவை கற்று கொடுத்து உறவால் வாழ்வு தரும் தொட்டில் தான் குடும்பம். இத்தகைய குடும்பத்தில் மனிதன் உறவோடும் உறவுகளோடும் வாழ கற்றுக் கொள்ளவேண்டும். காரணம் மனிதன் ஒரு சமூகப்பிராணி (Human is a Social Being) மட்டுமல்ல மனிதன் ஒரு பகுத்தறிவு பிராணி (Human is a Rational Being) மனிதன் ஒரு உறவுப்பிராணி (Human is a Relational Being) என்கிறார்கள். விவிலியமும், மனிதன் தன் பிறப்பு முதல் இறப்பு வரை குடும்ப உறுப்பினர்கள் நல்லுறவுடனும் நல்லிணக்கத்துடனும் வாழ கற்பிக்கிறது.

நல்லிணக்கத்துடன் வாழவேண்டிய ஒரு தாய் பிள்ளைகளாகிய ஏசா, யாக்கோபு உறவில் ஏற்பட்ட விரிசல் அதிக அலைச்சல்களில் அனுபவங்களையும் மனநிம்மதியற்ற நிலைகளையும் ஏற்படுத்தியது. ஆனால் தொ.நூ. 33-ல் படிக்கும் போது இருவரும் நல்லுறவால் நலவாழ்வு பெற பெருந்தன்மையோடு முன்வருகின்றார்கள். 33:3-ல் யாக்கோபு தன் சகோதரரை நெருங்கி வருகிறார், அப்படியே 33:4 -ல் ‘ஏசாவோ அவருக்கு எதிர்கொண்டு ஓடி அவரை அரவணைத்து இறுக கட்டித் தழுவி முத்தமிட்டார். இருவரும் மகிழ்ச்சி கண்ணீர் சிந்தினர்.’ பின்பு மனம் திறந்து உரையாடினர். நல்லுறவில் வளர்ந்தனர். இங்ஙனம், நல்ல குடும்பம் என்று எதுவும் தானாக அமைவதில்லை. மாறாக, அது கூட்டு முயற்சியாலும், கூட்டு உறவாலும் தான் உருவாக்கப்படுகிறது என்பதை இதன்வழியாக புரிந்து கொள்ள முடிகிறது. மேலும் தூய பவுல் எபே. 6:1-9-ல் பிள்ளைகள், பெற்றோர், அடிமைகள், தலைவர்கள் ஆகியோரிடையே நல்லுறவு வழியாக நலவாழ்வு மலர முழுமனதோடு கீழ்படிதல், பிறரை மதித்து நடத்தல், எரிச்சல் மூட்டாதிருத்தல், அறிவு புகட்டுதல், நல்மனதுடன் செயல்படுதல், அச்சுறுத்தாமல் வாழ்தல், ஆள்பார்த்து செயல்படாமல் ஆண்டவரின்

திருவுளத்தை உளமாற நிறைவேற்றுதல் போன்றவை அவசியம் என சிறந்த அறிவுரை வழங்கியிருக்கிறார்.

இன்று பாசங்களால் வளர்ந்து வந்த உறவுகளெல்லாம் வெளுத்து போன சாயங்களாய் மாறிவிட்டன. உறவுகளை பாரங்களாக பாவிக்கிறார்கள். அத்துடன் மனித உறவுகள் இன்று பயன்பாட்டுப் பொருள் கோட்பாடு பின்னணியிலேயே புரிந்து கொள்ளப்படுகிறது. ஆகவே, ஜப்பான் போன்ற நாடுகளில் குடும்பங்களில் நல்லுறவு வழியாக நலவாழ்வு மலர நெட் ஃபாஸ்டிங் (Net Fasting) என்ற ஒரு நாளை கொண்டாடி வருகிறார்கள். ஒரு நாள் முழுக்க சாப்பிடாமல் இருப்பது போல ஒரு நாள் முழுவதும் இணையம் பார்க்காமல் இருக்க வேண்டும். இது தான் நெட் ஃபாஸ்டிங். இத்தகைய நோன்பு முயற்சிகளை நமது குடுமபங்களில் அடிக்கடி அனுசரிக்க முயற்சிப்பது நலமருளும்.

### *3. நற்செயல்களினால் மலரும் நலவாழ்வு* :

குடும்பத்தில் தான் எல்லா நற்குணங்களும் கற்பிக்கப்பட்டு, கடைபிடிக்கப்பட்டு, காப்பாற்றப்படுகின்றன. நற்குணங்களின் பிறப்பிடமே குடும்பம் என்றால் மிகையாகாது. நற்குணம் மற்றும் நற்கிரியையில் குடும்பம் வளரும் போது குடும்பத்தில் தானாகவே நல வாழ்வு மலரும். இந்த குடும்ப உறவுகள் இறையரசின் தகவுகளான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, மன்னிப்பு, பகிர்வு போன்ற நற்கிரியைகளை வெளிப்படுத்த தவறிபோக கூடாது. யாக்கோபு தனது சகோதரனை ஏமாற்றி தவறை உணர்ந்து, தனக்கு இருக்கும் செல்வங்களையும் பகிர்ந்து கொடுத்தால் குடும்பத்தில் நலவாழ்வு மலரும் மற்றும் தன் சகோதரனின் பார்வையில் தயை கிடைக்கும் என நினைந்து தனது மந்தைகளோடு வருகை தந்தார் (தொ.நூ. 33:1-2), இந்த நற்கிரியையை கண்ட ஏசா. 33:8-ல் யாக்கோபிடம், என் சகோதரனே, ‘எனக்கு எதிர்கொண்டு வந்த பரிவாரம் எதற்காக?’, வ.9-ல் “ஏற்கனவே என்னிடம் மிகுதியாக உள்ளது, உன்னுடையதை நீயே வைத்துக்கொள் என்றார்.” இந்த நற்கிரியை வழியாக பகை மாறியது, பாசம் மலர்ந்தது, பகிர கூடிய பரந்த உள்ளம் உதயமானது, அனைத்திற்கும் மேலாக குடும்பத்தில் நலவாழ்வு மலர்ந்தது. இத்தகைய நற்கிரியைகள் குடும்பங்களில் பெருகும்போது கடவுளின் அன்பை மிக அழகாக அனைவரும் புரிந்து கொள்ள முடியும். தூய பவுல்,“ஒருவர் மற்றவருடைய சுமைகளை தாங்கி கொள்ளுங்கள்” (கலா. 6:2) “உளங்கனிந்த அன்பு காட்டுங்கள் பிறர்உங்களை விட மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள்” (உரோ. 12:10) போன்ற நற்கிரியைகளை குடும்பங்களில் கடைபிடிக்க

வலியுறுத்துகிறார். இரண்டாம் வத்திக்கான் சங்கம் குடும்பங்களை குறித்து தீவிரமாய் ஆலோசித்து, "குடும்பம்தான் சமூதாயத்தின் அடித்தளமாய் இருக்கிறது, ஞானத்தை பெறவும் மனிதரின் உரிமைகளை சமூக வாழ்வின் மற்ற தேவைகளோடு ஒருங்கிணைக்கவும் பல தலைமுறைகள் ஒன்றுகூடி ஒருவர்க்கொருவர் உதவி புரிந்து கொள்ளவும் உதவுமிடமாக குடும்பம் உள்ளது" என பிரகடனம் செய்தது. எனவே தலைமுறை தலைமுறையாக நற்சிந்தையுடன் நற்கிரியைகளை ஒருவர்க்கொருவர் செய்யும் போது குடும்பம் உண்மையாகவே ஓர் நலமருளும் இடமாக மிளிரும்.

தாவரங்களுக்கு ஏற்படும் வாடல் போன்ற நோயை குணப்படுத்துவது எளிது, ஒருவேளை குணப்படுத்த,யலவில்லை என்றால் கூட அதனை அழித்து புது ரகங்களை நட்டு காப்பாற்றலாம். ஆனால் குழப்பத்தோடும், மனகாயங்களோடும் வாழும் குடும்பத்தினை குணப்படுத்தும் அரும் மருந்து நல்லுள்ளமும், நல்லுறவும், நற்கிரியையும் தான். இரண்டாம் வத்திக்கான் சங்கம், "குடும்பம் ஒரு இல்லத்திருச்சபை" என்றுரைக்க காரணம் திருச்சபையின் போதனைகளும், திருச்சபைகளின் செயல்களும் ஒவ்வொரு குடும்பத்திலும் பிரதிபலிக்க வேண்டும். திருச்பையின் போதனை குடும்பத்தில் பிரதிபலிக்கும்போது நல்லுள்ளம், நல்லுறவு, நற்கிரியை உருவாகும். அதின் வழியாக குடும்பம் ஓர் நலமருளும் இடமாக மலரும் என்பதுதான் பேருண்மை.

அருள்திரு. G.S. **ஆஸ்வின் ஜெய்சிங்**

31-12-2018

**ஆண்டு நிறைவு நன்றித் தொழுகை**

# ஆண்டவரிடம் வாருங்கள், பேருவகை கொள்ளுங்கள்

# COME TO THE LORD AND REJOICE

எசா. 1:1-20 | தி.ப. 16:19-34
திபா. 89:1-18 | லூக். 19:1-10

***"...கடவுள் மீது நம்பிக்கை கொண்டதால் தம் வீட்டார் அனைவரோடும் சேர்ந்து அவர் பேருவகை அடைந்தார்."* தி.ப. 16:34**

இவ்வருடத்தின் துவக்க நாளில் புது நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புகளுடனும், கடவுளின் நாமத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளுடனும், பயணிக்க துவங்கி வருட நிறைவினை காணும் வாய்ப்பினை பெற்ற நாம் நமது பயணப் பாதைகளை திரும்பி பார்த்து கடவுள் எத்தனை நல்லவர் என்பதை உள பூர்வமாய் உணர்ந்து நன்றியுடன் ஆண்டவருடன் செல்வோம், பேருவகை கொள்வோம். உலக வாழ்வில் நாளுக்கு நாள் கடினப்பாடுகள் நிறைந்த நிலையிலிருக்க நம் பயணம் எப்படிபட்டதாயிருக்குமோ! என்ற ஐயப்பாடுகளுடன் நம்பிக்கையிழந்து நிற்கும் நமக்கு தரப்படும் நம்பிக்கையின் செய்தி, "ஆண்டவருடன் வாருங்கள் பேருவகை கொள்ளுங்கள்" என்பதாகும். இவ்வாழ்வினை பெற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை திருமறை பகுதிகள் சார்ந்து சிந்திப்போம், பேருவகை கொள்வோம்.

## *1. அடங்கா வாழ்வை விட்டு ஆண்டவரிடம் வாருங்கள் :*

(எசா. 1 : 1-20)

1:2 விண்வெளியே கேள்; மண்ணுலகே செவிகொடு ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளுகின்றார்; பிள்ளைகளைப் பேணி வளர்த்தேன்; அவர்களோ எனக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள். "They have rebelled against me"

இஸ்ரவேல் ஜனத்தை தன் சொந்த ஜனமாய் எகிப்தின் அடிமைத்தன வாழ்வினின்று விடுவித்து பாலும் தேனும் ஓடும் கானான் தேசத்திற்கு மோசேயின் மூலமாக வழி நடத்தி வந்தார். அடிமைத்தன வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து வழிநடத்தி வரும் பாதையில் மோசேக்கும் கடவுளுக்கும் எதிராக முறுமுறுத்து கிளர்ச்சி செய்தனர் (எண். 21:5). கொள்ளிவாய் சர்ப்பத்தால், தண்டித்த போதிலும் மீண்டும் கிளர்ச்சியாளர்களாய் செயல்படும் நிலை கர்த்தர் கண்டு ஏசாயா தீர்க்கன்

வாயிலாக திருவாய் மொழிந்தார். எசா. 1:4-ல் ஐயோ பாவம் நிறைந்த மக்களினம் இது; அநீதி செய்வோரின் கூட்டம் இது; கேடு கெட்ட மக்கள் இவர்கள்; ஆண்டவரை புறக்கணித்து விட்டார்கள். இஸ்ரவேலரின் தூயவரை அவமதித்து விட்டார்கள். அவருக்கு அன்னியராய் ஆகிவிட்டார்கள்.

கடவுளின் சொந்த சாயலில் படைக்கப்பட்டவர்கள் என்பதை மறந்து படைப்பாளருக்கு எதிராக கலகம் செய்யும் மக்களினமாய் மாறிவிட்டார்கள். கடவுளின் வார்த்தைகளை, சட்டங்களை அவமாக்கி விட்டார்கள் மிருக ஜீவன்களை விட கேடு கெட்டவர்களாய் விட்டார்கள். மிருகம் தன் எஜமானை அறிகிறது; மனிதனோ கடவுளை அறியவில்லை. அநீதியான வாழ்வினால் தண்டிக்கப்பட்டும் உணர்வில்லை; உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை காயங்களும், வடுக்களும், புண்களும் நிறைந்து சீழ்வடியும் நிலை இதனை விட்டு ஆண்டவரிடம் வாருங்கள், என அன்பின் அழைப்பு தரப்படுகிறது.

இச. 21:18-21 கீழ்ப்படியாத அடங்காத மகனை குறித்து விதிமுறை சொல்லப்பட்டிருக்கிறது. அவனை நகர் தலைவனிடம் கொண்டு செல்வர். எங்கள் மகனாகிய இவன் பிடிவாதமும், முரட்டுத்தனமும், கொண்டவனுமாயிருக்கிறான். எங்கள் சொல் கேட்பதில்லை; பெருந்தீனிக்காரனும், குடிவெறியனுமாய் இருக்கிறான், என்று நகர் தலைவரிடம் சொல்ல; எல்லா ஜனங்களாலும் கல்லால் அடித்து கொலை செய்வர். இதனைக் கேட்டு இஸ்ரவேலர்கள் தீமையை விட்டு அகன்று கடவுளுக்கு அஞ்சுவர் என்பதாகும்.

மோசேக்கு எதிராகவும் முறுமுறுக்கும் கோராகு கூட்டத்தார் கடவுளின் நியாயத்தீர்ப்புக்கு உட்பட்டார்கள் எண். 16:32 பூமி தன் வாயை திறத்து; கோராகுக்குரிய எல்லா மனிதரையும், உடமைகளையும் விழுங்கி விட்டது.

ஒசேயா 4:16 இல் கட்டுக்கடங்காத இளம் பசுக்களைப் போல் இஸ்ரவேல் மக்கள் பிடிவாதமாயிருக்கிறார்கள். நாமும் இஸ்ரவேலர் போல் வணங்கா கழுத்துள்ளவர்களாய், தான் தோன்றி தனத்துடன், அடங்கா பிடாரிகளாய் வாழ்ந்து வருகின்றோமா? அன்பின் அழைப்பினை கேளாயோ! ஆண்டவரிடம் வாருங்கள் பேருவகை கொள்ளுங்கள்.

## 2. அறியாமையை விட்டு ஆண்டவரிடம் வாருங்கள் :

(திப. 16 : 19-34)

அறியாமையினைப் பயன்படுத்தி பிழைப்பு நடத்தும் கூட்டம் அசுத்தாவியினால் பிடிக்கப்பட்ட அடிமைப் பெண்ணைப் பயன்படுத்தி, குறி சொல்லி பணம் வசூலிக்கும் நிலையில் பவுல் அசுத்தாவியினை இயேசு கிறிஸ்துவின் பெயரால் துரத்தி விடவே வருவாய் நின்று போயிற்று. இதனால் பாதிக்கப்பட்டோர் பவுல், சீலா மீது கடும் சினம் கொண்டு பொய்யாய் குற்றம் சுமத்தி மக்களை எதிராக தூண்டி அவர்களை தடியால் அடித்து துன்புறுத்தவும் செய்தனர். பின்னர் நடுவர் முன் நிறுத்தவும்,

அவர்களின் கட்டளைப்படி மேலாடையை கிழிக்கவும், தண்டிக்கவும், சிறையில் கடுங்காவல் புரியவும் செய்தனர். அறியாமையின் பிடியிலிருந்த மக்கள் அறியாமையினை விட்டு வெளிவரா வண்ணம் அசுத்தாவியின் பிடியிலிருப்போரால் தடுக்கப்பட்டனர். சிறையிலடைக்கப்பட்ட பவுலும் சீலாவும் வேதனைகளை மறந்து கடவுளை மகிழ்ந்து பாடவே சிறைச்சாலை அஸ்திபாரங்கள் அதிர, கட்டுகள் கழன்று விழ, கதவுகள் தானாக திறந்தது. இந்நிலையில் காவலாளி கைதிகள் தப்பி விட்டார்கள் என நினைத்து தன்னை தானே தற்கொலை செய்து கொள்ள முயலும்போது உனக்கு கேடு செய்யாதே; இதோ, நாங்கள் இங்கே இருக்கிறோம் என்றனர். ஆண்டவன்மாரே இரட்சிக்கப்பட நாங்கள் என்ன செய்ய வேண்டும்? இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்போது நீயும் உன்வீட்டாரும் மீட்கப்படுவீர்கள். அறியாமையின் பிடியிலிருந்த காவலர் குடும்பம் அறியாமையினை விட்டு ஆண்டவரையே நாடி வரவும் மீட்பு பெற்று திருமுழுக்கும் பெற்றனர்.

பாரம்பரியமாய் கிறிஸ்தவ குடும்பங்களில் பிறந்து கிறிஸ்தவர்களாய் வாழும் மக்களில் பலர், அசுத்தாவியின் கட்டுப்பாட்டில் வாழ்வதும் உண்டு. லேவி. 19:26-31 குறிபார்க்கின்றனர், நாள் பார்க்கின்றனர். பச்சை குத்திக் கொள்கின்றனர். அச்சனம் பார்த்தல், சூன்னியம் பார்த்தல், மந்திரவாதம் செய்தல், மாயவித்தையை நாடுதல் இச. 18:10-12. மேலே குறிப்பிட்ட அசுத்தமானவைகளை நம்பி நாடி செல்வோரை கர்த்தர் அருவருக்கிறார். தீர்க்கன் வாயிலாக அறியாமையினின்று ஆண்டவருடன் வா என்ற போதிலும் இச. 18:19 என் வார்த்தைகளுக்கு செவி கொடாமல் போனால் அவர்களை நான் விசாரிப்பேன். புரட்டு வேதங்களுக்கும் கட்டுக்கதைகளுக்கும் அறியாமையால் ஓடுவோர் பெருத்துப் போயினர். திருமறையை தெளிவுபட கற்போம் அதன்படி வாழ்வோம் அறியாமை அகலட்டும். இயேசுவே வழியும் சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார் அவரில் வாழ்வோம் பேருவகை பெறுவோம்.

## 3. அநீதியை விட்டு ஆண்டவரிடம் வாருங்கள் :

(லூக். 19 : 1-10)

சகேயு ஒரு செல்வந்தனும், வரிதண்டுவோருக்கு தலைவனும், மிகவும் குள்ளமானவனாயும் இருந்தான். இயேசுவை குறித்து கேள்விப்பட்டிருந்த படியால் இயேசுவை காண வேண்டும் என வாஞ்சை கொண்டவன். எனவே இயேசு செல்லும் பாதையினை தெரிந்து கொண்டு அவ்வழியருகே நின்ற காட்டு அத்திமரத்தில் ஏறி அமர்ந்திருந்தான். அவ்வழியாய் வந்த இயேசு காட்டத்தி மரத்தின் அருகில் வந்தவுடன் அவனைப் பார்த்து சகேயுவே சீக்கிரமாய் இறங்கி வா இன்று நான் உன் இல்லத்தில் தங்க வேண்டும் என்றபோது அநீதியான பாவியான மனுஷன் என முத்திரையிடப்பட்ட சகேயு ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொண்டான். எனவே சகேயுவின் வாழ்வில் நீதி வெளிப்பட்டது. லூக். 19:8 சகேயு எழுந்து நின்று, "ஆண்டவரே, என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், எவர் மீதாவது பொய்க்குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்றான். அந்நிமிடமே ஆபிரகாமின் குமாரனாக ஏற்று கொள்ளப்பட்டான்.

சஉ. 3:16-ல் சூரியனுக்குக் கீழே நான் நியாய ஸ்தலத்தைக் கண்டேன் அங்கே அநியாயம் இருந்தது, நீதி ஸ்தலத்தையும் கண்டேன் அங்கே அநீதி இருந்தது. பிரசங்கி சொல்வது போல் எங்கு பார்த்தாலும் நீதி, நியாயம் இல்லாத ஓர் சூழலை காணலாம். நீதி சாலைகளில் நீதி விலைக்கு வாங்கும் நிலை. எங்கு பார்த்தாலும் லஞ்சம், பரிதானம் பெருத்துப்போன நிலை. எனவே நீதிக்கும் நியாயத்திற்கும் இடமில்லை. நீதிக்காக குரல் எழுப்ப வேண்டிய திருச்சபைகளில் நீதி, நியாயம் முகம் பார்த்தே செய்யப்படுகிறது.

எரேமிய தீர்க்கன் சொல்லும் போது அநீதி அநியாயம் செய்கிறவனுக்கு ஐயோ என்கிறார். 2தெச. 2:11 சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கபடுவர் 1யோவா. 5:17 "அநீதி எல்லாம் பாவமே." எனவே சகேயுவைப் போன்று அநீதியான செய்கைகளை விட்டு ஆண்டவருக்குள் வந்தால் ஆபிரகாமின் மகனாக மாற்றப்படுவோம். அதன் வழி பேருவகை கொள்வோமாக.

கர்த்தரின் வார்த்தைக்கு அடங்கி அறியாமையினை விட்டும் அநீதியின் செயல்பாடுகளை விட்டும் விலகி ஆண்டவருக்குள் வருவோம் பேருவகை கொள்வோம்.

அருள்திரு. V. **டேவிட் றாபி ஜேக்கப்**

# தவக்கால அருளுரைகள்

21-02-2018

**தவக்கால இரண்டாம் புதன்**

# உண்மையான தர்மம்

மத். 6:1-4

***“நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்.”*** மத். 6:3

இயேசு கிறிஸ்துவின் மலை அருளுரை மிக எளிமையானவை. அதே வேளையில் கருத்தாழமிக்கவை. பழைய ஏற்பாட்டில் பத்துக் கற்பனைகள் எந்த இடம் வகிக்கின்றனவோ அதே இடத்தை, புதிய ஏற்பாட்டில் இறையரசில் நுழைவதற்கான விதியாக இது அமைந்துள்ளது. ஜெபித்தல், நோன்பிருத்தல், தானதர்மம் செய்தல் போன்றவை நாம் கடைப்பிடிக்கவேண்டிய முக்கியமான பக்தி விருத்திக்கேதுவான பழக்கவழக்கங்கள். இவை நமது ஆன்மிக வாழ்வுக்கு அவசியமானவை, கடைப்பிடிக்க வேண்டியவை, கடவுள் நம்மிடம் எதிர்ப்பார்க்கின்றவை. இவை அர்த்தமுள்ளவைகளாகச் செய்யப்படவேண்டும். தியானப்பகுதியில் உண்மையான தர்மம் எப்படிச் செய்யப்பட வேண்டும் என்பதனை இயேசு கிறிஸ்து தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார். இத்தவக்காலங்களில் நாம் செய்கின்ற தர்மச் செயல்கள் அர்த்தமுடையவையாக அமைந்திட ஜெபத்துடன் தொடர்ந்து தியானிப்போம்.

## *1. உண்மையான தர்மம் கடவுள் விரும்பும் செயல்*

எபி. 13:16 உண்மையான தர்ம செயலை கடவுள் விரும்புகிறார் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகிறதைக் காண முடிகிறது. இப்படிப்பட்ட காரியத்தை மறக்கக் கூடாது என்றும் சுட்டிக்காட்டுகிறது. செல்வந்தன் ஒருவனையும் அவனைச் சார்ந்து வாழ்ந்த லாசரு என்கிற மனிதனையும் குறித்த சம்பவத்தைக் (லூக். 16:19-31) கூறி தர்மம் செய்ய வேண்டிய அவசியத்தையும் கடவுளின் விருப்பமான செயல் இது தான் என்பதையும் தெளிவாய் விளக்குகிறார். இதிலே செல்வந்தன் செய்த தவறு என்ன? தன்னிடம் தான தர்மம் செய்யத் தாராளமாய் இருந்தும் அதைச் செய்ய முன் வரவில்லை. ஆகவே பரிதாபமான ஒரு நிலைக்குத் தள்ளப்படுகிறான்.

நம் ஆண்டவரும் மகிமை பொருந்தினவராக தமது விண் தூதர்களோடு வரும் போது சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து மனுமக்களை இரண்டு வகையாக பிரிக்கின்றவராய் வெளிப்படுவார் (மத். 25:31-33). வலப்பக்கம் நிற்கின்றவர்களை, ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! என அழைத்து ஆயத்தம் பண்ணப்பட்ட இராஜ்யத்தைச் சுதந்தரித்துக்

கொள்ளுங்கள் என்கிறார் (மத். 25:34-36). அவர்கள் ஆச்சரியப்பட்டு நிற்கையில் நீங்கள் செய்த தானதர்மங்கள் எனக்குச் செய்யப்பட்டவைகள் என்கிறார் (மத். 25:40). இடப்பக்கம் நிற்கின்றவர்களை சபிக்கப்பட்டவர்களே! என்று அழைத்து நித்திய அக்கினிக்குப் போங்கள் என்கிறார் (மத். 25:41). இதற்கு காரணம் தான தர்மம் செய்ய மறந்து போனதாகும். உண்மையான தர்மம் கடவுள் விரும்பும் செயல். இவ்வுலகில் நாம் கடவுளின் பிரதிநிதியாய் செயல்பட அழைக்கப்பட்டவர்கள் (எபே. 2:10). கடவுள் விரும்பும் உன்னத செயலான உண்மையான தர்மத்தை அறிந்தும் அதை செய்யவில்லையென்றால் அது நமக்குப் பாவமாகக் கருதப்படும் (யாக். 4:17). ஆகவே உணர்ந்து செயல்படுவோம்.

## 2. உண்மையான தர்மம் கடவுள் கற்பித்தபடி செய்ய வேண்டிய செயல் : (மத். 6:3)

உண்மையான தர்மம் என்பது கடவுள் கற்பித்தபடி செய்யப்பட வேண்டியவை. மக்களை ஈர்க்கவோ, விளம்பரப்படுத்தவோ பாராட்டுகளைப் பெறவோ செய்யப்படக் கூடாது எனத் தெளிவுப்படுத்துகிறார். அன்றைக்கு இருந்த வெளிவேடக்காரர்களான பரிசேயர்கள் தான் பெருமைக்காக தானதர்மங்களைச் செய்தனர். நாம் அப்படிச் செய்யக்கூடாது.

சாது சுந்தர்சிங் அவர்கள் கூறிய குட்டிக் கதை ஒன்றில் ஒரு செல்வந்தன் எல்லாரும் கடவுளின் ஆசி பெற வேண்டிய பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி அதை அவ்வூரின் இறையடியவரைக் கொண்டு ஆசீர்வதித்து எல்லாருக்கும் கொடுக்க விரும்பினான். அழைக்கப்பட்ட இறையடியவர் இந்தச் செல்வந்தன் என்ன நோக்கில் இந்த விருப்பத்தைச் செய்கிறான் என்பதைச் சோதிக்க விரும்பி ஏழையைப் போல் வேடமிட்டுச் சென்று தான் கடவுளின் பேரில் வந்திருக்கிறேன் பசி போக்க கொஞ்சம் ஆகாரம் தா என்று கேட்டார். செல்வந்தனோ அவரைத் திட்டி கீழே தள்ளி விட்டான். காயமடைந்த இறையடியவர் ஓர் ஏழையின் வீட்டுக்குச் சென்று காயங்களைக் கட்டிக் கொண்டு வேடத்தைக் கலைத்து விட்டு விருந்துக்கு வந்தார். வந்தவர் முன் உணவு பரிமாறப்பட்டது. அவைகளை ஆசீர்வதித்தார். ஆனால் சாப்பிடவில்லை. அவர் சாப்பிட்ட பின்னர் தான் எல்லாரும் சாப்பிடுவர். ஆகவே செல்வந்தன் அவரைச் சாப்பிடச் சொன்னான். அவரோ நான் ஏற்கனவே சாப்பிட்டு விட்டேன். இப்போது என் உடை சாப்பிடுகிறது என்றார். புரியாமல் நின்ற செல்வந்தனிடம் தனது காயங்களைக் காட்டி நீ எனக்கு முன்பே விருந்து தந்து விட்டாய் என்று நகர்ந்து சென்று விட்டார்.

இன்று பெரும்பான்மையோர் இப்படித் தான் தான தர்மம் செய்கின்றனர். பெயர், புகழ், மதிப்பைப் பெற வேண்டும் எனச் செய்யப்படும் தர்மம் உண்மையான தர்மம் அல்ல அவை கடவுள் கற்பித்தபடி அந்தரங்கத்தில் செய்யப்பட வேண்டியவைகள் என்பதனை அறிந்து நமது தான தர்மங்களை நிறைவேற்றுவோம்.

## *3. உண்மையான தர்மம் கடவுளை மகிமைப்படுத்தும் செயல்* (மத். 6:1)

மனுஷர் காண வேண்டும் என்று நமது தர்மங்களைச் செய்யாமல் கடவுளை மகிமைப்படுத்த நாம் இவைகளைச் செய்ய வேண்டும். வெளிவேடக்காரர்களான வேதபாரகர், பரிசேயர் எல்லாரும் தாங்கள் செய்யும் தர்மத்தை ஆலயங்களிலும், வீதிகளிலும் செய்தார்கள். காரணம் மனுஷரால் புகழப்பட வேண்டும் என்பதற்காகவே அப்படிச் செய்தனர். அதன் மூலம் சுயமகிமையைத் தேடினர். ஆண்டவர் ஒருவரே அனைத்து கனத்துக்கும் மகிமைக்கும் பாத்திரர் அதை மறந்து சுய மகிமையை முன்னிறுத்திச் செயல்பட்டனர்.

பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் கிரைமியாவிலுள்ள மருத்துவமனையில் சிகிட்சை பெற்ற போர்வீரர்கள் எல்லாருடைய உள்ளத்திலும் பக்திவிநயமாய் அறியப்பட்டவர். அவருடைய முகரூபத்தைப் படம் பிடிக்க வேண்டுமென்று கேட்ட போது மறுத்து விட்டு “நான் மறக்கப்பட வேண்டும் என்னுடைய கையினால் போர் வீரர்களுக்கு கொடுக்கப்பட்ட ஆசீர்வாதமான காரியங்களுக்கு மூலகாரணராகிய இயேசு பெருமான் மகிமைப்பட வேண்டும்” என்றார். ஆம் அனைத்து கனமும் மகிமையும் எப்பொழுதும் நம் ஆண்டவருக்கே உரியது.

நாம் அனைவரும் இவ்வுலகில் வெறுமையாகவே வந்தோம். நாம் பெற்றுக் கொண்ட அனைத்தும் அவருடையதே. இவைகள் அனைத்தும் மற்றவருடன் நாம் பகிர்ந்து வாழ வேண்டும் எனத் தரப்பட்டவை. இவைகள் அனைத்தைக் குறித்தும் கணக்கு ஒப்புவிக்க கடமைப்பட்டவர்கள். ஆகவே அவர் நம்மிடம் தந்தவைகளை அதற்குத் தகுதியானவர்களுக்கு கொடுத்திருக்கிறோம். இதில் நாம் பெருமைப்பட ஒன்றுமே இல்லை. நம்முடைய கடமையை மாத்திரமே செய்துள்ளோம். ஆண்டவருடையதை நம்முடையது என நாம் எடுத்து கொள்ள நமக்கு உரிமையும் இல்லை. ஆகவே நாம் செய்கின்ற உண்மையான தர்மம் கடவுளுக்கே கனத்தையும் மகிமையையும் செலுத்தக் கூடியவையாய் அமைந்திட நம்மை அர்ப்பணித்து வாழ்வோம்.

## 4. உண்மையான தர்மம் கடவுளின் ஆசியைத் தரும் செயல் : (மத். 6:4)

உண்மையான தர்மம் கடவுள் விரும்பும் வகையிலே, அவர் கற்பித்தபடி அவர் ஒருவருக்கே மகிமையைச் செலுத்தும் செயலாய் அமையும் போது நிச்சயமாய் கடவுளின் ஆசியை அதினால் நமக்குப் பெற்றுத் தரும். மலையின் சிற்றாறுகள் கடலைச் சென்றடைய வாய்க்கால் அமைத்துக்கொடுக்கும் சமவெளியும், மலைப்பகுதியும் ஒருபோதும் நஷ்டமடைவதில்லை. அவைகள் இடம்விட்டுக் கொடுத்தமையால் நூறு மடங்கு பலனைப் பெற்றுக்கொள்கிறது, செழிப்படைகிறது.

அதுபோல இறைவன் தந்த அருட்கொடைகளை வாய்க்காலாய் நின்று மற்றவருடன் அவைகளை நாம் பகிரும்போது அது நமக்கு இறையாசியைப் பெற்றுத் தருகிறது. திருமையும் அதைத்தான் நமக்குப் போதிக்கிறது. “உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும். எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்” (நீதி. 11:25).

அன்பர்களே நாம் வாழ்வடைய வேண்டி கடவுளும் தம் ஒரே மைந்தரை நமக்குத் தானமாக தந்தார். விண்ணின் மகிமையை நமக்காகத் துறந்து மனிதனானார் (பிலி. 2:6,7). நாம் வளமடைய தம்மைத் தரித்திரமாக்கினார் (2கொரி. 8:9). பாவமென்கிற பிரிவினையால் பிளவுப்பட்டிருந்த மனுக்குலத்தையும் கடவுளையும் ஒன்றிணைக்க தம்மையே தானமாக்கினார் (எபே. 2:15,16). கிறிஸ்துவின் ஒப்புயர்வான இத்தானதர்மம் நம்மை, பல நிலைகளில் சமூகத்தில் மேன்மைப் படுத்தியுள்ளது. இத்தவக்காலத்தில் இவைகளை எல்லாம் உணர்ந்தவர்களாய் நாமும் நமது தர்மச் செயல்களை உண்மையான நிலையில் நிறைவேற்றி இறையாசி பெற்று இறைச்சான்றுடன் வாழ்வோம்.

திரு. S. **ஸ்மைலின் நிம்மி ஆனந்த்**

28-02-2018 **தவக்கால மூன்றாம் புதன்**

# உண்மையான இறைவேண்டல்

மத். 6:5-15

**"நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று... உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள்."** மத். 6:6

இறைவேண்டல் என்ற சொல் எபிரேயத்தில் 'காரா', 'டாஃபில்லா' என்று அழைக்கப்படுகிறது. இதன் பொருள் கூப்பிடுதல், விண்ணப்பித்தல், அருள்வேண்டல், தலைவணங்குதல், தியானத்தில் மூழ்குதல் என்னவாகும். (1சாமு. 1:10, 2அரச. 9:15, தானி. 6:11). கிரேக்கத்தில் 'ப்றாஸியுஹோமாய்' என்ற சொல் அடிக்கடிப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இறைவேண்டல் ஆன்மிக வாழ்விலும், தனிமனித வாழ்விலும் ஏற்படுகின்ற இறைஇணைவு அனுபவமாகும். திருச்சபைத் தந்தை தெர்த்துல்லியன் "கிறிஸ்தவ இறைவேண்டல் துன்புறுவோருக்கு பொறுமையையும் இறையருளையும் சொந்தமாக்குகின்றன; ஆன்மீக உள்ளுணர்வை வழங்குகிறது; விழுந்தோரைத் தூக்கி விடுகின்றது; விழுவோரைத் தாங்கிப் பிடிக்கின்றது நிற்போரைத் தாங்குகின்றது" என்று கூறுகிறார். இறைவேண்டல் வாழ்க்கையின் உயிர்நாடி. உண்மையான உயிருள்ள இறைவேண்டல்கள் அன்புறவிலிருந்து உருவெடுக்கின்றன. மனித வாழ்வுக்கு, இறைச் செயல்பாட்டுக்கு இணைப்பின் கயிறாக அமைந்துள்ளது.

புனித மத்தேயு தனது நூலில் இயேசுவின் இறைவேண்டல் பற்றிக் கூறும்போது "வெளியான அனுபவமல்ல, உள்ளான அனுபவம்" என்று மத்.6:6 -ல் கூறுகிறார். யூதர்கள் மக்களின் நன்மதிப்பைப் பெறும் நோக்கில் இறைவேண்டலில் ஈடுபடும் அவலநிலையை இயேசு கண்டிக்கிறார். மக்கள் பார்க்க வேண்டும் என்று மிகுதியான சொற்களைப் பயன்படுத்தி தங்களை நல்லவர்கள் போல் காட்டிக்கொள்கிறார்கள். இறைவேண்டல் உள்ளத்திலிருந்து வெளிப்படும்போது உண்மையான இறைவேண்டலாக அமையும் என்பதைக் கற்றுக்கொடுக்கிறார் (மத். 6:9-15).

## *1. இறையரசின் தன்மைகளைக் கடைப்பிடித்தல்* :

(மத். 6 : 9-10)

இறையரசு என்பது அன்பு, நீதி, இரக்கம் போன்ற மதிப்பீடுகள் கொண்ட ஒரு புதிய சமுதாயம். கடவுளின் ஆட்சி என்பது மொழி, இனம், பாலினம் போன்ற வேற்றுமைகளைக் களைந்து அனைத்து மக்களையும் ஒரு குடைக்குள்(மண்ணுலகம்) வழி நடத்துவதாகும். யூத மக்களில் மொழியின் அடிப்படையில் கிரேக்க மொழி பேசும் யூதர்கள். எபிரேய மொழி பேசும் யூதர்கள் என்ற பிரிவினை காணப்பட்டது. எபிரேய மொழி பேசும் யூதர்கள் தங்களை மெச்சிக்கொண்டு மக்கள் பார்க்க வேண்டும்

என்பதற்காக இறைவேண்டல் செய்கின்றனர். ஆனால் உள்ளத்தில் மெய்யன்பு அற்றவர்கள். தந்தையின் விருப்பம் மண்ணுலகில் நிலவ வேண்டும். தந்தை என்ற சொல் அன்பு ததும்பும் ஒரு குடும்பச் சொல். நாம் வாழும் மண்ணுலகம் தந்தையினுடையது என்பதை உணர்ந்து தந்தையின் ஆட்சி (அன்பு, நீதி, இரக்கம்) மலர வாழ்வதே உண்மையான இறைவேண்டல். கடவுளைப் போற்றி, தூய வாழ்வு வாழ்ந்து, கடவுளின் விருப்பம் நிறைவேறச் செயல்படுவதே (வாழ்வதே) இறையரசின் தன்மைகள். "பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்"(மத். 7:12).

## *2. வாழ்வியல் மதிப்பீடுகளைக் கடைப்பிடித்தல்* :

(மத். 6 : 11-15)

வாழ்வியல் மதிப்பீடுகள் என்பவை பேராசையை வெறுத்தல், பகிர்தல், குற்றங்களை மன்னித்தல், குற்றங்களை உணர்தல், தீமைகளுக்கு விலகுதல், துன்பத்திலும் கடவுளைப் போற்றுதல் போன்றவைகளைக் கடைப்பிடிப்பது போறவையாகும். யூதர்கள் தர்மம் செய்வதை முதன்மைக் கடமையாகச் செய்தனர். ஆனால் மக்களின் நன்மதிப்பைப் பெறும் நோக்கில் பொது இடங்களிலும், தொழுகைக் கூடங்களிலும் செய்தனர். "இன்று தேவையான..." என்ற சொல் பேராசையற்ற, ஆடம்பரமற்ற வாழ்வைக் குறிக்கும். அன்றாடம் உணவுக்காய் ஏங்கும் மக்களுக்கு உணவு கிடைக்க வழி செய்வதே உண்மையான இறைவேண்டல். 'உணர்தல்', 'மன்னித்தல்' என்ற சொல் வாழ்வியல் சார்ந்த ஆழமிக்க சொல். இவை இரண்டும் குடும்ப உறவுக்கும், இறைஇணைவு உறவுக்கும் இணைப்புப் பாலமாக உள்ளது. மன்னிப்பு புதுமையான வாழ்வைக் கொடுக்கும் (மாற்கு 11:25). தீமைகளை விட்டு விலகுவதும், துன்பத்தில் உறுதியுடன் வாழ்வதும், தீமைகளில் அகப்பட்டு வாழும் மனுக்குலத்தை மீட்பதும் உண்மையான இறைவேண்டல்.

கிறிஸ்து தமது மலைப்பொழிவில் ஆழமிக்க இறைவேண்டல் எதுவென்பதைக் கற்றுக்கொடுத்து வாழ்ந்து காட்டினார். தம் மானுட வாழ்வின் இறுதியிலும் கெத்சமனே தோட்டத்திலும், சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த போதும் இறைவேண்டலையே தமக்கு ஆதாரமாகவும், அடித்தளமாகவும் ஆற்றலாகவும் கொண்டார். இறைமக்களாகிய நாமும் சொல்லில் அல்ல, செயலில் வாழ்ந்து காட்டுவதே உண்மையான இறைவேண்டல் என்பதை உணர்ந்து இறையரசின் தன்மைகளை வாழ்வின் மதீப்பீடுகளாகக் கொண்டு செயல்படுவோம்.

திரு. M. **ஜெஸ்லின் ஸ்டீபன்**

07-03-2018

**தவக்கால நான்காம் புதன்**

# உண்மையான நோன்பு

மத். 6 : 16-18

**"...நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம்."** மத்.6:16

நமது பற்றுறுதி வாழ்வைப் புத்தாக்கம் செய்ய ஆண்டவர் வழங்கிய அருளின் காலமே தவக்காலம் எனப்படும் லெந்துகாலம் ஆகும். இக்காலத்தில் நோன்பிருத்தல் திருச்சபையின் முதன்மையான மரபாக அமைந்துள்ளது. நோன்பு என்பது இறைவேண்டல், ஈகை போன்ற ஆன்மிகப் பயிற்சிகளில் ஒன்று எனத் திருமறை குறிப்பிடுகின்றது. ஒரு விளையாட்டு வீரர் வெற்றிபெற வேண்டுமானால் கடினமான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதுபோலவே நோன்பிருத்தல் போன்ற ஆன்மிகப் பயிற்சிகள் ஒருவரை வெற்றியுள்ள கிறிஸ்தவராக மிளிரச் செய்யும். உண்மையான நோன்பின் சிறப்பினை உணரவும் அதை இனிதே கடைப்பிடிக்கவும் இன்றைய திருமறைப்பாடம் அழைப்பு விடுக்கின்றது.

### *1. முகத்தோற்றமும் அகத்தோற்றமும் :*

"... நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம்..." மத். 6:16

"... மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்." மத். 6:18

யூதர்களின் ஆன்மிக வாழ்வில் நோன்பு சிறப்பானதோர் இடத்தைப் பெற்றிருந்தது. பாவக்கழுவாய் நாளின் போது, அனைத்து யூதர்களும் நோன்பிருக்க வேண்டும் என்ற வழக்கம் இருந்தது. மேலும், நெருக்கடியான நேரங்களில் நோன்பு வழியாக கடவுளிடம் அடைக்கலம் புகுந்தனர். சிறையிருப்பின் காலத்திற்குப் பின்னர் இது ஒரு சமயச் சடங்காக மாறிவிட்டது. சில பாரம்பரிய யூதர்கள் வாரத்திற்கு இரண்டுமுறை, திங்களும், வியாழனும் நோன்பிருந்தனர். இந்த இரண்டு நாட்களிலும் சந்தை கூடுவது வழக்கம். எனவே, கிராமங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் எருசலேமுக்கு எண்ணற்ற மக்கள் வருவதுண்டு. பக்தியின் பெயரால் பகல் வேடம் போடும், ஒரு சில யூதர்கள், தங்களின் பக்தியைத் தம்பட்டம் அடிப்பதற்கு என்று இந்த நாட்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். மற்றவர்கள் முன்னிலையில் தாங்கள் நோன்பிருக்கக்

கூடியவர்கள் என்பதையும், அதனால் தாங்கள் உயர்ந்தவர்கள் என்பதையும் வெளிப்படுத்திப் பெருமைபாராட்டிக்கொண்டனர். தாங்கள் நோன்பிருப்பது மற்றவர்களுக்கு தெரிய வேண்டும். என்பதற்காக, தங்களது தலைமுடியைச் சீவாமல் முகத்தை வாட்டமாக வைத்துக்கொண்டனர். அழுக்கடைந்த ஆடைகளை உடுத்தினர். தாங்கள் சோகமாக இருக்கிறோம் என்பதைக் காட்டிக்கொள்ள முகத்தில் வெள்ளை வண்ணம் பூசிக்கொண்டனர். இது அப்பட்டமான வெளிவேடமாகவே அமைந்தது.

நோன்பு வெளிவேடமாகவும், பக்தியின் பெயரால் நிகழ்த்தும் நாடகமாகவும் இருப்பதை ஆண்டவர் கண்டித்து உணர்த்துகின்றார். நோன்பை முகத் தோற்றத்தில் அல்ல, அக மாற்றத்திலேயே காண்பியுங்கள்; உள்ளான வாழ்வின் புத்தாக்கத்தைக் காணும் தந்தையாம் கடவுள் நல்ல கைம்மாறு வழங்குவார் என்று ஆண்டவர் இயேசு அறிவுரை கூறுகின்றார்.

நோன்பைக் குறிக்கும் வடமொழிச்சொல் 'உபவாசம்' என்பதாகும். இச்சொல் 'உடன் வசிப்பது' (உப + வாசம்) என்றப் பொருளைத் தருகின்றது. "...இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்..." (யோவேல் 2:13) என்று ஆண்டவர் அழைக்கின்றார். தீயச்செயல்களை நினைந்து, உள்ளம் உடைந்து, அக மாற்றம் அடைவதையே 'இதயத்தைக் கிழித்தல்' எனலாம். கடவுளிடம் திரும்பி வந்து அவருடன் இணைந்து வாழ நோன்பு ஓர் உந்து சக்தியாக அமைந்துள்ளது.

பட்டுப்பூச்சியின் வாழ்வில் கூட்டுப்புழு பருவம் நமக்கு ஓர் ஆன்மிக உண்மையைக் கற்றுத்தருகின்றது. தனித்த நிலையில் கூட்டுக்குள் தன்னை ஒடுக்கி கொள்ளும் புழுவிற்கு, இறையருளால் ஓர் உன்னத வளர்ச்சி கிடைக்கிறது. அமைதியில் ஓர் அற்புதம் நிகழ்கின்றது. தரையில் ஊர்ந்துகொண்டிருந்த புழு விண்ணிலே பறக்க சிறகுகள் தோன்றுகின்றன. இலைகளைத் தின்று சலித்துப்போன அதற்கு இனிமையான தேனைச் சுவைக்க குழல் ஒன்று தோன்றுகிறது.

உலகின் தீயக் கவர்ச்சிகளினால் அலைமோதும் உள்ளம், கடவுளோடு அமைதியில் உறவு கொள்ளும்போது அற்புதம் நிகழ்கின்றது. கசப்பான தீயப் பண்புகள் அகன்று, தெய்வீகப் பண்புகள் வாழ்வை இனிமையாக்குகின்றன. நோன்பு என்னும் அமைதியில் பெற்றுக்கொண்ட இந்த அக மாற்றத்துடன் புதுவாழ்வு வாழத் தொடங்க வேண்டும். ஆண்டவர் இயேசுவும் நாற்பது நாள்கள் நோன்பிருந்தார். தந்தையாம் கடவுளுடன் தனித்திருந்து பெற்ற புது ஆற்றலுடன் திருப்பணியை

அழகுறத் தொடங்கினார். கடவுளின் பாதத்தில் அமைதியாகத் தனித்திருந்து அக மாற்றம் பெற்று வாழ்வைப் புத்தாக்கம் செய்வதே உண்மையான நோன்பு எனலாம்.

## 2. உணவு கட்டுப்பாடும் உணர்வுக் கட்டுப்பாடும் :

"அவர் நாற்பது நாள் அலகையினால் சோதிக்கப்பட்டார். அந்நாள்களில் அவர் ஒன்றும் சாப்பிடவில்லை..." லூக். 4:2

"அவர் ஒடுக்கப்பட்டார்; சிறுமைப்படுத்தப்பட்டார்; ஆயினும் அவர் தம் வாயைத் திறக்கவில்லை..." எசா. 53:7

நோன்பு என்ற தமிழ் சொல்லுக்கு இணையான எபிரேயச் சொல் 'ட்சும்' (tsum) என்பதாகும். இச்சொல் 'வாயை மூடுதல்' என்றப் பொருளைத் தருகின்றது. வாயைமூடுதல் என்பது அமைதியை வலியுறுத்துவதுடன், பெருந்தீனிக்கும், பேராசைக்கும் விலகியிருப்பதையும் குறிக்கின்றது. ஒழுங்கற்ற சிந்தனைகளால் உளறும் உதடுகளைக் கட்டுப்படுத்துதல் என்ற பொருள் அழுத்தமாக தொனிக்கின்றது. "மட்டுக்கு மிஞ்சின பேச்சு அளவற்ற தீமைகளை விளைவிக்கும்; தம் நாவை அடக்குவோர் விவேகமுள்ளோர்." (நீதிமொழி. 10:19), "பொய்யுரைக்கும் நாவை ஆண்டவர் அருவருக்கிறார்..." (நீதிமொழி. 12:22) என்பவை சாலமோன் அரசரின் நல்மொழிகள் ஆகும். எனவே, சொற்களைப் பெருக்கித் தீமைகளைக் கூட்டாமலும், பொய்களை ஊதி கடவுளின் வெறுப்பை பெறாதிருத்தலும் சிறந்த நோன்பு என்றப் பொருளைத் தருகின்றன.

ஒரு நாடக ஆசிரியர் ஆண்டவர் இயேசு இளமைப்பருவத்தின் போது, தொழுகைக்கூடத்தில் திருமறை கற்கும் காட்சி ஒன்றை அழகுற வர்ணித்திருக்கிறார். அதில் இயேசு தம்முடன் பயிலும் மாணவர் செய்த தவறுக்கான தண்டனையைப் பொறுமையுடன் ஏற்பதாக கற்பனை செய்துள்ளார். நியாய விசாரணையின் போது ஆண்டவர் செய்ததும் இதுவே. இந்த உயர்ந்த பண்பு இளமையிலேயே அவரிடம் இருந்தது என்பதையே நாடக ஆசிரியர் விளக்க முயல்கிறார்.

பிலாத்துவின் முன்னிலையில் இயேசு குற்றவாளியைப் போன்று நின்றார். உடல் வேதனையும், உள்ளத்தின் வேதனையும் ஒரு சேர அழுத்தின. பொய்க் குற்றங்கள் சுமத்தப்பட்டன. நிந்தனைகள் சூழ்ந்தன. ஆண்டவரோ அமைதி காத்தார். இயேசுவின் பொறுமை பிலாத்துவிற்கு புதுமையாக இருந்தது. "நீ பதில் ஒன்றும் சொல்ல மாட்டாயா? உன் மீது இத்தனை குற்றங்களைச் சுமத்துகிறார்களே" என்று பிலாத்து

வியப்படைகின்றார். உணர்வுகளை அடக்கி ஆள்வதும் நோன்பின் ஒரு வடிவமே. எசாயா இறைவாக்கினர், “அவர் ஒடுக்கப்பட்டார்; சிறுமைப்படுத்தப்பட்டார்; ஆயினும் அவர் தம் வாயைத் திறக்கவில்லை...” (எசா. 53:7) என்று ஆண்டவர் இயேசுவின் அமைதியை முன்னறிவிக்கின்றார். ஆண்டவர் இயேசு காண்பித்த இந்த நல்ல மாதிரியைப் பின்பற்ற திருத்தூதர் பேதுரு அழைப்பு விடுக்கின்றார். (1பேதுரு 2:21-23). ஆம், கடவுளின் மாறாத நீதியில் நம்பிக்கைக் கொண்டு, பாடுகளில் அமைதி காத்த இயேசுகிறிஸ்துவின் உயர்ந்த வாழ்வு நம்மிலும் மலர்தல் வேண்டும். ஆத்திரமூட்டும் நேரங்களிலும் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, வாயை மூடுகின்ற சிறந்த நோன்பை அனுதினமும் கடைப்பிடிப்போம். அப்பொழுது அனைவரிடமும் அன்புறவுடன் வாழும் மகிழ்வானச் சூழல் உருவாகும்.

மேலும் ‘வாயை மூடுதல்’ என்பது பெருந்தீனியிலிருந்தும், பேராசையினின்றும் நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்னும் பொருளையும் உணர்த்துகின்றது. இப்பெருந்தீனி என்னும் பாவத்தினால் வீழ்ந்து விடாதிருக்க “...உன் தொண்டையில் கத்தி இருப்பதாக நினைத்துக்கொள்” (நீதிமொழி. 23:2) என்று திருமறை எச்சரிக்கின்றது. ஆதாமும் ஏவாளும் தங்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி வாயை மூடத் தவறியதால் வாழ்வில் வீழ்ச்சியைச் சந்தித்தனர். நாவின் இச்சையால் கண் கண்டதையெல்லாம் உண்ண விரும்புதல் பிழையானதே. பல நோய்களுக்குக் காரணம் அளவுக்கு அதிகமாக உண்ணுவது ஆகும். எனவே உணவுக் கட்டுப்பாடு உடல் நலம் பேண உதவுகிறது.

அன்பர்களே! ஆண்டவர் இயேசுவின் சிலுவைப் பாடுகளைச் சிந்திக்கின்ற இக்காலத்தில், நமது வாழ்வைப் புத்தாக்கம் செய்வது ஆசீர்வாதமான ஒன்று. உண்மையான நோன்பு தீமையை அகற்றவும், தூய்மையை அணியவும் பேருதவி புரிகின்றது. நோன்பு முகத் தோற்றத்தில் மட்டும் மலர வேண்டியது அல்ல; அக மாற்றம் பெற்று வேர் கொண்டு பலன் தர வேண்டும். நோன்பு உணவைக் கட்டுப்படுத்துவது மட்டும் அல்ல, உணர்வையும் அடக்கி ஆள்வது என்றப் புரிதலுடன் நம் ஆன்மிகப் பயணத்தைத் தொடர்வோம். தூய்மையான வெற்றி வாழ்வைப் பரிசாகப் பெறுவோம்.

திரு. R. **ஜெகதீஸ்லால் ரெகு**

14-03-2018

**தவக்கால ஐந்தாம் புதன்**

# உண்மையான செல்வம்

மத். 6:19-24

**"விண்ணுலகில் உங்கள் செல்வத்தைச் சேமித்து வையுங்கள்; அங்கே பூச்சியோ துருவோ அழிப்பதில்லை; திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை."**

**மத். 6:20**

மலைப்பிரசங்கம் என்பது பழைய ஏற்பாடு மற்றும் தால்முட் போன்ற மறை நூல்களில் சொல்லப்பட்ட பாவத்தையும், இறையாட்சியையும் குறித்த சட்டதிட்டத்தின் தெளிவான விளக்க உரை. அதிலே மத் 6:19-21 வரை அடங்கியுள்ள பகுதியில் செல்வத்தைக் குறித்த தெளிவுரையை மக்களுக்கு இயேசுநாதர் எடுத்துரைப்பதைக் காண முடிகிறது.

மத். 6:19-24 வரை அடங்கியுள்ள திருமறை வசனங்களில் இயேசுநாதர் இருவித முரண்பாடு உடைய சிலவற்றை குறித்து சொல்வதை நாம் படிக்க முடியும். இரண்டு வித செல்வங்கள் (மண்ணுலகில் சேமிக்கும் செல்வம். விண்ணுலகில் சேமிக்கும் செல்வம்), இரண்டு வித காலங்கள் (நிகழ்கால வாழ்வு - எதிர்கால வாழ்வு), இரண்டு வித கண்கள் (தெளிவான கண்கள் - கெட்டுப்போன இருளடைந்த கண்கள்), இரண்டு வித பணிவிடைகள் (கடவுளுக்குரிய பணிவிடை - செல்வத்துக்குரிய பணிவிடை) என்று பிரித்துக் கூறி அதன் வழியாக எது உண்மையானது எதைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதையும் தெளிவுப் படுத்தினார் இயேசுநாதர்.

## *1. மனிதர்கள் விரும்பும் செல்வம்* :

செல்வம் என்பதற்கு பொக்கிஷம், பணக்குவியல், நிதி எனப் பல பெயர்கள் உண்டு. பூமியில் பிறந்த அனைவரின் நோக்கமும், விருப்பமும் பெரும்பாலும் செல்வச் செழிப்புள்ள வாழ்வு வாழ வேண்டும் என்பது தான். அதற்காக எவ்வித தியாகத்தைச் செய்யவும் மனிதர்கள் ஆயத்தமாகிவிட்டார்கள். ஆசையைக் கடந்த பேராசை பலரை தீமையில் விழவும் செய்திருக்கிறது. ஆகவே பேராசைக்கு எதிரான எச்சரிக்கையாக இயேசுநாதர் மண்ணுலகில் சேமிக்கும் செல்வத்தைக் குறித்து கூறினார். மேலும் மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் வாழ்வை இழந்துவிட்டால் அவனுக்கு கிடைக்கும் பயன் என்ன என்று சிந்திக்கத் தூண்டினார்.

தலாய்லாமா என்னும் துறவியிடம் மனித இனத்தில் உங்களை மிகவும் ஆச்சரியப்படுத்திய விஷயம் எது என்று கேட்டபோது அவர் சொன்னார், மனிதன் தான். ஏனென்றால் அவன் செல்வத்தைச் சேர்க்க ஆரோக்கியத்தைத் தியாகம் செய்கிறான். பின்பு இழந்த ஆரோக்கியத்தை மீட்டெடுக்க சம்பாதித்த பணத்தை விரயம் செய்கிறான். இறுதிவரை வாழாமலே மரித்துப் போகிறான் என்றார்.

உலகப் பொருட்களும், பணமும், ஆடம்பர வாழ்வும் தான் உண்மையான செல்வம் என்று தவறான கண்ணோட்டத்தை மனிதர்கள் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய கல்வியின் நோக்கம் கூட உண்மையான மனிதர்களை உருவாக்குவதில் இல்லை. பணத்தைச் சேர்ப்பது ஒன்றையே குறிக்கோளாய்க் கொண்டிருப்பதை நாம் காண முடிகிறது.

பண்டைய காலம் தொட்டே கிழக்கத்திய நாடுகளில் தங்கம், விலை உயர்ந்த கற்கள், நவதானியங்கள், திராட்சைப் பழரசம், எண்ணெய், விலை உயர்ந்த துணி வகைகள் போன்றவற்றை சேர்த்து வைப்பதுண்டு. பண்டமாற்று முறைவழியாக அவற்றை சேகரித்துக் கொண்டனர். இவற்றையெல்லாம் புரிந்து கொண்ட இயேசுநாதர் ஒருநாள் இப்படிப்பட்ட செல்வங்கள் எல்லாம் அழியக்கூடியது, நிலையில்லாதது என்பதை மக்களுக்கு உணர்த்தினார்.

இன்றைக்கு, பணபரிவர்த்தனைத் திட்டம் (Denomination) அமலுக்கு வந்த போது பெரும் செல்வந்தர்கள் செய்த காரியத்தை நாமும் பார்த்தோம், ஊடகங்களில் கண்ணாரக் கண்டோம். ஒளித்து, புதைத்து, பதுக்கி வைத்திருந்த செல்வங்கள் பல வெளியே வந்தன. அனேகர் மூட்டைகளில் கட்டி வெளியே வீசியும், தீயினால் சுட்டெரித்தும், சம்பாதித்த செல்வத்தை, கணக்கில் காட்டாதபடியினால், பணமதிப்பிழப்பின்போது நடந்ததை நம் தலைமுறையே அனுபவித்ததை மறக்க இயலாது.

எத்தனை சம்பாதித்தாலும் திருப்தி அடையாத நெஞ்சங்கள் இன்று மலிந்து விட்டது. ஆகவே பவுலடியார் இளம் ஊழியக்காரராகிய தீமோத்தேயுவுக்கு 1தீமொ. 6:10; 6:17 போன்ற பகுதிகளில் அறிவுரை வழங்குகிறார்.

## *2. கடவுள் விரும்பும் செல்வம்* :

மத். 6:20-ம் வசனத்தில், விண்ணுலகில் உங்கள் செல்வத்தைச் சேமித்து வையுங்கள் என்று ஆலோசனை கூறுகிறார்.

அப்படி விண்ணுலகில் சேமிக்கும் செல்வத்தைத் தான் கடவுள் விரும்புகிறார். ஏன் விண்ணுலகில் சேமிக்கக் கூறினார் என்றால், அது மிகவும் பாதுகாப்பானது, சேதப்படுத்த முடியாதது, அழிவில்லாதது.

விண்ணுலகில் சேமிக்கும் செல்வம் தான் என்ன என்பதை பவுலடியார் 1தீமொத். 6:18,19-ல் சொல்லுகிறார். நல்லதைச் செய்து, நற்செயல்கள் என்னும் செல்வத்தைச் சேர்க்க வேண்டும். அதோடு தங்களுக்குள்ளதைத் தாராள மனத்தோடு பகிர்ந்து அளிக்க வேண்டும். அது தான் உண்மையான கடவுள் விரும்பும் செல்வம். வருங்காலத்திற்கென்று அடித்தளமாக இச்செல்வத்தைச் சேர்ப்பதால் உண்மையான எதிர்கால வாழ்வு கிடைக்கிறது.

ஆண்டவரின் பார்வையில் பகிர்ந்து அளிப்பது நற்செயல் அதுவே உண்மையான செல்வம். ஆனால் மனிதனின் பார்வையில் யாரை அழித்தேனும் சேர்த்து குவிப்பதே செல்வம்.

திருப்பாடகர் தாவீதுக்கு ஆண்டவரே அரும்பெரும் செல்வமாயிருந்தார் (தி.பா. 16:2). பவுலடியாரைப் பொறுத்தமட்டில் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே ஒப்பற்ற செல்வமாயிருந்தது (பிலி. 3:8). மோசே என்ற தலைவரோ எகிப்தின் செல்வங்களை விட மேசியாவின் பொருட்டு இகழ்ச்சியுறுவதே மேலான செல்வம் எனக் கருதினார்.

இப்படிப்பட்ட தூயவர்கள் எல்லாம், தங்கள் இன்ப நலனை விரும்பாமல் கடவுள் விரும்பியதைச் செல்வமாக ஏற்றுக் கொண்டார்கள்.

ஒரு நிமிடம் நம்மை நாமே சிந்தித்து பார்ப்போம். வெறும் மண்ணுக்காக மாணிக்கமாகிய இயேசுவை விட்டுவிட மாட்டேனே என்று உதட்டளவில் பாடிக் கொண்டு உன்னதரை உதாசீனப்படுத்துகிற செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.

இயேசுநாதர் கூறிய உண்மையான செல்வத்தின் பொருளைப் புரிந்து கொண்டு அதையே சேமிக்க உறுதி கொள்வோம்.

திரு. J. **டாபின்**

21-03-2018

தவக்கால ஆறாம் புதன்

# உண்மையான காணிக்கை

லூக். 21:1-4

**“இந்த ஏழைப்பெண் எல்லாரையும்விட மிகுதியான காணிக்கை போட்டிருக்கிறார் என உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன்.”** லூக். 21:3

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க அதிபராகுமுன் ஒரு முறை உணவு உண்ண விடுதிக்குச் சென்றிருந்தார். உணவு உண்ட பின் உணவுக்குரிய பணத்தை சர்வரிடம் கொடுத்து, உன் அன்பான சேவைக்கு நன்றி என்று சொன்னார். அந்தப் பணியாளர் உள்ளத்தில் பெருமகிழ்ச்சியோடு “ஐயா! நான் இந்த உணவு விடுதியில் 15 ஆண்டுகளாகப் பணிபுரிகிறேன். இங்குவரும் ஒவ்வொரு வரையும் அன்போடு உபசரித்துள்ளேன். ஆனால் நீங்கள் மட்டும்தான் அன்பாய்ப் பேசி எனக்கு நன்றி சொன்னீர்கள். உங்களை ஒருபோதும் நான் மறக்கமாட்டேன்” என்றார். மறு ஆண்டே ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார். நன்றி உள்ளவர்கள் அனைவராலும் போற்றப்படுவார்கள்.

திருவள்ளுவர் கூறும்போது எத்தகைய குற்றங்களுக்கும் மன்னிப்பு உண்டு. ஆனால் செய்நன்றி மறந்தவர்களுக்கு மன்னிப்பே கிடையாது என்கிறார். கிறிஸ்தவத்தின் அடிப்படைக் குணமே கொடுத்தலும் நன்றி சொல்லுதலும் ஆகும். இறைவன் நம்முடைய வாழ்வில் செய்த நன்மைகளுக்கு நன்றிசொல்லும் பொருட்டு தந்த ஆசீர்வாதத்தில் ஒரு பகுதியை இறைவனுக்குக் கொடுப்பது காணிக்கை ஆகும். இன்று அன்பு, பாசம், ஆற்றல், மகிழ்ச்சி, மன்னிப்பு, ஆசி, செல்வம், என நம்மிடம் உள்ள அனைத்தையும் கொடுக்க வேண்டும். ஆனால் இன்று எதை வாங்கலாம், எவற்றைச் சேர்க்கலாம் எனத் தன்னலமிக்கோர் பெருகிக் கொண்டிருக்கும் நுகர்வுகாலம் இது. உழைக்காமலே பிறரைச் சுரண்டி உண்ணுவது எப்படி? என்று நம் சிந்தனைகள் சிதறடிக்கப்படும் காலம் இந்தக் காலம். ஆனால் நாம் ஏழை எளிய மக்களுக்கும், ஆதரவற்றவர்க்கும், தேவையிலுள்ளவர்களுக்கும், கொடுக்க வேண்டும்.

இங்கு ஏழைக் கைம்பெண் ஆலயம் சென்று இரண்டு காசு போடுகிறதை இயேசு கிறிஸ்து காண்கிறார். ஏழைக் கைம்பெண் எந்த நிலையில் காணிக்கை போடுகிறார் என்பதைத் தொடர்ந்து தியானிப்போம்.

## *1. வறுமையில் படைக்கப்பட்ட காணிக்கை :* (லூக். 21 : 2)

டோமினிக் லாப்பியர் (Dominic Lapierre) என்பவரது புகழ்பெற்ற புத்தகம் "The City of Joy". கொல்கொத்தா நகரை மையமாக வைத்து எழுதப்பட்ட இந்தப் புத்தகம், ஒரு ரிக்ஷா தொழிலாளியின் வாழ்வை விவரிக்கிறது. இந்த ரிக்ஷா தொழிலாளியின் வருமானம் குறைவு. ஆனால் அவரால் பராமரிக்கப்படவேண்டிய குடும்பமோ பெரிது. தன் குடும்பத்தை காப்பாற்ற அடிக்கடி தன் இரத்தத்தை விற்கின்றார். இறுதியில் உடலில் தேவையான அளவு இரத்தம் இல்லாத காரணமாக நோய்வாய்ப் படுகின்றார். சாவதற்கு முன்பாக எலும்பு வாங்கும் வியாபாரிகளை அணுகி தன்னுடைய சாவிற்குப்பின் தன் எலும்புகளை எடுத்துக்கொள்ளும்படி சொல்லி, அதற்கான பணத்தை வாங்கி தன் குடும்பத்தைக் காப்பாற்றுகிறார். ஆலயத்தில் அனேகர் வந்து தங்களின் காணிக்கைகளை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அநேக ஐசுவரியவான்கள் எந்த உணர்வும் இல்லாமல், பாதிப்பும் இல்லாமல், பதட்டம் இல்லாமல், பயமில்லாமல் காணிக்கைகளைப் போட்டனர். அந்தக் கூட்டத்தில் ஒருவராலும் கவனிக்கப்படாத நிலையில் இருந்த ஏழைக் கைம்பெண் இரண்டு காசுகளைப் போடுகின்றார்.

காணிக்கைப் பெட்டியின் அருகே உட்கார்ந்திருந்த எல்லாவற்றையும் அறிந்த இயேசு இந்த ஏழைப் பெண்ணின் காணிக்கை பெரிது எனப் புகழ்ந்தார். இறைவனின் பார்வை எப்போதும் மனிதக் கோணத்திலிருந்து மாறுபட்டது, வேறுபட்டது. பரிபூரணத்திலிருந்து கொடுப்பதை விட ஒன்றுமில்லாத நிலையிலும் வறுமையிலும், இறைவனை மறவாமல் நினைவு கூர்ந்து அவருக்குச் செலுத்தும் காணிக்கைகளை எப்போதுமே மேலானதாகக் கருதுகிறார். இந்த ஏழைக் கைம்பெண் "அடுத்த வேளையின் தேவையை ஆண்டவர் பார்த்துக்கொள்வார் என்று முழு நம்பிக்கையோடு, அந்தந்த நாளுக்கு அதனதன் பாடு போதும்" (மத். 6:34) என்ற இயேசுவின் வார்த்தையின்படி தன்னுடைய ஏழ்மையிலும் தனக்காக வைத்திருந்த இரண்டு காசுகளையும் காணிக்கையாகப் போட்டார்.

மாசிதோனிய நாட்டுத் திருச்சபையினர் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும் மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். தங்களின் திராணிக்குத் தக்கதாகவும், திராணிக்கு மிஞ்சியும் கொடுத்தார்கள் (2கொரி. 8:1-3). அவர்கள் ஒன்றுமில்லாத தரித்திர நிலையிலும், வறுமையிலும் உதாரத்துவமாய்க் கொடுக்கும் போது அனைத்து நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் சுதந்தரித்துக் கொண்டார்கள். இன்று நாம் எப்படிக் கொடுக்கிறோம் என்பதை ஒரு முறை சிந்தித்துப் பார்ப்போம்.

### 2. வளமையில் படைக்கப்பட்ட காணிக்கை : (லூக். 21 : 3)

ஆலயத்தில் போதகர் ஒரு முறை கடவுளுக்கு எப்படி கொடுக்கவேண்டும் என்பதைக் குறித்து மிகவும் ஆழமாக, காரசாரமாகப் போதித்துக் கொண்டிருந்தார். அந்தப் போதனையை முழுமையாகக் கேட்கமுடியாத செல்வந்தர் ஒருவர் மனம் நொந்தவராய்ப் பாதியில் எழுந்து தன்வீட்டிற்குச் சென்றார். இரவில் அவர் தூங்கும்போது அவர் கனவில் ஒரு தேவதூதர் தோன்றி "போதகர் இன்று காலை என்ன போதித்தார்? " என வினவினார் அதற்கு அவர் "எப்போதும் போதகர் இதைக்கொடுக்க வேண்டும் அதைக் கொடுக்கவேண்டும் என்று பிரசங்கிக்கின்றார். எனக்கு இந்தப் போதனை பிடிக்கவில்லை" என்றார். உடனே தேவதூதர் அவரைப் பார்த்து "உங்களுக்கு ஏன் சிரமம்? கொடுப்பதை நீங்கள் நிறுத்திக் கொள்ளுங்கள்" என்றார். உடனே செல்வந்தர் மிக்க மகிழ்ச்சியோடு தூதரை நோக்கி, "நான் எப்போது கொடுப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்" என்று கேட்டார். அதற்கு அந்தத் தூதர் "கடவுள் உனக்குக் கொடுப்பதை எப்போது நிறுத்தி விடுவாரோ அப்போது நீயும் கொடுப்பதை நிறுத்திவிடு" என்றார். அதைக்கேட்ட பணக்காரர் மனம்மாறி தாராளமாய் கடவுளுக்குக் கொடுக்க ஆரம்பித்தார்.

செல்வர் தங்கள் ஆஸ்தியில் இருந்து, செழிப்பில் இருந்து, தங்களின் வருமானத்தில் இருந்து காணிக்கை போட்டார்கள். அவர்கள் மிகுதியாய்ப் போட்டார்கள். அவர்கள் தங்கள் வளமையில் இருந்து போட்டதினால் அந்தக் காணிக்கை மெச்சிக் கொள்ளப்படவில்லை.

பாடல் வரி இவ்வாறு சொல்லுகிறது

"இருப்பவர் கொடுப்பதால் இன்பம் என்ன - கையில்

இருப்பதைக் கொடுப்பது இன்பம் என்றாய்.

ஏழைக் கைம்பெண் தன் கையில் இருந்ததைக் கொடுத்தார். அதனால் அவர் கொடுத்ததை இயேசு புகழ்ந்து பேசினார்.

### 3. வாழ்வையே ஒப்படைப்பதற்கு அடையாளமான காணிக்கை : (லூக். 21 : 4).

கொடுப்பதை வேண்டா வெறுப்பாக அல்ல மகிழ்ச்சியாய்க் கொடுக்க வேண்டும். "கோணிக் கோடி கொடுப்பதிலும் கோணாமல் காணி கொடுப்பதே மேல்" என்பது தமிழ்ப் பழமொழி.

மனம் ஒப்பாது கொடுக்கும் ஈகை அதனைப் பெறுவோருக்கு எரிச்சலையே கொடுக்கும் மகிழ்ச்சியோடு கொடுக்கவேண்டுமென்பது தொடக்ககால கிறிஸ்தவர்கள் கற்றுத்தந்த பாடம்.

"நமக்கு தேவையில்லாததைப் பிறருக்குக் கொடுத்தால் அது பகிர்வு அல்ல" என்கிறார் அன்னைதெரெசா. நாம் கொடுப்பது நம்மைப் பாதித்தால் அதுவே உண்மையான ஈகை.

ஒரு தாய்க்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. முதல் குழந்தை அரசாங்க அலுவலர். தாய்க்கு அழகிய பட்டுச்சேலை வாங்கி கொடுத்தான். அவனுக்கு அடுத்தவன் ஒரு பள்ளிமாணவன். தன் தாய்க்குப் பிரியமான அல்வாவை வாங்கி கொடுத்தான். ஆனால் கடைசி குழந்தை வயது ஐந்து (பெண்குழந்தை) யாரும் கொடுக்காத ஒன்றை தன் தாய்க்கு கொடுக்க விரும்பினாள். சிந்தித்தாள் ஓடிபோய் தன் தாயின் மடியில் உட்கார்ந்து கொண்டு அம்மா என்னையே நான் உனக்குத் தருகிறேன் என்றாள். தாய்க்கோ அளவிடமுடியாத மகிழ்ச்சி; உன்னையே நீ எனக்குக் கொடுத்தாய், என்னையே உனக்குநான் தருகிறேன் என்று தாய் மகளுக்கு அன்பு முத்தம் கொடுத்து அரவணைத்தாள். இன்று உன்னிடம் இருப்பதை கொடுக்க முற்படுவதைவிட உன்னையே நீ எனக்குக் கொடுக்க முற்படு. இந்த உலகில் எனக்கு மிகவும் பிரியமான பொருள் நீ தான் என்று ஆண்டவர் சொல்கிறார்.

இறைவன் உரைக்கிறார்
உன்னையே எனக்கு நீ கொடுத்துவிட்டால் - உன்னையே நீ
இழக்க வேண்டுமென்று பயப்படுகிறாயா?

என்னிடம் தன்னையே கொடுத்தால் யாரும் இதுவரை அழிவிற்கு உள்ளானதில்லை. சகேயு தன்னையே எனக்கு தந்தான் தந்தவனுக்கு நான் தந்தது என்ன? புதுவாழ்வு. மகதலேனாள் - தன்னையே எனக்கு தந்தாளே தந்தவருக்கு நான் தந்தது என்ன? புது வசந்தம்.

ஏழைக் கைம்பெண் தன் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே கொடுத்தாள். தன் வாழ்வையே ஒப்படைப்தற்கு அடையாளமாக எல்லாவற்றையும் கொடுத்தாள்.

ஏழைக் கைம்பெண் தன்னிடம் இருந்ததை கொடுத்ததினால் போற்றப்பட்டார். இயேசு கிறிஸ்து தம்மையே ஒப்படைத்தார்.

பணத்தால் வசதியை வாங்கலாம்; ஆனால் வாழ்வை வாங்க முடியாது. பணத்தால் மனிதர்களை வாங்கலாம்; ஆனால் மகிழ்ச்சியை வாங்க முடியாது. பணத்தால் படுக்கையை வாங்கலாம்; ஆனால் தூக்கத்தை வாங்க முடியாது. பணத்தால் மதிப்பை பெறலாம்; ஆனால் மனிதத்தைப் பெற முடியாது. எனவே, உலகில் நமக்கு முதன்மையானவைகளைக் கடவுளுக்குக் கொடுத்து முன்மாதிரியோடு வாழ்வோம்.

திரு. M. **காட்வின் ஜெபசிங்**

16-02-2018

**தவக்கால முதலாம் வெள்ளி**

# ஏழையரின் உள்ளம்

மத். 5:1-3

**"ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது."** மத் 5:3

"மலை" நான்கு சிறப்பான குணாதிசயங்களைக் கொண்டது. (i) உயர்ந்து நிற்பது (ii) உறுதியுடையது (iii) உயிர்கள் பல வாழும் இடம் (iv) பல மலைகளிலிருந்து ஊற்றுகள் தண்ணீராகப் புறப்பட்டு ஆறாக நிலங்களுக்கிடையில் ஓடி நிலங்களை வளப்படுத்துகின்றன. இந்த நான்கு சிறப்பான குணாதிசயங்களுக்கும் இயேசுநாதரின் மலைப்பொழிவிற்கும் சில தொடர்புகள் உள்ளன. (i) மலை எப்படி உயர்ந்து நிற்கின்றதோ அதைப்போன்று ஒரு மனிதன் வாழ்வில் உயர்ந்து நிற்பதற்கு இந்த மலைப்பொழிவு உதவுகின்றது. (ii) எப்படி மலை உறுதியாக இருக்கின்றதோ அதைப்போல இந்த மலைப்பொழிவு வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளும் மனிதரால் வாழ்வில் எச்சூழலிலும் உறுதியாக நிற்க இயலும். (iii) எப்படி மலைகளில் பல உயிரினங்கள் வாழ்கின்றதோ அதைப்போல மனிதர்கள் வாழ்வுக்கு இந்த மலைப்பொழிவு அடிப்படையாக உள்ளது. (iv) எப்படி மலையில் உள்ள ஊற்றுகள் ஆறாக மாறி நிலங்களை வளப்படுத்துகின்றதோ அதுபோல மலைப்பொழிவில் இயேசுவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளுகின்ற மனிதரிடமிருந்து நல்ல குணங்கள் புறப்பட்டு அவர் இந்த உலகிற்கு வளம் சேர்ப்பவராக மாறமுடியும். ஆகவே மலைப்பொழிவு என்பது மனிதர்களின் வாழ்விற்கு இன்றியமையாத தேவையாகும். யூதக்குருக்கள் போதிக்கும் போது நடந்துகொண்டே போதிப்பார்கள். முக்கியமான செய்தி என்றால் அமர்ந்து போதிப்பார்கள். மலையின் மீது ஏறி அமர்ந்து போதிப்பது என்பது மேலான ஓர் இடத்தில் அமர்ந்து சிறப்பான அல்லது முக்கியமான வார்த்தைகளை உச்சரிப்பது என்பது பொருள். சாதாரணமாக ஒரு வழக்கை விசாரிக்கும் நீதிபதி, தீர்ப்பளிக்கும் போது ஓர் உயர்வான இடத்திலுள்ள இருக்கையில் அமர்ந்து தீர்ப்பை எழுதுவார். ஏனென்றால் அது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அதைப்போன்று இயேசுநாதர் உயர்ந்த மலைப்பகுதியிலிருந்து போதித்த மலைப்பொழிவிற்கு அதிக முக்கியத்துவம் உண்டு.

மலைப்பொழிவில் இயேசுநாதர் கூறிய அனைத்து வார்த்தைகளும் முக்கியமானவை. அவற்றுள் மிக முக்கியமாக இயேசு நாதர் முதலாவது கூறியது

"ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்
ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது"

இந்த வாக்கியம் இரண்டு செய்தியை வெளிப்படுத்துகின்றது. ஏழையரின் உள்ளத்தார் யார் என்றால் அவர்கள் (a) கடவுளின் உதவியை நம்பி வாழ்பவர். (b) விண்ணரசைக் கட்டுபவர். இந்த இரண்டு குணங்களும் ஏழையோரின் உள்ளத்தோருக்கு எவ்வாறு அமைகின்றது என்று சிந்திப்போம்.

## *1. ஏழையரின் உள்ளத்தோர் கடவுளின் உதவியை மட்டுமே நம்பி வாழ்வார் :*

ஏழையர் அல்லது எளியோர் Poor என்ற வார்த்தைக்குப் பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை "ப்டோக்கோஸ்" (Ptochos) என்பதாகும். இதன் அர்த்தம் "absolute and object poverty" அதாவது மிக மிக வறுமையில் வாழ்வோர் என்பதாகும். மேலும் இந்த வார்த்தையின் மூல வார்த்தையாகிய "Ptossein" (ப்டோஸின்) என்பதன் அர்த்தம் என்னவெனில் "to crouch" அல்லது "to cover" என்பதாகும். அதாவது முழங்காலில் நின்று யாசிப்பது அல்லது தன்னை மூடிக்கொள்வதற்காக முயற்சிப்பது என்பதாகும். ஆக இந்த கிரேக்க வார்த்தை யாரைக் குறிப்பிடுகின்றது என்றால் ஒன்றுமே தனக்கென்று இல்லாத வறியவரைக் குறிக்கின்றது. எனவே இந்த வரியை நாம் இவ்வாறு புரிந்து கொள்ளலாம்:

மிகவும் வறுமையில் இருப்போர் பேறுபெற்றோர்
மிகுந்த தேவையில் இருப்போர் பேறுபெற்றோர்
"Blessed are those who are objectly and completely poverty - stricken.
Blessed are those who are absolutely destitute."

மேலும் இந்த வார்த்தைகளை இயேசு அரமேய மொழியில் கூறினார். எபிரேயர்கள் எளியோர் Poor என்கிற வார்த்தையைப் பயன்படுத்துவதில் தனிச் சிறப்புடையவர்கள். எளியோர் என்பதற்கு 'அனி' (ani) அல்லது "எபியோன்" (ebion) என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினர். இந்த வார்த்தைகள் நான்கு அர்த்தங்களைத் தருகின்றன.

(i) எளியோர் (Poor)

(ii) எளியோர் : ஏனென்றால் எந்தப் பலமும், எந்த உதவியும், எந்தச் செல்வாங்கும் இல்லாதோர் (Poor : Therefore having no influence, or power, or help, or prestige).

(iii) எளியோர் : ஏனென்றால் எந்தத் தாக்கமும் ஏற்படுத்த முடியாதவர், ஆகவே ஒடுக்கப்பட்டோர் அல்லது ஓரங்கட்டப்பட்டோர் (Poor, because having no influence, therefore downtrodden and oppressed)

(iv) எளியோர் : ஏனென்றால் அவர்கள் இந்தப் புவி சார்ந்த வளங்கள் ஏதும் இல்லாதோர், எனவே தங்கள் முழுநம்பிக்கையையும் கடவுள் மீது வைப்போர் (Poor, because they have no earthly resources whatever, put their whole trust in God).

எனவே இந்த எபிரேய வார்த்தை எத்தகையோரைக் குறிப்பிடுகின்றது என்றால், உதவியற்றவரையும், தாழ்மையுடையோரையும், அதேவேளையில் தங்கள் முழு நம்பிக்கையையும் கடவுள் மீது வைத்து கடவுளின் உதவியை எதிர்பார்த்து இருப்போரையும் குறிக்கின்றது. எனவே இந்தக் கிரேக்க மற்றும் எபிரேய வார்த்தைகளிலிருந்து இதை நாம் இவ்வாறு புரிந்து கொள்ளலாம். "ஏழையரின் உள்ளத்தோர் பேறு பெற்றோர்" என்பது தங்கள் உதவியற்ற நிலையை உணர்ந்து கடவுள் மீது தங்கள் முழு நம்பிக்கையையும் வைப்போரைக் குறிக்கின்றது (Blessed are those who have realized their own utter helplessness and who have put their whole trust in God).

இப்படி, தங்கள் உதவியற்ற நிலையை உணர்கின்றவர்களிடம் இரண்டு குணங்கள் காணப்படும். ஒன்று, பொருள் சாராது விலகி இருத்தல் (detached from material things) ஏனென்றால் இவ்வுலகப் பொருட்கள் முழு மகிழ்ச்சியைத் தருவதில்லை என்று அவர்கள் நம்புகின்றனர். இரண்டாவதாக, அவர்கள் கடவுளோடு சேர்ந்து இருப்பவர்கள்(attached to God) ஏனென்றால் அவர்கள் கடவுளின் உதவியின்றி ஏதும் செய்ய இயலாது என்பதை உணர்ந்தவர்கள். பொருட்கள் என்பது ஒன்றுமில்லை என்றும், கடவுள்தான் "எல்லாம்" என்றும் நம்புவோரே ஏழையரின் உள்ளத்தோர். (Things mean nothing and God means everything).

இயேசுநாதர் மனு மைந்தராக இவ்வுலகில் வந்தார். அவருக்கு அனைத்து ஆற்றலும் கொடுக்கப்பட்டது. ஆனாலும் அவர் பல அற்புதங்களைச் செய்வதற்கு முன் கடவுளை நோக்கி மன்றாடுவதை திருமறையில் காணலாம். அதற்கு காரணம் அவரிடம் காணப்பட்ட எளிய உள்ளம். சிலுவைப் பாடுகளின் போதும் இயேசு கெத்சமனே தோட்டத்தில் கடவுளின் உதவிக்காக மன்றாடுவதைக் காண்கிறோம். பிலி. 2:5-7-ல் கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்! கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும்

நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார், என்று பவுல் கூறுகின்றார். இங்கே இயேசுநாதரிடம் காணப்பட்ட எளிய உள்ளத்தை நாம் கண்டு கொள்ளலாம்.

## 2. ஏழையரின் உள்ளத்தோர் விண்ணரசைக் கட்டுவார் :

இந்த வசனத்தின் இரண்டாவது பகுதி “விண்ணரசு அவர்களுக்கு உரியது” என்று இயேசுநாதர் கூறுவது ஒரு எதிர்கால நம்பிக்கையைக் கொடுப்பதாக இருக்கின்றது. ஏழையரின் உள்ளத்தோர் கடவுளின் அரசில் பங்குடையவர்களாக இருப்பார்கள் என்ற உறுதியை இயேசுநாதர் கூறுகின்றார். இந்த வார்த்தையின் ஆழமான அர்த்தம் என்னவெனில் ஏழையரின் உள்ளத்தோர் கடவுளின் அரசைப் பெறுபவர், அடைபவர், சுதந்தரிப்பவர் மட்டுமல்ல கடவுளின் அரசைக் கட்டுவோர் என்பதாகும். (It means not only inheriting but also extending the kingdom of God). இதுதான் இங்கே இயேசுவின் எதிர்பார்ப்பு. இறையரசு அவர்களுக்கு உரியது என்பது இறையரசிற்குள் நுழைவதற்கான நுழைவுச் சீட்டு (Ticket) மட்டுமல்ல மாறாக அது இறையரசைக் கட்டுவதற்கு ஏழையரின் உள்ளத்தோருக்கு இயேசு கொடுக்கும் ஒரு “Appointment Order” என்று தான் புரிந்துகொள்ள வேண்டும். ஒருவர் ஒரு வீட்டிற்குச் சொந்தக்காரராகிறார் என்றால் வீட்டிற்குள் சென்று உட்காருவது மட்டும் அவரது வேலை அல்ல மாறாக இந்த வீட்டை அழகுப்படுத்துவது, கட்டிக்காப்பது, குடும்பத்தைப் பேணுவது, குடும்பத்தை வளர்ப்பது போன்று பல பொறுப்புகள் இருக்கின்றன. ஒருவர் அரசியல் தலைவராக தேர்வு பெற்றுவிட்டால் அவருக்குக் கிடைத்த நாற்காலியில் உட்காருவது மட்டும் அவரது வேலையல்ல மாறாக, பணி செய்வது தான் அவரது வேலை. இயேசுநாதர் அதைத்தான் செய்தார். அவருக்கு இறைமகன் என்ற பெரிய வாய்ப்பைப் பெற்றதோடு நின்றுவிடவில்லை. கடவுளின் ராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காக அவர் பேசினார், போதித்தார், வாழ்ந்து காட்டினார், பாடுகளை ஏற்றார். இறுதிவரை போராடினார் அதற்குக் காரணம் அவரிடம் காணப்பட்ட எளிய உள்ளமே. இயேசு சிலுவையிலிருந்து மொழிந்த ஏழாம் வார்த்தை “பிதாவே உம் கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்” என்பதாகும் இயேசுநாதர் தான் செய்யாதது எதையும் சொல்லவில்லை. எளிய உள்ளம் உடையவர்கள் பேறுபெற்றவர்கள் என்று சொல்வதற்கு காரணம் இயேசு எளிய உள்ளத்தவராகக் காணப்பட்டார். எப்படியெனில் எளிய உள்ளம் உள்ளவர்கள் மட்டுமே சிலுவை போன்ற

பெரிய பாடுகளை ஏற்க முடியும். ஆக அப்படிப்பட்ட எளிய உள்ளம் உடையவராக இயேசு இறையரசை நிறுவ பாடுகளை ஏற்றார்.

மத்தேயு இந்த வசனத்தில் ஏழையரின் உள்ளத்தோர் (Poor in spirit) என்று கூறுகின்றார். அனால் லூக்கா நற்செய்தியாளர் ஏழைகள் (Poor) என்றே கூறுகின்றார். இந்த இரண்டிற்கும் தொடர்பு இருக்கின்றது. ஏழைகளாக இருப்பவர்கள் இயல்பாகவே எளிய உள்ளம் உடையவர்களாக இருக்கின்றனர். அவர்கள் அன்றாட வாழ்விற்கு படும் கஷ்டங்கள், வேதனைகள், அவமானங்கள், அவர்களின் கடின உழைப்பு போன்றவை அவர்களது சகிப்புத்தன்மையைக் (Endurance) காட்டுகின்றது. அதைப்போல இறையரசைக் கட்டுவோருக்கும் எளிய உள்ளம் தேவை. அத்தகையோரால் இவ்வுலகில் வரும் பல்வேறு எதிர்வினைகளைச் சகித்து இறைவனின் அரசைக் கட்ட முடியும். எனவே “இறையரசு அவர்களுக்கு உரியது” என்று இயேசு கூறுவது எளிய உள்ளத்தோருக்கு கொடுக்கும் பொறுப்பினைத் தெளிவுபடுத்துகின்றது.

எனவே இந்தத் தவக்காலத்தில் எளிய உள்ளம் கொண்டவராக கடவுளின் உதவியை நம்பி வாழ்வோம். இறையரசுக்குச் சுதந்திரராக மட்டுமல்ல இறையரசை இவ்வுலகில் கட்டுகிறவர்களாக மாறுவோம்.

திரு. Y. **சுஜின்ராஜ்**

23-02-2018

**தவக்கால இரண்டாம் வெள்ளி**

# துயருறுதல்

**“துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்”**

**மத். 5:4**

C.S. லூயிஸ் என்பவர் இவ்வாறு கூறுகின்றார். நமது மகிழ்ச்சியில் கடவுள் நம் காதோரம் கிசுகிசுக்கிறார், நமது கஷ்டங்களில் நம்மோடு பேசுகிறார், நமது வலியில் அவர் நம்மோடு சத்தமிடுகிறார். (God wisphers to us in our joys, speaks to us in our difficulties, but shouts to us in our pain) ஆம், கடவுள் எப்போதும் மனிதரின் துயரங்களுக்காக வேதனையுறுகின்றார். அதே வேளையில் மனிதரின் துயரத்திற்கான காரணத்தை அறிந்து கடவுளண்டை வரும் யாவரையும் அவர் ஆறுதல்படுத்துகின்றார். இயேசுநாதர் “துயருறுவோர் பேறுபெற்றோர்” என்கிறார். அதற்கான காரணம் என்ன, துயரத்தின் நிலை என்ன, துயரத்தின் முடிவு என்ன, துயரத்தின் பலன் என்ன என்பதனைத் திருமறை வெளிச்சத்தில் தியானிப்போம்.

## *1. துயரங்களுக்கான காரணம் பாவம்*
**(SIN - THE REASON FOR MOURNING) :**

(Because of disobedience, God the Father allowed pain entering into human being but because of love he allowed his Son Jesus Christ to bear the pain on the cross) கீழ்ப்படியாமையினால் மனிதருக்குள் வேதனை நுழைய கடவுள் அனுமதித்தார், ஆனால் அன்பின் நிமித்தமாக தம்முடைய மகன் இயேசுகிறிஸ்து வேதனையைச் சிலுவையில் சுமக்க அனுமதித்தார். ஆம், ஆதாம்-ஏவாள் முதல் இன்றுவரை பாவம் உலகில் இருந்து வருகின்றது. அன்று முதல் பாவத்தினால் ஏற்பட்ட துயரங்கள், வேதனைகள் போன்றவற்றை நாம் திருமறை வரலாற்றில் காண இயலும். குறிப்பாக, காயீனைப் பெற்றெடுக்கும் வரை ஆதாமும் ஏவாளும் எந்த வேதனைகளையும் அனுபவிக்கவில்லை. மகிழ்வாகவே இருந்தனர். அந்த மகிழ்வைத்தான் கடவுள் எல்லோருக்கும் தர விரும்பினார். ஆனால் கீழ்ப்படியாமையினால் வேதனையோடு பிள்ளை பெறவேண்டும் என்ற சாபத்திற்கு உள்ளாகின்றனர். இன்றுவரைக்கும் பெண்கள் துயரத்தோடு குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றனர். இதற்கு காரணம் அன்றைக்கு ஆதிப் பெற்றோர் செய்த பாவம்.

பாவத்தில் தனிநபர் செய்யும் பாவமும், குழுவாக இணைந்து செய்யும் பாவமும் உள்ளடங்கும். இளைய மைந்தன் தந்தையைவிட்டுச்

செல்லும்போது பல துயரங்களைச் சந்திக்கின்றார். மற்றொரு உவமையில் ஆயக்காரன் "பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்கிறான். ஆனால் இருவரும் திருந்தி வந்தபோது இளையமைந்தன் மீண்டும் மகனாகிறான், ஆயக்காரன் நீதிமானாகிறான். இப்படிப்பட்ட மனிதர்களை கடவுள் விரும்புகிறார். தங்களின் பாவங்களுக்காகத் துயருறுகின்றவர்கள் இவர்கள். இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களில் முதல் உபதேசம் "மனந்திரும்புங்கள்" (Repent) என்பதாகும். எனவே இயேசு இங்கு "துயருறுவோர் பேறு பெற்றோர்" என்று சொல்வதன் அர்த்தம் தங்கள் பாவங்களுக்காக அழுது மன்னிப்பு வேண்டுவோர் விடுதலை வாழ்வைப் பெற்று மகிழ்வு பெறுவர் என்பதாகும்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் மிகக் கொடிய துயரங்களை ஏற்றார். அதற்கு காரணம் மனிதர்களின் பாவமே. எனவே இயேசுவின் பாடுகளை நினைவில் கொண்டு நமது பாவங்களுக்காகவே இத்தனை துயரங்களை ஏற்றார் என்று உணர்ந்து மனந்திருந்தினால் மகிழ்ச்சி நம்வாழ்வில் நீடித்து நிற்கும்.

## *2. துயரம் நிரந்தரமன்று*
**(IMPERMANANCE - THE STATE OF MOURNING) :**

லேன்ஸ் ஆம்ஸ்ட்றாங் என்பவர் அமெரிக்காவைச் சார்ந்த புகழ்பெற்ற சைக்கிள் பந்தய வீரர். சைக்கிள் பந்தயங்களில் உலக அளவில் பல பரிசுகளையும், பதக்கங்களையும் பெற்றவர். அவர் இவ்வாறு கூறுகின்றார் "Pain is temporary. It may last a minute, or an hour, or a day, or a year, but eventually it will subside and something else will take its place." வேதனை தற்காலிகமானது. அது ஒரு நிமிடமோ, ஒரு மணிநேரமோ, ஒரு நாளோ அல்லது ஒரு வருடமோ இருக்கும். ஆனால் தொடர்ந்து அது ஒருபக்கமாக விலகி வேறொன்று அதன் இடத்தைப் பிடித்துக் கொள்ளும் என்கிறார். வேதனைகளினால் வரும் துயரங்கள் நிரந்தரமல்ல என்பதைச் சுட்டிக்காட்டவே இயேசு "துயருறுவோர் பேறு பெற்றோர்" என்கிறார்.

யோவா. 16:20-ல் "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள், அப்பொது உலகம் மகிழும். நீங்கள் துயருறுவீர்கள் ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்" என்று இயேசு கூறுகின்றார். எனவே நம்முடைய துயரங்கள் காலப்போக்கில் மாறி மகிழ்ச்சி நம்மை வந்து சேரும் என்று இயேசு கூறுகின்றார். இயேசுநாதர் இந்த உலகில் வாழும்போது துயருறும் தருணங்கள் பல வந்தன. ஆனால் அது நிரந்தரம் இல்லை என்பதனை அவ்வப்போது தம் சீடர்களுக்கு நினைவுபடுத்தினார். அதற்கு உதாரணமாக ஒரு பெண்ணின் பேறுகால வேதனையைக் கூறுகின்றார் (யோவா. 16:21). ஆனால் அந்த

வேதனையும் நிரந்தரமல்ல பிள்ளையைப் பெற்றபின் அந்தத் தாய் ஒரு மனித உயிர் தோன்றியுள்ளது என்னும் மகிழ்வினால் தனது வேதனையை மறந்துவிடுகிறாள் என்றார். நாம் துயருறுவோராக இருந்தாலும் கடவுள் தரும் மகிழ்வை நம்மிடமிருந்து யாராலும் பறிக்க இயலாது. துயரம் நிரந்தரமல்ல என்பதை உணர்ந்ததால் இயேசு சிலுவையை ஏற்றுக் கொண்டார். இங்கு இயேசு "துயருறுவோர் பேறுபெற்றோர்" என்று சொல்வதன் காரணம் துயரத்தின் நிலை நிரந்தரமின்மை என்பதை அறிந்திருந்தார். எனவே நாமும் நம் குடும்ப, சமூக மற்றும் தனிப்பட்ட வாழ்வில் ஏற்படும் துயரங்களை ஏற்றுக்கொண்டு அவற்றைத் தாண்டிச்செல்ல முயலுவோம்.

### 3. துயரங்களின் முடிவு நிலையான வாழ்வு
**(ETERNAL LIFE - THE DESTINATION OF MOURNING) :**

மத். 7:13,14 வசனங்களில் இயேசுநாதர் அழிவுக்குச் செல்லும் வழி மற்றும் வாழ்வுக்குச் செல்லும் வழி குறித்து கூறுகின்றார். அழிவுக்குச் செல்லும் வாயில் அகன்றதாகவும் வழி விரிவானதாகவும் காணப்படுகின்றது என்றும், வாழ்வுக்குச் செல்லும் வாயில் இடுக்கமாகவும் வழி குறுகலாகவும் இருக்கிறது என்று கூறுகின்றார். முதல் வழியில் பலர் செல்வதாகவும், இரண்டாம்வழியில் சிலரே செல்வதாகவும் இயேசு போதிக்கின்றார். இது இன்று மனிதர்கள் துயரத்தின் வழி, நெருக்கத்தின் வழியில் சென்றால் நிலையான வாழ்வைப் பெறுவர் என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது.

கி.மு. 341-270 வரை வாழ்ந்தவர் தத்துவமேதை எப்பிகூரஸ். அவரது முக்கியமான தத்துவம் என்னவெனில் "Eat, drink and be merry, tomorrow we die" என்பதாகும். இந்தத் தத்துவத்தின்படி இயேசுநாதர் வாழ்ந்த காலகட்டத்திலும் பலர் வாழ்ந்துள்ளனர். ஆகவேதான் அவ்வாறு வாழ்வோரை "Fool" என்று இயேசுநாதர் உவமை வழியாகக் கூறுகின்றார்.

பண்டைய காலத்தில் உரோமைப் பேரரசில் விருந்து நடக்குமிடங்களில் பெரிய தளமொன்று இருக்குமாம். விருந்திற்கு வருபவர்கள் நன்றாகச் சாப்பிட்டு, சாப்பிட்டதை வாந்தி எடுத்துவிட்டு மீண்டும் போய்ச் சாப்பிடுவார்களாம். சாப்பிடுவதும், குடிப்பதும், மகிழ்ச்சியாக இருப்பதும் வாழ்வின் இரகசியமாக இருந்துள்ளது. ஆனால் இயேசுநாதர்அந்தக் காலகட்டத்திலும் துயரத்தின் வழியில் தான் பயணித்தார். "மானிட மகனுக்கோ" என்று இயேசுநாதர் கூறுவது அவர் எந்த அளவிற்குக் கஷ்டங்களை ஏற்றுள்ளார் என்பதைக் குறிக்கின்றது. சிலுவையில் இயேசுநாதர் ஏற்ற வலிகள், துயரங்கள் ஏராளம். ஆனால் துயரங்களின் முடிவு நிலையான வாழ்வு என்பதை அறிந்து துயரங்களைத் தயங்காமல் ஏற்றார்.

செல்வர்-லாசர் உவமை இதற்குச் சான்றாகின்றது. லாசர் துன்பத்தின் வழியாகவும் துயரங்களின் வழியாகவும் பயணிக்கின்றார். அவரது இறுதியில் வாழ்வைப் பெறுகிறார். ஆனால் செல்வர் மிகவும் ஆடம்பரமாக வாழ்கிறார். உணவுக்கு, உலகு சார்ந்த சந்தோஷங்களுக்குப் பஞ்சமில்லாமல் வாழ்ந்தார். அவரது இறுதி நிலை வேதனை. எனவே இவ்வுலக வாழ்வில் துயரங்களை ஏற்றுக்கொண்டால் அதன் இலக்கு அல்லது முடிவு நிலையான வாழ்வாகும். எனவே இயேசு துயருறுவோர் பேறுபெற்றோர் என்கிறார். ஏனெனில் துயருறுவோர் முடிவில் நிலையான வாழ்வைப் பெறுவர்.

## 4. துயரங்களுக்குப் பலன் ஆறுதல்

**(COMFORT - THE REWARD FOR MOURNING) :**

...துயருற்று அழுவோர்க்கு ஆறுதல் அளிக்கவும், சீயோனில் அழுவோர்க்கு ஆவன செய்யவும், ...புலம்பலுக்குப் பதிலாக மகிழ்ச்சித் தைலத்தை வழங்கவும், ...என்னை அனுப்பியுள்ளார் (எசாயா 61:2b-3).

இந்தத் திருமறை வாக்கியங்கள் இயேசுகிறிஸ்துவின் பணி குறித்து எசாயா இறைவாக்கினர் முன்னுரைத்த பகுதியாகும். இறைமகன் இயேசுவின் பணிகளுள் ஒன்று ஆறுதல்படுத்துவது (Comforting). மத். 1:28-ல் “பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” என்று கூறினார். எனவே வருத்தப்படுவோர், துயருறுவோர் போன்றோருக்கு இறைமகன் இயேசுகிறிஸ்து வழியாய் ஆறுதல் கிடைக்கின்றது. கடவுளை நம்பும் மக்கள் எவருக்கும் துயரத்தின் பலன் ஆறுதல். செல்வந்தர், லாசர் உவமையில் இவ்வுலகில் பல பாடுகளையும் வேதனைகளையும் அனுபவித்து துயருற்ற லாசரு மரணத்திற்குப்பின் ஆபிரகாமின் மடியில் இருக்கும் வாய்ப்பினைப் பெறுகின்றார். அதுதான் துயரங்களுக்குக் கிடைக்கும் பலன்.

துயருறுவோர் என்ற வார்த்தையின் கிரேக்கப் பதம் “பென்தியோ” (Pentheo) என்பதாகும். அதன் அர்த்தம் என்னவென்றால் மிகவும் நேசிக்கப்பட்ட ஒருவரின் மரணத்திற்காக அழுகின்ற அழுகை என்பதாகும். இன்றைக்கும் பல்வேறு காரணங்களினால் பல்வேறு வேதனைகளினால் அழுகின்ற மக்கள் ஏராளமானோர் இவ்வுலகில் வாழ்கின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு இறைமகன் இயேசு கூறும் நற்செய்தி “துயருறுவோர் பெறுபெற்றோர் அவர்கள் ஆறுதல் பெறுவர்” என்பதாகும். எனவே இந்தத் தவக்காலத்தில் கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளைத் தியானிக்கும் நாம் துயரம் பாவத்தின் விளைவு என்றும், துயரம் நிரந்தரமற்றது என்றும், துயரத்தின் முடிவு நிலையான வாழ்வு என்றும், துயரத்தின் பலன் ஆறுதல் என்பதையும் அறிந்து செயல்படுவோம்.

திரு. Y. **சுஜின்ராஜ்**

02-03-2018

**தவக்கால மூன்றாம் வெள்ளி**

# கனிவுடைமை

**"கனிவுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்" மத் 5:5**

Meekness is not weakness. சாந்தம் அல்லது கனிவு என்பது பலவீனமல்ல. கனிவு என்ற சொல்லின் கிரேக்கச் சொல், "பறோற்றேஸ்" (praotes) என்பதாகும். தத்துவமேதை அரிஸ்டாட்டில் கனிவு குறித்து மிகத்தெளிவாக விளக்குகிறார். அவர் குறிப்பிடுவது என்னவெனில் எல்லாக் குணாதிசயங்களுக்கும் (Virtues) இரண்டு ஓரங்களுக்கு (Border) இடைப்பகுதியில் இருக்கின்றது. எப்படியெனில் ஓர் ஓரத்தில் அந்தக் குணாதிசயம் அதிகமாக இருக்கின்றது, மறு ஓரத்தில் அது இல்லாமல் இருக்கின்றது. ஆனால் இரண்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் ஒரு நிலை இருக்கின்றது. அதை அவர் 'Happy Medium' என்று கூறுகின்றார். உதாரணமாக ஓர் அற்றத்தில் மிகுந்த செலவாளியாக (Spend thrift) ஒருவர் இருக்கின்றார், இன்னோர் ஓரத்தில் வடிகட்டிய கஞ்சன் (Miser) ஒருவர் இருக்கின்றான். ஆனால் இரண்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் ஒருவர் இருக்கின்றார். அவரை "generous person" அதாவது "meak" சாந்தகுணமுடையவர் என்று அரிஸ்டாட்டில் விளக்குகின்றார். சாந்தகுணமுடையவர்களை "People who are slow to anger" என்றும் கூறுவதுண்டு. அதற்காக, சாந்தகுணமுடையவர்கள் கோபப்படமாட்டார்கள், கோழைகள் போன்றவர்கள் என்று தவறாகக் கருதப்படுவதுமுண்டு. இயேசுநாதர் சாந்தகுணத்திற்குச் சரியான உதாரணம். ஆனால் அவர் கோபப்படாமல் இருக்கவில்லை. பேதுருவைப் பார்த்து கோபமடைந்தார், தேவாலயத்தில் நடந்த அநீதிகளைக் கண்டு கோபமடைந்தார். அப்படியானால் கனிவு அல்லது சாந்தகுணமுடையோர் யார் என்றால் தகுந்த தருணத்தில் நீதியினிமித்தம் கோபப்படுபவர், அதைப்போல தேவையற்ற தருணத்தில் கோபப்படாதவர் என்று நாம் புரிந்து கொள்ளலாம். இந்தச் சாந்தம் அல்லது கனிவு குறித்து திருமறை வெளிச்சத்தில் சிந்திப்போம்.

## *1. அழகுப்படுத்தும் கனிவு :*

நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் அவரது அன்பிற்குரிய இறைமக்கள். எனவே அதற்கிசைய பரிவு, இரக்கம்,

நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் உங்களை அணி செய்யுங்கள் (கொலோ. 3:12).

பவுல் கொலோசே சபைக்கு எழுதுகையில் அவர்களைத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்கிறார். அப்படித் தெரிந்து கொள்ளப்பட்ட இறைமக்களுக்குப் பல குணாதிசயங்கள் இருக்கவேண்டும் என்பதைப் பட்டியலிடுகின்றார். அவற்றில் ஒன்று கனிவு, இறுதியில் அப்பண்புகளை "அணிசெய்யுங்கள்" (Clothe Yourselves) என்கிறார். பேதுரு இவ்வாறு கூறுகின்றார், "அழியாத அலங்கரிப்பாகிய சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கின்ற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே கடவுளின் பார்வையில் விலையேறப்பெற்றது" (1பேதுரு 3:4). நமது உடலை மறைப்பதற்கும் நம்மை அழகுப்படுத்துவதற்கும் ஆடைகளை நாம் பயன்படுத்துகின்றோம். அதைப்போல நம்முடைய வாழ்வில் உள்ள கடவுளுக்குப் பிரியமில்லாத தீயச் செயல்களை மறைத்து அல்லது நீக்கி நற்பண்பாகிய சாந்தம் அல்லது கனிவை அணிந்து கொண்டால் நம் வாழ்வு அழகாகும். பிலிப்பியர் 4:5-ல் "உங்கள் சாந்தகுணம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருப்பதாக" என்று பவுல் கூறுகின்றார்.

இயேசுவைப்போல் அழகுள்ளோர்
யாரையும் இப்பூவினில்
இதுவரைக் கண்டதில்லை காண்பதும் இல்லை

என்று கவிஞர் ஒருவர் பாடலில் எழுதியிருக்கின்றார். ஏனென்றால் இயேசு சாந்தமுடையவராகக் காணப்பட்டார். "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" (மத். 11:29) என்று கூறுகின்றார். இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டபோதும் அதற்கு முன்பாகவும் பலர் அவரை அவமானம் செய்தனர், ஏளனம் செய்தனர், காயப்படுத்தினர். ஆனால் அவர் சாந்தகுணமுடையவராய் அனைத்தையும் ஏற்றார். அந்தச் சாந்தத்தை நாமும் அணி செய்து கொண்டால் அது நம் வாழ்வு அழகுபடுத்தும். குணாதிசயமாகும்.

### *2. கனிதரும் கனிவு :*

தூய ஆவியின் கனியோ அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவையாகும் (கலாத். 5:22).

கனிதல் என்பது ஒரு மரத்தின் காய், பழமாக மாறும் நிலையைக் குறிக்கின்றது. காயாக இருக்கும்போது அதன் குணம் இருப்பதைக்

காட்டிலும் பழமாகும்போது வேறுபடுகின்றது. காய்ப் பருவத்தில் இருக்கும் கசப்பும், இறுக்கமும் குறைந்து, சுவையாகவும் மிதமாகவும் இருக்கின்றது. தூய ஆவியின் வரங்களும் நம்மிடம் காணப்படும் போது இத்தகைய மாற்றம் நிகழுகின்றது. நமது ஊனியல்புகள் மாறி ஆவியின் கனி நமது வாழ்க்கையை ஆட்கொள்கிறது. தூய ஆவியின் கனியாகிய கனிவு நம் வாழ்வைக் கனிகொடுக்கும் வாழ்வாக மாற்றுகின்றது. தூய ஆவியின் கனி ஒன்பதை பவுல் பட்டியலிடுகின்றார். அதில் ஒன்றாக, கனிவு அல்லது சாந்தம் காணப்படுகின்றது. எனவே நாம் கனிவுடையவராக வாழும்போது கனி கொடுப்பவராகி, பிறருக்குப் பயனுள்ள வாழ்வு வாழ்கின்றோம். “நானே திராட்சைச் செடி; நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனிதருவார்” (யோவா. 15:5) என்று இயேசு கூறுகின்றார். எனவே நம்மிடம் கனிவு அல்லது சாந்தம் என்னும் கனி வெளிப்பட வேண்டுமானால் சாந்தமுள்ள இயேசுவுடன் இணைந்திருக்க வேண்டும். அவ்வாறு இணைந்திருந்து கனிவு என்னும் கனியை உலகிற்கு ஈந்து வாழ்வோம்.

## 3. ஆற்றல்படுத்தும் கனிவு :

மிகப்பெரிய விலங்குகளில் ஒன்றாகிய யானை 40,000 மனிதரின் கை பலத்தைத் தனது தும்பிக்கையில் கொண்டுள்ளதாம். அத்தகைய யானைகளில், பழக்குவிக்கப்பட்ட யானைகள், உருவத்திலும் வலிமையிலும் தங்களைவிட வலுகுறைந்த பாகனுக்குக் கட்டுப்படுகின்றது. அதற்காக யானையைக் கோழையான மிருகம் என்று சொல்ல இயலாது. அதைப்போன்று எல்லா வலிமையும் இருந்தும் தன்னடக்கத்தோடு எல்லா செயல்களையும் செய்வதே சாந்தகுணத்தின் அடையாளம். அதுவே பலமாக அமைகின்றது. இயேசுநாதரை எந்த அளவிற்கு குற்றப்படுத்தி அவமானம் செய்ய வேண்டுமோ அந்த அளவிற்கு அவருக்குத் தீமை செய்தனர் பரிசேயர், சதுசேயர். சிலுவைப்பாடுகளிலும் பல அவமானங்களை ஏற்றார். ஆனால் இயேசுநாதர் எல்லாவற்றிற்கும் சாந்தத்தோடு பதிலளித்தார். கனிவோடு தமது பாடுகளை ஏற்றார். ஏனென்றால் அவருக்குப் பலமாக இருந்தது அவருடைய சாந்தகுணமே. கிறிஸ்துவானால் சிலுவையை விட்டு இறங்கி வா என்ற போர் சேவகனுக்கு அவர் காற்றையும் கடலையும் அடக்கியவர் என்பது புரியவில்லை. உலக மக்கள் யாவரையும் இரட்சிக்கும் ஆற்றல் கொண்ட இயேசுநாதருக்கு தம்மைக் காயப்படுத்தியவரை எதிர்க்க ஒரு நொடிப்பொழுது கூடத் தேவையில்லை. ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. காரணம், அவரிடத்தில் சாந்தகுணம் காணப்பட்டது. அது அவருக்குப் பலமாக

இருந்தது. சாந்தம் அவருடைய கோழைத்தனத்தின் வெளிப்பாடு அல்ல, அவருடைய பலத்தின் வெளிப்பாடு. "பூவுலகின் அனைத்து மாந்தரிலும் மோசே சாந்தமிகு மானிடராய்த் திகழ்ந்தார்" (எண். 12:3) என்று மோசேயின் சாந்தகுணம் குறித்து கூறப்படுகின்றது. தனக்கு எதிராக சினம் கொண்ட மிரியாமைத் தொழுநோயினால் கடவுள் தண்டித்தார். அப்போது மோசே "கடவுளே இவளைக் குணமாக்க வேண்டுகிறேன்" (எண். 12:13) என்று மன்றாடினார். இதுவே சாந்தகுணம் தரும் பலம். அப்படிப்பட்ட மோசே திக்குவாயும் மந்தநாவும் உடையவராயினும் இஸ்ரயேல் மக்கள் பல லட்சம் பேரை வழிநடத்தும் தலைவரானார். இங்கே மோசேயின் சாந்தகுணம் அவருக்குப் பலமாகவே அமைந்தது. எனவே நாமும் சாந்தமுள்ளவர்களாய் கடவுளின் ஆற்றல் பெற்று வாழவே இந்தத் தவகாலத்தில் கடவுள் நம்மை அழைக்கின்றார்.

இயேசுநாதர் கனிவுடையோர் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வர் என்றார். இதன் அர்த்தம் சாந்தகுணமுடையவர்களுக்கு எல்லா வளங்களும் உலகப் பொருட்களும் கொடுக்கப்படும் என்பதல்ல, மாறாக இவ்வுலகில் கடவுள் அமைக்க இருக்கும் அவருடைய அரசில் பங்குடையவர்களாக மாறுவர் என்பதே அதன் அர்த்தமாக இருக்கின்றது.

திரு. Y. **சுஜின் ராஜ்**

09-03-2018

**தவக்கால நான்காம் வெள்ளி**

# நீதியை நிலைநாட்டும் வேட்கை

**“நீதி நிலை நாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்.”** மத் 5:6

உலகத்திலுள்ள அனைத்து மக்களும் நீதிக்கான பசி தாகம் குறித்து அறிந்து கொண்டால் போருக்கான ஆபத்து இருக்கவே இருக்காது (If every man and women in the world know it was to hunger and thirst after righteousness, there would be no danger of war) என்று மார்ட்டின் லிவ்யார்ட் ஜோன்ஸ் என்பவர் குறிப்பிடுகின்றார். நீதி குறித்து புதுக் கவிதை ஒன்று இவ்வாறு கூறுகின்றது :

“நீதி நிதியால் மூழ்கும் காலமடா
மதியை நிதியால் வீழ்த்தும் உலகமடா
நீதித் தட்டு தரையைத் தட்டும்
பணமதன் எடை தாங்காமல்
நீதி தேவதை கண்ணைக் கட்டிவிட்டாள்
இந்தக் கொடுமைகளைக் காணமுடியாமல்”

இக்கால நீதியின் நிலையை இக்கவிதை தெளிவாக விளக்குகின்றது. தண்ணீரின்றி நதிகள் காய்ந்து கிடப்பது போல நீதியின்றி உலகம் வறண்டு கிடக்கின்றது. இச்சூழலில் இயேசு நாதரின் மலைப்பொழிவில் அவர் கூறிய நீதிநிலை நாட்டும் வேட்கை குறித்து இத்தவக்காலத்தில் தியானிப்பது நம் வாழ்விற்குப் பயனுள்ளதாக அமையும். இயேசுநாதர் பாடுகள் ஏற்று மரித்தது எதற்காக? யாருக்காகப் பாடுகளை ஏற்றார்? என்ற இரண்டு கேள்விகளுக்கு பேதுரு தெளிவான விடை தருகின்றார். “கிறிஸ்துவும் உங்கள் பாவங்களின் பொருட்டு ஒரே முறையாக இறந்தார். அவர் உங்களை கடவுளிடம் கொண்டு சேர்க்கவே இறந்தார். நீதியுள்ளவராகிய அவர் நீதியற்றவர்களுக்காக இறந்தார் (1பேது. 3:18).” பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் நீதி குறித்த பலகுறிப்புகள் உள்ளன. எசாயா எரேமியா போன்ற இறைவாக்கினரும், பவுல், பேதுரு போன்ற அப்போஸ்தலர்களும் நீதி குறித்து பலவற்றை குறிப்பிட்டிருக்கின்றனர். ஆனால் அவர்களில் எவரும் நீதி நிலைநாட்டும் வேட்கை அல்லது “நீதியின் மீது பசி தாகம்” குறித்து குறிப்பிடவில்லை. இயேசு கிறிஸ்து மட்டுமே அதைக்குறித்து தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார். மத். 6:32-ல் எல்லா மனிதரும் மிகவும்

முக்கியமாக தேட வேண்டியவற்றைக் குறித்து இயேசுநாதர் குறிப்பிடுகின்றார். அது என்னவெனில் "இறையரசும் அதன் நீதியும்" ஆகும். எனவே இயேசு குறிப்பிடும் இந்த நீதியைக் குறித்து தியானிப்போம்.

### *1. நீதியின் மீதான தாகம்* :

வார்த்தைகள் தனித்து நிற்பதில்லை. ஒவ்வொரு வார்த்தையின் பின்னணியத்திலும் குறிப்பிட்ட அனுபவம் மறைந்திருக்கும். வார்த்தைகளின் அர்த்தம் அவற்றைப் பேசுபவரின் அனுபவங்களிலிருந்து வெளிப்படும். அந்த வகையில் இயேசுநாதர் எந்த அளவிற்கு நீதியின் மீது நாட்டம் கொண்டாரோ அதையே மக்களிடம் கூறுகின்றார். அவர் எந்த அளவிற்கு நீதியுடன் வாழ்ந்தாரோ அதையே வார்த்தைகள் வழியாக கூறுகின்றார். இயேசு கூறிய "நீதி" என்னும் வார்த்தையின் கிரேக்கப் பதம் "டிக்காயோசுனே" (dikaiosune) என்பதாகும். இதற்கான ஆங்கிலப்பதம் Righteousness மற்றும் Justice என்பதாகும். புதிய ஏற்பாட்டில் வரும் இந்த வார்த்தை தரும் பொருள் இரண்டு அடிப்டைகளில் வருகின்றது. ஒன்று, எபிரேய வார்த்தையான "ட்ஸடெக்" (tsedeq) என்ற வார்த்தை. அது கடவுளின் உடன்படிக்கை உறவை (Covenantal relation) குறிப்பதாகும். மற்றொன்று, நேர்மை, சட்டஒழுக்கம் மற்றும் கடவுளின் விருப்பத்தை (Will of God) நிறைவேற்றுதல் போன்ற அர்த்தங்களைக் கொண்டது. இந்த வார்த்தை கூறும் அர்த்தங்களில் ஒன்று நீதி என்பது கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுதல் என்பதாகும். அந்த வகையில் இயேசு தமது தந்தையாம் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் மிகவும் தீவிரமாகச் செயல்பட்டார். இயேசுநாதரின் அருட்பணி, போதனை, பாடு மரணம், உயிர்த்தெழுதல் அனைத்தும் அவரது நீதியின் நாட்டத்தை வெளிப்படுத்துகின்றது. யோவா. 6:38-ல் "ஏனெனில் என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல, என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன்" என்று இயேசு கூறியது அவரது நீதியின் மீதுள்ள தாகத்தை வெளிப்படுத்துகின்றது.

### *2. நீதி ஏற்படுத்தும் தாக்கம்* : (லூக். 23 : 47)

இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் கண்ட நூற்றுவர் தலைவர் இயேசு "நீதிபரர்" அல்லது "நேர்மையாளர்" என்று சான்று கொடுக்கின்றார். இயேசு சிலுவையில் ஏற்ற பாடுகள் வேதனைகள் எல்லாவற்றையும் வகித்ததையும், காறி உமிழ்ந்தவரையும், முள்முடி சூட்டியவரையும், விலாவில் குத்தியவரையும், சிலுவையில் ஆணிகளால்

அறைந்தவரையும், அவை அனைத்திற்கும் எந்த எதிர்வினையும் செய்யாததையும் இந்த நூற்றுவர் தலைவர் கண்டார். மேலும் இயேசு சிலுவையிலிருந்து எல்லோரையும் மன்னித்த மன்னிப்பின் செயலையும் பார்த்தார். இயேசு நாதர் எல்லா வல்லமையும் உடையவராக இருந்தாலும் அநீதிக்கு இடம் கொடுக்காமல் நீதியை நிலை நாட்டினார். அந்த மேலான வாழ்வுமுறை இந்த நூற்றுவர் தலைவரின் வாழ்வில் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியது. 1யோவா. 2:1-ல் "நீதிபரராய் இயேசுகிறிஸ்து நமக்காகப் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" என்று யோவான் அப்போஸ்தலர் கூறுகின்றார். யோவான் மட்டுமல்ல அனைத்து சீடர்களும் இயேசுவின் நீதியினால் கவரப்பட்டு இயேசுநாதர் நீதி செய்பவராகவும் நீதியாய் வாழ்பவராகவும் காணப்பட்டார். நீதியாய் வாழ்தல் என்பது அவரது குணநலன்களான நேர்மை, நல்லொழுக்கம், தூய்மை, சகிப்புத்தன்மை, கடவுளின் விருப்பம் நிறைவேற்றல் போன்றவற்றை குறிக்கின்றது. நீதி செய்தல் என்பதை யோவான் 8ம் அதிகாரத்தில் விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணிற்கு அவர் செய்த நீதியிலிருந்து வெளிப்படுகின்றது. அப்பெண்ணை இயேசுவிடம் கொண்டு வந்தபோது இயேசுநாதர் சுற்றியிருந்த மனிதர்களைப் பார்த்து "உங்களில் பாவமில்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும்" என்று கூறினார். அந்த வார்த்தைகள் அந்தப் பெண்ணிற்கும் அங்கு நின்ற மனிதர்களுக்கும் ஒரு பெரிய தாக்கத்தை உண்டு பண்ணியது. இயேசுநாதர் அப்போது அப்பெண்ணிற்குச் செய்த நீதியினால் அங்கு நின்றவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்தனர். எனவே யாரும் அவள் மீது கல்லெறியவில்லை. இந்த நிகழ்வு இயேசு செய்த நீதியால் அங்கிருந்த மனிதர்கள் அடைந்த தாக்கத்தை தெளிவுப்படுத்துகின்றது.

நீதியின் மீது ஏற்படும் நாட்டமும், நீதி செய்வதாலும், நீதியோடு வாழ்வதாலும் நமக்கு கிடைக்கும் பலன் திருப்தியான வாழ்வு. எனவே இந்த தவக்காலத்தில் நாமும் நீதி நிலைநாட்டும் வேட்கை உடையவராகவும், நீதி செய்வதாலும், நீதியின் வாழ்வு வாழ்வதாலும் இவ்வுலகில் தாக்கத்தை ஏற்படுத்த கடவுளிடம் நம்மை அர்ப்பணிப்போம்.

திரு. Y. **சுஜின் ராஜ்**

16-03-2018

**தவக்கால ஐந்தாம் வெள்ளி**

# தூய உள்ளம்

***“தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.”*** **மத் 5:8**

ஒரு ரயிலில் பயணித்திக் செல்வந்தர் ஒருவர் கொண்டிருந்தார். குறிப்பிட்ட ஒரு நிலையத்தில் சிலர் அந்த பெட்டிக்குள் ஏறினர். அவர்களில் சில குழந்தைகள் சில பெண்கள் இருந்தனர். அந்த குழந்தைகளுக்கு சரியான உடையில்லை, அந்த பெண்களும் அழுக்கு நிறைந்த உடை அணிந்திருந்தனர். அவர்களில் ஒரு சிறு பெண் மிகவும் துடுக்காக காணப்பட்டாள். அவள் அந்த ரயில் பெட்டியில் அங்குமிங்கும் ஓடி விளையாடுகிறவளாக காணப்பட்டாள். தூங்கிக் கொண்டு இருந்தவர்களை தட்டி எழுப்பினாள், சிலருடைய உடையை தொட்டுப் பார்த்தாள். மிகவும் உற்சாகமாக காணப்பட்டாள். அவளுடைய கைகள் மிகவும் அழுக்கு நிறைந்ததாக காணப்பட்டது. அச்சிறு பெண்ணின் நடவடிக்கைகள் அந்த செல்வந்தரை முகம் சுழிக்க வைத்தது. எங்கே அந்த சிறுபெண் தன்னண்டை வந்து தொட்டு விடுவாளோ என்று அச்சமுற்றார். திடீரென ஓடி வந்த அந்த சிறு பெண் இந்த செல்வந்தரை தொட்டுவிட்டாள். உடனே அவர் அவளது கரங்களை தட்டிவிட்டார். “சீ தொடாதே, அழுக்கு” என்று அவளிடம் கத்தினார். பயந்து அப்பெண் ஓடி சென்று அவளோடு வந்த குழுவினரிடம் போய் அமர்ந்தாள். சற்று நேரத்தில் கடலை வியாபாரி ஒருவர் வந்தார். அவரிடம் அச்சிறு பெண் ஒரு ரூபாய் நாணயத்தைக் காட்டி எனக்கு கடலை வேண்டும் என்றாள். உடனே அந்த கடலை வியாபாரி இருபது ரூபாய் மதிப்புள்ள ஒரு கடலை பாக்கெட் ஒன்றை கொடுத்தார். அந்த சிறுபெண் மிகுந்த மகிழ்ச்சியில் துள்ளி குதித்தாள். இதை அந்த செல்வந்தர் பார்த்துக் கொண்டிருக்கவே அச்சிறு பெண் செல்வந்தரின் அருகில் வந்தாள். “உங்களுக்கு கடலை வேண்டுமா? இந்தாங்க சாப்பிடுங்க” என்று கையில் கடலையை வைத்துக் கொண்டு நீட்டினாள். இந்த செல்வந்தர் அதிர்ச்சியில் உறைந்தார். அந்த சிறு பெண்ணிடமிருந்து அவர் கடலையை வாங்க மறுத்துவிட்டார். அச்சிறுபெண் அதை பொருட்டாக எடுக்கவில்லை. அந்த பெட்டியில் இருந்த அனைவரிடமும் கேட்டாள் கடலை வேண்டுமா? என்று ஆனால், யாரும் அவளிடமிருந்து வாங்கவில்லை. அவள் அவற்றையும்

பொருட்படுத்தாமல் தன்னோடு வந்த மக்களுக்கு பகிர்ந்து கொடுத்தாள். இதைக் கண்ட அந்த செல்வந்தரின் மனதிலே சலனம் ஏற்பட்டது. வேகமாக சென்று வேறு இரண்டு கடலை பொதியை வாங்கி அந்த சிறு பெண்ணிடம் கொண்டு கொடுத்தார். அவள் அதை வாங்கினாள், அவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.

இந்த நிகழ்வில் செல்வந்தரின் கரங்கள் சுத்தமாக இருந்தது. ஆனால் அவருடைய இருதயம் கடினமாகவும், கறைபடிந்ததாகவும் காணப்பட்டது. அந்த சிறு பெண்ணின் கரங்கள் மிகவும் அழுக்காக காணப்பட்டது. ஆனால், அவளது இதயம் மிகவும் தூய்மையாக காணப்பட்டது. இன்று மனிதர்கள் பலர் இந்த செல்வந்தர் போலவே காணப்படுகின்றனர். இயேசுநாதர் இந்த தூய்மையான உள்ளத்தோர் என்று யாரை குறிப்பிடுகிறாரென்றால் எந்த கறைகளுமின்றி, மாசற்ற சிந்தை கொண்டு, கோபம், பொறாமை, எரிச்சல், புறங்கூறுதல், கபடு போன்ற குணாதிசயங்கள் உடையவரையே என்று புரிந்து கொள்ளலாம். 1சாமு. 16:7-ல் மனிதர் பார்ப்பது போல் நான் பார்ப்பதில்லை; மனிதர் முகத்தைப் பார்க்கின்றனர்; ஆண்டவரோ அகத்தைப் பார்க்கின்றார் என்று கடவுள் சாமுவேலிடம் கூறுகின்றார். இத்தகைய தூய உள்ளத்தோடு வாழ்ந்தால் என்ன பயன் என்று சிந்திப்போம்.

### *1. மாற்றங்களை ஏற்படுத்தும் தூய உள்ளம்* :

இயேசுநாதரின் தூய்மையான உள்ளம் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. லூக். 14-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள இயேசு சாத்தானால் சோதிக்கப்பட்ட நிகழ்வு அவர் தூய்மையான உள்ளம் கொண்டவர் என்பதைத் தெளிவு படுத்துகின்றது. இயேசுவை சாத்தான் சோதித்த போது அவர் தூய உள்ளம் கொண்டவரானபடியால் அந்த சோதனையில் விழாமல் தன்னைக் காத்துக் கொண்டார். அவர் தூய உள்ளம் கொண்டவரானபடியால் அவர் வியத்தகு செயல்களை உலகத்தில் செய்தார். அவரது தூய உள்ளம் அவருக்கு வலிமையாக அமைந்தது. எனவே சமூகத்தில் பல மனிதர்களை அவர் மாற்றினார். குருடர், சப்பாணிகள், பல நோய்களால் பாதிக்கப்பட்டவரை அவர் அவர்களுடைய பழைய நிலையிலிருந்து மாற்றினார். இறைவேண்டல் தூய உள்ளத்தை தருகின்றது. ஒரு தூய உள்ளத்தால் பல செயல்கள் செய்ய முடியும் (Prayer gives a pure heart and a pure heart can do much) என்று அன்னை தெரசா அவர்கள் குறிப்பிடுகின்றார். இயேசுநாதரும் ஜெபத்தின் வழியாய் தன் உள்ளத்தை தூய்மையாக காத்துக் கொண்டார். அதனால் உலகில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தினார்.

### 2. கடவுளின் ஆசிபெற உதவும் தூய உள்ளம் :

தி.பா. 24:4,5 ஆகிய வசனங்களில் மாசற்ற மனமுடையோர் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. "கறைபடாத கைகளும் மாசற்ற மனமும் உடையவர்; பொய் தெய்வங்களை நோக்கி தம் உள்ளத்தை உயர்த்தாதவர், வஞ்சக நெஞ்சோடு ஆணையிட்டு கூறாதவர், இவரே ஆண்டவரிடம் ஆசி பெறுவர்" என்று சங்கீதக்காரர் கூறுகின்றார். இன்றைய காலகட்டத்தில் மனிதர்கள் கடவுளின் ஆசியை பெற்றுக்கொள்ள பல முயற்சிகளை செய்கின்றனர். ஆனால் கடவுளின் ஆசியை பெற எளிய வழி என்னவெனில், தூய உள்ளம் நம்மில் காணப்பட வேண்டும்.

### 3. கடவுளைக் காண உதவும் தூய உள்ளம் :

லேவி. 11:44-ல் நான் உங்கள் ஆண்டவராகிய கடவுள். எனவே உங்களைத் தூய்மைப்படுத்தி, தூயவராயிருங்கள். ஏனெனில் நான் தூயவர் என்று கடவுள் வாக்குரைத்தார். கடவுள் எந்த அளவிற்கு தூய்மையாக உள்ளாரோ அந்த அளவிற்கு தூய்மையை அவர் தமது மக்களிடம் எதிர்பார்க்கின்றார். பரிசுத்தமின்றி ஒருவரும் கடவுளை தரிசிக்க இயலாது என்று எபி. 12:14-ல் கூறப்பட்டுள்ளது. ஆகவே இயேசுநாதர் "இதயத்தில் தூய்மையுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" என்று கூறுகிறார். எனவே தூய உள்ளத்தோர் கடவுளை தரிசிக்கும் ஆற்றலை இவ்வுலகிலும் அடைய முடியும். எனவே இயேசுநாதரையே மாதிரியாக கொண்டு தூய உள்ளத்தோடு வாழ்ந்து கடவுளை காணும் மேலான பாக்கியத்தைப் பெற கடவுளிடம் வேண்டுதல் செய்வோம்.

ஹோவர்ட் ஹென்ட்ரிக்ஸ் என்ற இறையியல் ஆசிரியர் இவ்வாறு கூறுகின்றார். "கடவுள் ஒரு மனிதனை அளவீடு செய்யும் போது அவர் அந்த அளவு செய்யும் கருவியை இதயத்தை சுற்றியே வைப்பார், தலையை சுற்றி அல்ல" (When God measures a man he puts the tape around the heart not the head) என்று கூறுகின்றார். எனவே எல்லா காவலோடும் இதயத்தைக் காத்துக்கொள் என்று சாலோமோன் ஞானி கூறுவது போல நம் இதயத்தை தூய்மையாக காத்துக் கொண்டால் இயேசு கூறும் இந்த ஆசி அனைத்தும் நம்மை வந்து சேரும்.

திரு. Y. **சுஜின் ராஜ்**

23-03-2018 **தவக்கால ஆறாம் வெள்ளி**

# அமைதியை ஏற்படுத்துதல்

***"அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்." மத் 5:9***

போர், வன்முறை, குற்றங்கள், தீவிரவாதச் செயல்கள், குண்டு வெடிப்பு போன்ற வார்த்தைகள் இன்றைய பத்திரிக்கைகளில் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றது. ஏனென்றால் இவை அனைத்தும் எங்கேயோ ஓரிடத்தில் நடந்து கொண்டே இருக்கின்றது. 100 வருடக்ளுக்கு முன்பு ஒரு ராஜாவிடம் காணப்பட்ட வசதிகளை விட அதிகமான வசதி இன்றைய சாதாரண மனிதரிடம் இருக்கின்றது. ஆனால் 100 வருடங்களுக்கு முன்பு சாதாரண மனிதனிடம் காணப்பட்ட அமைதி கூட இன்று பல கோடிகளுக்குச் சொந்தக்காரர்களிடம் இல்லை. தொழில் நுட்பம், அறிவியல் போன்றவை அதிகம் வளர்ந்து காணப்பட்டாலும் தனிமனித அமைதி, குடும்ப அமைதி, சமூக அமைதி, உலக அமைதி அனைத்தும் இன்று எட்டாக் கனியாக மாறிவிட்டது. இச்சூழலில் இயேசுநாதர் கற்பித்த இந்த அமைதி குறித்த போதனையை நாம் தியானிப்போம்.

***1. மன அமைதி*** (Inner Peace) :

பல நேரங்களில் அமைதி என்பது பாடுகள், வேதனைகள் இல்லாத ஒரு நிலை (absence of sting and suffering) என்று நாம் எண்ணுவதுண்டு. போர் இல்லை என்றால் உலகம் அமைதியில் இருக்கின்றது என்று எண்ணுவதுண்டு. ஆனால் அமைதி என்பது திருமறையில், நாம் எண்ணுவதைவிட சற்று உயர்ந்து நிற்கின்றது. பழையஏற்பாட்டில் 'Shalom' என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகின்றது. அதன் அர்த்தம் முழுமையடைதல் ("Wholeness") புதிய ஏற்பாட்டில் அமைதிக்கு பயன்படுத்தப்படும் கிரேக்க வார்த்தை "eirene" ('ஐரனே') என்பதாகும். அதன் அர்த்தம் என்னவென்றால் "Inner well - being" அதாவது "உள் அமைதி", "நலம்" என்பதாகும். நம் வாழ்வின் வெளிப்புறத்தில் பல சலனங்கள், பல பிரச்சனைகள் இருந்தாலும் நமக்குள் இருக்கும் அமைதியை அவைகள் தடுக்க முடியாது. அத்கைய ஓர் அமைதியை நாம் இயேசுவிடம் காணலாம். யோவா. 14:27 -ல் "அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்" என்று இயேசு கூறுகின்றார். இதில் "என் அமைதி" என்ற பதம் மிகவும் அழுத்தம் பெறுகின்றது. அது இயேசுநாதரிடம் காணப்பட்ட யாராலும் பிரிக்க முடியாத அவரது உள் அமைதியைக் காட்டுகின்றது. இத்தகைய அமைதி இன்றைய உலகில் வாழும்

ஒவ்வொருவருக்கும் தேவை. அது எப்போது கிடைக்கின்றது என்றால் சமாதான காரணராகிய இயேசு நம் உள்ளில் வருகின்றபோது கிடைக்கின்றது.

**2. மற்றவரோடு அமைதி** (Peace with one others) :

மாற். 9:50-ல் "ஒருவரோடு ஒருவர் அமைதியுடன் வாழுங்கள்" என்று இயேசு கூறுகின்றார். எசாயா தீர்க்கர் இயேசுவைக் குறித்து கூறும்போது அவர் "சமாதானக்காரணர்" என்று முன்னுரைத்தார். இயேசு நாதரும் அதையே தமது வாழ்விலும் திருப்பணியிலும் கடைப்பிடித்தார். தம்மைக் காட்டிக் கொடுக்க வந்த சீடரைப் பார்த்து "நண்பனே" என்ற வார்த்தையால் ஒருவருக்கொருவர் அமைதியை ஏற்படுத்தினார். அவர் தொழுநோயாளியைத் தொட்டார், பெரும்பாடுள்ள பெண்ணிற்கு சுகமளித்து அமைதியுடன் செல்ல வாழ்த்தி அனுப்பினார், பேதுரு வெட்டிய சேவகனின் காதை மறுபடியும் இணைத்தார். இப்படி தன்னுடைய ஊழியத்தின் அனைத்து அசைவுகளிலும் இயேசு பிறரோடு அமைதியை ஏற்படுத்தினார் என்பதை நாம் அவரது வாழ்வு வழியாய் காணலாம். அறைக்குள் வந்த இயேசு உங்களுக்கு அமைதி உரித்தாகுக (யோவா. 20:19) என்று வாழ்த்தினார். பவுல் உரோமைத் திருச்சபைக்கு எழுதுகின்ற போது "இயலுமானால் உங்களால் முடிந்தவரை எல்லோரோடும் அமைதியுடன் வாழுங்கள்" (உரோ. 12:18) என்று குறிப்பிடுகின்றார். அதுமட்டுமல்லாமல் ஆவியின் கனியில் ஒன்றான அமைதியை பவுல் குறிப்பிடுகின்றார் (கலா. 5:22). "நீங்கள் அமைதியை விரும்பினால் உங்கள் நண்பர்களோடு பேசவேண்டியதில்லை, மாறாக உங்கள் எதிரிகளோடு பேசுங்கள்" (If you want to make peace, you dont talk to your friends/ you talk to your enemies) என்று பேராயர் டுட்டு (Arch Bishop Tutu) கூறுகின்றார். இன்றைய மனிதர்கள் பல வருடப் பகையை குறித்து பெருமிதம் கொள்வதை அன்றாடம் காண்கிறோம். "எனக்கும் அவருக்கும் 20 வருடப் பகை, 40 வருட பகை" போன்ற வீர வரிகளை பலர் கூறுவதுண்டு. இப்படிப்பட்ட வீண் பெருமைகளைக் களைந்து இந்தத் தவக்காலங்களில் இயேசுவைப்போல எதிரிகளிடமும் அமைதி ஏற்படுத்தி நல்லுறவோடு வாழ முயல்வோம்.

அமைதியை ஏற்படுத்த தோட்டாக்களும், குண்டுகளும் தேவையில்லை, அன்பும், மனதுருக்கமுமே தேவை என்று அன்னை தெரசா அவர்கள் கூறுகின்றார்கள். எனவே ஆயுதங்களை அல்ல அன்பையே ஆயுதமாகக் கொண்டு இயேசுவைப் போன்று அமைதியின் கருவிகளாவோம். இத்தவக்காலம் நம் வாழ்விற்கும் அனைத்துலக மக்களின் வாழ்விற்கும் அமைதியைத் தருவதாய் அமைய கடவுளிடம் மன்றாடுவோம்.

திரு. Y. **சுஜின் ராஜ்**

# திருச்சிலுவையின் திருவுறவு

லூக். 23:32-34

***“தந்தையே, இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை.”*** **லூக். 23:34**

தன்னரிய திருமேனி சதைபுண்டு தவிப்பெய்தி
பன்னரிய பலப்பாடு படும்போது இன்னதென
அறிகிலார் தாம்செய்வதிவர் பிழையை
மன்னியும் என்று மொழிந்தார்நம் அருள்வள்ளல்

இப்பாடல் வீரமாமுனிவர் எழுதிய தேம்பாவணியின் பாடல் வரிகள்...

துறவி ஒருவர் ஆற்றின் கரையில் அமர்ந்து தனது தின தியானத்தில் ஈடுபடலானார். மாலை நேரத்தில் கதிரவன் ஒளி மங்கி விழும் வேளையில் இயற்கையின் அழகை ரசிப்பதில் தனது மனதை செலுத்தினார். ஆற்றில் கரைபுரண்டு ஓடும் தண்ணீரின் ஓசையும் வேகமும் மனதிற்குப் புது உத்வேகம் தருவதாய் உணர்ந்தார். தண்ணீரில் பார்க்கின்ற துறவியின் கண்ணில் உயிருக்கு போராடிய நிலையில் அடித்து வரும் தேள் தென்படவே, எப்படியாவது தேள் காப்பாற்றப்பட வேண்டும் என்று எண்ணி தனது தியானத்தைக் கலைத்து விட்டு தேளைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடலானார். நீரின் வேகம் அதிகமாயினும், தனது பார்வையில் ஒரு உயிர் சாவது நல்லது அன்று என்று எண்ணவே, தனது கரத்தால் தேளைப் பிடிக்கிறார். தேள் முனிவரின் கையில் ஏறியதும் தனது விஷத்தன்மை கொண்ட உறுப்பால் கடிக்கவே, வலியின் அதிகரிப்பால் தண்ணீரில் போடுகிறார். மறுபடியும் பரிவுள்ளம் கொண்ட துறவி தேளை பிடிக்கிறார் அது கடிக்கிறது, கடியினைத் தாங்கிய நிலையில் கடும் சிரமத்தின் மத்தியில் தேளைக் கரை சேர்த்த நிறைவில் அன்றைய தியானம் முடிந்து திரும்பினார் துறவி.

தீமைகள் பலசெய்த மக்கள் மத்தியில் கிறிஸ்துவும் நன்மை செய்பவராகவும், தீய எண்ண ஓட்டத்துடன் செயல்பட்டவர்க்கு நல்ல வாழ்வு தருபவராயும், துன்பங்கள் பல தந்தவர்களுக்கு மன்னிப்பு என்னும் மாசற்ற பூவை மனதாரத் தந்தார் என்பதும் உண்மையே.

சிலுவையில் கசக்கப்பட்ட, இயேசுவாகிய திராட்சைச் செடியில் பூத்த முதல் பூ மன்னிப்பு.

இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் ஆதிக்கச் சக்திகளால் கொடுக்கப்பட்ட அநீதியான தண்டனையே. இயேசுவின் சிலுவைச் சாவு உரோமப் பேரரசன் சீசர் ஆண்ட காலம் நடந்தது. யூதேயாவின் ஆளுநராய் இருந்த ஏரோது அந்திப்பாஸ் (4 B.C to 39 A.D) கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்குக் காரணமான நபராய் மறைமுகமாய் இருந்து செயல்பட்டார். சிலுவையில் நிற்கும் கிறிஸ்துவின் முதல் திருமொழி ‘மன்னியும்’ என்பதே. கிறிஸ்து பெருமான் “மன்னியும்” என்று கூறி தனது போதனையை சாதனையாக்குகிறார்.

மன்னிப்பு கிறிஸ்தவ வாழ்க்கை என்னும் மரத்தின் ஆணிவேர். அது தகுதியற்ற ஒருவர் பெற்றுக்கொள்ளும் உன்னதமான அனுபவம். மன்னிப்பு எங்கு இருக்கின்றதோ அங்கு மனித மனங்கள் மகிழ்ச்சியில் திளைக்கின்றன. மன்னிப்பு மனிதனை மாற்றும் ஆற்றல் உடையது. இயேசு கிறிஸ்துவின் மன்னிக்கும் சத்தம் மாற்றத்திற்கு வித்திடும் மாணிக்கமாய் மானிடர் மனதில் பதிந்தது.

மன்னிப்பை மூன்று நிலைகளில் காணலாம்

- கடவுள் மானிடர்க்குத் தருவது
- மனிதர் மனிதருக்குத் தருவது
- படைப்பு மனிதருக்குத் தருவது

கிறிஸ்துநாதரின் சிலுவையில் இருந்து எழுந்த மன்னிக்கும் சத்தம் குறித்து தியானம் செய்வோம்.

***1. வலுவான சத்தம்*** **:** (லூக். 23:34a)

‘மண்டை ஓடு’ என்ற பொருள் கொண்ட ‘கொல்கொதா’ மலையில் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் கிறிஸ்துநாதர் ‘தந்தையே’ என்று தம்மை அனுப்பியவரை நோக்கிக் கூப்பிடுகின்றார். தாம் செய்யாத குற்றங்களுக்காகத் துன்பப்பட்ட போதும் தமது தந்தையை கிறிஸ்து மறவாமல் நினைக்கிறார். தமது தந்தையோடு அவருக்கிருந்த உறவில் எவ்வித முறிவும், விரிசலும் ஏற்படவே இல்லை என்பதற்கு சான்றாகவே இருக்கிறார். துன்பங்கள் இறைவனோடு உள்ள உறவைத்துண்டிக்கத் தேவை இல்லை என்பதை நமக்குக் கற்பிக்கின்றார். (Suffering need not break our relationship with the Lord Almighty).

உங்கள் பகைவரிடம் அன்புகூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் மத். 5:44 என்னும் திருமொழியைப் போதனை மொழியாகக் கொடுத்தவர் சிலுவையில் நின்று

கொண்டு சாதனை மொழியாக்கிக் காட்டினார். உங்களைச் சபிப்போருக்கு ஆசி கூறுங்கள்; உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். (லூக். 6:28) என்பதை நிறைவேற்றினார்.

இன்று துன்பம் ஏற்படும் போது கடவுள் உடன் இருப்பதை மறந்து விடுகிறோமா? குறை கூறிப் பரிகசிக்கின்றோமா?

**2. வரையறையற்ற சத்தம் :** (லூக். 23:34b)

'இவர்களை மன்னியும்' என்று கிறிஸ்து கூறுவது மன்னிக்கும் பண்பின் உச்சகட்டமாகும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும் (மத். 6:12). இறைவேண்டல் கற்றுக்கொடுத்தவர் தன் வாழ்வின் எல்லா நிலையிலும் மாதிரியாய் நின்று மன்னிப்பின் எல்லையை விரிவாக்க முயலுகிறார். பேதுரு இயேசுவிடம் எத்தனை முறை மன்னிப்பு வழங்க வேண்டும் என்று கேள்வி எழுப்பிய போது ஏழு முறை மட்டுமல்ல, ஏழெழுபது முறை என்று பதிலளித்தார் (மத். 18:21,22). மன்னிப்பு எனபது இதயத்தினுள் உதயம் பெறுவது என்றாலும் குறுகிய வட்டத்தில் அல்ல பரந்த மனப்பான்மையுடன் அளவு கடந்த நிலையில் வழங்கப்பட வேண்டும் என்பது கிறிஸ்துவின் எதிர்பார்ப்பு. எவரும் தம்மிடம் மன்னிப்பு கேட்காமல் இருக்கும் சூழலில் கிறிஸ்து தாமே மன்னிப்பை வழங்குகிறார். (Jesus forgives them voluntarily). 'தந்தையே இவர்களை மன்னியும்' என்ற கூற்றை உணர்ந்த காந்தியடிகள் இயேசுகிறிஸ்துவை "வாழ்ந்தவர்களில் தலைசிறந்தவர்" என்றார் (The greatest man who ever lived).

சந்தனமரம் வெட்டுகிறவருக்கும், வெட்டுகின்ற ஆயுதத்திற்கும் மணம் தரும்; பழங்கள் நசுக்கிப்பிழியப் பிழிய சுவையான ரசம் தரும். கிறிஸ்துவும் தம்மை துன்புறுத்தியவர்கள் கண்முன்னேயே மன்னிப்பைத் தந்து நாமும் இவ்வுலகில் மன்னிப்பு வழங்க வேண்டும் என்பதற்கு மாதிரியாகிறார்.

**3. வழிகாட்டும் சத்தம் :** (லூக். 23:34c)

கிறிஸ்து தான் பாடுபட வேண்டும் என்பது இறைவனது சித்தம் என்பதை இவர்கள் அறியாமல் செய்தார்கள் என்பதை விரிவாக விளக்கி தமது மீட்பின் திட்டம் வழி மக்கள் வாழ்வில் புது வழி காட்டுகிறார். நிலைவாழ்வு பெறும் நோக்கில் இறையரசு இவ்வுலகில் உதயம் பெறுவது குறித்து விளக்குகிறார் (யோவா. 3:16). தவறு இழைத்தவர் என்று குறைகாணப்பட்ட பெண் கிறிஸ்துவின் மன்னிப்பு வழி புதுவாழ்வு பெற்றுச்

சென்றார் (யோவா. 8:11). கிறிஸ்து சிலுவையில் நின்று கூறிய ‘மன்னிப்பு’ தன்னலம் அற்றது. ஆனால் அனைவருக்கும் உரிய ஒன்று என்பதில் மாற்றம் இல்லை. உலக மக்கள் அனைவருக்கும் சிலுவை வழி மன்னிப்பு தந்து மீட்பின் ஊடகங்கள் ஆக்குகிறார்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்

- திருக்குறள்

இன்று சாதி, சமயம், இனம், மொழி, பாலினம் போன்ற நிலைகளில் பகைமை உணர்வுகள் உருவாகியுள்ள நிலையில் இயேசுநாதரின் மன்னிப்பின் செய்தி மிகவும் தேவையான ஒன்றாய் உள்ளது. கிறிஸ்துவின் சத்தம் மன்னிப்பிற்கு மாதிரியாய் இருந்தது போல நாமும் மன்னிப்பின் தகவுகளை மண்ணுலகில் எடுத்து இயம்புவோம், சமுத்துவச் சமூகம் உதயம் பெறவும், இறையரசு இவ்வுலகில் இயல்புடன் உருவாகிடவும் உழைப்போம்.

திரு. S.S. **ஆல்பின் டேவிட்ராஜ்**

**இரண்டாம் திருமொழி**

# திருச்சிலுவையின் மேன்மை

லூக். 23:39-43

**"...நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்."** லூக். 23:43

அக்கால உரோமைச் சட்டத்தின் படி வெறுமனே கள்ளர்களை. திருடர்களை மாத்திரம் சிலுவையில் அறைவது வழக்கமில்லை. அப்படியானால் இயேசுவுடன் அறையப்பட்ட குற்றவாளிகள் எப்படிப்பட்டவர்கள் என்பது கேள்வி எழுகிறது. ஏரோது அரசன் எருசலேம் ஆலயத்தைக் கட்டின பின்பு, கிட்டத்தட்ட 4000 பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். ஆகவே வேலையிழந்தவர்கள் வழிப்பறி மற்றும் அரசனுக்கு எதிராகக் கலகம் செய்யத் தொடங்கினர். இப்படிப்பட்டவர்களைக் கொல்வதற்குத் தான் சிலுவை பயன்பட்டது என்பது சில வரலாற்று ஆய்வாளர்களின் கூற்று. இன்னும் பல வரலாற்றாசிரியர்கள் இவர்கள் சாதாரண திருடர்கள் அல்லர், உரோமைப் பேரரசின் கீழ் அடிமைப்பட்டிருந்த யூதேயாவை மீட்க ஆயுதங்கள் ஏந்திப் போராடிய "செலோத்தே" எனும் பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்" என்று உரைக்கிறார்கள். ஜொசிபஸ் என்ற வரலாற்று ஆசிரியர் இவர்களை "கலகக்காரர், புரட்சிக்காரர்" என அழைக்கிறார். ஆங்கிலத் திருமறையின் ஒவ்வொரு மொழிபெயர்ப்பாளர்களும் இவர்களை Thief, Criminals, Robbers, Malfunctions எனப் பலவாறு அழைக்கிறார்கள். நான்கு நற்செய்தி நூல்களில் லூக்கா நற்செய்தியாளர் மட்டுமே தெளிவான, முறையான உரையாடலைக் காட்சிப்படுத்தித் தருகிறார். ஒருவேளை லூக்கா நற்செய்தி நூல் பாவிகளுக்காக, ஓரங்கட்டப்பட்டவர்களுக்காக எழுதப்பட்டது ஒரு காரணமாக இருக்கலாம். இங்கு லூக்கா ஆசிரியர் இவர்களை குறிக்க "கக்கூர்கோன்" என்ற கிரேக்கச் சொல்லைப் பயன்படுத்துகிறார். இதற்கு "புரட்சிக்காரர், தீவிரவாதி" என்பது பொருள். ஆகவே ஒன்று மட்டும் தெளிவு, இவர்கள் சாதாரண குற்றவாளிகள் அல்லர்.

இவர்களில் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கும், மற்றவர் கைவிடப்பட்டதற்குமான காரணங்களையும், இருவரும் நம் வாழ்வுக்குத் தரும் பாடம் என்ன என்பதையும் நோக்கிடுவோம்.

## 1. உன்னை அறிந்துகொள் :

லூக். 23:41 நாம் தண்டிக்கப்படுவது சரியேஎன்கிறது. தன்னை அறிவது என்பது மிக உன்னத பட்டறிவு. அதாவது இது தன்னிலிருந்து தன்னை பிறப்பிப்பது அல்லது பிரசவிப்பதாகும். முதல் பிறப்பு இயல்பானது. அதற்கு நாம் எதையுமே செய்ய வேண்டியதில்லை. அது நமது பெற்றோரால் தரப்படுவது. ஆனால் இரண்டாம் பிறப்போ நம் கையிலேதான் இருக்கிறது. முதல் பிறப்பு நமக்கு நிறம், பெயர், முகவரி, நீளம், உயரம், இனம் ஆகியவற்றைத் தருகிறது. ஆனால் இரண்டாம் பிறப்போ நான் யார்? நான் எதற்காகப் பிறந்தேன்? என பிறப்பின் பொருள் என்ன? நோக்கம் என்ன? என் நிலை என்ன? பலம், பலவீனம் என்ன? இப்போது நான் எந்த நிலையில் இருக்கிறேன்? என்பதற்கு விடை தருகிறது.

இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் இரண்டு முறை பிறப்பது அவசியம். அதனால் தான் ஆண்டவர் நிக்கதேமுவிடம் சொன்னார் மறுபடியும் பிறவாவிட்டால் எவரும் கடவுள் அரசில் புகமாட்டார். என்று அப்படியென்றால் தன்னை அறிவது தான் மறுபடியும் பிறத்தல். தன்னை மீண்டும் பிரசவிப்பதே இரண்டாம் பிறத்தல் ஆகும். இந்த இரண்டாம் பிறப்பை அடைந்தவர் தான் மனம்மாறின மனிதர். லூக். 23:41-ல் இன்னொரு குற்றவாளியைப் பார்த்துக் நாம் தண்டிக்கப்படுவது சரியானதே, நாம் செய்தவைகளுக்குத் தகுந்த பலனை அடைகிறோம். இவரோ அப்பழுக்கற்றவர். தன்னை அறிந்தவனின் அடிப்படை மாற்றம் இதுதான். எவர் தான் தப்பு செய்ததை அறிகிறாரோ அவர் தான் குற்றவாளி அல்லது தவறு செய்தேன் என ஒப்புக்கொண்டுவிடுவார். தன்னை படிக்காதவர், தன்னைப் பிரசவிக்காதவர் தன் தவறை உணரமாட்டார். இன்னொரு குற்றவாளி கடைசி வரை தன் தவறை உணராததற்கு இதுவே காரணம். ஆகவே தான் விவேகானந்தருக்கு ஆயிரம் (6-ம் நூற்றாண்டு) ஆண்டுகளுக்கு முன்பே திருமூலர் பாடினார். “தன்னை அறிய தனக்கொரு கேடில்லை, தனக்கு தானே நண்பனும், பகைவனும்” கண்ணதாசன் பாடினார் “உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால்...வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் தலை வணங்காமல் நீ வாழலாம்”.

அப்படியென்றால் தன்னை அறிய ஒருவர் என்ன செய்ய வேண்டும்? உள்முகப் பயணம் செல்ல வேண்டும். புரியும்படியாய்ச் சொல்ல வேண்டுமாயின் ‘தியானம்’ செய்ய வேண்டும். இந்த உள்முகப் பயணம் எனும் தியானமே சாதாரண சித்தார்த்தரை ‘புத்தர்’ எனும் நிலைக்கு உயர்த்தினது. நான் யார்? என்பதற்கு விடைதேடும் பயணம் இது, வாழ்வின்

நோக்கத்தை அறியும் பயணம் இது. தன் தவறை உணர்த்தும் பயணம் இது. புதிய மனிதராக மாற்றும் பயணம் இது. இதற்கு மனம் தான் கருவி, ''மனஸ்'' எனும் வடமொழி சொல்லிலிருந்துதான் 'மனிதர்' வந்தது என நம்புகிறோம். அதாவது மன் + இதன் = மனதை இதமாக வைத்திருப்பவர் என்பது பொருள். தன்னை அறிந்தவர் எப்போதும் மனதை இதமாக வைத்திருப்பார். தன் எல்லா அழுக்காறுகளையும் நீக்கி தூய்மை அடைவார்.

## 2. உன்னதரைப் புரிந்துகொள் :

...இவர் (இயேசு) ஒரு குற்றமும் செய்யாதவர் (லூக். 23:41b)

பேரின்ப வாழ்வு பெற கடவுளைப் புரிந்து கொள்வது அவசியம். கடவுளைச் சரியாகப் புரிந்து கொள்வது என்பது ஒரு வேள்வியை போன்றது. அவ்வளவு எளிதானது அல்ல. இதை மேற்பூச்சாகப் பார்த்தால் இதில் என்ன இருக்கிறது, நாங்கள் அனைவரும் கடவுளை அறிந்து வைத்திருக்கின்றோமே என்பது தான் நம் அத்தனைபேரின் விடையாக இருக்கும். ஆனால் இதன் வீரியத்தை ஆழத்திற்குச் சென்று பார்த்தால் தான் யார் கடவுளைச் சரியாய்ப் புரிந்து வைத்திருக்கிறார் என்பது புலப்படும்.

இன்று நாம், இரவல் அறிவைக் கொண்டும், இரவல் ஞானத்தைக் கொண்டும் மாத்திரமே கடவுளைப் புரிந்து வைத்திருக்கிறோம். இரவல் அறிவு என்றால், மற்றவர்கள் அதாவது ஆயர்கள், திருமறை அறிஞர்கள் கடவுளைக் குறித்து என்ன சொல்லியிருக்கின்றனரோ, என்ன எழுதியிருக்கின்றனரோ அதை வைத்துக் கொண்டு கடவுளை ஒரு சிறிய வட்டயத்திற்குள் அடைக்க முற்படுகிறோம். இந்த இரவல் அறிவு எனும் தத்துவத்தை இன்னும் சரியாய் விளங்கி கொள்ள ஒரு ஜென் கதை சொல்கிறேன். இரு கண்களிலும் பார்வை இழந்த பெரியவர் தன் வீட்டிற்குச் செல்ல விழைந்தார். ஞானி சொன்னார், பொழுது இருட்டி விட்டது, ஆகவே விளக்கை கையில் எடுத்து போங்கள் என்று ஒரு கைவிளக்கை எடுத்து நீட்டினார். அந்தப் பெரியவரோ இந்தப் பார்வையற்றவனுக்கு விளக்கு இருந்தால் என்ன, இல்லாமல் போனால் என்ன, எனக்குதான் பார்வை இல்லையே என்றார். துறவி சொன்னார், உங்களுக்குக் கண் தெரியாது என்பது தங்களுக்குத் தெரியும், ஆனால் எதிரில் வருபவருக்குத் தெரியாதே. அவர் வந்து தங்கள் மீது மோதிக் கொண்டால் என்ன செய்வது. பெரியவரும் விளக்கை வாங்கிக் கொண்டு பயணித்தார். திடீரென்று மிதிவண்டியில் வந்த ஒருவர் பெரியவர் மீது மோதி விட்டார்.

உடனே பெரியவர் “அடேய் முட்டாள், எனக்குக் கண் தெரியாது என்பதற்காகத் தானே கையில் விளக்கைப் பிடித்திருக்கிறேன், உனக்குமா கண் தெரியாது?” என்று கடுஞ்சினத்தில் கொக்கரித்தார். உடனே அந்த இளைஞர் “அந்த விளக்கு எப்பவோ அணைந்து விட்டிருக்கிறது” என்றார். இரவல் ஞானத்தை, அறிவை வைத்து கடவுளைப் புரிந்து கொள்ள முற்பட்டால் இதுதான் கதி. இரவல் அறிவு இறுதி வரை பயன் தராது. ஒரு குறிப்பிட்ட எல்லை வரைக்கும் மட்டுமே பயன்படும்.

இத்திருமறைப் பகுதியில் கிறிஸ்துவால் ஏற்றுக்கொள்ளப்படாதவர் இயேசுவை இரவல் அறிவினால் புரிந்து கொள்ள முயற்சித்தார். லூக். 23:39-ல் சொல்கிறார் “நீ மெசியாவானால் உன்னையும், எங்களையும் விடுவித்துக் கொள்”. இந்த அறிவு எங்கிருந்து வந்தது அவருக்கு, நற்செய்தி நூற்களில் சிலுவைக் காட்சிகளைப் படித்துப் பார்த்தால் இது புலப்படும். லூக். 23:35-ல், சமயத் தலைவர்கள், போதகர்கள், படைவீரர்கள் ஆண்டவரைப் பார்த்து, நன்றாக தலையைக் குலுக்கி, கேலியாய் “மற்றவர்களை காப்பாற்றினாயே, முடிந்தால் உன்னைக் காப்பாற்றிப் பார்” என முழங்கினர். வெறுமனே அந்தப் பக்கமாய் போவோரும், வருவோரும் ஒரு நிமிடம் நின்று அப்படியே “முடிந்தால் உன்னைக் காப்பாற்றிக்கொள்” என்கின்றனர். இந்தக் காட்சியைப் பார்த்தும், கேட்டும் கொண்டிருந்த அந்தக் கள்வர், அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட இரவல் அறிவைக் கொண்டு அப்படியே “முடிந்தால் காப்பாற்று” என்கின்றார். மற்றவரோக் அவனை கடுஞ்சொற்களால் கடிந்து, கிறிஸ்துவை ஆண்டவரே என அழைக்கிறார்.

நீங்கள் கேட்கலாம் மத். 27:44-ன் படி “இரண்டு பேரும் மற்றவர்களைப் போன்று கேலி செய்திருக்கிறார்களே” என்று. நியாயமானதுதான். ஏற்றுக்கொள்ளப்பட்டவரும் மற்றவர்கள் சொன்னதை வைத்து அந்த இரவல் அறிவை வைத்து தவறாகப் புரிந்து கொண்டு ஆண்டவரை இகழ்கிறார். ஆனால் முதல் திருமொழியான “மன்னிப்பின்” வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில், இதுவரை கொண்டிருந்த இரவல் அறிவைத் தூக்கி எறிந்து சொந்த அறிவைப் பயன்படுத்தி ஆண்டவரைப் புரிந்து கொள்ள விழைகிறார். இத்தனை கெடுதிகளும், துன்பங்களும் இழைத்த இவர்களையும் மன்னிக்கவேண்டுகிறாரே என்று ஆண்டவரைச் சரியாய்ப் புரிந்து கொண்டார். மனம் மாறினார். கடைசிவரை இரவல் அறிவைத் துணையாய்க் கொண்டிருந்தவர் இழிநிலைக்குப் போனார்.

“கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்.”

## 3. வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள் : (லூக். 23:42)

ஆண்டவரே, உமது அரசு வருகையில் எனையும் நினைத்தருளும்.

உலகில் வாழும் கிட்டதட்ட 95 விழுக்காடு மக்களும் பல திறமைகளைக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அனைவரும் உலகத்தால் அறியப்படுகிறார்களா?. வெகுசிலரே உலகாத்தால் போற்றப்படுகிறார்கள். அதில் கிடைத்த வாய்ப்பைப் பற்றிப்பிடித்து, அதைப் பயன்படுத்தியதன் வழியாய் உச்சத்தை அடைந்தவர்களே அதிகம். காலத்தாலும், சூழ்நிலையாலும், மனிதராலும் மற்றும் தற்செயலாகவும் கிடைத்த வாய்ப்பை பற்றிக் கொண்டவர்கள், பயன்படுத்தினவர்களே உலக வரலாற்றில் தங்கள் பெயரைப் பதித்திருக்கிறார்கள்.

தெற்கு ரயில்வேயில் ஒரு குமாஸ்தா அந்த இளைஞர். சினிமாவில் நடிக்க வேண்டும் என்று நெடுங்காலமாய்க் காத்திருந்தார். திறமை இருந்தது, வாய்ப்பு கிடைக்கவில்லை. ஒரு சமயம், நாடகம் ஒன்றில் ஒரு நிமிடம் அல்லது இரண்டு நிமிடங்கள் மேடையில் தோன்றக் கூடிய சிறிய வாய்ப்பு கிடைத்தது அவருக்கு. அதாவது வயிற்று வலியால் துடிக்கும் ஒரு நோயாளியாய் நடிக்க வேண்டும் அவ்வளவுதான். நாடகத்தில் அந்த காட்சியும் வந்தது மேடையில் காலடி வைத்த முதல் நொடியிலேயே “ஐயையோ டாக்டர்... வலிக்குதே, வயிறு வலிக்குதே” என்று அந்த இளைஞன் துடித்த துடிப்பு ஒட்டுமொத்த அரங்கத்தையும் குபுக்கென சிரிக்க வைத்தது. அச்சமயம் இருந்த எந்த நடிகர் மீதும் கவனத்தைப் பதிய விடாமல் “வயிற்று வலிக்காரனாக மட்டுமே ரசிக்க வைத்தார் அந்த இளைஞன்.” இத்தனைக்கும் கதைபோக்கிலும், நாடகத்திலும் எவ்வித தாக்கத்தையோ, திருப்பு முனையையோ கொண்டு வரும் கனமான பாத்திரம் அல்ல அது. ஆனால் அந்த நாடகம் முடிந்த பிறகும் “வயிற்று வலிக்காரன்” இளைஞன் மட்டுமே ரசிகர்கள் நெஞ்சில் இடம் பிடித்தான். நாடகத்தை ரசித்த எம். ஜி. ஆர் கையால் “சிறந்த நடிகருக்கான, முதல் பரிசையும்” பெற்றான் அந்த இளைஞன்.

கிடைத்த சின்ன வாய்ப்பை உறுதியாய் பற்றிக் கொண்டு தமிழ் திரையுலகைத் தன் காலடியில் கட்டிப்போட்ட அந்த இளைஞன்தான் “நாகேஸ்வரன்” என்ற “நாகேஷ்.”

இத்திருமறைப் பகுதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டவரும் சரியாக தனக்குக் கிடைத்த வாய்ப்பை உறுதியாய்ப் பிடித்தார். தன்னோடு சேர்த்து அறையப்பட்ட இன்னொருவரைக் கடினமாய் கடிந்து கொண்ட மறுநொடியில் கிறிஸ்துவிடம் கேட்கிறார். “உம் அரசில் எனையும் நினைத்தருளும்.” இந்த வாய்ப்பை இப்போது தவறவிட்டால் இனி தனது

வாழ்வில் ஒரு நாளும் இப்படியொரு வாய்ப்பு கிடைக்காது என்பதை நன்றாக அறிந்திருந்தார். விளைவு, பேரின்ப வாழ்வு வாழும் மாபெரும் பேறு கிடைத்தது. இதே அத்தனை வாய்ப்புகளும் இன்னொருவருக்கும் கிடைத்தன. ஆனால் அதை அவர் பயன்படுத்தவில்லை. விளைவு அவர் மனஅமைதி இன்றியே மரணிக்க வேண்டியிருந்தது.

***முடிவுரை*** :

இறைமக்களே, இரண்டு பேரையும் மனத்தில் கொண்டு வருவோம், ஒருவர் மகிழ்ச்சியோடு மரித்தார், மற்றவரோ மன அமைதியின்றி மரித்தார். காரணம் முதலாமவர் தன்னை அறிந்தார். தன் பலம், பலவீனம், தவறு அனைத்தையும் உணர்ந்தார், கடவுளைப் பற்றி சரியான தெளிவைப் பெற்றார், கிடைத்த வாய்ப்பை செம்மையாய்ப் பயன்படுத்தினார் பேரின்ப வாழ்வைச் சொந்தமாக்கினார். அதைப் போன்ற அத்தனை சாதகமான சூழல்களும் மற்றொருவருக்கும் கிடைத்தன. ஆனால் அவர் பேரின்ப வாழ்வை அடைய முடியவில்லை. காரணம் தன்னை, தன் பலம், பலவீனத்தை அறியவில்லை, கடவுளைச் சரியாய்ப் புரிந்து கொள்ள முற்படவில்லை, கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தவில்லை. பேரின்ப வாழ்வு கிடைக்கவில்லை. இதோ வாழ்வின் வழியையும், சாவின் வழியையும் உங்கள்முன் வைத்திருக்கிறேன் என ஆண்டவரும் சொல்கிறார். நாம் எதைத் தெரிவு செய்கிறோமோ அதன்படி நம் வாழ்வு அமையும். நல்லதை இன்றே தெரிந்தெடுப்போம், இம்மையை மட்டுமல்லாது, மறுமையையும் பெற்றுக் கொள்வோம்.

திரு. L. **லோபின் லினேஷ்**

மூன்றாம் திருமொழி

# திருச்சிலுவையின் அங்கீகாரம்

யோவான் 19 : 25-27

**இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம் "அம்மா இவரே உம் மகன்" என்றார்.**

**பின்னர் தம் சீடரிடம் "இவரே உம் தாய்" என்றார். அந்நேரமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்**

**(யோவான் 19 : 26,27)**

இயேசுகிறிஸ்து சிலுவையில் மொழிந்த முதல் திருமொழி பகைவர் யாவருக்குமான பொது மன்றாட்டாகக் காணப்படுகிறது. இரண்டாவது திருமொழி பல தவறுகள் செய்து இளைத்துப் போன ஒரு பாவியின் தனிநபர் மீட்பாகக் காணப்படுகிறது. அதே வேளையில் இயேசுவுக்குச் சிலுவையில் பாடுகளும், வேதனைகளும் அதிகரித்து கொண்டு செல்கின்றன. ஆனால் அவர் தமது பாடுகளையும் வேதனைகளையும் பொருட்படுத்தாமல் தாம் இவ்வுலகில் நிறைவேற்ற வேண்டிய மீட்பின் திட்டம் அனைத்தையும் நிறைவேற்றுவதிலேயே கருத்துள்ளவராய் இருந்தார். பரியாசம் பண்ணுகிறவர்களின் கூட்டம் அதிகமாய்க் காணப்பட்டாலும் அவர்மேல் அளவு கடந்த அன்பும் உடைந்த உள்ளத்துடனும் ஒரு சிறிய கூட்டமாய் இயேசுவின் தாயாகிய மரியாளும் தாயின் சகோதரி சலோமேயும், கிலெயோப்பாவின் மனைவியாகிய மரியாளும், மகதலேனா மரியாளும், இயேசுவின் அன்பான சீடர் யோவானும் நின்று கொண்டிருந்தனர். இந்த நேரத்தில் இயேசுகிறிஸ்து மூன்றாவது திருமொழியை மொழிகிறார். அது சிலுவையின் ஊடாகப் பெற்றுக் கொண்ட அன்பின் உறவு நிலையை வெளிச்சமிட்டுக் காட்டுகிறதாக இருக்கிறது. உளவியல் அறிஞர்கள் இரண்டுவித தேவைகளை மனிதர்கள் விரும்புவதாகக் குறிப்பிடுகின்றனர். ஒன்று ஆளும் உரிமை, இரண்டு அன்பு. பொதுவாக இதில் ஒட்டு மொத்தமாகச் சிலுவையில் இயேசுகிறிஸ்து கொடுத்த அன்பினையே பலரும் விரும்புவர். 1கொரி. 13:13-ல் தூய பவுலடியாரும் அதையே சொல்லுகிறார். நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன. இவற்றுள் அன்பே தலைசிறந்தது. யோவா. 15:13-ன் படி தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விடச் சிறந்த அன்பு யாரிடமும் இல்லை. யோவா. 3:16-ல் கடவுளுடைய அந்த அன்பின் தன்மை வெளிப்படுகிறது. தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்

பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். அந்த அன்பின் ஆழத்தை, உறவை இத்திருமொழி வழியாக ஆழ்ந்து தியானிப்போம்.

## *1. உள்ளம் உடைந்த அன்பின் உறவு :*

நற்செய்தி நூல்கள் இயேசுவுக்கும் அவருடைய தாய் மரியாளுக்கும் இடையே உறவு குறித்து ஒரு சில குறுகிய குறிப்புகளையே தருகின்றன. மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்ற வேண்டிய நாள் வந்தபோது குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க அவர்கள் எருசலேம் கோயிலுக்குக் கொண்டு சென்றபோது சிமியோன் ஆசி கூறி தாயாகிய மரியாவை நோக்கி இதோ இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும். பலருடைய மறைவான எண்ணங்கள் வெளிப்படும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும் என்றார். இங்கோ சிலுவையில் தன்னுடைய மகனை இப்படிப்பட்ட அதிர்ச்சி தரக்கூடிய நிலையில் கண்ட மரியாவுக்கு எப்படிபட்ட மன வேதனையைக் கொடுத்திருக்கும். இதுதான் அந்த அன்னையின் நெஞ்சை ஊடுருவிப் பாய்கிற நிகழ்வாக இருந்திருக்க வேண்டும். இப்படி தம்முடைய தாய்க்கு முன்பதாகச் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிற இந்த நிகழ்வு இயேசுவுக்குத் துன்பம் தருவதாக இருந்திருக்க கூடும். அதிலும் மேலாக, தம் தாய் படுகிற துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாதவராகத் துன்புற்றிருக்கக்கூடும்.

மக்களின் தேவைகளைச் சந்தித்தவர், வைராக்கியம் கொண்ட எருசலேம் மக்களைப் பார்த்துக் கண்ணீர் விட்டார். அவருடைய அன்னையின் துன்பத்தைக் கண்டும் துன்பப்பட்டிருக்கக்கூடும். மரியாளின் உணர்வுப் பூர்வமான துன்பம், அதைக்காட்டிலும் மிகுதியான ஒன்றைக் கொண்டு நிவிர்த்திச் செய்யப்பட வேண்டும். இந்த முறையில் தான் இயேசுகிறிஸ்து உள்ளம் உடைந்த இருதயங்களிடத்தில் அன்பு செலுத்தி தம் திருப்பணியினைச் செய்திட்டார். சிலுவை எல்லாத் தடைகளையும் தகர்த்தெறிகிறது, என்பதை இது வெளிப்படுத்துகிறது. மரியாள், உலகில் தாழ்மையாக நினைக்கப்படுகிற அனைத்துப் பெண்களின் பிரதிநிதியாக இருக்கிறார். “சிலுவை எவ்வித பாகுபாட்டினையும் தருவதில்லை. மாறாக எவரொருவர் இயேசுவிடம் வருகிறாரோ அவரை அவரின் வீட்டின் பங்காளராக மாற்றுகின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது”.

## *2. உறவுகளைக் கடந்த அன்பின் உறவு :*

சிலுவையில் மொழியப்பட்ட இந்த மூன்றாம் திருமொழி யோவானுக்கும் இயேசுவுக்கும் இருந்த உறவினையும்

வெளிப்படுத்துவதாகவும் உள்ளது. அம்மா அதோ உன் மகன் சீடனை நோக்கி அதோ உன்தாய் என்று சத்தம் கேட்ட உடன் யோவான் மரியாவை தன்னுடைய வீட்டில் ஏற்றுக் கொள்கிறார். யோவான் எந்தத் தயக்கமுமின்றி உடனடியாக உறவுகளைக் கடந்த அன்பின் உறவைத் தொடங்குகிறார். எழுத்தளவில் இருக்கும் உறவு செயல்வடிவில் கிறிஸ்துவில் வாழும் எதார்த்த நிலையில் வெளிப்படுகிறது. சிலுவையின் மொழியப்பட்ட வாசகம் சிலுவையில் அன்பிலிருக்கிறது, என்பதைக் காட்டுகிறது. அந்த அன்பு கடவுளிடமிருந்து பெறப்பட்ட ஒன்று. அது மற்றவர்களோடு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய அன்பு என்கிற சிந்தனையை நமக்குப் போதிக்கின்றதாக இருக்கின்றது.

இத்திருமொழி நமக்கு எத்தகைய சிந்தனையைப் பல்சமயச் சூழலில் வைக்கிறது என்பதை நாம் நோக்கிடல் வேண்டும். சிலுவையினண்டை நின்று கொண்டிருக்கின்ற நாம் அனைவரும் ஒரே தாயின் பிள்ளைகளாக மாறவேண்டும். அனைத்து மக்களும் அந்த ஒரே தாயைத் தங்களின் தாயாக ஏற்றுக்கொள்ள வேண்டும். எல்லோருக்கும் ஒரு தாய் என்பவர் நம்மைப் பெற்றெடுத்துப் பாதுகாத்து வருகிற கடவுள். அவரின் பிள்ளைகளாக நாம் மாறுகிறபோது நம்மை வேறுபிரிக்கிற சமயம், சாதீயம், இனம், மொழி இவைகளுக்கு அப்பால் நாம் நின்று செயலாற்றிடுவோம். சிலுவையின் அருகே இருந்த அந்தச் சீடரால் அந்தத்தாயை ஏற்றுக்கொள்ள முடிகிறது. அதேவேளையில் அந்தத் தாயாலும் சீடரை மகனாக ஏற்றுக் கொள்ள முடிகிறது என்றால் அந்த அளவிற்கு ஓர் இணக்கமான சூழல் அவர்களிடையே இருப்பதை நாம் உணர முடிகிறது.

இன்று நாம் நம்முடைய உறவுகளை எப்படி வளர்த்துக் கொள்கிறோம். நம்முடைய சமயம் அதன் நம்பிக்கை என்று ஒரு வட்டமிட்டு அதனுள் இருந்து செயல்பட வேண்டும் என்று எண்ணுகிறோமோ? அல்லது நம்முடைய உறவுகளைக் கடந்து உரையாடல் வழியாகப் பகிர்ந்து கொண்டு ஒரு பொதுமைக் கூட்டுறவைக் காண முயற்சிக்கிறோமா? இதுகாறும் என்னண்டை வாருங்கள் என்று நான் அழைப்புக் கொடுத்தேன். இனிமேல் நீங்களாக வாழ்வின் ஊற்றாம் பெற்றவராம் கடவுளின் ஒரே பிள்ளையாய் அவரிடத்தில் வந்து விடுங்கள். ஒரு குடும்பமாயிருங்கள் என்ற அழைப்பினைச் சிலுவையில் இயேசு தருகிறார். அந்த அழைப்பினை ஏற்று அன்பு செலுத்துவோம்.

திரு. D. ***கிங்ஸ்லி***

**நான்காம் திருமொழி**

# திருச்சிலுவையின் தனிமை நிலை

மத். 27:45-50

**"என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்" மத் 27:46**

கல்வாரி மலையில் தொனித்த சத்தம், சிலுவையில் வெளிப்பட்ட சத்தம், உலகில் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தவரின் வாயிலிருந்து புறப்பட்ட சத்தம். கேட்டோரின் மனதைப் பதற வைத்த சத்தம். ஆண்டவர் இயேசுவின் சத்தம்.

ஏழைகளை ஆதரித்தவர் கைவிடப்பட்டார், பாவிகளை ஆதரித்தவர் கைவிடப்பட்டார், ஒதுக்கப்பட்டோரை ஏற்றுக் கொண்டவர் கைவிடப்பட்டார். ஏன் கைவிடப்பட்டார்?

மூன்று ஆணிகளில் தொங்கிய ஆண்டவர் இயேசுகிறிஸ்து முதல் மூன்று வார்த்தைகளை விரைவில் சொல்கின்றார். இந்த மூன்று வார்த்தைகளும் உலகைச் சார்ந்து கூறுகின்றார். மக்கள் அனைவரும் கலங்கி நிற்கும் நிலையில் திடீர் அமைதியுடன் கூடிய இருள் சூழ்ந்து கொண்டது. இயேசுவும் வேதனையைச் சுமந்தவராய் அமைதியாய்ச் சிலுவையில் தொங்குகின்றார். என்ன நடக்கப் போகிறது எனப் புரியாமல் மக்கள் பயந்து நடுங்கி நிற்கின்றனர். உலகைச் சூழ்ந்த இருள் இன்னும் பயத்தை அதிகரித்தது.

யோவா. 8:12-ல் உலகின் ஒளி நானே என்றவரை இருள் சூழ்ந்து கொண்டது. ஆனால் யோவா. 1:5ன் படி அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை.

### *இருள் :*

ஆறாம் மணி நேரமுதல் ஒன்பதாம் மணி நேரம் வரை பூமியெங்கும் இருள் உண்டாயிற்று (லூக். 23:44). சிலுவையில் அறையப்பட்ட நேரம் யூதர்களின் கணக்குப்படி மூன்றாம் மணிநேரம் இது நம் கணக்குப்படி காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை இப்போது 3 வார்த்தைகளைப் பேசினார், ஆறாம் மணிநேரம் முதல் ஒன்பதாம் மணிநேரம் வரை மூன்று மணி நேரம் காரிருள் திடீர் இருள் வரக் காரணம் என்ன?

### அறிஞர் கருத்து :

மேசியாவைப் புறக்கணித்ததைத் தெரிந்து கொண்ட மக்களான யூதருக்கு, பின்னால் வரப்போகும் துன்பத்தைக் காரிருள் முன்னறிவித்தது என்று G. Campbball Morgan என்பவர் கூறுகிறார்.

ரோம நாட்டின் வானவியல் அறிஞரான ப்ளேகான் என்பவர் கூறும்போது அன்று ஒரு பெரிய சூரிய கிரகணம் உண்டானது போல பகல் இரவாக மாறி நட்சத்திரங்கள் காணும்படி தோன்றியது என்று கூறுகிறார்.

இவைகளை நாம் ஆராயும்போது கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் போது ஏற்பட்ட இருள் இயல்புக்கு மாறானது என்றும் தீர்மானிக்கலாம்.

### இருள் சூழக் காரணம் :

முதல் உடன்படிக்கையின்படி பலி கொடுக்கப்படும் ஆடு, புறா இவை பழுதற்றவையாகக் காணப்பட வேண்டும். அது தூய்மையானதாக இருக்க வேண்டும். ஆனால் யாருக்காக அது பலியாக்கப்படுகிறதோ அவர்களின் பாவத்தைச் சுமந்து நிற்கும். அதுபோல இயேசு பாவம் அறியாதவர் நமக்காக நம் அனைவரின் பாவத்தையும் தம் மேல் சுமந்தவராய் சிலுவையில் தொங்குகிறார். எசா. 59:2-ல் சொல்கிறார் உங்கள் பாவங்களே அவர் செவி சாய்க்காதவாறு அவரது முகத்தை உங்களுக்கு மறைத்துள்ளது. நம் பாவங்களே மேகமாய்த் தந்தையின் முகத்தை மறைத்தது.

இன்றும் நம்மிடையே காணப்படும் பகைமைகளும், சண்டைகளும், போட்டிகள், பொறாமை, வஞ்சகங்கள், வழக்குகள் போன்றவை காரிருளை போன்று நமக்கும் கடவுளுக்கும் உள்ள உறவை மறைக்கின்றது. இதனால் ஏன் கைவிட்டீர்? என்ற கேள்வி எழுகின்றது. அதே போல் நீதி மறுக்கப்பட்ட நிலையில் இருளின் மத்தியில் எழுந்த சத்தம் என் இறைவா, என் இறைவா, ஏன் என்னை கைவிட்டீர் என்பதாகும். இந்தச் சத்தம் எப்படிப்பட்டது?

### 1. நம்பிக்கையை வெளிப்படுத்திய குரல் :

தம் நம்பிக்கை முழுவதும் யாரிடம் உள்ளது என்பதை வெளிப்படுத்துத்தின சத்தம். யோவா. 1:10ல் உலகு அவரை அறிந்து கொள்ளவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது. அவருடன் இருந்தவர்களும், நன்மைகளைப் பெற்றவர்களும் உறவினரும் கைவிட்ட போதும் வெளிப்படாத சத்தம் பிதாவின் முகம் மறைந்த போது சிலுவைத் துன்பத்தை ஏற்றுக் கொண்டவர் வேதனையின் மத்தியிலும் பிதாவோடு நின்று முடிவு வரை அவரையே எதிர்பார்க்கின்றார். இந்த நம்பிக்கையையே நம்மிடமும் எதிர்பார்க்கின்றார்.

தானி. 3:16-18 இல் தானியேலின் நண்பர்களின் விசுவாச அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது. எங்கள் கடவுள் விடுவிக்க வல்லவர் விடுவிக்காவிட்டாலும் உம்மையும் நீர் நிறுத்தின சிலையையும் வழிபட மாட்டோம். இன்று துன்பத்தில் நம் சத்தம் இப்படி இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவும் துன்பத்தில் பிதாவோடு நின்றார்.

### *2. நம்பிக்கையை வழங்கிய குரல் :*

இந்த நான்காம் வார்த்தை அனேகருக்கு நம்பிக்கை அளித்தது. அன்று வியாதிப்பட்டு, வேதனையோடு மரித்தால் பாவி எனக் கூறப்பட்ட காலம். ஆகவே பாவிகள் என ஒதுக்கப்பட்ட மக்களுக்கும் மறுவாழ்வு உண்டு என்பதை உணர்த்தும் வண்ணம் அவர்களுக்கும் நம்பிக்கை அளிப்பதாய்க் காணப்படுகிறது. கைவிடப்பட்டோரின் சார்பில் எழுந்த குரல். எங்களுக்காக ஒருவர் உண்டு என்ற நம்பிக்கையைத் தந்தது.

மரித்த லாசருவை உயிரோடு எழுப்பி நம்பிக்கை கொடுத்தவர் தம் உயிர்த்தெழுதல் மூலம் கைவிடப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையை அளிக்கின்றார்.

### *3. நம்பிக்கையை எதிர்பார்க்கும் குரல் :*

ஏன் என்னை கைவிட்டீர்? என்ற கேள்வி இன்றும் தொனித்து கொண்டு தான் இருக்கிறது. ஏழைகள், ஏமாற்றப்பட்டோர், கைவிடப்பட்டோர் ஆகிய இவர்களுக்கு நம் பதில் என்ன?

மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்கிறார் ஆண்டவர் (மத். 25:40). ஆகவே இவர்களை ஏற்று கொள்வதின் மூலம் கிறிஸ்துவின் நம்பிக்கைக்கு உரியோராய் நாம் திகழ முடியும்.

திரு. J. **ஜாஸ்பர்**

**ஐந்தாம் திருமொழி**

# திருச்சிலுவையின் தவிப்பு

யோவா. 19:28,29

**"தாகமாய் இருக்கிறது"** யோவான் 19:28

சில மனிதர்கள் தங்கள் உயிர்பிரியும் நேரத்தில் தண்ணீர் கேட்பது வழக்கம். சில நேரங்களில் முதியவர்கள் இறக்கும் தருவாயிலிருக்கும் போது குடும்பத்தின் பிள்ளைகள் மற்றும் உறவுகள் இறுதியாக, தண்ணீர் கொடுப்பதுண்டு. இங்கு இயேசுகிறிஸ்து மனிதர் என்ற நிலையில் இந்தப் பாடுகளை ஏற்றுக் கொண்டு இறந்தார் என்பதற்கு அடையாளமான திருமொழியாக இது திகழ்கிறது. ஏனெனில் யோவான் நற்செய்தியாளர் காலத்தில் வாழ்ந்த ஞான உணர்வுக் கொள்கையினர் மற்றும் தோற்றக் கொள்கையினர் இயேசு உண்மையிலேயே மனித உடலைக் கொண்டிருக்கவில்லை என்றும், அந்த உடல் வெளித்தோற்றமேயொழிய அந்த உடலில் அவர் இல்லை என்றும் தவறாகப் போதித்தனர். இவர்கள் கூற்றுப்படி இயேசு உடலளவில் பாடுகள் அனுபவிக்கவில்லை. இக்கூற்றின் உண்மையற்ற தன்மையை வெளிக்காட்டவே யோவான் இத்திருமொழியை பதிவு செய்துள்ளார். விபத்திற்குள்ளாகி இரத்தம் அதிகமாக வெளியேறிய மனிதர் தண்ணீர் கேட்பது போல மானுட மகன் இயேசுகிறிஸ்து 'தாகமாய் இருக்கிறது' என்று கூறினார். யோவான் நற்செய்தியாளர் மறைநூலில் எழுதியுள்ளது நிறைவேறவே இயேசு இவ்வாறு கூறியதாகக் குறிப்பிடுகின்றார்.

தி.பா. 69:21, 22:15 போன்ற பாடல் வரிகளில் தாவீது தனது வாழ்வின் துன்பம் மிகுந்து, எதிரிகளால் நெருக்கப்பட்ட சூழலில் கடவுளை நோக்கி தனது இயலாமையையும், பெலவீனத்தையும் கூறுகிறார். இங்கு இயேசு தமது மனித உடலின் பெலவீனத்தை வெளிப்படுத்தினார். கடைசி நேரத்தில் தண்ணீர் கொடுப்பது 'பேறு' என்று கருதும் மரபு உண்டு. இயேசுவுக்குத் தண்ணீர் கொடுத்த 'பேறு' நமக்குக் கிடைக்க அல்லது அதற்கு கழுவாயாக நாம் எதைச் செய்ய வேண்டும்?

### *1. தாகம் தணிப்போம் :*

அதிக செல்வம் நிறைந்த மனிதர் வந்து 'பசியாயிருக்கிறேன்' என்று ஏங்கும் குரலில் கேட்டால், அது ஆச்சரியமான ஒன்று. அது போல இயேசுவின் தாகமும் ஆச்சரியமான ஒன்று. ஏனென்றால் இயேசு

❀ உலகத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும், ஆறுகளையும், ஏரிகளையும், ஊற்றுகளையும் படைத்த கடவுளின் மைந்தர்.

❀ எதை உண்பது, எதைக் குடிப்பது என்று கவலை கொள்ளாதீர்கள் என்று கூறியவர் (மத். 6:25).

❀ சமாரியப் பெண்ணிடம் நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிப்போருக்கு ஒருபோதும் தாகமுண்டாகாது என்று கூறியவர்.

❀ தேவையானதை விண்ணுலகத் தந்தையிடம் கேளுங்கள் என்று கூறியவர்.

எனவே இயேசுவின் தாகம் நமக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தாலும், கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று போதித்தவர், தம் தாகத்தை மக்கள் தணிப்பார்கள் என்ற நம்பிக்கையில் 'தாகமாய் இருக்கிறது' என்று கூறினார்.

தாகமாய் இருக்கிறது என்று ஏங்கும் குரல் இன்று நமது காதுகளிலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஏழை எளியோரிடமிருந்தும் கரிசனை காட்டப்பட வேண்டியோரிடமிருந்தும் இந்த குரல் இன்றும் ஒலிக்கிறது. இக்குரல் இயேசுவின் குரல் என்பதை அடையாளம் காண்போம். ஆன்மிக தாகம் என்ற ஒரே சிந்தனையில் மூழ்கி விடாமல் மத். 25:40ல் இயேசு கூறும் எளிய சகோதரர்களின் தாகம் தீர்க்கப் புறப்படுவோம்.

வழி தெரியாதோருக்கு விழியாகவும், இருதயம் நொறுங்குண்டோருக்கு அருமருந்தாகவும், பசியிலும், பட்டினியிலும் வாழ்வோருக்கு திறந்த உள்ளமுடையோராகவும், பின்தங்கியவர்களை உயர்த்த கரம் கொடுப்போராகவும் இயேசுவின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவோம்.

### 2. தாகம் கொள்வோம் :

தாகம் கொண்ட மனிதர் தண்ணீர் குடிக்கின்ற போது ஒரு நிறைவைக் காண்கிறார். மலைப்பொழிவில் இயேசு நீதியின் மேல் பசிதாகம்(வேட்கை) கொண்டோர் நிறைவு பெறுவர் என்று கூறினார். இயேசு நீதியையும் நேர்மையையும் நிலை நாட்டுவதைத் தம் பணியின் தாகமாகக் கொண்டிருந்தார். இயேசுவின் இத்தாகமே சிலுவை மரணம் வரை அவரைக் கொண்டு சென்றது. நீதியின் பொருட்டு துன்பம் ஏற்போர் பேறுபெற்றோர் என்று ஏற்கனவே அவர் கூறியிருந்தார்.

திருக்கோவிலை இயேசு தூய்மை செய்த செய்தியை (மத். 21, மாற். 11, லூக். 19, யோவா. 2) நான்கு நற்செய்தியாளர்களும் பதிவு செய்துள்ளனர். வணிகரின் இருக்கையை இயேசு புரட்டினார் என்பதற்கு மத்தேயு, மாற்கு 'கதீட்ரா' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். கதீட்ரா என்பது தலைமைக் குருவின் இருக்கை. ஏனெனில் தலைமைக் குருவும், அவரது பிள்ளைகளும் சந்தைப் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும் சக்திகளாயிருந்தனர். பொருட்களின் விலைகளைத் தங்கள் விருப்பப்படி தீர்மானித்தனர். எனவே தங்கள் விருப்பப்படி அநீதியாக நடந்து கொண்டவர்களை இயேசு தட்டிக்கேட்டார். அநீதி செய்பவர் யாரென்றும் பாராமல் நீதியை நிலை நாட்டுவதில் வேட்கை கொண்ட இயேசு சிலுவையில் "தாகமாய் இருக்கிறது" என்றார். தாகம் கொண்டவர் நிறைவு பெற்றிட தண்ணீர் தர வேண்டும். ஆமோஸ்இறைவாக்கினரின் கனவுபோல "நீதி வெள்ளமெனவும், நேர்மை வற்றாத ஆறாகவும்" (ஆமோஸ் 5:24) நிலைநாட்டப்படும்போது இறைமகனின் தாகம் தணிக்கப்படும்.

இன்றும் நீதிக்காக வீதியில் நிற்கும் யாரோ ஓர் அன்னியரின் குரல் "தாகமாய் இருக்கிறது" என்று ஒலிக்கிறது. அது இயேசுவின் குரல் என்று அடையாளம் காண்போம்.

இயேசுவின் தாகத்தைத் தணிக்கவும், அவரது தாகத்தை ஏற்கவும் திருச்சபை இன்று அழைக்கப்படுகிறது. மேற்பூச்சான ஆன்மிகத்தை விட்டு சற்றே வெளியே வந்து பார்ப்போம். எளியவரில் தம்மை அடையாளம் காட்டிய இயேசுவின் தாகத்தைத் தணிப்போம். நீதியை நிறைவேற்ற தாகம் கொள்வோம்.

திரு. B. **பக்த ஜெபனேஷ்**

**ஆறாம் திருமொழி**

# திருச்சிலுவையின் முழுமையாக்கம்

யோவா. 19:29,30

***"...இயேசு எல்லாம் நிறைவேறிற்று என்றுகூறித் தலைசாய்த்து ஆவியை ஒப்படைத்தார்."*** **யோவா. 19:30**

உலகத்தின் மெசியாவாக உன்னதத்தின் திருமைந்தராக திருப்பணியேற்றுக் கொண்ட பெருமகனாக சாதனையின் முழக்கமாக கல்வாரி திருச்சிலுவையிலிருந்து மொழிந்த வாக்கே 'எல்லாம் நிறைவேறிற்று' என்பதாகும். ஒன்றின் நிறைவு இன்னொன்றின் தொடக்கம் என்பதாகவே இவ்வாக்கு எதிரொலிக்கிறது. இலட்சிய நோக்கும், இறையரசின் பார்வையும் கொண்ட நிலையில் பணி தொடர்ந்த இயேசுநாதர் அதன் நிறைவேறுதலுக்காக தன்னையே உரு இழக்க அர்ப்பணித்தார். யோவா. 4:34-ல் என்னை அனுப்பினவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும், அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் பணி என்றவர் இறைவாக்கின் நிறைவேறுதலாகவே நிறைவேறிற்று என நிம்மதியாக பெருமூச்சு விடுகிறார். இயேசுநாதரின் திருச்சிலுவையின் திருவாக்கு உணர்த்தும் உண்மை என்ன?

## *1. இறைத்திருவுளம் நிறைவேறிற்று* :

எல்லாம் நிறைவேறிற்று எனும்போது இனி நிறைவேற்ற வேண்டியது எதுவுமில்லை என்பதாகும். அவ்வாறே அதன் நோக்கத்தை நாசரேத்தூர் அறிக்கையினூடாக அறிவித்தார் (லூக். 4:18,19). மட்டுமன்று அதை நிறைவேற்றவும் செய்தார். கடவுளின் திருவுளம் நிறைவேற்றும் உன்னத பணியில் இணைந்து செயல்படுவோர் அனைவரும் என் சகோதரர்களே எனக் கூறி (மத். 12:50) திருப்பணியின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தினார். இந்த திருவுள நிறைவேறுதலின் தகவுகளாக கனிவையும், மனத்தாழ்மையையும் (மத். 11:29) தன்னகத்தே கொண்டு அறைகூவலுடன் பணி தொடர்ந்தார். மட்டுமன்று நான் பெற வேண்டிய ஒரு திருமுழுக்கு உண்டு. அது நிறைவேறுமளவும் நான் மிகவும் மன நெருக்கடிக்குள்ளாகி இருக்கிறேன் எனக்கூறி (லூக். 12:50) தன்னையே தந்தையின் திருவுளத்திற்கு ஒப்படைத்தார் (லூக். 22:42). உலகப் பணியினை நிறைவேற்றி தந்தையை மகிமைப்படுத்தின தனயன்

(யோவா. 17:4) நம்மிடம் இந்தப் பொறுப்பை கையளித்துள்ளார். இதில் அவரது விருப்பமறிந்து திருவுளம் நிறைவேற்ற முன்னெடுத்துச் செல்வோம்.

### *2. இறைமீட்பின் பணி நிறைவேறிற்று* :

அன்பின் பெருக்கத்தால் மானிட வாழ்வின் மீட்பை விரும்பிய கடவுள், அதற்காகவே திருமைந்தரை உலகிற்கு தந்தார் (யோவா. 3:16). இப்பணியை நிறைவேற்றுதல் என்பது கடினமாயிருந்தாலும் அதற்கு கீழ்ப்படிந்து (பிலி. 2:7,8) தம்மையே தியாக பலியாக்கினார். இதை எபி. 10:10-ல் ஒருமுறை தம் உடலைப்பலியாக செலுத்தியதன் மூலம் நாம் தூயவராக்கப்பட்டிருக்கிறோம் எனக் குறிப்பிடுகிறார். நம் பாவங்களுக்கு கழுவாய் அவரே, நம் பாவங்களுக்கு மட்டுமல்ல அனைத்துலகின் பாவங்களுக்கும் கழுவாய் அவரே (1யோவா. 2:2). மீட்பரான இயேசுகிறிஸ்துவின் மீட்பை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிறைந்த எதிர்பார்ப்பினூடாக நம்மிடம் ஒப்படைத்து நிறைவேறிற்று என வெற்றியின் குரலை ஒலிக்கிறார்.

சிலுவையின் முழக்கம் சிதைக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையாகவும், மீட்பின் முக்கியத்துவமாகவும் அமையட்டும். மண்ணிலிருந்து விண்ணிற்குச் சென்ற மகிபனின் அடியொற்றி நாமும் இறைப்பணியைத் தொடர்வோம்.

திரு. M. **ஜெபு ஜெய்சிங்**

**ஏழாம் திருமொழி**

# திருச்சிலுவையின் ஒப்படைப்பு

லூக். 23:44-46

**"தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்."** லூக் 23:44

ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் ஒருநாள் முடிவடையும். பொதுவாக மனிதன் ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்தவுடன் தன்னுடைய இறுதி நாட்களை எதிர்பார்க்கிறான். இதனால் ஒவ்வொரு நாளும் விதவிதமான நிலையில் தன்னை ஆயத்தப்படுத்தி வாழுகின்றான். சாதாரணமாக, ஒருவர் எப்படி வாழ்ந்தார் என்பதைப் போன்று, தனது வாழ்வை எப்படி நிறைவு செய்கிறார் என்பதும் முக்கியமானது. எனவேதான், ஒருவருடைய வாழ்வின் இறுதியில் "என்ன வார்த்தை" கூறினார் என்பதை அறிவதில் மிகவும் ஆர்வம் கொள்ளும் வழக்கம் மக்களிடம் உள்ளது. இங்கிலாந்தின் முன்னாள் தலைவர்களில் ஒருவர் தன் மரணவேளையில் "இந்த நொடிப்பொழுது வரை கடவுளும் இல்லை, நரக, மோட்சமும் இல்லை என்று எண்ணியிருந்தேன். ஆனால் இப்பொழுதோ அந்த இரண்டும் உண்டு என்றும், நான் நரகத்திற்கே போகிறேன் என்று உணர்கிறேன்" என்றார். இங்கே இயேசு கிறிஸ்து இறுதி வார்த்தையாக தம்மை அனுப்பின தந்தையின் கரங்களிலே தமது உயிரை ஒப்படைக்கிறார். இயேசு கிறிஸ்துவின் இறையாட்சிப்பணி முழுவதும் கலிலேயா துவங்கி எருசலேம் வரை அவருடைய பாடுகளையும் மரணத்தையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. நற்செய்தி முழுவதிலும் இயேசு கிறிஸ்து தம் இறுதி நாட்களை நோக்கி மிகத் தெளிவுடன் பயணித்தார். இறுதியில் அவர்தம் மரணத்தைச் சந்தித்த போது அது ஆழ்ந்த சிந்தனைகளைத் தூண்டும் ஒரு செயலாக விவரிக்கப்படுகிறது. அவருடைய இறுதியான மன்றாட்டாகிய ஏழாம் திருமொழி மூன்று உண்மைகளை நமக்குக் கற்றுத் தருகின்றது.

## *1. இயேசு கடவுளின் மகன் என்ற உறுதிப்பாடு* :

மனித வாழ்க்கையிலே இறப்பு என்பது எவரும் நினையாத வேளையிலே திருடனைப் போல வந்து விடுகிறது. ஆனால் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இறப்பு திடீரென்று அவர் எதிர்பாராத நேரத்தில் நிகழவில்லை. அவருடைய இறப்பை அவர் அறிந்திருந்தார். ஆகவேதான் நண்பகலில் ஏற்பட்ட இருள், கடவுளால் படைக்கப்பட்ட படைப்பு தன் சோகமான சான்றை வெளிப்படுத்தியது (மத். 27:51-54). இயேசுகிறிஸ்துவின் மீட்பு பணியில் பல இயற்கைச் சக்திகள் பங்கேற்றன.

அத்தகைய இயற்கைச் சக்திகள் சார்பாக இயேசுகிறிஸ்துவின் இறப்புக்கு எதிர்ப்புக் காட்டும் வகையில் “நண்பகல் இருள்” ஏற்பட்டுள்ளது (எசா. 13:9-11; 50:2,3; எரே. 15:6-9). இயேசுகிறிஸ்து செய்த இறையாட்சிப் பணியின் முழுமை மாற். 15:37-39 வரையுள்ள இறைவார்த்தைகளில் அடங்கியுள்ளது. இதில் மிகச் சுருக்கமாக “இயேசு உரத்தச் சத்தமாய் கூப்பிட்டு உயிர் துறந்தார்” என்று உள்ளது. “உயிர் துறந்தார்” என்கிற சொல் கிரேக்க மூலத்தில் “இயேசுதாமே தம் விருப்பப்படி உயிர்துறந்தார்” என்கிற பொருளில் உள்ளது. கொடுமையான உடல் வலியில், உரத்தக்குரலில், துடிதுடித்து, சத்தமிட்டு வாய்க்கு வந்தப்படிப் பிதற்றி இறப்போரின் மத்தியில், இயேசுவோ மிக அடக்கமாக, அமைதியாக, ஆர்வத்தோடு இறப்பை தான் கடவுளின் மகனாக உறுதிப்படுத்தி ஏற்றுக்கொண்டார். காரணம், “என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்வதில்லை. நானாகவே அதைக் கொடுக்கிறேன்” (யோவா. 10:18) என்றதன்படி, அவர் தாமாகவே இறப்பை முன்வந்து ஏற்றுக் கொண்டார். இயேசு உரக்கச் சத்தமிட்டார் என்கிற சொற்றொடரில் ஓர் ஆழ்ந்த கருத்தை நாம் காண வேண்டும். துன்புற்று தம் வலிமை அனைத்தும் இழந்த இயேசு உரக்க சத்தமிட்டிருக்க முடியுமா? இல்லை. இயேசுவின் திருமுழுக்கின் போதும், அவருடைய உருமாற்றத்தின்போதும் எழுப்பப்பட்ட தந்தையின் குரல் இயேசு கடவுளின் மகன் என்ற உறுதிப்பாட்டைக் கொண்டிருந்தது (மாற். 1:11; 9:7). கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு தம்மை வெளிப்படுத்திய போதும் இயற்கை முழக்கங்கள் அறிகுறிகளாக இருந்தன. அதேபோல் இயேசு எழுப்பிய உரத்தக்குரலில் ஒரு மிகப்பெரிய வெளிப்பாடு அடங்கியுள்ளது. அது “இயேசு கடவுளின் மகன் என்ற உறுதியான வெளிப்பாடேயாகும்” மனிதனாகப் படைக்கப்பட்டு கடவுளின் உயிர் மூச்சைப் பெற்று, வாழும் மனிதர்களாகிய நாம் யாருடைய கைகளில் நம்மை ஒப்புக் கொடுக்கிறோம். ஆவியை தந்த ஆண்டவரிடமா? இல்லை, தீமைக்கு அழைக்கும் தீயோனான அலகையிடமா?

## *2. அனைவரும் கடவுளின் மக்களே என்ற வெளிப்பாடு* :

இயேசுவின் ஒப்படைப்பு உண்மையான மாபெரும் வெளிப்பாடுகளைத் தருகின்றன. அதாவது, திருக்கோவிலின் திரை இரண்டாக, மேல்துவங்கி கீழ் வரைக்கும் கிழிகின்ற ஒரு செயல் நம் எண்ணங்களுக்கு அப்பாற்பட்டது (லூக். 23:45). இதன் உட்கருத்து மிகவும் ஆழமானது. இந்த திரையானது யூதர்கள் மட்டும் வழிபாடு செலுத்தக்கூடிய ஆலயத்தின் தூய இடத்தை மூடி மறைத்து; யூதர் அல்லாதவர் அங்கு செல்லாமல் தடுத்தது. கடவுள் யூதர்களுக்கு மட்டும் உரியவர் என்கிற கருத்துடன் இத்திரை விளங்கியது. இயேசுவின் ஆவி ஒப்படைப்பின் வழி திருக்கோவிலின் திரைச்சீலைக் கிழிந்து இனி “கடவுள் அனைவருக்கும் உரியவர், அனைவரும் கடவுளின் மக்களே” என்கிற

வெளிப்பாடு உண்மையாகி, நிலைநாட்டப்பட்டது. தூய பவுலடியார் இதை தெளிவுப்படுத்தும் போது, "பகையை சிலுவையினால் கொன்று, அதினாலே இருத்திறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" (எபே. 2:16). இப்படியிருக்க பழையவைகள் ஒழிந்துப் போயின. எல்லாம் புதிதாயின. இவைகள் கடவுளால் ஆயின. கடவுள் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கினார் என்றும் (2கொரி. 5:17,18). இயேசு தம் உடலில் அடைந்த இறப்பினாலேயே நம்மை ஒப்புரவாக்கினார் என்றும் (கொலோ. 1:21) கூறுகிறார். ஏனெனில், இயேசுவின் ஒப்படைப்பால் பகைமை களையப்பட்டது. உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாட்டின் சங்கிலி உடைக்கப்பட்டது. தீண்டத் தகாதவர்கள் என்று அந்நியப்படுத்தும் முறை அகற்றப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் இறையாட்சிப் பணி முழுவதும் இதற்காகத் தான் அமைந்தது. ஏனெனில் அவருடைய பணி துவக்கமே புறஇனத்தவருடைய கலிலேயாவிலேதான் அமைந்தது. அவர் அதிகமாக இறையாட்சியை பகிர்ந்து கொண்டதும் யூதரல்லாத புறஇனத்தவருடைய கலிலேயாவில் தான். அவர் கலிலேயா எங்கும் சுற்றி நடந்து இறையாட்சியை அறிவித்து மக்களுக்கு உண்டாயிருந்த அனைத்து வியாதிகளையும், அனைத்து நோய்களையும் நீக்கிக் குணமாக்கினார் (மாற். 4:23). எனவே தான் அவர் "கலிலேயனாகிய இயேசு" என்று அழைக்கப்பட்டார். கடவுளை யார் யார் தேடுகின்றார்களோ, அவர்கள் எப்படிப்பட்டவர்களேயாகிலும் அவர்களுக்கு அவர் வெளிப்படுவார். பாவியாகிய சகேயு, மக்களால் பழித்துரைக்கப்பட்ட சகேயு. இயேசு எப்படிப்பட்டவர் என்று அறிய ஆவல் கொண்டபோது அவருடைய "பாவி" என்கின்ற முகத்திரைக் கிழிக்கப்பட்டு, கடவுளுக்கு உகந்தவராய், ஆபிரகாமின் மகனாய் மாற்றப்பட்டார். இக்காலக்கட்டத்தில் திருக்கோவிலின் திரைச்சீலைப் போன்ற தடுப்புச்சுவர் நமக்கும் மற்றவருக்கும் இருக்குமேயாயின் அதனை தகர்த்தெறிந்து நாம் அனைவரும் கடவுளின் மக்களே என்கின்ற உண்மையை வெளிப்படுத்துவது அவசியமாகும்.

### *3. சான்றோர் அளித்த சாட்சியின் வெளிப்பாடு* :

தாமாக இறப்பை நாடி தம்மை ஒப்புக்கொடுத்த இயேசுவின் இந்த அருஞ்செயலால் அனைத்து உலகமும் ஒரே தன்மையை அடையும் என்கிற சிந்தனைக்கு சான்றாக உள்ளது இந்த சாட்சி. அதாவது, இயேசுவின் கொலைக்கு காவலாக நின்றிருந்த ஒரு புறஇனத்தின் நூற்றுவர் தலைவர் இயேசு உரத்த சத்தமாய் கூப்பிட்டு ஆவியை ஒப்படைத்ததைக் கண்டு இயேசுவை கடவுளின் மகனாக ஏற்று அவர் மீது தம் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார். இவ்வாறு யூதர் புற இனத்தார் என்கிற பாகுபாடற்ற ஒரு புதிய நெறி இயேசுவின் ஒப்படைப்பால் உருவாக்கம் பெறுகிறது. அது மட்டுமல்லாமல் "இறைமகன்" என்ற பட்டத்துக்குரியவர் "சீசரே" (இராயன்) என்றிருந்த நிலைப்பாட்டிற்கு நூற்றுவர் தலைவரின் அறிக்கை ஒரு

மறைமுக மறுப்பாக அமைகிறது. அதாவது, "சீசர்" அல்ல, "சிலுவை நாயகன் இயேசுவை மெய்யான அரசர்" எனவும் உணர்த்தப்படுகிறது. இந்த சாட்சி கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தி கொலை செய்ய முன்வந்த சவுலின் வாழ்க்கையில் நடந்தது என்பது உண்மையே (அப். 9:4,5). தன்னைக் கண்டெடுத்த ஆண்டவரிடம், "ஆண்டவரே நீர் யார்?" என்றபோது "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்று பதில் தருகின்றார். இந்த பதிலால் பவுல் மாற்றம் அடைந்து அநேகருக்கு இயேசுவைச் சாட்சியாக எடுத்துரைத்து அநேக மக்கள் இயேசு கடவுளின் மகன் என்று சாட்சி கொடுக்க வழிவகுத்தார். இந்த சாட்சிக்கு அணிந்துரையாகத் தான் பவுலும், சீலாவும் சிறைசாலையில் துதித்தபோது, சிறைச்சாலை அஸ்திபாரம் அதிர்ந்தது. கதவுகளெல்லாம் திறவுண்டது. இதனால் கலக்கமுற்ற சிறைச்சாலை காவலன் மீட்கப்படுவதற்கான வழியினை கேட்டறிந்து தானும் தன் வீட்டார் அனைவரோடும் கூட திருமுழுக்கு பெற்று சிலுவை நாயகர் இயேசுவே மெய்யான அரசர் என்று சான்றளித்து நின்றான். இதற்கு முன்னோடியாகத் திகழ்ந்த பவுலும், தன்னுடைய கடைசி தருணத்தில் அவருக்காக நல்ல போராட்டத்தைப் போராடி ஓட்டத்தைச் செம்மையாக ஓடி, நம்பிக்கையைக் காத்துக் கொண்டேன். ஆகையால் நீதியுள்ள நியாயாதிபதி நீதியின் கிரீடத்தை எனக்கு தருவார் என்று நம்பிக்கையின் சாட்சியை வெளிப்படுத்துகிறார். இதற்கு அச்சாணியாய் தான் இயேசுவின் சிலுவையில் பிலாத்து ஏளனமாக "யூதரின் அரசன் நசரேயனாகிய இயேசு" என்று எழுதி வைத்தது ஏளனத்துக்குரியது அல்ல ஏற்புக்குரியதே என ஒரு வேற்று இனத்தவரால் ஒப்புக் கொள்ளப்படும் சிறப்பு இயேசுவின் ஒப்படைப்பால் வெளிப்பட்டது. இச்சிலுவை மொழியில் இயேசு நற்செய்தியாக வந்து நற்சாட்சி கொடுத்து இவ்வுலக மக்களுக்கு ஒரு நற்சாட்சியாளராய் வெளிப்பட்டார். இவ்வுலக வாழ்விலும் நாம் அவரோடு இணைந்து வாழும் ஒப்பற்ற வாழ்வின் வழி நாம் சாட்சி பகர ஆண்டவர் நம்மை அழைக்கின்றார்.

ஒரு மனித வாழ்வு இவ்வுலகில் எவ்விதம் வெளிப்பாடுடையதாய் இருக்க வேண்டும் என்பதை ஏழாம் திருமொழி வாயிலாக இயேசுகிறிஸ்து காண்பிக்கிறார். இயேசு மன்னிப்பின் மகுடமாய் விளங்கி கருணை உள்ளம் கொண்டு, தம் அன்னைக்கு தஞ்சம் அருளி, பிதாவிடம் கெஞ்சி, தாகத்தால் மிஞ்சி, சாத்தானின் வஞ்சகத்தை எல்லாம் முடித்து இறுதியாக தம் ஆவியையோ தமக்கு தந்தருளிய பரமனிடமே ஒப்படைத்தார். ஆகவே இதன் வழியாக இயேசு கடவுளின் மகன் என்றும், நாம் அனைவரும் கடவுளின் மக்கள் என்றும் சான்று பகர்ந்து இறைத்திட்டத்தில் நம்மையும் இணைத்து வாழ கடவுள் அருள் தருவாராக.

திரு. C. **ஷாஜின்**

# புதிய மாத நன்றித் தொழுகை அருளுரைகள்

01-02-2018 **புதிய மாத நன்றித் தொழுகை**

# காக்கும் கன்மலை (கற்பாறை)

தி.பா. 71:1-9

**"என் அடைக்கலப் பாறையாக நீர் இருந்தருளும்; கோட்டை அரணாயிருந்து என்னை மீட்டருளும், ஏனெனில், நீர் எனக்குக் கற்பறையாகவும் அரணாகவும் இருக்கின்றீர்." திபா. 71:3**

இந்தியாவில் பல இடங்களில் கற்பாறைகளின் மேல் கட்டப்பட்ட கோட்டைகளைக் காண்கிறோம். போர், வெள்ளம் போன்றவை நேரிடுங்கால் மக்களுக்குப் புகலிடமாயிருக்குமாறு பழங்காலத்து அரசர்கள் இவற்றைக் கட்டினார்கள். இஸ்ரயேலரும் பாலஸ்தீனாவில் எதிரிகள் தாக்குவதற்கரிய நகரங்களைக் கற்பாறைமேல் கட்டினார்கள் என்கிற செய்திகள் நமக்கு கிடைக்கின்றன. மோசேயின் பாடல் யாவேயை 'கற்பாறை' என்று உருவகிக்கப்படுகிறது. காரணம் அதன் அசையாத தன்மை. மேலும் எபிரேய மொழியில் கற்பாறை 'அடிப்படை' அல்லது 'நம்பத் தகுந்த உதவி' என உருவகின்றது முறையில் பொருள்கொள்ளப்படுகிறது. முதியோரின் மன்றாட்டு என அடைமொழியிட்டு அழைக்கப்படும் 71-ம் திருப்பாடலில் தாவீதரசர் ஆண்டவரை அரணான கற்பாறையாக இருந்து தன்னைப் பாதுகாக்கும் கடவுளாகக் காண்கிறார். உண்மையாகவே அவர் பாதுகாக்கும் கற்பாறையே. இப்புதிய மாதத்தில் நம்மைப் பாதுகாக்கும் அக்கற்பாறையாம் ஆண்டவரின் மீது நம்முடைய முழு நம்பிக்கையை வைக்கும்படி அவரது தன்மைகளைக் காண்போம்.

### ***1. நிலைத்திருக்கும் தன்மையுடையது*** : எசா. 26:4

ஆண்டவர் மீது என்றென்றும் நம்பிக்கை கொள்ளுங்கள்; ஏனெனில், ஆண்டவர், என் ஆண்டவர் என்றுமுள கற்பாறை! நம்மை காக்கின்ற கற்பாறையாம் கடவுள் என்றென்றும் நிலைத்திருக்கிறார். அவர் மாறாதவர், எப்பொழுதும் நம்பப்படத்தக்கவர். உலகில் நாம் காணும் கற்பாறையை மனிதர் தன் கருவிகளால் தகர்த்துப்போட்டு வேறொரு மாற்றத்தைக் கொண்டு வந்து விடுவார். ஆனால் கற்பாறையாம் கடவுள் மாறாதவர் துன்பத்தில் நம்பினோரைக் கைவிடாமல் அரவணைப்பவர், பாதுகாப்பவர். இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர் (எபிரேயர்13:8). நிலைத்திருக்கும் கற்பாறை மீது நமது நம்பிக்கையை வைத்து புதிய மாதத்தில் பயணிப்போம்.

### ***2. உயர்த்தும் ஆற்றலுடையது :*** திபா. 27:5

"...கேடுவரும் நாளில் அவர் என்னைத் தம் கூடாரத்தில் மறைத்து வைப்பார்; தம் கூடாரத்தினுள்ளே என்னை ஒளித்து வைப்பார்; குன்றின் மேல் என்னைப் பாதுகாப்பாய் வைப்பார்." நூனின் மகனாகிய யோசுவா சித்திமிலிருந்து இரண்டு ஒற்றர்களை வேவுபார்க்க எரிகோவிற்கு அனுப்பினார். அவர்கள் "இராகாபு" என்ற பெயருள்ள பெண்ணின் வீட்டுக்கு வந்து தங்கினர். எரிகோ அரசன் நடந்ததைக் கேள்விப்பட்டு ஒற்றர்களைப் பிடிக்க வந்தபோது இராகாபு அவர்களைத் தன் கூடாரத்தினுள் ஒளித்து வைத்து, பாதுகாப்பாய் மலைக்கு அனுப்பி விடுகிறார் என யோசுவா 2-ம் அதிகாரத்தில் காண்கிறோம். அதுபோல நமக்கு கேடு வரும்போது ஆண்டவர் நம்பிக்கையுடைய கற்பாறையாக, பாதுகாப்பாய் கற்பாறையாம் தமக்குள் ஒளித்து வைக்கிறார். அந்தக் கற்பாறையின் மேல் இருப்பவர் உயர்த்தப்படுவர் என மத். 5:14-ல் காண முடிகிறது. குழந்தைப் பேறு இல்லாமல் பலருடைய தூற்றும் சொற்களால் அவதியுற்ற அன்னாள் கற்பாறையாம் ஆண்டவரிடம் விண்ணப்பம் செய்து வேண்டுதலைப் பெற்றபோது 1சாமு. 2:8-ல் அவர் ஏழைகளைப் புழுதியினின்று உயர்த்துகின்றார் எனச் சாட்சியிட்டுக் கூறுகிறார். உயர்த்தும் கடவுள் இப்புதிய மாதத்தில் நம்மையும் பாதுகாத்து உயர்த்துவார்.

### ***3. புகலிடம் அளிக்கவல்லது :*** திபா. 71:3

"என் அடைக்கலப் பாறையாக நீர் இருந்தருளும்...."ஆறுதலற்று, அரவணைப்பின்றித் தவிக்கும் பிள்ளைகள் அதனைப் பெற தங்களை உண்மையாக நேசிக்கும் பெற்றோரைத் தேடிச் செல்கின்றனர். பெற்றோர்களும் அரவணைப்பிற்காக வரும் பிள்ளைகளை ஏற்று, ஆறுதல்படுத்தி, ஆற்றுப்படுத்தி, உற்சாகமூட்டி மறுபடியும் புது வாழ்வு வாழ வழிகாட்டுவது போன்று காக்கும் கற்பாறையான கடவுளும் தம்மைத் தேடி வருபவருக்கு புகலிடம் அளிக்கிறார். அதைத்தான் என் அடைக்கலப் பாறையாக இருந்தருளும் என்று தாவீது மன்றாடுகிறார். என்னிடத்தில் வருகிறவர்களை நான் புறம்பே தள்ளுகிறதில்லை என இயேசுநாதர் கூறுகிறார். ஆண்டவரே உம்மோடு சிறையிலிடப்படுவதற்கும் ஏன் சாவதற்கும் நான் ஆயத்தமாய் உள்ளேன் என்று மொழிந்த பேதுரு வெகு விரைவிலேயே அவரைத் தெரியாது என மறுதலித்த போதும் இயேசுவிடம் திரும்பி வந்தபோது அங்கீகரித்து அவருக்குப் புகலிடம் கொடுத்து பேதுருவாகிய இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்ற தமது வாக்கின்படியே தமது திட்டத்தில் திறம்படப் பயன்படுத்தினார். நாம் தவறு செய்திருந்தாலும் புகலிடம் அளிக்கும் கற்பாறை நம்மை மன்னித்து ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார். இப்புதிய மாதத்தில் புகலிடம் அளிக்கும் கற்பாறையாம் நம் ஆண்டவரிடத்தில் புகலிடம் தேடுவோம்.

அருள்திரு. G. **சாம் ரிச்சர்ட் நெல்சன்**

01-03-2018

**புதிய மாத நன்றித் தொழுகை**

# நலமருளும் கடவுள்

விப. 15:22-27

**"...நானே உன்னைக் குணமாக்கும் ஆண்டவர்"** **விப. 15:26**

நம்முடைய நாட்டின் பாரம்பரிய மருத்துவ முறைகளுள் ஒன்றான ஆயுர்வேதம், உடல் ஆரோக்கியத்துடன் மனதையும் பராமரிப்பதில் கவனம் செலுத்துகின்ற மாற்று மருத்துவ முறைகளில் பழமையானதும், முதன்மையானதுமாகும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்றியம்பிய நம் முன்னோர்களின் கருத்தை வலியுறுத்தி நிற்பதே ஆயுர்வேதத்தின் பண்பாகும். ஆயுர்வேதம் எனும் சமஸ்கிருத வார்த்தையில் 'ஆயுர்' என்றால் ஆயுட்காலமெனவும், 'வேதம்' என்றால் 'நூல்' அல்லது 'கல்வி' எனவும் அறியப்பட்டு ஆயுட்காலத்தை நீட்டிக்க உதவுகின்ற நூல் அல்லது கல்வி என்று பொருள்படுகின்றது. கடவுளால் மனிதனுக்கு நேரடியாக பகிரப்பட்ட மருத்துவ முறையே ஆயுர்வேதம் எனும் நம்பிக்கையும் பண்டைய இந்தியர்களுக்கு உண்டு. நோயாளிகள் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காடி அவைகளைத் திருத்துவதற்கு ஏற்படுத்தும் வாழ்க்கை முறை மாற்றங்களே ஆயுர்வேதத்தின் அடிப்படையாகும். திருமறையில் விடுதலைப்பயணம் 15:26-ல் மோசேயினால் வழிநடத்தப்பட்ட மக்கள் கூட்டத்திற்கு, வியாதியிலிருந்து தப்பித்துக்கொள்ளும் வழிகளை, சர்வ வல்லமையுள்ள கடவுள் தம்மைக் குணமாக்குகின்ற, நலமருளுகின்ற பரிகாரியாக வெளிப்படுத்தி, ஆயுளை நீட்டித்துக்கொள்ளும் வழி முறைகளைக் காண்பித்துக் கொடுப்பதைக் காண முடிகின்றது.

## ***1. நலம் பேணக் கற்பிக்கும் ஆண்டவர்:*** (விப. 15:26)

வருமுன் காக்கின்ற வைத்திய முறைகளில் ஆயுர் வேதம் மிகவும் பிரசித்திப் பெற்றதாகும். ஆயுர்வேத ஆசான்களில் முக்கியமானவரான சரகர், நோய்கள் வராமல் தடுக்கின்ற உடல் ஆற்றலை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். நோயற்ற வாழ்வை இயற்கையாக அடைய வேண்டும் என்பது ஆயுர் வேதத்தின் பிரதான கோட்பாடு ஆகும். இதை ஆங்கிலத்தில் "Prevention is better than cure" என்று பழமொழியொன்று கூறுகிறது. ஆயுர்வேத மருத்துவத்தில் மிகவும் பிரதானமானது, ஆரோக்கியமான மனிதனின் உடல் நலத்தை நிலைநிறுத்துவதாகும். அதாவது, வியாதி ஏற்படாமல் தடுக்கின்ற முறையாகும். ஆயுர்வேத மருத்துவத்தில் காணப்படுகின்ற

இரண்டுவிதமான முக்கிய சிகிட்சை முறைகளில் ஒன்றான 'ஸ்வஸ்த சம்ரக்சணம்' எனும் முறை வியாதியைத் தடுக்கப் பயன்படுத்தப்படும் முறையாகும். திருவள்ளுவர்,

> "எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை
> அதிர வருவதோர் நோய்"

என்று திருக்குறளில் குறிப்பிடுகின்றார். வரப்போவதை முன்னே அறிந்து காத்துக் கொள்ளவல்ல அறிவுடையவர்க்கு அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை என்பதே இவ்வரிகளின் பொருளாகும். இன்று ஏற்படுகின்ற வியாதியின் தாக்கங்கள் பெரும்பாலும் நவீனத்துவத்தின் தாக்கத்தினால் ஏற்படுகின்றனவாகும். தொழில் நுட்பமும் விஞ்ஞானமும் வளர்ந்து வருகின்ற தற்காலத்தில் மருத்துவத்துறை முன்னேறுகின்ற வேகத்திற்கு ஈடுகொடுக்கும் அளவிற்கு வியாதியின் தாக்கங்கள் மனிதர்களை வேகமாக ஆட்கொண்டு வருவதைக் கண்கூடாகப் பார்த்தும் வருகிறோம். இதற்கு மிக முக்கியமான காரணம் வந்தபின் பார்த்துக்கொள்ளலாம் எனும் அலட்சியமான மனநிலையாகும். உடல் பருமன், புற்றுநோய், நீரிழிவு போன்று பெரும்பாலானோரிடம் காணப்படுகின்ற நோய்களெல்லாம் முன் எச்சரிக்கை இன்றிப் பின்பற்றப்படுகின்ற ஆரோக்கியமற்ற, உடல்நலம் பேணாத வாழ்க்கை முறைகளினால் ஏற்படுகின்றன என்று மருத்துவ உலகம் தெரிவித்துள்ளது. வீட்டுக்கொரு நோயாளி என்று அழைக்கப்படும் காலத்தில் வாழுகின்ற நாம், எதிர்காலச் சந்ததியினருக்கு 'வந்த பின்' காக்கும் மனநிலையைப் புறந்தள்ளி 'வருமுன் காக்கும் மனநிலையை ஏற்படுத்தி உடல் நலம் பேணி ஆரோக்கியத்தை நிலைநிறுத்துகின்ற கடமையைப் பெற்றிருக்கின்றோம் என்பதை மறக்கலாகாது. அதைத் தான் சர்வ வல்லமையுள்ள கடவுள் இஸ்ராயேல் மக்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார். விப. 15:26-ல் "...நலமாகத் தோன்றுவதை செய்து, அவர் சட்டங்கள் அனைத்தையும் கைக்கொண்டால்....நோய்களை உன்மேல் வரவிடமாட்டேன்..." எனும் யதார்த்தத்தை திருமறை தெரியப்படுத்துகிறது. ஆகவே சர்வ வல்லமையுள்ள கடவுள் காட்டித் தந்திருக்கின்ற 'வருமுன் காத்தல்' எனும் தடுப்பு உத்தியை வாழ்க்கை முறையில் அப்பியாசப்படுத்தி, நோயற்ற வாழ்விற்கு நேராய் முன்னேறுவோம்.

### 2. நலம் பெற அழைக்கும் ஆண்டவர்: (விப. 15:26)

வியாதிகள் மனிதரை அண்டாமலிருக்க, கட்டளைகளை விதித்து ஒழுக்க நெறிகளைப் பின்பற்றுவதற்குக் கற்றுக் கொடுத்த கடவுள், அதையும் மீறி, பாதிக்கப்படுபவர்க்குத் தம்மை, குணப்படுத்துகின்ற

இரக்கமுள்ள பரிகாரியாக வெளிப்படுத்துகின்றார். விப. 15:26-ல், "...நானே உன்னைக் குணமாக்கும் ஆண்டவர்" என்று ஆண்டவர் கூறுவதிலிருந்து, தெய்வீக மருத்துவரின் மகத்துவத்தைப் புரிந்துகொள்ளலாம் எபிரேயத்தில் ஆண்டவர் நலமருள்பவர் என்பதறகு 'யெகோவா ராஃபா' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பொருள் மீட்கிறவர், குணப்படுத்துகிறவர், நலமருளுகின்றவர் என்று தமிழில் பொருள் வழங்கப்படுகிறது. இதையே திபா. 103:3-ல், "அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கிறார்..." என்று திருமறை கூறுகின்றது. 'வருமுன்' காப்பதற்கு அறிவுறுத்துகின்ற கடவுள் 'வந்தபின்' காப்பதற்கும் மிகுந்த தயையுள்ளவர் என்பதைத் தம்மீது நம்பிக்கை வைக்கும் அத்தனை பேருக்கும் தெரியப்படுத்துகிறார். நோய்வாய்ப்பட்டவர்களை குணப்படுத்துகின்ற முறையானது ஆயுர்வேதத்தில் 'ரோக நிவாரணம்' என்றழைக்கப்படுகிறது. ஆயுர்வேத சிகிச்சையில் முக்கியமானதாகக் கருதப்படுகின்ற இரண்டில் இது இரண்டாவது முறையாகும். இது வியாதியைத் தடுக்கத் தவறிய நடவடிக்கைக்கு பின் ஏற்படுகின்ற பாதிப்பிலிருந்து நோயாளியை மீட்பதற்கு எடுக்கின்ற முயற்சியாகும். எரே. 8:22-ல் "அம்முறிவில் தடவக் கிலயாதில் பொன்மெழுகு இல்லையா? அங்கே மருத்துவர் இல்லையா? அப்படியானால், என் மகளாகிய மக்கள் ஏன் இன்னும் குணமாகவில்லை?" என்று கேட்பதிலிருந்து மனுமக்கள் மீது அக்கறையுள்ள ஒரே மருத்துவர் அவரென்பதையும், வியாதியைக் குணப்படுத்துகின்ற மனித முயற்சிகளும், சிகிச்சைகளும் கைவிடும்போதெல்லாம் தாமே குணப்படுத்துகின்றவராகவும், சர்வ ரோக நிவாரணியாகவும் செயல்படுவதைத் தெரியப்படுத்தி திருமறையின் வழியாய்ப் போதித்து நலம் பெற அனைவரையும் அழைக்கிறார்.

ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் முதன்மையான பணி நோயுற்றோரை நலமாக்குதல் ஆகும். அவர் நோயுற்றோரைக் கண்டு மனதுருகினார். அவர்களுக்காகச் சிலுவைத் துன்பத்தை ஏற்றுக் கொண்டார். அவர்தம் காயங்களால் மானுடம் நலமடைகின்றது. எனவே நம்முடைய வலுவின்மையில் கடவுளின் ஆற்றலைப் பெற கடவுளிடம் சரண் புகுவோம். அவரே நம் நலமருளும் பரிகாரி.

திரு. V. **ஜாஷ்வா பாக்கியானந்த்**

01-04-2018

**புதிய மாத நன்றித் தொழுகை**

# அச்சம் அகற்றும் வெளிச்சம்

திபா. 27:1-14

**"ஆண்டவரே என் ஒளி; அவரே என் மீட்பு; யாருக்கு நான் அஞ்ச வேண்டும்? ஆண்டவரே என் உயிருக்கு அடைக்கலம்; யாருக்கு நான் அஞ்சி நடுங்கவேண்டும்?." திபா. 27:1**

ஒளியின் செயல்பாட்டை புரிந்து கொள்ள முனையும் போது ஒளி நமக்கு வழிகாட்டுகிறது. ஒளி நம்மை தூய்மைப் படுத்துகிறது. ஒளி உயிரினங்களுக்கு வாழ்வும் வெளிச்சமும் கொடுக்கிறது என்று புரிந்து கொள்ளும் நமக்கு ஒளி நம் அச்சத்தை அகற்றுகிறது என்ற திருப்பாடகருடைய பாடல் நம்மைப் பரவசப்படுத்துகின்றது, ஆச்சரியப்படுத்துகின்றது. ஆண்டவரே என் ஒளியாக இருப்பதால் நான் யாருக்கும் அஞ்ச அவசியமில்லை என்று அழுத்தமாக முழங்குகிறார். இந்த உலகில்; இருளுக்கும், வெளிச்சத்துக்கும் எப்போதுமே ஓர் இழுவை நிலை இருந்து கொண்டே இருக்கின்றது பல சூழல்களில் மனிதனை அச்சம் என்னும் இருள் சூழ்ந்து திணறடிக்கச் செய்து விடுகிறது. மனிதன் ஆட்டிப்படைக்கும் மிக முக்கியமான 12 பயங்கள் உண்டு என மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.

1. Topophobia : கூட்டத்தில் பேசச் சொன்னால் உதறல் எடுக்கும் பயம்
2. Acrophobia : உயரமான கட்டிடத்திலிருந்து கீழே பார்த்தால் குலை நடுங்கும் பயம்
3. Entomophobia : கரப்பான் பூச்சி, பல்லி இவற்றைக் கண்டு அலறியடித்து ஓடும் பயம்
4. Eaitophobia : பொருளாதாரத்தை நினைத்து பயப்படும் பயம்
5. Bathophobia : தண்ணீரைக் கண்டு பயப்படும் பயம்
6. Pathophobia : பேயைக் கண்டு பயப்படும் பயம்
7. Thanatophobia : மரணத்தைக் கண்டு பயப்படும் பயம்
8. Aerophobia : விமானத்தில் ஏற பயப்படும் பயம்
9. Monophobia : தனிமையைக் கண்டு பயப்படும் பயம்
10. Zinophobia : நாயைக் கண்டு பயப்படும் பயம்
11. Ochozophobia : வண்டி ஓட்டப் பயப்படும் பயம்
12. Nightophobia : இருட்டைக் கண்டால் கிலி பிடிப்பது

நாம் எந்த ஃபோபியாவுக்குள், எத்தனை phobia வுக்குள் அடைபட்டுக் கிடக்கிறோம் என்பதை இப்போது கண்டுபிடித்து விடலாம் இல்லையா? இத்தகைய பயத்தில், இருளில் கிடக்கின்ற மனிதனுக்கு ஆண்டவரே ஒளியாக இருந்து, அச்சத்தை அகற்றும் ஒளியாக விளங்குகின்றார் என்ற உண்மையை கடவுள் திருப்பாடகர் வழியாக நம்முன் வைக்கின்றார்.

புதிய மாதத்துக்குள்ளே காலடி எடுத்து வைக்கும் நமக்கு இத்தகைய அச்சம் என்னும் அவிசுவாசத்தை அகற்றி அஞ்சாமை என்னும் விசுவாசத்தை ஒளிரச்செய்கிற ஆண்டவருக்கு நம்மை அர்ப்பணித்து முன்னேற ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

## *1. அச்சம் அவிசுவாசத்தின் வெளிப்பாடு* :

பயணங்களின் அடிப்படை காரணம் அவிசுவாசம். இது ஓர் முக்கியமான பாவம் என்கிறார் சகோ. சகரியா பூனன். ஆண்டவர் இயேசு கிறிஸ்து கடல்மீது நடந்து வந்தபோது சீடர்கள் பேய் என்று (மத். 14:25,26) பயந்து அலறினார்கள்.

ஆண்டவர் பயப்படாதீர்கள் (மத்.14:27) என்றார். பயத்தை உதறிய பேதுரு அடிகளார் தண்ணீரில் நடந்தார். அப்போது பெருங்காற்றுவீச மீண்டும் பயந்தார். இந்தநிலையில் ஆண்டவர் சொன்னார் அற்ப விசுவாசியே (மத். 14:31) என்று கடிந்துகொண்டார்.

விசுவாசம் விலகிப் போகும் போது பாவம் நம்மிடம் வந்து குடியேறுகிறது. ஆண்டவர் இயேசு பிடிக்கப்பட்டபோது இரவில் ஒரு பணிப்பெண்ணை கண்டு பயந்து நடுங்கினார் பேதுரு. இந்த மனுஷனை அறியேன் என்று சபிக்கவும் சத்தியம் பண்ணவும் செய்தார்.

இயேசு கிறிஸ்து பிடிக்கப்பட்ட பின் அவருடைய நம்பிக்கையில் விரிசல் விழுந்துவிட்டது. இயேசுகிறிஸ்து உயிர்த்த பிறகும் கூட சீடர்களின் பயம் போய்விடவில்லை. யூதர்களுக்கு அஞ்சி பூட்டிய வீட்டுக்குள் அடைப்பட்டுக் கிடந்தார்கள்.

பயம் நம்மை பாவத்தைநோக்கி இழுத்துச் செல்லுகிறது. எப்படிப்பட்ட பயம் எத்தகைய பாவத்தை செய்யத்தூண்டுகிறது என்று நாம் அறிந்துக்கொள்ளும் போது

- ♦தண்டனையைக் குறித்த பயம் - பொய் சொல்ல தூண்டுகிறது
- ♦தனிமையைக் குறித்த பயம் - தற்கொலை செய்யத் தூண்டுகிறது
- ♦தோல்வியைக் குறித்த பயம் - குறுக்கு வழியைக் காண்பிக்கிறது
- ♦நோயைக் குறித்த பயம் - தவறான மாந்திரீக, தந்திர வலைகளில் விழ வைக்கிறது.

பயம் என்பது வெறுமனே ஓர் உணர்வு என்னும் நிலைமையைத் தாண்டி நமது விசுவாச வாழ்வை அசைத்துப் பார்க்கும் நிலைக்கு நம்மை கொண்டு செல்கிறது.

அதனால் தான் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம் சீடர்களைப் பார்த்து ஒவ்வொரு சூழலிலும் அஞ்சாதீர்கள் என அறிவுறுத்துகிறார்.

ஆம்! "அச்சம் அவிசுவாசம்".

அச்சம் அகற்றி அவிசுவாசத்தைக் களைய திருப்பாடகர் நம்மை அழைக்கின்றார். "எனக்கெதிராக ஒரு படையே பாளையமிறங்கினாலும் என் உள்ளம் அஞ்சாது..." (திபா. 27:3)

## *2. அஞ்சாமை விசுவாசத்தின் வெளிப்பாடு* :

அச்சம் அவிசுவாசம் என்றால் அஞ்சாமை விசுவாசம் தானே! இல்லையா? கடவுள் நம்மை காக்கிறார், எல்லா நிலைகளிலும் காக்கிறார் எனும் விசுவாசம் நம்முடைய அச்சத்தை விலக்குகிறது.

இதைத்தான் புகழ்ச்சிப்பாடலாக பாடும் தாவீது "ஆண்டவரே என் ஒளி, அவரே என் மீட்பு... என் உயிருக்கு அடைக்கலம் யாருக்கு அஞ்சி நடுங்க வேண்டும்" (தி.பா. 27:1). ".....எனக்கு எதிராகப் போர் எழுந்தாலும் நான் நம்பிக்கையோடிருப்பேன்" (தி.பா. 27:3) என முழங்குகிறார்.

தூய ஆவியார் நம் மனங்களில் குடியேறும் போது பயம் விடைபெறுகிறது. சீடர்கள் தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டபோது அச்சத்தை விரட்டினர். ஒரு பெண்ணுக்கு முன்னால் நடுங்கிய பேதுரு தலைவர்களுக்கு முன்னால் துணிந்து பேசப் பயப்படவில்லை.

"இயேசு கிறிஸ்துவை போல என்னையும் சிலுவையில் அறைவதா அந்தத் தகுதி எனக்கில்லை. என்னை சிலுவையில் தலைகீழாய் அறையுங்கள்" எனத் தைரியத்தின் உச்சத்தில் நின்று பேசக் காரணம் கிறிஸ்துவிலே கொண்ட பற்றுறுதி. ஆழமான விசுவாசம் பயங்களை பயந்து ஓடச் செய்கிறது. நமது பெலமும், தைரியமும் இறைவன் நம்மோடிருக்கிறார்; அவர் நம்மை காக்கிறார் எனும் நம்பிக்கையின் மீதே வளர முடியும். "பலங்கொண்டு திட மனதாயிருங்கள், அவர்களுக்கு பயப்படவும், திகைக்கவும் வேண்டாம். உன் கடவுளாகிய ஆண்டவர் தாமே உன்னோடு கூட வருகிறார்" (இச. 31:6). என்பது நாம் அறியாத வசனம் அல்ல. பயம் என்பதையும், அசட்டுத்தனம் என்பதையும் இனம் காணும் அறிவு நமக்கு இருக்க வேண்டும். பயம் எது என்பதையும் எச்சரிக்கை உணர்வு எது என்பதையும் பிரித்தறிய வேண்டும்.

♦ காரில் போகும் போது சீட் பெல்ட் அணிவது, எச்சரிக்கை உணர்வு

♦ நோய் வருகையில் மருந்து சாப்பிடுவது, பாதுகாப்பு உணர்வு

♦ படிகள் இருக்கும்போது ஆலய உச்சியிலிருந்து குதிக்காமலிருப்பது ஆண்டவர் கற்றுத்தந்த பாடம்.

ஆனால் எதுவுமே நமது விசுவாசத்தை மீறிய செயல் அல்ல என்பதையும், எல்லாவற்றையும் மீறி இறைவனின் அன்பும் பாதுகாப்புமே நம்மை வழிநடத்துகிறது என்ற அடிப்படை ஆழமான விசுவாசம் நமக்குள் இருக்க வேண்டும். "ஏனெனில் கேடு வரும் நாளில் அவர் என்னை தம் கூடாரத்தில் மறைத்து வைப்பார்; தம் கூடாரத்தினுள்ளே என்னை ஒளித்து வைப்பார்; குன்றின்மேல் என்னைப் பாதுகாப்பாய் வைப்பார்" (தி.பா. 27:5) என்று விசுவாசக் குரலை எழுப்புகிறார். ஆம்.

அச்சம் அவிசுவாசம்
அஞ்சாமை விசுவாசம்

என்பதை உணர்ந்து நமது ஆன்மிக வாழ்வை ஆழப்படுத்தவும், அர்த்தப்படுத்தவும் பயம் நம்மைவிட்டு அகன்று போவது அவசியம்.

நாம் இறைவனின் பிள்ளைகள் அச்சமடையக் கூடாது இதை பவுலார் குறிப்பிடும்போது "கடவுள் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2திமொ. 1:7).

நமது தைரியம் திருப்பாடகர் சொல்வதுபோல ஆண்டவரே என் ஒளி, அவரே என் மீட்பு அவரே என் அடைக்கலம் யாருக்கு நான் அஞ்சி நடுங்க வேண்டும் என்பதில் தான் விளங்குகிறது. இப்படி நம் விசுவாச வாழ்வு விளங்கும்போது மரண இருளின் பள்ளத்தாக்கு நம்மை பயமுறுத்தாது என்ற தைரியத்தில் இறைவனின் கோலும், தடியும் என்னை காக்கும், தேற்றும் என்ற உணர்வில் அவர் நம்மைவிட்டு விலகுவதில்லை, நம்மை கைவிடுவதில்லை என்ற உறுதியில் நமது விசுவாச பயணம் அமையும். இதை பவுலார் குறிப்பிடும் போது "அச்சத்துக்கு உள்ளாக்கும் மனப்பான்மையை நீங்கள் பெற்றுக்கொள்ளவில்லை மாறாக கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையே பெற்றுகொண்டீர்கள்" (உரோ. 8:15) என்கிறார்.

புதிய மாதம் "அச்சம் அகற்றும்" ஆற்றல் நிறை வெளிச்சமாகிய ஆண்டவர் கிறிஸ்து நம் வாழ்வில் அவிசுவாசத்தை உருவாக்கும் அச்சத்தை அகற்றி விசுவாசத்தை உறுதிபடுத்தும் அஞ்சாமையை நிறுத்தி நிறைவாழ்வை நோக்கி பயணிக்க ஆண்டவர் அருள் புரிவாராக.

அருள்திரு. S.M. **டேனியல் தேவதாசன்**

01-05-2018

**புதிய மாத நன்றித் தொழுகை &
உழைப்பாளர் திருநாள்**

# உழைப்பினால் உயர்வு

மத். 25:14-31

**"நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர்." மத் 25:21**

1886-ம் ஆண்டு மே மாதம் முதலாம் நாள் அமெரிக்க நாட்டின் சிகாகே நகரில் 40,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை கேட்டு நடத்திய மகத்தான வேலை நிறுத்த போராட்டத்தின் அடையாளமே இன்று உலகம் முழுவதும் 'மே தினமாக' அல்லது 'உழைப்பாளர் தினமாக' கொண்டாடப்படுகிறது.

இந்தியாவில் 1923-ம் ஆண்டு முதல் தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகிறது. கிறிஸ்தவப் பின்னணியில், கத்தோலிக்க திருச்சபையின் போப் பயஸ் IX இந்நாளை 'பணியாளர் யோசேப்பு' தினமாக கொண்டாட அழைப்பு விடுத்தார்.

'உழைப்பு' என்பது 'உடல்' அல்லது மூளைக்குக் கொடுக்கும் வேலையே ஆகும். இயேசுநாதர் மத். 20:1-16 வரையுள்ள பகுதியில் உழைப்பையும் உழைப்பாளர் வாழ்வையும் முன்னிலைப்படுத்துகிறார். உழைப்பை குறித்து மூன்று நிலைகளில் சிந்திப்போம்.

## *1. உழைப்பில் அகமகிழும் இறைவன் :*

'கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன' (தொ.நூ. 1:31).

படைப்பின் வரலாற்றிலே முதல் உழைப்பாளியாக திரித்துவ இறைவன் செயலாற்றுகிறார். ஆறு நாள்கள் தம் உழைப்பால் உலகை உருவாக்கினார். அந்த உழைப்பை அகமகிழ்வோடு நல்லது எனக் கண்டார். தம் உழைப்பைக் கண்டு வியந்தார். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் கடுமையாக உழைக்கும் நபர்களையே சீடர்களாக ஏற்றுக் கொண்டார். காலையிலே கனத்த இதயத்தோடு கடமையைத் தொடங்கும் உழைப்பாளிக்கு மாலையிலே தன் உழைப்பின் முழுமையைக் காணும் போது அகமகிழ்விற்கு அளவே இல்லை.

இன்று பலர் பிறர் உழைப்பில் வாழ்கின்றனர். "உமது உழைப்பின் பயனை நீர் உண்பீர்" (திபா. 128:2) என்ற திருவார்த்தையை மறந்து வாழ்கின்றனர் நூறு விழுக்காடு உழைப்பில் எண்பது விழுக்காட்டை முதலாளிகள் உண்டு இருபது விழுக்காடு தரமற்றவையையே தொழிலாளி

உண்கின்றான். கடவுள் உழைப்பில் அகமகிழ்ந்ததைப் போல் ஒவ்வொரு உழைப்பாளியும் அகமகிழப் பாடுபடுவோம்.

## *2. உழைப்பை அங்கீகரிக்கும் இறைவன் :*

"உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது" (2 தெச. 3:10).

உழைக்காதவர் உண்ணலாகாது என்பது யூதப் பண்பாடு. உழைப்பின் உயர்வை உணர்ந்த தூய பவுலடியார் தெசலோனிக்கேய மக்களுக்கு உழைப்பை வலியுறுத்துகிறார். இறைவன் மோசேயின் வழியாய் வழங்கிய உடன்படிக்கையில் "ஆறு நாள்கள் நீ உழைத்து உன் அனைத்து வேலையையும் செய்வாய்" (விப. 20:9) என்று கட்டளையிட்டு உழைப்பு ஒன்றையே உயர்வுக்கு, வாழ்வுக்கு வழி என அங்கீகரிக்கிறார்.

இன்றைய சூழலில் நிறுவனங்களும் அரசும் உழையா முதலாளிகளையே ஊக்கப்படுத்துகிறது. தொழில் செய்ய வாய்ப்பற்ற சூழல், பணமில்லாப் பரிவர்த்தனை இவை சிறு தொழில் செய்வோரைப் பாதிப்படையச் செய்துள்ளது. உழைப்பாளியின் உழைப்புக்கு வழியில்லாச் சூழல். "எங்களை எவரும் வேலைக்கு அமர்த்தவில்லை" என்றார்கள். அவர் அவர்களிடம் "நீங்களும் என் திராட்சைத் தோட்டத்துக்கு போங்கள்" என்றார் (மத். 20:7). இந்தக் குரல் ஒட்டுமொத்த வேலை தேடுவோரின் குரல். அந்தக் குரலைக் கேட்டு அங்கீகாரமளித்து வாழ்வு செழிக்க வழி செய்கிறார். உழைப்பை அங்கீகரித்து உரிய கூலியும் வழங்கப்படுவதை திருமறை சுட்டிகாட்டுகிறது.

## *3. உழைப்பை ஆசீர்வதிக்கும் இறைவன் :*

"நன்று நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன்" (மத். 25:21).

உழைப்பு என்பதே ஓர் ஆசீர்வாதம். இறைவன் பார்வையில் உழைப்பு என்பதே பாக்கியமான வாழ்வு. எனவே தான் "ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார்." (தொ.நூ. 2:15). ஏதேன் தோட்டம் வனமும் வளமும் நிறைந்து மனமும் மகிழ்ந்து மணமும் வீசியது.

உண்மையாய் உழைப்பை உணர்ந்து பணிசெய்யும் பணியாளரை கடவுள் ஆசீர்வதிக்கிறார். பணியின் மீதுள்ள கவனமும் கரிசனையும் ஒருவரைத் தலை சிறந்த வாழ்வுக்கு வழிநடத்துகிறது. உழைப்பாளர் தினத்தில் இறையவரைப் போன்று உகந்த உழைப்பால் உயர்வினை அடைய உளமார உறுதியேற்போம்!

திரு. P. **லிபின் ஜாஸ்பர்**

01-06-2018

**புதிய மாத நன்றித் தொழுகை**

# வாழ்வருளும் நல்ஆயர்

யோவா. 10:1-11

**"...நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்."**

**யோவா. 10:11**

இத்திருமறைப் பகுதியில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மை நல்ல மேய்ப்பனாக அடையாளப்படுத்தி, எசேக்கியேல் தீர்க்கனின் கண்டனத்தைப் போன்று. இஸ்ரயேலின் மேய்ப்பர்களோடு முரண்படவும் செய்கிறார். எசேக்கியேல் 34:3,4 -ல் குறிப்பிட்டுள்ளதைப் போன்று இஸ்ரயேலின் மேய்ப்பர்கள், மந்தையைப் பராமரித்துப் பாதுகாத்தலைத் தவிர்த்து சுயநலத்தோடு மந்தையை அழித்து வந்தனர். இத்தகைய நிலையை இயேசுகிறிஸ்து, தம்முடைய காலத்தில் வாழ்ந்து வந்த பரிசேயர்களிடம் கண்டார். யோவான் 9-ம் அதிகாரத்தில், ஓய்வு நாளில் பார்வையற்ற மனிதனுக்கு எப்படிப் பார்வை தரலாம் என்று வினவுகின்ற பரிசேயர்களைக் கண்ட இயேசு கிறிஸ்து, மந்தையாகிய மக்கள் மீது பரிசேயர்கள் போன்ற தலைவர்கள் கொண்டுள்ள கரிசனையும், அன்பும், பாதுகாவலும் போலித்தனமானது என்பதைத் தெளிவாகச் சொல்லுகிறார்.

***1. வாயிலாகும் நல்ஆயர்*** : (யோவா. 10 : 1-5)

இயேசுகிறிஸ்து, திருப்பணியையும், திருப்பணியாளர்களையும் மந்தைமேய்ப்பர் என்ற இஸ்ரயேலின் பிரதானமான பணியாகிய மந்தை மேய்த்தல் என்ற நிலையில் விளக்கிக் கூறுகிறார். பல மந்தைகள், பல மேய்ப்பர்கள், பொதுவான மந்தைக் களம் என்ற அமைப்பு இங்கே விளக்கப்படுகிறது. மந்தையை மேய்ப்பவர்களை மந்தையிலுள்ள ஆடுகள் சரியாக அடையாளம் கண்டு கொள்ளும். பொதுவான வாசல் வழியாக இந்த மந்தை மேய்ப்பர்கள் மந்தை களத்தினுள் சென்று தன் மந்தையினை மேய்ச்சலுக்காக பாதுகாப்பாக வெளியே கொண்டு செல்லுவர். அதோடு பாதுகாப்பாக இரவில் மந்தையினை மந்தைக் களத்தினுள் கொண்டு சேர்ப்பர். இதில் மந்தையைக் கொள்ளையிடுபவர்கள் மந்தைக் களத்தினுள் பொதுவான வாசல் வழியாக பிரவேசிப்பது இல்லை என்று விளக்கமாக இயேசுகிறிஸ்து குறிப்பிடுகிறர். தான் வாசலாக இருப்பதால், அதின் வழியாக கள்ளர்கள் பிரவேசிக்க இயலாது என்று தெளிவுபடக கூறுகிறார்.

**2. வாழ்வருளும் நல்ஆயர்** : (யோவா. 10 : 6-11)

வாழ்வு அருளும் ஆயர் இயேசுகிறிஸ்து மட்டும்தான். அவரால் தான் வாழ்வு அருள இயலும் என்பது உறுதியாகச் சொல்லப்படுகிறது. மந்தையைக் கொள்ளையிட்டு தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்ளும் மேய்ப்பர்களைப் பற்றியும், தம்மைத் தந்து மந்தைக்கு வாழ்வு அருளும் இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் இப்பகுதி குறிப்பிடுகிறது. மந்தையைக் கொள்ளையிடும் மேய்ப்பர்களிடமிருந்தும் மந்தையைப் பாதுகாக்கும் பணியை தம் பணியாகக் குறிப்பிடுகிறார். கொள்ளையிடுபவர்களைச் சரியாக அடையாளம் காட்டி மந்தை, இப்படிப்பட்ட கொள்ளையர்களிடமிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்றும், அதற்கு தான் வாழ்வருளும் ஆயராக வந்து இருக்கிறேன் என்பதையும், தன்னில் நிலை வாழ்வு உறுதி செய்யப்படுகிறது என்பதையும் குறிப்பிடுகிறார்.

வாழ்வு தருவதும் வாழ்வு பெறுவதும் கிறிஸ்துவின் வழியாக திருப்பணிவிடையில் வலியுறுத்தப்படுகின்ற உண்மை. திருப்பணியில் இணைந்திருக்கின்ற திருப்பணியாளர்கள், இறைமக்களுக்கு வாழ்வு தருவதும், வாழ்வு தருவது வழியாக வாழ்வு பெறுதலும் ஒருங்கே இணைந்து நடைபெற வேண்டிய செயலாகக் கருதப்படுகிறது. இத்தகைய செயல், வாழ்வருளும் ஆயராக இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுவதால் விளைகிறது.

திரு. J. **ஜெப டேனியல்**

01-07-2018

**புதிய மாத நன்றித் தொழுகை**

# நிறைவளிக்கும் நீரோடை

தி.பா. 36:1-12

**"உமது இல்லத்தின் செழுமையால் அவர்கள் நிறைவு பெறுகின்றனர்; உமது பேரின்ப நீரோடையில் அவர்கள் தாகத்தைத் தணிக்கின்றீர். ஏனெனில், வாழ்வு தரும் ஊற்று உம்மிடமே உள்ளது; உமது ஒளியால் யாமும் ஒளி பெறுகின்றோம்." *தி.பா. 36:8,9***

நீர், நீரோடை என்பவை பாலஸ்தீன தேசத்தில் அபூர்வமானவை. ஏனென்றால் பாலஸ்தீன நாடு ஒரு மலைநாடாகும். வருடமுழுவதும் ஓடிக் கொண்டிருக்கும் யோர்தான் நதியானது அதன் கரையிலுள்ள நஞ்சைப் பூமிக்கு பயனுள்ளதாயிருந்தாலும் அந்த ஆறு பள்ளத்தாக்கில் ஓடியதால் அதன் தண்ணீர் வயல்களுக்குப் பிரயோஜனப்படவில்லை. மேலும் வேறு பல நீரோடைகள் இருந்தாலும் மழைக்காலத்தில் மாத்திரமே அவற்றில் நீர் இருக்கும். அவை கோடைக்காலத்தில் வறண்டு போயின. எனவே, நீரோடையை கடவுளின் அருளுக்கு ஒப்பிட்டுக் கூறுவது வழக்கம். காரணம் கடவுளின் அருளாலேயே தண்ணீர் பற்றக்குறை நீங்கும். தி.பா. 36:8,9 வசனங்களில் இறைவனை பேரின்ப நீரோடை எனவும், வாழ்வுதரும் ஊற்றாகவும் அழைக்கிறார் இதன் ஆக்கியோன். பேரின்பமும், வாழ்வும் இணைந்து வருவது திருப்தி அல்லது நிறைவு. தி.பா. 1:3-ல் ஆண்டவரின் திருச்சட்டத்தைப் பற்றி இரவும் பகலும் சிந்திக்கும் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறும் அடியவர் கடவுளாம் நீரோடையின் ஓரத்தில் நடப்பட்ட கனிதரும் மரம்போல் இருப்பார் எனக் கூறப்பட்டுள்ளபடி அவரே இறைவனில் திருப்தி அல்லது நிறைவு பெற்றவராக இருப்பார். புதிய மாதத்தில் இறைவனில் நிலைத்திருந்து கனிதரும் வாழ்வு வாழ அர்ப்பணிப்போம். நிறைவளிக்கும் நீரோடையைப் பற்றிச் சிந்திப்போம்.

### ***1. இறைச்சந்நிதியிலிருந்து புறப்படுகிறது*** : (தி.பா. 36 : 8)

செழுமையை உருவாக்கும் நீரோடை ஆண்டவரின் இல்லத்திலிருந்துதான் புறப்படுகிறது. ஆண்டவரே இறை ஆசிக்கெல்லாம் காரணர். நியாயம் தண்ணீரைப் போலவும் நீதி வற்றாத நதியைப் போலும் புரண்டு வரக்கடவது (ஆமோஸ் 6:24) என்பது ஆமோஸ் தீர்க்கரின்

தணியாத விருப்பம். இத்தகைய நிலையை தாவீதரசர் தன் சக மக்களிடம் தேடினார். ஆனால் தி.பா. 36:1-4-லே கூறப்பட்டபடி தீமையின் குரலையே கேட்க முடிந்தது. இறையச்சம் இல்லாத, பெருமை பாராட்டிக் கொள்கின்ற, தீமையும் வஞ்சகமுள்ள வாயின் சொற்களுள்ள மக்களாகவே இருக்கின்றனர். ஆனால் நியாயம், நீதி, நேர்மை, அமைதி இறைச்சமூகத்தில் மாத்திரமே உண்டு. எனவே நிறைவு பெற இறைச்சமூகத்தை, ஆலயத்தை தேடிச் செல்வது தேவையான ஒன்று. 18 வருடங்களாக தீய ஆவியினால் சிறிதும் நிமிர முடியாத கூன் விழுந்த பெண் ஆலயத்திலிருந்து சுகம் பெற்று கனம் பெற்றவராய் இல்லம் சென்றாள். இப்புதிய மாதத்தில் ஆலயத்தை நேசிப்போம். இறை சமூகத்தை உறுதியாகப் பற்றிப் பிடிப்போம்.

***2. திருப்தியளிக்கிறது*** : (எசா. 55 : 1)

தாகமாய் இருப்பவர்களே, நீங்கள் அனைவரும் நீர்நிலைகளுக்கு வாருங்கள்.

நிறைவளிக்கும் நீரோடையாம் கடவுளே ஒரு மனிதனின் தாகத்தைத் தீர்த்து திருப்தியைக் கொடுக்கிறார். கடவுளுக்குக் கவனமாய்ச் செவிகொடுப்பதின் வழியாக நிறைவை, திருப்தியைப் பெறலாம். (எசா. 55:2,3) இயேசுநாதர் சமாரியப் பெண்ணிடம் உரையாடும்போது, இந்தத் தண்ணீரைக் குடிக்கும் ஒவ்வொருவருக்கும் மீண்டும் தாகம் எடுக்கும்; நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவர்க்கும் என்றுமே தாகம் எடுக்காது; அது அவர்க்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும் என்றார். அந்த நிலைவாழ்வாகிய தண்ணீரை இயேசுநாதரிடம் இருந்து பருகியதால் தன் பாவ வாழ்வில் திருப்தியடையாத அப்பெண் திருப்தியடைந்தவளாய் தன் இனத்தாரையும் இயேசு கிறிஸ்துவண்டை வழிநடத்தினாள். நம்முடைய வாழ்விலும் இப்புதிய மாதத்தில் இயேசுநாதர் நம்முடைய தாகத்தைத் தீர்த்து திருப்தியைத் தருவாராக.

***3. வாழ்வு கொடுக்கிறது*** : (தி.பா. 36 : 9)

“வாழ்வு தரும் ஊற்று உம்மிடமே உள்ளது”

நிறைவளிக்கும் நீரோடையாம் கடவுள் தம்மை நாடி வந்தோருக்கு வாழ்வு கொடுக்கிறார். வி.ப. 17:1-7 வரையுள்ள பகுதியில் இஸ்ரவேலர் கண்ட வாழ்வு தரும் ஊற்று பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்ரயேல் மக்கள் குறித்த ஒழுங்கின்படி சீன் பாலை நிலத்திலிருந்து இரபிதிம் என்ற இடம்

வந்தனர். அங்கு மக்களுக்குக் குடிக்க தண்ணீர் இல்லாததினால் மோசேயிடம் வாதாடினர்; முறுமுறுத்தனர். மோசே ஆண்டவரிடம் கதறினார். ஆண்டவர் மோசேயிடம் ஒரேபிலே உள்ள பாறையில் உனக்கு முன் நிற்பேன்; நீ பாறையை அடி; மக்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார். அவ்விதமே செய்து நிறைவளிக்கும் நீரோடையாம் ஆண்டவரிடமிருந்து தண்ணீர் பெற்று, பருகி வாழ்வடைந்தார்கள். வாழ்வு கொடுக்கும் நீரினுள் ஆரோக்கியம் இருக்கிறது. எனவேதான் தொழுகைக் கூடத்தின் தலைவர் மகள் மீது கையை வைக்க ஆரோக்கியம் அடைந்தாள். யாரேனும் தாகமாய் இருந்தால் என்னிடம் வரட்டும்; என்னில் நம்பிக்கை கொள்வோர் பருகட்டும்; மறைநூல் கூறுவது போல் அவருடைய உள்ளத்திலிருந்து வாழ்வுதரும் தண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்து ஓடும் (யோவா. 8:37,38). இயேசுகிறிஸ்துவிலே நம்பிக்கைக் கொண்டு வாழ்வு தரும் தண்ணீரை இப்புதிய மாதத்தில் பெற்றுக்கொள்வோம்.

திருமதி. Y. **ஹெர்லின் சஜிதா நெல்சன்**

01-08-2018 **புதிய மாத நன்றித் தொழுகை**

# கனிதரும் செடி

யோவா. 15:1-11

**"நானே திராட்சைக்கொடி; நீங்கள் அதன் கிளைகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னைவிட்டுப்பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது." யோவா. 15:5**

இயேசுகிறிஸ்து தன்னை உருவகப்படுத்தி கூறும் பகுதிகளில் மிக சிறப்பான பகுதி நாம் சிந்திக்கும் பகுதி ஆகும். தன்னை திராட்சை செடிக்கு ஒப்புமைப்படுத்துகிறார். பொதுவாக, திராட்சைக் கொடி இஸ்ரயேல் மக்களின் வாழ்வோடு இணைந்த ஒன்று. இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டு அழைத்துக் கொண்டு வரப்பட்டு கானானில் குடியேற வைக்கப்பட்ட நிகழ்வினை திருமறை சிறப்பாக வர்ணிக்கிறது. "எகிப்தினின்று திராட்சைச் செடி ஒன்றைக் கொண்டு வந்தீர்; வேற்றினத்தாரை விரட்டிவிட்டு அதனை நட்டு வைத்தீர்" (தி.பா. 80:8). நாம் சிந்திக்கும் திருமறைப்பகுதியில் கிறிஸ்துவாகிய திராட்சைச் செடியில் இணைந்திருந்தால் மிகுந்த கனிகளைக் கொடுப்போம் என்று கூறுகிறார் இயேசுகிறிஸ்து. இந்த புதிய மாதத்தில் கிறிஸ்துவோடு இணைந்த வாழ்வுதனை நாம் முன் வைக்கும் போது குறைவற்ற, வளமான, கனிதருகிற வாழ்வினை பெற்றுக்கொள்ள முடியும். அதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை திருமறை வெளிச்சத்தில் ஆராய்வோம்.

## *1. கிளைகள் கழிக்கப்பட வேண்டும்* :

திராட்சைக் கொடியில் வருடத்திற்கு இரண்டு முறை அதனுடைய தேவையற்ற கிளைகள் கழிக்கப்படும். வெட்டியெடுக்கப்பட்ட கிளைகள் தீயிலிடப்படும். யோவான் 15:2-ல் சிந்திக்கும்போது, கனிதரும் அனைத்துக் கிளைகளும் மிகுந்த கனி தருமாறு பரமத்தந்தை கழித்துவிடுவார் என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். தேவையற்ற கொடிகள் கழிக்கப்பட்ட பின்பு தான் திராட்சை செய்டி நல்ல கனிகளை தர முடியும். அதுபோல புதிய மாதத்திற்குள் பிரவேசிக்கும் நாமும் பழைய மாதங்களில் செய்த தவறுகளை களைந்துவிட்டு செல்லும்போதே ஆசி நிறைந்த மாதமாக இம்மாதத்தினை அமைக்க முடியும்.

"பாவத்தின் வேரை அகற்றாத வரை வாழ்வில் சமாதானம் என்பது என்றுமே எட்டாக் கனி தான்" என்றார் பிரான்சிஸ் ஹால். யோபு

தன்னுடைய பிள்ளைகளுக்க தூய்மைப்படுத்தும் முறை ஒன்றை கடைபிடித்தார். அதன்படி பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப எரிபலியை ஒப்புக்கொடுப்பார் (யோபு 1:5). காரணம் தன்னுடைய பிள்ளைகள் விருந்து நாட்களில் ஒரு வேளை அறியாமல் தவறு செய்திருக்கலாம் என்ற எண்ணமே கடவுளோடு நல்ல ஒப்புரவில் வாழ்ந்திட இந்த பழக்கம் துணை நிற்கிறது. லூக்கா 15-ம் அதிகாரத்தில் காண்கிற இளைய மகனும் தன் தவறுகளை உணர்ந்து அறிக்கையிட்டு அவைகளை களைந்துவிட்டு வரும்போது புதிய வாழ்வு அவருக்காக காத்திருந்தது. அதுபோன்று புதிய மாதத்திற்குள் நுழையுமுன் தேவையற்ற காரியங்களை களைவோம். பழைய தவறுகளை விடுவோம் புதிய மாதம் நமக்காய் காத்திருக்கிறது.

## *2. இணைந்திருக்கும் அனுபவம் வேண்டும்* :

கொடியுடன் கிளைகள் இணைந்திருக்கும் போது தான் கிளைகள் செழித்து வளர முடியும். எனவே தான் இயேசு கிறிஸ்து அவரோடு நாம் இணைந்திருக்க வேண்டும் என்ற ஆவலை வெளிப்படுத்துகிறார் (யோவா. 15:5). கொடியுடன் இணைந்திருக்கும் கிளையானது தனக்கு தேவையான சத்தினை கொடியிலிருந்து பெற்றுக் கொள்ளும். அது போன்றே நாமும் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது வாழ்வுக்கு தேவையான சக்தியினை அவரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். அவரில் இருந்து பிரிந்து வாழ்ந்தால் நாம் ஒன்றுமே செய்ய முடியாது.

நம் உடலின் பாகங்கள் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்ற பொழுது தான் உடல் வளர்ச்சி பெறுகிறது. அதுபோன்று கிறிஸ்துவில் இணைந்திருந்தால் தான் முழு வளர்ச்சி பெற முடியும் என்பதை தூய பவுல் எபேசு திருச்சபைக்கு எழுதிய கடிதத்தில் தெளிவுப்படுத்துகிறார் (எபேசியர் 4:15,16). மோசே என்னும் மாபெரும் தலைவரின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் மிக முக்கியக் காரணம் அவர் கடவுளோடு இணைந்து இருந்தது தான். கடவுளிடம் இணைந்து பேசாமல் அவர் எந்த செயலையும் செய்யவில்லை. பேரரசர் தாவீதின் வாழ்வில் கடவுளோடு இணைந்து இருப்பதில் தடைகள் வந்த போதும் துவண்டு விடாமல் மீண்டும் கடவுளோடு இணைந்தார். எனவே தான் உலகையே திரும்பி பார்க்கச் செய்த சரித்திர பேரரசராக வாழ முடிந்தது. புதிய மாதத்தில் கடவுளோடு இணைந்திருக்க வேண்டும் என்ற ஆவலுடன் பயணிப்போம்.

## 3. கனி கொடுக்கும் ஆவல் வேண்டும் :

"கிறிஸ்தவர்களின் வாழ்வின் கனிகளைக் கொண்டுதான் மக்கள் கிறிஸ்தவத்தை நிதானிக்கின்றனர்" என்றார் மாக்ஸ் வெல். நம்முடைய வாழ்வின் கனிகளே நம் வாழ்க்கை தரத்தை நிர்ணயம் செய்கிறது. கனி கொடுக்கும் ஆவல் நம்முள்ளே இருந்தால் தான் நல்ல கனிகளை கொடுக்க முடியும். யோவா. 15-ம் அதிகாரத்தில் "நிலைத்திருங்கள்" என்ற வார்த்தை 15 முறை வருகிறது. கடவுளில் நிலைத்திருந்து கனி கொடுக்க வேண்டும் என்ற ஆவலுடன் வாழும் போது தான் வாழ்க்கை சிறப்பாக அமையும்.

'யோசேப்பு, கனிதரும் கொடி ஆவான்' என்று தனது தந்தையாகிய யாக்கோபினால் ஆசி பெற்றவர் (தொ.நூ. 49:22). யோசேப்பில் இருந்த ஒரு ஆவல் தான் இதற்கான காரணம். கனிதரும் ஆவல் இல்லை என்றால் கனிகள் கசப்பு நிறைந்ததாகவே இருக்கும். இஸ்ரவேல் மக்களின் வாழ்வில் கனிதரும் ஆவல் இல்லாத காரணத்தால் நல்ல கனிகளை அவர்களால் தர இயலவில்லை கடவுள் திராட்சை தோட்டக்காரராய் சிறந்த பணிகளை செய்தும் கசப்பான கனிகளையே பெற முடிந்தது என வேதனைப்பட்டார் (ஏசா. 5:2). இந்த நிலை நம் வாழ்வில் இருக்கக் கூடாது நல்ல கனிகளைத் தர வேண்டும் என்ற ஆவல் நம்மில் வேண்டும்.

அன்பானவர்களே, புதிய மாதத்தில் கடவுளின் அருளோடு வந்திருக்கின்ற நாம் பாவம் என்னும் தேவையற்ற களைகளை களைந்து, கிறிஸ்துவாகிய செடியில் இணைந்து, கனி தர வேண்டும் என்ற ஆவலோடு சிறந்த வாழ்வை வெளிப்படுத்துவோம். இந்த மாதம் ஆசி நிறைந்த மாதமாக அமைய கடவுள் அருள்புரிவாராக.

அருள்திரு. M. **கிதியோன்**

01-09-2018

**புதிய மாத நன்றித் தொழுகை**

# பலன் தரும் பனி

திருமறைப்பகுதி : ஓசே. 14:1-7

**"நான் இஸ்ரயேலுக்குப் பனி போலிருப்பேன்."** ஓசே. 14:5

ஓசேயா சிறிய இறைவாக்கினர்களில் ஒருவர். இவர் வட நாட்டைச் சார்ந்தவர். ஓசேயா என்பதற்கு 'மீட்பு' அல்லது 'இரட்சிப்பு' என்பது பொருள். ஆண்டவரின் அளவற்ற அன்பின் நதிப்பெருக்கினை எடுத்துரைத்தவர் (ஓசே. 11:1,4).

ஓசேயா 14:5-ல் சொல்லப்பட்டபடி 'பனி' என்ற சொல் செழுமையையும் புத்துணர்ச்சியையும், புதுப்பித்தலையும் மனித சக்திக்கு அப்பாற்பட்டதையும் உருவகமாகக் குறிக்கிறது. இது இறைவனின் ஒரு கொடையாக கருதப்பட்டுள்ளது.

இப்புதிய மாதத்தில் பனி தரும் நன்மைகள் என்ன என்பதைக் குறித்து திருமறைப் பார்வையில் சிந்திப்போம்.

### ***1. எண்ணிலடங்கா நன்மைகளைத் தருகின்றது :***

ஆண்டவர் பனியைப் போன்று எண்ணிலடங்கா நன்மையை அளிப்பவர். தொநூ. 27:28-ல் ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கும் போது கடவுள் உனக்கு வானத்துப் பனியையும், பூமியின் கொழுமையையும் மிகுந்த தானியத்தையும், திராட்சரசத்தையும் தந்தருளுவாராக என்று கூறுகிறார்.

### ***2. பாதுகாக்கிறது :*** (ஓசே. 14:5)

பனியானது மழையற்ற காலத்திலும் செடிகளைப் பாதுகாக்கிறது. அதுபோல இஸ்ரயேலர் தங்கள் அக்கிரமத்தை விட்டு கடவுளிடம் மனந்திரும்பும்போது அவர்களுக்குப் பனியைப் போல கடவுள் இருப்பார். அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவார், அவர்களை மனப்பூர்வமாய் நேசித்து ஒரு தந்தை தன் பிள்ளைகளைப் பாதுகாப்பது போல அவர் பாதுகாப்பார்.

### ***3. லீலி மலரின் வெண்மைநிறக் காட்சி :*** (இபா. 2:1,2)

லீலி இயற்கையாகவே வளரும் தன்மை கொண்டது. இது வெள்ளைநிற மலர்களைக் கொண்ட காட்டுச் செடியாகும். இது

மலைகளிலும், திறந்த வயல்களிலும் வெள்ளைநிறத் தோற்றத்தை உடையதாகும். இது தூய்மையான வாழ்வைக் குறிக்கிறது. இது போன்று இஸ்ரயேல் மக்களின் வாழ்வை அழகுப்படுத்தி, தூய்மைப்படுத்தி நன்மை அளிப்பார் என்று இறைவாக்கினர் உரைக்கிறார்.

### 4. லெபனோனின் கேதுரு மரம் :

லெபனோனின் மலைகள் கேதுரு மரங்களைக் கொண்ட ஒரு சிறந்த செழிப்பான இடமாக இருந்தது. இந்தக் கேதுரு மரம் வலிமையின் அடையாளமாகவும் (சங். 29:5), புகழ்ச்சியின் அடையாளமாகவும் (திபா. 80:10) உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இதே போன்று இஸ்ரயேல் மக்களைப் பெலமும், புகழ்ச்சியுமாய் வைத்து அவர்களை மேன்மைப்படுத்துவார்.

### சிந்தனைக்கு :

இப்புதிய மாதத்திலும் ஆசியைச் சுதந்தரித்துக் கொள்ள நாம் செய்ய வேண்டியவை.

1. அக்கிரமத்தை விட்டு ஆண்டவரிடம் திரும்புவோம் (ஓசே. 14:1,2).
2. அர்த்தமில்லாமல் செலுத்தும் பலியை விட உள்ளத்தைப் பலிப் பொருளாய்க் கொடுப்போம்.

அப்போது ஆண்டவர் அன்பு பாராட்டி அழகுப்படுத்தி, மீட்டு நம்மைப் பாதுகாத்து வழி நடத்துவார்.

திரு. C. **ராஜன்**

01-10-2018 **புதிய மாத நன்றித் தொழுகை**

# நிதமும் தொடரும் நிழல்

திபா. 121

***"ஆண்டவரே உம்மைக் காக்கின்றார்; அவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார்; அவரே உமக்கு நிழல் ஆவார்!"* திபா. 121:5**

திருப்பாடல் 121, பயணத்தில் நம்பிக்கையூட்டும் பாடல். வாழ்வின் எல்லாச் சூழலிலும் கடவுளைச் சார்ந்து வாழவும் அப்படி வாழும்போது அவர் தரும் நன்மையையும், பாதுகாப்பையும் பற்றிக் கூறுகிறது. நிழல் நாம் எங்கு சென்றாலும் நம்முடன் தொடருகின்றது. நம்மை விட்டு நிழல் விலகுவதில்லை. கடவுள் நமக்கு நிழலாய் நம்மோடு இருக்கும் போது எத்தீங்கும் நம்மை மேற்கொள்ளாமல் காக்கிறார். ஆண்டவர் உன் வலது பக்கத்தில் உனக்கு நிழலாயிருக்கிறார். வலது பக்கம் என்பது பொதுவாக பலத்தையும், சாதகமான நிலையையும் குறிக்கிறது. கடவுள் நமக்குப் பலனும், சாதகமும், அரணுமாய் இருக்கிறார். இந்தப் புதிய மாதத்திலும் கடவுள் நமக்கு நிழலாய் இருப்பேன் என உறுதி மொழிகின்றார்.

## *1. பயணிக்கும் நிழல்* (திபா. 121 : 8)

நிழல் நாம் செல்லும் இடமெங்கும் நம்முடன் வரும். அதுபோலவே கடவுள் நம் வாழ்வில் நம்மோடு பயணிக்கிறார். நெடுந்தொலைவுப் பயணம் செய்கிறவர்களுக்கு அதிக சிரமங்கள் உண்டு. வெயிலின் தாக்கம் ஏற்படும் போது பயணம் பாதிக்கப்படும். நெடுஞ்சாலை ஓரங்களில் மரங்கள் வளர்ப்பது பயணம் செல்வோர் வெயிலில் சிரமம் இன்றிப் பிரயாணம் செய்யவே. அதுபோலவே கடவுள் நம்மோடு பயணப்பட்டு நமது வாழ்வில் பயணச் சிரமங்கள் ஏற்படாமல் சுகமாய்ப் பயணம் செய்ய உதவுகிறார். அவர் நம் காலைத் தள்ளாடவொட்டாமல் பெலனோடு வெற்றியாய் வாழ்வின் பயணத்தை மேற்கொள்ள நிழலாய் உடன் பயணிக்கிறார்.

## *2. பாதுகாக்கும் நிழல்* : (திபா. 121:5)

"ஆண்டவரே உம்மைக் காக்கின்றார்"

இவ்வுகில் மனிதன் பாதுகாப்பு தேடி ஓடி வாழும் சூழலை நாம் காணமுடிகிறது. நோய்க்கும், விபத்துக்கும், இயற்கையின் அழிவிற்கும், எல்லாவித ஆபத்திலும் பாதுகாப்பிற்காக என்னென்னவோ முன் ஏற்பாடுகள் செய்கிறார்கள். ஆனாலும் அந்தப் பாதுகாப்பையும் தாண்டி

ஆபத்துகள் வந்து கொண்டு தான் இருக்கின்றன. பகலின் வெயிலும் இரவின் நிலவும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை. ஏனெனில் கடவுள் உன்னைக் காக்கிறவர் என்ற செய்தியை திருப்பாடகர் இந்தப் பாடல் வழி குறிப்பிடுகிறார். அறிவியல் ஆய்வுகளும் பகலின் வெயிலினால் ஏற்படும் தோல் புற்று நோய், Heat Stroke போன்ற உயிர்க் கொல்லி வியாதிகளும், இரவின் நிலவால் மனிதற்கு ஏற்படும் மனநலப் பாதிப்புகளையும் குறித்து எச்சரிக்கின்றன. எசாயா இறைவாக்கினர் கூறுகிறார் (எசாயா 25:4) கடவுள் நமக்கு நிழலாய் இருந்து நம்மைப் பாதுகாக்கிறார்.

யோசுவாவும், காலேபும் சபையாரைப் பார்த்துச் சொன்ன செய்தி எதிரிகளை காத்த நிழல் அவர்களை விட்டு விலகிப் போயிற்று கர்த்தர் நம்மோடே இருக்கிறார் நாம் பயப்படத் தேவையில்லை என்றனர் (எண். 14:9). நமக்குப் பாதுகாப்பு, நம்மைக் காக்கும் நிழல் கிறிஸ்துவே. இதோ உலகத்தின் கடைசிவரை நான் உங்களோடு இருக்கிறேன் என்றவர் நிழலாய் நம்மோடு இருக்கிறார்.

" There is strong shadow where there is much light" அதிக வெளிச்சம் இருக்கும் இடத்தில் உறுதியான நிழல் இருக்கும் என்கிறார் Johann Wolfgang. நாம் திருமறை காட்டும் ஒளியில் நடக்கும் போது நிழலாய் கடவுள் நம்முடன் இருந்து வருகிற நாட்களில் நம்மைப் பாதுகாத்து நடத்துவாராக.

திரு. J. **பிளசிங் சாமுவேல்**

01-11-2018 **புதிய மாத நன்றித் தொழுகை**

# அடைக்கலம் தரும் அரண்

திபா. 48

**"அதன் அரண்மனைகளில் கடவுள் வீற்றிருந்து தம்மையே அதன் கோட்டை எனக் காட்டியுள்ளார்."** திபா. 48:3

ஆண்டவரில் முழு நம்பிக்கை கொண்ட திருப்பாடகர் இயற்கையாலும் பிற நாட்டவராலும் இழைக்கப்படும் துன்பங்களுக்கு எதிராக இறைவன் நம் மக்களுக்கும், திருநகரத்துக்கும் தரும் பாதுகாப்பை (அடைக்கலம்) விசுவாச கண்களால் கண்டு இறைவனை புகழ்ந்து பாடும் நம்பிக்கையின் பாடல் வரிகள் இவை. திருநகரமாகிய எருசலேமுக்கு அடைக்கலம் தரும் அரண் ஆண்டவர் ஒருவரே என்பதனை திட்டமாக குறிப்பிடுகிறார்.

இன்றைய உலகில் மக்களை அதிகம் பாதிப்பது பாதுகாப்பின்மையே. பொருளாதார நிலையிலும், உளவியல் தளத்திலும் பாதுகாப்பற்ற தன்மையே மிக அதிகமாகக் காணப்படுகிறது. நாளைய பொழுது எப்படி இருக்கும். எப்படி கழிப்பது என்னும் நிலை ஒரு புறம். என்னை யாரும் கண்டுகொள்ளவில்லை; என்னை யாரும் அன்பு செய்யவில்லை என ஏங்கும் மக்கள் மறுபுறம்.

எதிர்சக்திகளை மேற்கொள்ள பாதுகாப்பு அம்சங்கள் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள், காப்பீடு சார்ந்த காரியங்களை மனிதர் ஏற்படுத்திக் கொள்கின்றனர். அவை நிலையற்றவை. இவ்வுலகில் கடவுள் மட்டுமே மேலான பாதுகாப்பை கொடுக்க முடியும்.

அடைக்கலம் என்பதற்குரிய பொருள் 'பாதுகாப்பு' அரண் என்றால் 'பாதுகாப்புச் சுவர்' என்பதாகும்.

புதிய மாதத் தொடக்கத்தில் வருகை தந்திருக்கும் நபருக்கு இப்பாடல் வெளிப்படுத்தும் மூன்று அம்சங்களைச் சிந்திப்பது நமது ஆன்மீகத்தை வலுப்படுத்துவதாக அமையும். கடவுளில் நாம் பெற்றுக்கொள்ளும் சிறப்பு என்பது என்ன?

## *1. ஆண்டவரின் உடனிருத்தல்* :

அதன் அரண்மனைகளில் கடவுள் வீற்றிருந்து...... (தி.பா. 48:3a)

திருப்பாடகரின் நம்பிக்கை கடவுள் நாம் வாழும் இடங்களில் இல்லங்களில் வாழ்கிறார், வீற்றிருக்கிறார் என்பதே. இருக்கின்றவராகவே

வாழ்கிறார், வீற்றிருக்கிறார் என மோசேக்கு திருக்காட்சி தந்த கடவுள் (வி.ப. 3:13) என்றென்றும் தம் மக்களுடனே வாழ்கிறார். தலைமுறை தலைமுறைதோறும் ஆளுகை செய்கிறார். அவர் மிகவும் மாண்புமிக்கவர் (தி.பா. 48:1). தம் திருமைந்தர் இயேசு கிறிஸ்துவில் தம்மை உலகிற்கு வெளிப்படுத்தியவர் (எபி. 1:1-9). ‘‘இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்’’ (மத். 28:20) என்று கூறினார். ஆம் அவர் நம்மோடு வாழ்கிறார். வாழ்வின் எல்லா நிலைகளிலும் நம்மோடிருக்கிறார்.

## *2. ஆண்டவரின் வழிநடத்துதல்* :

‘‘அவரே நம்மை இறுதிவரை நடத்துவார்’’ (திபா. 48:14b)

வாழ்க்கைப் பயணத்தில் உடன்வாழும் உறவுகள் கூட நெருக்கடியான காலங்களில் பின்வாங்கி சென்றுவிடுவர். ஆனால் கடவுள் வாழ்வின் இறுதிவரை நடத்துவார். வாழ்வில் சந்திக்கிற வியாதி, வறுமை, இழப்புகள் நடுவிலும் நம்பிக்கையுடன் வாழ துணைபுரிகிறார். நம்மை அழைத்தவர் தேர்ந்தெடுத்தவர் வல்லமையுள்ளவர்; தடைகளை தகர்த்தெறிந்து பலத்தை மாற்றி, எதிராளிகளை முறியடித்து வெற்றிக்கு வழிநடத்துபவர் (தீமொ. 48:48). ஏனெனில் நாம் அவரின் பிள்ளைகள் (1பேது. 2:9).

## *3. ஆண்டவரின் பாதுகாவல்* :

‘‘தம்மையே அதன் கோட்டை எனக் காட்டியுள்ளார்’’ (திபா. 48:3).

திருநகர் எருசலேமைச் சுற்றிலும் கட்டப்பட்டிருந்த அரண் மக்களை எதிரிகளிடமிருந்து பாதுகாக்க பயன்பட்டது. இறைவன் அதற்கு மேலான அரணாக தம் மக்களை பாதுகாக்கிறார் என்னும் நம்பிக்கையை திருப்பாடகர் தருகிறார். திருநகரின் பாதுகாப்பு அந்நகரில் தங்கிடும் தேவ பிரசன்னமேயாகும்.

ஆபத்துக் காலங்களில் இறைவன் தம் மக்களை அரணுக்குள்ளும் (கோட்டை), கற்குகைக்குள்ளும் அனுப்பி பாதுகாக்கிறார் என்னும் நம்பிக்கை இறைமக்களிடம் காணப்பட்டது (நீத. 6:12; 9:50-55).

தாவீதும் கற்பாறையாம் இறைவனை, ‘‘ஆண்டவர் என் கற்பாறை; என் கோட்டை; என் மீட்பர்; என் கடவுள்; நான் புகலிடம் தேடும் மலை; என் கேடயம்; என் மீட்பளிக்கும் வல்லமை; என் அரண்’’ (2சாமு. 22:2,3; 23:32.33) என போற்றுகிறார்.

ஆம் மனிதரின் பாதுகாப்பு முழுமையற்றது. இறைவன் அருளும் பாதுகாப்பே முழுமையானது.

"பிளவுண்ட மலையே புகலிடம் தாருமே" என்ற பாடலை எழுதியவர் அகஸ்டஸ் டாப் லேடி என்னும் போதகர் அவர். குருத்துவ திருப்பணி செய்த கிராமத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் இயற்கை அழகு நிறைந்த ஒரு புல்வெளி இருந்தது. அதில் புதர்களும், பாறைகளும் உண்டு. போதகர் அடிக்கடி அங்கு நடந்து சென்று உலாவி வருவது வழக்கம். ஒரு நாள் அங்கு சென்றிருக்கையில், திடீரென்று புயலோடு கூடிய மழை உண்டாயிற்று. ஒதுங்குவதற்கு வழியில்லாமல் அங்குமிங்கும் பார்க்கையில் அவர் ஒரு பெரிய பாறையில் செங்குத்தான ஒரு பிளவைக் கண்டு, அதில் புயல் ஓயும் வரை ஒதுங்கினார் பத்திரமாகக் காக்கப்பட்டார். எப்போதும் ஆன்மீக காரியங்களைச் சிந்தித்துக் கொண்டிருந்த போதகருக்கு நேரிட்ட இந்நிகழ்வு இவ்வுலகில் நமக்கு நேரிடும் துன்பங்களுக்கு நாம் தப்பி ஒதுங்க நமது ஆண்டவர் புகலிடமாக விளங்குகிறார் என்னும் உணர்வை எழுப்பியது. அப்போது "பிளவுண்ட மனாயே" என்னும் பாடல் உருவாகிற்று. புயல் ஓய்ந்தவுடன் கீழே கிடந்த ஒரு சீட்டில் இப்பாடலின் முதல் கவியை எழுதினார். இந்த சீட்டு இன்னமும் அமெரிக்காவில் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளது. வீட்டுக்குச் சென்றவுடன் இப்பாடலின் மீதமுற்ற கவிகளையும் எழுதி வைத்தார்.

ஆம், ஆண்டவர் நமக்கு எவ்வளவு அரணாக இருக்கிறார்.

வாழ்க்கை என்பது, இறைவன் வழங்கும் பெரும் பரிசு. இந்த வாழ்வை அர்த்தமுள்ள விதத்தில் வாழ்வது நமது கடமை. வாழ்க்கையில் வரும் துன்பங்களைக் கண்டு துவண்டுவிடாமல் நம் பெலவீனங்களில் வைவிடப்பட்டது போன்ற சூழல் ஏற்படும் வேளையில் வாழும் கடவுள் நம்மோடு இருக்கிறார், அவர் வழி நடத்துகிறார், வழிநடத்தினார், பாதுகாக்கிறார், பாதுகாப்பார் என்ற நம்பிக்கையில் முன்னேறுவோம். ஆண்டவர் ஆற்றல் தந்து வழி நடத்துவராக.

அருள்திரு. V. **ஜாண்சன் கில்பர்ட்**

01-12-2018 **புதிய மாத நன்றித் தொழுகை**

# மீட்கும் இரட்சணியக் கொம்பு

லூக். 1:67-75

***"அவர் தம் ஊழியராகிய தாவீதின் குடும்பத்தில் வல்லமை உடைய மீட்பர் ஒருவர் நமக்காகத் தோன்றச் செய்தார்." லூக் 1:70***

Socrates (ஸோக்ரட்டீஸ்) 40 ஆண்டுகள் இந்த உலகிலே வாழ்ந்தார். ஆனால் அவருடைய வாழ்க்கையை குறித்து எந்தப் பாடல்களும் இல்லை. Pluto 50 ஆண்டுகள் இவ்வுலகில் கற்பித்தார் இருப்பினும் மனித வாழ்வில் வளர்ச்சியூட்டும் பாடல்கள் ஒன்றும் அவரிடத்திலிருந்து வெளிவரவில்லை. ஆனால் இயேசுநாதர் இவ்வுலகில் 33 ஆண்டுகள் வாழ்ந்து 3 ஆண்டுகள் போதனை செய்த நிலையில் அவருடைய போதனைகளும் அவருடைய வாழ்வும் அனேக மனிதர்களை ஈர்க்கின்றதாகவும், உற்சாகப் படுத்துகின்றதாகவும் காணப்பட்டது. லூக். 1:67-75 வரையுள்ள சகரியாவின் பாடலும், மகிழ்ச்சியின், விடுதலையின் கடவுளின் வார்த்தையும், வல்லமையும், இரட்சிப்பின் மகத்துவத்தையும் குறிக்கின்றது.

சகரியா அரசியல் நிலையில் நாடு விடுதலை அடைய வேண்டுமென்று விரும்பினாலும் லூக். 1:74-77 வசங்களின் படி இரட்சகர் ஒருவர் பரிசுத்தத்தையும், மீட்பையும் கொண்டு வருவார் என்று அறைகூவல் விடுக்கின்றார். அவருடைய பாடல் கடவுள் தரும் விடுதலை வாழ்வைக் குறித்தும் கடவுளுடைய ஆளுகையை குறித்தும் தெளிவுபடுத்துகின்றது. மிக முக்கியமாக லூக். 1:75-ல் இயேசு நாதர் தாவீதின் வம்சத்தில் தோன்றி இரட்சண்ணிய கொம்பாக மீட்பை அருளுவார் என தெளிவுப்படுத்துகின்றார்.

இயேசுநாதர் தாவீதின் வம்சத்தில் இரட்சண்ணிய கொம்பை ஏற்படுத்துவார் என்று சகரியா கூறுகின்ற கூற்றினை நாம் தியானிப்போம். பழைய ஏற்பாட்டில் 'கொம்பு' என்ற வார்த்தை மிருகங்களை பாதுகாக்கின்றதாகவும், மிருகங்களுக்கு வலிமையும், வெற்றியும் கொடுக்கின்றதாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலே திருமறையிலிருந்து 'கொம்பு' என்ற வார்த்தை ஆற்றலையும், வல்லமையையும் குறிப்பதாக நாம் அறிகிறோம். தானி. 7:7-24 வசனங்களின் படி '10 கொம்புகள்' என்ற வார்த்தை 10 அரசர்களை குறிப்பதாக அறிகிறோம். மேலும் தி.பா. 75:10-ன் படி "துன்மார்கருடைய கொம்புகள் எல்லாம் வெட்டி போடுவேன், நீதிமானுடைய கொம்புகளோ உயர்த்தபடும்" என வாசிக்கிறோம். 1சாமு. 2:1-ன் படி அன்னாள் "என் கொம்பு கர்த்தருக்குள் உயர்ந்திருக்கின்றது" என்று அறிக்கை

செய்கின்றாள். மேலும் தி.பா. 18:2-ன் படி சங்கீதக்காரன் "கர்த்தர் என் இரட்சண்ணிய கொம்பும் என் உயர்ந்த அடைக்கலமுமாய் இருக்கிறார்" என்று குறிப்பிடுகிறார். இதே வரிசையில் சகரியா லூக். 1:68,69 வசனங்களிலே இயேசுநாதர் "இரட்சணிய கொம்பு" என சாட்சி பகருகின்றார்.

இயேசுநாதர் என்நிலையில் இரட்சண்ணிய கொம்பாக செயல்படுகிறார் என நாம் தியானிப்போம்.

### 1. அனைவருக்கும் மீட்பரான இயேசு :

லூக். 1 : 72-ன் படி சகரியா இயேசு நாதர் மீட்பராக மனு மக்களை மீட்பார் என குறிப்பிடுகிறார். ஆதாமினால் தோன்றின பாவம் மனித குலத்தின் வீழ்ச்சிக்கு காரணமாய் காணப்பட்டது. இந்த வீழ்ச்சியிலிருந்து மானிடத்தை மீட்பதற்காக இறைவன் தம்முடைய ஒரே மைந்தரை இந்த உலகிலே அனுப்பினார். இயேசுவினுடைய பிறப்பு பாவவிடுதலையினையும் மீட்பினையும் மனுகுலத்துக்கு அளிப்பதை நாம் புரிந்துகொள்ள இயலுகின்றது.

### 2. அனைவருக்கும் ஆற்றல் வழங்கும் இயேசு :

மிருகங்களுடைய கொம்பு, மிருகங்களுக்கு எவ்வண்ணமாக வலிமை சேர்க்கின்றதோ, அவ்வண்ணமே இயேசுவினுடைய பிறப்பும், வலிமையற்றோருக்கு, ஆற்றல் அளிப்பதாக சகரியா தீர்க்கதரிசனம் உரைக்கிறார். இயேசுநாதர் இவ்வுலகில் திருப்பணி ஆற்றியபோது சமுதாயத்தின் விளிம்பு நிலைகளில் இருந்த மக்கள் மீது கரிசனை உள்ளவராய் செயல்பட்டார் என்பதை அறிகிறோம். இவ்வண்ணமாக இயேசுவை ஏற்றுக்கொள்கின்ற அத்தனைபேருக்கும் இயேசு ஆற்றல் கொடுத்து அவரை உயர்த்துகின்றார்.

### முடிவுரை :

சகரியா இயேசுநாதரை "இரட்சணியக் கொம்பாக" சித்தரிக்கின்றபோது இயேசுவின் மீட்பின் ஆற்றலை உணர்ந்துகொள்ள முடிகின்றது. இந்த பண்டிகை காலங்களில் இயேசுவை ஏற்றுக்கொண்ட நாம் சமுதாய நிலையில் ஆற்றல் இழந்தோருக்கு, ஆற்றல் கொடுக்கின்றவராய் மாற இறைவன் அருள் செய்வாராக. சந்திரன் எவ்வண்ணமாக சூரியனிலிருந்து ஒளியைப் பெற்று பிரகாசிக்கின்றதோ, அவ்வண்ணமே இருள் சூழ்ந்திருக்கும் இம்மானிட உலகில் இயேசுவை அறிவிக்கின்ற நட்சத்திரங்களாக பிரகாசிக்க இறைவன் அருள் செய்வாராக.

அருள்திரு. E. **சேம் ஜெபசிங்**

# சிறப்பு நாட்களுக்கான அருளுரைகள்

புதிய கல்வியாண்டு தொடக்க நாள்

# வெற்றிக் கனி உனக்கே

நீமொ. 2:1-6

**"ஞானத்தை அருள்பவர் ஆண்டவரே."** நீமொ. 2:6

நீதிமொழிகள் என்னும் இந்த நூல் ஒழுக்கத்தைச் சார்ந்த போதனைகளின் தொகுப்பாகும். இது தாவீது அரசரின் மகனும் இஸ்ரயேலின் மூன்றாவது அரசருமாகிய சாலமோனால் எழுதப்பட்டது. இவர் ஞானத்தைக் குறித்து தெளிவாகக் கூறியுள்ளார். திருமறைப்பகுதியில் ஞானத்தை அளிப்பவர் ஆண்டவரே என்று சாலமோன் அரசர் அழகுற தெளிவுப்படுத்தியுள்ளார். நாம் ஞானத்தைத் தரும் கடவுளிடம் அடைக்கலம் புகுந்து சிறந்த கல்வியாளராக மாற ஆலோசனை தரப்படுகின்றது.

கல்வி எல்லாருக்கும் பொதுவானது. எல்லாராலும் போற்றப்படுவது. கல்வி இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்றார் திருவள்ளுவர் இந்த கல்வி கனி தரும் செடி போன்றது. ஒரு செடி செழித்து வளர்ந்து கனிகொடுக்க என்னக் காரியங்களைச் செய்ய வேண்டுமோ, அத்தகு காரியங்களை நம் வாழ்வில் கடைபிடித்தால் வெற்றிக் கனி நமக்கு சொந்தமாகும். வெற்றிக் கனியை நமக்கு சொந்தமாக்கிக்கொள்ள நாம் என்னச் செய்ய வேண்டும்?

## *1. விதையிடு* :

செடி முளைத்து வளர முதலில் விதையிட வேண்டும். அது போல நமது வாழ்வில் கல்வி என்றச் செடி முளைத்து வளர 'இலட்சியம்' என்ற விதையிட வேண்டும். வாழ்வில் இலட்சியம் இல்லையேல் பயன் இல்லை. வாழ்வில் எத்தகைய உயர்வைப் பெற்றுக்கொள்ள விருப்பமோ அதில் இலட்சியம் வேண்டும். (எ.கா.) மாவட்ட ஆட்சியர் மருத்துவர், ஆசிரியர், பொறியியலாளர்.

இந்த இலட்சியம் நிறைவேற சோம்பலை அகற்ற வேண்டும். சோம்பேறிகளே, எறும்பைப் பாருங்கள்; அதன் செயல்களைக் கவனித்து ஞானமுள்ளவராகுங்கள் (நீமொ. 6:6) என்றும் நீதி ஊக்கமுடையோரின் கை ஆட்சி செய்யும்; சோம்பேறிகளோ அடிமை வேலை செய்வர் (நீமொ. 12:24) என்றும் "கீல்பட்டையில் கதவு ஆடிக்கொண்டிருப்பது போல, சோம்பேறி தடம் புரண்டு கொண்டிருப்பார்"(நீமொ. 26:14) என்றும் நீதி மொழிகளின் ஆக்கியோன் குறிப்பிடுகின்றார்.

சோம்பல் வலைக்குள்ளாக சுருண்டு படுத்திருப்பவர்களால் எப்பொழுதும் வெற்றி வீதிகளில் உலா வர இயலாது. இலட்சிய நெருப்பு எரிந்து கொண்டிருந்தால் சோம்பல் இருள் சூழாது. எனவே இலட்சியம் என்ற விதையிட்டு வெற்றிக்கனிளைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

## *2. தண்ணீர் ஊற்று* :

விதை முளைக்க, முளைத்த செடி செழித்து வளர தண்ணீர் தேவை. அது போல கல்வி என்ற விதை முளைத்து வளர முயற்சி என்ற தண்ணீர் ஊற்ற வேண்டும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்; முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை." முயற்சி திருவினையாக்கும் என்பவை மூத்தோர் முதுமொழிகள்.

"விடா முயற்சியுடையவரோ அரும் பொருளையும் ஈட்டுவர்." (நீமொ. 12:27) என்பது திருமறை வாக்கு எனவே முயற்சி நமக்கு தேவை.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரடீஸ் அவர்கள் தமது இல்லத்தில் இருந்தபோது இளைஞர் ஒருவர் அவரைச் சந்திக்க வந்து, ஐயா! நீங்கள் எந்த காரியத்திலும் சிறப்பான வெற்றி பெறுகிறீர்களே, அது எப்படி என்று கேட்டார். சாக்ரடீஸ் அவர்கள் இளைஞரிடம் தம்பி நாளை வந்து என்னை சந்தித்தால் பதில் சொல்கிறேன் என உறுதியளித்தார். மறுநாள் காலை இளைஞர் வந்தார். அப்போது சாக்ரடீஸ் அவர்கள் ஆற்றில் குறித்துக்கொண்டிருந்தார்கள். வந்த இளைஞரை ஆற்றுக்குள் அழைத்தார். தண்ணீருக்குள் அமிழ்த்தி பிடித்தார். அந்த இளைஞர் மேலே வர முயற்சித்தார். சற்று நேரம் கழித்து மேலே தூக்கி விட்டு விட்டு அந்த இளைஞரிடம் "நீ நீரில் முழ்கடிக்கப்பட்டிருந்த போது என்ன நினைத்தாய்? என்றுக் கேட்டார். உடனே அந்த இளைஞர் எப்படியாவது மேலே வரவிடவேண்டும் என்று முயற்சித்தேன் என்றார்." உடனே சாக்ரடீஸ் சொன்னார் எந்த கஷ்டத்திலும் வென்று மேலே வர முயற்சித்துக் கொண்டே இருந்தால் வாழ்வில் உயரலாம் என்றார். அன்பு பிள்ளைகளே! முயற்சி என்ற தண்ணீர் ஊற்றி சிறப்பாகக் கற்று வெற்றிக் கனியை எட்டிப்பிடிக் முயற்சிப்போம்.

## *3. உரமிடு* :

செடி வளர உரம் மிக மிக அவசியம். அதுபோல கல்வி என்ற கனி தரும் செடி வளர தன்னம்பிக்கை என்ற உரமிட வேண்டும். எந்தவொருக் செயலையும் என்னால் செய்து முடிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை வேண்டும்.

மண்ணை தடை என்று நினைத்தால் விதைகள் முளைக்க முடியாது. அது போல தன்னம்பிக்கை தளைக்க மனத் தடைகளைத் தகர்க்க வேண்டும். வளரும் செடிக்கு உரமிடும் முன்பு கொத்தி மண்ணைக்கிளரி தேவையற்ற கனிகளைத் தூக்கி எறிந்து போட்டுவிட்டு உரமிடுவர். அதுபோல நல்வாழ்வில் வரும் தடைகளாகிய சோர்பு, தாழ்வு மனப்பான்மை, அச்சம், நம்பிக்கையின்மை, காலம் தாழ்த்தும் எண்ணம், தள்ளிப்போடும் குணம் ஆகியவற்றை மனதிலிருந்து அகற்றுங்கள். திறமை, அறிவு மீது நம்பிக்கை வையுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக கடவுள் மீதுள்ள அச்சம் நம்மிடம் இருக்கட்டும். “ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்” நீமொ. 1:7; நீமொ. 9:10) என்று திருமறை கற்றுத்தருகிறது. எனவே ஆண்டவருக்கு அஞ்சி தன்னம்பிக்கையாகிய் முடியும் என்ற உரமிடுவோம். கல்வியாகிய வெற்றிக்கனியைச் சொந்தமாக்குவோம்.

அன்பு பிள்ளைகளே! வெற்றிக்கனி உனக்கே எனவே அதை எட்டிப்பிடித்திட இலட்சியம் என்ற விதையிட்டு, முயற்சி என்ற தண்ணீர் ஊற்றி தன்னம்பிக்கையாகிய முடியும் என்ற விதையிட்டு கல்வி என்ற செடியைத் தழைத்து வளர செய்து வெற்றி என்ற கனியை நமதாக்கிக் கொண்டு உயர்வைப் பெறுவோம். நமது நாட்டிற்கும், சமூகத்திற்கும், திருச்சபைக்கும், குடும்பத்திற்கும் சிறப்பானவர்களாக மாறுவோம்.

அருள்திரு. R. **டேவிட் ஜெபசிங்**

**தேர்வு நாள்**

# வெற்றியின் வழிகள்

நீமொ. 21:20-31

***"வெற்றி கிடைப்பது ஆண்டவராலேயே."*** **நீமொ 21:31**

நாம் வாழும் சமுதாயம் ஒவ்வொரு நாளும் முன்னேறிக்கொண்டு இருக்கிறது. அதோடு இணைந்து போட்டிகளும் அதிகரித்து கொண்டிருக்கிறது. தேர்வு என்றாலே எல்லாரும் வெறுக்கக்கூடியதாக இருக்கிறது. மாணவர்கள் தேர்வு என்றாலே ஓடி ஒழிய கூடிய நிலை காணப்படுகிறது. இந்த தேர்வை முதலில் அறிமுகப்படுத்தியவர் Flenry Fischel. இவர் "Philosopher of Examination" என்று அழைக்கப்பட்டார். தேர்வை இவர் இரண்டு பிரிவாக வகுத்தார், Interior மற்றும் Exterior. உலகில் முதல் தேர்வானது 605AD யில் Ancient China வில் Sui சாம்ராஜ்ஜியத்தில் நடைபெற்றது. தங்கள் அரசவைக்குப் பணியாற்ற ஆட்களை தேர்வு செய்ய இந்த முறை பயன்படுத்தப்பட்டது. இந்த நடைமுறைகளை தான் நாம் இன்றளவும் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம்.

தேர்வுகள் நம்மை பரிசோதிப்பதற்காகவும், நம் ஞானத்தை ஆராயவும் நடத்தப்படுகின்றன. தேர்வை நாம் சோர்வாக பார்க்காமல் நம் வெற்றிக்கான வேராக பார்க்க வேண்டும்.

இறைவன் நம் வாழ்வில் பல சூழ்நிலைகள் ஊடாக நம்மை அவர் பக்குவப்படுத்துகிறார். உலகில் ஞானிகளாக நம்மை சீர்தூக்கி பார்க்கும் முறைதான் இந்த சோர்வு. நம் வாழ்வில் சோர்வை தரக்கூடிய தேர்வை எப்படி எதிர்கொள்ளலாம் என்பதை திருமறைசார்ந்து தியானிப்போம்.

***1. நோக்கமாயிரு*** **(Be Focused)** : (2 அர. 2 : 10)

"நீ கண்டால் உனக்குக் கிடைக்கும் இல்லாவிட்டால் கிடையாது என்றான்."

The poorest man in this world is not the man without Penny but the man without a dream for his life. நம் வாழ்வை குறித்த நோக்கம் எப்போதும் நமக்கு இருக்க வேண்டும் இந்த உலகில் கடவுள் நம்மை அசாதாரண காரியங்களை செய்ய படைத்திருக்கிறார். ஒவ்வொரு மனிதனையும் அவர் வித்தியாசமான தாலந்துகளுடன் படைத்திருக்கிறார். நாம் நம் வாழ்வில் குறிக்கோளோடு அதை அடைய தொடர வேண்டும். கடவுள் நம் மூலமாக

இறையரசின் திட்டங்களை நிறைவேற்றுகிறார். குதிரையின் கவனம் சிதறாமல் தன் ஓடுபாதையில் ஓட கடிவாளம் போடுவார்கள். அப்பொழுதுதான் அது தன் இலக்கை நோக்கி தொடரும்.

எலிசா தன் எஜமான் எலியாவிடமிருந்து ஆசியை பெற்றுக் கொள்வதில் மிகவும் கவனமாக இருந்தார். எந்த சூழ்நிலை வந்தாலும் என் எஜமானனை விடேன் என்று தீர்க்கமாய் இருந்தார். எலியா சுழல் காற்றில் எடுத்துக்கொண்டு போகும் போது அவன் தன் குரு கூறிய வண்ணம் அவனையே நோக்கமாயிருந்தார் (2இரா. 2:10). இதன் விளைவாக எலியாவின் ஆவி இரு மடங்காக எலிசாவிடம் கிடைத்தது கடினம் என நினைத்திருந்தால் சாதிக்க முடியாது தேர்வுக்கு ஆயத்தப்படும் மாணவர்களும் கடினம் என நினைக்காமல் மிக கவனமாக நம் தேர்வை எதிர்கொள்ள வேண்டும். நம் கவனத்தை தேர்வு நாட்களில் சிதறவிடக் கூடாது. குறிப்பாக சமூக ஊடகங்களில் நேரத்தை செலவு செய்யாதீர். குறிக்கோளோடுப் பயணிப்போம்.

### *2. ஆயத்தமாயிரு* **(Be Prepared) :** (நீதி. 21 : 31)

Preparation is the basics for victory. ஆயத்தம் நம் வாழ்வோடு இணைந்த ஒன்றாகும். சீனாவில் Gymnastics போட்டிக்காக தங்கள் பிள்ளைகளை மூன்று வயதிலிருந்தே ஆயத்தம் செய்கிறார்கள். சுமார் 15 ஆண்டுகளுக்கு அதிகமாக பயிற்சி செய்து ஆயத்தோடு அவர்கள் ஒலிம்பிக்கில் பங்கு பெறுகிறார்கள். ஆயத்தம் இல்லாமல் வெற்றியை ருசிக்க முடியாது. குதிரையை பல காரியங்களுக்கு பயன்படுத்துவார்கள், ஒரே குதிரையை எல்லாவற்றிற்கும் பயன்படுத்த முடியாது. இந்த குதிரை எதற்காக பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறதோ அதற்காக தான் அதை பயன்படுத்தமுடியும். குதிரையை போருக்கு ஆயத்தப்படுத்தும்போது படைவீரர்கள் மிகவும் கவனமாக குதிரையை ஆயத்தப்படுத்துவர். குதிரை அதிக வலிமையும், எடையுமுள்ள தசைநார்களை உடையது. இது குதிரை வேகமாக ஓட தடையாயிருக்கும். எனவே பயிற்சியாளர்கள் தேவையற்ற தசைகளை தவிர பயிற்சி மூலம் அதன் தசை நார்களின் எடையை குறைத்து வேகமாக ஓட ஏற்றதாக ஆயத்தம் செய்வார்கள். குதிரை படைகள் எப்போதும் ஆயத்தத்தோடு இருக்கும் மாணவர்களும் ஆயத்தம் மிக முக்கியம். பல நேரங்களில் சில தவறான எண்ணங்கள் நம் ஆயத்தத்திற்கு தடையாக இருக்கும். அத்தடைகளை தகர்த்தெறிந்து நாம் முன்னேற வேண்டும். மிகவும் தைரியத்தோடு திட்டமிட்டு நாம் தேர்வை எதிர்கொள்ள வேண்டும். நம்மால் இயன்றவரை நாம் ஆயத்தத்தோடு இருக்க வேண்டும். கடைசி நேர ஆயத்தங்களை தவிர்க்க வேண்டும்.

### 3. வெற்றியாளனாயிரு (Be an Achiever) :

"வெற்றி கிடைப்பது ஆண்டவராலேயே" (நீதி. 21 : 31).

ஞானத்தின் உறைவிடம் இறைவன். நம் வாழ்வில் வெற்றியையும் ஞானத்தையும் தருபவர் அவர் ஒருவரே. கர்த்தருக்கு பயப்படுதல் ஞானத்தின் ஆரம்பம் (நீதி. 15:33). கர்த்தருக்கு பயப்பட்டு அவர்பாதம் பணியும்போது வெற்றியை கண்டுகொள்ளலாம். பயிர் செய்வது மட்டுமே உளவனின் வேலை. ஆனால் அதை விளையப் பண்ணுவது இறைவன். All things are possible to those who believe in christ (மாற். 5:36) துயரத்தின் உச்சியில் இருந்த தொழுகைகூடத் தலைவனிடம் இயேசு "அஞ்சாதீர், நம்பிக்கையை மட்டும் விடாதீர்" என கூறி அவன் துயர் துடைத்தார். நம் வாழ்வில் கடவுள் நம் சார்பாக இருக்கும் போது நாம் வெற்றியாளர்களாக பிரகாசிக்க முடியும்.

"கடவுளிடம் காத்திருக்காதவன் கண்ட இடத்தில் எல்லாம் காத்திருக்க வேண்டும்." நம் வாழ்வில் தேர்வுக்காக ஆயத்தப்படும் மாணவர்கள் ஆண்டவர் பாதம் காத்திருக்க வேண்டும். கடவுள் மீது நம்பிக்கை உள்ளவராய் நம்மை அவர் பாதம் பணித்து நாம் முன்னேற வேண்டும். கடவுள் நம்முடன் இருந்தால் நாம் வெற்றியாளர்களே.

நீதிமொழிகள் ஆக்கியோன் ஞானத்தை "சுரக்கும் ஊற்றாக" குறிப்பிடுகிறார் (நீதி. 18:14). என்றும் குறையாமல் நீரோடையை போல ஓடும் ஞானத்தின் உறைவிடத்தில் நாம் பணியும் போது ஞானத்தில் சிறக்க முடியும். தேர்வு நேரங்களில் நாம் சோராது தன்நம்பிக்கையுடன் தேர்வை எதிர்கொள்ள வேண்டும். நாம் கவனம் சிதறாமல் குறிக்கோளோடு, தகுந்த ஆயத்தத்தோடு ஆண்டவர் பாதம் பணிவோம், வெற்றி பெறுவோம். "All the Best."

திரு. **நிஸ்பர்ட் G.M. ஷாலோம்**

*சங்க விழா*

# நன்றிப் படையல்

| | |
|---|---|
| நீத. 6 : 11-24 | மாற். 12 : 41-44 |
| திபா. 76 | 2கொரி. 9 : 6-15 |

***"முக மலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்."***
**2கொரி. 9:7**

சங்கத் திருநாளில் நாம் ஆண்டவரைப் போற்றவும், வாழ்வில் செய்த நன்மைகளை நினைவு கூர்ந்து ஆண்டவரிடம் நமது படையல்களைப் படைக்கவும் வந்துள்ளோம். "இயேசு காணிக்கைப் பெட்டியின் எதிராக அமர்ந்து கொண்டு மக்கள் அதில் செப்புக்காசு போடுவதை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்" (மாற்கு 12:41). ஆலயங்களில் என்றும் வீற்றாளும் இறைவன் இன்றும் நமது ஆலயங்களில் இருக்கின்றார் என்பதும் எப்போதும் நம்மை உற்றுக் கவனிக்கின்றார் என்பதும் இந்த வசனத்தினூடாய்க் காணமுடிகின்றது.

இயேசு வழக்கமாக ஆலயம் வருவது இயல்புதான். திருமறையில் ஓய்வுநாளில் தொழுகைக் கூடத்திற்குச் சென்று வாசிக்க எழுந்தார். ஓய்வு நாளில் இயேசு தொழுகைக் கூடத்திற்குள் சென்று கற்பித்தார். கற்பித்தல் நலமடையச் செய்தல் போன்ற செயல்களை நிறைவேற்ற இயேசு ஓய்வு நாட்களில் ஆலயம் செல்வதைக் காணலாம். (லூக்கா 4:16;6:6,8) அதன் அடிப்படையில் இயேசு இம்முறை காணிக்கைப்பெட்டியின் எதிரே அமரும் நிகழ்வு மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. அனைவரையும் கவனித்த இயேசு அவர்களின் காணிக்கைகளையும் கவனித்தார். இதில் படைத்தவர்களின் இயல்புகளைத் தெளிவாக விளக்குகின்றார்.

இன்று நாம் படைக்க வந்திருக்கும் படையல்களையும் நமது எண்ணங்களையும், இயல்புகளையும் அறிகின்ற ஆண்டவர் நம்மை உற்றுக் கவனிக்கின்றார். நாம் இறைவனோடு சங்கத்திருநாளில் சங்கமிக்க திருமறையின் துணையோடு சில நிகழ்வுகளை ஆராய்வோம். இறைவன் நம்மில் சங்கமிக்க ஆயத்தமாவோம்.

## ***1. அங்கீகரிக்கப் படைக்கப்படும் படையல்*** (நீத. 6 : 17,18)

உம் பார்வையில் எனக்கு தயவு கிடைத்துள்ளது என்றால்... நான் உம்மிடம் திரும்பி வந்து எனது உணவுப்படையலைக் கொண்டு வந்து உம் திருமுன் வைக்கும் வரை இவ்விடத்தைவிட்டு அகலாதீர்...

இந்த வசனங்களில் கிதியோன் ஆண்டவரோடு வேண்டுதல் செய்வதைக் காணலாம்... தான் படைக்கவிருக்கும் பொருள் ஆண்டவர்

பார்வைக்கு ஏற்றதாக அவரால் அங்கீகரிக்கப்படவேண்டும் என்னும் நோக்கோடு படைக்க முன்வர வேண்டும். ஆதிப் பெற்றோருக்குப் பிறந்த காயின், ஆபேல் எனும் புதல்வர்கள் ஆண்டவருக்கென காணிக்கைப் படைத்ததைப் படித்திருப்போம் (தொ.நூ. 4:2-4). அதில் காயின் தன்னுடைய நிலத்தின் விளைச்சலில் சிலவற்றைக் கொண்டு வந்தார், ஆபேல் தன்னுடைய மந்தையிலிருந்து சிறந்தவற்றைக் கொண்டு வந்தார். ஆண்டவர் சிறந்தவற்றை படைத்த ஆபேலையும் அவரது படையலையும் ஏற்றுக் கொண்டார். அப்படியென்றால் நாம் ஆண்டவருக்குப் படைக்கவிருக்கும் படையல் சிறந்ததாக இருக்கட்டும். கிதியோன் ஆண்டவருக்கு உணவு படைக்க வந்த நிகழ்வு. ஆண்டவரின் பார்வையில் எனக்குத் தயவு கிடைத்தது. நான் "மனாசேயிலே நலிவுற்றுப்போன குடும்பத்தை சார்ந்தவன், எனது தந்தை வீட்டிலே நான் தான் சிறியவன்". ஆண்டவரே, நீர் என் மீது உமது கிருபையைப் பொழிந்தருள நான் எம்மாத்திரம் என்கிறார். நாம் அற்பமானவர்கள் தான்; ஆண்டவர் பார்வையில் அருமையானவர்கள் என்பதை மெய்ப்பிக்க ஆண்டவருக்கு நாம் மனநிறைவோடு படையலைப் படைப்போம். கிதியோனைத் தைரியப்படுத்தி தன்னுடைய விளைநிலத்தின் விளைச்சலை பாதுகாக்கவும், எதிரியிடமிருந்து காக்கவும் பெலன் தந்து தேற்றினார். இந்த வார்த்தை கிதியோனைப் பராக்கிரமசாலியாக மாற்றியது. அவர் ஆண்டவருக்கெனப் படையலைப் படைத்தார். ஆண்டவரும் அங்கீகரித்தார்.

## *2. அகமகிழ்வோடு படைக்கப்படும் படையல்* (2கொரி. 9 : 7)

...முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர். படையலைப் படைப்பதின் மூலம் ஆண்டவரின் அன்புக்கு உரியவர் என்னும் ஓர் உன்னத அனுபவத்தைப் பெறமுடியும் என தூய பவுல் அடிகளார் தெரியப்படுத்துகின்றார். (வ11) நீங்கள் எல்லா வகையிலும் செல்வர்களாகி வள்ளன்மை மிகுந்தவர்களாய் விளங்குவீர்கள்... எனவும் குறிப்பிடுகின்றார். ஆண்டவரின் அன்பிற்குத் தகுதியுடையோர் என்பதற்குச் சான்றாக தூய பவுலார் குறிப்பிடுவது முகமலர்ச்சியோடு படைக்க வேண்டும். தூய பவுலார் இன்னும் குறிப்பிடும் போது ஆண்டவரின் பணிக்குக் கொடுத்ததை மிகைப்படுத்துகின்றார். இன்றைய சூழலில் நாம் கண்கூடாகக் காணும் நிகழ்வுகள் பல. நமது ஆலயங்களில் பல தேவைகளுக்காய் காணிக்கைகள் தேவை என விளம்பரப் படுத்தப்படுகின்றது. அதனை ஏற்று முகமலர்ச்சியோடு கொடுப்பவர்களும் உண்டு. விருப்பமின்றி மிகவும் கர்வத்தோடு கொடுப்பவர்களும் உண்டு "இவ்வாறு இந்த தன்விருப்பக் காணிக்கையை அளிப்பதற்கான ஆற்றலை

நாங்கள் பெறுவதற்கு, நான் யார்? என் மக்கள் யார்? யாவும் உம்மிடத்திலிருந்து வந்தவை. உம் கையினின்று நாங்கள் பெற்றுக் கொண்டவற்றையே நாங்கள் உமக்கு கொடுத்துள்ளோம்'' (1குறிப். 29:14).

அன்பர்களே! ஆண்டவருக்கு நாம் படைக்கும் படையல், நாமாக உருவாக்கிப் பெற்றுக் கொண்டதல்ல; மாறாக, ஆண்டவரால் அருளப்பட்டதை நாம் நமது வாழ்வுக்குப் பயன்படுத்தி அதினால் வரும் மேன்மையை ஆண்டவருக்கு நன்றி சொல்லும் நோக்கோடு கொடுப்பது தான். இங்கு அரசராகிய தாவீது ஆண்டவருக்கென ஆலயம் கட்டுவதற்கான தேவையை சொல்லும் போது மக்கள் மனநிறைவோடு படைத்ததைப் படித்தோம். நாம் நினைவில் கொள்ளவேண்டிய ஒன்று 'போதகர் கேட்கட்டும் கொடுக்கலாம்' அல்லது 'இப்போது இல்லை கிடைக்கும் போது தரலாம்' என்பதை மாற்றி நன்றி நிறைந்த இதயத்தோடு, முகமலர்ச்சியோடு ஆண்டவருக்குக் காணிக்கையைப் படைப்போம், ஆண்டவரின் அன்பைப் பெறுவோம்.

### *3. ஆத்துமாவை அர்ப்பணிக்கின்ற படையல்* (மாற்கு 12 : 44)

"இவரோ தமக்குப் பற்றாக்குறை இருந்தும் தம்மிடம் இருந்த அனைத்தையும், ஏன் தம் பிழைப்புக்காக வைத்திருந்த அனைத்தையுமே போட்டு விட்டார்'' (வ44). படையல் என்பது கடமைக்காக படைப்பது அன்று. படைக்கும் படையலில் ஒரு நோக்கம் இருக்க வேண்டும். ஏழைக் கைம்பெண் படைத்த படையலை அடுத்திருந்த செல்வந்தர் பார்வையில் வெறும் துச்சம் என மதிப்பிடலாம். ஆனால் ஆண்டவரின் பார்வையில் அது மெச்சும் தன்மைகொண்டதாக மாறியது. ஏனென்றால், அந்தக் கைம்பெண் தனது வாழ்வுக்குரிய அனைத்தையும் ஏன் தனது வாழ்வையே படைத்தார்.

கைம்பெண்ணின் நம்பிக்கை என்னை உருவாக்கி இப்புவியினில் இதுவரையிலும் பாதுகாத்து வந்த இறைவன் இன்னும் காப்பார். அன்றன்றுள்ள தேவையை நிறைவு செய்வார், அடுத்த நாளை பற்றிய கவலை இல்லை, வாழ்வைக் குறித்த அச்சம் இல்லை என்கின்ற நோக்கோடு தனது வாழ்வுக்கென உள்ள இரண்டு காசைப் படைத்தது எவ்வளவு அர்ப்பணிப்பு கொண்டது. அக்கைம்பெண் நம்மை விட எவ்வளவு மேலானவர்.

நமக்கு எல்லாச் செல்வங்களும் உண்டு, நாம் எதற்குமே கவலைப்படாமல் வாழும் ஆசியைப் பெற்றுள்ளோம். ஆனால் இன்னும் ஒருவேளை கூட உண்ண உணவின்றி, வாழ இடமின்றி, படிப்பதற்கான வசதியின்றி, நோயிலிருந்து நலம் பெற தேவையான மருத்துவச் செலவிற்குப் போதிய பணமின்றி, தினம்தினம் வாடிவதங்கிச் சாகின்ற மக்கள் எத்தனை பேர் நம் பாரினில்?

நாம் ஒருகணம் சிந்தித்து நமது வாழ்வை இறைவனிடம் அர்ப்பணிக்கின்ற, உறுதிமொழி ஏற்கின்ற நாள் தான் இந்தச் ‘சங்கம்’. இறைவனோடு நாம் சங்கமிக்க இந்தச் சங்கத்திருநாளில் நமது வாழ்வைத் திறனாய்வு செய்வோம். நமது வாழ்நாளில் இறைவனுக்குப் படைத்தவற்றில் ஏதாவது தவறு இழைத்தோமா என்று சிந்திப்போம். இயேசு தம்மைத் தியாகத்தின் படையலாய் நமக்குப் படைத்தாரே. நமக்காகவும் நமது வாழ்வு முழுமை அடையவும் தம்மைத் தியாகம் செய்ததை நினைப்போம். இன்று நமது படையல்களை அங்கீகரிக்க வேண்டும் எனவும், அகமகிழ்வோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும், அவற்றினூடாய் இறை அன்பைப் பெறவேண்டும் என்ற நம்பிக்கையோடு நமது வாழ்வையே படையலாக அர்ப்பணிப்போம்.

திரு. G.R. **ஜெபசிங்**

**சபைநாள் விழா**

# குடும்ப விவசாயம்

தொ.நூ. 47:11-24 1 கொரி. 3:1-9
திபா. 67 மத். 13:24-30

***"...விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். ஒருவர் தம் வயலில் நல்ல விதைகளை விதைத்தார்." மத். 13:***

2014 ஆம் ஆண்டிலே, குடும்பத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து ஐக்கிய நாடுகள் சபை 'குடும்ப விவசாய ஆண்டு' International year of family farming என்று அறிவித்திருந்தார்கள். இது கொண்டாட்டத்திற்காக அறிவிக்கப்பட்டதல்ல; வருங்காலத்திலே உலகமெங்கும் மக்கள் அனுபவிக்கப் போகிற திண்டாட்டத்தை உணர்த்துவதற்காக அறிவிக்கப்பட்டது தான் 'குடும்ப விவசாய ஆண்டு.'

திருமறையிலே ஞானத்தை அறிவிக்கும் நூல்களிலே ஒன்றாகிய யோபு நூலில் ஒரு குடும்பத்திற்கு அல்லது ஒரு மனிதனுக்கு வரக் கூடாத ஏழு இக்கட்டுகள் குறித்து யோபு 5:19-23 வரையுள்ள பகுதியிலே சொல்லப்பட்டுள்ளது,

(i) பஞ்ச காலம் Famine

(ii) யுத்த பட்டயம் Power of sword

(iii) நாவின் சவுக்கு Scourge of the tongue

(iv) பாழாக்குதலும், பஞ்சமும் Destruction & Famine

(v) காட்டு மிருகங்கள் Beasts of the earth

(vi) வெளியின் கல்லுகள் Stones of the field

(vii) வெளியின் மிருகங்கள் Beasts of the field

இவைகளிலே 'பஞ்சம்' மட்டும் பஞ்சமேயில்லாமல் இரண்டு தடவை சொல்லப்பட்டுள்ளது.

ஏனென்றால் 'பஞ்சம்' மிகக் கொடுமையானது. இனி வரும் காலங்களிலும் 'பஞ்சம்' தான் மிக கடுமையான பிரச்சனையாக இருக்கப் போகிறது.

ஒரு காலத்திலே ஓரிடத்திலே பஞ்சம் ஏற்பட்ட போது, பஞ்சத்திலிருந்து பிழைக்க பஞ்சமில்லாத இன்னொரு இடத்திலே தஞ்சம் புகுந்தார்கள்.

எடுத்துக்காட்டாக, ஆபிராம் பஞ்சம் பிழைக்கு எகிப்துக்கு போனார் தொ.நூ. 12:10; யாக்கோபும் அவரது பிள்ளைகளும் இப்படி தான் எகிப்துக்கு 70 பேராக போனார்கள் தொ.நூ. 46:27; இச. 10:22.

இத்தனைக்கு விவசாயத்தை குடும்பமாக உலகமெங்கும் பலர் செய்து கொண்டிருந்த காலத்திலே, இப்படி பஞ்சம் பிழைக்க இன்னொரு இடம் போய், பிழைத்துக் கொண்டார்கள்.

ஆனால் இப்போதுள்ள காலத்திலே விசுவாசத்தை பெரும்பாலும் எல்லாரும் கைவிட்டு வருகின்ற சூழலிலே, பஞ்சம் ஏற்பட்டால், எவரும் எங்கும் போய் பஞ்சம் பிழைக்க முடியாது. இது தான் உலகத்திலே அச்சுறுத்தலான செய்தி.

ஐக்கிய நாடுகள் இந்த பிரச்சனையை மிக தீவிரமாக கவனத்தில் எடுத்துக் கொண்டு 2014-ஆம் குடும்ப விவசாய ஆண்டாக அறிவித்து எல்லாரும் குடும்பமாக விவசாயத்தில் ஈடுபட்டால் பஞ்சம் என்ற பெரும் பிரச்சனையில் இருந்து தப்பலாம் என்று வலியுறுத்தி வருகிறது. இதை நாம் மிகவும் வேகமாக கவனிக்க வேண்டும்.

அதாவது இன்றைக்கு என்றைக்கும் இதற்கு முன் இல்லாத வகையிலே விஞ்ஞானிகள் சொல்ல வருவதென்னவென்றால், குடும்பமாக இணைந்து செயல்பட்டால் மட்டுமே இனிமேல் எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு ஏற்படும் என்பது தான்.

Family Farming குடும்ப விவசாயத்திற்கும், Family Forming குடும்பத்தை உருவாக்குவதற்கும் அடிப்படை பணியாக செய்யப்பட வேண்டியது என்னவென்றால் 'விதைத்தல்'

இதனால் தான் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும், பரலோக ராஜ்யத்தை உலகிலே உருவாக்குவதற்காக சொன்ன உவமைகளிலே பிரதானமாக, சொன்ன இரண்டு உவமைகள் 'விதைப்பை' பற்றிய உவமைகள் தான். மத். 13:19-23; 13:24-30. பரலோகராஜ்யம் பற்றிய உவமைகளில் இவை இரண்டும் தான் பெரிய உவமைகள்.

திருமறையின் அடிப்படையில் 'விதைத்தல்' என்பது முயற்சியோடு தொடர்புடையது; முயற்சிக்கே முறையியலாக, உதாரணமாக சொல்லப்படுவது 'விதைப்பு' தான் (ச.உ. 11:6).

ஆகவே குடும்பத்தை நாம் எவ்வாறு பண்படுத்தி, பக்குவப்படுத்தி உருவாக்கலாம் என்பதை 'விதைத்தல்' என்பதையே முறையியலாக கொண்டு திருமறையின்படிப்படையில் சிந்திப்போம்.

குடும்பமாக எப்படி விதைக்க வேண்டும் என்பதையும், விதைத்த பின் எந்தளவிற்கு கவனமாக இருக்க வேண்டுமென்பதையும், குடும்பத்தையும், குடும்பங்களின் குடும்பமான திருச்சபையையும் எப்படி நாம் தொடர்ந்து உருவாக்கி விரிவாக்க வேண்டுமென்பதையும்

***1. விதைப்பில் வித்தைகள்*** : (தொ.நூ. 47 : 23,24)

இன்றைக்கு 'வித்தை' என்ற வார்த்தை சர்வ சாதாரணமாக, விவசாயத்தை விட அதிகமாக பிற காரியங்களிலே தொடர்புபடுத்தப்படுகின்றன.

ஆனால் 'வித்தை' என்பது வித்தோடு தொடர்புடையது. வித்துக்களை சரியாக கையாண்டு, வித்தைகளை புரிபவன் தான் 'வித்தகன்'

எகிப்து நாட்டிலே கோசேன் என்னும் பகுதியிலே குடியேறிய இஸ்ரவேல் குடும்பங்கள், பஞ்ச காலத்திலே அவர்களுக்குக்கென்று யோசேப்பால் கொடுக்கப்பட்ட வித்துக்களை கொண்டு, வித்தைகளை புரிந்து, நிலத்தையும் அழகாக பண்படுத்தினார்கள்.

இதையே தொ.நூ. 47:27 இல் "....நிலங்களைக் கையாட்சி செய்து...." என்னும் வார்த்தைகள் விளக்குகின்றன.

எகிப்து தேசமெங்கும் கடுமையான பஞ்சம் நிலவிய சூழலிலே, கோசேன் நாட்டிலே 'குடும்பமாக' அனைவரும் விவசாயத்திலே ஈடுபட்டு தங்கள் பகுதியை வளமாக்கினார்கள்.

விவசாயம் என்பதை தனியாக எவரும் செய்ய முடியாது. இதை குழுவாகவோ அல்லது குடும்பமாகவோ தான் செய்ய வேண்டும்.

விவசாயத்திலே இயந்திரங்களுடைய பயன்பாடு வருவதற்கு முன்பாக, அனைவரும் குடும்பமாகவோ, அல்லது குழுவாகவோ தான் விவசாயத்திலுள்ள எல்லா வேலைகளையும் பகுதி பிரித்து, பங்கு வைத்து செய்வார்கள். வயல்களிலே கதிர் முற்றும் போது ஒரு நல்ல மணம் கமழும். திருமறையிலும் வயல்வெளியின் வாசனையை குறித்த ஒரு குறிப்பை தொ.நூ. 27:27 -ல் வாசிக்கலாம்.

கதிர்கள் முற்றிவிட்டன என்பதை எல்லாரும் அதன் மணத்தை முகர்ந்து அறிந்து மகிழ்ந்து, கதிர்களை அறுத்து வந்து, களங்களில் வட்டமாக அடுக்கி மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள்.

இஸ்ரவேல் மக்களும் தங்களுக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சியை தான் முதலாவது ஒப்பீடாக சொன்னார்கள். இதை எசா. 9:3 இல் காணலாம். இவையெல்லாம் குடும்பமாக குதுகலமாக வாழ்ந்ததினால் ஏற்பட்ட மகிழ்ச்சி.

## ***இன்றைய நிலை*** :

இன்று குடும்பங்களிலே எல்லாரும் கூடி அநுபவிக்கும் மகிழ்ச்சி இல்லை. இன்று குடும்பங்களை குறித்து முன் வைக்கப்படுகின்ற ஒரு அழுத்தமான, அழகான விமர்சனம், ஒரே வீட்டில் வாழ்கிறோம். ஆனால் ஒவ்வொரு வீடாக வாழ்கிறோம். இது எவ்வளவு எதார்த்தம் என்பதை உணர்ந்து பாருங்கள்.

- அவசர உலகத்திலே ஒவ்வொருவரும் ஒவ்வொரு நேரத்திலே வேலைக்காக புறப்பட்டு போகிறோம்.

- தனித்தனி சாவி பயன்படுத்துகிறோம்.

- வீட்டிற்கு வரும் போதும், ஏதோ தங்கியிருக்கும் ஒரு குடியிருப்பிற்கு வருவது போல தான் பல இடங்களிலே பெற்றோரும் பிள்ளைகளும் நடந்துக் கொள்ளுகிறார்கள்.

- முன்பு கூட்டு குடும்ப முறையிலே தனிப்பட்ட நபர்களின் மகிழ்ச்சியை விட, குடும்பத்தின் மகிழ்ச்சி தான் முக்கியம் என்று கருதப்பட்டது.

- குடும்பம் மகிழ்ச்சியாக இருப்பதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டன.

- ஆனால் கூட்டுக் குடும்பங்கள் சிதைந்து சிறு குடும்பங்கள் என்றாகி, இன்று சிறு குடும்பங்களும் கூட 'நான்' 'எனது' என தனிமனிதன் என்றளவிற்கு சுருங்கி விட்டன.

தற்போது இப்படிக் கூட குடும்பங்கள் குறித்து ஒரு விமர்சனம் சொல்லப்படுகிறது. அதவாவது, முன்பு Bathroom detached ஆக இருந்த போது Family attached ஆக இருந்தது. ஆனால் இன்று Bathroom attached rooms என்று வீட்டில் அறைகள் அதிகம் வந்த பிறகு, Family detached ஆகி விட்டது.

இந்தப் பிரச்சனையைத் தீர்க்க விஞ்ஞானிகளாலும், அனைவராலும் சுட்டிக் காட்டப்படுகின்ற வழி குடும்பமாக இணைந்து செயல்படுவது தான்.

எகிப்திலே பஞ்சம் ஏற்பட்ட போது, எகிப்திய மக்கள் ஒவ்வொன்றாக விற்றார்கள். ஒரு கட்டத்திலே தங்களையும் கூட விற்றார்கள் (தொ.நூ. 47:19). ஆனால் தங்கள் பிள்ளைகளை மட்டும் விற்கவில்லை. 'குடும்பம்' மிகவும் முக்கியம் என்பதை உணர்த்த எகிப்தியரிடம், பிரதம மந்திரியாகிய யோசேப்பு சொன்ன ஆலோசனை - வயலுக்கு விதையாகவும், உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும், உங்கள் குழந்தைகளுக்கும் ஆகாரமாயிருக்கும்படி இந்த 'விதைத் தானியத்தை' விதையுங்கள்.

அதாவது, யோசேப்பு, எப்படி விதைக்க வேண்டுமென்ற வித்தையை தான் கற்று கொடுத்தார் - இதுவரை பலவற்றை விற்றும் வாங்கியும் விதைத்தீர்கள். இது Agri - business இனி நீங்கள் விதைப்பது, உணவு பொருளுக்காக அல்ல; உங்கள் உயிருக்காக; உங்கள் உயிரான பிள்ளைகளுக்காக. குடும்பமாக இணைந்து விதையுங்கள்.

வியாபார நோக்கோடு வாழ்வதும், விதைப்பதும் Agri - business. குடும்பமாக, எல்லாரும் இணைந்து விதைப்பது தான் Agriculture. இதையே யோசேப்பு வலியுறுத்தினார்.

'பஞ்சம்' வந்து விடக்கூடாது என்பதற்காக யோசேப்பு காலத்திலும் 'குடும்ப விவசாயம்' வலியுறுத்தப்பட்டது. இன்றும் வலியுறுத்தப்படுகிறது. யோசேப்பு காலத்திலே குடும்ப விவசாயமே பஞ்சத்திலிருந்து எகிப்தை பாதுகாத்தது.

இன்று 'உணவு பஞ்சம்' என்பது இது வரை வராவிட்டாலும், 'நல்ல உள்ளம்' 'நல்ல உலகம்' இல்லையென்கிற பஞ்சம் வந்து விட்டது. இதை மேற்கொள்ள நல்ல குணங்களை விதைக்கிற வித்தையை அனைவரும் மேற்கொள்ள வேண்டும். குடும்பமாக இணைந்து, குடும்ப விவசாயமாக இதை செய்ய வேண்டும்.

தோல்வி என்பதையே விரும்பாத வருங்கால தலைமுறையினருக்கு 'விவசாயம்' என்னும் பண்பாடு (Agriculture) மூலமாக வாழ்வில் போராடவும், வலிமையாக எளிமையாக வாழவும் கற்று கொடுப்போம். இவையெல்லாம் 'விதைப்பில் வித்தைகள்' தான்.

### *2. விதைப்பில் சவால்களும், சதிகளும்* : (மத். 13 : 24,25)

விதைப்பிற்குப் பிறகு வருகின்ற சவால்கள் ஏராளம். ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஏற்கனவே விதைக்கிறவனைப் பற்றிய முதல் உவமையிலே சுட்டிக் காட்டியவை மூன்று சவால்கள். அவை, i) பறவை ii) வெயில் iii) முள் (மத். 13:4-7).

வயல்களிலே பறவைகளின் நடமாட்டம் அதிகம் இருக்கும். நவம்பரில் மழைக்காலம் தீவிரமடையும் போது, வெளிநாட்டிலிருந்து கூட பறவைகள் வருகின்றன. கூழக்கடா, ஆற்று மயி, மாடு மேய்ச்சான் கொக்கு, மஞ்சள் டிராட்டின், 'கோழிவால் ஜசான' எனப்படும் தாமரைக் கோழி வெண்கலச் சிறகு ஜசானா என்று பல பறவைகள் வருகின்றன.

பறவைகள் விவசாயிகளுக்கு நண்பனாக இருந்து பயிர் நிலங்களிலுள்ள புழுப் பூச்சிகள், எலிகள் எல்லாவற்றையும் அழிக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஆனால் எல்லா பறவைகளும் விவசாயிகளுக்கும், விவசாயத்திற்கும் நண்பர்களல்ல. விதைப்பு காலத்திலே வரும் பறவைகள் விதைகளையே சாப்பிட்டு விடுகின்றன.

ஆண்டவருடைய விளக்கத்தின்படி, நல்ல போதனைகள், நல்ல விதைகளாக விதைக்கப்பட்டிருக்கும்; ஆனால் பறவைகள் போல வரும் சாத்தானின் தூதுவர்கள் அதை மக்களின் உள்ளத்திலிருந்து எடுத்து விடுவார்கள்.

சில சமயம், வெளிநாட்டிலிருந்து வரும் பறவை போல வெளிநாட்டு கலாச்சார தாக்கம், நல்ல போதனைகளை, நல்ல பண்பாடுகளை, நல்ல பழக்க வழக்கங்களை எடுத்து, அவைகளை கெடுத்தும் விடுகின்றன. 'வெயில்' தற்காலிகமாக ஏற்படுகின்ற பிரச்சனைகளையும், சூழ்நிலைப் பிரச்சனைகளையும் கூறுகிறது.

வெயிலும் மிகப் பெரிய சவால் தான். இந்தியாவிலே அருணாச்சல பிரதேசத்தில் தான் சூரிய ஒளி முதலாவது விழுகிறது என சொல்லப்படுகிறது. வெயில் தேவை. ஆனால், அளவுக்கதிகமாக வெயிலடிக்கும் போது, பயிர்கள் காய்ந்து விடுகிறது. எனவே வெயிலும் விவசாயத்திற்கு மிகப்பெரிய சவால் தான். ஆகவே குறைந்த நீரைப் பயன்படுத்தி எப்படி விவசாயம் செய்யலாம் என்பதையும் தற்போது ஆராய்ந்து வருகிறார்கள்.

'முட்கள்' கூடுதல் விளக்கம் தேவையில்லை ஆண்டவரே மத். 13:22இல் உலகக் கவலை, ஐசுவரியத்தின் மயக்கம் இவைகளே முட்கள் என்று விளக்கி விட்டார். பறவைகள், வெயில், முட்கள் இவைகளெல்லாம் சவால்கள். இவை தவிர, விதைப்பிலும், விவசாயத்திலும் வருகின்ற மிகப்பெரிய களைகளை விதைத்து விடும் ஊடுருவல்காரர்கள் மத். 13:25.

இந்தியாவிற்கு வரும் மிகப்பெரிய சவால் 'எல்லை தாண்டிய பயங்கரவாதம்' எனும் 'ஊடுருவல் பயங்கரவாதம், தீவிரவாதம்.' விவசாய நிலத்திற்குள்ளும் பொல்லாங்கனால் வரும் பயங்கரவாதம் - களைகள்.

மத். 13:25 இல் "....கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்." இந்திய நாட்டிற்குள்ளே 1956-ஆம் ஆண்டு மகாராஷ்டிரா புனேவிலே கோதுமை போன்ற தோற்றத்துடன், கோதுமையுடன் கலந்து, வெளிநாட்டிலிருந்து இறக்குமதியானது தான் Parthenium Hysterophorous என்னும் செடி. இது 'தாவர தீவிரவாதி' என்றே அறியப்படுகிறது. 15,000 முதல் 25,000 வரை விதைகள் உற்பத்தி செய்து, வேகமாக பரவும் இந்த தாவரம் விஷ தன்மையுள்ளது. எடை குறைவான விதை இதற்கு இருக்கிறபடியால், காற்றின் மூலமாக எளிதாக பறந்து, பரவி பல இடங்களை ஆக்ரமித்து விட்டன.

மனிதர்கள், மிருகங்கள் மற்றும் பறவைகளும் கூட பல்வேறு நோய்களை இந்த களைசெடி பரப்பி வருகிறது. சுவாசக் கோளாறுகள், ஆஸ்துமா, தோல் நோய்கள், நுரையீரல் பிரச்சனைகள் ஆகியவற்றை இந்த செடிகள் ஏற்படுத்துகின்றன. விவசாயத்தையும், வளி மண்டலத்தையும் இச்செடிகள் மாசுப்படுத்தி விடுகின்றன.

இந்த Parthenium போல இந்தியாவிலே இன்னொரு கொடிய களை செடி சீமைக்கருவேலமும் அனைவரையும் களைத்து போகச் செய்கிறது. நிலத்தடி நீரை முழுமையாக உறிஞ்சி விடுகிறது. நிலத்தடி நீரே இல்லாத நிலையிலும் கூட, காற்றிலுள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி விடும். அதிலே எந்த பறவையும் கூடு கட்டி குடியிருக்காது. ஏனென்றால் Oxgen மிக குறைவாகவும், Carbon - di - Oxide ஐ அதிகமாகவும் வெளியேற்றுவதால் சுற்றுப்புற காற்று மண்டலமும் நச்சு தன்மையாகி விடுகிறது.

களைகள் எவ்வளவு பெரிய ஆபத்துக்களை ஏற்படுத்துகிறதோ, அதே போல களைகளான மனிதர்களும், பிற மனிதர்களுக்கும், இயற்கைக்கும் இரக்கமேயில்லாமல் பயங்கரமான ஆபத்துக்களை ஏற்படுத்துவார்கள்.

இவர்களுக்கு உடனடி நியாயத்தீர்ப்பு கொடுத்து, அழிக்க வேண்டாமென்றே ஆண்டவர் கூறுகிறார் (மத். 13:28,29).

விதைப்பிலே ஏற்பட்டு விட்ட சதிகளை உணர்ந்துள்ள நாம், சாத்தானால் களைகளாக்கப்படாதபடி அதிக ஜாக்கிரதையாக நம்மை காத்துக் கொள்ளுவோம்.

### *3. பண்ணைக் குடும்பங்கள்* :

குடும்ப விவசாயத்திலே, காலத்தின் மாற்றத்தினாலும், விதைகளாகிய மனிதர்கள் தருகின்ற ஏமாற்றத்தினாலும் பல சவால்களையும், சதிகளையும் ஒவ்வொரு குடும்பங்களும், குடும்பங்களின் குடும்பமான திருச்சபையும் சந்திக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.

இந்த சூழலிலே, நாம் யார்? நமது அழைப்பு என்ன? இவற்றை குறித்த தெளிந்த சிந்தனை நமக்கு வேண்டும். நாம் யார்? "....தேவனுடைய பண்ணை...." (1கொரி. 3:9).

உலகத்திலே தற்போது மிகப் பெரிய சவலாக சொல்லப்படுகின்ற காரியம் என்னவென்றால், பஞ்சத்தினின்று பாதுகாக்கப்பட வேண்டுமானால் குடும்பங்களிலே விவசாய பண்ணைகளை உருவாக்குங்கள்.

இந்தியாவிலே 1.5 லட்சம் நெல் வகைகள் பாதுகாக்கப்படுகிறது என்றால் அதற்கு காரணம் அரசாங்கமல்ல; குடும்ப விவசாயிகள் தான் காரணம். ஒடிசா மாநிலப் பழங்குடியினர் மட்டுமே மூன்றாயிரம் நெல் வகைகளை பராமரிக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் மட்டும் 69 லட்சத்து 22 ஆயிரத்து 758 பண்ணை குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களே பலருக்கும் உணவளிக்கக் கூடிய உபயோகமான பயிர்களை உருவாக்குகிறார்கள்.

பவுல் அப்போஸ்தலன் ஒரு பல்துறை வித்தகன். பண்ணைகளின் பயன்பாட்டையும், பண்ணைகளின் பண்பாட்டையும் அறிந்திருந்த பவுல் அப்போஸ்தலன், ஒவ்வொரு குடும்பங்களையும், குடும்பங்களெல்லாம் கூடி வருகின்ற குடும்பங்களின் குடும்பமான திருச்சபையையும் 'பண்ணை' என்றே அடையாளப்படுத்தினார்.

ஒரு பண்ணையிலே உருவாக்கப்படுகின்ற செடிகளும், மரக்கன்றுகளும், விதைகளும், அதிகமாக ஆய்வு செய்யப்பட்டு, தரமானதாக தான் உருவாக்கப்படுகின்றன.

ஒரு பண்ணையிலே, செடிகள், பயிர்கள் வளரும் 'மண்' அடிக்கடி ஆய்வு செய்யப்படுகிறது.

i) மண்ணில் என்ன என்ன சத்துக்கள் உள்ளன.

ii) நுண்ணூட்ட சத்துக்கள் எந்தளவு உள்ளன.

iii) பேரூட்ட சத்துக்கள் எந்தளவு உள்ளன

iv) எந்த வகையான பயிர்களை நடவு செய்யலாம்

v) எந்த நேரத்தில் நடவு செய்யலாம்

இவைகளெல்லாம் பண்ணையிலே தான் ஆய்வாக செய்யப்படுகின்றன.

ஆண்டவருடைய பண்ணையாகிய குடும்பத்திலும், திருச்சபையிலும் ஒவ்வொருவருடைய இருதயத்தையும் ஆய்வு செய்கின்ற பணி நடைபெற்று கொண்டே இருக்கிறது.

ஒவ்வொருவரும் தங்கள் இருதயமாகிய நிலம், உவர்நிலமாகிப் போய் விடாதபடி, 'பண்ணைகளிலே' அதாவது குடும்பத்திலே, திருச்சபையிலே ஆய்வுகளை தங்களைக் குறித்து மேற்கொள்ள வேண்டும்.

## ***விதை தயாரிப்பு*** :

பண்ணைகளிலே மிகவும் முக்கியமாக மேற்கொள்ளப்படுகின்ற செயல்பாடு - விதைகளை தரமானதாக உற்பத்தி செய்தல் அல்லது தயாரித்தல். தரமான விதைகள் இருந்தால் தான் அனைவருக்கும் நல்லது. பண்ணைகளிலே தயாரிக்கப்படுகின்ற விதைகளை, விதை சான்று அலுவலர் மூன்று நிலைகளிலே பரிசோதிக்கிறார்,

i) விதைகளின் இனத்தூய்மை களைகளோடு கலவாத தூய இனமாக இருக்க வேண்டும்.

ii) முளைப்புத் திறன்

iii) விதைகளின் ஈரப்பதம்

ஆண்டவர், விதை சான்று அலுவலருக்கும் மேலானவர். மனிதர்கள் தான் அவருக்கு 'விதைகள்.' ஒவ்வொரு விதைகளின் தூய்மையை நேர்மையையும் ஆண்டவர் கவனமாக ஆய்வு செய்து தான் பயிர் எது, களை எது என பிரிப்பார் (மத். 13:30). ஆகவே பண்ணைகளிலே நாம் எப்படி உருவாகுகிறோம், உருவாக்குகிறோம் என்பது மிகவும் முக்கியம்.

நல்ல பண்ணைகளோடு, மோசமான பண்ணைகளும் உலகத்திலே இருக்கின்றன. வடக்கு இங்கிலாந்திலே Alnwick என்னும் தனியார் பண்ணை தோட்டத்திலே பல ஏக்கர் நிலத்திலே கண்ணை கவரும் வண்ண வண்ண நிறங்களில் மணம் வீசும் ரோஜா தோட்டங்களில நீரூற்றுகளும் இருக்கின்றன. கூடவே இந்த Alnwick பண்ணைத் தோட்டத்திலே 100 வகையான விஷ செடிகளுக்கென்று தனியாக ஓரிடம் ஒதுக்கப்பட்டு, விஷ செடிகளும் வளர்க்கப்படுகின்றன.

1கொரி. 3:9இன்படி 'தேவனுடைய பண்ணை' என்றால், நம் குடும்பங்களிலும், திருச்சபையிலும் விஷ செடிகள் வளர வாய்ப்பே இருக்காது. நாமும் நேரடியாகவோ மறைமுகமாகவே இந்த வாய்ப்பை உருவாக்கக் கூடாது. இது தான் நாம் எடுக்க வேண்டிய முக்கியமான தீர்மானமாகும்.

ஆண்டவருக்கு உகந்த ஆத்துமாக்களை உருவாக்கும் 'பண்ணையே' குடும்பமும் திருச்சபையும். தற்போது தமிழ்நாட்டில் ATMA திட்டம் என ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ATMA என்றால் Agricultural Technology Management Agency. Agriculture என்ற பயிர் கலாச்சாரத்திலே விவசாயம், தோட்டக்கலை, கால்நடைத்துறை ஆகியன உள்ளடங்கியுள்ளன.

திருமறையிலும் ஆத்துமாக்களை ஆண்டவருக்கென்று ஆயத்தப்படுத்தும் வித்தைகளையும், உத்திகளையும் ஆண்டவர் விவசாயம், தோட்டக்கலை, மற்றும் கால்நடைகள் என்னும் ஆடுகள் மூலமாகவும் அதிகமாக போதித்தார்.

பண்படுத்தும் பணிவிடையில் ஆண்டவருடைய பண்ணையாக, பண்ணைப் பணியாளர்களாக தொடர்ந்து செயல்படுவோம்.

அருள்திரு. J. **பிரகாஷ் நாயகம்**

# கடவுளுக்குச் சிறப்பிடம் வழங்கிய சிறுவன்

திருமறைப்பாடம் : யோவா. 6:1-15

**“இங்கே சிறுவன் ஒருவன் இருக்கிறான் அவனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளன.”**

**யோவான் 6:9**

படைவீரன் ஒருவன் குதிரையில் வேகமாக பயணித்தான். முதியவர் அவனை நிறுத்தி எங்கே செல்லுகிறாய் என்றார் அவன் யுத்தத்திற்கு என்றான். வெற்றி பெறுவாயா? என்றதற்கு என்னிடம் ஆற்றல் இருக்கிறது, குதிரை திறன் மிக்கது ஆயுதங்கள் எல்லாம் கூர்மையானது எனவே எப்படியும் வெற்றி எனக்குதான் என்றான். முதியவர் கேட்டார் எல்லாம் சரியே ஆனால் போர் கிழக்கு திசையில் நடைபெறும் போது நீ ஏன் மேற்கு திசை நோக்கி செல்கிறாய்! என்றாராம். இந்த படைவீரரைப் போன்றே இன்றைய சிறார்களும் இலக்கினை மறந்து தடம் மாறியே பயணித்துக் கொண்டிருக்கும் சூழலுக்கு ஈர்க்கப்பட்டுள்ளனர். சிறுவர்கள் என்பவர்கள் 14 வயதிற்கு கீழ்பட்டவர்கள் என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. திருமறையில் பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம் மக்கப்பேறு அவர் அளிக்கும் பரிசில் என்கிறது. (தி.பா. 127:3) குரலால், குணங்களால், களங்கமற்ற மனதால் கடவுளை பிரதிபலிப்பவர்கள் பிள்ளைகளாகும்.

ஜேம்ஸ் ரசல்லோவேல் சொல்லும்போது “அன்பையும் விசுவாசத்தையும், அமைதியையும் உலகத்திற்கு வெளிப்படுத்த கடவுளால் அனுப்பப்படுகின்ற தூதர்களே குழந்தைகள்” என்கிறார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இறையரசின் முன்சுவையான அன்பு, சமத்துவம், சகோதரத்துவம் வெளிப்படுத்தும் களங்கமற்ற சிறுபிள்ளை ஒன்றை அனுபவம் மிக்க சீடர்கள் நடுவில் நிறுத்தி இவர்களைபோல மாறுங்கள் என்றார். உரோம, கிரேக்க, யூத பின்னணியத்தில் இயேசுகிறிஸ்துவிடம் கொண்டுவந்த சிறுப்பிள்ளைகளுக்கு தடையாக நின்ற சீடர்களை அதட்டி தானாகவே தன்னிடம் நெருங்க வாய்ப்பை உருவாக்கி கொடுத்தார். அடையாளம் இழந்த சிறுவர்களின் நிலையை அகற்றி ஆசி வழங்கி அடையாளப்படுத்தினார். இயேசுகிறிஸ்து குழந்தையாக பிறந்ததினாலும் அவர்களை ஏற்றுக்கொண்டு முதன்மைப்படுத்தியதாலும் சிறுவர்களின் மதிப்பு உச்சநிலையை அடைந்தது முஹம்மது நபி சொல்லும் போது “சிறுவர்களிடம் அன்பு காட்டாதவர்கள் என்னை சார்ந்தவரல்ல” என்கிறார். பாசம் காட்டவேண்டிய சிறுவர்களிடம் பாரபட்சம் காட்டுகின்றோம். உறவை முக்கியப்படுத்தும்

உள்ளங்களில் உறவு சிக்கல்களை விதைக்கின்றோம். பக்தியை ஊட்டி வளர்க்க வேண்டிய மனதில் முறையற்ற அரசியலை பயிற்றுவிக்கிறோம். யூனிசெஃப் அறிக்கையின்படி (1996) உலகில் 14 வயதிற்கு கீழ் 250 மில்லியன் சிறுவர்கள் கடினமாக வேலை வாங்கப்படுகின்றனர். இந்தியாவில் 115 இலட்சம் சிறுவர்கள் வேலை செய்கின்றனர். ஒவ்வொரு 13 நெடிகளுக்கும் ஒரு சிறுவன் ஏதோ ஒரு விதத்தில் கொடுமைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் ஆய்வுகளில் முடிவுகள் சொல்லுகின்றது. இச்சூழ்நிலையில் கடவுளுக்கு எப்படி சிறுவர்கள் சிறப்பிடம் வழங்கக்கூடும் என்பதை சிந்திப்போம்.

## *1. பாதம் அமர்ந்த சிறுவன்* :

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எருசலேம் பெரிய கோவிலில் 12 வயதில் பெற்றோரின் அஜாக்கிரதையாலும், அறியாமையாலும் தனிமையாக்கப்பட்டார். அங்கலாய்த்து அவரைத் தேடிய பெற்றோர் மூன்று நாள்களுக்குப் பின் ஆலயத்தில் போதகர் நடுவில் அமர்ந்திருக்க கண்டனர் (லூக். 2:46). இயேசுவின் நாட்டமும், விருப்பமும் கடவுளின் விருப்பமும் நிறைவேற்றுவதிலே தீவிரமாய் அமைந்திருந்தது. இயேசுகிறிஸ்து பாலை நிலத்தில் வாழ்வு தரும் வார்த்தைகளை மக்களுக்கு போதித்தார். யூத சமூகத்தின் சிறுவர்கள் மதிப்பும் மாண்பும் இழந்தவர்களாக கருதப்பட்டு அடையாளமிழந்த நிலையில் இருந்தனர். இயேசுவின் சீடன் அந்திரேயா சொல்லுகின்றார் இங்கே சிறுவன் ஒருவன் இருக்கிறான் (யோவா. 6:9) அடையாளம் மறுக்கப்பட்ட சிறுவன் அடையாளம் தேடி இயேசுவின் பாதம் அமர்ந்தான். தன் நேரத்தை ஒதுக்கினான் இச்சிறுவன் பெற்றோருடன் வந்தவரா? அல்லது தனிமையாக வந்தவரா? என்ற கேள்வி எழுப்பினாலும் தெரிய செய்யப்பட்ட இடம் தெளிவானதாகும். எதை மனிதன் விரும்புகிறானோ அதில் அவன் நாட்டமும் ஈடுபாடும் இருக்கும். இச்சிறுவன் இயேசுகிறிஸ்துவின் ஏற்றுக்கொள்ளும் பண்பை அறிந்தவன். எனவே தன்னை உருவாக்கியவர் பாதம் அமர்ந்தான். கவியரசர் தாவீது ஆண்டவரது இல்லத்திற்கு போவோம் என்ற அழைப்பை நான் கேட்டபோது அகமகிழ்ந்தேன் என்கிறார். நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம் (யோசுவா 24:15). என இஸ்ரவேலருக்கு முன்மாதிரியாய் நின்றனர். இன்றைய தகவல் தொழில்நுட்ப தொடர்பு சாதனங்களில் சிறுவர் துவங்கி அனைத்து வயதிற்கு உட்பட்டவர்கள் முடங்கி கிடக்கின்றனர். இச்சூழலில் பரமனின் பாதம் அமர நம்மை முறைப்படுத்துவோம்.

## *2. பயின்ற சிறுவன்* :

சிக்மண்ட் பிராய்ட் சொல்லும்போது "மனிதன் பிறக்கும் போது வெற்றுத்தாள் போல் தான் பிறக்கின்றான். இவ்வுலகின் அவன் கண்டும், கேட்டும் அறிவதின் மூலமே பகுத்தறிவு திறன் பெறுகிறான்" என்கிறார். ஜாண் டூவே சொல்லும்போது "சமுதாய மேம்பாட்டிற்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையான

கற்றுக்கொள்ளுதல் என்கிறார்'', நற்பேறு பெற்றவர் யார்? அவர் பொல்லாதவரின் சொல்லின்படி நடவாதவர். பாவிகளின் தீய வழியில் நில்லாதவர் இகழ்வரின் குழுவினில் அமராதவர் ஆனால் அவர் ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுபவர் அவரது திருச்சட்டத்தைப்பற்றி இரவும் பகலும் சிந்திப்பவர் (தி.பா. 112:1). யோவான் நற்செய்தி நூலில் இச்சிறுவன் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் கொண்டு வந்திருந்தான் என்ற குறிப்பு இடம் பெறுகின்றது. ஆண்டவரின் வார்த்தையை கேட்பதற்கு ஆயத்தத்துடன் வந்திருப்பதை காணமுடியும் நேரம் அதிகமானாலும் கவனம் சிதறாமை முழுமனதோடு இறுதிவரை அவர் வார்த்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தணியாத ஆசை இருந்தது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வார்த்தை ஆற்றல் மிக்கது. அனைத்து நிலையிலுள்ள மக்களுக்கும் புரிகின்றவிதத்தில் அமைந்திருந்தது. அந்த வார்த்தை பாவத்தை அகற்றி பற்றுறுதியையும் தன்னலத்தை துறந்து பொதுநலத்தையும், வாழ்விற்கான விதிமுறைகளையும், அடிமைதனத்தை அகற்றி விடுதலையும், மெய்யுணர்வையும் வெளிப்படுத்தியது. இந்த அறிவை இயேசு கிறிஸ்துவினால் இச்சிறுவன் பயின்று கொண்டான். சிறுவன் சாமுவேல் ஆண்டவரிடம் கேட்டதைப்போல பேசும் அடியேன் கேட்கிறேன் (1சாமு. 3:10) என்ற நிலைக்கு மாற வேண்டும். புதிதாய் பிறந்த குழந்தைகள் போல வஞ்சகமற்ற வார்த்தையாகிய பாலை அருந்த ஆர்வமுள்ளவர்களாயிருங்கள். இதை அருந்துவதால் நீங்கள் மீட்பில் வளருவீர்கள் (1பேது. 2:3) எனவே நம் வாழ்வுக்கு ஆதாரமாய் அணையா விளக்காய் இருக்கும் பரமனின் வார்த்தையை பயின்று வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

### *3. பகிர்தலுக்கு ஆதாரமான சிறுவன்* :

குழந்தைகள் பதுக்குகிறவர்கள் அல்ல, பாரபட்சம் காட்டுகிறவர்களும் அல்ல, களங்கமற்ற வெள்ளை உள்ளம் கொண்டவர்கள். சுவாமி விவேகானந்தா சொல்லும்போது “கள்ளங்கபடற்ற தன்மையைக் கண்ணால் காண வேண்டுமா? ஒரு குழந்தையின் கண்ணை உற்றுப்பாருங்கள்” என்கிறார். இறையரசின் முன்சுவையை இம்மண்ணுலகில் பிரதிபலிக்கும் நட்சத்திரங்கள் குழந்தைகளாகும். யூதருடைய பாஸ்கா விழா அண்மையில் நிகழவிருந்தது என்று குறிப்பிடப்படுகின்றது. (யோவா.6:4) இயேசு கிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்க பல குழுக்களாக மக்கள் கூட்டம் வந்திருக்கலாம் பண்டிகை காலமாக இருந்தபடியால் உணவுபொருட்கள் பலரிடம் இருந்திருக்ககூடும் என்று திருமறையின் ஆய்வாளர்கள் சொல்லுகின்றனர். இயேசுகிறிஸ்துவின் வாழ்வுதரும் வார்த்தையைக் கேட்ட மக்களை அவர் வெறுமையான வயிற்றோடே அனுப்பிவிட விரும்பவில்லை. மக்களுக்கு உணவு கொடுக்கும்படி சீடர்களிடம் கூறினார். (யோவா. 6:5-8) உங்களிடம் என்ன இருக்கிறது அதனை என்னிடம்

கொண்டு வாருங்கள் என்ற அழைப்பு இயேசு வெளிப்படுத்தினார். பரமனின் பாதம் அமர்ந்து பயின்ற சிறுவன் இந்த அழைப்பை கேட்ட மாத்திரத்தில் பதுக்க நினைக்கவில்லை பகிர முன் வந்தார்.

புல்தரையில் அவர்கள் 100 பேராக, 50 பேராக வரிசைப்படுத்தப்பட்டனர். ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லாம் படைத்த ஆற்றல் உள்ள கடவுள் அப்பத்தையும் மீனையும் எடுத்து ஆசீர்வதித்து அவர்களுக்கு வழங்கினார். சிறுவனின் பகிர்தலால் அங்கிருந்தவர்கள் தங்களிடம் இருந்த உணவுப் பொருட்களையும் இயேசுகிறிஸ்துவிடத்தில் வழங்கியிருக்கலாம். அது அனைவருக்கும் பகிரப்பட்டிருக்கலாம். மீதியான கூடை 12 நிரப்பப்பட்டது என்றால் எப்பொழுது? எப்படி? அது வெறுமையான கூடையாக மாற்றப்பட்டது என்று சிந்தனையும் எழதாண்டுகின்றது. எப்படியும் சிறுவனின் பகிர்தல், இயேசுகிறிஸ்துவின் ஆசியும் ஐயாயிரத்திற்கும் அதிகமாகி மக்களின் வயறு நிரம்பி பொது உடமை சமுதாய சிந்தனை அமையாத விதையாக அமைந்திருந்தது. 13-ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் ஒரு ஆலயத்தில் வழிபாட்டின்போது ஆயர் அழைப்பு விடுத்தார். ஏழை எளிய மக்களின் அருட்பணிக்காக இயன்றதை கொடுங்கள் என்று காணிக்கை தட்டை கரத்தில் ஏந்தி நின்றார். யாரும் கொடுக்க முன்வரவில்லை இரண்டு கால்களும் ஊனமான ஏழை சிறுமி தன் ஊன்றுகோலை பயன்படுத்தி முன்வந்தாள். தன் இரண்டு ஊன்றுகோலையும் எடுத்து காணிக்கை தட்டில் வைத்தார் நிற்க வலுவற்று கீழே விழுந்தாள் அதனை பார்த்த அனைவரும் மனதளவில் உணர்த்தப்பட்டு காணிக்கை படைத்தனர். அதன் பலனாய் ஒரு பெரிய அருட்பணி அமைப்பு உருவாக்கப்பட்டதாம். நம்முடைய சிறுபிள்ளைகளை பரமனின் பாதம் அமரவைத்து அவர் வார்த்தையை பயின்று பகிர்ந்தளிக்கும் மனப்பக்குவத்தை வளரச் செய்து கிறிஸ்துவுக்கு சிறப்பிடம் வழங்கும் சிறுவர் வழியாக இம்மண்ணில் இறையரசின் தகவுகளை மலரச் செய்வோம்.

திரு. **D. டார்வின் வினோ**

# பற்றுறுதியில் புத்துயிர் பெற்ற இளையோர்

தானி. 3:14-30

**"...உங்களை என் கைகளிலிருந்து தப்புவிக்கக் கூடிய தெய்வம் ஒன்று உண்டோ?"** தானி. 3:15

அரசியல் வலிமையினாலும், ராணுவ பலத்தாலும் ராஜாவாகிய நேபுகாத்நேச்சர் எருசலேமை முற்றுகையிட்டு மக்களை அடிமைப்படுத்தினார். சிறைபிடித்து வரப்பட்டவர்களில் முக்கியமானவர்கள் தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள். இவர்கள், அரசியல் ஆதிக்க சக்திகளை எதிர்த்து தாங்கள் கொண்ட கொள்கையில் தடுமாறாமல், தடம்புரளாமல் நின்று போராடினார்கள். இப்படியிருக்க ஒரு நாள் நேபுகாத்நேச்சர் 60முழ உயரமும், 6முழ அகலமும் கொண்ட சிலையை பொன்னால் உருவாக்கி பாபிலோன் மாகாணத்தில் தூரா எனும் சமபூமியில் நிறுவினார்.

சிலை திறப்பு விழாவிற்கு பலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. தேசாதிபதிகள், அதிகாரிகள், நியாயாதிபதிகள், தலைவர்கள் வந்தனர். கட்டளை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டது. எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை முதலான இசைக்கருவிகள் இசைக்கும் போது சிலையை பணிய வேண்டும். பணிந்து கொள்ளவில்லை என்றால் எரிகிற அக்கினியில் போடப்படுவார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த 3 வாலிபர்கள் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் சிலையைப் பணியவில்லை. இச்செய்தி அறிந்த அரசர், கேட்கும் கேள்வி உங்களை "என் கைக்கு தப்புவிக்க போகிறவர் யார்?" என்பதாகும். இதற்கு துணிச்சலாகவும், தெளிவாகவும் ஆழமாகவும் பதிலளித்து, இவ்விதமாய் இரட்சிக்க தக்க கடவுள் வேறொருவரும் இல்லை என ராஜாவை சொல்லும்படி வைத்தனர். இதை ஆழமாகச் சிந்திப்போம்.

### *1. வல்லமையை வாய்விட்டு அறிக்கை செய்தார்கள் :*

நாங்கள் ஆராதிக்கிற எங்கள் கடவுள் எங்களை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எரிகிற அக்கினி சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய வைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார் (தானி. 3:17). ராஜா ஏற்படுத்தின பொற்சிலையை 3 வாலிபர்களும் வணங்கவில்லை இந்த செய்தியை கல்தேயர் ராஜாவினிடத்தில் வந்து சொல்லுகிறார்கள். ராஜா சிலையை வணங்கும்படி வலியுறுத்துகிறார். இல்லை என்றால் எரிகிற அக்கினியில் வீசப்படுவீர்கள், மரித்துப் போவீர்கள் என்கிறார்.

ராஜாவின் வார்த்தைக்கு பயப்படவில்லை மாறாக கடவுளின் வல்லமையை அறிக்கை செய்தார்கள். நாங்கள் ஆராதிக்கிற எங்கள் கடவுள் எங்களை தப்புவிப்பார். இவர்கள் கடவுளின் வல்லமையை நன்கு அறிந்து இருந்தார்கள். அவர் வல்லமையுள்ளவர், ஒன்றுமில்லாமை யிலிருந்து எல்லாவற்றையும் உருவாக்கியவர், எரிகோ கோட்டையை தகர்த்து போட்டவர்,

செங்கடலை இரண்டாக பிளந்தவர், வனாந்தரத்தில் துரவை ஏற்படுத்தினவர், அவர் சர்வ வல்லமையுள்ளவர், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் கடவுள் அவர் இந்த கடவுளின் வல்லமையை அறிந்து உணர்ந்து ராஜாவுக்கு முன்பு துணிந்து அறிக்கை செய்தனர்.

நம்முடைய வாழ்விலும் நாம் ஆராதிக்கிற ஆண்டவர் இயேசு வல்லமை மிக்கவர் என்பதை வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் நாம் அறிக்கை செய்ய வேண்டும். கடவுள் சகலத்தையும் செய்ய வல்லவர் என யோபு கூறுகிறார் (யோபு 42:2).

### *2. வாழ்விழந்தாலும் வல்லவரையே வழிபடுவோம் என்றார்கள்* : (தானி. 3:18)

நாங்கள் ஆராதிக்கிற எங்கள் கடவுள் எங்களைத் தப்புவிக்க வல்லவர் என்று சொன்னார்கள். அதற்கு மேலே சொல்லுகிறார்கள் தப்புவிக்காமற் போனாலும் நாங்கள் பொற்சிலையை வணங்கமாட்டோம். விடுவிக்காமற் போனாலும் அவர்தான் எங்கள் ஆண்டவர். ஆகவே மரணமே வந்தாலும் எங்கள் கொள்கையில் மாற்றமில்லை, மாறமாட்டோம் இது சவால்.

இது ஆழமான ஓர் கடவுள் நம்பிக்கை, மரணமே வந்தாலும் அவர்தான் என் கடவுள் என உறுதியாய் சொன்னார்கள். அவர் என்னை கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் (யோபு 13:15). இது யோபுவின் ஆழமான கடவுள் நம்பிக்கை. .....எந்த நிலையிலிருந்தாலும் மனரம்மியமாக இருக்க கற்றுக் கொண்டேன், வாழ்ந்திருக்கவும் தெரியும், தாழ்ந்திருக்கவும் தெரியும் (பிலி. 4:11-13) என பவுல் கூறுகின்றார். நாம் நம்முடைய வாழ்வில் எப்படி வாழ்கிறோம் வாழ்வில் துன்பங்கள், பெலவீனங்கள், பிரச்சனைகள் வரும்போது ஆண்டவரை துதிக்கிறோமா, தூசிக்கிறோமா, பின் வாங்கி போகிறோமா? 3 வாலிபர்களின் ஆழமான விசுவாசம் நம்மிடம் உண்டா?.... சிந்திப்போம்.

### *3. வல்லவரின் வல்ல செயல்களை(வல்லமையை) பிறர்காணச் செய்தனர்* : (தானி. 3:29)

விடுவிக்காமற் போனாலும் பொற்சிலையை வணங்கமாட்டோம் என்று ராஜாவுக்கு சவால் விட்டனர். கோபம் கொண்ட ராஜா எரிகிற அக்கினி சூளையை 7 மடங்கு அதிகப்படுத்தினார். 3 வாலிபர்களை நெருப்பில் போட சொன்னார். தூக்கி போட்டார்கள். நடந்ததென்ன? தூக்கி போட்டவர்கள் மரித்து போனார்கள், 3 வாலிபர்களும் நெருப்பில் உலாவினார்கள் அவர்களுடன் தேவ புத்திரர் ஒருவரும் உலாவினார். இந்த காட்சி ராஜாவையே மாற்றியது.

நம்முடைய வாழ்வு மற்றவர்களை மாற்றம் செய்கிறதா? நம்முடைய கடவுள் பக்தி எப்படி இருக்கிறது. பவுலும், சீலாவும், .....காவலில் வைக்கப்பட்டார்கள் (திப. 16:25).

துன்பத்திலும் பவுலும், சீலாவும் ஆண்டவரை பாடி மகிழ்ந்தார்கள், மற்றவர்கள் மாற்றம் பெற்றனர். தொடர்ந்து சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ போன்று ஆழமான இறைநம்பிக்கையில் வாழ்வோம், ஆண்டவரின் அரும்பெரும் செயல்களை மற்றவர் அறிய சாட்சியாவோம்.

அருள்திரு. G. **ஜெபின்**

# புரியாதப் புதிரைப் பூவுலகுக்குப் பறைசாற்றுவோம்

தி.ப. 8:26-40

**"...இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அவருக்கு அறிவித்தார்". தி.ப. 8:35**

ஆடவர் எத்துறையிலும் ஆளுமை உடையவராக, சமூகத்தின் தலைவராக இருந்து வரும் இக்காலகட்டத்தில் திருச்சபையோடும் இயேசு கிறிஸ்துவோடும் உறவை வளர்த்து கொள்வது இவ்வுலக வாழ்விற்கு வலுசேர்க்கும் அனுபமாகும். நற்செய்தி அறிவித்தலும் நற்செய்திக்கு சான்று பகர்தலும் மனிதனிடையே இறையரசை குறித்தத் தகவுகளைப் பெருகச் செய்ய வேண்டியது கட்டாயமான கடமையாகும். இந்நாளில் ஆண்கள் யாவரும் திருச்சபையின் தூண்களாக, நற்செய்தியின் ஊடகங்களாக வாழ வேண்டும் என்பதை தான் கடவுள் எதிர்பார்க்கிறார். அதற்கு பிலிப்புவின் துணிச்சல் மிகுந்த நற்செய்தி திருப்பணி இதற்கு சான்றாகுகிறது.

எருசலேமில் திருத்தூதுவருக்கு உதவிச் செய்யும்படி தெரிவுச் செய்யப்பட்ட ஏழுவரில் ஒருவர் பிலிப்பு. இவர் ஸ்தேவானின் மரணத்திற்கு பிறகு சவுலின் துன்புறுத்தலினிமித்தம் எருசலேமை விட்டு வெளியேறி சமாரியாவில் நற்செய்தியைப் பரப்பினார்(தி.ப. 8:5-10). சீமோன் என்னும் மாயவித்தைக்காரனை மனந்திருப்பி, திருமுழுக்குக் கொடுத்தார்(தி.ப. 8:13). சமாரியாவில் அநேகருக்கு கடவுளின் வார்த்தையை அறிவிக்கும் ஊடகமானார் பிலிப்பு.

பிலிப்புவின் திருப்பணியில் எத்தியோப்பிய மந்திரியோடு நிகழ்ந்த சந்திப்பையும், அவர் வாழ்வில் பெற்ற மாற்றத்தையும், இக்கால சமூகத்திற்கு கொடுக்கும் அறைக்கூவலையும் தியானிப்போம்.

### *1. புரியாதப் புதிராய் நிற்கும் மந்திரி :* (தி.ப. 8:31)

யாராவது விளக்காவிட்டால் எவ்வாறு என்னால் தெரிந்துக் கொள்ள முடியும். (தி.ப. 8:31)

ஆண்டவரின் தூதனின் கட்டளைக்கிணங்க எருசலேமிலிருந்து காசா செல்லும் பாதையில் பிலிப்புவிற்கும் எத்தியோப்பிய நிதியமைச்சருக்கும் இடையே சந்திப்பு நிகழ்கிறது. இவர் எத்தியோப்பிய அரசியான கந்தகியின் நிதியமைச்சராக பொறுப்பு வகித்து வந்தார். இவர் தன்னுடைய தேரில் அமர்ந்து எசாயா இறைவாக்கினரின் நூலைப் படித்துக் கொண்டிருக்கும் போது தான், தூய ஆவியரால் பிலிப்பு இவரிடம் அனுப்பப்படுகிறார். அவர் வாசிப்பதைக் கேட்ட பிலிப்பு, வாசிப்பதின் பொருள் தெரியுமா ? என வினாவுகிறார். அப்போது தான் தன்னுடைய புரியாதப் புதிரை,

தெளிவற்ற நிலையை பிலிப்புவிடம் மந்திரி கூறுகிறார். தெளிவற்ற வாழ்க்கை மந்திரியின் மனஅமைதிக்கு தடையாக இருக்கிறது. காரணம், சமுதாயத்தில் பெரிய பதவியில் இருக்கும் மந்திரி தன் பணிகள் அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு புரியாதப் புதிரின் மீது வாஞ்சைக் கொள்கிறார். நம் வாழ்விலும் புரியாதவற்றை புரிந்து வாழ முற்படுவோம்.

***2. புரியாதப் புதிரைத் தெளிவுப்படுத்தும் பிலிப்பு :*** (தி.ப. 8:35)

...இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அவருக்கு அறிவித்தார். (தி.ப. 8:35)

புரியாத புதிராக எசாயா இறைவாக்கினரின் நூலைப் படித்துக் கொண்டிருக்கும் எத்தியோப்பிய மந்திரியோடு நடந்த பிலிப்புவின் சந்திப்பு புரியாதப் புதிரை தெளிவுப்படுத்தும் சந்திப்பாக அமைகிறது. மந்திரி வாசித்துக் கொண்டிருந்த மறைநூல் பகுதியை பிலிப்பு தெளிவாக விளக்குகிறார் (தி.ப. 8:32-34). பிலிப்புவின் விளக்கத்திற்கு பிறகும் மந்திரியினுடைய வாழ்வில் தெளிவற்ற நிலையை தான் காண முடிகிறது. இறைவாக்கினர் யாரைக்குறித்து இதைக் கூறுகிறார், தம்மைக் குறித்தா? மற்றொருவரைக் குறித்தா? என்று கேள்வி எழுப்பின போது, பிலிப்பு சரியான நேரத்தை, சூழலைப் பயன்படுத்தி புரியாத புதிராய் தெளிவற்ற நிலையில் இருந்து கொண்டிருந்த மந்திரிக்கு புரியாதப் புதிராகிய, இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அவருக்கு அறிவித்தார். தெளிவை ஏற்படுத்தி திருமுழுக்கு கொடுத்தார். பிலிப்பு புரியாதப் புதிராகிய நற்செய்தியை நற்செய்தியின் கருவியாய் பல இடங்களில் பறைசாற்றினார்.

இன்றும் எத்தனையோ மக்களின் வாழ்வில் நற்செய்தி என்பது புரியாத புதிராகவே இருந்து வருகிறது. மக்களின் மனம் தீயச்செயல்களால் இருள் நிறைந்ததாய், ஒளி வழங்கும் கடவுளை அறியாத வாழ்வாக காணப்படுகிறது. நற்செய்தியை அறிவித்து, இறைமக்களை கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்துவது அனைவரின் கடமையாகும். பிலிப்பு புரியாதப் புதிராகிய நற்தெய்தியை எத்தியோப்பிய மந்திரிக்கு அறிவித்து தெளிவு ஏற்படுத்தியது போல் நாமும் நற்செய்தியைப் பூவுலகில் பறைசாற்றுவோம்

திரு. **M.R. மில்ட்டன் மார்க்**

# நற்சான்று பெற்ற அபிகாயில்

1சாமு. 25:2-42

**"இரத்தப்பழிக் குற்றத்திலிருந்தும் பழிதீர்ப்பதிலிருந்தும் என்னை இன்று தடைசெய்த நீ ஆசிபெறுவாய்! உன் நுண்ணறிவும் ஆசி பெறுவதாக!."**

**1சாமு. 25:33**

## *முன்னுரை :*

குடும்பத்தில், திருச்சபையில், சமூகத்தில் பெண்களின் பங்களிப்பு சிறப்புக்குரியது. சத்குரு ஜக்கி வாசுதேவ் கூறும் பொழுது "பெண்ணின் பங்களிப்பு இல்லாத ஒரு சமூகம் மலர் இல்லாத ஒரு சமூகம்." மலர் இல்லாத ஒரு செடியைப் போன்றது ஓர் ஆணால் உணரமுடியாத சில நுட்பமான உணர்வுகளை ஒரு பெண்ணால் சுலபமாக உணர முடியும் என்று கூறுகின்றார். முரடனான ஒரு கணவரோடு மகா புத்திசாலியாக வாழ்ந்த அபிகாயிலைக் குறித்து சிந்திப்போம்.

அபிகாயிலின் கணவர் நாபாலைக் குறித்து அவர் முரடன், பிறரை வேதனைப்படுத்தி மகிழ்பவர், பிறர் நலனில் அக்கறையில்லாதவர், பைத்தியக்காரர், பேலியாளின் மகன், குடிகாரர், வெறித்தனமிக்கவர், கோபக்காரர், பிறர் யோசனையை கேட்க மறுப்பவர், சீற்றம் மிகுந்தவர் எனத் திருமறை கூறுகிறது. ஆனால் அவர் மனைவியாகிய அபிகாயில் எப்படிப்பட்ட சிறப்புக் குணம் உடைய பெண்ணாக இருந்து குடும்பத்தை மகா அழிவினின்று காத்தார் எனப் பார்ப்போம்.

## *1. அபிகாயில் மகா புத்திக் கூர்மையுடையவர் :*

1சாமு. 1:3. நாபாலின் மனைவியாகிய அபிகாயில் மகா புத்திசாலியும், ரூபவதியுமாயிருந்தார். ஒரு குடும்பத்தலைவி குடும்பத்தைக் கட்டி எழுப்ப வேண்டுமானால் அவர் புத்திக் கூர்மையுடையவராக இருக்க வேண்டும். நீதி. 14:1 புத்தியுள்ள பெண் தன் வீட்டைக் கட்டுகிறார். கடவுள் பெண்களின் கரத்தில் அழகிய குடும்பத்தைத் தருகிறார். நாம் அதைக் கட்டி எழுப்புகிற பெண்களாக இருக்கிறோமா?

ஒரு முறை தாவீது, சவுல் ராஜாவிற்குப் பயந்து வனாந்தரத்தில் வாழ்ந்து கொண்டிருந்த போது, நாபால் தன் தொழில் துறையில் இருக்கிற செய்தியை அறிந்து பத்து வாலிபரை அழைத்து நாபாலிடத்தில் சென்று, என் பேரைச் சொல்லி, அவர் சுகசெய்தியை விசாரித்து, அவரை வாழ்த்தி, உம்முடைய கைக்கு உதவுவதை உம்முடைய ஊழியக்காரருக்கும், உம்முடைய குமாரனாகிய தாவீதுக்கும் கொடுக்கும்படி வேண்டுகிறேன் என்று சொல்லுங்கள் என்று சொல்லி அனுப்பினார். ஆனால் நாபால் தாவீதின் ஊழியக்காரருக்குக் கடினமான

உத்தரவு கொடுத்து அனுப்பினார். தாவீதைக் கேவலமாகக் கூறி அவர்கள் மேல் சீறிப் பாய்ந்தார் (1சாமு. 25:14). நாபால் தாவீதுக்கு எதிராக பல விதமான தூஷணமான வார்த்தைகளைக் கூறினார். இதனால் கோபமடைந்த தாவீது, தன்னோடிருந்த நானூறு பேரை ஆயுதமணிவித்து நாபாலுக்கு எதிராக யுத்தத்திற்கு அனுப்பி அவரையும், அவருக்குண்டான யாவையும் அழிக்கத் தீர்மானித்தார். இதை அறிந்த அபிகாயில் எப்படிச் செயல்பட்டார்?

## 2. தன் குடும்பத்தைக் காக்கத் தீவிரமாய்ச் செயல்பட்டார் :

குணசாலியான பெண்ணைக் கண்டுபிடிப்பவர் யார்? அவருடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது (நீதி. 31:10) அவர் தன்னைப் பெலத்தால் இடைக்கட்டிக் கொண்டு, தன் கைகளைப் பலப்படுத்துகிறார். (நீதி. 31:17) வேலைக்காரன் செய்தியை வந்து சொன்னமாத்திரத்தில் அதைத் துச்சமாய் நினையாமல் மிகத் தீவிரமாய்ச் செயல்பட்டார். இருநூறு அப்பங்களையும், இரண்டு துருத்தி திராட்சை ரசத்தையும், சமையல் செய்யப்பட்ட ஐந்து ஆடுகளையும் ஐந்துபடி வறுத்த பயிற்றையும், வற்றலாக்கப்பட்ட நூறு திராட்சக்குலைகளையும், வற்றலான இருநூறு அத்திப்பழ ஆடைகளையும் எடுத்து கழுதைகள் மேல் ஏற்றி தன் வேலைக்காரரிடம் நீங்கள் முன்னே போங்கள், நான் பின்னாலே வருகிறேன் என்று சொல்லி தீவிரமாய் தாவீதைப் பார்க்க, புறப்பட்டுச் சென்றார்.

## 3. அபிகாயில் தன்னைத் தாழ்த்தினார் :

தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கிறார். தாழ்மையுள்ளவர்களை உயர்த்துகிறார் என்ற திருமறையின் திருவாக்குக்கேற்ப, மலையில் மறைவில் இறங்கி வருகையில் தாவீதைப் பார்க்கிறார். தீவிரமாய் கழுதையை விட்டு இறங்கி தாவீதிற்கு நேராகத் தரையில் முகங்குப்புற விழுந்து பணிந்து, அவர் பாதத்தில் விழுந்து, தன் கணவர் தவற்றை தன் தவறாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அவரிடம் தன் கணவரின் சுபாவங்களை எடுத்துக்கூறி அடியாள் கொண்டு வந்த காணிக்கையை ஏற்றுக் கொள்ளும் என்று மன்றாடினார்.

## 4. வாழ்வுதரும் வார்த்தைகளால் தாவீதை வாழ்த்தினார் :

குணசாலியான பெண் தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறார் (நீதி. 31:26) என்பதற்கேற்ப உமது அடியானுக்கு கர்த்தர் நிலையான வீட்டைக் கட்டுவார். என் ஆண்டவன் கர்த்தருடைய யுத்தங்களை நடத்துகிறவராமே. நீர் உயிரோடே இருக்கும் நாளில் ஒரு பொல்லாப்பும் உம்மிலே காணப்படாதிருப்பதாக. இஸ்ரயேலின் அதிபதியாக நீர் ஆவீர் என்று ஒரு தீர்க்கத்தரிசியைப் போல நல்ல வார்த்தைகளால் தாவீதை வாழ்த்தி அவர் கோபத்தைத் தணியச் செய்தார். ஆண்டவர் என் ஆண்டவனுக்கு நன்மை செய்யும் போது அடியாளை நினைக்க வேண்டுமென்று தாவீதிடம் கூறினார்.

## 5. பழிவாங்கும் எண்ணத்தை முறியடித்தார் :

பழிக்குப்பழி செய்யக்கூடாது என்று திருமறை எச்சரிக்கிறது. தாவீதுவேலையாட்களிடம் நான் நாபாலுக்கு நன்மை செய்தேன். ஆனால் அவர் எனக்கு உதவி செய்யாததால் (1சாமு. 25:22) அவனுக்கு உண்டான எல்லாவற்றிலும் சுவரில் நீர் விடும் ஒரு நாய் முதலாய் பொழுது விடியுமட்டும் நான் உயிரோடு வைக்கமாட்டேன் என்று பழிவாங்கும் எண்ணத்தோடு பேசிய தாவீது இப்பொழுது அபிகாயிலின் வார்த்தைகளுக்கு மதிப்பு, மரியாதை கொடுக்கிறார். ''நான் இரத்தம் சிந்தாதபடிக்கும், என் கை பழி வாங்காத படிக்கும், நீ இன்றைய தினம் எனக்குத் தடை பண்ணினபடியால், நீ ஆசீர்வதிக்கப்படுவாயாக என்று அபிகாயிலை தாவீது ஆசீர்வதித்தார்'' (1சாமு. 25:33). நீ தீவிரமாய் புறப்பட்டு வராதிருந்தால் ஒரு நாய் கூட உயிரோடு இல்லாதபடி செய்திருப்பேன் என்று கூறி, உன் மூலம் கடவுள் என்னைப் பொல்லாப்பிற்கு விலக்கிக் காத்தார் என்று கூறினார்.

## 6. கடவுள் மீது பற்றுறுதி கொண்டிருந்தார் :

கடவுள் மீது கொண்டிருந்த விசுவாசத்தால் இரத்தம் சிந்துதலை தடை செய்தார். (1சாமு. 25:30,31) இஸ்ரயேலின் அதிபதியாக கடவுள் தாவீதை மாற்றுவார் என்று அறியும், அரசியல் அறிவும், இறைநம்பிக்கையும் அவரிடம் இருந்தன. சவுல், தாவீதைக் கொலை செய்யத் துரத்துவதை அறிந்திருந்தார். கோலியாத்தைக் கவணிலே கல்லினால் கொன்றிருந்ததையும் அறிந்திருந்தார். ஆகவே தான், 1சாமு. 25:29-ல் ''உம்மைத் துன்பப்படுத்த, கொலை செய்ய ஒருவன் வகை தேடினாலும், உம்முடைய ஆத்துமா, கர்த்தரின் ஆதரவில் இருக்கிறது. உம்முடைய சத்துருக்களின் ஆத்துமாக்களோ, கவணில் வைத்து எறிந்தது போல எறியப்பட்டுப்போம்'' என்று நம்பிக்கையுடன் கூறினார். இறைப்பற்று, அரசியல் அறிவு, நாட்டின் நடப்புகள் அனைத்தையும் துல்லியமாக அறிந்திருந்தார்.

ஒரு குடிகார கணவனுடன் எப்படி வாழ வேண்டும் என்ற அறிவு இருந்தது. அவர் தாவீதைச் சந்தித்ததை அவர் குடிபோதையில் இருக்கும் போது கூறவில்லை. அவருடைய வெறி தெளிந்த பின் தான் கூறினார். இன்று அநேக பெண்கள் கணவர் குடிபோதையில் இருக்கும் போது காரியங்களைப் பகிர்ந்து கொள்ள முயலும் போது அடி, உதை வாங்குவதை அன்றாடம் பார்க்கிறோம். அபிகாயில் அழகினால் மட்டுமல்ல அறிவினாலும் தன்னை அலங்கரித்துக் கொண்டார். நாபால் செத்துப் போனதைக் கேள்விப்பட்ட தாவீது அவர் விவாகம் பண்ண மனதாய் ஆள் அனுப்பினார். நாபாலிடம் அடிமை போல வாழ்ந்த அபிகாயிலுக்கு அரசனின் மனைவி என்ற அந்தஸ்து கிடைத்தது. கடவுள் அபிகாயிலின் மூலம் தாவீதிற்குச் சொன்னதை நிறைவேற்றினார். இன்றும் அநேக பெண்கள், பைத்தியக்காரன் போன்று, தன்னைத் துன்புறுத்தி அதில் மகிழ்ச்சி காணும் கணவரோடு (sadist) வாழ்கின்றனர். பெண்கள் தங்கள் கற்புள்ள வாழ்வினாலே கணவரை ஆதாயப்படுத்த வேண்டும் (1பேது. 3:1,2). அறிவும், ஆற்றலும் பெண்களுக்குத் தேவை. அறிவு, புத்தி, ஞானம் இருக்கும்போது நம் குடும்பம், திருச்சபை, சமூகத்திற்கு நல்ல பங்களிப்பைக் கொடுக்க முடியும்.

அருள்திரு. **சார்லெட் சௌந்தர ராஜன்**

# பரமனைப் பாடுங்கள்

திபா. 89:1-7

**"ஆண்டவரின் பேரன்பைப் பற்றி நான் என்றும் பாடுவேன்; நீர் உண்மையுள்ளவர் எனத் தலைமுறைதோறும் என் நாலால் அறிவிப்பேன்."**
**திபா. 89:1**

மனித உணர்வுகளை கட்டுப்படுத்தும் காரணிகளில் ஒன்று இசை. இசைக்கருவிகளோடு இணைந்து உணர்வுப்பூர்வமான பாடல்கள் தோன்றும்போது அது சமூகத்தையே அசைக்கிறது. கிறிஸ்தவ சமயத்தில் பாடல்கள் வழிபாட்டின் இன்றியமையாத காரணிகளில் ஒன்றாக உள்ளது. வேதாகமத்தின் பெரும்பகுதி பாடல்கள் என்பதும் நமது ஆராதனையின் பெரும்பகுதி பாடல்களே என்பதும் நாம் அறிந்ததே.

இஸ்ரயேல் வரலாற்றில் பாடல்கள் தனிச்சிறப்பு பெற்றிருந்தன. மந்தைகளை மேய்க்கும் போதும், வயல்வெளிகளில் வேலை செய்யும் போதும், ஆராதனை வேளைகளிலும் அநேக பாடல்களை பாடுவார்கள். சங். 89:1-ல் தாவீது ராஜா கர்த்தரின் கிருபைகளை என்றென்றைக்கும் பாடுவேன் என்று கூறுகிறார்.

இத்தகைய பாடலுக்கு மிகப்பெரும் ஆற்றல் உண்டு என்பதையும் அதில் தேவன் பிரியப்படுகிறார் என்பதையும் பரிசுத்த வேதாகமம் சுட்டிக்காட்டுகிறது. 1சாமு. 16:23-ல் தாவீது சுரமண்டலத்தை மீட்டி பாடிய போது சவுலை பிடித்திருந்த பொல்லாத ஆவி அவனைவிட்டு விலகியது. யோசு. 6:16-ல் ஜனங்கள் ஒருமனதோடு பாடி துதித்தபோது எரிகோ கோட்டை உடைந்து விழுந்தது.

இத்தகைய பாடல்களை ஆராதனையில் எப்படி பாட வேண்டும் என்பதை நாம் சிந்திப்பது அவசியமாகும்.

### *1. தூய்மையோடு பாட வேண்டும்* : (2 குறிப். 20 : 21)

பாடல்களில் பலவிதங்கள் உண்டு. அவை சமூகம், சூழல், பின்னணியம் சார்ந்து மாறுபடும். யோசபாத் ராஜாவிற்கு எதிராக மூன்று பிரிவினர் பெரும்படைகளோடு வந்தார்கள். அக்காலகட்டத்தில் போரில் திறமைவாய்ந்த சீரியாவிலிருந்து வந்த படைகளைக் கண்ட போதே யோசபாத் ராஜா பயந்து விட்டார். ஒரு படையை அல்ல மூன்று படைகளை எதிர்கொள்வது எப்படி? 21-ம் வசனத்தின்படி பரிசுத்தத்தோடு கடவுளை பாடும் மக்களை தெரிவு செய்தான். பொதுவாக போர்முனையின் முன்பகுதியில் மிகவும் திறமைவாய்ந்த போர் வீரர்களை நிறுத்துவார்கள் ஆனால் இங்கே பரிசுத்தமுள்ள பாடகரை நிறுத்தினான். அவர்கள் பாடி துதிசெய்யத் தொடங்கினபோது மூன்று தேசத்து

வீரர்களும் ஒருவருக்கொருவர் எதிராக எழும்பி தங்களை தாங்களே மாய்த்துக் கொண்டார்கள்.

பரிசுத்தமான பாடல், பரிசுத்தர்களின் பாடல் ஒரு தேசத்திற்கே விடுதலை பெற்றுத்தந்தது. இன்று நமது ஆலயங்களில் இப்படிப்பட்ட பரிசுத்தத்தோடு பாடும் சூழல் உண்டா என்றால் அது கேள்வியே. பரிசுத்தம் என்பது வெள்ளை ஆடையிலோ, வெளித் தோற்றத்திலோ மட்டுமல்ல; அது உள்ளத்தின் வெளிப்பாடாகும். யோசபாத்தின் பாடகற்குழு பரிசுத்தத்தோடு பாடியது.

***2. தாழ்மையோடு பாட வேண்டும்*** : (எசா. 6 : 1-4)

மேன்மைக்கு முன்பானது தாழ்மை என்று வேதம் கற்றுத்தருகிறது. மனிதன் பெற்றுள்ள திறமைகளெல்லாம் கடவுள் தந்த கொடைகள் என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

ஏசா. 6:1-4, வேத பகுதியில் ஏசாயா ஆலயத்தைக் குறித்து கண்ட காட்சி கொடுக்கப்பட்டுள்ளது. சிங்காசனத்தில் வீற்றிருந்து கடவுளை சேராபீன்கள் துதித்த விதம் சற்று வித்தியாசமாக காணப்படுகிறது.

இரண்டு செட்டைகளால் தங்களது முகத்தை மூடியும், இரண்டு செட்டைகளால் பாதங்களை மூடியும் கடவுளுக்கு முன்பாக தங்களை தாழ்த்தி துதித்தார்கள். கடவுளுக்கு முன்பாக நிற்க தகுதியற்றவர்கள் என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. ஏசாயா தீர்க்கதரிசி இவற்றைக் கண்டபோது பிரம்மித்துவிட்டார். ஆலயம் முழுவதும் கடவுளின் பிரசன்னம் நிரம்பியிருந்தது. தாழ்மையான உள்ளத்திலே கர்த்தர் வாசம் பண்ணுவார். தாழ்மையான மக்களின் துதியிலே கடவுள் பிரசன்னமாவார்.

இன்று ஆலயங்களிலும் பாடல்கள் வித்தியாசமாக மாறிவருகின்றன. கடவுளை மகிமைப்படுத்துவதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள் தங்களை முதன்மைப்படுத்த முயல்கிறார்கள். பரிசுத்தமான பாடல்களும், பரிசுத்தமான உள்ளமும் இல்லை. தாழ்மையை பெற்றுக்கொள்ள வேண்டிய நாம் நம்மை மேன்மைப்படுத்துவதிலேயே வேகம் காட்டுகிறோம். இவைகளின் விளைவு எதிரிகள் பெலடைகிறார்கள், கடவுளின் பிரசன்னத்தை உணரமுடியவில்லை.

“பரிசுத்தத்தோடு பாடுவோம், பணிவோடு பாடுவோம்
எதிரியை வீழ்த்துவோம், கடவுளின் பிரசன்னத்தை காண்போம்”

திரு. C. **மோகன்**

# பெற்றுக்கொள்ளும்படி கேளுங்கள்

எசா. 55:6-11 உரோ. 13:10-14
தி.பா. 116 மத். 7:7-11

**"ஏனெனில், கேட்போர் எல்லோரும் பெற்றுக் கொள்கின்றனர்; தேடுவோர் கண்டடைகின்றனர்; தட்டுவோருக்குத் திறக்கப்படும்."**
**மத். 7:8**

கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள தனிப்பட்ட உறவை வெளிப்படுத்துவது இறைவேண்டல். இது ஒரு இறை தொடர்பு சாதனம் ஆகும். எனவே தொடர்பு கொள்ளும் வழிகள் திறந்திருக்க வேண்டும் துண்டிக்கப்படாத படி இணைப்பை தொடர் இணைப்பாக செயல்படுத்த வேண்டும் என்பதே ஜெபக்குழு ஏற்படுத்தும் தாக்கமாக இருக்க வேண்டும் என்பது அறிமுகம் ஆகும்.

தி.பா. 116:2-ல் அவரை நான் மன்றாடிய நாளில் எனக்கு அவர் செவிசாய்த்தார், என்று கவியரசர் மிகவும் உறுதியாகக் கூறுகின்றார். ஆனால் இன்று இறையடியார்கள் தங்கள் விண்ணப்பத்தின் வலிமையைப் பற்றிய நம்பிக்கை இல்லாது காணப்படுகின்றனர்.

ஒரு சிறிய நகரின் முக்கியத் தெருவில் இரவு விடுதி ஒன்று கட்டப்பட்டது. அதன் அருகில் இயங்கி வந்த திருச்சபையாருக்கு இது இடையூறாகவும், கவலையும் ஏற்படுத்தியது. எனவே முழு இரவு விண்ணப்பங்கள் ஏற்படுத்தி விண்ணப்பம் செய்து வந்தனர். திடீர் என ஏற்பட்ட மின்னல் தாக்கி கட்டிடம் எரிந்து நாசமாகியது. விடுதியாளர் இவர்கள் இறைவேண்டலால் தான் சேதம் ஏற்பட்டது என வழக்கு தொடர்ந்து வாதிட சபை மக்களின் வழக்கறிஞரும் வாதிட்டார். நீதிபதி தீர்ப்பு கூறும் போது மின்னல் ஏற்பட்டதால் தான் சேதம் ஏற்பட்டிருக்கின்றது. அனால் இறைவேண்டல் செய்த சபையாரை விட விடுதியாளருக்கு இறைவேண்டலின் வல்லமையை புரிந்துள்ளார் என்பதற்கு இந்த வழக்கு சான்று என நீதிபதி தீர்ப்பு செய்தார். இறை மக்களுக்கு இறைவேண்டல் பற்றிய புரிதல் அதிகம் தேவைப்படுகின்றது.

### *1. இறைச் சத்தமும், சித்தமும் அறிந்து கேளுங்கள்* :

(எசா. 56 : 8)

"என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல, உங்கள் வழிமுறைகள் என் வழிமுறைகள் அல்ல" என்கிறார் ஆண்டவர்.

நினைத்ததெல்லாம் நடந்து விட்டால் கடவுள் தேவையில்லை. எப்போதும் கடவுளின் ஆசிகளை நமது விருப்பப்படி எதிர்பார்ப்பது இறைமக்களிடம் அதிகமே. அது ஏற்படாதிருக்கும் போது நம்பிக்கை தளர்வு ஏற்பட்டு, கடவுளை குறை கூறுவது, தற்கொலை செய்வது, ஆலயம் செல்வதை தவிர்ப்பது, இறைவேண்டல் செய்வதை தவிர்ப்பது என்கிற நிலை ஏற்பட்டு விடுகின்றது. இப்படிப்பட்ட தோல்விகளை திருமறையில் விசுவாச வீரர்கள் எப்படி எதிர்கொள்ளுகின்றனர் என்பதை அறிவோம்.

**a. கானான் நாட்டில் நுழைய இயலாத மோசே :** (இ.ச. 32 : 55)

கடவுளின் துணையோடு பார்வோனோடு போராடி எபிரேய மக்களை மீட்டு எகிப்திலிருந்து கானான் எல்லை வரை அம்மக்களை நடத்தியவர், கடவுளிடம் நேரடியாக பேசியவர் (இ.ச. 34:10,12) கானானுக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. காரணம் "மேரிபாவில் தண்ணீர் நெருக்கடி ஏற்பட கன்மலையிடம் பேசுவதற்கு பதிலாக மோசே கன்மலையை அடித்தார். எனவே கானானில் மோசே செல்ல இயலவில்லை. இறைசித்தம் ஏற்று எல்லையில் மாண்டார்."

**b. குணம் பெற இயலாத பவுலடிகளார் :** (2கொரி. 12 : 7-9)

பவுலடியாரின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவருக்கு கொடுக்கப்பட்ட முள் நீக்கப்படவில்லை. மூன்று முறை கேட்டும் அருளப்படவில்லை, மனமும் உடையவில்லை. மாறாக அப்பலவீனத்தை நேர்மறையாக எடுத்துக் கொண்டார். "நான் இறுமாப்பு அடையாதவாறு பெருங்குறை ஒன்று என் உடலில் தைத்த முள்போல் என்னை வருத்திக் கொண்டே இருக்கிறது" (2கொரி. 12:17) எனினும் விசுவாச வாழ்வை தொடர்ந்தார். தாங்கும் வலிமையை கடவுளால் பெற்றார் (2கொரி. 12:9). முறுமுறுக்கவில்லை, குறைவுபட்டு கொள்ளவில்லை, இறைபெலத்துடன் சாதனை படைத்து சிறப்பித்தார்.

கடவுளால் நாம் தோற்கிறோமா? கடவுளுக்காக நாம் தோற்கிறோமா? என்ற சிக்கலில் மாட்டிக் கொள்ளாதபடி சில நேரங்களில் தமிழக பழமொழி போல "பஞ்சு விற்கப் போனால் காற்றடிக்குது. உப்பு விற்கப்போனால் மழை பெய்கிறது" என்றும், ஒருபடி ஏறினால், மூன்று படி சறுக்கி விழுகிறோம்!! என்றும் எண்ணி வாழ்வில் தோல்விகளை கண்டு சோராமல் இறைசித்தம் அறிந்து வெற்றி கொள்ள வேண்டும்.

**c. இயேசுவின் சிலுவைப்பாடு கூட இயேசுவுக்கு சோர்வை ஏற்படுத்தியது :** (மாற். 14 : 34-36)

பெருந்துக்கம், வியாகுலம், வியர்வை, மரண வேதனை வந்தது. இந்தப் பாத்திரம் நீங்கக் கூடுமானால் நீங்கட்டும் ஆயினும் உம் சித்தமே என்று கடவுளின்

திருவிருப்பத்திற்கு ஒப்படைத்து தாங்கும் வலிமையும், மேற்கொள்ளும் வலிமையும் பெற்று உயிர்த்தெழுந்து வெற்றி சிறந்தார். எனவே இறைச்சத்தமும், சித்தமும் அறிந்து விண்ணப்பம் செய்து வெற்றி காண்பது அவசியம்.

## *2. இயன்ற வரை தாழ்மையாய்க் கேளுங்கள் :*

(லூக். 18 : 13-14)

பரிசேயரும், வரிதண்டல் செய்பவரும் செய்த இறைவேண்டலில், பரிசேயர், பெருமைக்குரிய விண்ணப்பம் ஏறெடுத்தால் வரிதண்டல்காரர் தாழ்மையான இறைவேண்டல் ஏறெடுத்தார். இதில் பரிசேயரல்ல, வரிதண்டல் செய்தவரே கடவுளுக்கு ஏற்புடையவராகி வீடு திரும்பினார் என்றார்இயேசு கிறிஸ்து. தி.பா. 116:6 எளிய மனத்தோரை ஆண்டவர் பாதுகாக்கின்றார், நான் தாழ்த்தப்பட்டபோது எனக்கு மீட்பளித்தார். “எளியமனத்தோர்” என்பவர்கள், உதவியற்றவர்கள், பிறரை சார்ந்து வாழ்பவர்கள், கைவிடப்பட்டவர்கள், எளியவர்கள் நம்பிக்கையின் அடிப்படையில் குழந்தையைப் போன்றவர்கள் இவர்கள் விண்ணப்பங்களை அப்படியே ஏற்கிறார்.

கடவுளின் பதில்கள் நமது புரிதலுக்கு அப்பாற்பட்டது. இது “இல்லை” என்பதாகவும் இருக்கிறது “இப்போது இல்லை” என்பதாகவும் அதாவது “காத்திரு” என்பதும் “ஆம் - இப்போதே” என்ற பதிலையும் விண்ணப்பத்திலிருந்து கிடைக்க வாய்ப்பு உண்டு. தி,பா. 116:7-19-ல் கடவுள் நமது எதிர்பார்ப்புக்கு மேலான பலனைத் தருகிறார் என்பதையும் அதற்கு நான் என்ன கைமாறு செய்வேன் என்கிறார் கவியரசர். யாக். 4:10-ல் கடவுளுக்கு முன்பாக தாழ்மையாயிருங்கள். அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார் என்கிறார்.

ஒருமுறை மகாத்மா காந்தி இந்தியாவின் தென்பகுதியில் சுற்றுப்பயணம் செய்தபோது வாழ்ந்த ஏழை மக்களின் வாழ்க்கை நிலை உடுக்க உடையில்லாமல் இருந்தது கண்டு, தான் வெளிநாட்டில் படித்து மேன்மை உடை உடுத்தியவர் அவைகளைக் கழைந்து எளிமையான உடை வழியே தாழ்மை ஏற்றார். மேல் சட்டை வெறுத்தார் - காந்தி மகான் என்ற பெரும்புகழ் பெற்றார். “தாழ்மை குணம் எனும் பள்ளத்தாக்கில் தான் இறையருள் எனும் வற்றாத நதி செல்வதுண்டு.”

அரசர் ஒருவர் ஒருமுறை மாறுவேடத்தில் நாட்டையும், காட்டையும் சுற்றி வந்தார், வரும் வழியில் எதிர்பாராமல் பள்ளத்தில் விழுந்து விட்டார். உடனே அவர் பள்ளத்திலிருந்து வேண்டுகோள் விட்டார் யார் அங்கே நிற்பது ஓடோடி வந்து என்னை தூக்குங்கள் என்று கோபமாக கத்தினார். கேட்டவர்கள் நினைத்தார்கள் என்ன இவர் பணிவு இல்லாமல் கேட்கிறார் கொஞ்சம் பாடுபடட்டும் என விட்டு சென்றனர். பல மணிநேரம் செல்லச் செல்ல களைப்பு ஏற்பட வலிமை குன்றி ஐயோ! அம்மா! கடவுளே! என முனங்கலாயினார். இந்தக்

குரலைக் கேட்டதும் மக்கள் ஏதோ ஆபத்து என ஓடோடி சென்று பள்ளத்தில் கிடந்தவரை தூக்கி கரையேற்றி, தண்ணீர், உணவு கொடுத்து காப்பாற்றினர் அரசர் தெளிவு பெற்றார். "அரசரென்றால் தான் ஆணைக்கு இணங்குவார். ஐயோ ஆண்டவனே! என்றால் தான் ஆபத்துக்கு இணங்குவர்" என்று கூறி சென்றாராம். எனவே நம் இறைவேண்டலில் தாழ்மை மிளிரட்டும். கடவுளே! நாங்கள் இயல்பாய் ஏழ்மையாய், தாழ்மையாய் இறைவேண்டல் செய்யவும் கடைசி வரை நம்பிக்கையுடன் காத்திருக்கும், இறைநம்பிக்கையாளர்களாய் சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோவின் நம்பிக்கை போல அவர் எங்களை விடுவித்தாலும் விடுவியாவிட்டாலும் அவரையே ஆராதிப்போம் எனும் நம்பிக்கையின் விண்ணப்ப வீரர்களாய் செயல்பட ஆண்டவரில் ஆயத்தம் கொள்வோம்.

அருள்திரு. O. **ரிச்சர்டு சுவர்ணா**

# வாழ்ந்திடப் படியுங்கள்

நெகே. 8:1-12

**"ஆண்டவர் இஸ்ரயேலுக்குக் கொடுத்த மோசேயின் திருநூலைக் கொண்டுவருமாறு திருநூல் வல்லுநர் எஸ்ராவை வேண்டினர்."** நெகே 8:1b

நூல், அறியாமை என்னும் இருளைப் போக்கும் அகல் விளக்கு. அறிவு தாகத்தைத் தீர்க்கும் அதிசய நீரூற்று. உயிர் வாழ்வதற்கு காற்றைச் சுவாசிக்கிறோம். அதை போல் முறையாக வாழ்வதற்கு நல்ல நூற்களைப் படிக்க வேண்டும். வாசிப்பின் வழியாக பல சாதனைகள் நிகழ்ந்ததாக வரலாறு சொல்கிறது. திருமறையில் எஸ்ரா திருநூலை படித்த போது எல்லா மக்களும் அதற்கு செவிகொடுத்தனர். நல்ல வாழ்வுக்கு திரும்பினர்.

***1. அறிவை அகலப்படுத்த படி*** : (நெகே. 8 : 8)

மக்களும் வாசிக்கப்பட்டதன் பொருளைப் புரிந்து கொண்டனர்.

நூற்கள் அறிவின் அரங்கங்கள். தாள்களுக்கு இரண்டு இடத்தில் மரியாதை உண்டு. ஒன்று பணமாக மாறும்போது, மற்றொன்று நூலாக மாறும்போது. புத்தகத்தின் தாள்கள் வெறும் தாள்களல்ல. சரியான பாதைக்குஅழைத்துச் செல்லும் கால்கள். மால்தூஸ் எழுதிய புத்தகத்தை படித்த பிறகுதான் டார்வினுக்கு பரிணாமக் கோட்பாடு உதயமானது. திருநூல் இஸ்ராயேல் மக்களுக்கு வாசித்துக் காண்பித்த போது அவைகளை புரிந்து கொண்டனர்.

***2. உயரத்தில் உட்கார படி*** : (நெகே. 8 : 5)

திருநூலைத் திறந்தபோது எல்லா மக்களும் எழுந்து நின்றார்கள்.

ஒரே ஒரு வரி, ஒரு செய்தி, ஒரு பக்கம், ஒரு காகிதம், ஒரு புத்தகம் பலரின் வாழ்க்கையை மாற்றியிருக்கிறது, உயர்த்தியிருக்கிறது. ஒரு செய்தி நம் உள்ளத்தில் அது சலன வட்டமாய் விரிந்துக் கொண்டே போகும். அது வித்தியாசமான சிந்தனைகளை வீரியமாய் எழ செய்யும்.

வறுமை, படிக்க வசதியில்லை. சிறு பருவத்திலே வேலைக்கு அனுப்பப்பட்டார். புத்தகங்களை பைண்டிங் செய்யும் பணி. ஒருநாள் கலைக்களஞ்சிய புத்தகம் ஒன்று கையில் கிடைத்தது. அதில் மின்சாரம்

குறித்த கண்டு பிடிப்பைப் படித்தார். அவருக்குள் ஒரு சிந்தனை பளிச்சிட்டது. ஐசக் வார்ட்ஸ் எழுதிய ‘மனதை அபிவிருத்திச் செய்தல்’ என்ற புத்தகமும் கிடைத்தது. கிடைத்த எல்லா புத்தகங்களையும் விழிகள் விரிய வாசித்தார். இறுதியில் டைனமோவைக் கண்டுபிடித்தார். அவர் தான் மைக்கேல் பாரடே.

ஒரு மனிதன் எத்தனை நூற்களைப் படித்தான் என்பதை வைத்து தான் அவன் வாழ்ந்த நாட்கள் கணக்கிடப்படும் என்றார் ஹென்றி டேவிட் தோரோ. வாசித்தால் அறிவுத்திறன் மேம்படும், வாழ்வு உயரும்.

அருள்திரு. S. **சுஜின் பிரிட்டோ**

# உதடுகளின் கனி

எபி. 13:14-21

**"....அவர் வழியாக எப்போதும் நாம் கடவுளுக்குப் புகழ்ச்சிப்பலியைச் செலுத்துவோமாக, அவருடைய பெயரை அறிக்கையிடுவதன் வழியாக நம் உதடுகள் செலுத்தும் காணிக்கையே இப்புகழ்ச்சிப் பலியாகும்."**

**எபி 13:14,15**

ஆண்டவரை போற்றிப் பாடும் பாடலுக்கு இரண்டு சிறப்பான பெயர்கள் தரப்பட்டுள்ளன.

(i) உதடுகளின் கனியாகிய பலி ஒசேயா 14:2

(ii) உதடுகளின் கனி எபி. 13:15.

'இசை' என்பதே அனைத்து மிருகங்கள் எழுப்பும் ஓசையிலிருந்தும், அனைத்து சிருஷ்டிகள் எழுப்பும் ஓசையிலிருந்தும் உருவானது தான்.

ச ரி க ம ப த நி எனும் 7 ஸ்வரங்களும், ஒவ்வொரு விதமான மிருகங்கள் எழுப்பும் உணர் ஓசையிலிருந்து உருவாக்கப்பட்டது தான்.

ச - சட்ஜமம் - இது மயிலின் அகவல்

ரி - ரிஷபம் - எருதுவின் ஹீங்காரம்

க - கந்தாரம் - ஆட்டின் குரல்

ம - மத்திமம் - கொக்கின் தொனி

ப - பஞ்சமம் - குயிலின் கானம்

த - தய்வதம் - குதிரையின் கனைப்பு

நி - நிஷாதம் - யானையின் பிளிறல்.

மிருகங்களின் இந்த ஓசைகள் எல்லாம் ஒழுங்குப்படுத்தப்பட்டு ஸ்வரமாக உருவாக்கப்பட்டு இசையாக மாறுகிறது.

இவைகளோடு தாளங்களும் சேர்ந்துகொள்ளும் போது 'இசை' சிறப்புள்ளதாக மாறி விடுகிறது.

திபா. 150:5 ஓசையுள்ள கைத்தாளத்தோடும்.... பேரோசையுள்ள கைத்தாளத்தோடும் ஆண்டவரைத் துதியுங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.

தாளங்களை 5 வகையாக பிரித்து சொல்லுகிறார்கள்,

1. திஸ்ரம் - 3 என்று அர்த்தம்

   த கி ட என்னும் படிநிலை

2. சதுஸ்ரம் - 4 என்று அர்த்தம்

   தக தி மி தா

3. கண்டம் - 5 படிநிலை

தக தகிட த க தா

4. மிஸ்ரம் - 7 படிநிலை

தகிட தக திமி

5. சங்கீர்தம் - 9 படிநிலை

தக தகிட தக தகிட

அரசராகிய தாவீது ஆலயத்திலே தாளங்களை வாசிக்க ஆட்களை ஏற்படுத்தியிருந்ததை 1குறிப். 25:6-ல் வாசிக்கிறோம்.

ஸ்வரங்களோடு தாளங்களும் சரியாகச் சேரும் போது தான், அது ஆண்டவருக்கான கீர்த்தனமாக மாறுகிறது. இந்த அர்த்தத்தில் தான் திபா. 147:1,7; 148:3 ஆகியன சொல்லப்படுகிறது.

இசை, துதி எப்போதும் யாருக்கு?

இசையினால் நாம் பல காரியங்களைச் செய்கிறோம். நமது பொழுது போக்கிற்காகவும் இசையைக் கேட்கிறோம். நமக்கு பிடித்தவர்களைப் புகழவும் இசையைப் பயன்படுத்துகிறோம்.

இந்த அடிப்படையில் தான் பல ராகங்கள் கூட அமைக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக 'மத்தியமாவதி' ராகம் - மதியம் பாட;

நீலம்பரி ராகம் - இரவு பாட

கல்யாணி ராகம் - பல உணர்வுகளை சொல்லப்

பயன்படுத்தப்படுகிறது.

கோபத்தை வெளிப்படுத்த அடானா ராகம் பயன்படுத்தப்படுகிறது.

ஆனால் 'இசை' என்பது தனிமனித உணர்வுகளை வெளிப்படுத்த அல்ல; அல்லது குழு உணர்வுகளை வெளிப்படுத்த அல்ல;

'இசை' என்பது எப்போதும் ஆண்டவரைப் போற்றிப் பாடுவதற்காக தான் ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

இதனால் தான் எபி. 13:14,15 இவ்விதம் கூறுகிறது

எந்த நேரத்திலும் பாடக்கூடிய ராகம் - சங்கராபரணம்.

நம் தேசிய கீதம் அந்த ராகத்தில் தான் அமைந்துள்ளது.

தேசிய கீதத்திலுள்ள பாக்கிய விதாதா ஆண்டவரைக் குறிப்பிடுகிற வார்த்தை.

ஆண்டவரை புகழ நமது உதடுகளின் கனியை ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டும்.

ஏனென்றால் திபா. 148:13,14 சொல்லுகிறது போல அவரே உயர்ந்தவர், மேலானவர்.

அருள்திரு. J. **பிரகாஷ் நாயகம்**

# மரண வீட்டில் ஆறுதல் உரை

மலைக்கு விளையாடச் சென்ற சிறுவன் ஒருவன் தந்தையிடம் மலை கரடு முரடாக இருப்பதைச் சுட்டிக் காட்டினான்.

தந்தை சொன்னார், "மகனே நீ மலை ஏற வேண்டுமானால், இக்கரடு முரடான கற்களே உன் காலுக்குப் பிடிப்பைக் கொடுக்கும். இது இல்லாவிட்டால் நீ மலை உச்சியை அடையவே முடியாது."

நாமும் கூட தந்தையாம் கடவுளிடம் மரணத்தை சுட்டிக் காட்டி "ஆண்டவரே இது கரடுமுரடாக இருக்கிறது. இதை எங்களால் தாங்க முடியவில்லை. இந்த மரணம் மட்டும் இல்லாமல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்... நாங்கள் சந்தோஷமாக வாழ்வோமே!" என்று கதறுகிறோம்.

Everybody wants to go heaven, but nobody wants to die.

ஆனால் நம்முடைய இந்த மனநிலையை நன்கு அறிந்திருந்தும், ஆண்டவர் சொல்லுகிறார், "மரணமே மறுமைக்கான வாசல்."

அதனால் தான் அவரே சிலுவையில் மரித்து, மரண வலியை அனுபவித்து அதையே 'மறுமைக்கான வாசலாக' உயிர்த்தெழுந்து திறந்து வைத்திருக்கிறார்.

துக்கத்தோடு இருக்கிற உங்கள் எல்லாருக்கும் இது ஒரு நம்பிக்கையின் செய்தியாக இருக்கும்.

அன்பான தாயாரை பற்றி சில நல்ல காரியங்களை சொல்லி, அவர்களது நல்ல வாழ்க்கைக்காக உங்களோடு சேர்ந்து நானும் ஆண்டவருக்கு நன்றி சொல்லப் போகிறேன்.

***1. அவர்கள் ஒரு சிறந்த தாய்*** :

சிறந்த தாய்க்கு அடையாளமாக மத்திய கிழக்கு நாட்களிலே ஒரு பழமொழி வழங்கப்பட்டு வருகிறது. அதாவது,

சிறப்புள்ள தாயின் இருதயம்
ஒரு நீதிமன்றம்;
அது எல்லாக் குற்றங்களையும் மன்னிக்கும்
ஒரே நீதிமன்றம்.

அருமையான தாயாரும் கூட இந்த சிறப்பு தகுதியுள்ளவர்கள்.

அவர்களிடம் நான் பேசும் போதெல்லாம் அவர்களிடம் 'எல்லாரையும் பொறுத்துக் கொள்ளுகிற, எல்லாரையும் மன்னித்தருளுகின்ற பண்பு' இருந்ததை நான் உணர்ந்திருக்கிறேன்.

### *2. தெபோராளைப் போன்ற தாய்* :

தமிழிலே சிறந்த நண்பன் யார் என்பதற்கு இப்படி ஒரு அடையாளத்தைச் சொல்லுவார்கள்,

தடுமாறும் போது
தாங்கிப் பிடிக்கிறவனும்,
தடம் மாறும் போது தட்டிக்
கேட்கிறவனும் தான் உண்மையான நண்பன்.

தெபோராள் என்னும் தாயும் இஸ்ரயேலுக்கு இதைத் தான் செய்தார்கள். இந்தத் தாயாரும் திருச்சபை வாழ்விலே எல்லாருக்கும் 'தாயாக' இருந்து செய்தது இது தான். இதற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

இப்படி எல்லா வகையிலும் சிறந்த மாதிரியாக வாழ்ந்த தாயாரை இழந்து, தவிக்கும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் எல்லாருக்கும் ஆண்டவர் ஆறுதலைத் தந்தருளுவாராக. ஏனென்றால் அவர் உயிர்த்தெழுதலும் வாழ்வுமாயிருக்கிறார் (யோவா. 11:25). ஆமென்.

அருள்திரு. J. **பிரகாஷ் நாயகம்**




## ஆயர்கள் வளர்ச்சிக்கான நினைவு சிற்பங்கள்
## Monument for Clergy

**INDIANA** என்னும் இடத்தில் ஆயர்களுக்காக நினைவு சிற்பங்கள் ஏற்படுத்தி ஆயர்களின் மறுமலர்ச்சிக்காக ஆயர்கள் திறன் வளர்க்கும் சலுகைகள் என்னும் கூட்டமைப்பு 2000ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு ஆயர்களின் வாழ்வு, திருப்பணி, மற்றும் ஆன்மீக எழுச்சிக்கான பணிகளை பல புத்தெழுச்சி கருத்தரங்குகள் (Clergy Renewal Programe) ஏற்படுத்தி மேம்படுத்தி கொண்டிருக்கின்றனர். இதன் வழியாக ஆயர்களின் பணித்திறன் அதிகரிப்பதோடு மக்களின் உணர்வுகளை, உணர்ந்து அருளுரையாற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அட்டைபட தெரிவு & கருத்தாக்கம்
நிஸ்பர்ட் **G.M.** ஷாலோம்

வெளியீடு
தொடர்புத்துறை
கன்னியாகுமரிப் பேராயம்